# திரு அருள் மொழி

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை.

இஃது சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத்
தலைவரால் பிரசுரிக்கப்பட்டது.

உரிமை பதிப்பாளர்க்குரியது.

(8—3—'43 — 1100)

லிபர்டி அச்சுக்கூடம், சென்னை.

# முன்னுரை

தேவாரம் திருவாசகம் திவ்வியப் பிரபந்தம் என்னும் மூன்று நூல்களிலிருந்தும் பொறுக்கியெடுக்கப்பட்ட ஐஞ்ஞூறு பாக்களை யுடையது இந்நூல். இப்பாடல்கள் யாவும் இறைவனது அருளால் மெய்யடியார்களின் நாவினின்றும் வெளிவந்த மொழிகளாதலின், இந்நூல் 'திரு அருள்மொழி' என்னும் பெயர் பெறுவதாயிற்று. இப்பாடல்களின் பொருள் எளிதாக அனைவர்க்கும் விளங்குமாறு, ஒவ்வொரு பாடலுக்கும் கீழ் அதன் பொழிப்புரையும், வேண்டிய இடங்களில் விளக்கக் குறிப்புகளும் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. இப்பகுதி நடுநாயகமாக அமையும்படி, இதற்குமுன் 'பக்தி ஸாரம்' என்னும் பகுதியும், பின் 'சிவவிஷ்ணு ஸஹஸ்ர நாமங்கள்' என்னும் பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளன. பக்திரஸம் ததும்பும் பாடல்களின் உட்கருத்தை உள்ளவாறு உணர்ந்து பயனடையப் பலர்க்கும் துணையாகும் பொருட்டு, பக்தியின் இலக்கணங்களும் இலக்ஷியமும் பக்திஸாரத்தில் வேண்டிய அளவு விளக்கப்பட்டுள்ளன; அப்பாடல்களிலிருந்தே திரட்டி யெடுக்கப்பட்டுள்ள நாமங்கள் மூன்றாம் பகுதியில் அடங்கி யுள்ளன.

தமிழ் மொழியிலும் பக்திநெறியிலும் ஈடுபாடுள்ள பல அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, பற்பல நோக்கங்களையும் கருத்துக்களையும் கொண்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அவைகளை இம் முகவுரையில் எடுத்துரைத்தல் ஒருவாறு எமது கடமையாகும்; அன்றி

முதலாவது பத்தின் எண்ணும், இரண்டாவது பாடலின் எண்ணும் ஆகும்; மூன்று எண்கள் உள்ள இடங்களில், முதல் எண் நூறையும், அடுத்த எண் பத்தையும், இறுதி எண் பாடலையும் குறிக்கும். (பெரிய திருமொழி 4-3-2 என்பதன் பொருள், பெரிய திருமொழி என்னும் பிரபந்தத்தில் நான்காவது நூறில் மூன்றாவது பத்தில் இரண்டாம் பாடல் என்பது.)

(2) பாடல்கள் பெரும்பாலும் சந்திபிரித்தே எழுதப்பட்டுள்ளன. சந்தியினால் மாறுபடும் எழுத்துக்கள் அடைப்புகட்குள் அமைக்கப்பட்டுள்ளன. ‘எனக்(கு) எழுத’ என்பதை, ‘எனக்கெழுத’ என்றும், ‘வந்து (உ)றையும்’ என்பதை ‘வந்துறையும்’ என்றும், ‘அமமையு(ம்) நீ’ என்பதை ‘அம்மையு நீ’ என்றும், ‘திருமால் அவன்’ என்பதை ‘திருமாலவன்’ என்றும் சேர்த்து வாசித்தல் வேண்டும்; இவ்வாறே இவைபோன்றனவற்றையும் வாசித்தல் வேண்டும். இப்படிப் பிரித்தெழுதியது, பலரும் பதங்களையும் பொருளையும் எளிதே கண்டு கொள்வதன் பொருட்டேயாம்.

(3) ஒவ்வொரு பாடலுக்கும் பதவுரை பொழிப்புரை இரண்டையும் வெவ்வேறாக எழுதுவதற்குப் பதிலாக, இரண்டின் பயனையும் ஒருங்கே அளிக்கும் கருத்தோடு பொழிப்புரைமட்டும் பின்வரும் முறைப்படி எழுதப்பட்டுள்ளது. பெரும்பாலும், சொற்கள் பாடலில் கிடக்கும் வரிசைப்படியே உரை எழுதப்பட்டிருக்கிறது; பொருளை விளக்குவதற்காக ஆங்காங்கே வருவித்த சொற்கள் அடைப்புக்குள் காட்டப்பட்டுள்ளன. அவசியமான இடங்களில் மட்டும் சிறுபான்மை முறையை மாற்றி உரை எழுத நேர்ந்தது; ஆயினும், இன்ன பதத்

யும், இந்நூலைக் கற்கத் தொடங்குவார் முழுப்பயனையும் பெறுவதற்கும் அது பெரிதும் துணைசெய்யும்; இன்னும், இந்நூலைச் சீர்தூக்கி ஆராய முன்வருவார்க்கும் அதனை உள்ளவாறு மதிப்பிட அது உதவும். இக்காரணம் பற்றி அவைகள் சுருக்கமாகப பின் எழுதப்பட்டுள்ளன.

(1) தேவார திருவாசக திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் அத்தனையும் தெய்வத்தன்மை வாய்ந்த தமிழ் வேதப் பாடல்களேயாகும். ஆதலின், அவைகளினின்றும் சில பாடல்களை மட்டும் சிறந்தவையென்று தெரிந்தெடுத்தல் இயலாத காரியமே. ஆயினும், ஐஞ்ஞூறு பாடல்கள் மட்டும் வேண்டியிருந்தன; இதனால், பலராலும் அடிக்கடி பாடப்பெறுவனவும், அறிஞரால் மேற்கோளாகக் காட்டப்படுவனவும், பக்திரஸம் ததும்புவனவும், உலகமக்கட்கு உபதேசமாக அமைவனவும், வேறு வகையால் அழகு வாய்ந்தனவுமான பாடல்களையே இயன்றவரை பொறுக்கலானேம். சம்பந்தர் அப்பர் இருவரது தேவாரப்பாடல்களில் ஒவ்வொன்றிற்கும் அருகே குறிக்கப்பட்டுள்ள மூன்று எண்களும் முறையே திருமுறையின் எண்ணும் பதிகத்தின் எண்ணும் பாடலின் எண்ணும் ஆவன; சுந்தரரது தேவாரப் பாடலை யொட்டியுள்ளவை, பண்முறை வரிசைப்படி அச்சிடப்பட்டுள்ள பதிப்புகளில் காணப்படும் பதிக எண்ணும் பாடலின் எண்ணும் ஆகும். திருவாசகப் பாடலின்பின், பகுதியின் பெயரும் பாடலின் எண்ணும் (அகவலாயின், வரிகளின் எண்களும்) குறிப்பிடப்பட்டுள்ளன. திவ்வியப் பிரபந்தப் பாடல்களின்பின், பிரபந்தத்தின் பெயரும் ஓர் எண் மட்டும் காணப்படுமாயின், அந்த எண் பாடலின் எண்ணாகும். (திருமடலில் கண்ணியின் எண்ணாகும்). இரண்டு எண்கள் காணப்படுமாயின்,

திற்குப் பொருள் இன்னது என்பதை உரைவாசிப்போர் எளிதில் அறிந்து கொள்வார் என்று நம்புகிறோம்.

(4) பாட்டின் பொருளையும் சந்தர்ப்பத்தையும் விளக்கவும், பொழிப்புரையில் விளக்கவொண்ணாத நயங்களை ஒருவாறு எடுத்துக்காட்டவும், குறிப்புகள் எழுதப் பட்டுள்ளன. நுட்பமான சித்தாந்தக் கருத்துக்கள் மதாசாரியார்கள் மூலமாகக் கேட்டுத் தெளியவேண்டி யவை யாதலின், அவைகள் கூறப்படவில்லை. பாசுரங்கள் அனைத்தும் மந்திரங்களேயாகும்; அவைகளின் உட் கருத்துகள் உபதேச வாயிலாகவே உணரத்தக்கவை; அறிவு பக்குவம் அநுபூதி என்பவைகட்குத் தகுந்த அளவு அவை விரிந்துகொண்டே போகும். ஆதலின், பாடல்களின் சாதாரணப் பொருளை விளக்குவதே எமது நோக்கமாயிற்று. திவ்வியப் பிரபந்தங்கட்கு வைணவ ஆசாரியர்கள் எழுதியிருப்பதுபோல, தேவார திருவாச கங்கட்கு வியாக்கியானங்கள் இல்லாமையால், இன்னது தான் பொருளென (பிரமாணத்தோடு) வரையறுத்துக் கூறுதல் சில இடங்களில் இயலாது போகிறது. எனினும், வைணவ ஆசார்யர்களுடைய முறையைப் பின்பற்றிப் பொருத்தமான இடங்களில் பொருள்கள் இயன்றவரை கூறப்பட்டுள்ளன. கர்ண பரம்பரையாகவோ ஆசாரியர் களின் உபதேச வாயிலாகவோ இந்நூலிலுள்ள பாடல் கட்குச் சிறப்பான பொருள்களை எவரேனும் கேட்டி ருப்பாராயின், அவைகளை எமக்குத் தெரிவித்தால், அடுத்த பதிப்பில் அவை நன்றியோடு வெளியிடப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(5) ஒவ்வொரு பாசுரத்திலும் உள்ள பொருட்சிறப் பமைந்த ஒரு பகுதியோ, முக்கியக் கருத்தைக்கூறும்

ஒரு பகுதியோ, அப்பாசுரத்துக்குத் தலைப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது. வாசிப்போரது கண்ணையும் கருத்தையும் கவர அது ஏதுவாகலாம் என்பது எமது நினைவு.

(6) எல்லாப் பாசுரங்களையும் முறையாக வரிசையாக நாடோறும் ஓதுதல் முடியாதகாரியம்; ஆதலின் அப்பாசுரங்களின் ஸாரமாகிய இறைவனுடைய திருநாமங்களை, அவைகளை இயற்றிய மெய்யடியார்களுடைய வாக்குகளைக்கொண்டே தொகுத்து பாடம்பண்ண எளிதாகும்பொருட்டு அகவலாக அமைத்துள்ளோம். பாராயணம் பண்ணவும், அருச்சனை செய்யவும், அவை பயன்படும். 'வினையின் நீங்கி விளங்கிய அறி'வோடு கூடிய 'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிக' ளாதலின், இந்நாமங்கள் மந்திரங்களேயாம். இவைகளைப் பத்தியோடு ஓதுவார் இறைவனுக்கு உவந்த வழிபாடு செய்பவராவார்; அன்றியும், பதிகங்களை ஓதுவார்க்கு உண்டாகுமெனை அந்நூல்களிற் கூறப்பட்டுள்ள பயன்களையெல்லாம் அவர்கள் பெறுவர் என்பதில் ஐயமில்லை. திருவாசகத்தில் அமைந்துள்ள சிவபெருமானது நாமங்கள் அனைத்தும் சைவசித்தாந்த மஹா சமாஜத்தாரால் வெளியிடப்பட்டுள்ள புதிய திருவாசகப் பதிப்பில் அகர வரிசையில் தனியாகத்தொகுக்கப்பட்டுள்ளமையின், மூவரது தேவாரங்களிலிருந்து மட்டுமே நாமங்கள் திரட்டப்பட்டுள்ளன. எல்லா நாமங்களையும் தொகுக்கப்புகின், அகவல் மிகமிக நீண்டதாகுமாதலின், வடமொழி மரபையொட்டி ஆயிரத்தெட்டு நாமங்களை எடுத்தளித்திருக்கிறோம்.

(7) இந்நூலின் முதற்பகுதியாகிய பத்திஸாரத்தில், பக்தியின் பொது இயல்பும், பற்பல சித்தாந்தங்கள்

காட்டும் பக்தி நெறிகளும், ஸ்ரீ ராமகிருஷ்ணரது பொது நெறியும் அடங்கியுள்ளன. பக்தியின் பொது இயல்புகள், பல பக்தி நூல்களிலுள்ள ஸாரமான கருத்துக்களைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. பல சித்தாந்தங்கள் பக்தி சம்பந்தமாகக் கூறுகின்ற முக்கிய கருத்துக்களும் அந்தந்த நெறிகட்குரிய படிகளும் சுருக்கமாகப் பின் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கும்போது ஓர் உண்மை தெளிவாக விளங்கும்; அது யாதெனில், பக்தி எம்மதத்தினர்க்கும் பொதுவானது என்பதே. அப் பொதுத்தன்மையை விளக்கவும் வற்புறுத்தவும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் காட்டிய பொதுநெறி இறுதியில் வரையப் பட்டுள்ளது.

(8) காகிதப் பஞ்சத்தினால், பாடல்களின் தொகையைச் சுருக்கி ஐஞ்ஞூறுக்குதலும், முக்கியமான சைவ வைணவ ஆலயங்களின் சித்திரப்படங்கள், நாயன்மார் ஆழ்வார்கள் படங்கள், விஷ்ணு ஸ்தலங்களைப்பற்றிய குறிப்புகள், ஆழ்வார்கள் சைவசமய நால்வர் இவர்களின் வைபவங்கள், பண்கள் கட்டளைகளைப்பற்றிய ஆராய்ச்சி முதலிய பலபகுதிகள் எழுதி முடிந்திருப்பினும் அவைகளை விட்டுவிடுதலும் இன்றியமையாதனவாயின. அது ஒருவாறு எமக்கு வருத்தத்தை அளிக்கினும், திருவருள் கூட்டுவிக்குமாயின் அடுத்தபதிப்பில் அவைகளையும் சேர்த்து வெளியிடக்கூடும் என்று தேறினோம்.

சில காரணங்களை முன்னிட்டு இந்நூல் விரைவில் வெளிவர நேர்ந்தமையால், எமது கவனத்தையும் சிரத்தையையும் மீறிப் பிழைகள் இந்நூலிற் புகுந்திருத்தல்

கூடும். அன்பர்கள் அவைகளைப் பொருட்படுத்தாதிருப் பாராக. 'குற்றம் களைந்து குணம்பெய்து வாசித்தல், கற்றறிந்த மாந்தர் கடன்.' 'கற்றோர்கள் தாம் உகப்பர் கல்விதனில் ஆசையுள்ளோர், பெற்றோம் என உகந்து பின்பு கற்பர்.'

பல அன்பர்களது பெரும் முயற்சியினாலும் அன் பார்ந்த பணியினாலுமே இத்'திரு அருள்மொழி'யை வெளி யிடும் பணி நிறைவேறியது. இவர்கள் ஒவ்வொருவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைக்கூறித் திருவருளை அவர் கள் பெற்று உய்யுமாறு இறைவனை வழுத்துகின்றோம்.

இப்புத்தகத்தைப் பதிப்பிப்பதற்கு வேண்டிய பொருளுதவியை முழுதும் மகிழ்ந்துசெய்த அன்பர் திருவாளர், டாக்டர். S. தம்பிபிள்ளை அவர்களுக்கு இறைவனது திருவருட் செல்வம் நிறைவதாக. எமது அன்பும் தமிழ்நாட்டினரது நன்றியும் பாராட்டும் எப்போ தும் அவர்க்கு உரியனவாகுக.

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,<br>மயிலாப்பூர்,<br>8–3–43.

**பதிப்பாளர்.**

# பொருளடக்கம்


பக்கங்கள்

**பக்தி ஸாரம்**

I. பக்தியின் போது இயல்பு

(1) இயற்கையும் கவர்ச்சியும் .... 1

(2) பக்தியின் வகைகள் .... .... 9

(3) பக்தி வளரும் முறை .... .... 20

(4) பக்தியிற் சில படிகள் .... 35

(5) பக்தர்களின் பெருமை .... 42

(6) பக்தியும் திவ்விய சக்தியும் .... 53

II. பல சமயங்கள் போதிக்கும் பக்தி நெறி

(1) சைவ சித்தாந்தம் .... .... 69

(2) ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம் .... 76

(3) மஹாராஷ்டிர பக்தர்களின் சித்தாந்தம் .... .... 84

(4) ஸ்ரீ சைதன்ய சித்தாந்தம் .... 95

(5) கிறிஸ்தவ சித்தாந்தம் .... 102

(6) இஸ்லாமிய (ஸூபி) சித்தாந்தம் .... 117

III. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் போது நெறி

(1) ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கையிற் காணும் உண்மைகள் .... 126

பக்கங்கள்

(2) ஞான சாதனமும் அதன் பண்பும் .... .... .... 147

(3) சரணாகதியும் அதன் மர்மமும் .... 156

(4) ஸமரஸம் .... .... 168

திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம் .... 185

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் .... 245

ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம் .... 313

திருவாசகம் .... .... .... 376

திவ்யப் பிரபந்தம் : முதலாயிரம் .... 413

பெரிய திருமொழி .... 447

இயற்பா .... 472

திருவாய்மொழி .... 492

சிவ ஸஹஸ்ர நாமம் .... .... 547

விஷ்ணு ஸஹஸ்ர நாமம் .... .... 572

செய்யுள் முதற்குறிப்பகாரதி .... 600

# பக்தி ஸாரம்

## I. பக்தியின் பொது இயல்பு

### (1) இயற்கையும் கவர்ச்சியும்

உலகங்களனைத்திற்கும் ஆதியான இறைவன்மீது மனிதனுக்கு எழுகின்ற கவர்ச்சியே பக்தியாகும். இக் கவர்ச்சி மனிதனிடத்து மட்டும் காணப்படுகின்றது என்பது பெரும்பாலாருடைய கொள்கை. ஆராய்ந்து நோக்கும் போது, அக்கவர்ச்சி இயற்கை முழுவதினும் காணப்படுகின்றது. இக்கவர்ச்சியின் இயல்பையும் வகைகளையும் காரணத்தையும் முதலில் ஆராய்வோம்.

நம்மைச்சூழும் இயற்கையில் எப்பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும், அதில் கவர்ச்சியெனும் சக்தி காணப் படுகிறது. உலகத்திலுள்ள மிகப்பெரும் பகுதிகளாகிய அண்டங்கள் முதலாக ஒரு பொருளின் மிக மிகச் சிறிய பகுதி வரையில் எவ்விடத்தும் கவர்ச்சி யெனும் சக்தி நடனம் புரிந்து கொண்டிருக்கிறது. இரவில் வானத்தே தோன்றும் நக்ஷத்திரங்கள் தத்தம் இடங்களை விட்டுப் பெயராது நிலையாக வான வெளியிலே அமைந்துள்ளன; இதன் காரணமாவது, அவை விலகவொண்ணுதபடி ஒன்று மற்றொன்றின் கவர்ச்சிக்கு உட்பட்டிருத்தலே யாம். சூரியனை மையமாகக் கொண்டு பல கிரகங்கள் தத்தமக்குரிய வட்டமான வீதிகளில் அதைச் சுற்றிச் சுற்றி வருகின்றன; இது, சூரியன் அக் கிரகங்களின் மீது செலுத்தும் கவர்ச்சியின் பயனேயாம். பூமி சூரியனைச் சுற்றி வருவது போலவே சந்திரன் பூமியைச் சுற்றிவருவதன் காரணம், பூமி சந்திரனைத் தன்னை நோக்கி இழுத்துக் கொண்டிருப்பதே யாம். வியாழன் என்னும் கிரகத்தின் கவர்ச்சிக்கு

உட்பட்டு இதுபோலவே சில சந்திரர்கள் வியாழனைச் சுற்றி வந்துகொண்டுள்ளன. பூமி சந்திரனைக் கவர்வது போலவே தனக்கு அருகிலுள்ள பொருள்களையும் கவர்கின்றது. இப்புவிக் கவர்ச்சிக்கு உட்படுவதினலேயே ஆதாரமற்ற பொருள்கள் யாவும் பூமியை நோக்கி இழுக்கப்படுகின்றன. யாதானும் ஒரு பொருளைப் பிரித்துப்பார்த்தால், அதில் பல நுண் கூறுகளைக் காண்கிறோம்; இக்கூறுகள் ஒன்றையொன்று கவர்வதினலேயே, அவைகள் அனைத்தும் ஒருங்கு கூடி அப் பொருளுக்கு ஒரு திண்மையை அளிக்கின்றன. ஒரு பொருளின் நுண்ணிய கூறுகளில் ஒன்றைப் பிரித்துப் பார்த்தால், அதனிடத்தே அணுக்கள் பல காணப்படுகின்றன; அவ்வணுக்கள் பல ஒன்றையொன்று கவர்வதினலேயே அவை ஒன்றுகூடி ஒரு நுண் கூறுகின்றன. ஓர் அணுவைப் பின்னும் பிரிப்போம்; அண்டத்தில் ஒரு சூரியனைச் சுற்றிப் பல கிரகங்கள் ஓடுவதுபோலவே, ஓர் அணுவின் நடுவேயுள்ள ஓர் அசையாத சிறுபகுதியை (நிலைக்கோணை)ச் சுற்றிப் பலப் பல சிறு பகுதிகள் (சுழல் கோண்கள்) மிக்க விரைவோடு வட்டமிட்டு வருகின்றன. நடுப்பகுதியையும் சுழலும் பகுதிகளையும், பிரிந்து விலகாது பாதுகாக்கும் சக்தி நடுப் பகுதிக்கும் சுழல் பகுதிகட்கும் உள்ள கவர்ச்சியேயாகும். ஆக, சடப்பொருளையும் சட உலகத்தையும் நிலைபெறச் செய்வது, கவர்ச்சியெனும் சக்தியே. அன்றியும் உலகத்தினுள் விளங்கும் பலவகைச் சக்திகட்கும் மூலமான சக்தி மின்சார சக்தியே; இச் சக்தியும் கவர்ச்சி வடிவினதேயாம். சுருங்கச் சொல்லில், பார்க்குமிடம் எங்கும் இயற்கையில் சதா தாண்டவமாடிக் கொண்டிருப்பது கவர்ச்சிச் சக்தியே என்பது பெறப்படுகின்றது.

முற்கூறிய கவர்ச்சி உயிரற்ற சடப்பொருள்களிடத்துக் காணப்படுவதுபோல, உயிருள்ள பொருள்களிடத்தும் காணப்படுகின்றது. நாம் வாழும் பூமியும் அதிலுள்ள நீரும் செடிகளின் வேர்களைக் கீழ்நோக்கி இழுக்கின்றன. சூரியனது ஒளி செடிகளின் கிளைகளை மேல்நோக்கி இழுக்

கின்றது. பூக்கள் செடிகளில் மலரும்போது, அவை தமது மணத்தாலும் நிறத்தாலும் தம்மிடத்துள்ள தேனினாலும் வண்டுகளையும் வேறு பூச்சிகளையும் பறவைகளையும் கவர்கின்றன. சில மரங்கள் இனிய பழங்களைத் தம்மகத்தே வைத்துக்கொண்டு பறவைகளையும் மக்களையும் கவர்கின்றன. செடிகளில் மலரும் பூக்கள் பறவைகளை மட்டும் கவர்கின்றன என்பதில்லை; மலர்களின் நிறமும் மணமும் மக்களுடைய கண்ணையும் மூக்கையும் இவை வாயிலாக மனத்தையும் கவர்கின்றன. அழகிய பூக்களை உண்டாக்கும் செடிகளின் கவர்ச்சிக்கு உட்படுவதினாலன்றோ மனிதன் பூச்செடிகளைப் பரிபாலித்து வருகிறான். பலவகைப்பட்ட விலங்குகளின் கவர்ச்சிக்கு உட்பட்டு மனிதன் அவைகளை ஆதரத்தோடு பழக்கியும் பேணியும் வளர்த்தும் வருகிறான். விலங்குகட்குள்ளும் குஞ்சுகள் மீதும் குட்டிகள் மீதும் பெற்றோர்கட்குக் கவர்ச்சி ஏற்படுகின்றது. இன்னும், மக்களிடத்தும், பொதுவாக எவர்க்கும், குழந்தைகளின்மீது மனக்கவர்ச்சி ஏற்படுகிறது. உயிருள்ள உலக முழுதிலும், ஆண் பெண் பாகுபாடு உள்ள உயிர்களிலெல்லாம், ஆணுக்குப் பெண்மீது கவர்ச்சியும் பெண்ணிற்கு ஆண்மீது கவர்ச்சியும் உண்டாகின்றன; இக்கவர்ச்சிக்கு வசப்படும் உயிர்கள் ஒன்று மற்றொன்றிற்காக உயிரைத் துறக்கவும் தயாராயுள்ளன; இக்கவர்ச்சியும் விசித்திரமேயாம். இன்னும் மக்களிடை உண்டாகும் நட்பும் விசுவாசமும் அன்பும், நாட்டினிடத்தும் சமூகத்தாரிடத்தும் உறவினரிடத்தும் தோன்றும் அபிமானமும், ஆராய்ந்து பார்க்குங்கால், கவர்ச்சியின் பயனாகவே விளைவது புலப்படும். ஆக, அனைத்தையும் தொகுத்துப் பார்க்குமிடத்து, சடப்பொருளுலக முழுவதிலும் உயிர்ப்பொருளுலக முழுவதிலும்—இயற்கை முழுவதிலும்—கவர்ச்சியே எங்கும் காணப்படுகிறது. இயற்கையில் உள்ள எந்நிகழ்ச்சிக்கும், உயிர்ப்பொருளின் வாழ்க்கையில் உள்ள எந்தச் செயலுக்கும் மூலமாயிருப்பது கவர்ச்சியெனும் சக்தியே. வெறுப்பு இடையிடையே காணப்படினும், அதுவும் கவர்ச்சி அல்லது விருப்பின்

பயனாக விளையும் எதிர்ச்செயலேயாகும். மக்களது தனி வாழ்க்கையிலும் சமூகவாழ்க்கையிலும் பல செயல்கட்குக் காரணமாக நிற்பன, காமம் குரோதம் உலோபம் மோஹம் மதம் மாற்சரியம் என்னும் ஆறுமே; இவைகளில் காமமொழிந்த மற்ற ஐந்தும் காமத்தினின்றும் பிறந்து, சந்தர்ப்பங்கட்குத் தகுந்தவாறு காமமே எடுத்துக்கொள்ளும் பல வேடங்களேயல்லவா? அக்காமமும் கவர்ச்சியேயன்றோ?

புற இயற்கையையும் அக இயற்கையையும் ஆராய்ந்த நமது முன்னோர், கவர்ச்சியெனும் சக்தி எங்கும் காணப்படுவதற்குக் காரணம் இன்னதென்பதையும் ஞானக்கண்ணாற் கண்டனர். இக்கவர்ச்சியே மெய்ப்பொருளென்றும், அழியாத அடிப்படைத் தத்துவம் அதுவேயென்றும், அது பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற உறைகின்றதினாலேயே உலகமும் வாழ்க்கையும் கவர்ச்சிமயமாகும் என்றும் உணர்ந்தனர். இப்பரம்பொருளை 'ஆத்மன்' என்றும் 'பிரம்மன்' என்றும் மறைகள் கூறுகின்றன. "நாயகனுக்குத் தன் நாயகி மீதெழும் பிரியத்திற்குக் காரணம் நாயகி யல்ல, ஆத்மாவே" என்பர் ஒரு மஹரிஷி. ஆத்மாவே எங்கும் பரந்தும் அனைத்திற்கும் அதீதமாகவும் உள்ளபொருள். இந்த ஒரு பொருளே எங்கும் உள்ளதாதலின், கண்ணிற்குத் தோன்றும் பலவற்றுள்ளும் இந்த ஒரே ஆத்மாவே இருப்பதினாலும், அந்த ஆத்மா கவர்ச்சியையே வடிவமாக வுடையதா யிருப்பதனாலும், எங்கும் கவர்ச்சிமயமாயுள்ளது என்பது முடிவாகின்றது.

முற்கூறிய கவர்ச்சிக்குப் பெயரும் உருவமும் கொடுத்துப் பேச விரும்பிய வேறு சில மெய்யறிஞர் அதே கவர்ச்சியை 'ஹரி' என்றும் 'ஹரன்' என்றும் 'கிருஷ்ணன்' என்றும் பெயரிட்டழைத்தனர். இப்பெயர்கள் அனைத்தும் 'அபஹரிப்பவன்' 'ஆகர்ஷிப்பவன்' 'இழுப்பவன்' என்றே பொருள்படுகின்றன. இப்பரம்பொருளும் 'நில விசும்பு ஒழிவற, கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருள்தொறும், கரந்

தெங்கும் பரந்துளன்' (பூமி ஆகாயம் எங்கும் எவ்விடத்தும் எப்பொருளினும் பரந்தும் மறைந்தும் நிற்கிறான்) என்றார் நம்மாழ்வார். இதே உண்மையை "எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும், இயலுண்மை யறிவின்ப வடிவாகி நடிக்கும், மெய்ப்பொருளாம் சிவம்" என்றார் வேறொரு பெரியார். ஆத்மனது இயல்பைக் கூறும் உபநிடதமும் 'ஸத் சித் ஆனந்தம்' அதன்வடிவென்று கூறுகின்றது. "யச்ச கிஞ்சித் ஜகத் ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபிவா, அந்தர்ப் பஹிஸ்ச தத்ஸர்வம் வியாப்ய நாராயணஸ்தித:" (இவ்வுலக முழுவதிலும் எதெது காணப்படுகிறதோ கேட்கப் படுகிறதோ, அதிலெல்லாம் உள்ளும் புறமும் நாராயணன் வியாபித்துள்ளான்.) என்று நாராயண உபநிடதம் கூறுகின்றது. அறிஞர் அனைவரும் பரம்பொருளை 'உள்ளங் கவர் கள்வன்' என்று பேசுகின்றனர்; 'அன்பு மயம்' என்கின்றனர். இந்த அன்பு கவர்ச்சி மயமேயன்றோ? ஆதலின் இயற்கையிற் காணப்படும் கவர்ச்சிக்கு மூலம் பரம்பொருளேயாகின்றது. அக்கவர்ச்சியின் உண்மையை உள்ளபடி அறிவார் ஏகமாம் மெய்ப்பொருளையே உணர்ந்தவராவார்.

இக் கவர்ச்சி உயிர்ப்பொருளுலகத்து முக்கியமாக எவ்வடிவோடு வேலைசெய்து வருகிறது என்பதையும் ஆராய்தல் இங்கு பொருத்தமாகும். அக் கவர்ச்சிக்குள்ள பல வடிவங்கள் ஒருவாறு முன்னரே குறிக்கப்பட்டுள்ளன; அவைகளில் மிகவும் முக்கியமான ஒரு வடிவமாவது, ஒவ்வோர் உயிர்ப்பொருளும் தன் இனத்தை அழியாது பாதுகாத்துக்கொள்வதற்காகச் செய்யும் முயற்சியே. உயிருள்ள பொருள் பூச்செடியாயினும் விலங்காயினும் மனிதனாயினும் சரி, அது தன் இனத்தைப் பெருக்குவதற்காகப் பலவகைப்பட்ட உபாயங்களைக் கையாளுகின்றது; இனம் பெருக்குதற்குத் துணையாயுள்ள பொருள்களைத் தன்னிடம் இழுப்பதற்காகப் பல வழிகளில் அது முயல்கின்றது. வண்டாடாத பூ காயாக

மாறுவதில்லை யென்பது அனுபவம். பூ காயாக மாறுவதற்கு அவசியமான மகரந்தப் பொடியை வண்டு பிற பூக்களிலிருந்து கொண்டுவரவேண்டியிருக்கிறது. வண்டினை இவ்வாறு செய்யும்படித் தூண்டுவதற்காக, மலர் அழகான பிரகாசமான இதழ்களைக் கொண்டதாயும் தேனையுடையதாயும் அமைந்துள்ளது. வண்டிற்குத் தேன் உணவாகின்றது; அத்தேனைத் தேடிப் பூப்பூவாக வண்டு செல்லும்போது, அது தனக்குத் தெரியாமலே மகரந்தப் பொடியை ஒரு பூவினின்றும் மற்றொரு பூவிற்குக் கொண்டு சேர்க்கின்றது. இவ்வாறு ஒரு பூ காயாகித் தன் இனத்தைப் பெருக்கிப் பாதுகாப்பதற்காக, வண்டைக் கவர்வதற்கேற்ற வழிகளை நாடுகின்றது. விலங்குகட்குள் ஆண்களிடத்து அழகும் உடல் வலிமையும் தைரியமும் காணப்படுவதன் காரணமும், பெண்கட்கு அவைகளிடத்துக் கவர்ச்சியை உண்டாக்கி, முடிவில் இனத்தைப் பெருக்கும் நோக்கமே. குஞ்சு குட்டி குழந்தைகளின்மீது பெற்றோர்க்கு உள்ள அன்பிற்கும், அதனால் அவைகளைப் பெற்றோர்கள் காப்பதற்கும், இனம் பெருக்கும் இயல்பே அடிப்படைக் காரணம் ஆகின்றது. இனத்தைப் பெருக்குதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் செய்யப்படும் எல்லா முயற்சிகளிலும் இன்ப உணர்ச்சி தோன்றுவதும் அக்காரணம்பற்றியே என்பர் பௌதிக நூலார். சமய நூலார் இவ்வியல்பையும் இச் செயல்களையும் வேறு வகையாகக் கூறுவர். உலகத்தில் படைப்புத்தொழில் எங்கும் ஓயாது நடைபெற்று வருகிறதென்றும், அதற்குக் காரணம் புருஷன் பிரகிருதியென்னும் இரு தத்துவங்களின் சேர்க்கையே என்றும் கூறுவர் சிவமும் சக்தியும் கூடி நின்று சிருட்டித் தொழிலை நடத்திவருவதாகக் கூறுவர் வேறு சிலர். படைப்புத் தொழில் அன்பு மூலமாகவும் இன்பமான விளையாட்டாகவும் நடக்கிறது என்பர் மெய்யுணர்ந்த பெரியார். எவ்வாறு கூறினும், இனம் பெருக்கும் இயல்பே விலங்குகட்குள் ஆண்-பெண் கவர்ச்சியை உண்டாக்கி, காம இன்பத்தில் ஆசையை மூட்டுகிறது உண்மையாகும்; இந்த அடிப்படையான இன்

பத்தை மூலமாகக்கொண்டே பலவகைப்பட்ட வேறு இன்பங்களிலும் நாட்டம் அவைகட்கு உண்டாகிறது.

விலங்குகள் ஐம்புல இன்பங்களையே நாடி அவைகளிலேயே திருப்தி அடைகின்றன. பகுத்தறிவு பெற்றிருந்தும் அதைப் பயன்படுத்தாத மக்களும் விலங்குகளைப் போன்றே உண்பதிலும் உறங்குவதிலும் ஐம்பொறிகளுக்கு இரை தேடிக் களிப்பதிலும் மனம் திருப்தியடைகின்றனர். ஆனால் பகுத்தறிவு தலையெடுத்ததும், மனிதனிடத்து இன்பங்களில் தாரதம்மிய ஞானம் உதிக்கின்றது. உடலால் வரும் இன்பங்களைக் காட்டிலும் மனதினால் வரும் இன்பங்களில் அதிகமான நாட்டம் உண்டாகிறது; அறிவினாலும் அன்பினாலும் நல்லொழுக்கத்தாலும் வரும் இன்பம் ஐம்பொறி யின்பத்தைக் காட்டிலும் மேலானதாகத் தோன்றுதலின், அதனையே அதிகமாக நாடிப் பெறுகிறான். ஆனால் நாளடைவில் அந்த இன்பமும் நீடித்திருப்பதில்லை என்பதையும், துன்பங் கலந்ததாய் துன்பத்தைத் தருவதாய் இருப்பதையும் உணர்கிறான். அதிலும் திருப்தி பிறவாமல் பின்னர் அழிவில்லாததும் துன்பங்கலவாததுமான இன்பம் உண்டோ என்று ஆராய்கிறான். அதை அடையப் பலவழியாலும் முயல்கிறான். அழியாத ஆனந்தத்தில் உள்ள ஆசையோடு, அழியாமல் என்றும் வாழவேண்டும் என்னும் ஆசையும் எழுகின்றதை உணர்கிறான். எல்லாவற்றையும் அறியவேண்டும் என்ற இச்சையும் இயல்பாகவே உள்ளத்தில் குடிகொண்டிருப்பதும் தெரியவருகிறது. இம்மூன்று ஆசைகளும் மனிதனைப் பலவிதமான முயற்சிகளில் ஈடுபடுமாறு தூண்டுகின்றன. இந்த ஆசைகள் நிறைவேறாது போனாலும், எவனும் முயற்சிகளை ஓயாது புரிந்து வருகின்றான். துக்கத்திலும் அறியாமையிலும் மரணத்திலும் எவனுக்கும் வெறுப்புள்ளது; அவைகளை நீக்கும் முயற்சிகளில் பலமுறை தோல்வியுற்றாலும், அதைப் பொருட்படுத்துவதில்லை. இம் மூன்று வகையான விருப்பு வெறுப்புக்களின் காரணத்தையும் மனிதன் உணரமாட்

டாது தத்தளிக்கிறன். இந்நிலையிலுள்ள மனிதனுக்கு ஞானிகள் ஓர் உபதேசம் அளிக்கின்றனர். அவனிடம் குடிகொண்டுள்ள ஆசைகட்குக் காரணம் காட்டி, அவைகளைத் தீர்த்துக்கொள்ளும் வழியும் உண்டு என்று அனுபவ வாயிலாகக் கூறுகின்றனர். அவர்கள் சொல்வதாவது:—ஆன்மா எனும் மெய்ப்பொருள் மனிதனது உடலில் உள்ளது; அதன் உண்மை இயல்பு ஸத் சித் ஆனந்தமாகும், உண்மை அறிவு இன்பமாகும்; இந்த இயல்பே மனிதனை அழியாத வாழ்விலும் பேரறிவிலும் அழியாத இன்பத்திலும் ஆசை கொள்ளச் செய்கிறது; அவனுக்கு அந்த ஆசையை நிறைவேற்றும் ஆற்றலும் உள்ளது.

நமக்குப் புற உலகப் பொருள்களில் கவர்ச்சி உண்டாகும் காரணத்தையும் ஞானிகள் எடுத்துக் காட்டுகின்றனர். ஸச்சிதானந்த வடிவான உண்மைப்பொருள் நம்முள் இருப்பதுபோல நமக்கு வெளியிலும் எங்கும் உள்ளது. நமது மனத்தைக் கவர்வது வெளியிலுள்ள அகண்ட ஸச்சிதாநந்தப் பொருளே என்றாலும், இந்த உண்மையை நாம் உணர்வதில்லை. இதன் காரணம் யாதெனின், அதைக்காண வொட்டாது மறைக்கும் ஒரு மறைப்பு நம்மிடத்து இருப்பதே; இம்மறைப்பு மாயையென்றும் மலமென்றும் அவித்தை அஞ்ஞானம் என்றும் கூறப்படும். இதுவே உலகப் பொருள்களிலுள்ள ஆசைவடிவமாக நம்மால் உணரப்படுகிறது. உண்மைக் காட்சிக்குப் பெருந் தடையாகிறது. இம்மறைப்பு மூன்றுபடிகளாக உள்ளது என்பர் ஆன்றோர். தாமசகுணமுள்ளவர்க்கு இம்மறைப்பு மிகத் தடித்திருக்கும்; விறகிலுள்ள தீயைப்போலும் கருப்பைக்குள் இருக்கும் கருவைப்போலும் உண்மைப் பொருள் இவர்கட்கு முற்றும் மறைந்திருக்கும்; கடுமையான பெருமுயற்சியினாலேயே இம்மறைப்பு நீங்கி உள்ளே இருப்பது வெளித்தோன்றும். இராஜசகுணமுள்ளவர்க்கு இம்மறைப்பு தடித்திருக்கும்; நெய்யைஉள்ளே கொண்ட பால்போலவும் கண்ணாடியை மூடும் அழுக்குப்போலவும் அது உள்ளது. பெரும்விடாமுயற்சியால் இவர்கட்கு

மறைப்பு நீங்கி, உண்மை வெளிப்படும். ஸாத்துவிக குணமுள்ளவர்க்கு மறைப்பு மிக மெல்லியதாயிருக்கும்; ஒளி கடையப்படாத மணியில் இருப்பதுபோலவும் புகைக்கு நடுவே நெருப்பு இருப்பதுபோலவும் அது; அற்ப முயற்சியினால் இவர்கள் உண்மையைக் காணப் பெறுவர். மாயை இம்மூன்று நிலைகளில் இருக்கும்; அதனை ஒழிக்க, முதலில் தாமதகுணத்தை முயற்சியாலும் சுறுசுறுப்பாலும் போக்கி, இராஜச குணத்தை நிலைநாட்டல் வேண்டும்; பின், மன அடக்கத்தாலும் தியானத்தாலும் ஸாத்துவிக குணமாக்கல் வேண்டும்; ஸத்வம் மேலிட்டுத் தியானம் முறுகும்போது, அதன் மறைப்பும் நீங்கிவிடும், மெய்ப்பொருட்காட்சி உண்டாகும். ஸத்வ குணம் உதிக்கும்போதே நம்மிடத்திலுள்ள ஆன்மா நமக்கு வெளியிலுள்ள அகண்ட ஸச்சிதாநந்தப் பொருளாகிய பிரம்மத்தின் கவர்ச்சியை உணரத்தொடங்கும். ஸத்வகுணம் ஓங்க ஓங்க, அக்கவர்ச்சி பெரிதாக மேலும் மேலும் அதற்கு மனிதன் ஆட்படுவான்; அதே சமயம் உலகப்பொருள்களின் கவர்ச்சி வரவரத் தேய்ந்து வரும். மறைப்பு முழுதும் நீங்கியதும், ஆன்மா பிரம்மத்தினால் முழுதும் கவரப்படுவதை நேரில் கண்டு, அதன் மயமாவான். இந்நிலையே பரிபூரண நிலை, அமரத்வ நிலை, பேரின்ப நிலை. இதை அடையும்வரை மனிதனது ஆசை ஓயாது; இதுவே மனித வாழ்க்கையின் இலக்ஷியம். ஆன்மாவுக்குப் பிரம்மத்தினிடம் எழும் கவர்ச்சியே பக்தியாகும்; மறைப்பு முழுதும் நீங்கும்போதே, அக் கவர்ச்சி அளவில் அடங்காததாகும்; அதுவே பூரண பக்தியாகும்.

## (2) பக்தியின் வகைகள்

பக்தியென்பது பகவானிடத்தில் செலுத்தப்படும் அன்பாகும். மக்கட்குள் ஒருவர்மீது மற்றொருவர் அன்பு கொள்வதனால் முன்னவரைப்பற்றிய சிந்தனை தானாக இயல்பாகப் பின்னவர்க்கு உண்டாகின்றதன்றோ? அது

போல, பகவானிடத்தில் அன்பு உண்டாகும்போது அவரைப்பற்றிய சிந்தனை உண்டாகிறது. பக்தி முதிரும் போது இறைவனைப்பற்றிய நினைவு இடைவிடாது பக்தனின் உள்ளத்தில் நிகழ்கிறது. தாய்க்குத் தன் முதற் குழந்தையின்மீதும், உலோபிக்குப் பணத்தின்மீதும், உத்தம நாயகிக்குத் தனது நாயகன்மீதும் எப்படி இடைவிடாத நினைவுசெல்லுமோ அப்படியே அன்பினுல்எண்ணெயின் தாரைபோல இடையருது நினைவு இறைவனை நோக்கிச்சென்றுகொண்டே யிருக்கிறது; வேறொரு பொருளினிடத்துச் செல்வதில்லை. திசைகாட்டும் காந்தமுள் எவ்வாறு வட துருவத்தையே நோக்குமோ, புறக்காரணங்களால் விலகும்படிச் செய்யினும் அது அவைகளின் செயல் முடிந்ததும் மீண்டும் வடக்கையே எப்படி நோக்குமோ, அப்படியே பக்தனுடைய மனம் மற்றக்காரியங்களில் ஈடுபடினும் காரியம் முடிந்ததும் தானகவே இறைவனையே நாடிநோக்கும். "பெயருங் கருங்கடலே நோக்கும் ஆறு, ஒண்பூ உயருங் கதிரவனே நோக்கும்—உயிரும், தருமனையே நோக்கும், ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" (ஆறு கடலையே நோக்கிச் செல்லும், தாமரை சூரியனையே நோக்கும், உயிர் யமனையே நோக்கிச் செல்லும்; அதுபோல் என் ஆன்மா திருமாலையே நோக்கிநிற்கின்றது.) என்றார் ஆழ்வார். மெய்யடியார்க்கெல்லாம் தலையணியாய் விளங்கும் பிரஹ்லாதர் இறைவனைப் பிரார்த்திக்கும்போது, "ஞானமில்லாதவர்கட்கு விஷயங்களிடத்தில் எப்படிப் பிரீதி இடைவிடாது சென்று கொண்டிருக்குமோ, அப்படியே எனக்கும் உன்னைத் தியானிக்கும்போது அத்தன்மையான பிரீதி என் நெஞ்சைவிட்டு நழுவாமலிருக்கட்டும்" என்று வேண்டினார். இதுவே மிக உயர்ந்த உண்மையான பக்தியென்றும் பிரேமையென்றும் கூறப்படும்.

இத்தகைய பக்தி அழியாத்தன்மை யுடையது. இது தானக இயல்பாக வருவது; அடக்கினும் அடங்காதது. இதைப் பெற்றவன் அழிவில்லாதவனுகிறான்; திருப்தி

யுள்ளவனுகின்றான். ஆசையும், சோகமும், துவேஷமும் அவனைவிட்டு நீங்குகின்றன. அவன் சாந்தி யுடையவனுகிறான். இடையிடையே மெய்ம்மறந்தவனாய், பேரின்பத்தில் மூழ்குகிறான்; தழதழத்த குரலுடன் மயிர்சிலிப்போடு பேசுவான்; ஆனந்தக் கண்ணீர் சொரிவான். சிலசமயம் மூர்ச்சித்துக் கிடப்பவன்போல் இருப்பான். சிலசமயம் குழந்தைபோலவும், பேதைபோலவும், பித்தன் போலவும் ஊமையன்போலவும் ஒழுகுவான். அவன் பிரேமையொன்றையே உணர்வான், அதையே கேட்பான், அதையே பேசுவான், அதையே சிந்திப்பான். அதன் பெருமையை யாரால் உரைக்கக்கூடும் "அநிர் வசனீயம் பிரேம ஸ்வரூபம்" (பிரேமையின் இயல்பு உரைக்கக் கூடியதன்றாகும்) என்றார் நாரத பகவான்.

இவ்வளவு பெருமை வாய்ந்த பிரேமை ஆரம்பத்திலேயே ஒருவனிடத்தில் உண்டாவதில்லை. பக்தி ஒன்றையும் அஞ்சாது என்பது உண்மையாயினும் அது பகவானது எல்லையற்ற சக்தியைப்பற்றி ஓரோரிடத்தில் பயத்தின் வழியாக உதயமாவதும் உண்டு. முதலில், மனிதன் எல்லாம் வல்ல இறைவனது தன்மையையும் பெருமையையும் அதோடு தனது அளவுகடந்த சிறுமையையும் தனது குற்றங்களையும் உணரும்போது பயத்தோடுகூடிய பக்தி (பயபக்தி)யை அடைகிறான். ஆனால் விரைவில் இறைவனுடைய கடல்போன்ற கருணையையும், மற்றப் பெருங்குணங்களையும், நினைக்க நினைக்க அவனோடு நெருங்கிப் பழகுகிறான். அப்போது அன்பு உதித்துப் பெருகுகிறது. பகவானுடைய பெருமையைப் பற்றிய சிந்தனை நம்மை அவர்பால் அணுகவொட்டாது தடுக்கும்; ஆயினும் அவரிடத்துள்ள சுலபமான தன்மையையும், நல்ல இயல்பையும், உதாரத்தையும், அளவிறந்த (நம்மீதுள்ள) பிரியத்தையும், நினைக்க நினைக்க, அச்சம் நீங்கி அன்பு தலையெடுக்கும். இறைவன்மேலுள்ள பிரீதி வெறுப்பிற்கும் முரட்டுத்தனத்திற்கும் எதிரியாயினும், ஆரம்பத்தில் ஒரு

தெய்வத்தை வழிபடுபவன், அத்தெய்வமொழிந்த பிற தெய்வங்களிடத்தில் சிறிது வெறுப்புடையவனுதலும், பிற தெய்வங்களை வழிபடுவோரைக் காணின் முரட்டுத் தனத்தால் அவர்களை இழிவாகக் கருதுதலும் ஏற்படலாம். நெருப்புப் பற்றும்போது புகை உண்டாதல் போல் அது; நெருப்பு நன்ருக எரியும்போது புகை தானே மறைந்துவிடும். பக்தி யென்பது முதலில் தனக்கு உவந்த ஒரு தெய்வத்தினிடத்தில் ஒருவனுக்கு உண்டாவது; அது அத்தெய்வத்தைப் பற்றி வலுத்துப் பிரேமையாக வளரல் வேண்டும். பின்னர் அது எத்தெய்வத்தினிடத்திலும் வெறுப்பற்றதாகி மாறிவிடும். மாருது போமாயின் இறைவனது மறக் கருணையால் துன்பத்தின் வாயிலாக வெறுப்பற்றதாகி விடலாம். அரங்கனைப் பாடிய வாயாற் குரங்கனைப் பாடமாட்டேன் என்ற வைணவ பக்தரே பின்னர் திருவேங்கடத்து எம்பெருமான் மீது பல பிரபந்தங்களைப் பாடினரன்ருே?

கண் முதலிய ஐம் பொறிகட்குப் புலப்படும் பொருள்களையே பிரீதியோடு நினைத்தல் சாதாரண மனிதனுக்கு இயல்பாகும்; ஏனெனில் அவனுக்கு அவைகளால் பெறக் கூடிய இன்பம் வெளிப்படை; அது அனுபவத்தால் அறியக் கூடியதாகின்றது. இறைவனே கண்ணுக்கும் மனதிற்கும் எட்டாதவன்; அவனைப்பற்றி எழும் இன்பம் சாதாரண மனிதனது அனுபவத்தில் இல்லை; ஆதலால் அம்மனிதனுக்கு இறைவனிடத்துப் பிரீதியை உண்டாக்குதல் அவசியமாகின்றது. இறைவனிடத்துப் பிரீதி செய்தல் நமது இயல்பாயினும், நம்மனத்திலுள்ள மாயையின் செயலால் அது மறைவுபட்டுக் கிடக்கின்றது. அந்த அழுக்கை நீக்குதற்காக ஒன்பது வகையான செயல்களைச் சாஸ்திரங்கள் விதித்துள்ளன. "நாமறியாமலே நம்மீது மிக்க பிரீதியுள்ள ஒருவன் நமக்கு எல்லா நன்மைகளையும் எப்போதும் எங்கிலையிலும் மறைந்து நின்று செய்து வருகின்ருன். அவனை உணர்ந்து அவன்மீது நாமும் பிரீதி செய்தால் அவன் கண் காணவந்து நமக்கு வேண்டியவற்

றையெல்லாம் தருவான்" என்று ஆசாரியர்கள் கூறுகின்றனர். இத்தன்மையான ஒருவனிடத்து நமக்குப் பிரீதி உண்டாக வேண்டுமாயின், முதல் முதலாக அவனது பெருமையையும் குணங்களையும் அவைகளை விளக்கும் செயல்களையும்பற்றித் தெரிந்தவர்கள் சொல்ல நாம் கேட்க வேண்டும்; இதுவே கேட்டல் (சிரவணம்) எனப்படும். பின் அவனது குணங்களையெல்லாம் சுருக்கமாக உணர்த்தும் அவனது பல நாமங்களை நாம் சிந்தனையோடு வாய்விட்டு உரைத்தல் வேண்டும்; இது நாமஞ் சொல்லல் (கீர்த்தனம்) எனப்படும். பின் இந் நாமங்களால் உணர்த்தப்படும் அவனது பெருமையையும் குணங்களையும் மனதால் அடிக்கடி நினைத்தல் (ஸ்மரணம்) வேண்டும். இம் மூன்றும் செய்பவனுக்கு அவன் ஒருவன் உளன் என்ற ஒரு நம்பிக்கையும் மனதில் அவனது உருவ நினைவும் உண்டாகும். அந்நினைவை உறுதிப்படுத்துதற்காகவும், இறைவனை எல்லாப் புலன்கள் வழியாகவும் அனுபவித்தற்காகவும் தனக்குப் பிரியமான ஒரு வடிவமுடையவனாக அவனைச் சிந்திக்கிறான். அவன் எப்போதும் பக்கத்தில் மறைந்து நிற்பவன் என்பதை அறிதலும், அவனது திருவடிக்கு நம்மாலியன்ற குற்றேவலைச் செய்தல் வேண்டும் என்ற ஆசை அரும்பும்; இது சிறு தொண்டு செய்தல் (பாதஸேவனம்) எனப்படும். பின்னர் அவனது திருவடியை நீர், மலர் முதலியவற்றால் பூஜிக்கத் தோன்றும்; இது வழிபாடு (அர்ச்சனம்) எனப்படும். இவ்வழிபாடு முடிந்ததும், அவனை வீழ்ந்து பணிந்து வணங்கத் தோன்றும்; இது வணக்கம் (வந்தனம்) எனப்படும். இறைவன்மீதுள்ள நம்பிக்கை இச்செயல்களால் வலுக்கவும், அவனோடு நெருங்கிப்பழக ஆசை உண்டாகும். அப்போது நாம் அவனை நமது ஆண்டான் (எஜமானன்) எனப்பாவித்து அடிமையாக எல்லாக்காரியங்களையும் செய்து வருவோம். இது தாஸ்யம் (அடிமையாதல்) எனப்படும். பின் அவ்வுறவு முற்றலும், அவனை நமக்குச் சமானமான ஒரு பெருந்தோழனாகக் கருதுவோம்; இது ஸக்யம் (நட்பாதல்) எனப்படும்.பின்னர் நமது செயல்கள் யாவும் நாமும் இறை

வனுக்கே உரிமையாமாறு அவனிடம் அனைத்தையும் ஒப்புவிப்போம். இது ஆத்ம நிவேதனம் (தன்னை ஒப்படைத்தல்) எனப்படும். இவ்வொன்பது செயல்களும் இஷ்டதெய்வத்தின்மீதுள்ள பக்தியைப் பெருகச் செய்வனவாம்.

முற்கூறிய யாவும் உண்மையான பக்தியைப் பெறுதற்குரிய ஆரம்பப் படிகளாகும். பக்தி நூல்களிற் கூறியுள்ள விதிகளைப் பின்பற்றுவதினால் பகவான்மீது அன்பு உண்டாக வழி ஏற்படுகிறது. மனத்திலுள்ள மாசு (மலம்) சற்றே அவ்விதக் கிரியைகளினால் குறைந்து வருகிறது; அக்காரணத்தால் பிரீதியும் வெளித்தோன்ற ஆரம்பிக்கிறது. இவ்விதிகளை ஒழுங்காக நாடோறும் பின்பற்றி வருபவனிடத்து உண்டாகும் பக்தி வைதபக்தி அல்லது ஆரம்பபக்தி யெனப்படும்; அபரபக்தி யென்பதும் அதுவே. இம்முறைப்படி இறைவன்மீது அன்பு செலுத்தி வருவதினால் நாளடைவில் அவனைக் காண வேண்டும் என்னும் அவா மனத்தில் எழுகிறது; அவனைக் காணாத வாழ்க்கை அவமானது என்னும் நிச்சய புத்தி முளைக்கின்றது. நான்கு சுவர்களாலான ஓர் அறைக்குள் அளப்பரும் நிதிக் குவியல் உள்ளது என்பதைத் தெளிவாக உணரும் ஒரு கள்வன் மனம் ஆறியிருப்பானா? சுவரைக் குடைந்தோ பூமியைக் குடைந்தோ அறைக்குட் சென்று அதை எடுத்துச் செல்வதற்கான வழியைப்பற்றி இரவும் பகலும் சிந்தித்தும் முயன்றும் வாரானோ? அது போல் பக்தனது உள்ளத்தினின்றும் இறைவனைக் காணும் ஆசை இயல்பாகப் பெருகுகிறது. அழியாத அளவற்ற இன்பத்திற்கும் அறிவிற்கும் சக்திக்கும் உறைவிடமாகிய பரம்பொருள் உள்ளது என்பதில் முழு நம்பிக்கை யுள்ளவன் அப்பரம்பொருளை அடைவதை விட்டுவிட்டு வேறு முயற்சிகளிற் கருத்தைச் செலுத்துவானா? அவ்வாறு அம் முயற்சியில் ஈடுபடாத நம்மிற் பலரும் உண்மையில் நாஸ்திகர்களே யாவோம். தெய்வம் உளது என்று நன்கறிந்தவர் அதை யடையும் கருமத்திலேயே கண்ணாயிருப்பார்; பகவானைத் தவிர வேறு எதையும் பொருட்படுத்

தார். உணவு இல்லாது பசியால் மக்கள் துடிப்பது போலவும், பாலைவனத்தில் நடந்து செல்வோர் தாகத்தால் தவிப்பது போலவும், நீரைப் பிரிந்த மீன் தத்தளிப்பது போலவும், இவர்கள் பகவானை அடைவதற்காகப் பரிதவிப்பார்கள். இதுவே ராகபக்தி, பரபக்தி யெனப்படும். அன்பு உள்ளத்தினின்று பொங்கி வழியும்போது, அன்பன் சாஸ்திர விதிகளை மீறவும் செய்வான். அபர பக்தி சாதன பக்தியாக, பரபக்தியோ ஸாத்திய பக்தி யெனவும் கூறுவர். இதுவே பிரேமை (பிரேமபக்தி) யென்றும் சொல்லப்படும். இம்மாதிரியான உயர்ந்த பக்தி ஒருவர்க்கு உண்டாக வேண்டுமாயின், பகவானது இயல்பைப்பற்றிய ஞானம் அவர்க்கு உதித்துத்தான் ஆதல் வேண்டும். அன்பு பூரணமாகும்போது உண்மையான ஞானம் தானாகப் பிரகாசிக்கும்; அதுபோல பகவானைப்பற்றிய பூரண ஞானம் உதிக்கும்போது, உண்மையான அன்பும் அதனோடு கூடவே குடிகொண்டிருக்கும்; ஆக உயர்ந்த ஞானமும் உயர்ந்த பக்தியும் ஒன்றேயாம். சிலர் ஞானத்திற்குப் பக்தி சாதனம் என்பர். அக்கொள்கைப்படி, பக்தி தாழ்ந்த பக்தியையும் ஞானம உயர்ந்த ஞானத்தையும் குறிக்கும். அதுபோல் வேறு சிலர் பக்திக்கு ஞானம் சாதனம் என்பர்; இக்கொள்கையின்படி பக்தி உயர்ந்த பக்தியாக ஞானம் தாழ்ந்த ஞானமாகும். உயர்ந்த ஞானமும் உயர்ந்த பக்தியும் அனுபூதி நிலையில் ஒன்றேயாகும்.

பக்தர்களைப்பற்றிக் கூறுமிடத்துக் கீதையில் கண்ணபிரான் "என்னைப் பக்தி செய்பவர்கள் நான்கு வகைப்பட்டவர் உளர்; அவராவார்: ஆர்த்தர், ஜிஞ்ஞாஸு, அர்த்தார்த்தி, ஞானி யென்பவர்களே" என்றார். துன்பம் வந்தபோது அதனை நீக்குவதற்காகப் பகவானை அன்போடு வேண்டித் துன்பமொழியப் பெறுவோர் ஆர்த்தராவார்; மன்னரது பெருஞ் சபையில் துகிலுரியத் தொடங்கியபோது உயிரினும் பெரிய மானத்தை இழக்க நேரிடும் பேராபத்துச் சமயத்தில் இறைவனைப் பேரன்

இம்மூவரும் பகவானைக் கல்பகத்தருவாகக் கருதிப் பரிசு பெற்றவரேயாவார். பகவானை உபாயமாகக்கொண்டு பிற பொருள்களைப் பெற்றவராகின்றனர். இறைவனோ கல்பகத்தருவினும் மேன்மை வாய்ந்தவன்; எப்படியெனில் கல்பகம் கேட்பார்க்குத் தன்னைக் கொடுக்காது, ஆனால் இறைவன் ஆழ்வாரது வாக்கின்படி 'தன்னையே தந்த கல்பகம்' ஆகின்றனன். ஞானி பகவானை உபாயமாக்கிப் பிறிதொன்றைப் பெறவிரும்பான். அவரையே உபேயமாக்கி (இலக்ஷியமாக்கி), அவரையே வேண்டி, உயர்வற உயர்ந்த பொருளாகிய அவரையே பெறுகின்றான். பகவானைத் தன்னுயிராகக் கருதும் ஞானியைப் பகவானும் தமது உயிராகவே கருதுகிறார். இதுவே பிரேம பக்தியின் எல்லையாகும்.

பரபக்தியின் இயல்பை இன்ன தன்மையதென்று எடுத்துரைக்க முடியாது என்பர் மெய்யன்பர்; அதனை ஒருவாறு உலக அனுபவத்தைக்கொண்டு குறிப்பாக வெளிப்படுத்த விரும்பிய ஆன்றோர் ஐந்து வகையாக அதைப்பற்றிப் பேசியுள்ளார். உயிர்க்கு என்றும் தந்தையாகும் பகவான்மீதுள்ள பிரேமையினால் உலகப் பொருள்களின் மீதுள்ள ஆசைகளை யடக்கி, மனத்தைச் சாந்த நிலையில் எப்போதும் வைத்துக்கொண்டு, பகவானையே தியானித்து அவரைக் காணுதல் சாந்த பக்தி யெனப்படும்; இந்நிலையில் இருந்தவர் ரிஷிகளிற் பெரும்பாலார். பகவானைக் காண்பதோடு நில்லாது, அவரோடு உறவு கொண்டாடி, அவரை ஆண்டானாகவும் நம்மை அடிமையாகவும் கருதி, அவர்க்கு எப்போதும் தொண்டு செய்யும் பக்தி, தாஸ்ய பக்தி எனப்படும்; இவ்வாறு பக்தி செய்தவர், "தங்கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று கூறிய அப்பர் சுவாமிகளும் ஹனுமாரும் பிறரும். அடிமை பகவானை நெருங்க நெருங்க, அவரது அன்பின் மகிமையால் தன்னைத் தோழனாகக் கருதி அன்பு செய்கிறான். இது ஸக்ய பக்தி யெனப்படும்; இதற்கு உதாரணங்கள் 'தம்பிரான்

போடு வேண்டிப் புடவை சுரக்கப்பெற்ற திரௌபதி இவ்வகைக்கு ஓர் உதாரணம். மோக்ஷத்தில் இச்சையுற்றவராகி, அந்த இச்சையை பகவானே நிறைவேற்றுவார் என்றறிந்து அதன் பொருட்டு அவரைப் பிரார்த்திப்போர் ஜிஞ்ஞாஸுக்கள் எனப்படுவர்; முத்தியைக் கோரி இறைவனை வழிபட்ட உத்தவர் இதற்கு ஓர் உதாரணமாவர். தமது எளிமைத்தனம் நீங்கிப் பெருஞ் செல்வம் பெறல்வேண்டும் என்னும் ஆசையோடு பகவானை வணங்குவோர் அர்த்தார்த்திகள் ஆவார்; அரசுரிமை பெற்று வாழும் பொருட்டுத் தவஞ்செய்து பகவானை வழிபட்டு மன்னரான துருவர் இவ்வகைக்கு ஓர் உதாரணம். மெய்ஞ்ஞானம் பெற்று யாதொன்றையும் வேண்டாது, உள்ளத்து இயல்பாகவே பொங்கும் பரிவினால் இறைவனை வணங்குவோர் ஞானிகளெனப்படுவர்; மெய்யன்பர்கட்கு ஓர் இலக்ஷியமாய் உயர்வற உயர்ந்த ஞானம் பெற்றுத் திகழ்ந்த பிரஹ்லாதர் இவ்வகைக்கு ஓர் உதாரணமாவர். இந்நால்வகை அன்பர்களும் 'உதார' குணமுடையவர்களேயென்றும், ஆயினும் அவர்கட்குள் ஞானிகள் செய்யும் பக்தியே அனைத்திலும் மேலானது என்றும், ஞானிகட்குத் தம்மீதும், தமக்கு அவர்கள் மீதும் உள்ள பிரியத்திற்கும் அளவில்லையென்றும், ஞானியைத் தமக்கு உயிராக மதிப்பதாகவும் பகவான் கூறுகிறார். தனது அன்பான மக்கட்கு வேண்டியவற்றை வேண்டியவாறே அளிக்கும் ஆதரத்தோடு இறைவன் அவர்களை எதிர்பார்த்து நிற்கிறான்; எனினும், அவனையண்டிக் கேட்பார் சிலரே. துயர நீக்கத்தையேனும் பொருளையேனும் வேண்டித் தன்பால் அன்போடு அணுகும் அன்பர்களைக் கண்டதும், இறைவன் தனது வாட்டந்தீர்ந்து உள்ளம் பூரித்து அவர்கள்பால் நன்றி கூர்கிறான்; "என்னிடம் வந்து யாசித்து எனது வள்ளல் தன்மையை நிலைநாட்டித் தந்த அவர்களது வள்ளல் தன்மையை என்னென்பது" என்று கொண்டாடுகிறான். உலகப் பொருள்களை யாசிக்காது பிறவித் துயரறுமாறு வேண்டுவோன் அவர்களிருவரினும் மேலானவன், மிக்க உதாரமுடையவன்; ஆயினும்

தோழர்' எனும் நாமம் பெற்ற சுந்தரரும் குசேலரும் பிறரும் ஆவார். பக்தனுக்கு அன்பு முற்ற முற்றத் தன்னைத் தாயாகவும் இறைவனைத் தனது குழந்தையாகவும் கருதும் அன்பு உண்டாகிறது. இந்நிலையில், பக்தன் தானே இறைவனைக் காப்பாற்றவேண்டும் என்று நினைக்கிறான்; இறைவன் தன்னைக் காப்பாற்றுகிறான் என்ற நினைவு நழுவிவிடும். இது வாத்ஸல்ய பக்தி எனப்படும். இவ்வாறு பக்தி செய்தோர், கானகத்தே கண்ட சிவபெருமானைப் பிரியப்பொறாது "கன்று அகல் புனிற்று ஆப்போல்" பேரன்பால் பரிதவித்த கண்ணப்பரும், பொங்கும் பரிவால் இறைவனுக்குப் பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரும் பிறரும். இந்நால்வகை அன்பையும் தன்னகத்து அடக்கிக்கொண்டும் அவைகளினும் ஆழ்ந்து செல்லும் அன்பு, கற்புடைய நங்கைக்கு நாயகன்மீது செல்லும் அன்பாகும்; ஏனெனில் அவளிடத்து அன்னை தன்மையும் அடியாள் பணியும் புவிப்பொறையும் நல்ல தோழமையும் இன்னும் நாயகனது இன்பத்திற்கே உறுப்பாகும் இயல்பும் குடிகொண்டிருக்கும் அன்றோ. பகவானை நாயகனாகக் கருதும் அன்பு மதுர பக்தி யெனப்படும்; இதற்கு உதாரணங்களாவார், ஆண்டாள், நம்மாழ்வார், முதலியோர். தன்னை மணந்த நாயகன்மீது எழும் காதலினும் பன்மடங்கு பெருவலியோடு (தடைகளையும் முறையையும் பொருட்படுத்தாது) ஒருத்திக்குச் சோர நாயகன்மீது காதல் எழும். "ஊரவர் கவ்வை எருவாக அன்னை சொல் நீராக வளரும்" (ஊரார் பழிச்சொல் உரமாக, தாயின் சொல் தண்ணீராக வளரும்) கடலன்ன இக்காதல் ஒருவாறு முற்கூறிய அன்பினும் சிறந்ததாகவும் கருதப்படுகின்றது; இவ்வாறு பக்தி செய்தோர் மீராபாயும் கோபியரும், பிறரும். இறைவனைப் பிரியும்போது ஒரு கணம் ஒரு யுகமாயும், இறைவனோடு கூடியிருக்கும்போது ஒரு யுகமும் ஒரு கணப்பொழுதாயும் தோன்றல் இவ்வுயர்ந்த பக்திக்கு அறிகுறியாகும். இறைவனைத் தமது உயிராகக் கருதுவார்க்கு இது இயல்பன்றோ?

இறைவன் எவ்விடத்தும் எப்பொருளிலும் வியாபித்து மறைவாக உள்ளான் என்பர் நம்மாழ்வார். இன்னொரு பெரியார் ' எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்....நடிக்கும் மெய்ப்பொருள் ' என்பர்; 'நீராய் நிலனாய்த்தீயாய்க் காலாய்நெடுவானாய் சீரார் சுடர்கள் இரண்டாய் ' எல்லாமாய் எல்லாத் தெய்வங்களுமாய் இறைவன் நிற்கிறான்என்னும்ஞான நூல்கள். பிறப்பில்லாத பகவானும் அருளால் உலகத்தை உய்விக்கும் பொருட்டு மனித வடிவோடு அவதரிப்பான் என்னும் கீதை. உலகத்தை ஆட்கொள்ளும்பொருட்டுத் திருக்கோயில்களிலே அருள் திருமேனி தாங்கி எழுந்தருளியிருப்பன் என்பர் ஆகம நூலார். சுருங்கச் சொல்லில், இறைவன் உருவமுடையோனும் அருவமானவனும் பற்பல உருவமுடையோனும் உருவ அருவங்களுக்கு அப்பாற்பட்டவனும் ஆனவன். ஆதலின் இறைவனைத் திருக்கோயிலிலே வழிபடுவார் சிலர்; நெஞ்சமாகிய கோயிலிலே வழிபடுவார் சிலர்; எல்லா உயிர்களிலும் அவனைக்கண்டு வழிபடுவார் சிலர்; ஐம்பெரும் பூதங்களிலும் வழிபடுவார் சிலர். அன்பர்கள் கருதும் வடிவங்களெல்லாம் தாங்கிக்கொண்டு ஆதரத்தோடு முன்னிற்பவன் அவன். ஆதலின், எவ்வடிவத்து வழிபடினும் அவன் அருள் செய்வான். தனக்கென ஒரு நாமமும் வடிவும் இல்லாதானை எண்ணிறந்த நாமங்களோடும் வடிவங்களோடும் தொழுதலும் பொருத்தமேயாம். அவதார வடிவங்களைத் தொழுதல் மிக்க நன்மையை அளிப்பதொன்றேயாம். இவைகளையெல்லாம் விட்டு இறைவனை ' இயல் உண்மை அறிவு இன்ப ' (ஸத்சித் ஆனந்த) வடிவாக வழிபடுவோரும், ' உலவா இன்பச் சுடர் 'வடிவாக வழிபடுவோரும் உளர். அருவமாம் கடவுள் அன்பிற்கு வசப்பட்டு உறைந்து வடிவங்கொள்ளலும் உண்டு; உருவுற்ற கடவுள் ஞானவெம்மையால் உருகி அருவமாக நிற்றலும் உண்டு; ஆயினும் தெய்வம் ஒன்றேயாகும். யோகியர் இருதயத்தில் இறைவனை வழிபடுவர்; சமதரிசிகள் எங்கும் அவனை வழிபடுவர். இறைவனைக் கணவராக வழிபடுவதுபோல, கணவரை இறைவனாக

வழிபடும் நங்கையரும் உளர். அதிதியை இறைவனாக வழிபட்டவரும் உளர். குருவையும், மாதரையும், அடியார்களையும், பொதுவாக மக்களையும் இறைவனது வடிவமாக வழிபடுவோரும் உளர். இவையனைத்தும் இறைவனை வழிபடும் பலவகைகளாம். வடிவத்தையே பற்ருது அவ் வடிவத்தைத் தாங்கும் இறைவனையே வணங்கி அன்பு செய்யின் இறைவன் எங்கும் தோன்றி அருள் சுரப்பான். அன்பு பக்தனை பகவானோடு முடிவில் இரண்டறக் கலக்கும்படிச் செய்யினும், அந்நிலையினை அன்பர் விரும்பாது, வேருக நின்று மெய்யன்பு செலுத்துவதையே விரும்புவார். கற்கண்டாகி விடுவதினும் கற்கண்டைச் சுவைத்தலையே மேலாகக் கொள்வர் அன்பர்.

## (3) பக்தி வளரும் முறை

பக்தியின் பெருமை அளவிடற்கரியதாகும். இக்காரணம் பற்றியே பகவான் ஒருவற்கு முத்தியை அளிக்கினும் அளிக்கலாம்; ஆனல் பக்தியை அளிப்பது அரிதாகும். சிறையில் அடைபட்டிருப்பவர்களை முடிசூடல் போன்ற சில நற்காரியங்களை யொட்டி ஒரு மன்னன் அவர்களை மனமகிழ்ச்சியால் விடுவிப்பதுபோல, இறைவனும் தனது கிருபையால் உலகச் சிறையினின்றும் சிலரை விடுவிக்கலாம்; ஆனல் பக்தியை ஒருவற்கு இறைவன் அளிப்பானுயின், பக்தனுக்கு அவன் அடிமையாகவும் ஒழுகவேண்டிவரும்; இக்காரணத்தால் இறைவன் ஒருவனை நன்கு சோதியாமல் பக்தியை அளிப்பதில்லை. பக்தர்களை வறுமைக்கும் பலவகைப்பட்ட உலகத்துயரங்கட்கும் உட்படுத்தியும், கடுஞ்சோதனைகட்கு உள்ளாக்கியும், அவர்களது உள்ளங்களைப் புடமிட்டுத் தூயனவாக்கியபின்பே உயர்ந்த பக்தியை அளிக்கிருன். தொண்டரின் பெருமையைச் சொல்லலும் அரிது என்ருர் ஔவையார். பக்தனுக்கும் பகவானுக்கும் பாகவதத்திற்கும் பேதமில்லை யென்பர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். பக்தியின் சொரூபம் 'அநிர்வசனீயம்' (சொல்லற்கரியது) என்பர் நாரதர்.

மேன்மை வாய்ந்த இந்த பக்தி பகவானது அருளாலே அடையப்படுகின்றது "மயர்வற மதி நலம் அருளினன்" என்றார் ஆழ்வாரும். கடுமையான தவத்தாலும் சாதனங்களைப் பழகுவதாலும் சாஸ்திர ஞானத்தாலும் யோகத்தாலும் இறைவனைக் கட்டுப்படுத்தி அருளைப் பெறமுடியாது. ஏனெனில் அவனது அருள் ஒரு விதிக்கும் உட்பட்டதன்று; அது தானாகவே உண்டாவது. இறைவனையோ அவனது அருளையோ எவராலும் விலைக்கு வாங்க முடியாது; அதற்கு ஈடாக எப்பொருளைக் கூற முடியும்? ஆதலின் அருளைப்பெற நிபந்தனை இல்லை; ஆயினும் பக்தி வலையில் (அன்பு என்னும் வலையில்) படுவோன் அவன் என்னலாம். உலகப்பற்று ஒரு சிறிதேனும் இருக்கும்வரை இந்தப் பிரேமை உண்டாகாது. "யார் என்னைச் சரணமடைகின்றனரோ, அவர்களே மாயையைத் தாண்டிச் செல்கின்றனர்' என்றார் கிருஷ்ணபகவான். எல்லாம் அவன் செயல் என்று இறைவனைத் தஞ்சமாகப்பற்றிநிற்றலே அருளைப் பெறுதற்கு வழியாகும்; எனினும் இதையும் சாதனமாகக் கருதார் பெரியோர். இவையனைத்தும் உண்மையேயென்றாலும், நாம் செய்ய வேண்டியதும் உளது. அறிவுள்ள பொருள்களாகிய நாம் அந்த அறிவின் பயனாகச் செய்ய வேண்டிய கடமைகளும் உண்டு. இறைவனது கருணையெனுங் காற்று வீசிக்கொண்டேயிருப்பது உண்மையானாலும், நமது வாழ்க்கைத்தோணியிலுள்ள பாயை விரித்தாலன்றித் தோணி பிறவிக் கடலின்மீது ஓடாது. பாயைவிரித்துக் காற்றைப் பயன்படுத்துவது நம்மைச் சேர்ந்ததாகும். இன்னும், காற்றடிக்கும்போது நாம் வீசிக்கொள்ளவேண்டிய அவசியமில்லையென்றாலும், தாபம் மிகும்போது நாமே விசிறியால் வீசிக்கொள்வதும் வேண்டும். நாம் இறைவனைப் பெறமுயன்றாலும் முயலாவிட்டாலும், அவன் நம்மைப்பெறமுயன்று வருகிறான். நம்மை அணுகி, நம்மோடு அளவளாவி இன்புற அவன் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறான்; ஆயினும் அவனை விட்டு விலகும் வழியைப் பின்பற்றிவருகிறோம். நாம்

அவனை நோக்கி ஓரடியாவது எடுத்து வைத்தல் வேண்டு மன்றோ? அப்போது அவன் நம்மை நோக்கி நூறடி எடுத்து வைப்பான். அவன் நம்மிடத்து அன்பு வைத்தும் பயனென்? நாம் அந்த அன்பிற்கு இணங்க வேண்டு மன்றோ? அவன் நம்மை அடைவதற்காகச் செய்யும் முயற்சியை விலக்காமலாவது இருத்தல் வேண்டுமன்றோ? தாய் உணவூட்டவரும்போது பைத்தியங் கொண்ட பையன் வெறிகொண்டு அவளைக் கண்ணெடுத்தும் பாராது அவளை விட்டு விலகி ஓடுவதுபோல, நாமும் உலகப் பொருள்களின் மீதுள்ள பைத்தியத்தால் இறைவனை விட்டு விலகி ஓடுகிறோம். எல்லாம் அறிந்த அவன் தனது முயற்சியால், நம்மை அடைய வழி பார்க்கும் போது, நாம் அறியாமையால் அவனை விட்டு நீங்குவதையே விரதமாகக் கொண்டவராகிறோம். நமது முயற்சியின் பயனின்மையை உணர்ந்தாலன்றி அவனது முயற்சிக்கு இசையும் இயல்பு நம்மிடத்து ஏற்படாது. ஆதலால் நம்மால் இயன்ற அளவுவரை முயன்றும், அது பயனற்றுப் போவதை அனுபவத்தில் அறிதல்வேண்டும். நமது ஆணவம் நம்மைச் சும்மாவிருக்க ஒட்டாதாகலின், அது தேய்ந்து மாயும் வரை அதற்காகவே நமது முயற்சியைக் கைவிடாது பின் பற்றல்வேண்டும். நடுக்கடலில் கப்பலிலுள்ள பாய்மரத்தின்மீதமரும் பறவை தன்னால் இயன்ற மட்டும் பறந்து பறந்து சலிப்படையும் வரை, தன் இருப்பிடம் வந்து சும்மாவிருந்து சுகமாகச் கரைசேர நினையாது. ஆதலின் நமது ஆணவ முயற்சியை ஒழித்தற்காகவாவது பாடு படல் வேண்டும். இக்காரணங்களால், ஞான நூல்களிற் கூறப்பட்டுள்ள சாதனங்களை யெல்லாம் இறைவனது ஆணைகளாகக் கருதி, அவைகளைப் பழகல் வேண்டும்; அன்றியும் இறைவன் மீது பேரன்பு கொண்டு அதன் பயனாக அவனுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கக்கூடிய தொண்டுகளை விடாது இயற்றல் வேண்டும். இறைவன் அருளால் அளிப்பதை நாம் ஏற்பதற்குரிய தகுதியையும் பேணிப்பாதுகாக்க வேண்டும்; இதற்காகவும் சாதனம் பழகுதல் அவசியமாகின்றது. ஆயினும்

எவ்வளவு சாதனம் பழகினும், இறைவனே முடிவான நிலையான சாதனம் என்பதை மறத்தல் கூடாது.

பக்தி வளர்தற்குரிய அனுகூலங்களைச் சுருங்கச் சொல்வோம். (1) "ஒருமையுடன் நினது திருமலரடியை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்". அதாவது, ஸாது ஸங்கம் (நல்லோர் இணக்கம்) வேண்டும். நாரத ரது பக்திஸூத்திரத்திலும், "முக்கியமாக மஹான்களது கிருபையாலும், பகவானது சொற்ப கிருபையாலும் (பக்தி ஏற்படுகிறது)" என்று கூறப்பட்டுள்ளது. (2) "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமைவேண்டும்". அதாவது, தீயாரிணக்கத்தை அறவே விடல் வேண்டும். (பக்தி சூத்ரம் ? —43) (3) "பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்"—இறைவனது 'பொருள் சேர் புகழை'ப் பேசியும், அதைக் கூறும் நூல்களைப் படித்தும் பொழுது போக்கல் வேண்டும். (4) 'பொய்ம்மை பேசாதிருக்க வேண்டும்'—மெய்ம்மையைப் பின்பற்ற வேண்டும்; சொல்லும் நினைவும் செயலும் ஒன்றுக்கொன்று பொருத்தம் உடையனவாதல் வேண்டும். (5) 'பெருநெறி பிடித்தொழுக வேண்டும்'—ஞான சாதனங்களையும் விடாது பழகிவரல் வேண்டும். (6) 'மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்'—ஆணவத்தை ஒழித்தல் வேண்டும்; எல்லாம் அவனது செயல் என்றெண்ணித் தன் செயலறுதல் வேண்டும். (7) 'மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்'—பிரம்மசரிய விரதத்தைக் கைப்பற்றி வழுவாது ஒழுக வேண்டும். இல்லறத்தாராயினும் துறவறத்தாராயினும் சரி, பிரம்மசரியத்தால்வரும் பெருஞ்சக்தி அனைவர்க்கும் வேண்டும். (8) 'உனை மறவாதிருக்க வேண்டும்'—மனம் அமைதியாயிராதபோதும், துயரம் நேரும்போதும், தளர்ச்சியுறாது இறைவனை சதா நினைத்துக்கொண்டே இருத்தல் வேண்டும். (9) 'மதி வேண்டும், நின்கருணை நிதி வேண்டும், நோயற்ற வாழ்வை நான் வாழவேண்டும்'—அழியும் பொருள் இது, அழியாப்

பொருள் இது என்ற வேறுபாட்டை எப்போதும் விசாரித்தறியும் புத்தி வேண்டும். நல்லாரிணக்கம் ஒன்றொழிந்த மற்றையவெல்லாம் அதினின்றே பெறலாம். ஆதலின், அதனினும் உற்றதுணை பத்தியைப்பெற நினைப்பார்க்கு வேறில்லை.

பக்தி நெறியிற் செல்பவனுக்கு அவனது மனத்தில் இயல்பாக எழும் உணர்ச்சிகளாகிய காமம் குரோதம் பயம் பகைமை நட்புணர்ச்சி உறவுணர்ச்சி இன்ப துன்ப உணர்ச்சிகள் இவை முதலியன தம்மளவிலே குற்ற முள்ளவைகளாவதில்லை; ஆதலின் அவைகளை வேரற மாய்த்தல் வேண்டும் என்பதில்லை. மண்ணாசையும் (வாழ்க்கையாசையும் பிறவியில் விருப்பும்) ஒழிக்கப்பட வேண்டியதொன்றன்று. ஆயினும் இவை சாதாரண மனிதனிடத்துக் காணப்படும் நிலையில் குற்றமுள்ளவைகளே யாம். உலக மக்களையும் உலகப் பொருள்களையும் பற்றி எழும் இவ்வுணர்ச்சிகளை ஒருவன் மிக விழிப்பாக அடக்கி, இறைவனை நோக்கிச் செலுத்தி வருவானாயின், அவைகளே அவனை வரவர உயர்த்தி இறுதியில் இறைவனுடைய திருவடிகளை அடைந்து உய்வு பெறும்படிச் செய்யும். போகப் பொருள்களையும் போக சாதனங்களையும் பெற்றவுடன் மகிழ்ச்சியடையும் மனம் இறைவனை நினைக்கும்போதும் அவனது அடியார்களைக் காணும்போதும் தொண்டு செய்யும்போதும் மகிழ்ச்சி அடையும் படியை எய்துமாயின், அப்படி உயர்ந்தபடியே. மாதரைப் பிரிந்து துடிக்கும் மனம் இறைவனைப் பிரியும்போதெல்லாம், இறைவனைக் காணுதபோதெல்லாம் துடிக்குமாயின், அது மிக உயர்ந்த பக்தி நிலையாகும். அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய பரமபதத்தை நாடும் ஆசை உயர்ந்ததெனினும், 'இவ்வுலகத்திலே நினது நாமத்தைச் சொல்லி இன்புறும் இச்சுவை தவிரப் பரமபதஞ் சென்று வாழும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்னலும் உயர்ந்த நிலையேயாம். புல்லாய்ப் பிறக்கினும் சரி, எத்தனை பிறவி எடுத்தாலும் சரி, இறைவன்மீது பேரன்பு

மட்டும் பொங்குமாயின், எப்பிறவியையும் எத்தனை பிறவிகளையும் எடுக்க விரும்புவோம் என்பர் மெய்யடியார்கள். காமம் குரோதம் பயம் முதலியவைகளும் இறைவனை நோக்கி உண்மையாகவே செல்லும்போது மக்களைக் கடைத்தேற்றும் வழிகளாக மாறுகின்றன ; அவை தமது கெட்ட இயல்புகளை இழந்து நன்மை மிகுந்து இறைவனை அடையச் சாதனங்களாகின்றன. காமத்தை இறைவன்மீது செலுத்திய கோபிமார் உயர்ந்த பக்தி யுடையராய், உயர்ந்த பக்திக்கு உதாரணங்களாய் விளங்கினர். விருஷ்ணி குலத்தைச் சேர்ந்தவர்களெல்லோரும் கண்ணன்மீது உறவு கொண்டாடியும், சுக்ரீவரும் அருச்சுனரும் குசேலரும் இறைவன் மீது நட்பு வைத்தும், கௌசலை யசோதை முதலியோர் பகவானைக் குழந்தையாகக் கருதி அன்பு செய்தும் முத்தி பெற்றனர். ஓர் அன்பர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் 'நான் பகவானைத் தியானிக்கும்போது, குழந்தையின் மீதுள்ள வாஞ்சையினால் குழந்தையின் நினைவே முன்வந்து நிற்கிறது' என்ன, அப்பெரியார் 'அக்குழந்தையையே பகவானாக நினைத்துத் தியானம் செய்க' என்று புத்திமதி கூறினர் ; அதன்பயனாக அன்பர்க்குச் சிறிது காலத்தில் மெய்யான பக்தி விளையலாயிற்று. மாரீசனுக்கு இராமபிரானிடத்தும் கம்சனுக்குக் கண்ணபிரானிடத்தும் பயமே முதலில் உண்டாயிற்று. நாளடைவில் அது வளர்ந்து முதிர்ந்தது. அந்த முதிர்ந்த பயமே அவர்கட்குச் சதா இறைவனைப்பற்றிய தியானத்தையும் சமாதியையும் காட்சியையும் கொடுத்தது ; எனினும் முடிவில் இறைவன்மீது பக்தி தலையெடுக்கப் பெற்று அவர்கள் அவனையே அடைந்தார்கள். சிசுபாலனும் இராவணனும் இறைவனைப் பகைத்தும் பழித்தும் முடிவில் அவனைப் பெற்றனர்கள். ஆயினும் பயம் பகை முதலியவைகளை முதிரச்செய்து இறைவன்மீது மட்டும் செலுத்தும் நெறியைவிட, பக்தியை இறைவன்மீது செலுத்தும் நெறி மேலாகும். "பேசினர் பிறவி நீத்தார் பேருளான் பெருமை பேசி, ஏசினர் உய்ந்துபோனர்

என்பது இவ்வுலகின் வண்ணம். பேசினேன், ஏசமாட்டேன்'' என்று கூறிய திருமங்கை யாழ்வாரது நிலையே மேன்மையானது என்பதற்கு ஐயமில்லை. ஆனாலும் பாகவதத்தில் நாரத பகவான் கூறியபடி, காமம்பகை முதலியவைகளாலும் பகவானை அடையக்கூடும் என்பதும் உண்மையாம்.

பக்தியை வளர்க்கும் சாதனங்களுளெல்லாம் மிகச் சிறந்தது இறைவனது நாமத்தைச் சொல்லுதலும் பஞ்சாக்ஷரத்தை ஓதுதலுமாம். இதனினும் மிக எளியதும், அனைவராலும் பற்றற்குரியதும், வேறொன்று இல்லையென்று துணிந்து கூறலாம். இதை ஜெபம் என்று கூறுவது வழக்கம். 'ஜெபத்தால் ஸித்தியடையப் படுகிறது' என்னும் சாஸ்திரம். நாளும் ஆயிரந்தடவையும் பதினாயிரந் தடவையும் இலக்ஷம் தடவையும் நாமத்தை ஓதி வருதல் ஒன்றே உரிய காலத்தில் மெச்சத்தக்க பலனை அளிக்கும். பே ர ன் போ டு இறைவனை நினைந்து கொண்டே நாமத்தை ஓதுதல் அதிகப்பயன் தரும். அதோடு, மந்திர மொழியின் பொருளையும் மந்திரத்தின் உள்ளீடான தெய்வத்தையும் பற்றிச் சிந்தித்தல் அதனினும் மிக்க பயனைத்தரும். ஜெபத்தால் மனம் தியானத்தில் நிலைக்கும். தியானம் முற்றும்போது, ஜெபம் தானாக நின்று விடுதலும் உண்டு; தியானம் கலையும் போது ஜெபத்தின் உதவியால் மனதை நிலை நாட்டவும் இயலும். மந்திர மொழியின் பொருளைப் பற்றிய சிந்தனை மிக்க பயனை அளிக்கும். "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது, வேதநான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன் நாமம் நமச்சிவாயவே'' என்றும், "குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின எல்லாம், நிலந்தரஞ் செய்யும் நீள் விசும்பு அருளும், அருளொடு பெரு நிலம் அளிக்கும், வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும் நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்'' என்றும் நாயனாரும் ஆழ்வாரும் இக்

அவன் மீதுள்ள அன்பினால் அவனது ஆணையாக எண்ணி அதை இயற்ற வேண்டும்; இயற்றும்போது இயன்ற வரை அவனை மறவாதிருக்க வேண்டும்; வேலை முடிந்ததும் அவனுக்கு நன்றி பாராட்டிப் பயனை அவனுக்கே அளித்து விடல் வேண்டும். "நீ எதைச் செய்தாலும் எதை உண்டாலும் எதை ஓமம் பண்ணினாலும் எதைத் தானமாகக் கொடுத்தாலும் என்ன தவஞ் செய்தாலும், அதை எனக்கு அர்ப்பணமாகவே செய்க" என்று பகவான் அருச்சுனனுக்குப் போதித்தார். சதா அவனை நினைந்து கொண்டே எத்தொழிலையும் இயற்றவேண்டும். அவனது முன்னிலையிலேயே இருப்பதாக நினைத்து நினைத்துப் பழகிவரல் வேண்டும்; அவனது சாந்நித்யத்தை உணரல் வேண்டும்; இறுதியில் அதுவே அனுபூதியாக மாறும்.

பக்தியை வளர்த்தற்கு உதவும் இன்னொரு பெருந்துணையாவது உருவ வழிபாடு. இறைவனது உண்மையான திவ்விய அன்புமயமான வடிவத்தை இருதயத்தில் வழிபட்டாலும், புறத்தே வழிபட்டாலும், அது பெரும் நன்மை அளிக்கின்றது. நினைப்பவரது நெஞ்சையே கோயிலாகக் கொண்டு இறைவன் அன்போடு எழுந்தருளுகிறான்; ஆதலின் 'மார்வம் என்பதோர் கோயில் அமைத்து அதில் மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி ஆர்வம் என்பதோர் பூ விட்டு வழிபட்டால்' உய்வடையலாம்; இவ்வழிபாடு எங்கும் நடைபெறுதற்கு ஏற்ற ஒன்றாகும். திருக்கோயில்களிலே நமது கண் காணும் பொருட்டுத் திருமேனி கொண்டு இறைவன் எழுந்தருளியிருக்கிறான், நாம் அன்போடு வழிபட்டு உய்வடைவதற்காகவே தனது சர்வ சக்தியையும் அடக்கிக்கொண்டு அமர்ந்துள்ளான்; இப்படி நினைத்துத் தொழுதால், அப்போதும் உய்வடையலாகும். பாவனையாக எண்ணாது உண்மையாகவுள்ள உயிரோடுள்ள பரம்பொருளாக மதித்து அதற்கியைய ஒழுகுதல் இருவழியிலும் இன்றியமையாதது. 'இயல்-உண்மை-அறிவு-இன்ப' வடிவ

காரணம் பற்றியே கூறினர். மரத்தடியிலிருந்து கையைத் தட்டினல், மரத்திலுள்ள பறவைகள் பறந்து ஓடி விடும்; அதுபோல் இறைவனது நாமத்தைக் கை தட்டிப் பாடினல், நமது காமம் குரோதம் முதலியவைகள் பறந்து போம் என்பர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். இறைவனது நாமங்களை அன்போடு ஒழுங்காக ஓதிவருவார்க்கு அதில் ஒரு திவ்விய ருசியும் இன்பமும் உண்டாகும்; அதில் ஈடுபடும் போது உலகப்பொருள்களும் இன்பங்களும் சுவையற்றனவாகத் தோன்றும். "உண்ணுநாள் பசியாவதொன்றில்லை, ஓவாதே நமோ நாராயணவென்று எண்ணு நாளும்........ அன்று எனக்கு அவை பட்டினி நாளே" என்று பெரியாழ்வாரும், "தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே" என்று மதுரகவி ஆழ்வாரும் கூறினர்; "தேனும் பாலும் அமுதுமாய திருமால் திரு நாமம் நானும் சொன்னேன்" என்றார் திருமங்கையாழ்வார். இந்நிலையை அடையமாட்டாதாரும் இடைவிடாது இறைவனது நாமத்தை இயன்றமட்டும் ஓதி வருவாராயின், எப்பொழுதும் ஓதிக்கொண்டிருக்கப் பழகி வருவாராயின், அப் பழக்கத்தின் வலிமையால் மனம் தானே ஓதிக்கொண்டிருக்கும் நிலை வந்து சேரும்; நாம் அதை ஓத மறந்தாலும், மனமும் நாவும் ஓதி வரும்; தூங்கும்போதும் மனம் அதை இடைவிடாது ஓதிக்கொண்டுவரும். "நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றார் சுந்தரமூர்த்தி நாயனர். இறைவனது நாமத்தை ஓதும் மனம் வரவரத் தூய்மையை அடையும். ஆதலின் நாமத்தை ஓதுதலை நெடுநாள் விடாது பழகி, நாம் ஓதாதபோதும் மனம் தானுக அதை ஓதி வரும் நிலையை அடைய முயலவேண்டும்.

கீதையில் பகவான் பக்தியைப் பெறுவதற்கு ஏற்ற சாதனமொன்றைச் கூறியிருக்கின்றனர். எச்செயலைச் செய்யுமுன்னும் இறைவனை நினைந்து, அவனது அருளை வேண்டியும் அவனை மறவாதிருக்கும் வரத்தை வேண்டியும் அதைத் தொடங்குதல் வேண்டும்; அவனுக்காகவே,

மான இறைவனை மனிதவடிவோடு நம் முன் அமர்ந்திருப்ப தாக நினைந்து, பணிவும் அன்பும் பெருக அவனோடு நெஞ்சுகலந்து அளவளாவியும் அவனோடு உறவு கொண் டாடியும், அவனை நமக்குரியவனாக உரிமை பாராட்டியும் வந்தால், பக்தி வர வர முதிரும். கோயிலிலுள்ள உரு வத்திருமேனியை இறைவனது அவதார வடிவம் என்பர் வைணவர். பூவையும் இலையையும் கனியையும் நீரையும், எது கிடைப்பினும், அதை அன்போடு அவனுக்குச் சமர்ப்பித்து, அவன் அங்கீகரித்தபின் அதைப்பிரசாத மாக மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளல் நன்று. எதைக் கொடுக்கும் போதும், எப்பொருளும் அவனதாகலின், நமதென்று அதுவரை அதைக் கருதியதற்காக மனம் வருந்தி அவனிடம் அன்போடு அதை ஒப்புவிப்பதாக நினைத்தல் வேண்டும். முதலில் இறைவன் விக்கிரகத்திற் குள் இருப்பதாகத் தென்படுவான். பின் விக்கிரகவடிவ மாயும் தோன்றுவன். பின் அவ்வடிவோடு நடப்பதாக வும் பேசுவதாகவும் எவ்விடத்தும் எழுந்தருளியிருப்ப தாகவும் காட்சியளிப்பான். அன்பு செய்வார்களது கண்ணும் காதும் உடலும் நாளடைவில் மாறி பக்திக் கண்ணும் பக்திக்காதும் பக்தியுடலுமாகும். இறைவனைக் காணவும் அவனோடு பேசவும் அவனைத் தழுவவும் உடல் ஏற்புடையதாகும்.

இன்னும் சில சாதனங்களும் பக்தியை வளர்க்கும். (1) இந்திரியங்கள் அனைத்தையும் அடக்க முயலுதலும், சிறப்பாக நாக்கை அடக்குதலும் அவசியமாம். (2) 'எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன்னுடைய செயலே, எங்கணும் வியாபி நீ' என்ற உண்மையை மனமார உணர்ந்து பழகவேண்டும்; ஆணவத்தை ஒழித்துத் துரும்பினும் அற்பமாக நினைந் தும், தன்னை வெட்டுதலையும் பொறுக்கும் மரமெனப் பொறுமையைத் தலைமேற்கொண்டும், பிறர்க்கு மதிப்பை யளித்தும் தான் மதிப்பைக் கருதாமலும் வாழ முயல வேண்டும். (3) ஆயினும் இறைவனது அருளின் துணை

யால்தான் எதையும் செய்ய இயலும் என்னும் பெரு நம்பிக்கையுடையனாய், எதுவரினும் மனந்தளர இடங் கொடானாய் 'எல்லாம் வல்ல அவன் இருக்க ஏன் கவலைப் படல் வேண்டும்?' என்று சிந்தையற்றிருத்தல் வேண்டும். 'வித்தும் இன்றியே விளைவு செய்குவான்' அவன்; 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்' இயல்பு டையவன் அவன்; எட்டிமரத்திலும் நற்கனியை விளை விக்க வல்லான் அவன் என்று நம்புதல் வேண்டும். (4) வாழ்க்கையில் நேரும் சுகம், துக்கம், சாந்தம், மனச்சஞ் சலம் முதலிய யாவற்றையும் இறைவனது திருவடியில் சமர்ப்பித்தல் வேண்டும்; பக்தியொன்றையே இறைவ னிடம் மீண்டும் மீண்டும் பிரார்த்தித்தல் வேண்டும். (5) மேற்குநோக்கிச் செல்ல, நாம் அதே அளவிற்குக் கிழக்கை விட்டு விலகுவோம்; அதுபோல, வேறு நினைவுகளை அடக்க முயலாமல் இறைவனிடம் மனதைச் செலுத் துதல் ஒன்றினாலேயே, தீமையனைத்தினின்றும் நீங்க லாகும்; நன்மையனைத்தையும் பெறலுமாகும்.

பக்திக்கு அனுகூலங்கள் இருப்பதுபோல, அதற்குப் பெரும் இடையூறுகளும் உள்ளன. பக்தியினால் இறை வனை அடையும் இச்சையுடையவர்கள் சதா இறைவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க முயலுவர்; மனம் பலவித வாசனைகளால் அலைப்புண்டு இறைவனைவிட்டு வேறு பொருள்களிடம் செல்லும் போதெல்லாம் அதை அவைகளினின்றும் இழுத்து, இறைவனிடமே நிலைநாட்ட முயலுவர். மனத்தை மெய்ப்பொருளல்லாத உலகப் பொருள்களிடத்துச் செல்லுமாறு தூண்டுவது, அவை களின்மீதுள்ள ஆசையாதலின், சாதகர்கள் ஆசைகளை அடக்க முயலுவர்; அதாவது வைராக்யத்தை நாடுவர். இவ்வைராக்யத்தைத் துணையாகக் கொண்டு, மனத்தைப் பரம்பொருளிடத்து ஒருமுகப்பட்டு நிற்குமாறு செய் வதே ஞான முயற்சி அல்லது ஞான சாதனப்பழக்கம் எனப்படும். இவ்வாறு மனதைப் பரம்பொருளிடத்து ஒருமுகப்பட்டுக் குவியச்செய்ய முயலும்போது, மனதின்

ஆற்றல் வரவர மிகுந்துவரும். முற்றும் மனம் பரம் பொருளிடத்து ஈடுபட்டுக் குவிந்து ஒருமுகமாகும்போது, வரம்பிலா ஆற்றலும் மனத்தின் வாயிலாக வெளிப்படும். இக்காரணத்தாலேயே ஞானசாதனம் பழகுவாரனைவரும், உலக மக்கள் கண்டு வியக்கும்படியான அற்புதங்களைச் செய்யும் திறமையுள்ளவராகின்றனர். இவ்வாறு ஆற்றல் தானாக வந்தெய்துமாயினும் அதில் உண்மையான ஞான சாதகர்கள் கருத்தைச் செலுத்தார்; தமது ஆற்றலை வெளிப்படுத்தவும் இசையார்; அதைப் பெரிதென மதிக்கவும் மாட்டார். "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறத்"தினைப் பெறப் பெரிதும் விழைவார் அவர்; ஏனெனில், அப்போதே மெய்ப்பொருட் காட்சியும் அதனோடு ஒன்றுபட்டு நிற்கும் நிலையும் அடையப்படலாகும். இவ்வுயர்ந்த குறிக்கோளினிற் கவனத்தைச் செலுத்தாது, தம்மிடத்துக் கிளரும் பேராற்றலையே பெரிதென மதிப்பராயின், சாதகர்கள் ஆசை தணியப் பெறாது, ஆசை கொழுந்துவிட் டெரியப் பெறுவர்; ஆசைகள் அனைத்திற்கும் வேராகிய ஆணவம் வளர்ந்து தடிப்பேறப் பெறுவர்; அதனால் முடிவில் மெய்ப்பொருளை விட்டுப் பொய்ப்பொருளிலே மனம் புதைந்து கிடக்கப் பெறுவர். இக்காரணம் பற்றியே மெய்யுணர்ந்தார் முற்கூறிய சித்திகளைப் பக்திக்கு இடையூறுகளாகக் கருதி, அவைகளை வெறுக்கவும் செய்வர். உண்மையான மிக உயர்ந்த மிக அற்புதமான சித்தியாவது இறைவனது காட்சியை எய்துதலே என்பதை உணர்ந்து, அவ்வொன்றிலேயே கண்ணும் கருத்துமாயிருப்பார்.

வைராக்யத்தோடு பக்தி பண்ண முயல்வோரும் அஞ்சுவதற்குரியது ஒன்று உண்டு. "தவம் செய்வோர்கள் வெருவறச்சென்று அடை வெகுளி காமம்." என்றார் கம்பர். தவமுயற்சியை மிக எளிதாகக் கலைக்க வல்லவை, காம இச்சையும் பொருளிச்சையுமே. பக்தர்கட்கு வைரியாக உள்ள ஆணவம் என்பது இவ்விரு ஆசைகளின் வடிவமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இவ்

விரு ஆசைகளும் மக்களது உள்ளத்தே வேரூன்றி ஆழ்ந்து பதிந்து கிடக்கின்றன; எண்ணிறந்த பிறவிகளாக வளர்ந்து வந்துள்ள ஆணவம் எளிதில் வேரோடு மாய்வதில்லை. காமம், பொருளாசை இரண்டுமே, மாயை என்பதன் சாதாரணப் பொருள் என்பது ஸ்ரீ ராமகிருஷ்ணரது கருத்து. இவ்விரு ஆசைகளையும் அடக்கி யொடுக்கி அழித்தாலன்றிச் சித்தத்தைத் தெளிய வைத்து ஒருமுகப் படுத்தல் இயலாது. சாதகர் இவ்விரண்டையும் அடக்கி வரும்போது, அவை மேலும் மேலும் நுண்ணியவாகிச் சித்தத்தின் அடியில் ஆழ்ந்து போகின்றன. அவை மிக நுண்ணிய வித்துக்களாயிருப்பினும், சிற்சில சமயங்களில், ஞான முயற்சியில் ஈடுபட்டுள்ளவனது மனத்தைப் பலவந்தமாகத் தம்மை நோக்கி யிழுத்து வசப்படுத்திவிடுகின்றன. மிக விழிப்பாய் உள்ளவனே அவைகளின் ஆட்சிக்கு இடங்கொடாமல் உறுதியோடு அவைகளைப் புறக்கணிப்பான். பரம் பொருட் காட்சி எய்திய பின்னரே அவை வேரோடு மாயும். அதுவரை இடையிடையே பல்வேறு வடிவங்கள் புனைந்து சாதகனை மயக்க முயன்று வரும். அவை சாதகனுக்குப் பெருஞ் சோதனைகளாகும். அவைகளை வென்று வெளிவருபவன் உயர்ந்த நிலைக்கு ஏறுவான்; அவைகளுக்குத் தோற்றுவிடுவானாயின், இழிந்த நிலைக்கு இறங்கி அல்லலுறுவான். இவ்வாறு வரும் சோதனைகள் சாதகனது உள்ளத்தினின்று எழுவனவாயினும், சில சமயங்களில் அவை புறத்தே தோன்றுவனபோலத் தென்படும்; வேறு சில சமயங்களில் பிறரிடமிருந்தே சோதனைகள் எழலாம். இச்சோதனை எல்லாவற்றுள்ளும் மிகப்பெரிய சோதனையொன்று, உயர்வற உயர்ந்த ஞானநிலையை எய்து முன் சாதகனுக்கு ஏற்படுவதுண்டு. அது மாயையின் கடைசியான படையெடுப்பாகும்; அதை வெல்லும் தீரன் பின்னர் அதன் வசப்படுவதில்லை. இவ்வாறு வரும் சோதனைகள் பொதுவாக மிக நுண்ணிய சிற்றின்பத்தைப் பற்றியனவேயாகும். சில சமயங்களில் யோக சித்திகளைப் பற்றியனவுமாகும். இம்மாதிரிச் சோதனைகளை விளைவிக்கும்

தத்துவம் நம்மிடத்து அடங்கியுள்ள பழவினையின் பயனே யாகும்; எனினும், இதை மாயையென்றும், மாரன் என்றும், சாத்தான் என்றும் பலவாறாகப் பல நூலார் கூறுவர்.

முற்கூறிய உண்மைகளைப் பல உதாரணங்களால் விளக்கலாம். இறைவனது காட்சியைப் பெறும் பொருட்டுத் தவஞ்செய்யச் சென்ற விசுவாமித்திர முனிவர் ஓரிடத்தில் ஐம்பொறிகளை ஒடுக்கி, மனதைப் பகவானிடத்து நிலைநாட்ட முயன்றார். சற்றேற முன்னேறியதும், உள்ளடங்கியிருந்த காமம் திடீரென மேலெழுந்து அவரை வசப்படுத்த முயன்றது; முனிவர் மேனகையின் வடிவழகில் ஈடுபட்டுத் தவஞ்செய்யாதே காலத்தை அவமாக்கினார். பின்னர் தமது பிழையை உணர்ந்து மீண்டும் தவஞ் செய்யத் தொடங்கினார்; சில காலம் தவத்தில் ஊன்றி நின்றபின், திரிசங்கு காரணமாக ஆணவத்திற்குள்ளாகித் தம் தவவலிமையை இழந்தார். தியானத்திலும் பிரார்த்தனையிலும் பன்னாள் இயேசுநாதர் மூழ்கியிருந்தபின், ஒருநாள் சாத்தான் அவர்முன் தோன்றி, "என்னை நீர் வணங்குவீராயின், இதோ காணப்படுகின்ற அனைத்துலகங்கட்கும் அதிபதியாக்குவேன்" என்றான். அப்போது இயேசுநாதர், "சாத்தானே, எனக்குப் பின் செல்க" என்று உறுதியோடு கட்டளையிட்டனர். புத்த பகவான் நிருவாணம் எய்துமுன் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தபோது, ஒரு நாள் அவர் துறந்து வந்த மனைவியும் மகனும் கண்முன் தோன்றித் தம்மை அன்போடு இல்லத்திற்கு மீளும்படி அழைப்பதாகத் தோன்றிற்று; ஆனால் அவரோ "நீங்கள் யாவரும் நிழல்களே; இந்நிழல்கள் மறைக" என்று ஆணையிட்டார். இதன் பின்னரே அவரது மனம் அனைத்தையும் கடந்து பேரின்பத்தில் ஆழ்வதாயிற்று. தேவியம்மையின் மதலையாய் ஒழுகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஒருநாள் தேவி முன்தோன்றி, சித்திகள் பலவும் நிறைந்த ஒரு கூடையைக் காட்டி, "இவைகளைப் பெற்றுக்கொள்" என்றாள். அதற்கு

ஸ்ரீ ராமகிருஷ்ணர், "சீச்சீ இவை எவ்வளவு அற்பங்கள் இவைகளைக்கொண்டு என்னை மயக்கவோ, அன்னாய், கருதுகின்றாய்?" என்றனர். சிவபெருமானிடத்துக் காதலாதரம் கடலினும் பெருகிய அப்பர் சுவாமிகள் திருக்கோயில்களில் பாட்டைகளைச் செம்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தகாலை, ஒரு முறை ரத்தினக் கற்கள் எதிரே கிடந்தன. ஆனால் சுவாமிகளோ "ஓடும் செம்பொனும் ஒக்க நோக்குவா" ராதலின் அக்கற்களையும் குப்பைகளோடு சேர்த்து உழவாயப்படையால் ஒதுக்கித் தள்ளினர். மற்றொருமுறை அரம்பையர் முன் தோன்றி மயக்க எத்தனித்தபோதும் தமது தொண்டிலும் இறைவனிடத்திலும் ஈடுபட்ட வண்ணமாய் நின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருநாள் தம்முடலினுள்ளிருந்து பாபபுருடன் வெளியேறியதையும், தம்முள்ளிருந்து பின் வெளியேறிய சோதி புருடர் ஒருவர் அப்பாப புருடனை மாய்த்ததையும் கண்டார். இக் காட்சிகளனைத்தும் புறத்தே தோன்றுவனவாயினும், அகத்தேயுள்ள நிலையினுக்கு அறிகுறிகளாகின்றன. இவ்வுண்மை யோக சூத்திர பாஷ்யத்திலே கூறப்படுகிறது. நான்கு வகை யோகியருள், இரண்டாவது வகையினர் தேவலோகத்தின் வழியே செல்லும்போது அங்கேயுள்ளவர்கள் அவர்களை நோக்கி, "இவ்வுலகத்திலுள்ள அமுதத்தை உண்ணுங்கள்; இங்கேயுள்ள திவ்விய மங்கையரோடு இன்புற்று வாழுங்கள்" என்று அழைப்பது வழக்கம் என்று அதில் பெரியார் கூறுகின்றனர். ஆதலின் ஞானநெறியில் உயர்ந்த நிலையினை நோக்கிச் செல்வார்க்கெல்லாம் இத்தகைய சோதனையொன்று வருவதுண்டு என்பதும், புறவுலகில் தோன்றும் இக்காட்சி உண்மையில் அகவுலகத்து நிகழும் ஒரு போர்க்கு அறிகுறியாகின்றது என்பதும் பெறப்படுகின்றன. ஆக, உயர்ந்த பக்தர்களின் வாழ்க்கைகளில் காணப்படும் இத்தகைய நிகழ்ச்சிகளின் உட்கருத்தாவது, மனத்தினுள் அடங்கி யொடுங்கிக் கிடக்கும் நுண்ணிய ஆசையே பக்திக்கு இடையூறு யிருக்கின்றது என்பதாம்.

## (4) பக்தியிற் சில படிகள்

'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்னும் சாஸ்திரம். பரம்பொருள் ஒன்று எங்கும் நிறைந்துளது என்பது அனைவர்க்கும் சம்மதம். ஆயினும் இப்பரம்பொருளின் இருப்பை அறிவுக்கு (ஞானத்திற்கு) விஷயமாக்க முயலுவார் ஒரு சாரார். அதனை அன்பிற்கு விஷயமாக்க முயலுவார் வேறொரு சாரார். மெய்ப்பொருட் காட்சி (அபரோக்ஷ சாக்ஷாத்காரம்) என்னும் நிலையை அறிவு மூலமாகவும் அன்பு மூலமாகவும் எய்தலாகும். அறிவைத் தூயதாக்கும்போது ஒருவன் ஞானக் கண்ணைப்பெற்றுப் பரம்பொருளை உணர்கிறான்; அன்பைத் தன்னய மற்றதாகவும் தூயதாகவும் ஆக்கும்போது ஒருவன் பிரேமைக் கண் பெற்று, அவ்வாயிலாகப் பரம்பொருளை அனுபவிக்கிறான். முன்னது உபாசனை முறையாகும், பின்னது பக்தி முறையாகும். உபாசனை முறையில் மனிதன் தனது மனதில் எழும் இன்ப துன்ப உணர்ச்சிகளை அடக்கி ஒரு வழிப்பட்ட தியானத்தை அடைவதற்கு ஏற்ற வழியைத் தேடுகிறான்; பக்தி முறையிலோ மனிதன் தன்னிடம் இயல்பாக எழும் இன்ப துன்ப உணர்ச்சிகளை அடக்க முயலாது உலகப்பொருள்களையும் மக்களையும்பற்றி எழும் அவ்வுணர்ச்சிகளை இறைவன்பால் திருப்பி, அவனைப் பற்றியே அவை எழுமாறு ஆக்கிக் கொள்கிறான். இறைவனை நினைக்கும்போதெல்லாம் அன்பு பெருக நினைக்கிறான். பக்தி யென்பதற்கு ஸ்ரீ சங்கரர் உபாசனை யென்றே பொருள் கொண்டார். உபாசனையாவது, அனுவர்த்தித்தலே, பின்பற்றிச் செல்லலே என்றார். நாயகி தன்னைப் பிரிந்த காதலன்மீது மனதை ஆவலோடு செலுத்தித் தியானிக்கிறாள். இத்தகைய இடைவிடாத தியானமே உபாசனை என்றார். ஸ்ரீ ராமானுஜர் பக்தியைப்பற்றிக் கூறும்போது, இறைவன்மீது அன்பு பெருகி, (அதனால் மனங் கசிந்து கண்ணீர் பெருக) அவனை இடையறாது நினைத்துக்கொண்டிருத்தலும், அவனைத் தனக்கு உயிராகக் கருதலும், அக்காரணத்தால் இறைவனுக்கு மிகவும்

பொருளின் எண்ணிறந்த குணங்களில் ஏதாவது ஒன்றிற்கு அறிகுறியாய் அமையக்கூடிய எதையும் வழிபடலாம். சூக்குமமான மனத்தையும், எங்கும் பரந்துள்ள ஆகாசத்தையும், சூரியன் அக்கினி முதலியவைகளையும் கடவுளாக எண்ணி வழிபடுதலும், கல்லாலும் உலோகங்களாலும் அழகிய கடவுள் உருவங்களை அமைத்து அவைகளை அன்போடு வணங்குதலும் இன்றியமையாத முறைகளாம். அக்குறிகளையே கடவுளாக எண்ணுதலும், அவைகள் பரம்பொருளின் உயர்ந்த அன்பை வெளிப்படுத்துவதற்குரிய வாயில்களே என்பதை மறத்தலும் பிழைகளாம்; ஆனால் அவைகள் வாயிலாக உயிருள்ள எவ்விடத்துமுள்ள இறைவனைக் காணுதற்குரிய முயற்சி போற்றத்தக்கதேயாம். உருவங்களில் இறைவன் சின்மயமாய் ஒளிமயமாய் அடங்கியிருக்கும் உண்மையைச் சிந்தித்தல் முதற்படி; அவ்வுருவங்களில் அவ்வாறே காணல் இரண்டாவது படி; பின் அவ்வுருவமும் இறைவன் மயமாவதை அறிதல் மூன்றாவது படி. முதலில் உண்மையை நாம் பாவனை பண்ணுகிறோம்; பொய்யான ஒன்றையன்று; இந்த உண்மையான பாவனையால் உருவங்களை உருவ்மாக மட்டும் நினைக்கும் பொய்யான பாவனை கழிகின்றது; பின் அதன் பயனாய் உண்மை வெளிப்படுகிறது. பாவனை வாயிலாகப் பாவனாதீத நிலையை அடைந்து மெய்ப்பொருளை நேரிற் காண்கிறோம். ஆதலின் திருக்கோயில்களிலுள்ள இறைவனது உருவத் திருமேனிகளை 'அர்ச்சாவதாரம்' என்றே (உருவத் திருமேனியோடு கூடிய இறைவனது அவதாரம் என்றே) வணங்கல் வேண்டும். இறைவன் தனது அருளால் (மக்களை உய்வித்தற் பொருட்டு) அத்தகைய தூல வடிவங்களில் தனது பூர்ணத் தன்மையை இழக்காமலே எழுந்தருளியிருக்கின்றான் என்பதே மெய்யன்பர்களது பிரேமை தீட்டிய கண்கட்குத் தோன்றும் உண்மையாகும். இறைவனைத் திருவுருவங்கள் வாயிலாக வழிபடுவார் அவனது இன்னருளினாலேயே அவனைத் தம் உள்ளும் புறமும் எல்லாப் பொருள்களிடத்தும் எல்லா மக்களிடத்தும் பின்னர்க் காண்

பிரியமாகத் தன்னை ஆக்கி இறைவனது அருளைப் பெறு தலும், இவையாவும் பக்தியுள் அடங்கும் என்று குறித் தார். 'ஈஸ்வரப் பிரணிதானம்' என்று யோக நூலிற் பதஞ்சலியார் கூறியதற்கு, உலக போகங்களை நாடாது எல்லாக் கருமங்களையும் பரம குருவாகிய ஈசனிடம் ஒப்பு வித்தலே என்ற பொருளையும், இறைவனது கருணையினால் சாதகனுக்கு உண்டாவதும் அவனது அவாக்களை நிறை வேற்றி வைப்பதுமாகிய ஒருவகைச் சிறப்பான பக்தி என்ற பொருளையும் உரையாசிரியர் கொண்டுள்ளனர். இறைவனது பெருமையையும் இயல்பையும் அறிந்தபின் எழும் பெருங் காதலே பக்தி என்று சாண்டில்யரும், பிரேமை என்று நாரதரும், சிற்றின்பங்களின்மீது இடை விடாது மூழ்கியிருக்க அறிவிலார் நினைப்பதுபோல் இறை வன்மீதும் அத்தகைய இடைவிடாத பிரீதி எழுவதே பக்தி என்று பிரஹ்லாதரும் கூறினர். இவ்வாறு பலர் பக்தியைப் பலவாறு கூறியிருப்பினும், அவையெல்லாம் சாதாரண வழிபாடு முதலாகப் பிரேமை வரையுள்ள பற் பல படிகளைக் கூறியதாகவே அமையும்.

இயற்கையில் எங்கும் கவர்ச்சி தென்படுகிறது என் றும், இக்கவர்ச்சி எங்கும் பரந்துள்ள அன்பின் தூல வடிவம் என்றும் முன் கூறினோம். ஆதலின், உலகில் நம் உள்ளத்தைக் கவர்கின்ற எதுவும் அன்பிற்கு அறிகுறி யாகின்றது. எங்கெங்கெல்லாம் இளமையும் அழகும் இனிமையும் காந்தியும் வெற்றியும் சக்தியும் இன்பமும் புலப்படுகின்றனவோ, அங்கெல்லாம் பரம்பொருளின் அன்பெனும் சக்தி ஒருவாறு வெளிப்படுகின்றது. பரம் பொருள் அல்லாதவற்றையும் பரம்பொருளின் அன்பு வெளிப்படுவதற்குரிய ஒரு வாயிலாக எண்ணி வழி படுதலே குறிகளை வழிபடுதலாம். இக்குறிகளில் ஒரு வகை, உருவக் குறிகள். இயற்கைப் பொருள்களிலும் செயற்கைப் பொருள்களிலும் அழகும் சக்தியும் அமையப் பெற்றவைகளை இறைவனது குறிகளாகக் கருதி வழிபடுதல் பக்தியில் ஆரம்பப்படியாம்; பரம்

பர். தமது எல்லாவகை ஆசைகளும் நிறைவேறப் பெறு வதையும், எவ்வித பயமும் நீங்கப் பெறுவதையும் காண்பார். மற்றொரு வகைக்குறிகள் ஒலிக்குறிகள், அதாவது நாமக் குறிகள். இறைவனுக்கு நாமங்களும் மந்திரங்களும், ஒலி வடிவங்களாகின்றன; தூல உடல்க ளாகின்றன. இந்நாமங்களையும் மந்திரங்களையும் அன் போடு ஓதி வழிபடுவார் உயர்ந்த நிலையினை நாளடைவில் எய்துவர். வாக்கும் (சொல்லும்) அதன் அர்த்தமும் (பொருளும்) ஒன்றைவிட்டு மற்றொன்று பிரிந்துநிற்க முடியாதனவாதலின், நாமங்களை ஓதுவதனால் தியானத் திற்கும் காட்சிக்கும் பெருந்துணை உண்டாகும். இம் மந்திரங்களை உயிருள்ள சக்திவாய்ந்த நிலையிற் பெற வேண்டின், மந்திர ஸித்திபெற்ற குரவர்களின் மூலமாகப் பணிவோடும் பக்தியோடும் பெறுதல் வேண்டும். மெய் யுணர்ந்த குரவர்களிடம் இறைவனது அருட்சக்தி சிறப் பாகத் திகழ்கின்றதாகலின், அவர்களை நடமாடும் தெய்வ மென்றே போற்றி வழிபடல் வேண்டும். ஒழுக்கத்தாலும் தூய்மையாலும் மெய்ப்பொருட் காட்சியாலும் மேம்பட்ட குரவர்களிடமிருந்தே மந்திரங்களைப் பெறுதல் வேண்டும்; அது இயலாது போயின், ஞான முயற்சிக்கு இன்றியமை யாத ஒரு பெருந்துணை இல்லாது போகும். இறைவனே முதற் குரவன்; அவனது அவதார வடிவங்கள் உத்தம உலக குருக்கள்; அவதாரங்களால் ஆட்கொள்ளப்படும் சீடர்களின் ஞான பரம்பரை வழியாக வரும் அருள் வெள்ளத்தின் சம்பந்தம் பெற்றார்க் கன்றிப் பிறர்க்கு உய்வடைதல் மிக அரிதாகும்.

பக்தி நெறியிற் செல்லும் சாதகர்கட்கு இஷ்ட நிஷ்டை மிக மிக அவசியம். இஷ்ட நிஷ்டையாவது, குரவர் ஒரு சீடர்க்கென வகுத்து வழங்கியுள்ள வழிபடு தெய்வத்தையோ உபாசனை முறையையோ உறுதியான மனத்துடன் விடாது பற்றி, வெற்றி பெறும்வரை ஒரே நினைவோடு சிந்தித்தும் வந்தித்தும் வருதலாம். ஒரு சீடர் தாம் பெற்ற மந்திரத்தினிடத்தும் அதனாற் குறிக்கப்

படும் தெய்வத்தினிடத்தும் மாருத நிஷ்டையுடையரா யிருக்கும் போதே, பக்தி தலையெடுத்து வளர ஆரம்பிக்கும். ஒரே இடத்திலேயே தண்ணீர் பெறும்வரை கிணற்றைத் தோண்டல் வேண்டும்; பல இடங்களில் அரைகுறையாகத் தோண்டுபவனது முயற்சி வீணுகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு தெய்வத்தை உபாசனை பண்ணும்போது, அதில் சித்தி யடையும் வரை, பிற தெய்வங்களின் நினைவையும் மனத் திற்புக விடார். ஒரு பதிவிரதைக்குத் தன் பதி மீதுள்ள அன்புபோன்றது இந்நிலை. அன்னிய புருடரைச் சிந்தை யாலும் தொடாத ஒரு வழிப்பட்ட மனநிலையாகிய இது மிக்க நன்மை பயக்கும். இது முதற்படி. இந்த நிஷ்டை யின் பயனுக வைதிக பக்தி பிரேம பக்தியாக மாறும். இது இரண்டாவது படி. பின் பிரேம பக்தியை இறைவன் மீது செலுத்தி, அவனது காட்சியை எப்போதும் எவ் விடத்தும் எந்நிலையிலும் பெறல் ஒருவற்கு ஏற்படும்; அப் போது இறைவனையே அவன் உள்ளும் புறமும் காண் கிறுன்; இறைவனைத்தவிர வேறென்றையும் காண்பதில்லை; இதுவே உயர்ந்த படியாகும்.

பக்திமார்க்கத்திலுள்ள ஆறுபடிகளை ஸ்ரீ ராமகிருஷ் ணர் இவ்வாறு கூறுகிருர் :—(1) ஸாது ஸங்கம் அதாவது, நல்லார் இணக்கத்தைப் பெறல் (2) இதன் பயனுக உயர்ந்த பாரமார்த்திக (மெய்ஞ்ஞான) விஷயங்களில் ஈடுபடும் நிலை உண்டாகும்; இது சிரத்தையெனப்படும் (3) இலக்ஷி யத்தில் (அதாவது இஷ்ட தெய்வத்தினிடத்தில்) மனம் ஒருமைப்படுதல், பக்தியோடு ஈடுபடுதல்; இது இஷ்டநிஷ் டையெனப்படும். இந்தஇஷ்டம் (ஒருவன் ஞானமடைதற்கு எனக் காட்டப்படும் இலக்ஷியம்) ஒருவரது குருவாகலாம், யாதானும் ஒரு திவ்விய வடிவமாகலாம், வடிவமற்ற கடவுளுமாகலாம், ஸகுணப் பிரம்மத்தின் எண்ணிறந்த வடிவங்களுள் ஏதேனும் ஒன்ருகலாம், குல தெய்வமுமாக லாம். சிவன், விஷ்ணு, தேவி ஆகியவர்களின் எந்த வடி வத்தையும் கொள்ளலாம். (4) தெய்வத்தை நினைத்த மாத் திரத்திலே, பரவசமடைதல் நிஷ்டையினுல் விளையும். இது

பாவக நிலை (பாவம்) எனப்படும் (5) பகவானுடைய தரிசனம் பெற்றபின் முற்கூறிய பக்தி முதிர்ந்து மஹா பாவனை என்ற உயர்ந்த நிலையை அடையும். இந்நிலையில் பக்தன் பித்தனைப்போல ஒரு சமயம் சிரிப்பான், ஒரு சமயம் அழுவான்; அவனுக்கு உடலை அடக்குதல் இயலாது போய்விடும். உடல் நினைவை வேரொடு மாய்க்க முடியாத சாதாரண மனிதர்களால் இந்நிலை அடைதற்கு அரியதாகும். உலகமக்களை உய்வடையச் செய்யும்பொருட்டுத் தோன்றும் அவதார புருடர்களாலே மட்டும் இது அடையப்படும். (6) முற்கூறிய நிலையோடு பிரேமையும் சேர்ந்து நிற்கும். இறைவனது காட்சியைப் பெற்ற பின்பு ஏற்படும் அதி தீவிர பக்தியே பிரேமையாகும்; இதுவே பக்தியில் உயர்வற உயர்ந்த நிலையாகும். இந்நிலைக்குரிய இரண்டு அறிகுறிகளாவன :—ஒன்று, உலகத்தை மறத்தலும்; இரண்டாவது உடலையும் தன்னையும் மறத்தலும். இந்நிலையை அடைந்திருந்த ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் (ஸ்ரீ கௌரங்கர்) பக்தியின் மிகுதியால் அடிக்கடி தம்மையும் மறப்பர், தாம் முன்பு பார்த்திருந்த இடங்களையும் மறப்பர். இந்த நிலையில் பக்தன் இறைவனைப் பற்றிய மயர்வற்ற காட்சியை அடைகிறான்.

பக்தி நெறியிலுள்ள ஆறு படிகளை வேறு வகையாகக் கூறுவதுமுண்டு. (1) இறைவன் மீதுள்ள அன்பு முதலில் இறைவனுக்குச் சம்பந்தப்பட்ட கோயில்கள், மற்ற இடங்கள், அவனைப் பற்றிப் பேசும் குருமார்கள், நூல்கள் ஆகிய எல்லாப் பொருள்களிடத்தும் மதிப்பை உண்டு பண்ணும். (2) இந்த அன்பு, பின்பு இறைவனிடத்தில் பிரீதியாக மாறுகிறது. (3) இறைவனிடத்துள்ள பிரீதியினால், அவனைப் பெருமைபற்றி எழும் விரஹம் (பிரிவாற்றாமை) உண்டாகிறது (4) இதனால் பிரீதிக்குரிய இறைவனைத்தவிர மற்றப் பொருள்களின் முன்பு மனம் அருவருப்பையும் வருத்தத்தையும் அடையும்; இது ஏகரதி விசிகித்ஸா எனப்படும். இந்நிலையில் இறைவனைப்பற்றிய பேச்சு அல்லாத வேறு எந்தப் பேச்சும் அருவருப்பாகும்.

நீரில்லாத மேகத்துக்கு ஒப்பாம். பக்தியில் ஒன்பது வகை உண்டு. (1) ஸத்ஸங்கம், அதாவது சான்றோரோடு பழகுதல். (2) பகவானுடைய கதைகளைக் கேட்பதில் விருப்பம். (3) குருவின் பாதகமலங்களில் தொண்டு புரிதல். (4) கபடமின்றி இறைவனது குணங்களைப் பாடுதல். (5) இறைவனிடத்து உறுதியான நம்பிக்கையோடு மந்திரங்களை ஜெபித்தல். (6) அடக்கம், சீலம், பலவகைக் கருமங்களை விட்டு மனம் ஒடுங்குதல், எப்போதும் இடைவிடாது நல்லோரது குணங்களைப் பின்பற்றல்-இவைகளை அடைதல். (7) உலக முழுவதையும் இறைவன் மயமாகக் காணுதலும், அடியார்களை இறைவனிலும் மேலாகக் கருதுதலும். (8) எதிர்பாராமலே வருவதைக் கொண்டு மனம் திருப்தியடைதலும், கனவிலும் பிறருடைய குற்றங்களைக் காணாமையும். (9) கள்ளம் கபடமின்றி எளிமையோடும் நேர்மையோடும் எல்லாரிடத்தும் ஒழுகுதலும், மகிழ்ச்சிக்கும் துயரத்திற்கும் ஆளாகாமல், எப்போதும் எல்லாப் பாரத்தையும் இறைவனிடம் ஒப்புவித்து விடுதலும்; ஆணாயினும் பெண்ணாயினும், இவைகளில் ஒன்றையேனும் யாரேனும் உடையரானால், அவர் எனக்குப் பிரியமாவார்.''

## (5) பக்தர்களின் பெருமை

பெரியது யாது என்று அறிவிற் சிறந்த ஔவைப் பிராட்டியாரை வினவியபோது, அம்மூதாட்டியார் 'பெரிது பெரிது புவனம் பெரிது' என்று தொடங்கினார்; புவனம் முதலிய பல பெருமை வாய்ந்த பொருள்களைப் பெருமை உயர்ந்துவரும் முறையில் வரிசையாக அடுக்கினார்; இறுதியில், இறைவனையே அனைத்தினும் பெரியதாகக் கூறி, இறைவனும் தொண்டர்க்குள் ஒடுக்கம் என்றும், தொண்டர் தம் பெருமையைச் சொல்லல் அரியதாகும் என்றும் முடித்தார். பகவானுக்கும் பக்தனுக்கும் வேறுபாடில்லை யென்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். உலகமுழுவதையும் தன்னுள் ஒடுக்கும் இறைவனைத்

(5) வாழ்க்கையே இறைவன்மீதுள்ள பிரீதியினால் இன்பமானதாகும். அவனுக்காகவே உயிரோடிருத்தலின், அதில் ஒரு மகிழ்ச்சி உண்டாகிறது. 'இது ததர்த்தப் பிராண ஸம்ஸ்தானம்'—இறைவனுக்காகவே வாழ்தல்—எனப்படும். அவனுக்காக இல்லையேல் வாழ்க்கை (உயிர்) அப்பொழுதே நீங்கிவிடும் (6) இறைவனுக்கே உரிமையாகப் பக்தன் பின் மாறி விடுகின்றான்; தன்னை ஒரு பொருளாக எண்ணாது, தனக்கென வாழாது, தன்னை முற்றும் இறைவனதாக்கும் இந்நிலை 'ததீயதா' எனப்படும். இந்நிலையில் பக்தன் பகவானை அடைந்து, தனது இயல்பு முழுவதும் தூயதாயும் தெய்வத் தன்மையதாயும் மாறப் பெறுகிறான். அப்போது உலகிலுள்ள எந்தப் பொருளும் அவனுக்கு அருமையானதாகின்றது. ஏனெனில் யாவும் அவனுடையவையல்லவா? ஆதலின் எங்கும் இறைவனையே காண்கின்றான். அவனது அன்பு எல்லா உயிர்ப் பொருள்களிடத்தும் இறைவனிடத்துப் போலப் பாய்கிறது. பாம்பும் புலியும் அப்போது இறைவனது குழந்தைகளாகவும், உடலாகவும், அம்சமாகவும் உணரப் படுகின்றன. இறைவன் அன்பு மயமானவன். அந்த அன்பே எங்கும் விளங்குகிறது; ஆதலின் அவன் எதற்கும் எவர்க்கும் ஹிம்சை செய்வதில்லை, எதுவும் எவரும் அவனை ஹிம்சை செய்வதுமில்லை; இது அப்ராதி கூல்ய நிலையெனப்படும். இப்போது 'தான்' என்பது இல்லாமையின், முற்றிய சரணாகதி நிலை உண்டாகிறது. இறைவன் மீதுள்ள அன்பு ஒன்றே பக்தனிடம் உள்ளது. அந்த அன்பின் வடிவமே அவனிடம் மிஞ்சுகிறது. இதுவே பக்தி நெறியின் மிக உயர்ந்த படி ஆகிறது.

பக்தி நெறியில் உள்ள ஒன்பது படிகளை ஸ்ரீ ராம பிரான் பின்வருமாறு சபரியென்னும் நங்கைக்கு எடுத்துரைக்கிறார். (இது துளசிதாஸரது இராமாயணத்தில் உள்ளது.) அவர் கூறியதாவது:—"ஜாதி வம்சம் குலம் தர்மம் அந்தஸ்து தனம் பலம் சுற்றம் குணம் சாமர்த்தியம் ஆகிய இவை இருந்தாலும், பக்தி இல்லாதபோது

தம்முள் ஒடுக்கம் அடியார்களின் பெருமையை எவ்வாறு கூறுவது. நினைப்பவர் நெஞ்சையே எம்பிரான் கோயிலாகக் கொள்கிறான் என்ப. இறைவன் பிரியமாக வாழுமிடம் அன்பர்களது நெஞ்சம் என்று கண்ணபிரானே கூறுகின்றனன்; ஏனெனில் கோயில்களில் அவன் எழுந்தருளி யிருப்பது, மக்களை அடியார்களாக்கி அவர்களது உள்ளங்களில் எழுந்தருளி இனிதாக வாழ்தலைக் கருதியேயாதலின், முன்னது சாதனமாகப் பின்னது சாத்யமாகின்றது. "கல்லும் கனைகடலும் வைகுந்த வானுடும், புல்லென் ருழிந்தனகொல் ஏ பாவம்—வெல்ல, நெடியான் நிறங்கரியான் உள்புகுந்து நீங்கான், அடியேன துள்ளத் தகம்" (இறைவன் என்னுடைய மனதில் நீங்காது எழுந்தருளியிருப்பதினால் திருப்பாற்கடலையும் வைகுந்தத்தையும், பாவம், விட்டுவிட்டான்போலும்.) என்று நம்மாழ்வார் அருளிச்செய்யலானார். 'பிரியோஹி ஞானிநோ அத்யர்த்தம் அஹம்ஸச மமப்பிரிய:' (மெய்யடியானுக்கு என்மீது அளவுகடந்த பிரியமுண்டு; எனக்கும் அவன்மீது பிரியமுண்டு) என்றும், 'ஞானீது ஆத்மைவமேமதம்' (மெய்யடியான் எனக்கு உயிரேயாவான் என்பது எனது கருத்து) என்றும் கண்ணபிரான் ஒப்புக்கொள்கிறான். தமக்கு அடிமையாகும் அடியார்கட்குத் தாம் அடிமை யென்பதைப் பகவான் நமக்குப் பாகவதத்தில் அறிவிக்கிறார்:—"(பாகவதம் 9-4-63, 64, 68). ஓ பிராம்மண, எனது பக்தனுக்கு முழுவதும் அடங்கியிருத்தலின், நான் எனது வசமாயிருக்கவில்லை; எனது நெஞ்சம் ஸாதுக்களான பக்தர்களுக்கு முழுதும் சொந்தமாயிற்று; யானும் பக்தர்கட்குப் பிரியமாவேன். என் பக்தர்களான ஸாதுக்களை விட்டுத் தனியாக எனக்கு என்னிடத்திலும் இலக்ஷ்மியிடத்தும் மிக்க பெருஞ் சிறப்பிலும் விருப்பம் இல்லை; ஏனெனில் யானே அவர்கட்கு உயர்ந்த கதியாகிறேன். ஸாதுக்கள் என் நெஞ்சமாகின்றனர். (எனக்குப் பிரியமாகின்றனர்), நானும் அவர்கட்குப் பிரியமாகிறேன்; அவர்கள் என்னையன்றி வேறொன்றையும் அறியார், யானும் அவர்களையன்றி வேறொன்றையும் அறி

யேன்.'' இத்தகைய பெரியார்களைப் பெறும் நாடு புண்ணிய நாடாகின்றது. அவர்களது வாழ்க்கையால் உலகமே புனிதமாகின்றது; அவர்களே உலகத்திற்குத் தாரக (ஆதார) மாகின்றனர்; அவர்களது நினைவு சொற் செயல்கள் யாவும் தெய்வத்தன்மையை எங்கணும் பரப்புகின்றன. இவர்களது பெருமையை உணர்ந்து அதில் ஈடுபட்ட குலசேகராழ்வார் பின்வருமாறு தமது அனுபவத்தை வெளியிட்டுள்ளனர்:—"மெய்யடியார்கள் ஈட்டம் கண்டிடக் கூடுமேல், அது காணும் கண்பயனாவதே" (ஈட்டம்-கூட்டம்); அம்மாதிரியான 'தொண்டர் அடிப்பொடி ஆட நாம்பெறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே'; 'அத்தொண்டர் சேவடிச்செழுஞ் சேறு என் சென்னிக்கு அணிவனே'; அவர் 'தம்மையே நினைந்து என்மனம் மெய்சிலிர்க்குமே'; அத் 'தொண்டர்க்கு எப்பிறப்பிலும் காதல்செய்யும் என் நெஞ்சமே'; அடியார்களாகி அவனுக்கே பித்தராமவர் பித்தரல்லர்கள் மற்றையார் முற்றும் பித்தரே!' நம்மாழ்வார் மெய்யடியார்களைப்பற்றிக் கூறுமிடத்துத் 'தம்மையாளும் பரமரே' என்றும், 'தம் தொழுகுலம்' அவர்களே என்றும், 'அடியார்தம் அடியாரடியார் எங்கோக்களே' (கோக்கள்-தலைவர்கள்) என்றும், அவர்களைக் கொண்டாடுகின்றனர். சுந்தரமூர்த்தி நாயனார் தம்மைத் 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கி, எல்லா மெய்யடியார்க்கும் தாம் அடிமையாதலைத் தெரிவித்தார். ஆக மெய்யடியார்களது பெருமை சாதாரண மக்களாலும் மெய்யடியார்களாலும் பகவானாலும் நிலை நாட்டப்படுகின்றது.

இத்துணைப் பெருமை வாய்ந்த மெய்யடியார்கள் எல்லா நாடுகளிலும் எல்லாக்காலங்களிலும் எல்லா மதங்களிலும் எல்லாவகை மக்கட்குள்ளும் தோன்றியுள்ளனர். இதுவரை அவர்கள் பன்முறை தோன்றியுள்ளனர். இன்னும்காலம் உள்ளளவும் உலகம் உள்ளளவும் தோன்றிக் கொண்டே யிருப்பார். அவர்கள் ஒரு நாட்டில் ஒரு

வேருன்றச் செய்வார் மெய்யடியார்களேயாவார். இவர்கள் தோன்ருத ஜனஸமூகத்தினிடத்து அறியாமை இருளே செறியும்; ஆரவாரமும் தற்பெருமையும் அஹங்காரமும் கோபமும் கொடுமையும் பொருமையும் காமமும் பகையும் தாண்டவமாடும்; கவலையும் துயரமும் குடிகொள்ளும்; சமய வாழ்க்கை-அதாவது ஞான உணர்ச்சி என்பதே இல்லாது மறைந்துவிடும்.

சாதாரண மக்களினும் மெய்யடியார்கள் பெரிதும் வேறுபட்டிருப்பர்; வாழ்க்கையில் முற்றிலும் மாறுபட்டிருப்பர். சாதாரண மக்கட்கு மெய்யாகத் தோன்றுபவைகளை அடியார்கள் பொய்யாகக்கொள்வர்; அவர்கட்குப் பொய்யாகத் தோன்றுவதை அடியார்கள் மெய்யெனக் கொள்ளுவர். 'எவ்வுயிர்க்கும் யாதொன்று இரவாமோ அவ்விடையில், மெய்வழிசேர் ஞானி விழிப்புறுவன்—எவ்விடையில், பூதங்கள் யாவும் விழித்திருப்ப அவ்விடையக், கோதில் முனிவற்கிரவாம் கொள்' (கீதை 2-66) என்று கூறியபடியே, உலகமக்கட்கு இரவாவது அடியார்கட்குப் பகலாகும். உலகமக்கட்குப் பகலாவது அடியார்கட்கு இரவாகும். ஆதலின் 'மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்வையகந் தன்னெடும் கூடுவதில்லை' என்பர்கள் அடியார்கள்; பொன்னையும் மாதரையும் நாடும் உலகத்தாரொடு பொருந்தி வாழமாட்டார்; உலகத்தார் உலகப்பொருள்களிடத்தும் உலக இன்பத்திடத்தும் பித்தராய் வாழ, அடியார்கள் எம்பிரானுக்கே பித்தராயொழிவார். உலகத்தார்க்கு அடியார்கள் பேயராய்த் தோன்றுவாராக, அடியார்கட்கு உலகத்தார் பேயராய்த் தோன்றுவார். "பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்து இட்ட பிச்சையெலாம், நாய்போல் அயின்று நரிபோல் உழன்று நன்மங்கையரைத் தாய்போற்கருதித் தமர்போல் அனைவர்க்கும் தாழ்மைசொல்லிச், சேய்போல் இருப்பர்" (அயின்று-உண்டு; சேய்-குழந்தை) உண்மை ஞானத்தெளிவு பெற்ற உத்தம அடியார்கள்; இவ்வாறு வாழும் பெரியோர்களது

காலத்தில் ஒரு ஜாதியார்க்குள் பிறந்து வாழ்ந்தாலும். உலக முழுவதற்கும் எக்காலத்திற்கும் மன்னுயிர்க்கெல்லாம் உரியராவார். அவர்கள் பேசும் பாஷைகள் வேறுபட்டாலும், நடையுடை பாவனைகளும் வடிவமும் வேறுபட்டாலும், அவர்கள் உலகத்தார்க்கு அளிக்கும் செய்தி ஒன்றேதான். அவர்கட்குள் காணப்படும் வேறுபாடுகள் வெளிப்பார்வைக்குப் புறவுறுப்புகளில் தென்படினும், கூர்ந்து நோக்குவார்க்கு அடிப்படையான அம்சங்களிலும் கருத்துக்களிலும் வாழ்க்கையிலும் ஒற்றுமையே நன்கு விளங்குகின்றது. கல்லும் புல்லும் சுகமும் துக்கமும் எங்கும் ஒன்றாயிருப்பதுபோன்றே, உயிர்க்கு இன்பம் பயக்கும் உயர்ந்த மக்களும் ஒரே வர்க்கத்தினராகின்றனர்; அவர்களைத் துணைக்கொண்டு எந்நாட்டினரும் எக்காலத்தும் எந்நிலையிலும் எவரும் உய்வடையலாகும். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதுபோல மெய்யடியார்களும் ஒரே வகுப்பினராவார்.

இம்மெய்யடியார்களை ஒரு ஜனசமூகத்தினிடத்து இறைவன் தோன்றச்செய்யும் காரணமாவது, அவர்கள் மூலமாக அவர்களைச் சூழும் மக்கள் மனிதவாழ்க்கையின் மெய்ப்பயனை அறிந்து, அதனைப்பெற முயன்று, அவ்வழியாகத் தமது வாழ்க்கையை மேன்மைப்படுத்திக்கொள்வதற்காகவேயாம். இக்கருத்துக்கு இயைய அவர்களில் அனைவரிடத்தும் பொதுவாகக் காணப்படும் பல சிறப்பியல்புகள் உள. நாத்திகம் பேசி நாத்தழும் பேறினார்க்குத் தெய்வம் உண்டென்றும், ஆன்மா உண்டென்றும், உலக வாழ்க்கையிற் பெறப்படும் சிற்றின்பத்தினும் ஆயிரமடங்கு பெரியதும் ஆழ்ந்ததும் அழிவற்றதுமான பேரின்பம் ஒன்று உண்டு என்றும் அனுபவ வாயிலாகக் கையிலங்கு நெல்லிக்கனியெனக் காட்டுவார் அவர்களே. கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனத்திரிந்தும், அழியும் பொருள்கட்கிடையே அழியாத மெய்ப்பொருள் உண்டோ என்று ஐயுற்றும் வாணாளை வீணாக்குவார்க்கு மெய்ப் பொருளினிடத்து நம்பிக்கையை வலியுறுத்தி

மேன்மையை அறியவும் மாட்டாது திகைப்பர் உலக மக்கள்.

பகவான் கீதையிலே 'முக் குணமயமான எனது தெய்விக மாயை கடத்தற்கரியது ; என்னையே சரணமடை பவர்கள் எவர்களோ அவர்களே இம் மாயையைத் தாண்டுவர்' (7-14) என்று கூறி யருளியபடியே, அடியார்கள் பகவானைச் சரணமடைந்து உலக மாயையைத் தாண்டிய வராய், தாம் எப்போதும் பகவானது ஸந்நிதியில் இருப் பதைத் தெளிவாக உணர்வார் ; உலகப்பொருள்களையும் உலக மக்களையும் காட்டிலும் மிக்க உண்மையான பொருள் பகவான் என்பதை அவர்கள் காண்பார். "கடவுளைக் கண்டுள்ளீரோ" என்று வினவிய ஒருவர்க்கு ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருமான் "உன்னையான் காண்பது போலே பகவானையும் கண்ணாரக் காண்கின்றேன் ; ஆனால் உன்னைக் காண்பதிலும் மிக்க தெளிவாக அவரைக் காண் கிறேன் என்பேன்" என்று பதிலளித்தார். இம்மாதிரி யான அடியார்கள், பகவான் அங்கிங்கெனாதபடிப் பார்க்கு மிடம் எங்கும் நீக்கமறப் பரந்து உறைவதையும், எல்லா உயிர்களும் அவரிடத்தே தங்குவதையும், தெளிவாகக் காண்பாராதலின், அனைத்துயிர்களிடத்தும் அன்பு செறிந் தவராய் அவர்கட்கு நன்மை செய்தலிலேயே கருத்துடைய ராய் வாழ்வார் ; ஏனெனில் உயிர்க்குத் துன்பம் செய்தல் இறைவற்குத் துன்பம் செய்தலேயாம் என்பதை அறிந் தவராவர். 'எல்லாம் உன் அடிமையே' 'எல்லாம் உன் உடைமையே' என்னும் உண்மையினைக் காணப் பெற்றிருத்தலின் மெய்யடியார்கள் ஸமதரிசனமும் ஸம நிலையும் உடையராய்த் திகழ்வார். அவர்கள் தமக்கும் பிறர்க்கும் வேறுபாடறியார் ; தமது பொருளுக்கும் பிறரது பொருளுக்கும் வேறுபாடு காணார் ; எல்லா உயிர்களையும் சமமாக நோக்குவார் ; மனதிலே சாந்தம் உடையராவார் (பாகவதம் 11-2-52). 'வித்தையும் விநயமும் உடைய பிராம்மணனையும் பசுவையும் யானையையும், நாயையும் பறையனையும் ஸமமாகப் பார்ப்

பார், எங்கும் பகவானையே பார்த்தலின் (கீதை, 5-18) பகை நாணம் குலம் கல்வி பயம் புகழ் ஜாதி ஆணவம் என்னும் எட்டுவித விலங்குகளை விலக்கி விடுவார். நிகழ்வ தெல்லாம் இறைவனுடைய செயலே என்றிருப்பார். 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்,' 'கந்தை மிகையாம் கருத்து'டையராயிருப்பார். இறைவன் துன் பத்தை யளிப்பினும் இன்பத்தை அளிப்பினும் எல்லாம் அவனருள் என்றிருப்பர். ஈசன் கடியனுய்க் கொடிய னுய்த் தோன்றினும், 'கொடிய என் நெஞ்சம் அவ னென்றே கிடக்கும்' என்பர். 'கொண்டாளாயாகிலும் உன் குரைகழலே கூறுவனே' என்பர். 'நன்றே செய் வாய் பிழை செய்வாய் நானே அதற்கு நாயகமே' என்று கவலையின்றி இருப்பர். 'களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்' (களைகண் - பிடிப்பு) என்றும், 'கற்றூணைப் பூட்டிக் கடலிற் பாய்ச்சினும், நற் றுணையாவது நமச்சிவாயவே' என்றும் ஆறியிருப்பர். நீற்றறையில் உள்ளபோதும் 'மாசில் வீணையும் மாலை மதியமும் வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண் டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே' என்று துன்பமும் இன்பமாகப் பெறுவர்; மிக்க குளிருள்ள விடத்தும் 'வாசுதேவனுகிய மரத்தின் நிழல் அதிகத் தட்பமும், அதிக வெம்மையும் இன்றி மிதமா யிருக்கும்' என்ற உறுதியோடு இன்பமாய் வாழ்வார். "உலகில் நடப்பதெல்லாம் விஷ்ணுவின் மாயையால் விளைதலின், ஐம்புலன்கள் வழியாகப் பொருள்களைப் பற் றும்போது மகிழவும் வருந்தவும் மாட்டார்" (பாகவதம் 11-2-48). நட்பு பகைமைகளையும் மான அவமானங் களையும் குளிர் வெம்மைகளையும் இன்ப துன்பங்களையும் ஒன்றுக நோக்குவார்; பற்றற்றிருப்பார்; புகழையும் இகழையும் ஸமமாகக் கருதுவார்; மோனமாயும் திருப்தி யாயும், இருக்க வீடின்றியும், திடபுத்தியோடும், பக்தி யோடும்' இருப்பார் (கீதை 12-18, 19). சுருங்கச் சொல் லில், அடியார்கள் தமக்கென வாழார், இறைவற்கென்றே வாழ்வார்.

அடியார்கள் இறைவனையே பரமான (உயர்ந்த) பொருளாகக் கொள்வாராதலின் வேறெதையும் பொருளாக மதியார்; ஆதலின் அவனொழிந்த எதனிலும் எள்ளளவும் பற்று வையார். எச்செயல் புரியினும் உலக வாஞ்சை ஒரு சிறிதேனும் அதற்குக் காரணமாக இடங்கொடார்; இறைவனையே முழுதும் நம்பித் தமக்கென ஒன்றுமன்றி, அவனது வழிபாடாகவே எண்ணித் தொழிலை இயற்றுவார். அவர்களது புத்தியும் மனமும் இறைவனிடத்து நிலை நாட்டப்பட்டிருக்கும்; இறைவனே மன முழுவதிலும் நிரம்பி யிருத்தலின், வேறு நினைவுகளும் ஆசைகளும் எழ வழியிலாது போகின்றது. ஒளியுள்ள விடத்து இருள் இருத்தல் இயலாதவாறே, இறைவன் எழுந்தருளியிருக்கும் உள்ளத்து ஆசை உதித்தல் முடியாது போம். "என்னிடத்து எழும் பக்தியொன்றினாலேயே, பிறர் கருமத்தாலும் தவத்தாலும் ஞானத்தாலும் வைராக்யத்தாலும் யோகத்தாலும் தான தருமங்களாலும் ஏனைய நல்ல நெறிகளாலும் அடையக்கூடியவற்றை யெல்லாம் அடியார்கள் அடைகின்றனர்; அவர்கட்கு விருப்பமுண்டாயின் சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையும் பரமபதத்தையும் பெறுவர்; ஆனால் தீரராய் என்மீது மட்டும் பக்தி பெற்றவர், யானாக மோக்ஷத்தை அளிப்பினும் வேண்டார்" என்று கண்ணபிரான் பாகவதத்தில் (11-20-34) கூறியருளினார். "வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில், அதுவும் உன்றன் விருப்பன்றே" என்று அடியார்கள் இறைவனிடம் கூறுவர். "கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டார்." "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்" என்பர். "இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்பர். வேண்டாமை யென்னும் விழுச்செல்வத்தையும், சிந்தையின் நிறைவெனும் சீரிய செல்வத்தையும் பெற்றுவைகுவார்.

'மனிதன் உணவால் மட்டும் வாழ்பவனல்லன்' என்பர் இயேசுநாதர்; இறைவனது நினைவாலும் உயிர்

தோன்றும் அந்த அடியார்கள் வேறொரு கணம் இறைவனது ஆவேச முற்றவர்களாய் இறைவனது தூலவடிவங்களாகவே காணப்படுகின்றனர். ஓரறையிலிருந்து மற்றோர் அறைக்கு எளிதாக நாம் செல்வதுபோலவே அடியார்கள் மனிதத்தன்மை யென்னும் அறையிலிருந்து தெய்வத்தன்மை யென்னும் அறைக்குத் தாம் நினைத்தபோது சென்று மீளும் திறமையுடையவராகக் காணப்படுகின்றனர்; அம்மட்டோ. அவர்களிடம் மனிதத் தன்மை காணப்படும்போதும் தெய்வத்தன்மையின் சம்பந்தம் நீங்காமலே இருக்கின்றது. அவர்களிடத்தே மனிதர்க்குரிய குற்றங் குறைகள் தேய்ந்து மாய்ந்துபோனமை தெளிவாகத் தெரிகின்றது; தெய்விக சக்தியே அவர்களை ஆட்டிவைத்தலின் அவர்கள் மக்களது உள்ளங்களில் மறைந்துகிடக்கும் ஞான வல்லமைகளைத் தட்டி யெழுப்பிச் சுறு சுறுப்பாக வேலை செய்யும்படித் தூண்டும் திறமையுள்ளவர்களாகின்றனர்.

அடியார்களைச் சாதாரண மக்கள் தம்மினும் வேறுபட்ட மேன்மக்களாகவும் தனிப்பட்ட மக்களாகவும் கருதுவார்கள் எனினும், அடியார்கள் தம்மை ஏனைய மக்களைப் போன்றவராகவும் இறைவனது அருளாலேயே தாம் உயர்ந்த நிலையை எய்தியதாகவும், அவ்வருள் உலக மக்களனைவர்க்கும் பொதுவாக உரியதாகவும், எண்ணியும் உரைத்தும் போதித்தும் வருவார். உலகமக்களனைவரும் இறைவனது அருமை மக்களே யாவர் என்றும், ஒரு மனிதன் அடையும் உயர்நிலை எதுவாயினும் அதனை வேறெந்த மனிதனும் தக்க முயற்சியால் அடையக்கூடும் என்றும் அடிக்கடி அடியார்கள் பிறமக்கட்கு வற்புறுத்திவருவார். இதனால் அவர்கள் மக்கட்குத் தன்னம்பிக்கையை மூட்டியும் கொழுந்துவிட்டெரியச் செய்தும் வருவார். மனிதன் ஒவ்வொருவனும் தெய்வத்தன்மையெனும் செங்கனலை உள்ளே யுடையனாயினும், அது நீறுபூத்த நிலையிலிருத்தலின், வெளிப்பார்வைக்குத் தோன்ற தொழிகின்றது; நீற்றினை அகற்றி நெருப்பினை ஒளிரச்செய்ய ஊதுதல்

வாழ்வர் மெய்யடியார் என்பதே இதில் அடங்கிய கருத்தாகும். "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை எல்லாமும் கண்ணன் எம்பெருமான் என்றே கண்கள் நீர்மல்கி"க் காலம் கழிப்பர் நம்மாழ்வாரைப் போன்ற உத்தம அடியார். "உண்ணு நாள் பசியாவ தொன்றில்லை. ஓவாதே நமோ நாராயணா வென்று எண்ணு நாளும், இருக்கு யசுச் சாமவேத நாண்மலர்கொண்டு உன்பாதம் நண்ணுநாள் அவை தத்துறுமாகில், அன்றெனக்கவை பட்டினி நாளே" என்பர் பெரியாழ்வார் போல்வார். இறைவனைப்பற்றிய நினைவின் இனிமையாலே உடலுக்கும் புலன்கட்கும் மனத்திற்கும் புத்திக்கும் உண்டாகும் பயம் பிறப்பிறப்புகள் பசி தாகம் துன்பம் என்பவை அடியார்களை அடிமைப்படுத்தமாட்டா என்று பாகவதம் பகர்கின்றது (11-2-49).

அடியார்களிடத்து 'நான்' 'எனது' என்பன வேரறமாய்ந்து விடும் ஆதலானும், 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்றபடி அவர்கள் தம்மை இறைவனால் ஆட்டுவிக்கப்படும் கருவிகளாகக் கருதலானும், தற்போதம் முற்றும் ஒழிந்தவராகின்றனர்; அப்போது அவர்கள்பால் வெளிப்படுவது சிவபோதமேயாகும். இதனால் அத்தகைய அடியார்களது நினைவு சொற் செயல்களை, இறைவனது திருவுள்ளத்தினின்று எழுந்து அவர்கள் வாயிலாக வெளிப்படும் ஆணையின் வடிவங்களாகக் கருதுதல் முறையாகின்றது. ஊன் கண்ணுக்கு மறைந்தொளிரும் இறைவன் அவர்கள் பால் அனைவரும் ஊன் கண்ணாற் காணும்படி உருக்கொண்டு ஒளிர்கின்றான்; அவர்கள் நடமாடும் கோயில்களாகின்றனர்; நடமாடும் பரமரின் வடிவங்களாகின்றனர். அவர்களை உற்றுநோக்கும் போதே உலகமக்கட்குத் தெய்வத்தன்மை இன்னதென்பது புலனாகின்றது; அவர்களைச் சாதாரண மக்கள் அணுகும்போது தமது உள்ளங்களிற் சாந்தியும் தூய்மையும் ஒருவாறு தங்குவதை உணர்கின்றனர். ஒரு கணம் தம்மைப்போன்று மனிதராய்த்

இதுபோலவே ஒரு மனிதன் தன்து அறிவின் வன்மையால் 'தொலைப்பேசி' 'வானொலி' போன்ற மாயமான கருவிகளைக் கண்டு பிடித்தாலும், அச்செயல் ஆச்சரியச் செயலேயாகுமன்றி அற்புதமாகாது; ஏனெனில் மனிதனது சாதாரண அறிவிற்கும் வல்லமைக்கும் அது உட்பட்டதேயன்றி, அவைகளை மீறியதன்று.

பின்னை அற்புதமாகக் கருதப்படுவது யாதெனின், சாதாரண இயற்கையில் நிகழக் கூடாததும், மனிதனது இயல்புக்கு மிஞ்சியிருப்பதுமான ஒரு நிகழ்ச்சியேயாகும். உதாரணமாக, ஸ்ரீ சைதன்யர் ஜகந்நாதத்தில் இருந்த ஒரு பெருந்தேரைத் தமது தலையால் முட்டி நகர்த்தினார்; திருநாவுக்கரசு சுவாமிகளைப் பெருங்கல்லோடு இறுகக் கட்டிக் கடலில் போட்டபோதும், அவர் கல்லோடு மிதக்கலானார்; அனுமாரது வாலில் வைத்த நெருப்பு இலங்கையைப் பாழாக்கியதெனினும், சீதாதேவியின் அருளால் அவர்க்குக் குளிர்ந்தே யிருந்தது. இயேசுநாதரது அருளால் பிறவிக் குருடன் கண் பெற்றனன், முடவன் கால் முளைக்கப்பெற்று நடந்தான்; புத்தரைச் சார்ந்த ஒரு மூர்க்கன் நல்லவனாகத் திடீரென மாறினான். இம்மாதிரியான செயல்கள் அற்புதங்கள் எனப்படுகின்றன. நம்மைச் சூழ்ந்துள்ள சடப் பொருளும் மனிதனும் வெவ்வேறான இயற்கை விதிகட்கு உட்பட்டிருப்பதையே நாம் பெரும்பாலும் காண்கிறோம்; ஆனால் சிற்சில சமயங்களில் இவ்வியற்கை விதிகட்கு மாறான செயல்கள் நிகழ்கின்றன; முற்கூறிய இருவகை இயற்கைகளையும் மீறிய ஆற்றலும் அறிவும் இன்பமும் அன்பும் எங்கு தோன்றுமாயினும், அது அற்புதம் என்பது முடிவாகின்றது.

இயற்கையில் நிகழும் செயல்கள் யாவும் சிற்சில இயற்கை விதிகட்கு உட்பட்டே நிகழ்கின்றன. இவ்விதிகள் இயற்கையில் அமைந்து கிடக்கும் விதிகளாதலின், அவ்விதிகளை மீறிய செயல்கள் நிகழ்தல் இயலாது; நடக்குமேல், இயற்கையில் இதுவரை நாம் காணாத சில விதிகள் மறைந்து கிடந்தன என்பதே முடிபாகும். பெரியவிதி

யொன்று சிறியவிதியொன்றை உள்ளடக்கிக் கொண்டுள்ளது என்பதே பின் அறியப்படும்; ஒருவேளை ஒருவிதி மற்ருெரு விதியை எதிர்த்து நிற்பதினுல், வலிமை மிகுந்த ஒருவிதி வலிமை குறைந்த ஒரு விதியை அடக்கியாண்டு கொண்டிருக்கலாம். இவ்விதிகள் பொருள்களின் இயல்பில் அடங்கிக் கிடக்கின்றன என்ருலும் சரி, அல்லது, அவை இறைவனது ஆணைப்படியே தொழில்புரிகின்றன என்ருலும் சரி, அவை இயற்கைப் பொருள்கள் உள்ளளவும் மாரு என்பதே நமக்குப்போதும். இயற்கை விதிகள் மீற வொண்ணுதபடி அமைந்திருப்பதே, ஊன்றி யோஜிப்பார்க்கு, ஓர் அற்புதமாகத்தோன்ற வேண்டுமன்ரே? நெருப்பு சுடுவதும், கல் நீரில் அமிழ்வதும், அற்புதங்களாகாவோ? நெருப்பு குளிர்ந்திருப்பதும், கல் நீரில் மிதப்பதும் மட்டும் அற்புதங்களாதல் வேண்டுமோ? இது நிற்க.

சாதாரண மனிதர்களால் செய்தற்கரியவையும், இயற்கைக்கு மீறியவையுமான செயல்கள் பல மஹான்களுடைய சரித்திரத்தில் காணப்படுகின்றன. இச்செயல்கள் மிகப் பழைமைவாய்ந்த காலத்தும், இடைக்காலத்தும், தற்காலத்தும், இந்நாட்டிலும் எந்நாட்டிலும் நிகழ்ந்துள்ளன. இவைகளை வெறுங் கட்டுக்கதைகள் என்று கூறி ஒதுக்குதல் அறிவுடையோர்க்கு அழகாகாது; காரணம் காட்டி விலக்குதலே பொருத்தமாகும்: நாம் இதுவரை இயற்கை விதிகள் சிலவற்றைக் கண்டு பிடித்துள்ளோம் என்ருலும், இயற்கை யென்பது நாம் அறிந்த அளவோடு நின்று விடுவதில்லையன்ரே? இயற்கை உண்மையாக மிகப் பரந்து விரிந்திருத்தலின், அதன் ஒரு பகுதியில் நமது ஆராய்ச்சிக்குப் புலப்படும் விதிகள்மட்டுமே இயற்கை விதிகளாம் என்னல் பொருத்தமாகாது. இயற்கையின் மற்றப்பகுதிகளையும் ஆராய்ந்து, ஆங்காங்குள்ள விதிகளையும் இயற்கையின் பற்பல பகுதிகட்குமுள்ள சம்பந்தத்தையும் நாம் அறிதல் வேண்டும். பொதுவாக இயற்கையென்னும்போது சடப்பொருளின் இயற்கையை

மட்டும் கருதுகிறோம்; மனிதனது மனத்தின் தொழில்களை அடக்கியாளும் மன இயற்கை விதிகளையும் நாம் செவ்வையாக அறிய வேண்டும்; இன்னும், மனத்தின் இயற்கைக்கும் சட இயற்கைக்கும் உள்ள சம்பந்தத்தையும் அறிய வேண்டும்; அப்படி அறியும்போது, சட இயற்கை விதிகளைக் கடந்தனவாகத் தோன்றும் நிகழ்ச்சிகள் மன இயற்கை விதிகட்கு உட்பட்டவையாகத் தோன்றும். ஆதலால், இயற்கைக்குப் பரந்த பொருள் கொள்ளுங் காலத்து, அற்புதங்கள் இயற்கை விதிகட்கு உட்பட்டவையேயாகும்; அப்போது அற்புதங்கள் இயற்கையை மீறியவையாகாது, இயற்கைக்கு உட்பட்டவையாம்.

மனத்தின் இயற்கையைப்பற்றி நன்கு ஆராய்ந்து, மனத்தை ஆட்டுவிக்கும் சக்திகளையும், அதை அடக்கியாளும் வகையையும், அனுபவ மூலமாக அறிந்தவர்கள் நமது பண்டைக்கால யோக நூலார். திரியும் மனத்தை அடக்கி, குறிப்பிட்ட ஒரு பொருளின்மீது நிறுத்தி அதைப்பற்றித் தாரணை தியானம் சமாதி அடைந்தால் அரும்பெரும் சித்திகளும் உண்டாகும் என்பது யோகநூல் முடிபு. இதைக்கொண்டு அற்புதங்களை விளக்குவது எளிதாகும், பொருத்தமுமாகும். இயற்கை யென்பது புற இயற்கை (சட இயற்கை) அக இயற்கை என இருவகைப்படும். புற இயற்கையை அக இயற்கை கட்டுப்படுத்தக் கூடியதாகும். அக இயற்கையாவது உயிருள்ள பொருளின் மனத்தினுடைய இயற்கையாம். புற இயற்கையை உயிருள்ள பொருளின் மன இயற்கை மீறவும் வெல்லவும் கூடும். சட இயற்கையை ஜீவ இயற்கை வெல்வதற்கு எந்த உயிர்ப்பிராணியும் உதாரணமாகும். மனிதன் தனது பயிற்சி பெற்ற மனத்தின் துணையால் சடப்பொருள்களைத் தன் இச்சைப்படி அடக்கி யாள்கின்றான்; தன்னை யொழிந்த மற்ற விலங்குகளை அடக்கி யாள்கிறான்; அம்மட்டோ, தன் மனத்தையும் அடக்கி ஒரு வழிப்படுத்தி, ஒரு நினைவின்மேல் நிலைநிறுத்த வல்லவனாகின்றான், அவ்வாயிலாக அணிமாதி சித்தி

களையும் பெற்று விளங்குகிறான்; அனைத்திற்கும் மேலாக மனத்தைப் பரம்பொருளின்மீது நிறுத்தித் தெய்வத் தன்மையையும் வெளித் தோற்றுவிக்கின்றான். ஆக, ஜீவ இயற்கையில் விலங்கின் இயற்கை மனித இயற்கை தெய்வ இயற்கை என மூவகை இயற்கைகள் காணப்படுகின்றன. இம்மூன்றினுள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விதிகள் உள்ளன; அந்தந்த நிலையில் அவ்வவ் விதிகட்கு உட்பட்டே செயல்கள் நிகழும், அந்தந்த இயற்கையின் எல்லைக்குள் அவ்வவ் விதிகள் மீற வொண்ணாதவையேயாகும்; அன்றியும், சட இயற்கையை விலங்கின் இயற்கை வெல்லும், விலங்கின் இயற்கையை மனித இயற்கை வெல்லக்கூடும், மனித இயற்கையைத் தெய்வ இயற்கை வெல்லக்கூடும். பொதுப்பட, சில உண்மைகள் புலப்படுகின்றன; அவை யாவையெனின், இயற்கையை வெல்லுவதே உயிர்ப்பொருளின் நோக்கமாகின்றது; இயற்கையை வெல்லுவதற் கேற்ப ஓர் உயிர்ப் பொருள் தகையுயர்ந்து வருகிறது; மனிதனை பின்பும், புற இயற்கையையும் அக இயற்கையையும் அடக்கும் அளவிற்கேற்ப மனிதனும் உயர்ந்து, முடிவில் மனித இயற்கைக்கும் அதீதமான தெய்வத் தன்மையை அடைகிறான். சுருங்கச் சொல்லில், எம்மனிதனிடத்தும் சட இயற்கையும் விலங்கின் இயற்கையும் மனித இயற்கையும் தெய்விக இயற்கையும் அடங்கியுள்ளன. இதுவே இயற்கை யென்னும் மொழியின் பரந்த விரிந்த முழுப் பொருளாகும்.

இனி இக்கருத்துப்படி அற்புதங்களின் இயல்பை ஆராய்வோம். அற்புதங்களை நிகழச் செய்பவன் மனிதனே; ஒரு விலங்கின் செயல் எதுவும் இயற்கையில் நிகழும் எந்த நிகழ்ச்சியும் அற்புதங்களாகா. மனிதனே சடப்பொருளொன்றை அதன் இயற்கையை மீறி நிற்கும் படிச் செய்ய வல்லவனாவான்; ஒரு விலங்கையும் அதன் இயல்பை மீறி நிற்கச் செய்ய வல்லவனாவான், (ஒரு புலியையும் ஆட்டின் அருகே நீருண்ணச் செய்வான்); சாதாரண ஒரு மனிதனது இயல்பை மீறிய செயல்களைச் செய்

யவும் வல்லவனுவான்; இன்னும், ஒரு தீயோனை ஒரு கணப்பொழுதில் நல்லவனுக்கவும் வல்லவனுவான். மனிதனது மனம் முறையாகப் பண்படுத்தப்படின், அதனுல் செய்தற்கரியது யாதொன்றுமில்லை யென்பதே அறியப்படுகிறது. இதன் காரணம் யாதெனின், மனிதனிடத்து உடலும் உள்ளமும், இவ்விரண்டிற்கும் அதீதமான ஆன்மாவும் அடங்கியுள்ளன; அவனிடம் சட இயற்கையும், விலங்கின் இயற்கையும் மனித இயற்கையும் தெய்விக இயற்கையும் படிந்து கிடக்கின்றன. உண்டு உடுத்தி உறங்கியும், பயத்திற்கும் காம இச்சைக்கும் உட்பட்டும் மனிதன் காலங் கழிக்கும்போது, விலங்கினியற்கையே அவனிடம் தலையெடுத்து நிற்கிறது. நன்மை தீமையெனும் இரண்டையும் வேறுபடுத்தி யறிந்து, நன்மையை நாட எண்ணி, உடலையும் உள்ளத்தையும் ஒருவாறு அடக்கியாளும்போது, மனித இயற்கை தலையெடுக்கிறது; உடலையும் உள்ளத்தையும் நினைத்தபடி ஆட்டுவிக்கும் திறமையை மனிதன் யோக சாதனத்தின் உதவியால் எய்தும்போது, மனிதனது இயற்கை முற்றுப்பெறுகிறது. மனிதன் 'யான்' 'எனது' என்னும் பற்றுக்களை அறவே ஒழித்துவிடும் போது, தெய்விக இயற்கை அவனிடம் தலையெடுக்கின்றது. விலங்கின் இயற்கை தலையெடுக்கும்போது சட இயற்கையும், மனித இயற்கை தலையெடுக்கும்போது சட இயற்கையும் விலங்கியற்கையும், தெய்விக இயற்கை தலையெடுக்கும் போது மற்ற மூன்றும் அடங்கிவிடுகின்றன. மனித இயற்கை ஒருவாறு தலையெடுக்கும்போது, மனிதனது ஆற்றலும், அறிவும் அன்பும் மெச்சத்தகுந்தனவாகிறன. யோகமுயற்சியில் மனம் ஒருவழிப்பட்டுக் குவியும்போது, சாதாரண ஆற்றலைப் பெரிதும் விஞ்சிய ஆற்றலுடன் அது திகழ்கின்றது; அப்போது சட இயற்கை விலங்கியற்கை சாதாரண மனித இயற்கை இவைகளின் விதிகட்கு மீறிய செயல்களை அது நிகழ்த்துகின்றது. கல்லைப் பஞ்சுபோலக் கிளம்பச் செய்கிறது, புலியைச் சாந்தமாக்குகிறது, உடலைச் சந்ததமும் இளமையோடிருக்கச் செய்கிறது, அளவிடற்கரிய ஆற்றலையும் அறிவையும் தோற்றுவிக்கிறது,

விடமுண்ட உடலையும் தரிக்கச் செய்கிறது, ஓருயிர் ஒருடலைவிட்டு வேறோர் உடலைப் பற்றி அதை ஆட்டுவிக்கும் திறலைப் பெறச் செய்கிறது. இத்தகைய செயல்கள் பெரும்பாலும் அற்புதங்கள் எனப்படுகின்றன. ஒரு சிறு கல்லை யேந்திய பெருமரம் நீரில் மிதக்கும்போது, கல்லின் இயற்கைக்கு மாறுய செயல் நிகழ்வது உண்மையே ; ஆயினும் பெருமரத்தின் இயற்கைக்கு உட்பட்ட செயலே அது. ஆதலின் இரண்டு இயற்கைகள் கலந்துள்ளவிடத்து, எதன் இயற்கை தலையெடுக்குமோ அதற்கு இயைந்த செயலே காணப்படுகின்றது. ஒரு மத யானையை ஒரு யோகி வசமாக நடத்தும்போது, மத யானையாகிய விலங்கின் இயல்பிற்கு மீறிய செயல் அதனிடத்துக் காணப்படுகின்றது உண்மையே ; ஆயினும் பண்பட்ட, ஒரு நிலையில் நிறுத்தப்பட்ட மனத்தின் இயற்கைக்கு உட்பட்ட செயலே அது. விலங்கின் இயற்கையை வெல்லும் இயற்கை யோகியின் மனத்திற்கு உண்டு. இயற்கை பலவகைப்பட்டதாதலின், அவ்வகைகளும் ஒன்றைவிட இன்னென்று உயர்ந்ததாக அமைந்துள்ளனவாதலின், தாழ்ந்த இயற்கை யொன்றின் விதி மீறப்படும் போது, அது உயர்ந்த இயற்கை யொன்றின் விதிக்கு உட்பட்டதாகின்றது. ஆக, இயற்கைக்குப் பரந்த பொருள் கொள்ளுவோமாயின், அற்புதங்களும், ஒருவழியாகப் பார்க்கும்போது இயற்கைக்கு மீறிய செயல்களாகத் தோன்றிலும், உண்மையில் இயற்கைக்கு உட்பட்ட செயல்களேயாகின்றன.

மற்ற எல்லா இயற்கைகட்கும் மேலாக மனிதனிடத்துத் தெய்விக இயற்கையும் உள்ளதென்று கூறினேம். யோகியர் தமது சங்கற்பத்தாலும், 'யான்' என்னும் உணர்ச்சியோடும், அரும்பெரும் செயல்களை நிகழ்த்தும் போதும், மனித இயற்கையே அவர்களிடம் முற்றுப் பெற்று விஞ்சி நிற்கின்றது. 'யான்' எனும் உணர்ச்சியும் ஒழியும் நிலை மனிதனுக்கு உண்டு ; சிந்தையை அடக்கியே சும்மா இருக்கும் திறம் வரும்போது, மனிதன்

தெய்விக இயற்கைக்கு வசப்படுகிறான்; பரம்பொருளின் சங்கற்பத்துக்கு அவன் ஒரு கருவியாகிறான், தன் சங்கற்பத்தைத் தாண்டி நிற்கின்றான். அந்நிலையில் பரம்பொருளின் அருளால் சட இயற்கையையும் விலங்கின் இயற்கையையும் மனித இயற்கையையும் மீறி நிற்கிறான். மனிதன் இறைவனது கோயிலே என்பார்க்கு, தெய்விக இயற்கையும் மனித இயற்கையும் முடிவில் ஒன்றாகும். இது நிற்க. இத்தெய்விக இயல்பு தலையெடுத்து நிற்கும் மனிதன், யோக முயற்சியைப் பல பிறவிகளிற் பின்பற்றியதன் பயனாகக் கிடைக்கும் பேற்றை ஒருவனிடத்து ஒரு கணத்திற் புகுத்துவான்; ஒரு மனிதனது (அலையும்) மனத்தை ஒரு கணத்தில் சாந்திபெறச் செய்யவும், பரம்பொருட் காட்சியைப் பெறச்செய்யவும், தெய்வ இயல்பு தலையெடுத்த மனிதன் வல்லவனாவான். இதுவே உண்மையான அற்புதம், அற்புதத்தினும் அற்புதம். எவ்வகை இயற்கைக்கும் விதிகளை அமைத்தவன் இறைவனாதலின், இறைவன் தான் நினைத்தபோது விதிகளை மாற்றி அமைக்கவும் வல்லானாவான். மனிதனிடத்து அடங்கிக்கிடக்கும் தெய்விக இயல்பு தலையெடுப்பதே மனித வாழ்க்கையின் மிக உயர்ந்த பயனாகின்றது. அப்பயன் கைகூடப் பெற்றவர்க்கு, இயற்கையின் எல்லாப் பகுதிகளிலும் தெய்விக இயல்பு கரந்துறைவது காணப்படுதலின், அன்னார் எல்லாம் இயற்கையென்றே யிருப்பார்; பொன்றின சவம் வாழ்ந்தாலும் அற்புதம் என்று கருதார். இயற்கை நிகழ்ச்சிகளும் இயற்கை விதிகளை மீறிய நிகழ்ச்சிகளும் எல்லாம் இறைவனது ஆணையால் நடப்பன வாதலின், எல்லாம் அற்புதமென்றும் இருப்பார்.

### அற்புதங்களின் உட்கருத்துக்கள்

அவதார புருடர்களைப் பற்றிக் கூறும்போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்வருமாறு உபதேசிக்கிறார்:—“ஸ்ரீ ராமபிரான், சீதாதேவி, கிருஷ்ணன், ராதை உண்மையாக வாழ்ந்தவர்களல்லவர் என்றும், கற்பனையால் உருவகப் படுத்திக் கூறப்பட்டவர்கள் என்றும், சாஸ்திரங்கள்

வெறும் அத்யாத்மிக அர்த்தத்தை மட்டும் உடையன என்றும் நினைக்காதே. அவர்கள் உன்னைப்போலவே ஊனும் உதிரமும் பெற்று வாழ்ந்தவர்கள். ஆனால் அவர்கள் தெய்விகம் வாய்ந்தவர்களாதலால், அவர்களுடைய வாழ்க்கைகளைச் சரித்திர நிகழ்ச்சிகளாகவும் ஆத்மிய உண்மைகளை விளக்குவனவாகவும் கொள்ளலாம். சமுத்திரமும் அதன் அலைகளும் போல, பிரம்மமும் அவதாரங்களும் ஆகும்.'' இதனின்றும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் இரண்டு. அவையாவன ;—(1) திவ்விய கர்மங்களான, அவதார புருடர்களது செயல்கள் சரித்திர நிகழ்ச்சிகளாயிருப்பதோடு ஞானக் கருத்துகளை விளக்குகின்றன ; (2) சரித்திர நிகழ்ச்சிகள் ஆத்மிய உண்மைகள் எனும் கடலின் மேலெழும் அலைகள் போல்வன. சரித்திர நிகழ்ச்சிகள், காலம் இடம் சந்தர்ப்பம் முதலியவைகளைப் பொறுத்து ஏற்படுவன ; ஆனால் அவைகளால் விளக்கப்படும் ஞானக் கருத்துகளோ எக்காலத்துக்கும் எவ்விடத்துக்கும் எந்நிலைக்கும் பொருந்துவனவாம். சரித்திர நிகழ்ச்சிகள் நிலையற்றன, ஞானக் கருத்துகளோ நிலையுள்ளன. முன்னவை தூலக்காட்சிக்குத் தோன்றுவன ; பின்னவையோ அறிவுக் காட்சிக்கு விளங்குவனவாம். ஸ்ரீ ராமபிரான் கடல் கடந்ததும், ராவணனோடு யுத்தம் புரிந்ததும், சீதாதேவியை மீட்டதும் உலகவாழ்க்கை நிகழ்ச்சிகளே ; ஆனால் அவைகளின் உட்கருத்துகள் ஞானவாழ்க்கைக்குரிய பேருண்மைகளாகின்றன ; இந்த ஞானக் கருத்துக்களை அத்யாத்ம ராமாயணம் விரிவாக எடுத்துரைக்கின்றது. இதுபோன்றே பாரத நிகழ்ச்சிகட்கும் அத்யாத்ம அர்த்தம் உண்டு. குருக்ஷேத்ர யுத்தம் அன்று ஒரு சமயம் கண்ணபிரானது முன்னிலையில் நடந்ததுமட்டுமன்று ; இன்றும் என்றும் அதன் உட்கருத்தான ஞானப்போர் ஒவ்வொருவரது உள்ளத்தும் நிகழ்ந்து கொண்டேயுள்ளது. "ஆத்மானம் இரதினம் வித்தி, சரீரம் ரதமேவச" என்னும் சாஸ்திரம். சீவனுக்குச் சொந்தமான உடலென்னும் தேரிலே தேரோட்டியாக அமர்ந்திருப்பவன் இறைவனே ; உலக வாஞ்சைகளையும் உற்றார்

மீதுள்ள பிரியங்களையும் பொருட்படுத்தாது, அவைகளை யெல்லாம் கொன்று ஞான வெற்றியடையவேண்டும் என்னும் நினைவு ஒன்றே முதலில் ஜீவனைச் சோகத்திற்குள்ளாக்கும். அவன் இதயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைச் சரண்புகுந்தால், அவன் ஞானமொழி பேசித் துயரகற்றி, வெற்றிபெறத் துணைபுரிவான். உலக வாழ்க்கைக்கே ஞானக்கருத்து ஒன்று உண்டு; எவ்வாறெனில், இறைவன் எப்பொருளினிடத்தும் எவ்வுயிரினிடத்தும் தங்கி அனைத்தையும் ஆட்டுவித்து வருதலின், அவனது திவ்விய ஆணையையே எல்லா நிகழ்ச்சிகளும் நிறைவேற்றி வருகின்றன. ஆதலின் உலகத்தை உய்விக்க வந்த பெரியார்களது வாழ்க்கையில் நிகழும் அற்புதச் செயல்கட்கு ஒரு ஞானக்கருத்தும் உள்ளது என்பதை எவரும் மறுக்க வொண்ணாது. அந்த அற்புதச் செயல்களின் உட்கருத்துகளை அறிதலினால் அதிகப்பயனை மக்கள் பெறலாம். அந்நிகழ்ச்சிகளைச் சிலர் கதைகளெனக் கூறி உண்மையோ என்று ஐயமடையினும், அவைகளின் ஞான உட்கருத்துகளின் மேன்மையைப்பற்றி ஒரு சிறிதும் ஐயப்படல் வேண்டா. இந்த உட்கருத்து வாசிப்பவனது வாழ்க்கையைப் பண்படுத்தும்; அறியா ஞான வாழ்க்கையெனும் நெறியில் தன்னந் தனியாகத் துணிந்து செல்லுபவனுக்குப் பெருஞ்சுடர்களாக உதவும். அற்புதங்களில் உண்மையான நம்பிக்கை யுள்ளவனுக்கும், அந்நம்பிக்கையால் மட்டும் பெரும்பயன் வருவதில்லை. மனிதனது மனமும் இயல்பும் நல்ல வழியில் மாற்ற மடைந்தாலன்றோ ஞானமுன்னேற்றம் உண்டாகும்? அதற்கு அந்த அற்புதச் செயல்களின் உட்கருத்துகள் நன்கு விளங்குவது நன்றும். இன்னும் அற்புதச் செயல்கள் இதுவரை உலகிற் பற்பல நாடுகளிலும் பிறந்த உத்தம குரவர்களது வாழ்க்கைகளில் கால தேச நிகழ்ச்சிகட்குத் தக்கவாறு வேறுபட்டிருப்பினும், அவைகளின் உட்கருத்துகளாகிய ஞான வாழ்க்கையைப்பற்றிய உண்மைகள் மாறுபடாமல் ஒன்றுகவேயுள்ளன. இவைகளை அறிதல் அனைவர்க்கும் பயன்தரும். ஆதலின் பெரியார்களது வாழ்க்கைகளி

னுள்ள சில முக்கிய பொதுவான அற்புதச் செயல்களின் உட்கருத்துக்களைச் சற்றே ஆராய்வோம்.

(1) பிறவிக் குருடர்களை இயேசுநாதர் கண்பெறச் செய்தனர். நோயாளரைப் பிணிகள் நீங்கி எழச் செய்தனர். குஷ்டநோயால் வருந்திய ஒருவரை ஸ்ரீ கௌரங்கர் தமது கையால் தீண்டி நோயை ஒழித்தருளினர். சமணர்களது மந்திரங்களினாலும் நீங்காத சுரநோயை ஞானசம்பந்தப் பெருமான் திருநீறு பூசிக் குணப்படுத்தினர். குருடர் கண் பெற்றது உள்விழியாகிய ஞானவிழி திறக்கப் பெறுதற்கு அறிகுறியாகின்றது. தூலக்கண் குருடாயிருக்கும்போது தூல உலகப்பொருள்கள் புலப்படாததுபோல, ஞானக்கண் குருடாயிருக்கும்போது தத்துவங்கள் நேராகப் புலப்படுவதில்லை, "திவ்யம் ததாமி தேசக்ஷு:" என்று கூறிக் கண்ணபிரான் ஞானக்கண்ணை அருச்சுனனுக்கு நல்கியருளினனன்றோ? இயேசு நாதரது அருளால் குருடர் கண் பெற்றமையின் உட்கருத்து, இறைவனது அருளால் ஞானக்கண் திறக்கப்பெற்று, உண்மைப் பொருள்களை உள்ளவாறு நேரே காணலாகும் என்பதேயாம். சுரம், குட்டம் முதலிய பிணிகள் நீங்கப் பெறுதல், பிறவி நோயினின்றும் ஞானத்தாலும் பக்தியாலும் மக்கள் தம்மை விடுவித்துக் கொள்ளலாகும் என்பதை உணர்த்துகிறது. ஆசாரியனைப் 'பிறவிப்பிணி மருத்துவன்' என்பர் நூலார்; இறைவனுக்கு 'வைத்திய நாதர்' என்ற நாமமும் உண்டு. பிறவி நோயை ஸம்ஸார தாபம் என்றும் தாபத்திரயம் என்றும் கூறுவதுண்டு. அந்த நோயை இறைவனது அருளால் தீர்த்துக்கொள்ளலாம் என்பதே அந்த அற்புதச் செயல்களின் உட்கருத்தாகும். (2) விட அரவம் தீண்டி உயிரிழந்தவர்களை மகான்கள் பலமுறையும் உயிர்பெற்று எழச் செய்துள்ளனர். திருமருகல் எனும் தலத்திலே நாகந் தீண்டி யிறந்த மனிதனை ஞான சம்பந்தப் பெருமான் உயிர்பெற்றெழச் செய்தனர். அப்பூதியடிகளின் அருமை மகன் விடநாகந் தீண்டி இறக்க, அவனை நாவுக்

கரசர் அருளால் உயிர்ப்பித்தனர். இத்திவ்யச் செயலும் பிறவி நீங்கி ஞானம் பெறுதலை உட்கருத்தாக உடையதாம். 'ஸம்ஸார போகிஸந்தஷ்ட ஜீவ' (ஸம்சாரம் என்னும் பாம்பால் கடியுண்ட ஜீவன்) என்றார் ஒரு பெரியார். விடய சுகங்களை நுகர்தல் என்பது ஆடுகின்ற பாம்பின் விரித்த படநிழலில் ஒருவன் வெயிலுக்கு ஒதுங்குவது போலாகும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன; எனினும், விடய சுகங்களை இன்பமாகக் கருதி நுகர்வார் பாம்பின் படநிழலில் ஒதுங்கி, உடனே கடியுண்டவராவார், அதாவது அவித்தையில் விளையும் மோஹ நஞ்சிற்குள்ளாகி அறிவிழந்து இறக்கின்றனர். 'புத்திநாசாத் பிரணச்யதி' என்றார் கீதாசாரியார். இந்நிலையிலுள்ளவர் இறைவனருளாலும் குருவின் அருளாலும் மோக மொழியப் பெற்று, அறிவுதெளிந்து ஞான நிலைபெற்றுப் பேரின்பத்தைப் பின்னர்த் துய்க்கின்றனர். (3) இறந்தவரை உயிர்ப்பித்தல் மற்றோர் அதிசயச் செயல். அங்கத்தைப் பூம்பாவை யாக்கிய திருவிளையாடலைச் சம்பந்தப் பெருமான் நிகழ்த்தினார்; சுந்தரர் முதலையுண்ட பாலனை அழைத்தனர். இவ்வாறு இறந்தவரை மீட்டும் உயிர்பெற்றெழச் செய்தல், அஞ்ஞானக் கடலில் மூழ்கி, உயிர் இருந்தும் இறந்தாற்போலஉழலும் மக்கள் மறுபிறப்பாகிய ஞானப் பிறவி பெற்று ஞான வாழ்க்கையைத் தொடங்கக்கூடும் என்பதைக் குறிக்கின்றதாகும். "பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றார் நாயனார்; "அன்று நான் பிறந்திலேன்" என்றார் திருமழிசை யாழ்வார். பிறவிப் பெரும் பயனை அறியாதார் தம்மைப் பிறந்தவராக நினைப்பராக, அப்பயனை இறைவனது அருளால் அறியும் பேறும், அடையும் பேறும் பெற்ற பெரியார் தம்மை ஞானமடையாத காலமெல்லாம் பிறந்ததாக நினையார்; தாம் ஞானம பெற்றதும், புதுப் பிறவி பெற்றதாகவும் அதுவரை இறந்ததாகவும் நினைப்பார். (4) இறந்த மஹான்கள் மீண்டும் உயிர்பெற்றெழுந்ததாகச் சரிதங்கள் கூறுகின்றன. இதுவும் ஓர் அற்புதச் செயலே. இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்த

பின், அவர் உயிர் துறந்தபின் மீட்டும் உயிர்பெற்று எழுந்து சில சீடர்க்குத் திவ்விய தரிசனம் அளித்தாகக் கிறிஸ்தவ மதநூல் கூறுகின்றது. இம்மாதிரியே, மஹான் களாகி உலகத்தை உய்விக்க வந்த பெரியோர்களுடைய சரித்திரங்களிலும், அவர்கள் உலக வாழ்வை நீத்த பின்னும் பிறர் கண்டதாகக் கூறப்படுகின்றது. இந்த அதிசயச் செயல்களின் உட்கருத்து நன்கு அறிதற்குரியதாகும். இயேசுநாதர் பிழைத்தெழுந்தார் என்பதும், அவர் இன்னும் வாழ்கிறார் என்பதும், அவர் தூல உடலோடு வாழ்வதைக் குறிப்பனவாகா; அவரது உடலே மீண்டும் உயிர்பெற்று எழுந்தது என்பது பொருளன்று; அவர் உயிரோடு இன்றும் என்றும் வாழ்வார் என்பது உண்மையே; ஆனால் அவ்வாழ்க்கை அவரது ஞான வாழ்க்கையை, (ஆன்ம வாழ்க்கையைக்) குறிப்பதே யல்லாது, உடல் வாழ்க்கையைக் குறிப்பதன்று. உலக மக்களைக் கடைத்தேற்றும் குறிப்போடு உலகிற் பிறக்கும் அத்தகைய பெரியார், உடல் வாழ்க்கையை ஒழித்தபின், அவ்வுடலையே உயிர்ப்பித்து வாழ நினையாது, உடலை எறிந்து ஞான உலகில் ஞான தேகத்தில் வாழ்வர். இதுவே அவர்கள் உயிர்பெற்றெழுவதில் அடங்கிய உட்கருத்தாம். இக்கருத்தை அறிபவர் இன்றும் அப் பெரியார்களைக் காணவும், அவர்களோடு பேசவும், அவர்களிடமிருந்து அருளைப் பெறவும் இயலும். அவர்கள் அழியும் உடலையும் உலகத்தையும் விட்டு, அழியா உலகில் அழியா உருவொடு வாழ்கின்றனர் என்பதே பிற்காலத்தார்க்கும் பயன்படும் உண்மையான ஞானக் கருத்தாகும். இக் கருத்தின்படி இன்றும் இராமர், கிருஷ்ணர், புத்தர், மகம்மது, ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதலியவர் அடியார்கட்காக அருள்வடிவம் தரித்து வாழ்கின்றனர் என்பதாகும். (5) கண்ணபிரான் கோபியரோடு நிகழ்த்திய அரும்பெரும் திருவிளையாடலாகிய இராசலீலை யென்பதும், கோபியரது கண்ணையும் செவியையும் உள்ளத்தையும் உயிரையும் கண்ணன் தமது குழலிசையால் இழுத்தனர் என்பதும் உட்கருத்துப் பொதிந்தவைகளேயாகும். கண்ணன் ஆயிரக்

கணக்கான கோபச்சிறுமியர் ஒவ்வொருவரது பக்கத்தும் நின்று கைகோத்து இன்பக்கூத்தாடினர் என்பதில் அடங்கிய ஞானக் கருத்தாவது, கோபிமார் ஒவ்வொருவரும் கண்ணனது இருப்பைப் பக்கத்தில் உணர்ந்தனர் என்பதே. இன்றும் கோபிமாரைப்போல் தூய கரைபுரண்ட பிரேமை எழப் பெறுவார் எவரும் கண்ணன் தம்மோடு கைகோத்து இன்பக் கூத்தாடப் பெறுவார் என்பது உண்மையேயாம். அதுபோல் கண்ணனது வேணுகானம் இன்றும் உலகில் நின்று நிலவுகின்றது; அது உள்ளத்தையும் உயிரையும் உருக்கும் தெய்விக இயல்பு வாய்ந்தது; அவன்மீது ஆர்வம் கொண்டார் அவனது தெய்விக அன்பிற்கு வசப்படுவர், உலகத்தை முழுதும் மறப்பர் என்பதே அதனின்றும் அறியக்கிடக்கின்றது. இந்த அனுபவம் இக்காலத்தும் இனி எக்காலத்தும் தகுதியுடையாரனைவராலும் அடைதற்குரிய தொன்றேயாகும். ஆதலின் இத்தகைய அற்புதச் செயல்களை வாசிப்போரும் சிந்திப்போரும் உட்கருத்தை அறிவதனால், தமது வாழ்க்கையில் அந்த ஞான அனுபவத்தைப் பெறும் ஆசையெழப் பெற்று, முடிவில் உய்வடைகின்றனர்.

(6) ஞானசம்பந்தப் பெருமானாகிய குழந்தை 'அம்மே' 'அப்பா' என்று அழுதபோது, பரமசிவனும் பார்வதியம்மையும் கண்முன் தோன்றினர் என்றும், நம்மனைவரையும் ஆளும் அம்மையார் அவர்க்கு ஞானப்பாலூட்டினர் என்றும் சரித்திரம் கூறுகின்றது. இந்த அற்புதச் செயலில் அடங்கிய ஞானக் கருத்தும் ஒன்று உள்ளது. அது யாதெனில், இன்றும் நாம் குழந்தைத்தன்மையோடு மனமுருகி 'அம்மே' 'அப்பா' என்று அழுவோமாயின், அம்பிகை நமக்கும் ஞானப்பால் ஊட்டுவார் என்பதாம். "வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்றார் மணிவாசகப் பெருமான். தாயைப் பிரிந்த சேய்போலவும் தாய்ப்பசுவைப் பிரிந்த கன்றெனவும், ஊனுருகி உளமுருகி உணர்வுமுருகி அம்பிகையை அழைத்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவியம்மையின் தெரிசனம் கிடைக்கப்பெற்றார். பேரின்ப அனுபூதி யென்னும் ஞானப்பாலையும்

உண்டு மகிழ்ந்தார். அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பது இந்த ஞானக்கருத்தின்படி பேருண்மையேயாகும். (7) அப்பர் சுவாமிகளைக் கற்றூணில் பூட்டிக் கடலில் எறிந்தார்; சுவாமிகள் தூணையும் தூக்கிக்கொண்டு நீரில் மிதந்தார். இதில் அடங்கியுள்ள ஞானக்கருத்தாவது, பிறவிக் கடலில் பலவித பந்தங்கள் நம்மை அமிழ்த்தினும், இறைவனுடைய நாம மகிமையினால், அதை ஓதிக்கொண்டே பிறவிக் கடலின்மேல் மிதந்துகொண்டிருக்க இயலும். ஆசாபாசங்களினின்றும் தப்பித்துக்கொள்ளுதற்கு இறைவனது திரு நாமமே போதும் என்னும் உண்மை இந்த அற்புதத்தால் வெளியிடப்படுகிறது. "முதல்வ நின் நாமம் கற்ற, ஆவலிப்பு உடைமை கண்டாய் அரங்கமா நகருளானே" என்று கூறினார் தொண்டரடிப்பொடி யாழ்வார்; இன்னும், நாவுக்கரசு சுவாமிகளை நீற்றறையில் வைத்தபோதும், அவர் 'ஈசன் எந்தை இணையடி நிழல் குளிர்ந்துள்ளது' என்றே கூறினார். இந்த அற்புதச் செயலில் உள்ள நீற்றறை உலக வாழ்க்கையிற் காமக் குரோதங்களால் மக்கள் சாதாரணமாகப் படக்கூடிய வெந்துயரத்தைக் குறிக்கின்றது. இவையிரண்டும்—காமமும் குரோதமும்—தீபோன்றன; சிதை இறந்தபின் உடலை எரிக்க உதவும்; ஆனால் காமமும் குரோதமுமாகிய வெங்கனலோ உயிருடன் இருப்பவரை எரித்துவிடும் தன்மையது. ஒரு கோபிகை கண்ணனைப் பிரிந்த விரகதாபத்தால் தனது முத்து மாலையும் நீறிச் சுண்ணும்பாயிற்று என்றனள்; ஆதலின் மக்களது பாவங்கட்கெல்லாம் மூல காரணங்களாகிய காமம் குரோதம் என்பன நீற்றறையாகின்றன. அந்த நீற்றறையிலிருக்கும்போதும் இறைவனைப்பற்றிய சிந்தனையும் அவன் மீதுள்ள நம்பிக்கையும் அப்பெரு நெருப்புக்களையும் குளிர்விக்கும் தன்மை வாய்ந்தனவாகின்றன. "வாசுதேவ தருச் சாயா நாதிசீதா நகர்மதா" (வாசுதேவன் என்னும் மரத்தின் நிழல் அதிகக் குளிர்ச்சியும் அதிக வெம்மையுமின்றி நடுநிலையிலுள்ளதாய் இன்பமாய் இருக்கும்) என்

பர் அடியார். இதுவே இந்நீற்றறை யற்புதத்தின் உட்கருத்தாகின்றது.

இதுவரை அற்புதச் செயல்களே கூறப்பட்டன; பக்தர்களது வாழ்க்கையில் அற்புதச் செயல்கள் இறைவனது திவ்விய சக்தியினால் நிகழ்வது போன்றே, அற்புதக் காட்சிகளும் தோன்றுவதுண்டு. இவ்விரு வகையான அற்புதங்களையும் பற்றிய ஓர் உண்மையை இங்கு சாதகர்க்கு எடுத்துரைத்தல் அவசியமாகும். பக்தி நெறியிற் செல்வார் அனைவர்க்கும் இவை உண்டாவனவல்ல; அவை உயர்ந்த மெய்ப் பொருட் காட்சிகளையும் அனுபவங்களையும் பெற விரும்புவார்க்கு இன்றியமையாதனவும் அல்ல. இடை வழியிலே தோன்றும் இக்காட்சிகளும் செயல்களும் இல்லாமலே உயர்ந்த மெய்ப்பொருட் காட்சியை அடைவோரும் உளர். அவை ஒருவாறு ஞான நெறியில் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறிக்கும் மைல் கற்களாகலாம்; எனினும் அவை வாழ்க்கையின் நோக்கமென்றோ, பரம் பொருட் காட்சிப் பேற்றுக்காக முயல்வார்க்கு அவை முடிவான நிலைகளென்றோ கூறல் இயலாது. திவ்விய சக்திகள் சாதகனை மேலும் முன்னேறும் அவாவைத் தூண்டாவிடில் அவை அவனுக்கு இடையூறுகளுமாகும். சாதகர்கள், அத்தகைய சக்திகளைப் பெறாமையினாலே ஞான வாழ்க்கையில் முன்னேறவில்லை யென்று கூறுதலும் பிழையாகும். எவை சாதகனை மேலும் மேலும் தூயோனாக்குமோ, மெல்ல எரியும் ஞானக் கனலைக் கொழுந்துவிட் டெரியச் செய்யுமோ, வைராக்யத்தை மிகச் செய்யுமோ, மெய்ப் பொருட் காட்சியிலுள்ள அவாவைத் தீவிரமாக்குமோ, அவையே உண்மையான ஞானத் துணைகளாகும்; ஞான முன்னேற்றத்திற்கு நிலையான அறிகுறிகளுமாகும்; இவைகளோடு தெய்வக்காட்சிகளும் சக்திகளும் உண்டாயினும், உண்டாகாவிடினும் சரியே. ஸ்ரீ ராமகிருஷ்ணதேவரை அணுகிய ஒரு சீடர் 'எவ்வளவோ தியானம் பழகியும் முயன்றும் ஞானக்காட்சியொன்றும் பெறவில்லையே' என்று வருந்தியபோது, அப்

பெரியார், "தியானவேளையில் ஒன்றிரண்டு காட்சிகளைப் பெறுவது போதுமோ? அது அவ்வளவு மேலானது மாமோ? உண்மையான துறவும் நம்பிக்கையும், அக் காட்சிகளைப் பார்க்கப் பன்மடங்கு ஞானத்திற்குப் பெருந் துணையாகும்" என்று பதில் மொழிந்தார்.

ஒரு வார்த்தையோடு முடிப்போம். இறைவனது திவ்விய சக்திக்கோ எல்லை கிடையாது; ஆதலின் அவனது அருளால் எவ்விதத் திவ்விய சக்திகளையும் தனது அடியார்கள்மூலமாக வெளிக் காட்டுவான். இக்காரணத்தால் பெரியார்களுடைய வாழ்க்கையிற் கூறப்படும் நிகழ்ச்சிகள் யாவும் சரித்திர உண்மைகளும், ஞான உட்கருத்துக்களை விளக்குவனவுமாகின்றன. அற்புதங்களைச் சரித்திர உண்மைகளாக நம்பமாட்டாதாரும் அச்செயல்களால் விளக்கப்படும் ஞானக்கருத்துக்களை வாழ்க்கையிற் பயன்படுத்துவாராயின், பெரும்பயனை அடைவர் என்பதில் ஐயமில்லை.

# II. பல சமயங்கள் போதிக்கும் பக்திநெறி

## (1) சைவ சித்தாந்தம்

மாணிக்கவாசகப் பெருமான் சிவபெருமானைப்பற்றிக் கூறும்போது, 'பந்தமும் வீடும் படைப்போன் காண்க' என்றருளினார். ஆன்மாக்களுக்குப் பந்த நிலையையும் முத்திநிலையையும் உண்டுபண்ணுபவன் சிவனே என்பது அதன் கருத்து. அறிவும் செயலும் இயல்பாகவே அமைந்த ஆன்மாக்கள் அநாதியான கேவல நிலையில் மும்மல சம்பந்தத்தால் அறிவும் மாண்டு செயலும் மாண்டு கிடந்தன. (மும்மலங்களாவன: ஆணவம் கன்மம் மாயை என்பன). அப்போது ஆன்மாக்களை எடுத்து வெளிப்படுத்தி, அவைகளின் இயல்பைப் பிரகாசிக்கும்

படிச் செய்யச் சிவபெருமானே முன்வந்தனர். மாயா மலத்தை உடலாகவும் கரணங்களாகவும் உலகங்களாக வும் காரியப்படுத்தி, ஆன்மாக்களை அவற்றுட் புகுத்தி ஞர். கன்ம மலத்தை நல்வினை தீவினைகளாகவும் புண் ணிய பாவங்களாகவும் சுகதுக்கங்களாகவும் காரியப் படுத்தி ஆன்மாக்களை முற்கூறியவற்றை அநுபவிக்கும் படிச் செய்தார். கன்ம பலத்தை முனைந்துநின்று தள ராது அனுபவித்தற்காக, ஆணவ மலத்தைத் தற்போத வழியில் உலவச் செய்தார்; அதாவது 'நான்' என்ற எண்ணம் எழும்படிச் செய்தார். இவ்வாறு நிற்கும் நிலை ஆன்மாக்களின் (கட்டுப்பட்ட) பந்த நிலையாகும். இந் நிலையில் வரவர ஆன்மாக்களின் ஆணவ மலத்தைத் தள ரச்செய்து, நாளடைவில் மும்மல பந்தங்களையும் போக் கிச் சிவமேயாய் நின்றிடச் செய்வானும் சிவனேயாவான். இந்நிலை முத்திநிலை எனப்படும். ஆக, ஆன்மாக்கள் பந்த நிலையிலிருந்து முத்திநிலைக்கு ஏறுவது சிவனது அருட் செயலாலேயாகும்; தமது செயலாலன்று. இதன் காரண மாவது, ஆன்மாக்கள் தம் இயல்பினுலேயே சுதந்திர மற்றவர்கள், சிற்றறிவினர்கள், பிரகாசமற்றவர்கள், மும் மல வசப்பட்டு உழலுபவர்கள். இவர்கள் மும்மலங்களா கிய பாசங்கள் நீங்கப்பெறுவதற்குப் பதியாகிய சிவபெரு மானது அருளே பெருந்துணையாகும்.

சிவபெருமானது அருளைப் பெறுதற்கு ஆன்மா முதன் முதலாகத் தனது இயல்பையும் தனக்கும் ஆண்டவ னுக்கும் உள்ள சம்பந்தத்தையும் அறிந்துகொள்ளல் வேண்டும். நம் உடலில் இருப்பது உயிர், அவ்வுயிரினுள் இருப்பது சிவம். நம்முயிர்க்கும் உடலுக்கும் உள்ள சம் பந்தமே போன்றது, சிவபெருமானுக்கும் நம்முயிராகிய ஆன்மாவுக்கும் உள்ள சம்பந்தம். உடம்பிற்கு இட்ட பெயரால் அழைக்கும்போது உயிர் ஏன் என்கிறது; அதனுல், உயிர் உடலோடு கலந்து வேறுபாடின்றி நிற்கின் றது என்பது விளங்குகின்றது. இதுபோல், இறைவனும் உயிர்களிடத்துப் பேதமின்றிக் கலந்து நிற்கிருன். ஆயி

னும், உயிர் உடலாகாது, உடல் உயிராகாது; அதுபோல் உயிரிடத்து இறைவன் கலந்திருப்பினும், சிவன் ஆன்மா வாகான், ஆன்மா சிவனாகான். எவ்வாறெனில், சிவன் உயிராகவும் உயிரின் வேறாகவும் நிற்பான்; ஆனால் ஆன்மா சிவனாயும் சிவனின் வேறாயும் நிற்கமாட்டான். இவ்வாறு சிவனது இயல்பையும் உயிரினது இயல்பையும் வெவ்வேறாக அறிதல் வேண்டும். உயிர் இல்லாதபோது உடலிற்கு இருப்பும் செயலும் இல்லை. இதுபோல் ஆன்மாவின் இருப்பிற்கும் செயலுக்கும் அதற்கு உயிராயுள்ள சிவனே ஆதாரம் ஆவான். இன்னொரு உவமானமும் இதை நன்கு விளக்கும். கண்ணில் கண்ணொளி (பார்க்கும் திறமை) இருந்தாலும், சூரியனது ஒளியின்றிக் கண் ஒரு பொருளைக் காணமாட்டாது, சூரியனது ஒளி கண்ணொளியோடு கலக்கும் போதே ஒரு பொருளைக் கண் காணுகின்றது; அதுபோல், ஆன்ம அறிவோடு சிவன் கலந்து நின்றே ஆன்ம அறிவைப் பிரகாசிக்கச் செய்கிறான். அன்றியும், கண்ணொளி சூரியனொளியோடு கலந்துள்ளபோதும், கண் தானாகவே ஒருபொருளை அறியும் தன்மையுடையதன்று; ஆன்ம அறிவு கண்ணொளியில் உடனிருந்து அறியச் செய்யும்போதே கண் ஒரு பொருளை அறிகின்றது. அதுபோல், ஆன்ம அறிவைச் சிவன் பிரகாசிக்கச் செய்யினும், அந்த ஆன்மா ஒன்றைத் தானே அறியும் திறமையுடையவனாகான்; ஆன்ம போதத்தில் நின்மலபோத சொரூபனாகிய சிவன் உடனாய் ஒன்றித்து நின்று எப்பொருளையும் அறியச் செய்கிறான். ஓர் ஆன்மாவின் அறிவைப்போன்று அதன் இச்சையும் கிரியையும் சிவனது இச்சை கிரியைகளைச் சார்ந்தே உண்டாகின்றன. இந்த உண்மையை அனுபவமாக அறிவதே முத்திநெறியாகும். அந்த நெறியைப் பின்பற்றுவார்க்குப் பழவினைகள் ஒழியும், சித்தமலம் அற்றுவிடும், அவர்கள் சிவமயமாகிச் சிவானந்தப் பேற்றை அடைவார்கள்.

பெறுதற்கரிய இப்பேற்றைப் பக்திநெறியால் அடையலாகும். சிவபெருமான் ஆன்மாவொடு கலந்

திருத்தல் அவனருளாலன்றி வேறில்லை. ஆகவே அவனது அருளை வியந்து அதனையே நாடி இயன்றவாறு அவனுக்கென்றே தொண்டு வகைகளை அன்போடும் வைராக்கியத்தோடும் அயராது செய்வதே பக்தி நெறி எனப்படும். அகங்காரம் போனாலன்றிச் சிவன்பால் அன்பு உண்டாகாது. அதுபோவதற்குச் சாதனங்களாவன :—சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கும். அவற்றுள் சரியையாவது: சிவபெருமானது கோயில் தலத்தை அலகிடல், திருமெழுக்குச் சாத்தல், வழிபாட்டுக்காகப் பூக்கொய்தல், பூமாலை கட்டுதல், புகழ்ந்து பாடல், திருவிளக்கிடல், திருநந்தவனம் செய்தல் முதலிய தொழில்களை அன்போடு செய்தலாகும். கிரியையாவது : வாசனைத்திரவியம், தூபம் தீபம் தீர்த்தம் புஷ்பம் பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் ஆகிய பூஜைக்குரிய பொருள்களைக்கொண்டு பஞ்ச சுத்தி செய்து, உட்பூஜை புறப்பூஜை அக்கினி கார்யம் முதலியவற்றை விதிப்படிச் செய்தலாம். யோகமாவது, முக்குணங்களையும் ஐம்புலன்களையும் அடக்கி, மூலவாயுவை எழுப்புகின்ற இடை பிங்கலை என்னும் நாடிகளை அடைத்துச் சுழுமுனை வழியைத் திறந்து, நடனச் சிலம்போசையுடன் சென்று, பஞ்சாக்ஷரம் ஏகாக்ஷரமாம் தன்மை கண்டு, அருளைத் தரும் பரவெளியிலே புகுந்து அழுந்தியிருத்தலேயாம். ஞானமாவது: பல நூல்களையும் ஆராய்ந்து, பதி பசு பாசம் என்னும் மூன்று தத்துவங்களின் இலக்கணங்களைத் தெளிந்து, பண்டை வினையின் பயனாக வந்த சிற்றறிவு முற்றும் நீங்கி, பேரறிவாகிய சிவஞானம் விரிந்து தோன்றும் மனதைப் பெறுதலேயாம். சரியை முதலிய நான்கும் நான்கு படிகளாகும் ; அவை முறையே அரும்பு மலர் காய் கனிபோலாகும் என்பர் தாயுமானவர். அன்போடு சரியை முதலியவற்றைச் செய்துவரும்போது, சிவபெருமானுக்கும் நமக்கும் ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்ளுதல் அன்பைப் பெரிதும் வளர்க்கும். இம்முறைப்படி, சரியை முதலிய நான்கு படிகளும், தாசமார்க்கம் ஸத்புத்ர மார்க்கம் ஸஹமார்க்கம் ஸன்மார்க்கம் எனப்

படும். தாசமார்க்கமாவது, இறைவனை ஆண்டானாகவும் நம்மை அடிமையாகவும் கருதி வழிபடுதல்; இதை உலகிற்கு எடுத்துக்காட்டியவர் திருநாவுக்கரசர். ஸத்புத்ர மார்க்கமாவது, இறைவனைத் தந்தையாகவும் நம்மைக் குழந்தையாகவும் நினைந்து வழிபடுதல்; இதை உலகில் நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தர். ஸஹமார்க்கமாவது இறைவனை நமக்குத் தோழனாகக் கருதி வழிபடுதல்; இதை விளக்கியவர் சுந்தரர். ஸன்மார்க்கமாவது, இறைவனை ஆன்மாவுக்கு உயிராய் நினைந்து வழிபடுதல்; இந்த ஞான மார்க்கத்தில் நின்று அதனை உலகிற்குப் போதித்தவர் மாணிக்கவாசகர். இந்நான்கு நெறிகளில் ஒன்றை மட்டும் பின்பற்றினாலும் முடிவில் உயர்ந்த ஞானம் உதிக்கப்பெற்றுச் சிவானந்தப் பேறும் முத்தியும் பெறலாகும்.

தனு கரண புவனங்களைப் படைத்தளிக்கப்பெறும் ஆன்மாக்கள் சனனமரணங்கட்கு உட்படும்போது, அவர்களைச் சிவபெருமான் சிறிது சிறிதாகப் பக்குவப்படுத்தி உயர்த்தியருளுகிறான். அவர்கட்கு அகங்கார மமகாரங்கள் குறைந்து வரும்பொருட்டு முதன்முதலாக அவர்களது இன்ப துன்பங்களைப் பெருக்கி, அவ்விரண்டினுள்ளும் மாறிமாறி உழலும்படிச் செய்கிறான். இதனால் ஆன்மாக்கள் நாளடைவில் சலிப்படைந்து, சுகம் வரும்போது பெரிதும் மகிழ்ச்சியடையாமலும் துக்கம் வரும்போது மனம் துடியாமலும் வாழ்ந்துவருகிறார்கள். சுகத்தில் விருப்பும் துக்கத்தில் வெறுப்பும் வரவரக் குறைய முடிவில் சுகதுக்கங்களைச் சமமாகப் பாவித்தலாகிய நிலை அவர்கட்கு வருகின்றது; இது இருவினையொப்பு என்னும் நிலையாகும். இதன்பின் இவ்வின்ப துன்பங்கள் வந்த வழியை நாடும்படி ஆன்மாக்களைச் செய்து, அவ்வாறு நாடும்போது, உள்ளம் முதலியவைகள் நல்வினை தீவினைகளாகிய கன்ம வசப்பட்டு உழன்றமையே காரணம் என்ற உணர்ச்சியைப் பெருமான் உண்டாக்குகின்றனன். அவ்வுணர்ச்சி வந்தபின், கன்ம மலத்தின் வழியே மனம் முதலியவைகளைச் செல்லவிடாது, இன்ப துன்பங்களை

மாற்றும் நல்ல கன்மங்கள் எவைகளோ அவைகளைச் செய்யவேண்டும் என்ற அவாவை உண்டாக்குவான். இது உண்டாதலே மலபரிபாகம் என்னும் நிலையாகும். அதன் பின் சிவபெருமான் தானே அவர்கட்குக் குருவாய் வந்து தீக்ஷை யருளிச் சிவஞானம் உணர்த்துவான். அப்போது பக்குவமடைந்த ஆன்மாவிலே திருவருள் பதிகின்றது; இது சத்திநிபாதம் எனப்படும்.

இவ்வாறு திருவருள் பதியப் பெற்றார்க்கு எடுத்துரைக்கப்படும் உண்மைகள் ஐந்தாகும். (1) சித்வடிவமாகிய சிவத்தை யடைதற்குரிய சாதனங்கள். இவை சரியை கிரியை யோகங்களாம். (2) இச்சாதனங்களால் ஞானத்தினை உணரும் முறை. ஞானமாவது, இந்திரியங்கள் வேறு ஆன்மா வேறு என்று அறியப் பெற்று, அவ்விந்திரியங்களின் பற்றற்று அவ்வுண்மையை உணர்தல். (3) ஞானம் உணர்ந்ததன் பயனாக ஆன்ம சுத்தி பண்ணல். அதாவது, சிவபெருமான் நமது உள்ளம் முதலிய பாச அறிவானும் அறியப் பட்டவனல்லன், அப்பாச அறிவுட் பட்ட பசுவாகிய நமது அறிவானும் அறியப் பட்டவனல்லன், அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்பவன் என்று உணர்தல்; பின் அந்த ஞானத்தினால் பாச அறிவோடும் சாராது, பசு அறிவாகிய தன்னறிவினும் நில்லாது, பதியறிவை நாடி நிற்றல். அப்போது ஆசிரியன் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசிக்க, அதன் பொருளைச் சிந்தித்து அதன் பயனாகத் தன்னைச் சுத்தமாக்கிக் கொள்ளல். (4) ஆன்ம சுத்திக்குப் பின் பரமேச்வரனது ஸ்ரீ பாதங்களை அணைதல். அதாவது, ஸ்ரீ பஞ்சாக்ஷரச் சிந்தனையால், நாம் சிவன் வசமாயுள்ளோம், நமது செயல் யாவும் அவனருளின் வழி நின்று செய்யும் செயல்களே என்பதை உணர்ந்து நாம் இறைவனோடு ஏகனாகி நிற்க முயலுவோம். அப்போது, மனம் முதலியவைகள் பாச இன்பங்களைப் பழக்கத்தின் பயனாக விரும்பிச் செல்லா திருத்தற்காக, அவைகளை இறைவனது பணியில் ஈடுபட்டிருக்கச் செய்தலாம். (5) பதியைக் கண்டு வழிபடு

தல். அதாவது நமது இச்சை ஞானக்கிரியைகள் இறைவன் வழிப்பட்டு, அவனிடத்தும் அவனடியாரிடத்தும் இவனது வடிவத்தினிடத்தும் செல்லுமாறு செய்தலாம். அவ்வாறு செய்யப் பெறின் நமது உள்ளம் முதலிய அனைத்தும் ஒன்ற உருக வந்து, அவன் நம்முடனும் நாம் அவனுடனும் கலந்து பேரின்பத்தில் மூழ்கி வாழலாம்.

உள்ளம் உருகுதலைச் செய்தற்கு நல்ல சிவயோகம் வேண்டும். சிவயோகத்தை முறையாகப் பழகுவதனால், காண்பான் காட்சி பொருள் என்னும் முப்படியும் கடந்த நிலை வரும்; கரணச் சேட்டையும் தற்போதச் சேட்டையும் ஒயும்; அப்போது ஆன்மாவின் காட்சி உண்டாகும். பின்னர், நம் ஆன்மாவையே உடம்பாகக்கொண்டு சிவபெருமான் வாழ்வது உணரப்படும்; அதாவது, நம் அறிவிற்குள் அறிவாய் விளங்கும் பேரறிவே சிவன் என்ற உணர்ச்சி உண்டாகும். நம் ஆன்மாவுக்கு அவன் எஜமானனுயுள்ள நிலைமையை அறிதலும், அவனை வணங்கும் தன்மை உண்டாகும்; அப்போது நம்மிடத்து ஊற்றெனப் பெருகும் அன்பால் அவனை நீராட்டுதலும், அந்த அன்பின் முதிர்ச்சியால் ஆனந்த வடிவாகிய நம்மை மலராக்கி, அம்மலரை அம் மலரில் மணம்போல உறையும் சிவபெருமானுக்கு இட்டுச் செய்யும் பூசை நடைபெறும். இதனால் தற்போதம் அடங்கிவிட, அவ்விடத்தே திருச் சிலம்போசை கேட்கும். அந்த ஓசை வழியே செல்ல, சிதாகாசத்திலே நடராஜப்பெருமானது தரிசனம் உண்டாகும். அவனைக் கண்டு தொழுது அவனது அருளை மறவாதிருக்கவே, அந்த இறைவன் அடியாரது உள்ளத்திற் புகுந்து அதனை உருகச் செய்து, ஆன்மாவையும் கரணங்களையும் சிவமாக்கி யருளுவான். அப்போது சிவாநந்த அமுதமே சதா பெருகிக்கொண்டிருக்கும். இந்நிலையில் உள்ள அடியார்களிடத்துத் தமக்கென ஒரு செயலும் நிகழாது; எல்லாம் சிவச் செயல்களேயாகும். அவர்கள் உடம்புடையராயினும், அவ்வுடம்பால் அனுபவிக்கும் இன்பமும் பேரின்பமாகும். அவர் சென்ற நெறியெல்லாம் செந் நெறியாகும்.

அவர் செய்தனவெல்லாம் அவச் செயலாகாது தவச் செயலாகும். இச்சிவஞானிகளின் அன்பின் பெருமையை உலகத்தார் அறியுமாறு, இறைவன் தனது அருட்செயல்களையெல்லாம் அவர்கள் வாயிலாகவே அவர்கள் செய்தனவாகவே ஆக்கி யருள்வான். அன்பே சிவமாகும்; மெய்யன்பு மூலமாகத் தற்போதம் இவ்வாறு முற்றும் ஒழிந்து சிவபோதமே எப்பொழுதும் குடிகொண்டிருக்கப் பெறும் நிலையே முத்தி நிலையாகும்.

## (2) ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தம்

'நான்' என்று எழும் அஹங்காரத்தை ஒழித்தலே முக்திக்குரிய நெறியாகும். என்றால் ஒன்றும் இயலாது. இறைவனுடைய உதவியாலன்றி ஓர் அணுவும் அசையாது. அவனே என்னை யாட்டுவிப்பவன், நான் அவனது கருவி —இவ்வாறு கருதி வரவர 'நான்' என்பதைத் தேய்த்துக் கொண்டே போனால், முடிவில் பேரின்ப நிலையை அடையலாம். நமது சக்தியின்மையை உணர்ந்து இறைவனைச் சரணமாகப் பற்றும் நெறி எளிய நெறியாகும். எல்லாம் இறைவனது செயல், நாம் இறைவனுக்கு அடிமையாய் அவன் வசப்பட்டு நிற்கும் இயல்புடையோம் என்பதை உணர்ந்து, அவனையே தஞ்சமாகப்பற்றி அவனது அருளால் உய்வடைதலே பிரபத்தி நெறியெனப்படும்.

இறைவனிடம் பிரபத்தி பண்ணுவோர் மூவகைப் படுவர். சடத்தன்மையைப் பற்றிவரும் அறியாமை அசக்தி மிஞ்சியவராய், இறைவனைப் பெறுதற்குரிய சாதனங்களைப் பழக முடியாதவராய், வேறு கதியற்றவராய் இறைவனிடமே எல்லாப் பாரத்தையும் ஒப்புவிப்பவர் ஒருவகையினர், இவர்கள் சாதாரணமக்கள். ஆத்மாவின் உண்மை இயல்பை (இறைவனுக்கு வசமாயிருக்கும் தன்மையை) உணர்ந்து, அந்த ஞான முதிர்ச்சியாலே, சாதனம் பண்ணும் திறமை பெற்றிருந்தும் அது சொரூபத்துக்கு ஒவ்வாதது என்னும் உணர்ச்சியால் வேறு கதி

யற்றவராய், இறைவனிடம் தம்மை ஒப்புவிப்பவர் இரண்டாவது வகையினர்; இவ்வாறு செய்பவர், ஞானம் மிகுந்த ஆசாரியர்கள். இயல்பாகவே பகவானை நினைத்ததும் பேரன்பு தலையெடுக்கப் பெறுபவர்கள் அந்தப் பிரேமையின் மிகுதியால் மனம் தளர்ந்தவராய், அக்காரணத்தால் சாதனம் பண்ணமாட்டாது வேறு வழியின்றி இறைவனையே தஞ்சமாகப் பற்றிக்கிடப்பார் மூன்றாவது வகையினர்; இவ்வாறு செய்வோர் ஆழ்வார்கள் முதலியோர். 'எனது மாயை கடத்தற் கரியது, என்னைச் சரணமாக அடைபவர்க்கே அதைக் கடக்க இயலும்'' என்றும், "எல்லா அறங்களையும் விட்டு என்னையே சரணாகப் பற்றினால், நான் உன்னை விடுவிப்பேன்'' என்றும் கண்ண பிரான் கூறுகிறார். "ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்'' என்றார் நம்மாழ்வார். இவ்வாறு இறைவனையே உற்ற தஞ்சமாக நினைந்து, முழு நம்பிக்கை எழப்பெறுவார்க்கு இதனினும் வேறு நெறி வேண்டாததாகும்; ஏனெனில் அவ்வாறு இறைவனைப் பற்றும் அடியார்க்கு இறைவனே தனது அருளால் அஞ்ஞானத்தை ஒழித்துப் பக்தியை அளித்து, அவர்களை உய்யும்படிச் செய்கிறான். 'எல்லாம் அவனது, எல்லாம் அவன் செயல்' என்ற உணர்ச்சி குடிகொள்ளும்போது, அகங்காரம் ஒழிகின்றது இறைவனுடைய போதம் தலையெடுக்கின்றது. ஜீவபோதம் நீங்கி ஈசுவரபோதமே நிலைத்தலினும் உயர்ந்த நிலையாது? இங்கு ஞானமும் பக்தியும் ஒன்றுகூடுகின்றன. இறைவனே எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் உள்ளும் புறமும் இருப்பதைப் பிரபன்னன் (பிரபத்தியைப் பின்பற்றுபவன்) காண்கிறான்.

பக்தி ஞானம் யோகம் கர்மம் முதலான நெறிகளைக் காட்டிலும் மேம்பட்ட ஒரு தன்மை இப்பிரபத்திக்கு உண்டு. அது யாதெனில், மற்ற நெறிகளிற் செல்வார் பழகும் சாதனங்கள் யாவும் 'நான் செய்கிறேன்' என்னும் அஹங்காரம் இல்லாமல் பழகக் கூடியனவல்ல;

ஆனால் இப்பிரபத்தியிலோ 'நான்' என்பதை ஒழிக்க முயலுதலே ஆதிமுதல் அந்தம்வரை நிகழும் செயலாகும். உயிர்களெல்லாம் இறைவனுக்கு உடைமைகளாதலின், உடைமைக்கு வரும் லாபநஷ்டம் உடையவனுக்கே யாதலின், பிரபன்னன் எல்லாம் அவனருளே என்று பற்றித் தன் செயலற்றுக் கிடக்கிறான். பிரபன்னன் இறைவனையே சாதனமாகக் கருதுகிறான்; இந்த சாதனம் எப்போதும் அழியாதுள்ளது; மற்ற சாதனங்கள் உயிரற்றனவாகவும், இந்த சாதனமோ உயர்ந்த ஞானமயமாய் உயிருள்ளதாய் விளங்குகிறது; மற்ற சாதனங்களின் சக்திக்கு ஓர் எல்லை உண்டு, அவைகளால் அபாயம் ஏற்படவும் வழி உண்டு; ஆனால் இறைவனாகிய சாதனமோ ஸர்வ சக்தி வாய்ந்தது, பின்பற்றுவார்க்கு ஆபத்தை விளைக்க ஒண்ணாதது. இன்னும், மற்ற சாதனங்கள் பழகும் காலத்து ஓர் அறிவுடைய சாதகனது துணையையும், பலனளிக்கும் போது இறைவனுடைய துணையையும் எதிர்பார்த்து நிற்கின்றன; ஆனால் இறைவனோ தானே வேறு உதவியின்றி அனைத்தையும் செய்ய வல்லவனாகின்றான். இவ்வகையான ஏற்றம் அன்றியும், வேறு சில மேன்மைகளும் பிரபத்திக்கு உண்டு. பிரபத்தியில் உபாயமும் அதனால் அடையப்படும் உபேயமும் ஒன்றாகின்றன. வேறு சாதனங்களைக் கொண்டு இறைவனை உபேயமாக (முடிவான பேறாக)ப் பற்றுவார் சிலர்; இறைவனை உபாயமாகக் கொண்டு தமக்கு வேண்டும் உலக இன்பம் முதலாக முத்தியின்பம் ஈறாகவுள்ள பலவகை இஷ்டங்களையும் உபேயங்களாகக் கொண்டு அவைகளைப் பெறுவார் சிலருளர்; ஆனால் பிரபன்னரோ இறைவனையே உபாயமாகக் கொண்டு இறைவனையே உபேயமாகப் பெறுவர். இப் பிரபத்தி நெறியில் முயற்சி செய்பவனும் இறைவன், முயற்சியின் பயனை அடைபவனும் அவனே; இறைவன் தனக்கும் ஜீவனுக்கும் உள்ள உறவை நினைந்து, தனது உடைமையாகிய ஜீவன் பிறவிப் பெருங்கடலில் அமிழ்ந்து கிடப்பதைப் பொறாது, தானே முயன்று அதை வெளியேற்றித் தானே இன்புறுகிறான். ஜீவன் தன்னைக் கருவியாகவே நினைக்

கிறான் ; இறைவனால் ஆட்டுவிக்கப்படும் ஒரு கருவியாயினும் தான் அறிவுடையவனாதலின், ஆட்டுவிக்கப்படுவதை உணர்ந்து இறைவனது மகிழ்ச்சிக்கென்றே தன்னை அமைத்துக்கொண்டு, அதிலே இன்பமடைகிறான். 'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே' என்றார் குலசேகராழ்வார். பிரபன்னன் தான் பிரபத்தி பண்ணுதலையும் சாதனமாக நினைக்கமாட்டான். பிரபத்தியை சாதனமாக நினைத்தல், குழந்தையைக் காப்பாற்றும் கடமையையுடைய தந்தையிடம் குழந்தை அதற்காகப் பத்திரம் எழுதி வாங்குதலையொக்கும். ஆதலின் பிரபன்னன் தன் முயற்சி இறைவனது முயற்சிக்கு இடையூறாகுமாதலின், தன் முயற்சியை அறவே ஒழித்து வருவான் ; இதையும் பேற்றுக்கு ஒரு சாதனமாகக் கொள்ளான். ஆயினும் தனது அடிமையின் இயல்புக்கு ஏற்றவாறு ஆண்டானுக்குப் பணி செய்தல் இயல்பை நிலை நாட்டுவதாதலின், பணிசெய்தலையே பெரும்பேறாகவும் வேறொரு பலனை எதிர்பாராமலும் செய்து வருவான். இறைவனிடம் பிரபத்தி பண்ணி உய்வடைவது போலவே மெய்ஞ்ஞானம் பெற்ற அடியார் ஒருவரது அருளையே தஞ்சமாகப் பற்றி வாழ்தலும் உயர்ந்த பேற்றைத் தரும். மதுரகவியாழ்வார், சபரி முதலானோர் இவ்வாறு ஆசாரியப் பிரதிபத்தியினால் (விசுவாசத்தினால்) கடைத்தேறப் பெற்றதற்கு உதாரணமாவார்

பிரபத்தி நெறியில் இறங்குவோனுக்கு அவசியமான இலக்கணங்கள் சிலவுள ; உள்ளிந்திரியங்களை அடக்குதலாகிய சமமும், புற இந்திரியங்களை அடக்குதலாகிய தமமும் ஒருவாறு உண்டாதல் வேண்டும். இறைவனுக்குப் பிரியமான செயல்களை அறிந்து செய்தலும், பிரியமற்ற செயல்களை விட்டுவிடுதலும் வேண்டும் ; இது இறைவன் மீதெழும் பக்தியின் காரியமாக விளைதல் வேண்டும் ; அக்காரணமாக வாராதொழியினும் ஸம்ஸார பயத்தாலேனும் வரவேண்டும். தன்னிடம் கைம்முதல் ஒன்றுமில்லையென்னும் உணர்ச்சியும் (ஆகிஞ்சன்யமும்) இறைவனைத்

தவிர தனக்கு வேறு கதியில்லையென்னும் உறுதியும் (அனன்ய கதித்வமும்) உண்டாதல் வேண்டும். தன்னிடம் எவ்வளவு நற்குணங்கள் இருப்பினும், எவ்வளவு சாதனங்களைத் தான்பழகிவரினும், எல்லைகுட்பட்ட மனிதனது தகுதியால் எல்லைகள் யாவையும் கடந்து நிற்கும் இறைவவனைப் பெறுதல் என்பது பொருந்தாத காரியமாகும்; ஆதலின் அவனது அருளாலன்றி உய்தல் இயலாது; உலகங்களைப் படைக்கும் தகுதி வாய்ந்த நான்முகனும் கண்ணபிரானது இயல்பை யுணரமாட்டாது, அவன் மேய்த்த் காலிகளையும் கன்றுகளையும் கவர்ந்து ஒளித்து வைத்துப் பின்னர் தன் பிழையை உணர்ந்தானன்றோ? நான்முகன் அப்பிரானது அருளைப் பெறுதொழியவும், அறிவொன்றுமில்லாத ஆயர்குலத்துப் பிறந்த கோபிமார் அவனது அருளைப் பெற்று உய்ந்தனரல்லவா? பிரபன்னன் இறைவனையொழிந்த வேறொருவர்க்கும் வேறெதற்கும் தன்னை அடிமையாக மதியான்; வேறொருவர்க்கும் அதனால் பணிசெய்யான்; அவனொழிந்த வேறெவரையும் வேறெதையும் சாதனமாக மதியான்; அவனாலன்றி வேறெவராலும் வேறெதனாலும் விளையும் இன்பத்தை இன்பமாகக் கொள்ளான். தரும சாஸ்திர விதிகட்குக் கட்டுப்பட்டு அவைகளோடு முரண்படாத சேவகத் தொழிலையும் கைத் தொழிலையும் உபாயங்களையும் போகங்களையும் பற்றுதல் பக்தியோக நெறியில் நிற்பவனுக்குப் பொருந்தும்; எனினும் ப்ரபன்னனுக்கு அவை சிறிதும் பொருந்தாதனவாம்; அவைகளை அவன் அறவே ஒழிப்பான். இதுவே இந்நெறியிற் செல்வார்க்குரிய கஷ்டமும் ஏற்றமுமாகும். இவ்விலக்கணங்கள் அமையும் பொருட்டுப் பிரபன்னன் இறைவனுடைய பின்வரும் ஆறு குணங்களையே சதா சிந்தித்துக் கொண்டிருப்பான். (1) தனது பெரும் படுகுழியனைய குறைகளையும் குற்றங்களையும் கண்டு அஞ்சாதிருக்குமாறு, பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிந்து, குழந்தையின் குற்றத்தையே குணமாகக் கொண்டு மகிழும் இறைவனது வாத்ஸல்ய குணத்தை நினைப்பான். (2) தனக்கும் இறைவன் காரியம் செய்

வான் என்ற துணிவு பிறத்தற்காக, தன்னை உடைமையாகக்கொண்டுள்ள அவனது சுவாமித்வத்தை நினைப்பான். (3) இறைவனது மேன்மையைக் கண்டு நீங்காதிருப்பதற்காக, தாழ்ந்தவன் என்று நினையாது மக்களோடு கலந்து அனுபவிக்கும் குணமாகிய அவனது நல்ல சீலத்தைச் சிந்திப்பான். (4) மேன்மை வாய்ந்திருப்பினும் அனைவரும் அணுகித் தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளுதற்கேற்றபடி அவன் காட்சிக்கு எளியனாய் (சுலபனாய்) இருக்கும் தன்மையைச் சிந்திப்பான். (5) தன்னை வந்தடைபவர்களுடைய குறைகளையும் விருப்பங்களையும் சொல்லாமலே நேரிற்கண்டறியும் இறைவனுடைய அளவற்ற ஞானத்தைச் சிந்திப்பான். (6) அறிந்தபின் அவரவர்களுடைய குறைகளைப் போக்கி, விருப்பங்களை விரும்பியபடியே நிறைவேற்றவல்ல இறைவனுடைய அளவற்ற சக்தியைச் சிந்திப்பான். இக் குணங்களைச் சிந்திக்கவே, பிரபன்னன் தனது உள்ளத்திலே மஹா விசுவாசம் என்னும் உயிருள்ள பெரு நம்பிக்கை தலையெடுக்கப் பெறுவான்.

முற்கூறியவாறு பிரபத்தி நெறி நிற்போன் நாளடைவில் இறைவனது அருளைப்பெற்று, அவனால் தனது ஸ்வரூப ரூப குண விபூதிகளைக் காட்டப் பெற்று, உயர்ந்த பக்தி தலையெடுக்கப் பெறுகிறான். இந்த பக்தியின் பயனாய் இறைவனை அனுபவிக்கப் பெறுகிறான். அதன் பின்னர் தனக்குப் பேறு தப்பாதென்னும் துணிவு பெற்று, இறைவன் தன்னை இருள் தருமாஞாலத்து வைத்திருக்க எண்ணுமளவும் அதற்கிசைந்து திருப்தனாகி, இறைவனது பணியிலும் தியானத்திலும் பொழுது போக்கிவிட்டு, அந்திமதசை அணுகியவாறே பரபக்தி பரஞ்ஞானம் பரமபக்தி உண்டாகப்பெற்று உடலை விட்டுப் பேரின்ப வீட்டை எய்துகிறான்; இவன் திருப்தப் பிரபன்னனாவான். இறைவனது அருளாலே உயர்ந்த பக்தி தலையெடுக்கப் பெறும் மற்றொருவகையினன் உலக வாழ்க்கையின் வெக்கையைப் பொறாது உடலும் உள்ள

மும் பதறி, இறைவனைப் பிரிந்து வாழும் வாழ்க்கையை ஒழிக்க நினைந்து, மனமுருகி அவனை வேண்டலும், அவ்வாறே அவனது அருளால் பரபக்தி முதலியவை உண்டாகப் பெற்று, உடலை நீக்கி ஒருகணமும் அவனை விட்டுப் பிரியாது அனுபவிக்கும் நித்திய வாழ்வினைப் பெறுகிறான்: இவன் ஆர்த்தப் பிரபன்னன் எனப்படுவான். முதலில் இறைவனுக்கும் ஜீவனுக்கும் உள்ள உறவைக் கேட்டலும், பின்னர் அதனைச் சிந்தித்து உணரலும், பின் அதனைப் பாவனையாக்குதலும், பின் அது முற்றிக் காட்சியாதலும், பின் அக்காட்சி வரவர வலுத்து உலகப் பொருள்களைக் காணுதல் போன்று மிக்க தெளிவுடைய காட்சியாதலும் இவையனைத்தும் பிரபன்னர்க்குரிய படிப்படியாயுள்ள நிலைகளாகும்.

ஆத்மாக்கள் பிறவியிலேயே இறைவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவனால் அணியப்பட்ட மங்கல நாணாகிய திருமந்திர (அஷ்டாக்ஷர) சம்பந்தத்தையுடையராகிறார். இதையறியாது திரியும் குழந்தை போன்ற மக்கள் திருமந்திரத்தின் பொருளை உணர்ந்ததும், தம்மை நாயகிகளாக உணர்கின்றனர். சம்பந்த ஞானம் முதிர்ந்து பக்குவமாகிய விவேக தசையை அடைந்ததும், நாயகனாகிய இறைவன்மீது பக்தியாகிய காதல் வளரப் பெறுகின்றனர். லீலா விபூதியாகிய இந் நிலவுலகத்தில் வாழும் அவர்களது மெய்க்காதலில் ஈடுபட்டு, அவர்கள் முன்பு இறைவன் தனது மாறுவேடத்தோடு வந்து தோன்றியும், கூடியும், பிறந்தும் அவர்களது காதலைப் பெரிதும் வளரவும் முறுகவும் செய்கின்றனன். அவர்களது வாழ்க்கை களவொழுக்கமாகவே அமைகின்றது. நாளடைவில் இறைவனோடு இடையறாது வாழத் துடிப்பாராக, அப்போது அவன் அவர்களை நிலவுலகத்தினின்றும் அழைத்துச் சென்று, தனது பெருமைக்கேற்றவாறு அவர்கட்கு திவ்விய உடைகளையும் அணிகளையும் (அப்ராகிருத உடலையும் ஆத்மகுணங்களையும்) அருளித் தனது அழிவிலா வீடாகிய நித்ய விபூதியில் வாழச்செய்து,

விரும்பியவாறே தன்னோடு இடையறாத பேரின்பத்தில் மூழ்கும்படி அருளி, அவர்களைக் கற்பொழுக்கத்தில் நிலைக்கச் செய்கிறான். இதுவே ஆன்மாக்கட் குரிய உயர்ந்த பேறாகின்றது.

பக்தியின் முதிர்ச்சியினால் பிரபத்திநிலை வரும்போது பக்தன் தனக்கென ஒன்றைக் கோராது இறைவனுடைய இஷ்டப்படியே தன்னை வைத்து அனுபவிக்கும்படி விட்டு விடுகிறான். பகவானுடைய சங்கற்பப்படியே சிலர் அவருடைய குணமகிமையிலும், சிலர் அவருடைய அழகிய வடிவத்திலும் சிலர் அவரைப் பூஜிப்பதி லும், சிலர் தாஸ பாவனையிலும், சிலர் ஸ்நேக பாவ னையிலும், சிலர் வாத்ஸல்ய பாவனையிலும், சிலர் நாயகி பாவனையிலும், சிலர் ஆத்ம ஸமர்ப்பணத்திலும் சிலர் தன்மயமாக ஆவதிலும், பரம விரஹத்திலும் பிரேமை கொள்கின்றனர். பக்தியொன்றே இவ்வாறு பதினொரு வகையாகப் பரிணமிக்கின்றதென நாரத பகவான் அருளியிருக்கிறார். இம்மாதிரியே சிலர் ஸாலோக்ய வாழ்விலும், சிலர் ஸாமீப்ய வாழ்விலும், சிலர் ஸாரூப்ய வாழ்விலும், சிலர் ஸாயுஜ்ய வாழ்விலும் ஆசை கொள்கின் றனர். இதுவும் அவனது இன்னருளே என்று கொள் ளப்படவேண்டுமேயொழிய, முத்தியிலும் தாரதம்மியங் களை உரைப்பது பொருந்தாததாகும். இன்னும் சிலபக் தரை உயர்ந்த வருணத்திற்குரிய உடலிலும் சில பக்த ரைத் தாழ்ந்த வருணத்திற்குரிய உடலிலும் வைத்து, இறைவன் தனது ஒப்பற்ற லீலாரசத்தை அனுபவிக் கிறான்; ஆதலின் தோலளவாக நிற்கும் அத்தகைய பேதங்களை நோக்காது, அவர்களது உடல்களை இறைவ னது திருமேனிகளாகவும் கருதி ஒரேவித புத்தியோடு வழிபடுதல் கடமையாகும். இவ்வாறு "தேவு மற்றறி யேன்" என்று மெய்யடியார்களையே தெய்வமெனப் போற்றுவதிலும், அவர்கட்கே தொண்டு புரிவதிலும் ஈடுபடும் அடியார்களும் பெரும் பக்தர்களேயாவர். உயிர்கள் தாமாகப் பலவாறு ஈடுபடுவார் என்பதினும்,

இறைவன் தனது விருப்பப்படியே பலரைப் பல்வேறு நிலை களில் வைத்து அனுபவிக்கிறான் என்பதே முடிபாகும்.

## (3) மகாராஷ்டிர பக்தர்களின் சித்தாந்தம்

பக்தியைப்பற்றி மஹாராஷ்டிர பக்தர்கள் பின்வரு மாறு கூறுவர். பிரஹதாரண்ய உபநிடதம் "ஆத்மா சிரவண மனன நிதித்யாஸங்களால் உணரத்தக்கது" என்று போதிக்கின்றது. பிரஹ்லாதனை அவனது தகப் பன் "நீ பள்ளிக்கூடத்திற் படித்தவற்றுள் ஸாரமான தைச் சொல்லுக" என்றபோது, "சிரவணம் கீர்த்தனம் ஸ்மரணம் பாத ஸேவனம் அர்ச்சனம் வந்தனம் தாஸ் யம் ஸக்யம் ஆத்ம நிவேதனம் என்னும் ஒன்பதுவித பக்திகளுள் ஒன்றை விஷ்ணுவிடம் செலுத்தினால் அதுவே உத்தமமான அத்யயனமாகும்" என்று பதி லளித்தான். உபநிடதத்திற் கூறப்படும் ஆத்ம உபாஸனை முறையும் பாகவதத்திற் கூறப்படும் நவவித பக்தியும் உண்மையாக ஒன்றேயாம். பரமாத்மா ஸகுணமாயும் நிர்க்குணமாயும் உள்ளவர்; ஸகுண வடிவமான பரமாத் மாவை அடையப் பிரேமையாகிய பக்தி வேண்டும்; நிர்க்குண வடிவமான பரமாத்மாவை அடையப் போதம் வேண்டும்; இவ்விரண்டும் பக்தியின் இரண்டுவகைகளே யாகும். இவ்வித பக்திகளுள் ஒவ்வொன்றும் மிக வுயர்ந்த நிலையை அடையத் துணையாகும்; அவைகளுள் இன்னது உயர்ந்தது, இன்னது தாழ்ந்தது என்ற வேறுபாடு இல்லை. சிரவணத்தால் பரீக்ஷித்தும், கீர்த்தனத்தால் சுகரும் நாரதரும், ஸ்மரணத்தால் பிரஹ்லாதரும், பாதஸேவனத் தால் லெக்ஷ்மியும், அர்ச்சனத்தால் பிருது சக்கரவர்த்தி யும் வந்தனத்தால் அக்ரூரரும், தாஸ்யத்தால் அனுமாரும், ஸக்யத்தால் அருச்சுனரும், ஆத்ம நிவேதனத்தால் பலிச் சக்கரவர்த்தியும் முத்தி யடைந்தனர். கீதையிலும் இந்த ஒன்பதுவித பக்திகளும் போற்றப்பட்டுள்ளன. 'நமது உண்மையான இயல்பை (ஸ்வஸ்ரூபத்தை) இடைவிடாது சிந்தித்தலே (அனுஸந்தானம் பண்ணலே) பக்தியாகும்'

என்பர் ஸ்ரீ சங்கராசாரியார். "பக்தியே எனது உண்மையான இயல்பு" என்பர் ஞானேஸ்வரர் என்னும் மஹாராஷ்டிர பக்தர். ஸகுண பக்தியும் நிர்க்குண பக்தியும் ஆகிய இரண்டும் (ஸமர்த்த) ராமதாஸர் என்னும் மஹாராஷ்டிர பக்தரிடம் காணப்படுகின்றன. "ஸகுண பக்தியினால் நிர்க்குண ஞானம் அடையப்படுகிறது; உபாஸனையில்லாத ஞானம் முடமானது; ஞானமில்லாத உபாசனை பயனற்றது" என்பது இப்பெரியாரது கொள்கை.

சிரவண பக்தியாவது, பக்தி சிரத்தையோடு புராணம் முதலிய சாஸ்திரங்களைக் கேட்டலே. சிரவணம் செய்யும்போது மனத்தைச் சிதறவிடாமல் ஒருமுகப் படுத்தி, கேட்ட நல்ல விஷயங்களை மனத்தில் பதியச் செய்தல்வேண்டும். திரும்பத் திரும்பக் கேட்பதனால் மனதில் நல்ல 'விருத்தி' ஏற்படுகிறது. இதனால் சித்த சுத்தியும் வைராக்கியமும் உண்டாகின்றன. அப்போது பகவானது லீலைகளையும் குணங்களையும் கூறும் சாஸ்திரங்களையோ, நிர்க்குணப் பிரம்மனைப்பற்றிக் கூறும் சாஸ்திரங்களையோ கேட்கும் அதிகாரம் வந்தடையும். ஸகுண பக்தி பண்ணுவோர் பரமாத்மாவுக்கும் தமக்கும் உள்ள வேறுபாட்டைப் பற்றிய உணர்ச்சியை மெல்ல மெல்ல ஒழித்து வரவேண்டும். வழிபடுவோனும் வழிபடு கடவுளும் ஒன்றுகும்போதுதான் ஸகுண பக்தி உண்மையான பக்தியாக மாறுகிறது. "சிவனுகிச் சிவனை வணங்குக" என்னும் சுருதி. பகவானைப் பற்றிய வசனங்களாகிய அமிருதத்தைக் காதால் குடிப்பார்க்குப் பசியும் தாகமும் பறந்து விடுகின்றன, மேலும் மேலும் அவைகளைக் கேட்கும் பிரேமை உண்டாகிறது, என்பர் பரீக்ஷித். இம்மாதிரியான பக்தியால் 'தன் மயம்' (பகவானோடு ஒன்றுகும் நிலை) முடிவில் அடையப்படுகின்றது.

கீர்த்தனமாவது, பக்தி ததும்பப் பகவானைப்பற்றிய பாடல்களைப் பாடுதலும், அவனது நாமத்தையும் அவனது புகழையும் சொல்லுதலுமாம். பாடும்போதும்

மத்தின் ஸகுணவடிவமான பகவானை இவ்வாறு தியானிக்கும் அகண்ட பாவனை நாம ஸ்மரணம் எனப்படும். சஞ்சல சித்தமுடையார்க்கு (மனம் சதா அலைந்துகொண்டே யிருப்பார்க்கு) நாமத்தைச் சொல்லும்போது பகவானது ரூப குணங்களில் மனம் நிலையாது. "மனம் சலித்துக்கொண்டிருக்கும் போதும் நாமத்தை ஓதிவருக; மனம் தானாக ஒருநிலைப்படும்" என்கிறார் துக்காராம். நாமஜெபம் முதற்படி; இதனால் நல்ல பழக்கம் மனத்தில் உண்டாகிக் கெட்ட பழக்கங்கள் ஒழியும். பின் ஜெபத்தில் ருசியுண்டாகும். இது இரண்டாவது படி. பின் சித்தவிருத்தி உபாஸ்யத்தில் லயமடையும்போது (மனம் ஒருமுகப்பட்டு தியானிக்கப்படும் பொருளோடு ஒன்றுபடும்போது), ஜெபிப்பவன் எச்செயலைச் செய்துகொண்டிருந்தாலும், மனம் தியானத்தைவிட்டு நீங்காது. இதுவே அகண்ட நாமஜெபம் எனப்படும்; இதுவே மூன்றாவது படி. இந்த நிலையில் சதா ஜெபமும் தியானமும் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். இதனால் மனதிற்குத் திருப்தியும் இன்பமும் உண்டாவது மட்டுமன்றி, ஜெபம் பண்ணும்போது செய்யும் வேலையும் செவ்வையாகச் செய்யப்படும். இதைச்செய்ய முடியாதவர் ஒரு குறித்த காலத்திலாவது நாமஸ்மரணம் செய்தல் வேண்டும். "இராமநாம ஜெபத்தைக் கைக்கொண்டதனால் நாம் கிருதகிருத்யர் (செய்ய வேண்டியவற்றையெல்லாம் செய்து முடித்தவர்) ஆவோம்" என்கிறார் துக்காராம். தெய்வத்தினிடத்து அன்போடு நாமஜெபம்செய்வார்க்கு வாழ்க்கையில் நேரும் எல்லாவித இடையூறுகளும் நீங்கும். இப்பழக்கத்தைக் கைக்கொள்ள எவரும் எந்த நிலையிலும் உரிமையுடையாரே. இதை முறையாகச் செய்து வருவார்க்குத் தவவலிமை கூடிவரும். நாம ஜெபத்தோடு இறைவனது வடிவத்தையும் குணங்களையும் பற்றிய தியானமோ ஆத்ம சொரூபத்தைப்பற்றிய தியானமோ நிகழுமாயின், மரணத்திற்கே மரணம் உண்டாக்கும் வல்லமை (பிறப்பிறப்புகளை ஒழிக்கும் பலம்) வந்து சேரும். அகண்ட நாம ஸ்மரணத்தால் சித்தியும்பத்தியும்

சொல்லும்போதும், வார்த்தைகளின் பொருளில் மனத்தைச் செலுத்தல் வேண்டும். இதனால் நாளடைவில் பிரேமை உண்டாகும். சிரவணம் பண்ணியபின் கேட்ட லீலைகளை மனனம் பண்ணும்போது பக்தி மிகுந்து பிரேமையாக மாறும். பிரேமையினால் ஒருவன் தான் கேட்டதை மெய்ம்மறந்து சொல்லத் தொடங்குவான். இதுதான் உண்மையான கீர்த்தனமாகும். பகவானது குணங்களை வாயார மனமாரப் புகழும்போது, புகழ்பவனுக்கும் அதைக் கேட்பவனுக்கும் திருப்தி பிறக்கிறது. வெட்கத்தை விட்டுப் பகவானது நாமத்தைச் சொல்லும் போதும், குணங்களைப் பாடும்போதும், பக்தி உள்ளத்திற் பொங்கி, உடல் நடுக்கம் மயிர்க் கூச்செறிதல் ஆனந்தக் கண்ணீர் பெருகல் முதலியவைகளை உண்டாக்குகிறது. கீர்த்தனம் பண்ணும்போது ராகம் தாளம் முதலியவைகளைக் கவனியாது மனத்தைப் பகவானிடம் ஊன்றச் செய்தல் அவசியம். கீர்த்தனம் பண்ணும்போதும் கேட்கும்போதும், சித்தமும் சைதன்யமும் ஒன்றுகுமாயின், நிர்க்குண பக்தி தலையெடுக்கும், ஆனந்தக் கண்ணீர் பெருகும், ஜீவத்வ உணர்ச்சி மறையும், கீர்த்தன பக்தியைப் பெறும் மக்கள் உலக பந்தங்களினின்றும் நீங்குவர்; இதுவே கலியுகத்திற்கேற்ற மார்க்கம். கீர்த்தனம் நடக்கும்போது, தெய்வமும் பக்தனும் நாமமும் ஒன்று கூடுவதினால், அதனைத் திரிவேணி ஸங்கமம் என்பர் பெரியார்; இதில் நீராடுவார் எல்லாத் தீமைகளும் நீங்கப் பெறுவர்.

ஸ்மரண பக்தியாவது, இறைவனது நாமத்தை ஓதுதலும், அவனது ரூபத்தையும் குணங்களையும் தியானித்தலுமாம். இடைவிடாத நாம ஸ்மரணம் அகண்ட நாம ஸ்மரணம் எனப்படும்; இது ஒருவரை சமாதி நிலைக்குக் கொண்டு சேர்க்கும். நமது பந்தத்திற்குக் காரணம், நாம் நமது ஸ்வரூபத்தை மறத்தலே; நமது ஸ்வரூபத்தை நினைத்தலே ஸ்மரணமாகும். பகவான் பிரம்மாண்டத்தின் உள்ளும் புறமும் இருக்கிறார், ஏகமாயிருக்கிறார்; பிரம்

முத்தியும் கைகூடும். துவைத பாவனையில் தொடங்கு வார்க்கு அத்வைத பாவனை முடிவில் வந்தடையும். நாம ஸ்மரணத்தால், நான் 'தியானிக்கிறேன்' என்ற பாவனை போய், 'நான் ஆத்மா' என்ற பாவனை உண்டாகும்; வழிபடுபவன் வழிபடும் தெய்வமாகி விடுகிறான்; அப் போது 'ஆத்ம பூஜை' (தனக்குத்தான் வழிபாடு செய் தல்) நடக்கிறது. அகண்ட நாம ஸ்மரணத்தில் ஈடுபட்ட வனுக்கு ஜன்ம மரண பயம் வரையுள்ள எல்லாப் பயங் களும் ஒழிந்துவிடும். இவன் எதற்கும் எவர்க்கும் அஞ் சான்; இவனால் எதற்கும் எவர்க்கும் பயமும் ஏற்படமுடி யாது; அவன் ஆத்மானு பூதியை அடைகிறான். "ஸகுணம் நிர்க்குணம் இரண்டிற்கும் நாமமே சாக்ஷி யாகி, நடுவிலிருந்துகொண்டு, நம்மை அவ்விரண்டையும் அறியும்படிச் செய்து இரண்டோடும் சேர்த்துவைக்கும் ஏதுவாயும் உள்ளது. நாமம் வாயிற்படியில் வைக்கப் படும் விளக்கைப்போல் (நமக்கு) உள்ளும் புறமும் ஒளியை வீசுகின்றது" என்பர் துளசிதாஸர்.

பாதஸேவனமாவது குருவின் பாதங்களில் ஸேவை செய்தல். குருவின் கிருபையின்றி எவனுக்கும் மோக்ஷம் இல்லை. குருவே மோக்ஷநெறியைக் காட்டுபவராதலின், அவரை நாடுதல் இன்றியமையாதது. ஸத்குருவும் பரமாத்மனும் சிஷ்யனும் மூவரும் நாளடைவில் ஒன்றாகி விடுவர். ஸத்குரு அச்சமில்லாதவராய், ஆசையற்றவ ராய், அகங்கார மமகாரங்கள் நீங்கியவராய், பிரம்மத் தைப்பற்றிய சந்தேகம் ஒழிந்தவராய், வைராக்யம் பெற் றவராய் இருப்பர்; அம்மாதிரியான குருவே வணங்கத் தகுந்தவர், அவரே முத்தியை அளிக்கவல்லவர். ஸ்வஸ்வ ரூபம் அகண்டமாயும் அனன்யமாயும் ஸஹஜமாயும் ஆதலே உண்மையான பாதஸேவனமாகும். இந்தநிலையை உணர்ந்து சிஷ்யனுக்கு அளிப்பவரே உண்மையான குரு வாவார். (சிஷ்யன், தனது உண்மையான இயல்பு பிரம் மத்தின் இயல்பைப்போல் அகண்டமாய் பரந்ததாய் பிரம்மத்தினியல்பினின்றும் வேறுபடாததாய் இருப்ப

தாக உணரும்படிக்கும், அந்த உணர்விலே மனம் முயற்சியின்றி இயல்பாகவே நிலைத்திருக்கும்படிக்கும் குரு செய்தருளுவர்.) இறைவனே குருவாக எழுந்தருளியிருப்பதைக் காணும்போது ஒருவனிடம் ஸத்சிஷ்ய பாவனை நிலைக்கும்; அப்போதுதான் அவன் தன்னைக் குருவின் பாதத்தில் அர்ப்பணம் செய்துவிடுவான், சிஷ்யனிடம் ஒன்றுமே மிஞ்சியிருப்பதில்லை, சிஷ்யன் குருவோடு ஒன்றாகிவிடுகிறான். இதுவே மெய்யான உயர்ந்த பாத ஸேவனம். சாஸ்திரங்களிற் போதிக்கப்படும் உண்மையும், குரு சிஷ்யனுக்குக் காட்டும் உண்மைக்காட்சியும், சிஷ்யன் பெறும் அனுபூதியும் இம்மூன்றும் ஒன்றாகும்; இதுவே திரிவேணி ஸங்கமம். இந்நிலையினை அடையக் குருவின் பாதங்களில் பணிவிடைகளைச் செய்தல் அவசியம். மெய்யான குருவைப் பெற்றபின், அவரது திருவடிகளில் அவர்க்கு மனமுவந்த தொண்டுகளைச் செய்வதொன்றே சாதனமாகும், அதனாலேயே பேரின்பநிலை தானே வந்துசேரும். திருவடிகளின் பெருமையை உணர்ந்தன்றோ மஹாலக்ஷ்மியும் விஷ்ணுவிற்குப் பாத ஸேவை புரிகின்றாள்; அத்திருவடிகளின் மகிமையன்றோ கல்லை (கல்லாய்க்கிடந்த அகலிகையை மீண்டும்) பெண்ணாக்கியது?

அர்ச்சனமாவது, ஒருமுகமான மனதோடு இறைவனது வடிவங்கட்குப் பூஜை செய்தல். "எக்ஞம், தானம், தவம், கருமம்"—இவை நான்கும் வேண்டியன என்பர் கீதாசாரியார். கருமங்களை இயற்றாமலே நைஷ்கர்ம்யம் (கர்மமற்ற நிலை) என்பது அடையமுடியாதது. "நதியைக் கடக்கும்வரை, தோணியை வெறுத்து விட்டுவிடாதே; குலை ஈனுமுன் வாழைமரத்தை வெட்டியெறிதல் மதியீனம்; விளக்கை யேற்றிய நோக்கம் நிறைவேறுமுன் அதை அணைத்துவிடாதே" என்று போதிப்பார் ஞானேஸ்வரர். கருமங்களை ஆவலோடு புரிதல் வேண்டும். "ஓடிக்கொண்டிருப்பவன் தான் கருதிய இடம் சேரும்வரை ஓடிக்கொண்டே யிருப்பான்; அதன்

பின் அவன் அசையாது நிற்பான்" என்பர் அப்பெரியார். "அமைதியாக நிற்பதற்கே ஓட்டம் அவசியமாகும்; மருந்தை உண்ணல் மருந்தை நிறுத்துதற்காகவேதான். உடலைப் பேணுவதற்கும் கருமம் அவசியமாகின்றது. கீதாபாராயணமும் பகவானை நினைத்தலும் மட்டும் போதா; உடலும் ஒழுங்குகட்குக் கட்டுப்பட வேண்டும். பகவானை ஓர் உருவத்தில் வழிபடுதலும் அவசியம். விக்கிரகத்திலும் ஓமத்தீயிலும் ஆசாரியனிடத்தும் பிறவற்றிலும் இறைவனைப் பூஜித்தல் வேண்டும். நாம் வழிபடும் மூர்த்தியை (வடிவத்தை)ச் சின்மயமாக நினைத்தல்வேண்டும், கிரியைகள் எல்லாவற்றையும் தவறாது ஒழுங்காக இயற்றல் வேண்டும். உருவத்தைச் சின்மயமாகக்கருதுவதே ஆவாஹனம் எனப்படும். நமது இஷ்டதெய்வம் ஒரு குறிப்பிட்ட வடிவமுடையதாயினும், எல்லா வடிவங்களிலும் இறைவனே இருப்பதாகப் பாவித்தல்வேண்டும். மூர்த்திபூஜை வழியாக அமூர்த்தி பூஜை (உருவ வழிபாட்டின் மூலமாக அருவ வழிபாடு) அடையப்படுகின்றது. "ராஷ்டிர பரம்பரையையும் குலபரம்பரையும் விட்டுவிடாதே" என்று ஸமர்த்த ராமதாஸர் உபதேசிப்பார். மூர்த்திகளையும் தலங்களையும் தீர்த்தங்களையும் நாடுதல்வேண்டும். நம்மிடத்திலுள்ள சக்திகளையும் பொருள்களையும் பகவானது ஸேவைக்கென்றே பயன்படுத்தவேண்டும். எல்லாம் பகவானைச் சேர்ந்தவை யாதலின், நாம் நிமித்தம் மாத்திரம் (கருவிமாத்திரம்) என்ற நினைவை மனதில் பதிக்க வேண்டும். "ஒருவன் தனது மகிமையைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமாயின், பகவானை வழிபடல்வேண்டும். முகத்தைக் காணவேண்டின் கண்ணாடிவேண்டுமன்றோ?" என்னும் பாகவதம்.

வந்தனமாவது வணங்குதலாம். தெய்வங்களையும் மஹான்களையும் சாதுக்களையும் நல்லோரையும் வணங்குதல் வந்தன பக்தியெனப்படும். ஸத்குருவையும் ஈசுவரனையும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தல் வேண்டும்; பிறர்க்

கும் அவரவரது தகுதிக்கும் வித்தைக்கும் விநயத்திற்கும் ஏற்றவாறு மரியாதை செய்தல்வேண்டும். ஞானப் பேற்றுக்கு இடையூறுயிருப்பது அகங்காரமொன்றே; அந்த அகங்காரத்திற்கு மாற்று மருந்தாயிருப்பது வணக்கமே. பெரியார் பிறரது வணக்கத்தால் மகிழார், வணங்காதுபோதலால் வருத்தமும் கொள்ளார்; ஆயினும் வணங்குதல் அத்தொழிலைச் செய்வாரது பணிவிற்கு அறிகுறியாகின்றது. 'நமனம்' என்பதன் பொருள் மனமின்மை; மனமின்மையாவது மனத்தை நசிக்கச் செய்து துரியநிலை யடைதலே. நமஸ்காரமாவது தனது ஆத்மாவுக்கே மரியாதை செய்தலாகும். பெரியாரை வணங்குதல் உடலிற்குரிய தவமாகும். குருவின் இல்லத்தில் இழிவாகக் கருதப்படும் தொழில்களையும் செய்தல் நன்று. தாழ்மை யென்பது பெறற்கரிய பெருங் குணம்; பணிவுடைமை விலையுயர்ந்த ஓர் அணியாகும். அது முயற்சியால் மட்டும் வருவதன்று; ஆயினும் முயற்சியும் அதனையடைய இன்றியமையாதது. தாழ்மையுண்டாகும்போது தேகபுத்தி மறைகின்றது, சாந்தி எழுகின்றது. நாத்திகமும் ஆணவமும் தாழ்மையால் வேரோடு மாய்கின்றன. களங்கமற்ற மனத்தோடு அனைவரையும் தெய்வமாக எண்ணி வணங்குதல் ஒன்றே உயர்ந்த நிலையை அடையும் வழியாம். வணக்கத்தால் குருவின் அருளைப்பெறலாம். அதனால் நமது உண்மையியல்பை உணர்ந்து முக்திபெறலாம். வந்தனம் செய்யும்போது அஹங்காரம் எள்ளளவும் இருத்தல்கூடாது. தூய்மையற்ற ஒருவனை நாம் வணங்கினும், அதனால் அவன் தூய்மை யெய்துகிறான், நாமும் தூயராகிறோம். ஆக, வந்தன பக்தியால் அஹங்காரம் ஒழிகின்றது. அதைச் செய்வாரும் ஏற்பாரும் பயனடைகின்றனர்.

தாஸ்யபக்தியாவது, இறைவனை ஆண்டானாகவும் நம்மை அடிமையாகவும் எண்ணி வழிபடுதல். இறைவன் நமது நெஞ்சிற்குள்ளிருந்து நம்மை எப்போதும் கவனித்து வருபவனாதலின், வெளிவேடத்திற்காகச்

செய்யும் பணியை ஒழித்து முழுமனதோடும் அன்போடும் பணிசெய்தல்வேண்டும். அடிமைக்கு உரிமையான பொருள்கள் இல்லையாதலின், நமது மனைவியும் மக்களும் சுற்றத்தாரும் பிறரும் மனையும் செல்வமும் உடலும் ஆவியும் யாவும் ஆண்டானாகிய இறைவனுக்கு உரியனவேயாம். நம்மைக் கருத்தா (கருமம் செய்பவன்) என்றும் போக்தா (கருமபலனை அனுபவிப்பவன்) என்றும் எண்ணுதல் பொருந்தாது; அவனது நினைவுகள் யாவும் நமது நன்மைக்கேயாம் என்று உறுதியாக நம்பி, அவனது ஆணையை நிறைவேற்றிவரவேண்டும். அவனுக்குச் செய்யவேண்டிய பணி எதுவாயினும், அதைச் செய்துவிட்டு, யாதொருபணியும் இல்லாதபோது, அவன் முன்பே கைகட்டிக் காத்திருத்தல் வேண்டும். திருக்கோயில்களை அலகிடல் மெழுகுதல் பூமாலை தொடுத்தல் முதலிய பலவகையான தொண்டுகளையும் உள்ளத்தே அன்பு கனிந்து செய்தல் வேண்டும். கோயிலுக்குச் செல்வாரை இறைவனது வடிவங்களாக எண்ணி அவர்கட்குத் தொண்டுகளை இயன்றவரை புரிதல் வேண்டும். இவ்வண்ணமே குருவையும் நாதனாக நினைந்து அடிமைத் தொழில்களை இயற்றவேண்டும். தாஸ்ய பக்தியைப் பின்பற்றுபவர் உடலைத் துரும்பாகவும், பொன்னை ஓடாகவும் கருதவேண்டும், தமது தொழிலுக்குக் கூலியை எதிர்பாராதிருத்தல் வேண்டும் என்பர் துக்காராம். இறைவனுக்கு நல்ல அடிமையாக வாழ விரும்புவார் காமநினைவை ஒழித்து மனத்தை முற்றும் அடக்கியவராய், தமது ஆண்டானுக்குத் தமது உயிரையும் காணிக்கையாகக் கொடுக்க அஞ்சாதவராய் விளங்கவேண்டும். இராமபிரானுடைய பஹிர்ப்பிராணனாய் (வெளியே திரியும் உயிராய்) தாஸமார்க்கத்திற்கு ஓர் இலக்ஷியமாய் விளங்கியவர் அனுமாராதலின், இராம தாஸ்ய செல்வத்தைப் பெற அவரையே வழிகாட்டியாகக் கொள்ளல் வேண்டும்.

ஸக்ய பக்தியாவது, இறைவனைத் தோழனாகக் கருதி அன்பு செய்தலாம். இம்மாதிரியான அன்பர் இறைவ

னுக்காக எதனையும் துறந்துவிடுவார், தமது உயிரையும் ஈவார். அருச்சுனரும் நாமதேவரும் குசேலரும் இவ்வகையான பக்திக்கு உதாரணமாவார். ‘ஒரு மரத்தில் இரு பறவைகள் வாழும், அவையிரண்டும் ஒன்றுக்கொன்று தோழமை கொண்டன’ என்று ஒருடலில் உள்ள ஜீவனையும் பிரம்மத்தையும் பற்றி உபநிடதம் கூறுகின்றது. பாகவதமும் அதே கருத்தைக் கூறுவதோடு, மனித உடலிலுள்ள இறைவனும் ஜீவனும் அநாதி கால முதல் இணைபிரியாத நண்பராய், தீபத்தையும் அதன் ஒளியையும் போல இருப்பர் என்றும் போதிக்கிறது. ஜீவன் உடலுக்கு ஆன்மாவாவது போல இறைவன் ஜீவனுக்கு ஆன்மாவாகிறான். இவ்வுறவை நினைந்து இறைவனோடு தோழமை கொண்டாடி அவனோடு நெருங்கி யளவளாவி, முடிவில் அவனோடு ஒன்றுதல் வேண்டும். வேதங்களும் மற்றைய சாஸ்திரங்களும் இறைவனது கட்டளைகளை வெளியிடுவன; ஆதலால் அவனுக்குத் தோழனாயிருப்பவன் அவனது கட்டளைகட்கு இணங்கி நடப்பதில் பிரியங் கொள்ள வேண்டும். அவனது நட்பைத் தவிர ஏனைய யாவும் என்னிடமிருந்து போகட்டும் என்ற மன உறுதியை நிலை நாட்டல் வேண்டும். மேகம் சாதகப் பறவையைக் கவனியாவிடினும், சாதகம் அதனையே நோக்கி வாழும்; சந்திரன் உதிக்கும் வரை சகோரப் பறவை அதற்காகக் காத்துக்கொண்டே யிருக்கும். இவ்வண்ணமே ஜீவன் இறைவனைத் தனது உயிர்க்கு ஆதாரமாக நினைக்கவேண்டும். இறைவன் ஜீவனது விருப்பத்திற்கிணங்க நடக்காவிடினும், ஜீவன் அவனது நட்பைக் கைவிடக் கூடாது. இறைவனது ஸங்கற்பத்தையே தனது ஸங்கற்பமாக விரும்பி ஏற்றுக் கொள்ளல் வேண்டும்; தனது இரகசியத்தை அவனிடம் ஒளியாது கூறி, அவனையே இரக்ஷகனாகப் பாவித்து, இப்பாவனையை நன்கு வலுக்கச் செய்யவேண்டும்.

ஆத்ம நிவேதனமாவது, ஆத்மாவை இறைவனிடம் ஒப்புவித்தலாம். முதலில், நமக்கு அன்னியமான மனைவி

சம்பந்தமும் அப்படியே. கடலும் அதன்மீது தோன்றும் அலையும் ஒன்றே; உப்பு கரையும்போது, உப்பும் நீரும் ஒன்றே; எரியும்போது கற்பூரமும் தீயும் ஒன்றே; அதுபோல நானும் நீயும் ஒன்றே;" "உள்ளும் புறமும் உன்னையன்றி வேறில்லை. ஆதலின், உன்னை வணங்குவது எவ்வாறு?" பக்தியின் முடிவான நிலை இதுவேயாகும்.

## (4) ஸ்ரீசைதன்ய சித்தாந்தம்

கிருஷ்ணபகவானே அழியாத பிரம்மமானவர், ஆதியந்தமற்றவர், மற்றைய தெய்வங்களைத் தமது அம்சமாக உடையவர். அவரே உலகிற்குக் காரணமாவார், எல்லாப் பொருள்களும் தம்மிடத்தும் தாம் எல்லாப் பொருள்கட்குள்ளும் இருக்கப்பெற்றவர். ஆயினும் அவர் மனித வடிவமுடையவர்; அவ்வடிவம் எல்லையுள்ளதாகத் தோன்றினும், உண்மையில் எல்லையற்றது, ஸர்வ வியாபகமுள்ளது. அது பூரணமானது, அழியாத அப்ராகிருதமானது, மாறுத இளமையும் அழகும் வாய்ந்தது. அவர் ஆனந்த வடிவினர், அவரது வடிவமும் ஆனந்தமயம். அவர் அன்பேயாவார், அவரது உடலும் மொழியும் நடையும் அவரைப்பற்றிய யாவும் இனிமையுள்ளனவாகும். அவர் ஆன்மாக்களையெல்லாம் தம்மிடம் கவரும் இயல்புடையவர்; இதனுல் கிருஷ்ணன் எனப் பெயர் பெற்றுர். பிருந்தாவனமே அவரது உறைவிடம்.

அன்பு ஒருவனைத் தன்னை மறக்கச் செய்யும்; யாரிடத்து அன்பு உண்டாகிறதோ, அவனுக்குத் தொண்டு செய்வதற்கே தன்னை ஒப்புவிக்கச் செய்யும். அன்பு செய்பவரது மனத்தையும் அதை ஏற்பாரது மனத்தையும் இளகச் செய்து, அது அவ்விருவரையும் ஒன்றுக்கும். இருவர்க்கும் வேறுபாடு உள்ளது. என்னும் நினைவை இருவருடைய மனத்தினின்றும் நீக்கிவிடும். இந்த அன்பு, தாஸ்யம் ஸக்யம் வாத்ஸல்யம் மதுரம் என நான்கு

மக்கள் வீடு புத்தி அஹங்காரம் முதலிய எல்லாவற்றை யும் இறைவனிடம் சமர்ப்பித்தல் வேண்டும் ; பின் நமது ஆத்மாவையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்துவிடல் வேண்டும். அப்பொழுதே முக்தி கைகூடும். ஸகுண பக்தி நிர்க்குண பக்திக்கு உபாயமாக, நிர்க்குணபக்தி அசல முத்திக்கு உபாயமாகும். பக்தியுண்டாவது தன்னை இறை வனினின்றும் வேருகக் காணும்போது என்று பொதுப் படக் கூறுவது வழக்கம். இது ஆரம்பமேயொழிய முடிவா காது. நான் யார் என்று தத்துவங்களில் ஒவ்வொன்றை யும் ஆராய்ந்து பார்த்துக் கழித்தால், நான் என்பது யாதொரு தத்துவமும் அன்று, நான் என்ற ஒரு பொருள் உண்மையில் இல்லையென்ற முடிவே வந்தடை யும். நான் இல்லையென்ற உண்மையை உணர்தலே ஆத்ம நிவேதனம். பிண்டத்தை ஆராய்ந்தால் அண்டத்தையும் ஆராய்ந்ததாகும். புருஷன் பிரகிருதி யெனும் இரண்டை யும் தவிர வேருென்றும் எங்கேனும் காணப்படுவதில்லை ; இந்நிலையில் 'நான்' என்ற பொருளுக்கு இடம் இல்லாது போகிறது ததததுவ ஆராய்ச்சியின் பயனுக மிஞ்சுவது ஆன்மா ஒன்றே. நான் சாக்ஷியே என்றதை நிலை நாட்டி, முதலில் தத்துவங்கள் எல்லாவற்றையும் கழித்து விடுக ; பின் அந்த சாக்ஷி பாவனையும் கல்பனை யென் பதை அறிந்து, அதனையும் ஒழித்து, ஆத்மாவாருக. இதுவே மோக்ஷம், ஸாயுஜ்ய நிலை. 'நான் உண்மையில் முத்தன் ; என்னைப் பந்தங்கட்கு உட்பட்டதாக இதுவரை பாவித்தேன் ; இறைவன்மீது பக்தியைச் செலுத்த, அவ னும் நானும் ஒன்றே என்னும் உணர்வை அவன் அருளி னன்" என்ற அனுபூதி பிறக்கின்றது. 'நான்' 'நீ' என்னும் இரண்டும் அற்ற நிலையே உயர்ந்த ஞானம் ; காண்பான் காணப்படும் பொருள், காட்சி இம்மூன்றும் ஒழிந்த அதீத நிலையே மெய்ஞ்ஞானம். துக்காராம் கூறுகிருர் : "நான் என்னும் நினைவு என்னிடம் நீங்கும்போது, துக்காராம் மறைய, விட்டலரே உள்ளார் ;" "வித்தி லிருந்து மரம் உண்டாகின்றது, மரத்திலிருந்து வித்து உண்டாகிறது ; பகவானே, உனக்கும் எனக்கும் உள்ள

வகைப்படும். இந்நான்கினுள்ளும் மிக உயர்ந்தது மதுர பக்தியே. அதைப் பெற்றவர் கோபிமார்; அவர்கள் கண்ணனைக் கூடும்போது பேரின்பத்தில் ஆழ்தலால், தம்மையும் கண்ணனையும் மறந்துவிடுகின்றனர். மதுர பக்தியின் மிகவுயர்ந்த நிலை மஹாபாவனை யெனப்படும். காமம் இதில் எள்ளளவும் இராது, காம நினைவுடையார் இதனை அறியவும் முடியாது. மதுர பக்தி தோன்றும் போது, உடலுணர்ச்சியே முழுதும் மறைந்துவிடும்; அதில் சிற்றின்ப வாசனையே காணப்படாது. சிற்றின்பத்திற்குக் கோடி மடங்கான பேரின்பமே அப்போது நெஞ்சிற் பெருகும். இந்த பக்தியில் கண்ணபிரானுக்கு எப்படி இன்பத்தை ஊட்டுவது என்ற நினைவொன்றே பக்தனிடத்து நிகழும்; தன்னைப்பற்றிய நினைவே ஒழிந்துபோம்.

பிருந்தாவனத்துக் கிருஷ்ணனோடு கூடிப் பேரின்பம் பெற விரும்புவார் (ஆணுயினும் பெண்ணுயினும் சரி) தம்மை ஒரு கோபியாகக் கருதி வழிபடவேண்டும். இவர்கள் கண்ணனது அடியார்களோடு உறவாடவேண்டும்; கண்ணனது நாமத்தை ஓதுதல்வேண்டும்; அவனது லீலைகளைக் கேட்டல்வேண்டும்; அவர்களது உடலாவது மனமாவது பிருந்தாவனத்து வாழ்தல்வேண்டும்; அவனது திருவடிவத்தை அவனுக எண்ணி வணங்கவேண்டும். இச்செயல்கள் ஐந்தையும் செய்யும்போது கண்ணபிரானது முன்னிலையிலே இருப்பதாகவும் அவனது ஆனந்தத்திற்கென்றே செய்வதாகவும் கருதுதல் வேண்டும். இவ்வைந்து செயல்களில் ஒன்றையேனும் ஒழுங்காகச் சிரத்தையாகச் செய்யின், கிருஷ்ணனிடத்து அன்பும் பக்தியும் உண்டாகும் என்பர் ஸ்ரீசைதன்யர். பகவானது நாமத்தை ஓதுதல் அனைத்திலும் முக்கியமானதென்றும் அந்த சாதனம் ஒன்றே உயர்ந்த இலக்ஷியத்தை அடையப் போதும் என்றும், எவனும் எவ்விடத்தும் எந்நேரத்தும் அதனைச் செய்யலாம் என்றும் அவர் வற்புறுத்துவார்; இதோடு, உயிர்களிடத்து இரக்கமும் வைணவர்களைப் பூசித்தலும் அவசியம் என்பார்.

நாமத்தின் மகிமையைப்பற்றி ஸ்ரீசைதன்யர் கூறுவதாவது :—“பகவானது நாமத்தையும் புகழையும் ஓயாது பாடுக; அதனால் நெஞ்சமாகிய கண்ணாடியிலுள்ள அழுக்கு நீங்கும், காமத்தீ அணைந்துபோம். அவனது நாமத்தை இடைவிடாது பாடிக்கொண்டும், அந்த அமுதத்தை எப்போதும் பருகிக்கொண்டும், அவனது ஆனந்தக் கடலில் ஆழ மூழ்குக. அவனது நாமங்கள் பல. ஒவ்வொன்றினும் அவனது சக்தி உறைகின்றது. அவனது கருணையை அதுவே காட்டுகின்றது. ஒரு புல்லைக் காட்டினும் தாழ்மையாயிரு. தன்னை வெட்டி வீழ்த்தும்வரை நிழலைத் தரும் மரத்தைப்போல் பொறுமையாயிரு, உனக்கு மரியாதையை எண்ணாதே, ஆனால் அனைவர்க்கும் மரியாதை காட்டு, இவ்வாறு வாழ்ந்துகொண்டே நாமத்தைப் பாடுக.” பகவானிடம் பக்தி செய்யவேண்டிய விதத்தைப் பின்வரும் பிரார்த்தனை மூலமாகக் காட்டுகிறார். “பகவானே, உன் நாமத்தைப் பாடும்போதே, என் கண்ணிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக, என் குரல் ஆனந்தத்தால் தழுதழுப்ப, என் உடம்பெல்லாம் உரோமஞ் சிலிர்க்கும் நாள் எப்போது வருமோ என்று ஏங்குகின்றேன். உலகத்திற்குப் பிரபுவாயும் உயிராயும் உள்ளவரே! பொருளுக்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ, காமத்தாலும் புகழாலும் வரும் இன்பத்திற்காகவோ உன்னை நான் வேண்டேன்; நான் எத்தனை பிறவி யெடுத்தாலும் ஒவ்வொன்றினும் உம்மிடம் மாறாத மெய்யன்பையே எனக்கு அளிப்பீராக. உம்மைப் பிரியும் ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகும் நிலை என்று வருமோ? எனது நெஞ்சம் அவ்விடத்துள்ள அன்பால் கொழுந்துவிட்டெரியவும், உம்மோடு இல்லாத இடம் பாழிடமாகத் தோன்றவும் எப்பொழுது பெறுவேனோ? சலியாத பக்தியோடு உமது திருவடியில் நான் வீழ்ந்து கிடப்பேனாக. எல்லாம் உமது திருவுள்ளப்படி ஆகட்டும் என்று நினைந்து, உமது திருக்கரங்களால் என்னை நீர் தழுவுதலை விரும்பி மன்றாடாமலும், உம்மை நீர் மறைத்துக்கொள்ளும்போது அதை ஆற்றாது துடியா

மனும், பொறுக்க ஒண்ணாத அவ்விரண்டையும் சகித்துக் கொண்டும் நீரே கதியெனக் கிடப்பேனாக. உமது அன்பர்களின் உள்ளங்களைக் கவரும் கள்வரே, உமது திருவுளப்படியே எனக்கு யாது செய்யினும் செய்க. அதனால் என்ன? எனது ஆருயிர் அன்பர் நீர் ஒருவரேயன்றோ?”

பக்திசாதனத்தில் ஏழுபடிகள் உண்டு. (1) சிரத்தை அதாவது, பகவானிடத்தும் அவனால் அருளப்பட்ட சாஸ்திரங்களினிடத்தும் நம்பிக்கை. (2) நல்லாரோடு கூடிவாழ்தல், பகவானைக் கண்டுள்ள பரம பாகவதரோடு பழகுதல் மிக நன்று. (3) ஞான சாதனங்களைப் பழகி, அவ்வழியாக மனத்தின் அழுக்கைச் சிறிது சிறிதாகப் போக்கல். (4) மனத்திலிருந்து எல்லாப் பாவங்களையும் எல்லாத் தீய ஆசைகளையும் வேரோடு பறித்து அப்புறப் படுத்தி, அதை முற்றும் தூய்மையாக வைத்திருத்தல். (5) ஞான சாதனங்களை முறையாக விடாது பழகி வருதலும், அவைகளால் பெரும்பயன் விளையும் என்ற நம்பிக்கை வரவர ஓங்கி வலுத்து வருதலும். (6) சாதனங்களிற் பேரவா உண்டாதல். (7) பக்தி சாதனங்களிற் பைத்தியங்கொண்டு, அவைகளில் ஆழ்ந்து ஈடுபடுதல். இந்நிலையில் அவைகளைப் பழகாது விடுதல் நமக்கு முடியாதுபோகும். இதன் பயனாக மனதில் சுத்த ஸத்வம் (தெய்விக இயல்பு) தலையெடுக்கும். கண்ணபிரானிடமிருந்து பெருகும் ஆனந்த சக்தியை ஏற்கும் திறமை உண்டாகும். இந்த ஸுத்த ஸத்வமே பிரேமாங்குரம் (பிரேமையின் முளை) ஆகிய ரதியாக மாறும்.

அன்பும் ரதியும் சூரியனையும் அதன் கிரணங்களையும் போன்றன. இந்த ரதியைப் பெற்றவனிடம் உலகச் சிந்தனையே இராது; கண்ணனைப்பற்றிய சிந்தனைமட்டுமே உள்ளதாகும் இதற்கு ஒன்பது அறிகுறிகள் உள்ளன:— (1) உலக சம்பந்தமான விஷயங்களில் பெருத்த லாபத்தையும் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமை. (2) வாழ்க்கையில் ஒரு கணப்பொழுதையும் வீணாக்காது எப்பொழு

தும் சாதனத்தில் ஈடுபட்டிருத்தல். (3) உலகப் பற்று முழுதும் நீங்கியிருத்தல். (4) புகழை எள்ளளவும் விரும்பாமையும், உண்மையாக உயர்ந்தவனுயினும் தன்னை மிகவும் தாழ்ந்தவனுக மதித்தலும். (5) கண்ணன் கருணை செய்வான் என்பதில் உறுதியான நம்பிக்கை. (6) பகவானேடு கூடிக் கலப்பதற்குப் பெரிதும் ஆசை கொள்ளல். (7) ஹரிநாமத்தைப் பாடுவதில் மிகுந்த ருசி கொள்ளல். (8) பகவானுடைய கலியாண குணங்களைச் சொல்லுவதில் பேரவா. (9) பகவான்வாழும் திவ்விய தேசங்களிலும் கோயில்களிலும் அவனது லீலைகள் நடந்த இடங்களிலும் வாழ்வதில் ஆசைப்படல்.

இந்த ரதியென்னும் முளை நாளடைவில் பிரேமையாக வளரும். பிரேமை உண்டாகும்போது நெஞ்சு நெகிழ்ச்சியடையும்; கண்ணன் எனக்குரியவன், பிறர்க்குரியவனன்று என்ற உணர்ச்சி எழும். நெஞ்சு நெகிழ்ந்து நாமத்தைப் பாடும்போது பக்தன் அழுவான், சிரிப்பான், ஆடுவான், பித்தனைப்போல் ஒழுகுவான். இப்பிரேமை ஸ்நேஹமாக வளரும். ஸ்நேஹம் வந்ததும் மனம் உருகும், கண்ணனைக் காணுவதிலும் அவனது குரலைக் கேட்டலிலும் மாத்திரமே மனம் திருப்தி அடையாது; உருகிய மனம் அன்பினுல் ஜொலிக்கும். ஸ்நேஹம் பின் மானமாக முதிரும்; அப்போது, கண்ணன் மீதுள்ள அபிமானத்தால் அவனது செயல் சற்றே (குழந்தைகட்குத் தாயினிடம் உண்டாவதுபோன்ற) கோபத்தை உண்டுபண்ணும்; அந்த ஊடல் அன்பை அதிகரிக்கச் செய்யும். மானம் பிரணயமாக வளரும். அந்நிலையில் கண்ணனைக் காணும்போது பயபக்தி மறைந்து, கண்ணனைத் தனக்குச் சமமாகக் கருதும் பழக்கமும் நம்பிக்கையும் உண்டாகும். பிரணயம் ராகமாக மலரும். ராகம் என்னும் நிலை வரும்போது, சாதாரணமாகத் துயரம் கொடுக்கும் பொருள்களும் கண்ணனைக் காண ஒரு சந்தர்ப்பத்தை அளிக்குமாயின் மிக்க இனிமையானவையாகும்; சாதாரணமாக இன்பந்தரும்

பொருள்களும் கண்ணனைக் காண ஒரு சந்தர்ப்பத்தைத் தாராது போமாயின், மிக்க துன்பந் தருவனவாகும். ராகம் நாளடைவில் அனுராகமாகக் காய்க்கும். இந் நிலையில் கண்ணனை எப்போதும் அனுபவித்தாலும் அந்த அனுபவம் பழமையானதாகாது புதிதுபுதிதாகத் தோன்றும்; மேலும்மேலும் அனுபவிக்கும் ஆசை உண்டாகும். 'அப்போதைக்கப்போது ஆரா அமுத'மாகும் அது. இந்த அனுராகம் மஹாபாவனையாகப் பழுக்கும். தாஸ்ய ரதி ராகத்தில் முடியும்; ஸக்ய ரதி அனுராகத்தில் கொண்டுவிடும். வாத்ஸல்ய ரதி அனுராகத்தின் உயர்ந்த எல்லைவரை ஒருவரைக்கொண்டு சேர்க்கும். கோபியர்களின் மதுர ரதியே மஹாபாவனையில் ஒருவரைச் செலுத்தும். சாந்த ரதியாவது ஒருவற்கு உண்டானலன்றிக் கண்ணனைக் காண இயலாது. அந்த ரதி பிரேமையில்தான் முடியும்; அந்நிலையில் கண்ணபிரானது எல்லையற்ற சக்திகளையும் பூரண நிலையையும் ஒருவன் தரிசித்து, அவைகளைக் கண்டு அச்சம் கொள்வான். அவனைச் சமமாகக் கருதுவதற்கு வேண்டிய நெருங்கிய உறவும், அவனுக்கு அன்பார்ந்த பணிவிடைகள் செய்யும் நினைவும் உண்டாவதில்லை.

கண்ணன் திவ்ய ரச (இனிமை) வடிவாயுள்ளவன். அவனை அடைபவன் தெய்விக ரசத்தை (இனிய அனுபவத்தை)ப் பெறுகிறன். அதை அனுபவத்தாலன்றி நமக்கு அனுபவத்திலுள்ள ஆசை முற்றுப்பெருது. தன்னயமற்ற தூயபக்தியைக் கண்ணனிடம் செலுத்தும் போதுதான், அவனிடமிருந்து பெருகும் அனுபவ ரசம் உணரப்படும்; அப்போதுதான் பக்தி பக்திரசமாக மாறுகின்றது. இப்பக்திரசமே முன்னே கூறப்பட்ட ஐந்து ரதிகளிலிருந்து விளையும் சாந்தரசம் தாஸ்யரசம் ஸக்ய ரசம் வாத்ஸல்யரசம் மதுரரசம் என்னும் ஐந்து முக்கிய ரசங்களாகப் பரிணமிக்கின்றது. அன்பு எனும் ரதியின் உயர்வுக்குத் தகுந்தபடி ரசமும் உயரும் சாந்த ரசத்திலிருந்து தொடங்கி ரசம் வர வர் முதிர்ந்து, மதுர ரசத்

தில் பூரணமடையும். கண்ணனது இனிமையையும் அழகையும் முழுதும் உணர மதுரரசமொன்றினால் தான் இயலும், அது வேறொன்றிற்கும் எட்டாததாகும்.

இறைவனை நாயகனாக எண்ணி அன்பு செய்யும் நெறியாகிய மதுரபாவனை பெண்ணுடலோடு பிறந்தவர்க்குமட்டும் உரியதன்று; ஆண்களுக்கும் அது உரியதே, ஆண்கட்கும் அது இயல்பானதேயாகும். ஆணாயினும் பெண்ணாயினும் சரி, காம நினைவு மாய்ந்து மனம் தூயதாகும்போதுதான் மதுரபக்தி உதிக்கும். ஆண் பெண்கட்கு இடையே தோன்றுவதைக் காமம் என்பர் அறிவிலார்; கோபிகளின் மனத்தில் எழுந்த கடவுட் பிரேமையே உண்மையான காமமென்பர் அறிஞர். பகவானாகிய கண்ணனொருவனே உண்மையான புருஷன், அவனல்லாத மற்றவையெல்லாம் பிரகிருதியே (பெண்ணே) என்பர் மெய்யுணர்ந்தோர். ஆதலின் பகவானிடம் மக்கட்கு உண்டாகும் பிரேமையே மெய்யான காமமாகும்; ஆண் பெண்கட்கிடையே உண்டாவது போலிக்காமமாகும். ஆண்வேடம் பூண்ட பெண்ணின்மீது நாடக மேடையில் ஒரு பெண்ணிற்கு உண்டாகும் காமம் போன்றதேயாகும். மஹாபாவனையில் மற்ற எல்லாப் பாவனைகளும் அடங்கியுள்ளன; இராதையே இம்மஹா பாவனையின் வடிவமாவாள். மற்றைய கோபிமார்களிடத்து பாவனைகளில் ஒன்றோ அதற்கு மேலும் சிலவோ மட்டும் காணப்படும் மஹாபாவனையில் மற்ற பாவனைகள் எல்லாம் கூடி நிற்பதோடு இன்னும் சில பெருமைகளும் உள்ளன. தனது இன்பத்தைச் சிறிதும் கருதாமல் கண்ணபிரானது இன்பமொன்றையே கருதும் இயல்பு மஹாபாவனையை நாடும் பக்தனுக்கு வேண்டும். பக்தன் தன்னை உயிரற்ற பொருளைப்போல் கண்ணனுக்குப் பரதந்திரமுள்ள (கண்ணனது இச்சைக்கு உட்பட்ட) ஒரு பொருளாகக் கருதல்வேண்டும்; தனது இன்பத்தைக் கருதி வாழும் நினைவையும் வேரோடு பிடுங்கி எறிந்துவிட வேண்டும். நாயகனாகிய இறைவனது அனுபவத்திற்குத்

தன்னை ஒரு கருவியாக அமைத்து வாழல்வேண்டும். இம்மாதிரியான அன்பு ஆணுகப் பிறந்தவர்கட்கும் உண்டாதல் கூடும்.

காதலனைப் பிரிந்து துடிக்கும் காதலிகட்கு எட்டு வித விகாரங்கள் உண்டாகும் என்பர். பகவானைப் பிரிந்து துடிக்கும் மக்களிடத்தும் இந்த எட்டு மாறுபாடுகளும் ஸாத்விகமாக உண்டாகின்றன. அவையாவன:— தம்பித்தல், வியர்த்தல், உரோமஞ்சிலிர்த்தல், குரல் தழதழத்தல், உடல் நடுங்குதல், நிறம் மழுங்குதல், கண்ணீர் பொழிதல், மூர்ச்சித்தல் என்பன. தூய்மையான பக்தியுடையவர் ஆணுயினும், அவர்க்கும் மஹாபாவனையின் உயர்ந்த அனுபவமாகிய திவ்விய உன்மாதனம் என்னும் நிலையும் உண்டாகும். இந்நிலைக்குத் தனிப்பட்ட ஒரு குணம் உண்டு. அதாவது, இது உண்டாகும்போது, கண்ணனைப் பார்த்தாலும் சரி தொட்டாலும் சரி, அதனால் உண்டாகும் இன்பம் கண்ணனைக் கலந்தணைவதினுள்ள ஆனந்த பரவசத்திற்குச் சமமாகும். இன்னும், இம்மேலான இன்பத்தோடு (கண்ணன் கூட இருக்கும் போதும்) அவனைப் பிரிந்ததனால் விளையும் கூரிய துன்பமும் கலந்து நிகழ்கின்றது; இதனால் அவனைக் கூடுவதிலுள்ள ஆசை பன்மடங்காகிறது. இந்த அனுபவம் சாதாரண மக்களால் அடையவொண்ணுததாகும். இராதை பெற்ற இவ்வனுபவத்தை ஸ்ரீ சைதன்யர் ஒருவரே பெற்ருர். கண்ணனும் இராதையும் ஒருங்கே அவதரித்த வடிவமே ஸ்ரீ சைதன்யரது வடிவம். கோபியர்களின் அன்பையும் இராதையின் உயர்ந்த நிலையையும் உபதேசத்தாலும் அனுபவத்தாலும் உலகத்தார்க்கு எடுத்துக்காட்டி, அதன் உண்மையை நிலைநாட்டும் நோக்கத்தோடே அவர் வடஇந்தியாவில் அவதரித்தவராவார்

## (5) கிறிஸ்தவ சித்தாந்தம்

சாதாரண மக்கள் உலகத்தைப் புறக்கண்ணுற் காணும்போது, அது தோன்றுவது ஒருவகை ; மஹான்

கள் அதை ஞானக்கண்ணாற் காணும்போது அதுதோன்றுவது வேறொரு வகை. சாதாரண மக்களது காட்சி தோற்றக்காட்சி எனப்படும்; ஞானிகள் உலகத்தை உண்மையாக உள்ளபடியே காண்கின்றாராதலால், அவர்களது காட்சி மெய்க்காட்சி எனப்படும். உலகமாகிய தோற்றத்திற்கு மெய்ம்மையை அளிப்பது பரம்பொருளே; அதற்கு ஆதாரமாகியும் அதீதமாகியும் இருப்பதும் அப்பொருளே. அழிவற்ற ஆதியான இம்மெய்ப்பொருள் உலகத்தோடு கலந்தும் கடந்தும் நிற்கின்றது. பரம்பொருள் உலகப் பொருள்களனைத்திலும் தோய்ந்து நிற்கும் நிலை அந்தர்யாமி நிலையெனவும், அவைகளில் தோயாது நிற்கும் நிலை அதீத நிலையெனவும் பரநிலையெனவும் பெயர்பெறும். உலகத்தையும் அதனுள் எங்கும் பரந்தும் கரந்தும் நிற்கும் பரம்பொருளையும் ஒருங்கே கண்டு, அக்காட்சிக்கு ஏற்ப வாழும் வாழ்க்கை ஞான வாழ்க்கையாகும்; உலகத்தை மட்டும் கண்டு, அதற்கேற்ப வாழும் வாழ்க்கை உலக வாழ்க்கையாகும். மெய்ப்பொருட் காட்சி புறக்கண்ணுக்கும் அறிவுக் கண்ணுக்கும் எட்டாதது; ஞானக்கண் ஒன்றுக்கே விளங்குவதொன்று. தோற்றக் காட்சியினின்று நீங்கி, மெய்ப்பொருட் காட்சிக்குச் செல்லும் நெறியிலே அனுபூதி நெறியாகும். இந்த நெறி உலகமெங்கும் ஒன்றேதான்; இந்நெறியிற் பல படிகள் அமைந்துள்ளன. "மனிதர்கள் முன்னேறிச் செல்வர் எனினும், அப்படிகள் என்றும் மாறாதவையே" என்பர் ஒரு பெரியார்.

மனிதனுடைய உள்ளத்திற்கு மூன்று தொழில்கள் உள்ளன. அவையாவன: நினைத்தல், இன்பதுன்பங்களை உணர்தல், சங்கற்பித்தல் என்பன. இவைகளை முறையே அறிதல், அன்பு செய்தல், தொழிலியற்றல் என்றும் கூறலாம். மனத்திற்குரிய இம்மூவகைச் சக்திகளுள் ஒவ்வொன்றே ஒவ்வொரு சமயத்தில் தலையெடுத்து நிற்கும்; மேலும், பொதுவாக ஒவ்வொரு சக்தியே ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் மிஞ்சியிருக்கும். அறிவின்

வழியாக நோக்குவார்க்குப் பரம்பொருள் உண்மை வடிவாகவும், அன்பு வழியாக நோக்குவார்க்கு அழகுவடிவாகவும், சங்கற்பத்தின் வழியாக நோக்குவார்க்கு நன்மை வடிவாகவும் புலப்படும். பரம்பொருளைச் சித்திரம் சங்கீதம்போன்ற அழகுக் கலைகளைப் பழகும் முறையால் அடையலாம்; உலகப்பொருள்களின் உண்மையியல்பை அறிவால் நாடும் தத்துவ ஆராய்ச்சி முறையால் அடையலாம்; தனக்கும் பிறர்க்கும் நன்மையைத் தரும் செயல்களைச் செய்யும் நல்லொழுக்க முறையாலும் அடையலாம். ஏதேனும் ஒரு முறையால் அதை அடையும் போது, நமது உண்மையியல்பையும் உலகத்தின் உண்மையியல்பையும், அறிந்து, அதற்குத் தக்கபடி வாழ்ந்து பேரின்பம் பெறுகிறோம். ஞானம் அன்பு சக்தி என்னும் மூன்றும் சேர்ந்து கலந்து ஒன்றுபட்டுநிற்கும் இடமாகிய ஏகமெய்ப்பொருளை அறிதலும், அந்த அறிவுக்குத் தக்கபடி மனித வாழ்க்கையை மாற்றியமைத்தலும், முடிவில் அம்மெய்ப்பொருளோடு பிரிவின்றி ஒன்றாகக் கலத்தலும்-இம்மூன்றுமே அநுபூதி வாழ்க்கையின் ஸாரமாகும். இவ்வாழ்க்கையில் நமது குறுகிய உணர்வு மேலும் மேலும் விரிந்து, முடிவில் எல்லையற்றதாகிறது. உணர்வை விரியச்செய்து, நமக்கு உள்ளே அமர்ந்துள்ள அந்தர்யாமிப் பரம்பொருளோடு நெருங்கி அளவளாவிக் கலந்து நிற்கும்படிப் பழக்குவது ஒருவழி; உணர்வை விரியச் செய்து, நமக்குப் புறத்தே அமர்ந்துள்ள அதீதப் பரம்பொருளோடு ஒன்றுபட்டு நிற்கப் பழக்குவது வேறொரு வழி. இவ்விரண்டில் ஒருவழியிலே படிப்படியாக உணர்வை விரியச்செய்யும் முறையே அநுபூதி நெறி எனப்படும். பரம்பொருளோடு எவ்வழியாலாவது கலத்தலே மனிதனின் வளர்ச்சிக்கு எல்லை. இதுவே வாழ்க்கைப் பயனை எய்துதல், இதுவே தோற்றமாம் உலகச் சிறையிலிருந்து 'நான்' எனும் உணர்ச்சியை விடுவித்தலும், மெய்ப்பொருளுலகத்திலே அதைச் சுதந்திர உணர்ச்சியோடு கூடிய தொண்டு நிறைந்த வாழ்க்கையிற் புகவிடுதலுமாம்.

அநுபூதி நெறியில் ஐந்து படிகள் உள்ளன; அவை யாவன ;—விழித்தல், மாசு நீக்கல், விளக்கம் பெறுதல், தானறுதல், இரண்டறக் கலத்தல் என்பன. விழித்தலாவது, புதுப்பிறவி பெறுதல்; பொறிகட்குத் தோன்றும் நிலையற்ற உலகப் பொருள்களின் மயக்கத்திற்கு உட்பட்டிருத்தலே உறக்கம்; அம்மயக்கம் நீங்கி, மெய்ப்பொருளின் இருப்பைக் காணலே விழித்தல். விழித்தவன் தன்னை அறிகிறான். தனது பிறப்புரிமையாகிய உச்ச நிலையினைக் காண்கிறான். இதன்பின், அதன் அளவற்ற பெருமையோடு தனது அப்போதைய நிலையை ஒப்பிடுகிறான், தன்னை நீசனாகவே கருதுகிறான். அது பொறுக்கவொண்ணாத மன வருத்தத்தை அளிக்கின்றது. ஆகவே, தன்னைத் திருத்தியமைக்க அரும்பாடுபடுகிறான்; தன்னிடமுள்ள மனமாசை ஒழிக்க முயல்கிறான். நாளடைவில் தனது ஐம்பொறிகளை அடக்கி யாண்டு தூய்மை யாக்குகிறான். மாசு நீங்கியபோது, அதுவரை அவன் கண்டறியாதனவும் கேட்டறியாதனவுமான ஆச்சரியங்கள் அவனுக்குத் தென்படுகின்றன. சாதாரண மக்கள் உலகத்தின் ஒரு பகுதியை மட்டும் காண்கின்றனர்; அவர்களுடைய ஐம்பொறிகட்கு உலகம் ஒரு யந்திரமாகவே தோன்றுகிறது. ஆனால் ஞான ஒளி பாயப்பெறும் பொறிகட்கோ உலகம் உயிருள்ளதாகவும் ஞான மயமானதாகவும் தோன்றுகிறது; அதில் அங்கிங்கெனாதபடி எங்கும் ஒரு ஞானப் பிரகாசம் தென்படுகிறது; உலகத்தினுள்ளே மறைந்தும் பரந்தும் நிற்கும் பரம்பொருளினது தரிசனம் கிடைக்கிறது. மேலும் அப்பரம்பொருளின் வாழ்வில் தன் வாழ்வு ஒரு பகுதியாவது புலப்படுகின்றது; தன் வாழ்வைப் பூரணமாக்கவும், பரம்பொருளின் வாழ்வோடு அதை ஒன்றுபடுத்தவும் தடையாயிருப்பது 'தான்' எனும் உணர்ச்சியே என்பதும் விளங்குகிறது. இதனால் 'தான்' எனும் அகங்காரத்தை ஒழிக்கும் முயற்சி அவனிடம் குடிகொள்கிறது. பரம்பொருளின் சங்கற்பத்திற்குத் தன் சங்கற்பம் முரணாகாது, ஒத்து நடக்கும்படி, அதைப் பயிற்றியும்

தூயதாக்கியும் வருகிறான். கடைசியாகத் தன்னையே முழுதும் ஒப்புவித்துவிட்டுத் தனது அன்பைப் பூரணமாக்குகிறான். அப்போது வளர்தல் என்னும் நிலை (தான் வரவர வளர்ந்து வருவதான உணர்ச்சி) நழுவி, பூரணமாயிருத்தல் என்னும் நிலை (தான் எப்போதும் பரம்பொருளோடு ஒன்றித்து நிற்கும் உணர்ச்சி) கைகூடுகிறது. இதுவே மனிதனது உண்மையான உயர்ந்த நிலை. இம்மாதிரியான ஒன்றித்த நிலையில் உலகமக்கட்குத் தொண்டு செய்யும் முயற்சி தானாகவே உண்டாகி வளர்ந்து பெருகுகிறது. இம்மாதிரியான அநுபூதிமான்களது வாழ்க்கையால் உலகம் உத்தமமான நன்மையை அடைந்து, புத்துயிரையும் புது வாழ்வையும் பெறுகிறது.

இனி முற்கூறிய படிகளைச் சற்று விரிவாக ஆராய்வோம். முதலாவது விழித்தல். கருப்பையாகிய சிறையினின்றும் விடுபட்டு உலகிற் பிறத்தல் மனிதர்க்கு முதற் பிறப்பு. இப்பிறப்பில் பொறிகட்குத் தோன்றும் உலகமே தென்படும்; தனக்காகவே அவ்வுலகம் படைக்கப் பட்டிருப்பதாகத் தோன்றும். உலகமயக்கம் எனும் சிறையினின்றும் விடுபட்டதும், தன்னையோ உலகத்தையோ பற்றிய உண்மையான அறிவு திடீரென உதிக்கும்; அப்போது அவன் புதிய உலகிற் பிறக்கிறான், அவனுக்கு அது இரண்டாவதான ஞானப் பிறப்பு. அதற்குமுன் தன்னையோ உலகத்தையோ சிறியதான சுருங்கியதான எல்லைக்குட்பட்டதான ஒரு பொருளாக நினைத்தவன் இப்போது பெரியதான பரந்துள்ள எல்லையற்ற ஒரு பொருளாக அறிகிறான். பொதுவாக இவ்வுணர்ச்சி (விழிப்பு) திடீரென ஒருவனிடம் உதிப்பது வழக்கம்; ஆனால் சிலரிடத்தில் மெல்ல மெல்லச் சிறிது சிறிதாகவும் உண்டாகலாம். இந்த ஞான உதயத்தில் தனக்குள்ளே இருக்கும் பரம்பொருளின் அந்தர்யாமி நிலை வடிவம் புலப்படலாம். அதற்குப்பதிலாக, புறத்தே உலகப் பொருள்களைக் கடந்து நிற்கும் பரம்பொருளின் அதீத நிலைவடிவமும் புலப்படலாம். தனக்குள்ளே நோக்கு

பவன் தனக்கும் பரம்பொருளுக்குமுள்ள சம்பந்தத்தை உணர்கிறான். பரம்பொருளின் அன்பிற்கு வசப்படுகிறான். தன் உயிர்க்கு உயிராய் விளங்கும் அப்பரம்பொருளின் அளவற்ற பேரன்பு தன்னைச் சூழ்ந்து பேணிப் பாதுகாத்து வரும் காட்சியைப் பெறுகிறான். ஞான ஒளியைப் பெறும் சமயம் புற உலகத்தை நோக்குபவன் அங்கே திவ்விய அழகைக் காண்கிறான்; உலகத்திற்கும் தனக்குமுள்ள சம்பந்தத்தை அறிகிறான்; உலக முழுதும் விரிந்த பரந்த அகண்ட ஆனந்த மயமான ஒளி திகழ்வதைக் காண்கிறான், பரம்பொருளின் அதீத நிலைக்குரிய பெருமையையும் சக்தியையும் கண்டு, ஒருவாறு அச்சமும் அடைகிறான். முந்தின காட்சி நாமரூபங்களோடு ஓரிடத்தில் தோன்றும் திவ்விய காட்சியாகவும், பிந்தினது நாமரூபங்களற்ற அகண்டமான காட்சியாகவும் அமையும். பரம்பொருள் அகத்தும் புறத்தும் அந்தர்யாமியாயும் அதீதமாயும் இருப்பது உண்மையாயினும், இரண்டு நிலைகளில் ஒன்றே உணரப்படுகிறது; அவரவர்கட்கு எது காட்சிக்கு எளியதாகுமோ, அதுவே காணப்படுகின்றது. முதல்வகை விழிப்புப் பெற்றவர்க்குள் ஒரு பெரியார் "அளவற்ற பேரன்பு என்னும் அம்பினுக்கு இலக்காகிய என் நெஞ்சம் ஒரு பெரும் புண்ணைப் பெற்றுள்ளது. அப்புண்ணின் ஆனந்தத்தை என் சொல்வேன்! அது ஒருக்காலும் ஆறாத புண்ணாக வேண்டும் என்பதே எனது விருப்பம்" என்றனர். நெஞ்சத்தை ஊடுருவிப் பாயும் இந்த ஆனந்தத்தை வேறொருவர் ஓர் அன்புக் கனலாக வருணிக்கிறார். சில மஹான்களுடைய வாழ்க்கையில் இந்த அன்பு விரைவில் செயலாக மாறிவிடுகிறது. "இனி உலகம் என்னைவிட்டது, பாவம் என்னை விட்டு நீங்கிற்று" என்றும், "இன்று முதல் யான் எனக்கென ஒன்றும் செய்யேன், எனது உடல் பொருள் ஆவிகளை உமக்கே ஒப்படைத்தேன்" என்றும் சிலர் கூறுகின்றனர், இரண்டாவதுவகை விழிப்புப் பெற்றவர்கள் தாம் உலகமெங்கும் ஒரு பேரொளியும் பேருயிரும் பேரன்பும் கண்டதாகக் கூறுகின்றனர். "பரம்பொரு

ளின் இருப்பையும் அவரது சக்தியையும் நான் உணர்ந்ததும், உலகப்பற்று உடனே கழன்றது. அவரிடத்தில் அன்று எனக்கு உண்டான அன்பு அதன்பின் நான் வாழ்ந்த நாற்பது ஆண்டுகளிலும் கூடிற்றே குறைந்ததோ என்று என்னால் சொல்ல முடியவில்லை'' என்றார் ஒருவர். "இயற்கையில் யான் கண்ட பொருள்களெல்லாம் மேன்மை பெற்று விளங்கின; ஒவ்வொன்றிலும் ஒரு பேரழகைக் கண்டேன், ஒரு புதிய உலகத்திற் பிறந்தது போலாயிற்று. ஒரு புதிய வாழ்க்கையைப் பெற்றேன்'' என்றார் வேறொருவர். ஞான வாழ்க்கையின் கதவு ஒருவாறு திருந்திருப்பதாகவும், அதன் வழியாக நோக்கும் போது ஒரு புதிய தெய்விக வாழ்வு கண்முன் தோன்றுவதாகவும் இன்னொருவர் உரைக்கின்றனர். இதுவே இருவகையில் விழிப்புப் பெற்றவர்க்கும் பொதுவான உண்மை; திறந்திருக்கும் வாயில் வழியாக உள்ளே நுழைந்து அப்புறம் செல்லுதல் இந்நிலையில் இவர்கட்கு முடியாததாகின்றது.

இரண்டாவது படி மாசு நீக்கல். பரம்பொருளின் எல்லையற்ற பெருமையைக் கண்டவன் பின் தன்னை நோக்குகிறான். தன்னிடமுள்ள மாசும் மயக்கமும் மோகமும் திவ்விய காட்சியை எப்போதும் பெறுதற்கு இடையூறாவதை உணர்கிறான். தன்னிடமுள்ள அழுக்கே உலகத்தை அழுக்குள்ளதாகத் தோன்றச் செய்யும் காரணம் என்பதை அறிகிறான். தனது காமாலை நோயே உலகத்தை மஞ்சளாகத் தோன்றச் செய்தலை உணர்ந்ததும், தன்னிடமுள்ள நோயைப் போக்க முயல்கிறான். பரம புருடனைக் கண்டதுமே காதல்கொண்ட நங்கை தன்னிடம் அவனைப் பெறுதற்குரிய தகுதி இல்லாமையை நன்குணர்கிறாள்; உடனே தன் அழுக்கைப் போக்கிக் கொள்ளவும், தன்னைத் தக்கவாறு ஆடையாபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளவும் ஆசை கொள்கிறாள். ஞான விழிப்புப் பெற்றவன் தனது அகந்தையை ஒழிக்கவேண்டும், பணிவை ஆபரணமாகப் பூணவேண்டும். அவனது

உள்ளத்தில் எழுந்த அன்பு எரியத் தொடங்கி, அவனிடமுள்ள உலக ஆசைகளை நீறாக்கவேண்டும். விழிக்குமுன் கண்ட உலகம் மறையவேண்டும், விழித்த கணத்துக் கண்ட புதிய உலகம் முழுதும் எப்போதும் திகழவேண்டும். அதற்கு இருவகை முயற்சிகள் வேண்டியுள்ளன :—(1) பற்றை ஒழிப்பதனால் மனமாசைப் போக்கல் (2) புது வாழ்க்கைக்கு இசைவாக அமைத்துக் கொள்ளப் பழகல். உலகப்பற்றை அறுக்க வேண்டுபவன் மூன்று வகையான வறுமைகளைக் கைக்கொள்கிறான். அவையாவன :—(1) பொருள்வறுமை, அதாவது உடைமைகளைத் துறத்தல் ; (2) ஐம்புல இன்பவறுமை, அதாவது புலன்கட்கு வேண்டிய போகங்களையும் மாதர் போகத்தையும் நாடமறுத்தல், பிரம்மசரிய விரதத்தைப் பற்றல் ; (3) சங்கற்பவறுமை, அதாவது கடவுளுக்கோ பெரியார்க்கோ சாஸ்திர விதிகட்கோ முற்றும் அடங்கியொழுகுதல், கீழ்ப்படிதல். இம்மூன்று வகைப்பட்ட வறுமைகளும் தூய்மையின் மூன்று கிளைகளேயாம். இவ்வறுமைகளை ஒருவன் தானாகவிரும்பித் தன்மீது சுமத்திக்கொண்டாலன்றி அவனது மனம் தூய்மையடையாது. அவ்வறுமைகளால் அடையும் துன்பம் அவனது ஒழுக்கத்தைப் புடமிட்டு, மாற்றுயர்ந்த பொன்போல அதை ஜொலிக்கச் செய்யும். பரம்பொருளல்லாத வேறொன்றை விரும்புவதும் அவனுக்கு மன அழுக்காகும். பலநாள் வருந்திப் பழகியபின், இவ்வறுமைகளே பெறற்கரிய செல்வங்களாகத் தோன்றும் ; முதலிற்பட்ட கடுந்துன்பம் பின்பு ஆனந்தமாகமாறும். தன்னது பிறரது என்ற வேற்றுமை அப்போது ஒழியும் ; எல்லாப் பொருள்களும் கடவுளைச் சேர்ந்தன, எல்லாரும் கடவுளைச் சேர்ந்தவர் என்ற உணர்ச்சி உண்டாகும். புற உலகப் பொருள்கள் இல்லாமை மட்டும் போதாது, அவைகளின்மீது உள்ள பற்றும் ஒழியவேண்டும் ; சில பொருள்களை ஒருவேளை பெற்றிருக்கநேரினும், அவைகளிற் பற்றில்லாமை வேண்டும். புறத்துறவைக்காட்டிலும் அகத்துறவே அவசியமானதாகும். இனி இரண்

டாவதாக, புதுவாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டிய திறமையைப் பெறும்பொருட்டு, ஒருவன் இழிவாகவும் துன்பமாகவும் எண்ணும் சில செயல்களையும் விரும்பிச் செய்யப் பழகல்வேண்டும். புலன்களின் சேட்டையிலிருந்து விடுபடவும், அகந்தையை ஒழிக்கவும் இப்பழக்கம் மிகவும் பயன்படும். அன்புடையவனுக்கு எச்செயலும் தாழ்ந்ததாகவும் அருவருப்புள்ளதாகவும் தோன்றாது. இவ்வுண்மைகளை அறிந்த பெரியார் சிலர் கந்தையுடுத்தியும் ஒட்டையேந்தியும் பிச்சையேற்றும் வாழ்வர் ; சிலர் அன்போடும் பணிவோடும் குஷ்டரோகிகட்கும் நோயாளர்க்கும் அசுத்தம் நிறைந்தவர்க்கும் தொண்டு செய்வர் முற்கூறிய இருவகைப்பட்ட பழக்கங்களினுலும் மனம் தூயதாகும், துன்பத்தையும் இன்பமாகக் கருதும். இந்நிலையை அடையப் பலநாள் செல்லும். இதற்கிடையே தோல்வியும் வெற்றியும் துன்பமும் இன்பமும் மாறிமாறி வந்துகொண்டே யிருக்கும். நடக்கக் கற்கும் குழந்தை மாறிமாறி நடப்பதும் தவறி விழுவதும் போன்றது அது ; ஆனல் ஒரு நாள் குழந்தைக்குத் தள்ளாட்டம் நீங்கி எளிதாக நடக்கும் பழக்கம் ஏற்பட்டுவிடும். அதுபோல் பழக்க முதிர்ச்சியால் சாதகன் தன் புதிய வாழ்க்கைக்கு வேண்டும் திறமை பெற்றதை உணர்கிறுன். அப்போது அழுக்குநீங்கிய தூயமனம் பெற்றுப் புதிய வாழ்க்கையிற் புகுகின்றுன்

ஞானவிளக்கம் பெறுதலே மூன்றுவதுபடி. கண்விழித்தவன் தான் தூரத்தேகண்ட ஞான உலகத்தில் இப்போது புகுந்து விட்டதை உணர்கிறுன். இதுமுதலே உண்மையான ஞானவாழ்க்கை தொடங்குகிறது ; இந்நிலையில்தான் சாதகன் பரம்பொருளை அனுபவிக்கத் தொடங்குகிறுன்; அந்த ஆநந்தத்தில் மயங்கி அதன் வசமாகிறுன். ஒரு தெய்வவெறிஅவனிடம் உண்டாகிறது. ஞானநிலை உண்டு என்பதை முதற்படியிற் கண்டவன் இப்போது அதைப் பெறுகிறுன். இவ்வகையான ஞானவிளக்கத்தைச் சில சமயங்களில் கவிகளும் சித்திர

நிபுணர்களும் சங்கீத விற்பன்னரும் பெறுவதுண்டு. பெற்றவர்கள் எவராயினும், அவர்களுடைய கவியிலோ சித்திரத்திலோ பாட்டிலோ தெய்விக ஆனந்தம் ஊட்டும் தன்மை ஒருவாறு வந்தமையும்; ஆனால் அவ்விளக்கம் பெறும் ஞானிகளிடத்துமட்டும்தான் பேரின்பம் வெள்ளமெனப் பெருகும். இவர்களே அதை முற்றக் குடித்து முழுவெறி கொண்டவர்களாவார். இவ்வாறு உள்ளத்திலே தெய்விக ஜோதியின் விளக்கம் பெற்றவரிடம் மூன்று இலக்கணங்கள் காணப்படும் :—(1) அதீதப் பரம்பொருளின் முன்னிலையில் இருப்பதான ஓர் உணர்ச்சியும் அதனால் விளையும் ஆனந்தமும் உண்டாகும். சாதகனுக்குத் தான்வேறு கடவுள் வேறு என்ற எண்ணம் இருக்கும்; இந்நிலையில் இருவரும் ஒன்றாகக் கலந்து விடுவதில்லை. (2) அவனுக்கு உண்டாகும் திவ்விய காட்சியின் பயனாக, உலகத்தின் உண்மையான நிலையும் உலக வாழ்க்கையின் உண்மையான இயல்பும் களங்கமில்லாது தெளிவாக விளங்கும். அக்காட்சியை இதுவரையும் மறைத்து வந்த திரைகள் இப்போது முற்றிலும் நீங்கிவிடும். உலகமெங்கும் பரம்பொருள் புகுந்து பரந்து அனைத்தையும் ஆட்டிவைப்பது நேராகக் காணப்படும். (3) திவ்வியக் காட்சிகளும், தெய்விகக் குரல்கள் காதில் விழுதலும், இறைவனோடு நேராகப் பேசுதலும், திடீரெனக் கவி பாடும் ஆற்றல் முதலிய அற்புத அறிவாற்றல்கள் கிளம்பி வெளிப்படுதலும்—இவை யெல்லாம் தாமாக நிகழ்கின்றன. இம்மூன்று இலக்கணங்களில் ஒன்றோ இரண்டோ மூன்றுமோ விளக்கம் பெற்றவரிடத்துக் காணப்படும். இவைகள் எப்போதும் இடைவிடாது நாட்கணக்காகவும் மாசக்கணக்காகவும் நிகழவேண்டும் என்னும் அவசியமில்லை. விளக்கம் திடீரெனப் பல அமயங்களிலே உண்டாக, அவைகட்கிடையே மனச்சோர்வும் துயரமும் தகுதியின்மையைப் பற்றிய உணர்ச்சியும் உண்டாகலாம். மாசு நீக்கும் நிலையும் விளக்கம் பெறும் நிலையும் கலந்து மாறிமாறி வருதலும் உண்டு. புறநோக்குடையாரிடத்து முதலாவது இலக்கணமும் உள்நோக்குடையாரிடத்து

இரண்டாவது இலக்கணமும் பொதுவாக அமையும். பரம்பொருளின் ஸாந்நித்ய உணர்ச்சி சாதகனது வாழ்க்கையிற் கலந்தும் அதனை அடக்கியும் ஆண்டும் வரும்; அவ் வாழ்க்கையை அதன் உருத்தெரிய வொட்டாமல் தன்மய மாக்கிவிடாது. பரம்பொருளினை அவன் அனுபவித்தாலும், அது நேரில் தோன்றாமல் மறைந்தும் மாறு வேடம் பூண்டும் அவனைத் தழுவி ஆனந்தம் விளைக்கின்றது. தனது திவ்விய அனுபவத்திலுள்ள ருசியை இடையிடையே தந்து, அதிலுள்ள ஆசையை வளர்த்துவருகிறது; ஆயினும் சாதகன் ஆசைப்பட்டபடி அனுபவிக்க அது இடம் தருவதில்லை. உணர்வு அகமுகப்படும் இயல்புடையார்க்குப் பரம்பொருளின் அன்பு தம் ஆன்மாவிற்குள் பாய்வதாகவும், தன்னை நோக்கி ஆன்மாவைக் கவர்வதாகவும் தோன்றும்; உணர்வு புறமுகமாகும் இயல்புடையார்க்கு அதீதப் பரம்பொருள் வெளியே பேரொளி வடிவாய் உலகிற்கு ஆதியாய்த் திகழ்வதாகவும், அதை நோக்கித் தமது உணர்வு விரிவதாகவும் தோன்றும். இருவகையாரும் தாம் தாம் காணும் பரம்பொருளின் வடிவை அணுகவும், அப் பரவாழ்க்கையோடு தமது வாழ்க்கையை ஒன்றுபடுத்தவும் முயல்கின்றனர். ஒரு பெரியார் பறவைகளையும் கொடிய விலங்குகளையும் தமது சகோதரர்களாகக் கருதிப் பழகலானார். அவை தமது பிரியப்படியே நடப்பதையும் கண்டார். மற்றொருவர் தோட்டத்தின் வழியாகச் செல்லும்போது, அங்குள்ள மரங்களையும் பறவைகளையும் தம்முடன் இறைவனை வழிபட வேண்டினார்; உடனே மரங்கள் தமது கிளைகளைத் தாழ்த்தி வணங்கி, இலைகளாகிய கைகளைக் கூப்பி மலர்களை விரித்து மணம் வீசின; பறவைகள் பாடிக்கொண்டே அவரது கைகளிலும் தோளிலும் அமர்ந்தன. தமக்குள்ளே பரம்பொருளைக் காண்பார் புறத்தும் அதையே காண்பார், புறத்துக் காண்பார் தம் முள்ளும் காண்பார். இக்காரணத்தால் நாளடைவில் உலகம் முழுவதும் பரம்பொருளிடத்தும், பரம்பொருள் உலக முழுவதிலும் இருத்தல் காணப்படுகின்றது. இந்நிலை

அன்பினால் உண்டாகி, அன்பை வளர்த்துவருகின்றது. உள்நோக்கு புறநோக்கு இரண்டிற்கும் உள்ள வேறுபாடு மறைகிறது. விளக்கம் பெறுதலாகிய இந்நிலையில் உணர்வு உயர்ந்த படிகளில் உலவுகிறது; எனினும் அன்பெனும் ஏணியின் உச்சிவரை அது சென்றதாகாது. பாதிப் பிரயாணமே முடிந்ததாகும். சாதகன் தன் உள்ளத்திலே ஒளிரும் தெய்விக ஒளி உலகப் பொருள்களனைத்தையும் தெய்விகமாக்குவதை மட்டும் காண்கிறான்.

விளக்க நிலைக்கு அடுத்த நான்காவதான தானறல் என்னும் படி ஆன்மாவின் இருளடர்ந்த இரவுநிலை யெனப் படுவதுமுண்டு. அனுபூதி நெறியில் இறங்குவார்க்கு இன்ப நிலையும் துன்ப நிலையும் மாறிமாறி வருதலே இயல்பாகும். விழிப்பு நிலையில் பெற்ற இன்பத்துக்குப்பின் மாசு நீக்கும் நிலையில் பெரும் துயரம் வருகிறது; அதுபோல் விளக்கம் பெறும் நிலைக்குப் பின் நள்ளிருளில் நடக்கும் துயரநெறி வந்துசேரும். மூன்றாவது நெறியிற் பெறும் திவ்வியக் காட்சிகளும் குரல்களும் ஆனந்தமும் ஒளியும் இந்நிலையில் மறைந்துவிடுகின்றன. பேருக்கத்திற்குப் பின் பெருந் தளர்ச்சியும், ஏற்றத்திற்குப்பின் இறக்கமும், கூடுதலுக்குப் பின் பிரிதலும் வருதல் உலக இயற்கையேயாம். விளக்கம் பூரணமாகப் பெறும்போது, அதிலே மனம் முழுத் திருப்தி அடைந்துவிடும்; அதுவே அனுபூதி நெறியின் முடிவான நிலையென நினைத்துக்கொள்ளும். ஆனால் விரைவில் மனம் சோர்வுறலும், விளக்கம் மறையும்; இருளும் துயரமும் அடர்ந்ததாகி ஆழ்ந்ததாகிப் பரம்பொருளோடு அளவளாவுதலைத் தடுத்துவிடும். இந்நிலையே இருளடர்ந்த இரவு எனப்படுகிறது. மூன்றாவது நிலையை ஆனந்த பரவசம் எனவும், இதனைத் துயரப் பரவசம் எனவும் கூறுவர் சிலர். இதில் நேரும் பிரிவுத்துயரமும் விரும்பத் தக்கதாக இருக்கும் என்பர், இந்நெறியிற் செல்லும் அன்பர். இந்நிலையிற்பட்ட துயரத்தை வருணிக்கும் ஒரு பெரியார் "கடவுளின் தூய்மையை நான் மிக நன்றாக உணரப்பெற்றேன்; ஆனால் எனது நிலைமை மேலும்

8

மேலும் அசுத்தமானவைதயே உணர்ந்தேன். ஒருநிலையில் அழகையோ ஆனந்தத்தையோ உணர்ந்தபின் உடனே அதற்கு எதிரான தீய நிலையில் தள்ளப்படலானேன். நான் வெறுத்த தீயசெயலை அப்போது செய்யலானேன்; நான் விரும்பிய நற்செயலைச் செய்ய இயலாதுபோனேன். திவ்விய ஆனந்தத்திற்குப் பதிலாகக் கொடிய நரகத் துன்பத்தில் ஆழ்ந்தேன். என்னிடம் நன்மையே சிறிதும் இல்லாததாகத் தோன்றிற்று. இக்கொடிய நிலைமையே எப்போதும் குடிகொண்டுவிடுமோ என்றும் தோன்றிற்று'' என்று கூறியுள்ளார். இது முழுவதும் உண்மையே. மேல்நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக நினைக்கும்போதே ஒருவர் இந்நிலையில் தாம் விரைவில் படுகுழியில் விழுந்துவிடுவதை உணர்கிறார். ஆயினும் உண்மை யாதெனின், இதுவரை முன்னேறிச் சென்ற பெரியார்கள் அப்போது தூய்மையை இழந்து பின்னடைபவரல்லர்; இவ்வுணர்ச்சியே அவர்களுடைய தூய்மையைப் பூரணமாக்குகின்றது முன்பு பெற்றது ஐம்புல இன்ப ஆசையற்ற தூய்மையே; இனிப்பெற இருப்பது அதற்கும் மேலான 'தான்' அற்ற தூய்மையே. "என் செயலாவது யாதொன்றுமில்லை, இனித்தெய்வமே, உன் செயலே என்றுணரப் பெற்றேன்" என்ற உணர்ச்சி சாதகரிடத்துக் குடிகொள்வதற்காகவே, இவ்வளவு துயரமும் விளைகின்றது. இறைவனது நினைவிற்கு இசைந்தொழுகும் தன்மை இந்நிலையில் வரவர மிகுகின்றது. இரண்டாவது நிலைக்குரிய துயரத்தைக் காட்டிலும் இப்போதுள்ள துயரம் பன்மடங்கு கூரியதாகும். "எனது இன்னுயிர்க் காதலர் என்னிடம் அன்புத் தீயை மூட்டிவிட்டுப் பின் என்னை மறந்து கைவிட்டனரே" என்று வருந்துவர் சிலர்; "என் தகுதியின்மையை என்னென்றுரைப்பது! நான் நீசனேன், நிறையொன்றும் இல்லேன், அன்பு சற்றும் இல்லேன்" என்று தம்மை நொந்துகொள்வர் சிலர்; "பொன்னாசையும் காம இச்சையும் என்னை மயக்குகின்றனவே! எத்தனை சோதனைகள்! என் அறிவும் மங்குகின்றதே! என் செய்வேன்! நீயே

கதி'' என்று சரண்புகுவார் சிலர்; "இக உலகை விட்டேன், பரவுலகத்தையும் பெறேன், எனக்குத் துணையாவார் யார்?" என்று ஏங்குவர் சிலர்; "எனக்கு ஆறுதல் அளிக்கத் துயரத்தையே புகலாகக் கொண்டுவிட்டேன்'' என்று கூறினார் ஒரு பெரியார். இந்நிலையில் சாதகனுக்குத் தன்னிடத்துள்ள அபிமானத்தை வேரறுக்கத் தன்னிடத்து வெறுப்பு என்னும் கத்தியை இறைவன் அளிக்கிறான். 'தன்னால் ஒன்றும் செய்ய இயலவில்லையே' என்ற இவ்வுணர்ச்சி உண்மையாகவே சாதகனது ஞான முன்னேறத்திற்கு அறிகுறியாகின்றது. சூரியனது ஒளி பெருகப் பெருக, அதைக் காணும் கண்ணொளி மேலும் மேலும் மழுங்கி வருகிறது, கூச்சமிகுதியால் கண் பார்வையை இழக்கின்றது; இது போன்றே ஞானப் பேரொளியின் மிகுதியைக் காண இயலாத ஆன்மக் கண்ணுக்கு இருளே எங்கும் சூழ்கிறது. "யான்'' எனும் உணர்ச்சியை ஒழிக்கும் முயற்சியே மெய்ப்பொருளின் ஒளியை ஆனந்தகர மாக்காது. துக்ககர மாக்குகிறது. சாதகன் இரண்டாவது படியில் கடுந்தவம் பழகும்போது தன்மீது தானாகத் துயரத்தைச் சுமத்திக் கொண்டான்; இப்போது இவனது பெருமையை அறியமாட்டாத உலகத்தார் இவன்மீது காரணமின்றிப் பெரும் பழியையும் கடும் துயரத்தையும் சுமத்துவார். முன்பு சாதகனிடம் அன்பும் நன்றியும் காட்டிய நண்பர் இப்போது வெறுப்பும் துரோகமும் கொண்ட பகைவராவார். இதுவரை தனது மார்பின்மீது கிடத்திப் பேணிவந்த அன்பனை இறைவன் இப்போது கொடிய பகைவரிடம் எறிந்துவிட்டுத் தான் அகன்றுவிடுவான். கடவுளாலும் மனிதனாலும் கைவிடப்பட்ட சாதகன் துன்பக் கடலுள் அமிழ்கிறான். ஆயினும், இந்நிலையில் சாதகன் விரும்பினும் விரும்பாவிட்டாலும், இறைவனது அருளாலே முன்னேறி வருவான். ஆணவ உணர்ச்சியும் இறைவனைக் காணும் ஆசையும் கழலுகின்றன, "யான் ஒன்றுமில்லை, என்னிடம் ஒன்றுமில்லை, எனக்கு ஏதும் ஆசையில்லை'' என்ற நிலையே வருகிறது. இதுவே தன்னை முற்றும் இறைவ

னிடம் ஒப்புவிக்கும் நிலையாகும். ஜீவபோதம் மரண மடைதல் வேண்டும்; அதன் பின்னரே பரம்பொருளின் போதம் தலையெடுக்கும். சிலுவையில் உயிரிழந்த பின்பு தான் புத்துயிர் பெற்றெழல் இயலும். ‘நான்’ நீடூழி வாழ வேண்டுமாயின், ‘நான்’ சாதல் வேண்டும் என்பது மிகப்பொருத்தமாகும்.

இதற்கு அடுத்தபடியாகிய ஐக்கிய நிலையில் ஜீவனுடைய போதம் பரம்பொருளின் போதத்தோடு ஒன்றுபட்டு விடுகிறது. இந்த ஐக்கியத்தை அடைந்த மஹான்கள் உலகத்தின் நடுவே வாழ்ந்தாலும் உலகத்தோடு ஒட்டாதிருப்பவரே, ஞான உலகத்தில் வாழ்பவரே. ஐக்கிய நிலையைப் புறநோக்குடைய ஞானியர், ஆன்மாவே பரம்பொருளாக மாறிவிடும் நிலை என்பர். உள்நோக்குடைய பக்தர்கள் இந்நிலையை ஆன்ம நாயகி இறைவனாகிய நாயகனோடுகூடி மகிழும் நிலை என்பர். இவ்வாறு இருவகையாகக் கூறப்படினும், இருவரது அனுபவமும் ஒன்றேயாம்; அவரவர் தமதமது அறிவு அறிந்த வகைப்படியே உரைக்கும் விதம்தான் வேறாகும். இந்நிலையை அடைந்தார்க்குரிய அறிகுறிகள் மூன்று :—(1) மெய்ப் பொருளோடு ஒன்றித்து நிற்றல்; தான் என்னும் உணர்ச்சி இறந்து, மெய்ப்பொருளே யாவும், எல்லாம் அதன் செயல் என்ற உறுதியோடு முற்றும் அதறகு இசைந்து வாழ்தல்; (2) விடுதலை பெற்றஉணர்ச்சியும் வீர முயற்சியும்; பரம் பொருளின் எல்லையற்ற சக்தியைப்பெற்று அதன் அருள் வழியே ஒழுகுவதன் பயனாக, எல்லாப் பந்தங்களினின்றும் முற்றும் விடுபட்டதாக உணர்தலும், உலக மக்கட்கு மிக்க நன்மையைத் தரும் பெரும் முயற்சிகளில் ஈடுபடுதலும்; (3) ஞான ஊற்றாதல்; தம்மைச் சார்ந்த பிறர்க்கு ஞானசக்தியை ஊட்டும் ஒரு நிலையமாதல். “நான் உள்ளேன், ஆயினும் நானன்று, என்னுள்ளிருக்கும் இறைவனே உள்ளான்” என்பர் இந்நிலையை அடைந்தவர். இது இறைவனோடு வாழும் வாழ்க்கையன்று, இறைவனிடம் வாழும் வாழ்க்கையாகும்.

மெய்ப்பொருளை ஞானமயமாகவும் வடிவற்ற அதீதப் பொருளாகவும் கருதுபவர் மனிதவாழ்க்கையின் இலக்ஷியத்தை 'அதுவாதல்' என்று குறிப்பர்; ஆன்மா மறந்த இயல்பை மறுபடியும் உணர்கின்றது, இழந்த நிலையை மீண்டும் அடைகிறது என்று சொல்லுவர். மெய்ப்பொருளை வடிவமுள்ள குணமுள்ள புருடராகக் கருதுவார் அதே இலக்ஷியத்தை 'அன்பால் இரண்டறக் கலத்தல்' என்ற சொற்களால் குறிப்பிடுவர்; பாலும் நீரும்போல ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்தாலும், இரண்டும் வெவ்வேறு உண்மைகள் என்பர். ஆயினும் இருவர்க்கும் ஐக்கியமும் அனுபவமும் ஒன்றேயாம்.

## (6) இஸ்லாமிய (ஸூபி) சித்தாந்தம்

இஸ்லாம் மதம் பக்தியைப் பெரிதும் வற்புறுத்துகின்றது. பக்திசாதனங்களைப் பழகுவதில் ஒருவர் முழுதும் ஈடுபடல் வேண்டும் என்பதும், கடவுளுக்காக மட்டும் ஒருவர் வாழவேண்டும் என்பதும், அம்மதத்தின் முக்கிய கோட்பாடுகள். கடவுளை நாடுபவர் பொருளையும் இன்பத்தையும் புகழையும் பொருட்படுத்தாது துறத்தல் வேண்டும்; பக்தியைப் பழகுதற்கும் வளர்த்தற்கும் உலக மக்களிடமிருந்து விலகித் தனியிடம் செல்லுதலும் வேண்டும். மகம்மது நபிகளின் தோழர்களும் ஆதிகாலத்திய முஸ்லீம்களும் முற்கூறியவாறே தமது வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். மகம்மது நபிகள் "ஒன்றாகிய பரம்பொருளைத் தவிர வேறு கடவுள் இல்லையென்ற உணர்ச்சியோடு உயிரை விடுபவன் முத்தியடைவான்" என்று கூறியுள்ளார்கள்; அதற்கிணங்கப் பக்தி வாழ்க்கையைப் பின்பற்றுபவர் பக்திநெறியிற் படிப்படியாக மேலேறிச் செல்லவேண்டும்; முடிவில் பரம்பொருளின் உண்மையையும், அது ஒன்றே என்பதையும் உணர்தல் வேண்டும்; இல்லையேல் அவர் பேரானந்தப் பெரும்பேற்றை அடையமாட்டார்.

பக்தி நெறியிலுள்ள படிகள் வழியாக மெல்ல மெல்லத்தான் செல்லமுடியும். நம்பிக்கையும் கீழ்ப்படிதலும். உள்ளும் புறமும் ஒத்துள்ள தன்மையும் எல்லாப் படிகளிலும் வேண்டும். இந்த நிலையில் இறங்குவான் அடிக்கடித் தனது செயல்களை ஆராய்ந்து பார்த்துக்கொண்டும், தன் நெஞ்சின் அடிவரை கூர்ந்து நோக்கிக்கொண்டும் செல்லுதல் வேண்டும். உலகப்பற்றும் அழுக்கும் செயல்களின் மூலமாக மனத்துக்குட் புக இடங்கொடுக்கக் கூடாது. கடவுளின் மீதுள்ள பற்றை வளர்க்கவேண்டும்; சாஸ்திரங்களில் விதித்துள்ளவற்றையே தவறுமற் செய்துவரல் வேண்டும். ஐம்பொறி இன்பங்களிலிருந்து மனம் விலக விலக, அது தூயதாகி, மறைவான உயர்ந்த உண்மைகளைக் காணும் திறமையை அதிகமாகப் பெற்று வரும். ஆதலின் உலக ஆசைகளோடு போராடவேண்டும்; தியானத்தை ஒழுங்காகப் பழகிவரல் வேண்டும். இப் பழக்கங்களினால் பற்றற்ற நிலையும் யோகசித்திகளும் உண்டாகும். ஆயினும், உண்மை ஞானிகள் தற்பெருமையை ஒழிப்பார், சித்திகளை வெளிக்காட்டமாட்டார், சித்திகளிலிருந்து விடுபடவேண்டும் என்றும் பிரார்த்திப்பார். கானகம் சென்று தனியிடத்து வாழ்தல்மட்டும் போதாது, நல்ல குணங்களும் பற்றற்ற தன்மையும் தலையெடுத்தல் வேண்டும். இல்லாவிடில், அது நல்ல பயனை அளியாது. ஆண்டவனிடத்தில் அன்புகொள்ளவேண்டும், தீயவற்றைச் செய்யின் நரகமடைவது திண்ணம் என்று அறிந்து, அச்செயல்களை அஞ்சவேண்டும்.

“கடுந்தவத்தாலும் அடக்கத்தாலும் ஒருவன் தன்னைத் தூயனாக்க வேண்டும். உடற்பற்று இம்மியளவும் இல்லாது போகும்படி அதை மனத்திலிருந்து பிடுங்கி எறிந்துவிடவேண்டும். இவ்வாறு செய்பவனிடத்துப் பரம்பொருளின் அருள் பிரவேசிக்கும். அவன் பூரண நிலையை அடைவான், அவன் எண்ணியவெல்லாம் எண்ணியபடியே நடக்கும். அவனது செயல் யாவும் ஆண்டவனது செயல்களே யாம்” என்பர் · ஒரு முஸ்லீம்

ஞானியார். ஆண்டவனிடத்துச் செலுத்தும் அன்பினுல் நமக்கும் அவனுக்கும் இடையிலுள்ள மறைப்பு நீங்கி விடும். அவனுடைய தரிசனம் கிடைப்பது மட்டுமன்று, அவனோடு நாம் பேசலாம், நமது செயலெல்லாம் அவனது செயலாகும்படி அவனோடு ஐக்கியமும் அடையலாம். இதற்குப் பக்தியே வழி.* பக்தி முற்றும்போது ஆனந்த பரவசம் உண்டாகும். கொரானிலுள்ள வாக்கியங்களைப் பக்தியோடு கேட்பதனுலும் ஒருவன் சமாதி அடையலாம். தான் எனும் நினைவு முற்றும் ஒழிந்த நிலையிலிருப்பவன் கொரானின் வார்த்தைகளைக் கேட்டவுடனே, கடவுளைப்பற்றிய சிந்தனையில் மனம் ஒருமைப்பட்டு ஆனந்தக் கடலில் மூழ்குவான்.

பக்தி நெறி வழியாக ஆண்டவனை நோக்கி யாத்திரை செல்பவன் வரிசையாக ஏழு ஞான பூமிகளைக் (நிலைகளைக்) கடந்து செல்லவேண்டும்; அவையாவன: அவா, அன்பு, ஞானம், சுவாதீனம், ஒருமை, ஆச்சரியம், வறுமையும் அழிவும். (1) நல் அவா என்னும் முதற் பூமியில் புகுதலும், அடிவைக்கும் இடந்தோறும் புதுப் புதுச் சோதனைகள் தாமாக முன் நிற்கும். ஒருவன் தனது உடைமைகளை யெல்லாம் உதறி யெறிந்துவிட வேண்டும்; வெறுங் கையனுய்ச் செல்லல் வேண்டும்; நெஞ்சும் உலகப் பற்றுகளிலிருந்து முற்றும் நீங்கியிருத்தல் வேண்டும். அப்போது ஞான சூரியன் தனது கிரணங்களை வீசத் தொடங்குவான். (2) அன்பு எனும் இரண்டாவது பூமியிற் புகவேண்டுவான் தீ மயமாக வேண்டும். தீமயமாகாதவன் இங்கே இன்பங் காணுன். அவன் வருங் காலத்தைப்பற்றி நினைக்கக்கூடாது. அவசியமாயின் நூறு உலகங்களையும் தீக்கு இரையாக்கத் தயாராயிருக்கவேண்டும். மத நம்பிக்கை நம்பிக்கையின்மைகளும், நன்மை தீமைகளும், மதப்பற்று மத வெறுப்புகளும் எல்லாம் சமமாகிவிடும்; காரணம் யாதெனில், அன்பு தாண்டவமாடும் இடத்தில் இவை யில்லா. (3) ஞானமெனும் மூன்ருm பூமியில் முன்னேற்

றம் அவனவனிடம் அடங்கியிருக்கும் தகுதிக்குத் தக்க படி அமையும். ஒரு சிலந்தி ஒரு யானையின் வேகத் தோடு நடக்க முடியுமா? கொசு எவ்வளவு பாடுபட்டுப் பறந்தாலும், காற்றின் வேகம் அதற்கு வருமா? உப தேசம் பெற்றவர்க்குள்ளும் ஒவ்வொருவரது ஞானத்தின் அளவும் ஒவ்வொரு விதமாயிருக்கும். ஒருவன் தான் கோயில் வாசல்வரை செல்வான், மற்றொருவன் அக் கோயிலுக்குள் உறையும் தெய்வத்தைக் காண்பான். ஞான சூரியன் உதிக்கும்போது, அவனவனது தகுதிக்கு ஏற்றபடி வெளிச்சம் பெறுவான்; உண்மையைத் தியா னம் பண்ணும்போது, தனக்குரிய இடம் இது என்ப தைக் காண்பான். நெருப்புக்கு நடுவே ஒரு பாதை அவன்முன் தோன்றும்; ஆனால் உலகப் பெருநெருப்பு இதனோடு ஒப்பிடும்போது ஒரு குளிர்ந்த சுனையாகும். அவனுக்கு எள்ளுக்குள் இருக்கும் எண்ணெய் புலனு கும்; அதாவது எல்லாப் பொருள்கட்குள்ளும் மறைந்து நிற்கும் பரம்பொருளை அவன் காண்பான். இவ்வுண் மைக் காட்சியைப் பெறுபவன் ஒருவனாயின், இருளில் வழிதவறி அல்லற் படுபவர் பல்லாயிரம் பேராவார். பூரணமானவர்க்கே இக் கடலிற்குள் ஆழ்ந்து மூழ்க இய லும். (4) சுவாதீனம் என்னும் நாலாம் பூமியிலே கட வுளைத் தவிர வேறொன்றும் நினைவில் இராது. வேறு யாதொன்றும் வேண்டாத இந்நிலையில் ஒரு பெரும் புயல் வீசும்; அதன் ஒவ்வொரு வீச்சிலும் பெரும் நாடுகள் அழிந்துவிடும். ஏழு கடல்களும் அப்போது ஒரு சிறு குட்டையாகிவிடும்; ஏழு கிரகங்களும் ஒரு பொறிபோல் ஆகிவிடும். எட்டுச் சுவர்க்கங்களும் ஒரு திரைபோலாகி விடும்; ஏழு நரகங்களும் ஒரு பெரும் பனிக்கட்டியாய் விடும். சிறிது பொழுதிற்குள் ஒன்றன்பின் ஒன்றாக வந்த நூறு கூட்டப் பிரயாணிகளுள் ஒருவனும் உயிரோ டிருப்பதில்லை. (5) ஐந்தாவதாகிய ஒருமைப் பூமியில், ஒருவனிடம் உள்ளதெல்லாம் பறிபோய் விடும், ஒன்றே மிஞ்சும், பரம்பொருளின் குணங்களை விட்டு அதன் சொரூபத்தைத் தியானிக்கும் பக்குவம் உண்டாகும்;

(6) ஆறுவதாகிய ஆச்சரிய பூமியில் யாத்திரை செய்வோன் துயரக் கடலுள் எப்போதும் மூழ்கி யிருப்பான் ; வேதனை பொறுக்க மாட்டாது புலம்புவான்; ஒவ்வொரு மூச்சும் நெடு மூச்சாகும் ; இரவும் பகலும் பெருமூச்சுவிடுவான்; தலையில் உரோமக்கால் தோறும் இரத்தம் கசியும்; அந்த இரத்தம் வழியும்போதே 'ஐயோ' என்ற வார்த்தையின் வடிவமாகும். அவன் திகைத்து நிற்பான், முன்செல்ல வழிகாணான். திடீரென்று அரசபோகம் அனுபவிக்கப் பெற்று, சிறிதுநேரத்தில் அதை இழந்த ஓர் ஆண்டி இழந்ததைக் குறித்துப் புலம்புவானன்றோ? அவன் கண்ட காட்சி தெளிவாய் நினைவிற்கு வரும்; ஆயினும் கண்டது கனவோ நனவோ என்ற சந்தேகம் அவனது மனதைக் குடைந்து கொண்டிருக்கும். காணுதற்கரிய அழகையும் பெறுதற்கரிய ஆனந்தத்தையும் அவன் அனுபவித்திருந்தும், கண்டது பொய்யோ மெய்யோ என்று கரைந்துருகுவான். காட்சியின் பயனெல்லாம் கணக்கற்ற துயரமும் சந்தேகமுமேயாம். அதுபோலவே இப் பூமியில் அனுபவமும். (7) ஏழாவதாகிய வறுமையும் அழிவும் என்னும் பூமியில், சாதகன் பெறும் அனுபவத்தைச் சொல்ல வார்த்தைகள் கிடையா. மறதி, செவிடாதல், ஊமையாதல், மூர்ச்சித்தல்—இம்மொழிகளே அவனது நிலைமையை ஒருவாறு குறிக்கும். ஒரு சூரியன் உதித்தவுடனே இருள் மூடியிருந்த கோடிக் கணக்கான பொருள்கள் தெளிவாகப் புலப்படுமன்றோ? எல்லாம் அவனுக்குப் பட்டப் பகல்போலத்தோன்றும். அவன் தன்னிடம் உடைமையே யற்ற பெரும் வறுமை குடிகொள்வதை உணர்வான். 'தான்' என்பதே இறந்துவிடும். அந்த அரும்பெரும் பாழில் அழிவற்ற அமைதியே ஆட்சிசெய்யும். சாதகன் தான் நாடிய அதனை அறியவேண்டின், தான் ஒருவன் இருப்பதான எண்ணத்தையும் அறவே அழித்துவிடவேண்டும். அதனை அறிந்தவர் அதுவாவார், யாரே அதனை உரைப்பார்!

முற்கூறிய உயர்ந்த நிலையாகிய 'தான்' அற்ற நிலையை அடைந்த பக்திமான்கள் பலர் இஸ்லாமிய மதத்

தில் விளங்கினர். அவர்களுடைய உயர்ந்த அனுபவங் கட்குச் சில உதாரணங்கள் பின்வருவன: (1) ரபீயா என்னும் அடியாராகிய பெண்மணியை ஒருவர், "நீர் ஏன் மணந்து கொள்ளவில்லை?" என்று கேட்டார். அவர் கூறிய பதிலாவது: "தமக்கெனச் சுதந்திரமுள்ள வரன்றோ மண ஒப்பந்தம் பண்ணிக்கொள்ள முடியும். எனக்கென ஒரு சுதந்திரமான எண்ணம் இல்லை. நான் ஆண்டவனுக்கு உரியேன்; என்னை ஒரு பொருளாக எண்ணாமல், அவரது ஆளுகைக்குள் அடங்கியுள்ள ஒரு பரதந்திரப் பொருளாக வாழ்கிறேன்" என்பது. (2) அந்த அம்மையார் ஒருநாள் மகம்மது நபியைக் கனவில் கண்டார். நபி அவரை வணங்கி, "ரபீயாவே, நீர் என்மீது அன்புடையீரோ?" என்று கேட்டார். அதற்கு மறுமொழியாக அவர், "நபிநாயகமே உம்மிடம் அன்பு கொள்ளாதார் ஒருவர் உளரோ? ஆயினும், ஆண்டவனிடத்துள்ள அன்பு எனது நெஞ்சில் நிறைந் திருக்கும்போது, அதில் பிறரிடத்துள்ள விருப்புக்கோ வெறுப்புக்கோ இடம் இருப்பதில்லை" என்றார். (3) ஒரு வியாபாரி பணப்பையை ரபீயாவுக்குத் தானமாகக் கொடுக்கவந்தபோது, அவர் அதை வாங்கமறுத்தார். அதன் காரணத்தைக் கேட்டபோது, அவர் "ஆண்டவனை வணங்காதவர்க்கும் அவர் படியளக்கிறார் என்பது உமக்குத் தெரியாதா? அப்படியிருக்க அவர்மீதுள்ள அன்பினால் ஜொலிக்கும் நெஞ்சுடையவர்க்கு வேண்டியதை அவர் கொடுக்கமாட்டாரோ? மேலும் நான் ஆண்டவனை அறிந்தநாள் தொடங்கி இதுவரை அவரொழிந்த மற்றெதையும் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை" என்றார். (4) அந்திம காலத்தில் நோயால் வருந்திய ஒரு பக்தரை ஒருவர் பார்க்கச் சென்றார். பக்தரது துன்பங்களைக் காணச்சகியாது அவரிடம் "உமது துன்பங்கள் தணியும்படி நீர் ஆண்டவனிடம் பிரார்த்திக்கலாகாதோ?" என்று கேட்டார். அதற்கு அப்பக்தர், "இந்தத் துன்பங்களை அனுப்பித்தவர் அவரல்லவா? என்னை இந்தச் சோதனைக்கு உள்ளாக்குவது

அவரது திருவுள்ளமாகும்போது, நான் அதற்கு மாறாக அதைப்போக்க விரும்புவேனோ?" என்றார். (5) ஆண்டவனிடம், ஒருவன் உண்மையான அன்பு கொண்டவனாயின், ஆண்டவன் தனக்கு அனுப்பும் சங்கடங்களை யெல்லாம் சலியாத மனத்தோடு பொறுத்திருப்பான்" என்றார் ஒரு பெரியார். அதைக்கேட்ட ஒரு பக்தர் "அதில் ஆணவ நாற்றம் உள்ளதே" என்றார். "அப்படியானால் அவர் அனுப்பிய சங்கடங்கட்காக அவர்க்கு நன்றி பாராட்டுதல் உண்மையன்பாகும்" என்றார் அப் பெரியார். "அதனினும் உயர்ந்த மெய்யன்பு நிலை உண்டு" என்று குறிப்பிட்டார் பக்தர். உடனே அப்பெரியார் "ஆண்டவன் அனுப்பும் துன்பங்களை இன்பமாகக் கொள்வது மெய்யன்பாகும் போலும்" என்றார். அதற்கு விடையாகப் பக்தர் "அந்த அன்பையும் உயர்ந்த மெய்யன்பாகக் கருதேன். ஆண்டவனிடம் மனம் ஈடுபட்டிருப்பதினால் சங்கடங்களின் துன்பத்தை மறப்பதே மெய்யன்பிற்கு அறிகுறி" என்றார். (6) ஒரு பக்தர் கூறிய பிரார்த்தனை பின்வருமாறு—"ஆண்டவனே, நீர் எனக்குக் கொடுக்க நினைத்திருக்கும் இம்மைச் செல்வங்களையெல்லாம் உமது பகைவர்க்குக் கொடுத்துவிடும். மறுமையில் எனக்குத் தருவதாக நினைத்து வைத்திருக்கும் பொருள்களையெல்லாம் உமது நண்பர்கட்குக் கொடுத்துவிடும். நான் வேண்டுவது உம்மையேயன்றி வேறொன்றை யன்று." "நான் நரகத்துக்குப் பயந்து உமக்குப் பணி செய்வேனாயின், என்னை நரகத்தீயில் கொளுத்துமாறு உத்தரவிடும்; சுவர்க்க உலக இன்பத்திற்காகத் தொண்டுசெய்வேனாயின், என்னை அங்கே புகவிடாதீராக. ஆனால் உமக்காகவே பணி செய்வேனாயின், உமது திருமுகக் காட்சியை மறையாது எனக்கு அருளுவீராக."

இஸ்லாமியர் கடவுளின் கருணையில் நம்பிக்கை உடையவர். ஒரு நாள் இப்ராஹிம் எனும் பெரியார் பகவானிடம் "எனது பாவங்களைப் போக்கியருளும்." என்று

மனமுருகப் பிரார்த்தித்தனர். அப்போது ஒரு தெய்விக வாக்கு "உலகமெங்கும் மக்கள் எம்மை இவ்வாறுசெய்யும்படி வேண்டுகின்றனர். ஒவ்வொருவருடைய பாவங்களையும் நாம் ஒழித்துவிடுவோமாயின், நமது கடல் போன்ற கருணைக்குப் பாத்திரமாவார் யாரோ?" என்று கூறிற்று.

ஆண்டவனுக்கு அடியார்களாவதிலும் அவரது அடியார்கட்கு அடியார்களாவது மேலானது என்பதும் இஸ்லாமியர்களுடைய கொள்கைகளில் ஒன்று. ஒரு நாள் ஒரு பக்தர் தமது கனவில் ஒரு தெய்விக புருடர் ஏதோ எழுதிக்கொண்டிருப்பதாகக் கண்டார். "நீர் எழுதிக் கொண்டிருப்பது எதுவோ?" என்று கேட்டார். "ஆண்டவனுக்கு அடியார்களாக உலகத்தில் வாழ்பவர்களுடைய பெயர்களைக் குறித்து வருகிறேன்" என்றார். "எனது பெயரும் அப்பெயர்களில் ஒன்றாகலாமோ?" என்று வினயமாகக் கேட்டார் பக்தர். அதற்கு அத்தெய்விக புருடர் "நீர் ஆண்டவனது அடியார்களில் ஒருவர் அல்லீரே" என்றார். "அவரது அடியார்களில் ஒருவனல்லேன் எனினும், யான் அவரது அடியார்கட்கு அடியேனாவேன்" என்றார். அக்கணமே ஒரு தெய்விக வாக்கு அத்தெய்விக புருடரை நோக்கி, "இப்பிராஹிம் என்பவரது பெயரை நீர் முதல் வரியில் எழுதும். நமது அடியார்கட்கு அடியாராவார் நமக்கும் அடியாரே" என்று கட்டளையிட்டதைக் கேட்டனர்.

ஆண்டவனுக்கு அன்பார்ந்த பணிவிடைகளைச் செய்தல்வேண்டும் என்று வற்புறுத்துவர் இஸ்லாமியப் பெரியார். "ஆண்டவனது ஆணைக்குப் பயந்தோ, பயனொன்றைக் கருதியோ அவனுக்குப் பணி செய்வது உயர்ந்ததன்று. அவனிடத்துள்ள அன்பினால் அன்பொன்றையே கருதிச் செய்யும் பணிதான் உண்மையான பணியாகும்."

மெய்யன்பர்களுடைய உள்ளங்களில் ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான் என்பர் பெரியார்; ஆதலின் அவர்களைச் சுற்றிவந்து வணங்குதல் கோயிலைச் சுற்றி

வழிபடுவதற்குச் சமம் என்பது இஸ்லாமியருடைய கருத்து. மெக்காவுக்குப் போய், 'காபா' (ஆண்டவன் வாழும் இடம்) என்பதைப் பிரதக்ஷிணம் செய்துவருவதற்காக ஒருவன் பணம் சேர்த்து வைத்திருந்தான். அப்போது ஒரு பக்தர் அவனை நோக்கி, "பணத்தை இங்கே கொடுத்துவிடு; என்னைச் சுற்றி ஏழுமுறை வா; அதனால் காபாவைப் பிரதக்ஷிணம் செய்த பலனினும் மேலான பலன் உன்னைச் சேரும்" என்றார்.

பெரியார் தாம் நரகம் சென்றாயினும் பிறரை அதனின்றும் காப்பாற்றுவார். இது இஸ்லாம் மதக் கொள்கைகளுள் ஒன்று. ஒரு பெரியார் தமது சீடர்களை நோக்கி, "நரகத்தின் வாயிலில் நின்றுகொண்டு, அங்கே புகுவார்களைப்பற்றி இழுத்துக் காப்பாற்றுவாரே எனது சீடர்களாவார்" என்று போதித்தார்.

மெய்யடியார்களுடைய இலக்கணங்களைப் பின்வருமாறு ஒரு பெரியார் வருணிக்கின்றார்:—"ஆண்டவனது அன்பிற்குப் பாத்திரமானவனிடம் மூன்று தெளிவான அறிகுறிகள் உண்டு. அவனது உதார குணம் கடலைப் போன்றதாகும், அவனது அன்பு சூரியனைப்போன்றதாகும், அவனது பணிவு ஒவ்வொருவரது காலடியிலும் மிதிபட இடங்கொடுக்கும் பூமியைப் போன்றதாகும்." "உலகத்தின்மீதுள்ள வெறுப்பினால் நான் ஆண்டவனிடம் ஓடியபோது, அவரது அன்பு எனது நெஞ்சை நிரப்பியது; அதனால் என்னையே வெறுக்கலானேன்." "தான் பக்தியினாற் செய்த செயல்களில் நம்பிக்கை வைப்பவன் பாவம் பண்ணுபவனைவிடக் கேவலமானவன்." "ஆண்டவனது மெய்யன்பர்களிற் சிலர், தம்மை இறைவன் தனது ஸந்நிதியினின்றும் பிரித்து எட்டு சுவர்க்கங்களில் வைத்தாலும், அதைப் பொறாது நரகத்திலுள்ளவரைப் போல் வருந்தித் துடிப்பார்." "கடுகவ்வளவு பகவத் பிரேமை யுண்டாயின் அது இலக்ஷம் சுவர்க்கங்களினும் விலையுயர்ந்ததாகும்."

# III. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பொதுநெறி

## (1) ஸ்ரீராமகிருஷ்ணரது வாழ்க்கையிற் காணும் உண்மைகள்

பக்தியின் பொது இயல்பினையும் பல மதசித்தாந் தங்களுடைய பக்திநெறிகளின் சிறப்பியல்புகளையும் இது வரை கூறினோம். ஒவ்வொரு சாதகனும் ஏதாவது ஒரு நெறி வழியாகச் செல்லவேண்டும். எவ்வாறு செல்வது, செல்பவனது மனநிலை எப்படி யிருத்தல்வேண்டும், இவைபோன்றவைகளை அறிதற்கு ஓர் எடுத்துக் காட்டாக, எல்லா சாதனங்களையும் பழகி, மர்மங்களை அறிந்து, முழுப்பயன் பெற்றுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்க்கையை அளிக்கிறோம். எம்மதத்தினர்க்கும் இன்றி யமையாத சூக்கும அனுபவ முறைகள் அவ்வாழ்க்கை யில் நிறைந்து கிடக்கின்றன. ஆதலின் அவரது சாதன வாழ்க்கையின் சிறப்பியல்புகளையும் அனுபவங்களையும் ஆராய்தல் பெரும் பயனை விளைப்பதாகும். நூலிற் கூறிய படியும், விதிகள் வாயிலாகவும், சித்தாந்தமாகவும் இது வரை பக்தியின் இலக்கணம் கூறப்பட்டது; அதற்கு ஒரு பேரிலக்கியத்தை இனி எடுத்துக் காட்டுவோம்.

அஞ்ஞானத்தை விளைக்கும் உலகத்துப் பிறந்தும் பிறவித்தளைகளை நொறுக்கிவிட்டு அல்லலற்று ஆனந்தப் பேறெய்தியுள்ள ஆன்மாக்களைப் பற்றி ஆராய்ந்துள்ள அறிஞர் அவர்களை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். ஒரு சாரார் மிக வருந்தித் தம்மை மட்டும் பந்தங்களினின் றும் விடுவித்துக் கொள்கின்றனர்; இவர்களைச் சித்த புருடர்கள் என்றும் முக்த புருடர்கள் என்றும் கூறுவர். இன்னொரு சாரார் இளமையிலே உலகப் பற்றுக்களி னின்றும் தம்மை விரைவில் விடுவித்துக்கொண்டும், மெய்ஞ்ஞான பூமிகளிலே இடையறாது சஞ்சரித்துக் கொண்டும், பிறமக்களைப் பிறவிக்கடலினின்றும் கரை

யேற்றுவதில் கண்ணும் கருத்துமாயிருப்பார்; இவர்கள் உலக மாயைக்குள் என்றும் வீழாது தப்பித்தவர்களாய் வாழ்வார்கள்; நித்யர்களென்றும் நித்ய முத்தர்களென்றும் இவர்கள் அழைக்கப்படுவர் மற்றொரு சாரார்பிறக்கும் பொழுதே பூரணத் தெய்வத்தன்மை யுடையவராய், உலக மாயையோடு சிறிதும் சம்பந்தப்படாதவராய், அளவிடமுடியாத அருளும் அன்பும் ஆற்றலும்ஞானமும்உடையராய், வெளிப்பார்வைக்கே மனிதத்தன்மை யுடையராய்,உண்மையில்தெய்வத்தன்மையின் திரண்டவடிவாய், தமக்கென வாழாது மன்னுயிரை உய்விக்கும் ஒரே நோக்கமுடையராய், எண்ணிறந்த மக்களை எளிதே தமது நினைவாலும் வாக்காலும் தொடுதலாலும் மிக உயர்ந்த நிலைக்குச் செலுத்துவாராய் விளங்குவார் ; இத்தகைய மக்கள் அவதார புருடர் எனப்படுவர். முக்த புருடர்களிடத்தில் தெய்வத்தன்மை ஒருவாறு நக்ஷத்திர ஒளியைப்போல் வெளித்தோன்றுகிறது ; நித்யர்களிடத்தில் அது சந்திரனைப்போல் மிக நன்றாகப் பிரகாசிக்கின்றது ; அவதார புருடர்களிடத்து அது சூரியனைப்போலக் கண் கூசும் அளவிற்கு எப்பக்கத்தும் பேரொளியைச் சொரிகின்றது. முக்தர்கள் நீரில் மிதக்கும் சிறு மரத்துண்டுகளைப் போன்றவர் ; அவை தாம் மிதப்பதன்றி,ஒரு சிறு குருவியையும் தாங்க முடியாதிருப்பதுபோல், அவர்கள் தம்மைக் கரையேற்றிக் கொள்வதன்றி பிறரை உய்விக்க முடியாதவர்களாகின்றனர் நித்யர்கள் தோணிகளைப் போன்று தாம் மிதப்பதன்றியும் பலரையும் ஏற்றிக்கொண்டு பிறவிக் கடலின் அக்கரை சேர்க்கும் திறமையுள்ளவராவர். அவதார புருடர்களோ பெரும் நீராவிக்கப்பலைப் போன்று ஆயிரக்கணக்கான மக்களையும் அவர்களுடைய கருமப் பாரங்களையும் சுமந்துகொண்டு வருத்தமின்றியே மிக விரைவாக அக்கரை சேர்ப்பார். முக்தர்கள் ஓரறையிலுள்ள கைவிளக்கைப் போன்றவர் ; நித்யர்கள் வீதி விளக்குகளை ஒப்பார் ; அவதார புருடர்களோ உலகமுழுதிற்கும் ஒளிபரப்பும் சூரியனுக்கு நிகராவார். வேத உண்மைகளை வெளிப்படுத்திய இருடியரும் எத்தனையோ

பக்தர்களும் உலக பந்தங்களை அறுத்து முத்தியை அடைந்தனர்; சைவசமயக் குரவர்களும் ஆழ்வார்களும் நித்யர்களாய் விளங்கினர்; இராமரும் கிருஷ்ணரும் புத்தரும் சைதன்யரும் அவதார புருடர்கட்கு உதாரணமாவார். அவதார புருடர்கள் உலக முழுவதிற்கும் ஞான குரவர்களாக விளங்குவார்; ஞான பூமிகளில் (நிலைகள், படிகள்) மிகத்தாழ்ந்த பூமியிலிருந்து மிக உயர்ந்த பூமி வரை எல்லாப் பூமிகளிலும் மிக எளிதாக நினைத்த மாத்திரத்தில் சஞ்சரிக்கும் வல்லமையுடையவர்களாவார்கள். ஓர் அரசனது அரண்மனையில் அன்னிய னொருவன் வெளிப்பக்கத்துள்ள சில அறைகட்குமட்டும் செல்லக் கூடும்; ஆனால் அரசிளங்குமரனோ அரண்மனை முழுவதிலும் எல்லா அறைகட்குள்ளும் சுதந்திரமாக உலாவலாமன்றோ! அதுபோல் அவதார புருடர்கள் எந்த ஞான நிலையிலும் புகவும் தங்கியிருக்கவும் கூடும். இவர்கட்கு விளங்காத நுட்பங்களும் மறை பொருள்களும் எத்துறையினும் இருத்தலில்லை; உலக வாழ்க்கையிலும் ஞான வாழ்க்கையிலுமுள்ள எவ்விதச் சிக்கலான அறிதற்கரிய சூக்குமமான உண்மைகளையும் மிக எளிதாக இவர்கள் அறிவதோடு அவைகளைப் பேதையரும் பாலரும் அறியுமாறு அங்கையிற்கனியெனத் தெளிவாகத் தெரியுமாறு இனிதாக விளக்குவார்கள்; தமது ஞான ஒளியைப் பிறருள்ளத்துச் செலுத்தி அங்குள்ள அறியாமை யிருளை அகற்றிவிடுவார். இவர்களிடமிருந்து அன்பும் அருளும் கடலெனப் பெருகி வழியுமாதலின், அவர்களையே சரணமாகப் பற்றியும் அவர்கட்கு மனமுவந்த சிறுபணி செய்தும் பலர் எளிதாக வீடு பேற்றினை எய்துவர். இவ்வாறாகவும், இவர்களை மனித உடலிற் காணும்போது இவர்களது பெருமையை அறியாத கற்ற மூடர்களும் பலர் இருப்பர்; ஆனால் கல்வி யறிவில்லா எளிய குழந்தையனைய சாதாரண மக்களும் பல்லோர் இவர்களது பெருமையினை உணர்ந்து ஈடுபட்டுப் பெறற்கரும் பேற்றினை அடைந்து உய்வார். இவர்கள் இறைவனது திருவடிவங்களேயாவார். இவர்களது அறியவொண்ணாத பெருமையினை

ஏழை மக்கள் எளிதே யறிந்து உய்வடையும் பொருட்டு, இறைவனது அவதாரம் நிகழும்போதெல்லாம் நித்யர்கள் சிலர் பிறந்து, உலகிற்கு அவதார வடிவின் பெருமையினை எடுத்துரைத்தும் விரிவாக போதித்தும், பலரை அவதார புருடரோடு கூட்டிவைக்கும் தொண்டில் ஈடுபடுவர். அவதார புருடர்கள் மின்னலைப் போன்று ஞானப் பேரொளியினை உமிழ்ந்து உலகினைச் சூழும் அஞ்ஞான இருளைப் பிளந்தெறிவார்; ஆயினும் விழித்திருப்பார் சிலரே பயனடையக் கூடியவராவார். இக்காரணத்தால், மின்னலின் பின் தோன்றும் இடி முழக்கம்போன்று நித்யர்களிற் சிலர் நாடெங்கும் திரிந்து, மாயையில் ஆழ்ந்து உறங்கும் மக்களைத் தமது ஞானகர்ச்சனையால் விழிக்கச்செய்தும், சுறுசுறுப்பாய் எழச்செய்தும், இறைவனைச் சாரும்வரை நில்லாது முயலச்செய்தும், அவதார புருடர்களை நாடி உய்யச்செய்தும், தாம் பெற்ற இன்பம் வையம் பெறுமாறு வாழ்வார். அவதார புருடரது காலமல்லாத பிற காலங்களில் தோன்றும் நித்யர்களும் உளர். பொதுப்படநோக்குங்கால், நித்யர்கள் இருவகையினராகக் காணப்படுவர். சிலர் பக்திக் கடலில் மூழ்கியவராய் ஞானத்தை உள்ளடக்கிக் கொண்டிருப்பர்; பிறர் ஞானக் கடலில் மூழ்கியவராய்ப் பக்தியை உள்ளடக்கிக் கொண்டிருப்பர். முன்னவர்கள் தமது அனுபவங்களை வெளியிடுவர்; பின்னவர்கள் அந்த அனுபவங்களைப் பலவகைப் பிரமாணங்களால் நிலைநாட்டிச் சித்தாந்தங்களை ஏற்படுத்துவர். முன்னவர்கள் அன்புக் கடலா யிருப்பரெனின், பின்னவர்கள் அருட்கடலா யிருப்பர். முன்னவர்கள் சமய உண்மைகளைக் கண்டுபிடித்து வெளியிடுதலின், சமயங்கட்கு நற்றுய் போன்றவராவர்; பின்னவர்கள் அவைகளைப்பேணி வளர்த்து, சுருதி யுக்திகளினுல் நிலைநாட்டியும் பரப்பியும் வருதலின், செவிலித்தாய் போன்றவராவர். முன்னவர்கள் ஆழ்வார்கள் என்றும் நாயன்மார்கள் என்றும் தென்னுட்டில் பெயர் பெறுவர்; பின்னவர்கள் சமயாசாரியர்கள் எனப்படுவர். மெய்கண்டதேவர் முதலானோர் சைவ சமயத்திற்கும், இராமாநுஜர் முதலா

னோர் வைணவ சமயத்திற்கும் ஆசாரியர்களாவார். அவதார புருடர்களும் (ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்ற) பேரடியார்களும் மதாசாரியர்களும் ஆகிய மூவகையினரே உலக மக்கட்குக் குரவராக விளங்கியுள்ளனர்.

உலக மக்கட்கு ஞானச் சுடர்களென மிளிர்ந்து ஞான விழிப்பை யுண்டுபண்ணியும், ஞான நெறிகளைத் தெளிவாகக் காட்டியும் தமது வாழ்க்கையாலும் உபதேசங்களாலும் ஞான உலக உண்மைகளை விளக்கியும் போந்த பெருங் குரவர்களது வாழ்க்கைச் சரிதங்கள் பல நமது பரதமா நாட்டில் பொன்னேபோற்போற்றி எழுதி வைக்கப்பட்டுள்ளன ; ஆயினும் ஒவ்வொரு சரிதத்தினும் இருந்திருக்கவேண்டியதும் பிறர்க்கு மிக்க பயன் தரக்கூடியதுமான சாதன வாழ்க்கைப் பகுதி பொதுவாக மிகச் சுருங்கிய அளவினதாகவும், ஏறக்குறைய இல்லையென்றே தோன்றும்படிக்கும் வரையப்பட்டுள்ளது ஒரு பெருங் குறையே என்பதை எவரும் மறுக்க முடியாது. உலகத்துள்ள சாதாரண மக்கட்கு ஞான நெறியும் ஞான முயற்சியும் இத்தன்மையன என்பதை நேரில் எடுத்துக் காட்டுவதற் கெனவே தோன்றியுள்ள பெரியார்களது வாழ்க்கையில் சாதனம் பழகும் அவசியம் ஏற்படவேயில்லை என்று கூறுதல் அறிவிற்குப் பொருத்தமானதாகாது. அப்பெரியார்கள் பிறக்கும் பொழுதே மாயையை வென்றவராய், சாதனம் பழகும் அவசியத்தை உணராதவராய்த் தோன்றினர் என்னில், அன்னோர், ஐம்பொறிகளை அவித்தற்கும் அகங்காரத்தை மாய்த்தற்கும் மக்களிற் பெரும்பாலார் படும் உரைத்தற்கரிய அரும்பெரும்பாட்டை ஒரு சிறிதும் அறியாதவராகியும் அக்காரணத்தால் அவர்கட்குப் பொருத்தமான உதவியைப் புரியும் ஆற்றலில்லாதவராயும் போவார் ; அப்போது அவர்களது பிறவியின் நோக்கமே நிறைவேறுதொழிகின்றது. பிறவியிலேயே, தம்மினும் பெரிதும் வேறுபட்டவராகக் காணப்படுவாரை மக்கள் தாம் பின்பற்றுதற்குரியாராக நினையார். அன்றியும், உத்தம

குரவரென அனைவராலும் வணங்கப்படும் பெரியார்கள் தமது பாடல்களிலும், தாம் மனதை அடக்கமுடியாத போது அனுபவித்த பெருந்துயரத்தை நன்கு சித்திரித்து எழுதி வைத்துள்ளார்கள்; சில பெரியார்கள் தமது வாழ்க்கையில் மெய்ந்நெறியினின்றும் வழுவிச் சிற்றின்பப் படுகுழிகளில் சிறிது காலம் வீழ்ந்து தாம் அல்லலுற்றதையும், பின்னர் மிக வருந்தி நன்னெறியில் நிலையாக நின்றதையும் உள்ளவாறே பாடல்களில் ஒப்புக்கொண்டுள்ளனர்; பெரியார்களனைவரும் ஞான சாதனங்களைப் பழகியுள்ளனர் என்பதும் ஒரு சிறிதே சரிதங்களினின்றும் புலனாகின்றது. இங்ஙிலையில், அவர்களது சாதன வாழ்க்கையைப்பற்றி நம் முன்னோர்கள் எழுதி வையாததற்குக் காரணம், மனிதத் தன்மைக்குரிய குறைகளை அவர்களிடத்துக் காணினும் அவைகளைக் கூறுதல் பாகவத அபசாரம் (அடியார்களைப் பழித்தல்) என்னும் பெருங் குற்றத்திற்கு உடலாகும் என்ற மேன்மையான கருத்தே போலும்; அன்றேல், அப்பெரியார்களது தெய்வத் தன்மையையும் தெய்விக ஆற்றலையும் அற்புதச் செயல்களையும் மட்டும் கூறுவதினால் பலர் அவைகளில் எளிதே ஈடுபட்டு, அவர்களைப் புகலாகப் பற்றிக் கடைத்தேறக் கூடும் என்னும் நன்னோக்கம் போலும். எக்காரணமாயினும், ஆகுக, மனித இயல்பிற்குரிய வழுவொன்றுமில்லாத தெய்வப் பிறப்பினரை மக்கள் தம்மினத்தாராக எண்ணார்; அவர்களோடு நெருங்கிப் பழக மாட்டாது வெகு தொலையில் நிற்பார்; அவர்களைப் பின்பற்றுவது இயலாததென்றே ஆரம்பத்திலே அம்முயற்சியைக் கைவிடுவர். இத்தகைய எண்ணங்களை ஒழித்தற்கெனவே அவதார புருடராகிய ஸ்ரீராமர், தம்மைப் பிறர் (இருடியர்) நாராயணனது அவதாரமென்று கூறும்போது 'என்னை யான் மனிதனாகவும் தசரத குமாரனாகவும் நினைக்கிறேன்' என்று கூறியும், பெரும்பாலும் தமது தெய்வத் தன்மையை மறைத்து மனிதனாக நடித்தும் வந்தார்; ஸ்ரீ கிருஷ்ணரும் "நான் உங்கட்குப் பந்துவாகவே பிறந்தேன்" என்று கூறியும், சாதாரண

மனிதனைப்போல அருச்சுனனோடு தோழமை கொண்டும் தேரோட்டியும், தூதுபோயும், பலரோடும் நெருங்கி உற வாடியும் பிறர் தம்மோடு கலந்து பரிமாறுவதற்குரிய வேடம் தாங்கி நின்றார். உண்மையை உரைக்குங்கால், தெய்விகப் புருடர்களது வாழ்க்கையில் தெய்வத் தன்மை யும் மனிதத் தன்மையும் பரவி யிருப்பதாகவே காணப் படுகின்றன ; ஆதலின் அவர்களது சரிதங்களை எழுதி வைப்போர் அவ்விரு பகுதிகளையும் ஆராய்ந்து, உள்ள வற்றை யெல்லாம் உள்ளவாறே எடுத்துரைத்தல் அக் காலத்தினர்க்கும் பிற்காலத்தினர்க்கும் பெரு நன்மை யளிக்கக் கூடியதாகும். இக் கொள்கையினைப் பின்பற்றி, ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரது வாழ்க்கைச் சரிதம் பலவகை யான சான்றுகளைத் துணைக்கொண்டும், உண்மை நிகழ்ச்சிகளை ஆராய்ச்சி வாயிலாகப் புடைத்தெடுத்தும், உள்ளதை உள்ளபடியே கூறும் முறையைப் பின்பற்றி யும், பலரால் பல சமயங்களில் சோதனைக்குட்படுத்தப் பட்டும், இயன்றமட்டில் விரிவாகவும், சரித ஆராய்ச்சி முறையினை அறிந்தவர்களான சீடர்களால் எழுதி வைக் கப்பட்டுள்ளது ; அவரது சாதன வாழ்க்கைப் பகுதியும் அநுபூதி வாழ்க்கைப் பகுதியும் கூடிய அளவிற்கு விவர மாகவே வெளிவந்துள்ளன. ஆதலின் அவரது வாழ்க் கையைப் பல்வேறு உத்தம குரவர்களின் வாழ்க்கைக ளோடு ஒப்பிடுதல் நமக்கு ஒருவாறு எளிதாகின்றது. தென்னாட்டில் வாழ்ந்த சைவ வைணவப் பேரடியார்கள், குரவர்கள், உலகத்திலே நிலைபெற்று விளங்கும் பெருஞ் சமயங்களை நிலைநாட்டிய மதாசாரியர்கள்—இவர்களு டைய அநுபூதியை ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அநுபூதி யோடு இயன்றவரை ஒப்பிட்டுப் பார்த்தல் தற்காலத்தில் பெருநன்மை பயத்தற்குரியதாகும். அதற்குமுன் ஸ்ரீ ராம கிருஷ்ணப் பெருமானது சாதன வாழ்க்கையில் அடங் கிய உன்னற்கரிய பெருஞ் சிறப்புகளையும், ஈடும் எடுப் பும் இல்லாத இயல்புகளையும் சிந்தித்தல் அவரது அநு பூதி வாழ்க்கையின் மேன்மைக்கு அடிப்படையான பகுதிகளை நன்குணர ஏதுவாகும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருமானது சாதன வாழ்க்கையைப்பற்றிக் கூறவேண்டுமாயின், அதனை அற்புதமென்றே சொல்லி முடித்துவிட வேண்டும்; தவமே வடிவெடுத்துவந்து.தவஞ் செய்ததோ என்னலும் அத்துணைப் பொருத்தமுடையதாகாது. அவ்வாழ்க்கையிற்காணப் படும் சில இணையற்ற இயல்புகளை மட்டும் குறிப்பாம்.

(1) மெய்ப்பொருளைக் காணவேண்டுமென்று அவர் துடித்த துடிப்பை என்னென் றுரைப்பது! பிறிதொன்றிலும் கண்ணையும் கருத்தையும் செலுத்தாமல், தமது முழு மனத்தையும் முழு வலிமையையும் செலுத்தி, அளவிடற்கரிய பெருந்தாகத்தோடு இறைவனைக் காண அவர் தவித்த பரிதவிப்பினால் பன்னிரண்டாண்டுகள் தெய்விக வெறியிலே கழியலாயின. அதில் ஆறு ஆண்டுகள் கண்கள் உறக்கத்தை அறியாதுபோயின. பசியையும் தாகத்தையும் உடல் நலத்தையும் சிறிதும் பொருட் படுத்தாதும், உலக நிகழ்ச்சிகளைச் சிறிதும் அறியாமலும், அவர் பெரும் பித்தனைப் போன்று ஞான முயற்சியில் மூழ்கியிருந்தார். நீரினைப் பிரிந்த மீனெனத் துடித்தார்; அவரது விரகதாபத்தை உண்மையாக அறிதலும் அரிதாகும். கொம்பில்லாப் படர்கொடிபோல அவர் துவண்டதும், கல்லும் கரையும்படி அவர் மனமுருகி அழுததும் நமது அறிவிற்கு முழுதும் எட்டாதனவேயாகும்.

(2) அவர் தேவியினருளைப் பெற்றதும், அல்லும் பகலும் அநவரதமும் அம்பிகையின் ஸந்நிதியிலே வாழ்ந்ததும், பிரேம பக்தியைப் பெற்றதும், தாஸபாவனை தோழ பாவனை முதலிய பாவனைகளைப் பழகிக் காட்சி எய்தியதும், உயர்ந்த ஞான நிலைகளையும் காட்சியையும் அடைந்ததும் இரண்டு துணைகளைக் கொண்டே; அவையாவன, மெய்ப் பொருளினிடத்து அவர் கொண்டிருந்த உறுதி மிக்க சலியாத பெரு நம்பிக்கையின் வலிமையும், மெய்ப் பொருளைக்காணும் பேரவாவுமே. அக்காலத்து அவர் ஒரு குருவையோ துணைவரையோ சாஸ்திர ஞானத்

தையோ பெற்றாரில்லை, முறையாகச் சாதனங்களையோ தவத்தையோ பழகினவரு மல்லர்.

(3) பூத்தபின் காய்ப்பது வழக்கமாயினும் சில செடிகளும் கொடிகளும் காய்த்தபின் பூப்பது உண்டு என்பர் ஸ்ரீ ராமகிருஷ்ணர். அதுபோல், சாதாரண மனிதர்கள் கடவுளைக் காணுமுன் சாதனம் பழக வேண்டியவரெனினும், சில பெரியார் கடவுளின் காட்சி பெற்றபின்பே சாதனம் பழகுவர். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் பின் வகுப்பினரைப் போன்றே உயர்ந்த ஞானக் காட்சிகளையும் தெய்வக் காட்சிகளையும் பெற்ற பின்னரே அவைகளைப் பெறுதற்குரிய சாதனங்களைக் குருமுகமாக உபதேசிக்கப்பெற்று, அவைகளை முறையாக ஒருமுகப்பட்ட மனதுடன் பழகி, அதே காட்சிகளைப் பெற்றனர்.

(4) யாதானும் ஒரு பாவனையில் மனதை நிலைநிறுத்திப் பழக அவர் தொடங்குவாராயின், அவரது மனம் அந்த ஒரே பாவனையிலேயே முழுதும் ஆழ்ந்துவிடும்; மற்ற பாவனைகள் முன் பழகப்பட்டிருந்தபோதிலும், அவ்வமயம் நினைவை விட்டு முற்றிலும் நீங்கிவிடும். தேவியின் காட்சியை இடையறாது பெற்ற பின்பு, தாஸ பாவனையைப் பின்பற்ற நினைந்து தம்மை அநுமாராகவும் இறைவனை ராமராகவும் கருதித் தியானித்து வரும்போது, இந்தப் பாவனையின் அறுதிப்பயனை இராமரது திவ்வியக் காட்சியைப் பெறும் வரையும் அவரது உள்ளத்துத் தேவியைப் பற்றிய நினைவு எழாதொழிந்தது. இம்மாதிரியே கிறிஸ்தவ மத பாவனையின்படி இயேசுவைத் தியானம் பண்ணும்பொழுது, தேவியின் நினைவோ இராமரின் நினைவோ பிறதெய்வங்களின் நினைவோ ஒருபொழுதும் நுழைந்ததில்லை. அவரது மனமாகிய கரும்பலகையில் அவர் (தாம் நினைத்தபோது) மற்றைய எழுத்துக்களையெல்லாம் முழுதும் அழித்துவிட்டு, ஒன்றைமட்டும் எங்கும் எழுதிவிடுவார்; அன்றியும் அவரது உள்ளம் மெழுகைப் போல உருட்ட இடங்கொடுக்குமெனினும்

தன்பாற் பதித்ததை மறையாது போற்றுவதில் சலவைக் கல்லைப் போன்றதுமாகும்.

(5) "புறச்சின்னங்களற்ற தவத்தினாலே உண்மை உணரப்பட மாட்டாது" என்ற உபநிடத போதனைக் கிணங்க, ஒவ்வொரு பாவனையைப் பின்பற்றும் போதும், அதற்கியைந்த உடையையும் புறச்சின்னங்களையும் அவர் ஞானக்காட்சியால் அறிந்து, சாதனை முடியுமளவும் அணிந்து வருவார். உதாரணமாகத் தாய் பாவனை கொண்டு இறைவனைக் குழந்தையாகப் பாவிக்கும்போது, மாதர்க்குரிய சிவந்த சேலையையும் நெற்றியில் வெண்ணீற்றையும் குங்குமத்தையும் உருத்திராக்க மாலையையும் அணிவார்; வைணவ சாதனம் பழகும்போது வெண்மை யுடையையும் சந்தனக் குறியையும் துளசிமணி மாலையை யும் அணிவார்; அத்வைத சாதனம் பழகும்போது, பூணூலின்றியும் சிகையின்றியும் காவியுடையோடும் சமாதி பழகுவார்; மதுர(நாயகி) பாவனை பழகும்போது பெண்கட்குரிய ஆடையையும் காப்பு முதலிய அணி கலன்களையும் அணிந்துகொள்வார். அந்தந்த முறைக்கு ஏற்றபடி அவருடைய நடையுடை பாவனைகளும் தாமா கவே மாறிவிடும்.

(6) ஒவ்வொரு பாவனை முதிரும்போதும், அவரது உள்ளம் முழுதும் அதில் மூழ்கி உறைத்து நிற்குமாத லின், அவரது உடலும் அதற்கு ஏற்றவாறு மாறிவிடும். உதாரணமாக, அவர் தம்மை அநுமாராக நினைத்து இராமரைத் தியானித்து வரும்போது, தாமறியாதே அரையிலுள்ள ஆடையின் ஒரு பகுதியை நீளமாக முறுக்கி வாலைப்போல் தொங்கவிட்டுக் கொண்டு குதித் துக் குதித்து நடக்கவும், மரத்திலே வாழ்ந்து காய்கனி களைத் தோலோடு உண்ணவும் தலைப்பட்டார்; அன்றி யும், முதுகெலும்பின் அடிப்பாகம் ஓரங்குலம் நீளவும் தொடங்கிற்று. (அப்பாவனை கலையும்போது அதன் நீளமும் வரவரக் குறைந்து முடிவில் பண்டுபோலா

யிற்று.) அவர் மதுரபாவனையைப் பழகியபோது அவரது ஒழுக்கமும் பேச்சும் செய்லும் பாவனைகளும் நடையும் நினைவும் மாதர்கட்குரியன போன்றே தாமாக அமையலாயின; அந்நிலையில் அவரோடு நெடுநாட் பழகினவரும் அவரை இன்னாரென்று அறிய இயலாது போவர்; அவரொடு அப்போது பழகும் பெண்களும் அவரை மகளிரில் ஒருவராக நினைப்பதல்லாது ஆடவ ரென்று மதியார். மதுர பாவனையின் முதிர்ந்த நிலையில் இராதாதேவிக்கும் ஆண்டாளுக்கும் ஸ்ரீ கௌரங்கருக் கும் விரகதாபத்தால் உடலில் ஏற்பட்ட அறிகுறிகளெல் லாம் தோன்றலாயின. அவரது உடலில் குளிர் நீர்க் கங்கையாலும் தணிக்கவொண்ணாத பேரழல் வீசிற்று, தோலிலுள்ள துளைதொறும் இரத்தத்துளிகள் வேர்வை போன்று வெளிப்படலாயின, உடலிலுள்ள மூட்டுகள் தளர்ந்து நெகிழ்ந்து கிடந்தன, அரையின் அருகே மாத விடாயுற்றார்போல இரத்தம் கசியலாயிற்று. இக்குறிகள் யாவும் பாவனையின் பயனை காட்சி பெற்றபின் அப் பாவனை கலையும்போது தாமே மறையலாயின.

(7) ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் சாதனம் பழகும் போது, சாதாரண மனிதர்களும் சாதகர்களும் அற்ப மானவையென்று கருதிக் கவனியாது விட்டுவிடும் சிறிய பழக்கங்களையும் சிரத்தையோடு பழகுவார். அற்பமே நிறைவினை ஆக்கும் என்பதையும், அந்நிறைவும் அற்ப மான தொன்றன்று என்பதையும் அவர் நன்குணர்வார். அவர் நிறைவுத் தன்மைக்கு (பூரணத்வத்திற்கு) ஓர் எடுத்துக் காட்டாக அமைய வேண்டுமென்று இறைவன் நினைத்தனன் போலும். அவர் பொருளில் ஆசையை ஒழிக்க நினைந்தபோது, மனத்தால் அதைத் துறப்ப தோடு திருப்தி யடையவில்லை; பொருளும் மண்ணும் ஒன்றே யென்னும் கருத்தை மனத்திற் பதிக்கும் பொருட்டுக் காசுகளையும் மண்ணையும் இரு கைகளில் வைத்துக் கொண்டு, காசை மண்ணென்றும் மண்ணைக் காசென்றும் நினைந்தும் தியானித்தும், இரண்டிற்கும்

வேறுபாடு தோன்றாதவரை இவ்வாறு சிந்தித்த பின் இரண்டையும் கங்கையில் எறிந்து விடுவார். தமக்கு உயர்குலப் பிறப்பின் நினைவு முற்றும் ஒழிவதற்காகப் பழி தொழிலும் இழி குலமும் உடைய மக்களுடைய வீட்டிற்கு அவர்களுக்குத் தெரியாமலே சென்று, மிதித்தற்கும் மனம் கூசும் அசுத்தமுள்ள இடங்களைத் தாமே சுத்தஞ் செய்வார். நல்ல மணமுள்ள சந்தனமும் துர்நாற்றம் வீசும் மலமும் தமக்குச் சமமாகத் தோன்றுதற்காகத் தமது நாக்கினால் இரண்டையும் சம பாவனையோடு தொட்டுப் பழகுவார்.

(8) ஒரு கருத்து தமது உள்ளத்திற் புகுந்து பதிய வேண்டும் என்று அவர் நினைப்பாராயின், மனதில் அது குடிகொண்டு உறைவதோடு நின்றுவிடமாட்டார்; அது மனதில் ஆழ்ந்து பதிந்து வலிமையோடு வேரூன்றிய பழக்கமாக மாறுவதோடு, தமது விழிப்பு நிலையிலோ தூக்கத்திலோ அக்கருத்துக்கு மாறுபாடான செயல் உடம்பிலும் நிகழவொண்ணாதவாறும், தம்மை எந்நிலையிலும் அதற்கு இணங்க ஆட்டிவைக்குமாறும், அது ஓர் எதிர்க்க முடியாத வாசனையாகி நிற்கும்வரை முயற்சியை விடமாட்டார். பண இச்சையை அகற்றியதற்கு அறிகுறியாக அவரது உடல் தூக்கத்திலும் ஒரு காசைத் தொட நேர்ந்தால் செந்தழலைத் தொட்டதுபோலப் பதறி அதைத் த்ள்ளிவிடும்; அம்மட்டோ! விரித்த பாயினடியில் அவர்க்கு அறிவியாது ஒருவர் நாணயத்தை மறைத்து வைத்திருப்பாராயின், அவரது கால்கள் அப்பாயின் மீது மிதிக்க முடியாமல் தாமாகவே சுருக்கெனத் தோன்றும் வலியோடு பின் தள்ளப்படும். நாளைச் சேர்வதைநினையார் ஜீவன்முக்தர் என்னும் சாஸ்திரம். ஸ்ரீராமகிருஷ்ணர், பிற்காலத்துக்குத் தக்கவாறு பணம் தொகுத்துவைக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் சகியாராவர்; பிறர் பிற்காலத்திற்கு வேண்டி ஏற்பாடு செய்துகொள்வதைப் பற்றிய பேச்சு இவரது காதில் வீழ்ந்தாலும், அப்பேச்சே அவரது

தலையை இரண்டாக அறுப்பது போலத் தோன்றும். வாய்மையைப்பற்றி யொழுக முயலும் போது, அது மனத்திலும் உடம்பிலும் ஊறிய பழக்கமாக முடியுமாதலின், வாய்மைக்கு மாறான சொல்லும் செயலும், மறந்த நிலையிலும் அவரிடத்து உண்டாகா; அதற்கு மாறான செயலை அறியாது செய்யத் தொடங்கினும், அவரது உடல் அதற்கு இடங்கொடாது. மாதர் மீதெழும் காம நினைவை அவர் அகற்றிய வெற்றியின் பயனாக, அவர் தமது மனைவியுடன் ஓராண்டு காலம் ஒரே படுக்கையில் படுத்தும், தமது கால்களைப் பிடிக்கும் தொண்டு செய்ய மனைவிக்கு இடம் கொடுத்தும் வந்த போதும், அவரது உள்ளத்தில் ஒரு கணமேனும் உடலைப்பற்றிய நினைவு எழாது போயிற்று; மனைவியைத் தேவியின் வடிவமாகப் பார்க்கும் திவ்விய ஞானக் காட்சியே அவரிடம் குடி கொண்டிருந்தது. அம்மட்டோ! ஒரு நாள் தமது உள்ளத்தைச் சோதிக்கும் பொருட்டுப் படுக்கையில் மனைவியோடு இரவில் இருக்கும் போது, 'மனமே, உனக்கு உடற் போகத்தில் இச்சை உண்டா?' என்று அவர் கேட்கலானார்; அப்போது அவரது மனம் அந்த நினைவையும் பொறாது, அதற்கு விடையாக உயர்ந்த சமாதி நிலையில் பல நாழிகைகள் அமர்ந்திருந்தது.

(9) அவர் எவ்வகையான சாதனம் பழகினும், அதில் மூன்று நாளில் சித்தியடைவார். பக்தி சாதனங்களில் ஒன்றையோ ஞானசாதனங்களில் ஒன்றையோ பழகி, அதன் முடிவான நிலையாகிய தெய்வக் காட்சியையோ நிர்விகற்ப சமாதியையோ பெறுவதற்குச் சாதாரண மக்கட்குப் பல பிறவிகள் செல்லும்; விட்ட குறையுள்ளவர்க்கும் பல ஆண்டுகளும் ஒரு பிறவியும் செல்லும். ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அறுபத்து நான்கு தந்திர சாதனங்களில் ஒவ்வொன்றையும் பழகித் தேவியின் தரிசனம் பெற்றதும், கிறிஸ்துவின் தரிசனத்தையும் அல்லாவின் தரிசனத்தையும் பெற்றதும் மூன்றே நாட்களில்தான்.

(10) அவர் ஒரு சாதனம் பழகி முடிந்ததும், அவரது மனதில் இன்னொரு சாதனம் பழகும் ஆசை தானாகவே (தேவியின் சங்கற்பத்தினால்) தோன்றும். அவரது உள்ளம் தேவியின் திருவுள்ளத்தோடு ஒன்றுபட்டிருந்ததாதலின், அவர் தமது தூய உள்ளம் இழுத்துச் செல்லும் வழியே சென்று வருவார். அவரிடத்தில் தற்போதம் ஒழிந்து தேவிபோதமே தலையெடுத்து நின்றதாதலின், அவர் சென்றவழி எப்போதும் நன்னெறியேயாயிற்று.

(11) அவர்க்கு 'உபதேசிக்க வந்த குரவர்களின் சொற்படி நடந்து அவர் உயர்ந்த அனுபவத்தை எய்தியபின், அக் குருக்களுக்கும் அவர் குருவாகி நின்றார். தந்திர சாதனங்களை அவர்க்குப் போதித்த பைரவி பிராம்மணியார் பின்னாளில் அவரால் அறிவுறுத்தப்பட்டு, அவரது நல்லிணக்கத்தின் பயனாக நல்லுணர்வு பெற்று மிகவுயர்ந்த நிலையை அடைந்தார். பாலராமரது காட்சிக்குரிய மந்திரத்தை உபதேசித்த ஜடாதாரியார் தம்மிடத்தில் பாலராமர் கொண்ட பிரியத்தை அவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் காட்டுவதை உணர்ந்தார்; அவரது நல்லிணக்கத்தால் தமக்குப் பாலராமர் தாம் விரும்பிய காட்சி யளித்ததையும் கண்டார். நிர்விகல்ப சமாதியை அவர்க்கு உபதேசித்த தோத்தாப்புரி யென்னும் பெரியார் அவரோடு பல மாதங்கள் வாழ்ந்ததன் பயனாகத் தேவியின் உண்மையை உணர்ந்தும் தரிசனம் பெற்றும் ஞான முன்னேற்றம் அடைந்தார்.

(12) தந்திர சாதனங்களைப் பழகுதல் எளிதான காரியமன்று. சில சாதனங்கள், பழகுவாரது மனஉறுதியையும் அடக்கத்தையும் நிலைகுலையச் செய்யும் கோரக் காட்சிகளை அளிப்பனவாகும்; யாரையும் நெறியினின்று வழுக்கி விழச் செய்யும் சோதனைகளை உண்டுபண்ணுவனவாகும். மாதரும் மதுவும் சம்பந்தப்படுதலும் அவைகளில் உண்டு. ஆயினும் மாதர் தேவியை நினைப்பூட்டியதாலும், மதுவிற்குரிய 'காரணம்' எனும் பெயரும் உல

கிற்கு முதற் காரணமாகிய தேவியையே நினைப் பூட்டிய தாலும் அவர் வழுக்கி விழ ஏதுவில்லாது போயிற்று. பசு பாவனை, வீரபாவனை, திவ்விய பாவனை எனத் தந்திர நூல்கள் கூறும் மூன்று படிகளுள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆரம்ப முதலே பசு பாவனையையும் கடந்து தெய்வத் தன்மைக் குரிய பாவனையில் நிலைத்திருந்தார். (ஐம்புலன்கட்கு வசப்பட்டு ஒழுகும் நிலை பசு பாவனை, அவைகளை யடக்கி வெற்றிகொள்ளும் நிலை வீரபாவனை, அவைகள் தீய நெறியிற் புகுத்த முடியாதபடித் தெய்வத் தன்மையே உள்ளத்துக் குடிகொண்டுறையும் நிலை திவ்விய பாவனை.)

(13) இவரிடம் நூற்கல்வி இல்லாதபோதும், நூல்களிற் கூறப்பட்டுள்ள மிக உயர்ந்த ஞான நிலைக்குரிய உண்மைகள் தாமாகவே அனுபவமாக வெளிப்படலாயின. உயர்ந்த ஞான நிலையிலிருந்த அவர் தமது அன்னையாரை நினைந்து தர்ப்பணம் பண்ண முயலும் போது, அவரது கைகள் தண்ணீரை வாரிவிட இயலாதபடி நிமிர்ந்து விறைத்து, வேறு வேருக நின்ற விரல்களோடு கூடியனவாக மாறின; அதனால் அக்கிரியையைச் செய்ய அவர்க்கு இயலாது போயிற்று. உயர்ந்த ஞான நிலையில் ஒருவர்க்கு இம்மாதிரியான கிரியைகளைச் செய்யும் திறன் ஒழிந்து போகும் என்ற சாஸ்திர உண்மையைப் பிற்காலத்து அவர்க்கு ஒரு பண்டிதர் எடுத்துரைத்தார். காசியில் இறப்பவர் முத்தியடைவர் என்பது சாஸ்திர உண்மை; இவர் காசிக்கு யாத்திரை செல்லும் காலத்து மணிகர்ணிகையில் சிவபெருமான் இறந்தவர்கட்குத் தாரக மந்திரத்தை உபதேசித்து முத்தியளிக்கும் காட்சியை ஞானக்கண்ணுல் கண்டு அறிந்தனர்.

(14) அவர் ஞான சாதனம் பழகுவதில் முற்றிய தேர்ச்சியை அடைந்ததன் பயனுக, அவரது மனம் ஞானக்காட்சியினுலும், பெரியோர்களது சம்பந்தத்தாலும் தூய்மை பெற்றிருந்த இடங்களைச் சேரும் போதெல்லாம், அங்குள்ள தூய்மையின் அளவிற்கு ஏற்ப,

உயர்ந்த சமாதிநிலைகளைத் தானாகவே அடையும். அவர் ஓரிடத்தைச் சார்ந்ததும் பேரானந்தம் எழுமாயின், அவ்விடம் மெய்யுணர்ந்த ஒரு பெரியாரது சம்பந்தத்தைப் பெற்றுள்ள ஓரிடமாகவே காணப்படும்; அவரது மனதில் தோன்றும் ஆனந்தத்தின் அளவைக்கொண்டே அந்த இடத்திற்குள்ள தூய்மையின் அளவை உணரலாகும். காசி விசுவநாதரது கோயிலில் திருவுருவைக் காணும்போதே சமாதியடைவார்; கேதார நாதரது கோயிலில் அவரது சமாதி மிக ஆழ்ந்த சமாதியாயிற்று. பிருந்தாவனத்தில் பங்கு விகாரியை (கண்ணனைக்) கண்டதும் அவர்க்குப் பேரன்பு பொங்கிற்று. ஸ்ரீ கோவிந்தரைக் கண்டபோது அவ்வளவு அன்பு பொங்கவில்லை; காளிங்க தமனத்தைக் கண்டதும் அவர் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார், ஸ்ரீ கௌரங்கரது பிறப்பிடம் எனக் கூறப்படும் இடத்தில் அவர்க்கு யாதொரு பேரின்ப நிலையும் ஏற்படாது போயினும், அவ்வூர்க்கு அருகேயுள்ள மணற்கரைகளின் பக்கம் அவர்க்குச் சமாதி உண்டாயிற்று; பின்னர் அம்மணற் கரைகளே ஸ்ரீசைதன்யரது உண்மையான பிறப்பிடம் என்பது ஆராய்ச்சியால் அறியப்பட்டது.

(15) அவர் ஜாதி முதலிய ஆசாரவிதிகளைச் சிறிதும் விலகாது பின்பற்றி வருவாரேனும், அவரது ஞானநிலை உயர உயர அவரிடமிருந்து அக் கட்டுப்பாடு தானாகவே நழுவிவிடும். தக்ஷிணேசுரக் காளிகோயில் பிரதிஷ்டை நடக்கும்போது அவர் கோயிலில் வழங்கிய பிரசாதத்தைப்பெற மறுத்துத் தாமே உணவைச் சமைத்து உண்டனர்; எனினும் பின்னாளில் தேவியின் தரிசனம் பெற்ற பின்பு பிரசாதமாகவே கோயிலில் வழங்கும் உணவைப் பெருவிருப்போடு உண்டனர். உடலை மறந்து தவத்தில் உறைத்து நின்று பிரேமையில் ஆழ்ந்து நின்ற ஒரு சமயத்தில் அவரது பூணூல் தானாகவே நழுவி வீழ்ந்து எங்கேயோ சென்றது! அதன் பின்னர் அதை மீண்டும் அணியவில்லை.

அவரிடம் இயல்பாக அமைந்த துறவிற்கு ஈடு வேறெங்கும் காணல் அரிதாகும். காமத்தின் அறிகுறியான இராவணனை அழித்தார் இராமர்; உடைமையில் உள்ள பேராசைக்கு அறிகுறியான துரியோதனனை அழித்தார் கிருஷ்ணர். காமத்தையும் உடைமையில் நசையையும் ஒருங்கே வேரற அழித்தார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். ஸ்ரீ ராமரது இயல்பும் ஸ்ரீ கிருஷ்ணரது இயல்பும் ஒன்றாக அவரிடத்து வாழ்ந்தன—இது பல வழியாலும் உண்மையாயினது பற்றியே அவர்க்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்ற பெயர் வந்ததுபோலும்.

இதுவரையும் கூறியதனாலே ஸ்ரீ ராமகிருஷ்ணரது பெருமையின் இணையற்ற தன்மை ஒருவாறு புலப்படும்; எனினும் அவரது அனுபூதியையும் பிற குரவர்களது அனுபூதியையும் இயன்ற அளவு சுருங்க ஒப்பிடுதலும் பயனளிக்கும். பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்தாரைப்போல், ஆரும் துறத்தல் அரிதரிது என்பர்; உண்மையே ஆயினும் அவர் மாதர்களது உடலைப் பழித்துரைத்தார், மனையைத் துறந்து சென்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணரோ இல்லத்தில் மனைவியோடிருந்தும், மனைவியுள்ளிட்ட மாதரனைவரையும் தேவியாகவே வழிபட்டார். 'அறந்தான் இயற்றும் அவனிலும் கோடியதிகம் இல்லந் துறந்தான்; அவனிற் சதகோடி உள்ளத் துறவுடையோன்' என்ற அவரது கூற்றிற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் இலக்கியமானார். 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு' தம்மிடம் இல்லையென்று தாழ்மையுடன் கூறினார் மாணிக்கவாசகர்; அவர்க்கிருந்த அத்தகைய பிரேமையன்பு மூன்றே நாட்கட்குள் ஒரு புதிய தெய்வத்தினிடத்தும் உண்டானமையும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கையிற் காணப்படும். 'மாது சொன்ன சூளால் இளமை துறக்கவல்லேனல்லேன்' என்ற மொழிகளால் பட்டினத்தடிகள் குறிப்பிட்ட திருநீலகண்டக் குயவனாரும் ஊடலால் ஏற்பட்ட சபதத்தால் இளமைக்குரிய இன்பத்தைத் துறந்து மனைவியுடன் வாழ்ந்தார்; ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்

ஸ்ரீ ராமகிருஷ்ணரது இணையற்ற சாதனவாழ்க்கையின் பயனாக அவரிடத்துக் குவிந்த ஞான அனுபூதிச் செல்வம் அளவற்றதாயிற்று. ஞானமார்க்கத்திலும் பக்தி மார்க்கத்திலும் யோகமார்கத்திலும் கருமமார்க்கத்திலும் சாதகர்களால் அடையக்கூடிய எல்லா அனுபவங்களும் காட்சிகளும் அவரிடத்து உண்டாயிருந்தன. ஹிந்துமதத்தின் பற்பல பிரிவுகளுக்கு உரிய தெய்வக் காட்சிகள் (சிவபெருமான், தேவி, இலக்குமி, சரஸ்வதி, கண்ணன், இராமன், இராதை, சீதை முதலியோரது காட்சிகளெல்லாம்) அவர்க்கு அனுபவங்களாயிருந்தன. இந்து மதத்திற்குப் புறம்பான கிறிஸ்து மதம் மகம்மதிய மதம் இவ்விரண்டின் முடிந்த நிலைகளாகிய கிறிஸ்துவின் தரிசனமும் அல்லாவின் தரிசனமும் பெற்றிருந்தார். பக்தி நெறிக்குரிய ஐந்து வகை பாவனைகளையும் பழகி ஒவ்வொன்றிலும் அறுதி நிலைவரை சென்றிருந்தார். அறுபத்துநான்கு தந்திர சாதனைகளையும் வெற்றியொடு பழகியிருந்தார். யோக முறைப்படிக் குண்டலினி சக்தியை மேலெழுப்பி ஸஹஸ்ராரத்திற்குச் செலுத்திச் சமாதியை அடைந்தார்; அக்குண்டலினி சக்தி பலவகையாக மேலே கிளம்புவதையும் உணர்ந்தார். நிர்விகற்ப சமாதியையும் அவர் பெற்றார். சுருங்கச் சொல்லில், ஸ்ரீ ராமகிருஷ்ணர் தாம் உலகில் வாழ்ந்த ஐம்பது ஆண்டில் நமது இந்திய நாட்டில் அதுவரை ஐயாயிரம் ஆண்டுகளாகப் பெரியார்கள் பெற்றிருந்த அனுபூதிச் செல்வத்தையெல்லாம் தம்மிடம் தொகுத்துக் குவித்து வைத்துக்கொண்டார் என்றும், அதற்கு மேலும் பிறநாட்டு ஞானச் செல்வத்தையும் ஓரளவு தேடி வைத்திருந்தார் என்றும் கூறுதல் மிகையாகாது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' 'உள்ளது ஒன்று, அதனை உரவோர் பலவாறாக விள்ளுவர்' என்ற மஹத்தான உண்மைகட்கு அவரது வாழ்க்கை ஓர் உயிருள்ள வடிவமாகவே ஆயிற்று. அறிவும், அன்பும், துறவும், ஓங்கி ஆழ்ந்து அகன்ற மனப்பான்மையும், உலகமக்கட்குத் தொண்டு செய்யும் பேரவாவும் ஒருங்கே திரண்டு உருக்கொண்டதுபோன்று அவர் திகழ்கின்றார்.

பயந்து அவரைக் கண்டித்தார். அத்வைதிகள் புகழும் நிர்விகற்ப சமாதியில் அவர் ஆறு மாதகாலம் தொடர்ந்து நிலைத்திருந்தார். புத்தர் போதிமரத்தடியில் தியானத்தில் கண்ட காட்சிகளைப் போன்றே, (தியானி புத்தர்களை அவர் கண்டதுபோன்றே) ஸப்தரிஷிகளைக் கண்டார். வில்லிபுத்தூர்ப் பெருமாளை நேரில் ஆண்டாள் சேவித்தால் நீர்ப்பண்டமாய் உருகி அழிந்துவிடுவாள் என்று பெரியாழ்வார் பயந்து அதற்கு இடங்கொடாததுபோல, ஸ்ரீ ராமகிருஷ்ணரும் கயையிலுள்ள பெருமானைப் பார்க்க நேரின் தமது உடல் நிலையாது என்றுகருதி அவ்வூர்க்குப் போவதைத் தவிர்ந்தார். கூரேசர் வாழையிலையை அறுத்த போது மரத்திலிருந்து பால் வடிவதைக் கண்டு மூர்ச்சித்தார் என்பர்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்த இடத்திற்குப் பக்கத்தில் புல்லின்மேல் ஒருவர் நடந்தபோது அவர் தமது நெஞ்சின்மேல் மிதித்து நடப்பதாக உணர்ந்தார். ஸ்ரீ கௌரங்கரைப்போல இராதையின் வடிவமாய்ச் சில சமயத்தும் கிருஷ்ணனின் வடிவமாய்ச் சிலசமயத்தும் வாழ்ந்தார். ஸ்ரீ ராமரும் ஸ்ரீ கிருஷ்ணரும் உயர்ந்த தெய்வத் தன்மை யுடையரா யிருந்தபோதிலும் அவர்கள்பா லிருந்த உடலழகு பல மாதரை வடிவில் ஈடுபடச் செய்ததென்பர்; ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மிடம் அத்தகைய அழகு உண்டானதை உணர்ந்ததும் அதை உள்ளே மறையுமாறு செய்தும், ஞான அழகு ஒன்றே மக்களைத் தம்மிடம ஈடுபடச்செய்ய வேண்டும் என்று கருதியும், உடலழகை வெறுத்து ஒழித்தார். வளநகரம் தொழு தேத்த மன்னனாகுமாறு வந்த சமயம் நகரைத்துறந்து காடேகச் சொன்னபோது, ஒரு கணத்தில் அரசாட்சியை வெறுத்து முகமலர்ச்சியோடு காட்டுக்குச் சென்றார் இராமர்; ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவரைப்போல் பல ஆண்டுகளாகப் பேரானந்தம் பெருகவாழ்ந்துவந்த தக்ஷிணேசுவரக் கோயிலைவிட்டுக் கோயிலதிகாரியின் உத்தரவின்படி ஒரு கணப்பொழுதில் யாதொரு பற்றுமின்றி வெளியேறினார்; அன்றியும், அவ்வுத்தரவு அவர்க்கு இடப்பட்டதன்று என்பதைக் கூறி அவரைக் கோயிலுக்கு மீளுமாறு

ணரோ மனைவாழ்க்கையின் ஆரம்ப முதலே, அத்தகைய காரணம் இல்லாதபோதும், பெண்ணிச்சையை அறவே ஒழித்தார். மாணிக்கவாசகரைப்போல், ஸ்ரீ ராமகிருஷ்ணர், இறைவனைக் காணாது ஆற்றாமையால் நீரைப்பிரிந்த மீனெனத் துடித்து அழுது அகங்குழைந்து அருளைப் பெற்றார் ; மாணிக்க மனைய ஞான வாசகங்களை உலகினர் உய்யுமாறு பொழிந்தார். நாவுக்கரசரைப்போலத் தாச மார்க்கத்தில் நிலைநின்றார் ; சுந்தரரைப்போலத்தோழமை கொண்டு இறைவனிடம் அன்பும் தொண்டும் செய்தார் ; ஞான சம்பந்தரைப்போல இறைவனது சேயாகவே தம்மைப் பாவித்து ஒழுகிவந்தார் ; திருமூலரைப்போல உயர்ந்த யோகத்தில் ஊன்றியிருந்தார். நம்மாழ்வார் கண்ணபிரானது எளிமையை நினைந்ததும் சமாதியில் ஆழ்ந்ததுபோல், பலமுறை ஸ்ரீ ராமகிருஷ்ணர் இறைவனைப் பற்றிய நினைவோ பேச்சோ வந்ததும் சமாதியில் மூழ்கினார் ; நம்மாழ்வாரைப்போல உறக்கம் இழந்தமையும், தெய்வ நன்னேய் பெற்றமையும், இறைவனது உணர்வோடு ஒன்றிய உணர்வுடைமையும் அவரது சரிதத்தில் காணப்படும். ஆண்டாளைப்போலக் கோபிகையாகப் பாவித்து, கண்ணனைப் பெற்றார் ; உடலில் பேரழல் வீசப் பெற்று, இறைவனது சம்பந்தமுள்ள பொருள்களால் அது நீங்கப்பெற்றார். குலசேகரப் பெருமாளைப்போல், இறைவனது அடியார் ஒருக்காலும் நன்னெறியினின்றும் வழுவார் என்னும் உறுதியோடு பிறரிடம் பேசினார். மதுர கவியாழ்வாரைப்போல, மெய்யடியாரைத்தெய்வமாகவே போற்றியும் வணங்கியும் வந்தார். திருமழிசை யாழ்வாரைப்போல் யோக சித்திகளைப் பொருட்படுத்தாதிருந்தார், தம் மனத்து எழுந்தருளியிருந்த பகவானை அடியார்க்குப் புறக்கண் காணத் தோற்றுவித்தார். தொண்டரடிப் பொடி யாழ்வாரைப்போல் தொண்டுகளைப் புரிந்தார். பெரியாழ்வார் பிரேமையாற் கலங்கிப் பெருமாளுக்குத் தீங்கு வருமோ என்று அஞ்சியதுபோல, தம்மோடு சென்ற பாலராமர் (பகவானது வடிவம்) நீரில் அடிக்கடி மூழ்கி விளையாடியபோது அவர்க்குச் சளி வருமென்று

வேண்டியபோது, அவர் ஒரு கணத்தில் யாதொரு வெறுப்புமின்றித் திரும்பினார்; அவர் தமக்கு வேண்டிய போது மனத்தை ஒன்றில் ஒரு கணப்பொழுதிற்குள் ஈடுபடுத்தவும் ஒரு கணப்பொழுதில் அதைவிட்டு விலக்கவும் வல்லவராயிருந்தார். இயேசுநாதர் உலக மக்களது பாபங்களையேற்று அவர்களைக் கரையேற்றும் பொருட்டுத் தாம் சிலுவையில் மரித்தார்; அதுபோல் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் தம்மைச் சார்ந்த அடியார்களது பாவங்களையெல்லாம் தாம் ஏற்றுக்கொண்டு அவர்களைத் தூயராக்கிப் பின் அப்பாவங்கட்காகத் தாம் தீராத நோய்க்கு ஆளாகி முடிவில் உயிரையும் துறந்தார். இன்னும் விரிப்பிற் பெருகும் என்றஞ்சிக் கூறாது விடுகதோம்.

ஓர் உரையோடு முடிப்போம். ஸ்ரீராமகிருஷ்ணரோடு பிற பெரியார்களை ஒப்பிட்டதன் நோக்கம் ஸ்ரீ ராமகிருஷ்ணரது பெருமையைக் கூற வருதல் அன்று. முற்காலத்துப் பெரியார்களது சரித நிகழ்ச்சிகளை முறையாக விவரமாக ஆராய்ந்து கண்டு உள்ளபடி எழுதிவைத்துள்ளவர்கள் இல்லாமையால், சில பெரியார்களை உண்மையாக வாழ்ந்தவர்களோ என்றும், சில அற்புத நிகழ்ச்சிகளை உண்மையானவைகளோ என்றும் சந்தேகிப்பது பலர்க்கும் இயல்பாய்விட்டது. 19ம் நூற்றுண்டிலும் மேற்றிசை நாகரிகம் நன்கு விளங்கிய கல்கத்தா நகரிற்கு அருகிலும், பலரும் கண்டும் சோதித்தும் வியந்தும் போற்றியும் வழிபட்டும் வந்த ஒரு பெரியாரது சரிதத்து, முற்காலத்துப் பெரியார்கள் பலரது சரித்திரங்களில் நடந்தனவாகக் கூறப்படும் ஞான அனுபூதிகளும் அற்புதச் செயல்களும் உண்மையாகும்போது, அப்பெரியார்களது வாழ்க்கைகள் உண்மையானவை என்பது பெறப்படுகின்றது. கண்ணபிரானது செயல்களும் இராமரது செயல்களும் நாயன்மார்கள் ஆழ்வார்களின் திவ்விய அனுபவங்களும் உண்மையானவை என்று ஊகிக்க இடம் தருவதுமன்றி அவர்களுடைய அனுபவங்களையும் வாழ்க்கைகளையும் செயல்களையும் நன்கு அறிவதற்கும், ஸ்ரீ ராமகிருஷ்ண

ரது வாழ்க்கை ஓர் அரிய திறவு கோலாகவும் சோதி விளக்காகவும் பயன்படுகிறது. ஞான அனுபூதி நிலைகளின் உயர்வை மதிப்பிடுவதற்கும் அவரது வாழ்க்கை ஓர் உரை கல்லாகின்றது. அவ்வாழ்க்கையை ஆராயுந்தோறும், பெரியார்கள் எவ்வாறு சாதனம் பழகுகின்றனர் என்பதும், அருள் பெறுகின்றனர் என்பதும், ஞான வாழ்க்கையின் இயல்பும் நுட்பமும் அருமையும் இத்தகையவை என்பதும் விளங்குகின்றன. சாதன வாழ்க்கையின் பல துறைகளும் பல படிகளும் பல இடையூறுகளும் அவைகளை நீக்கும் முறையும் தெளிவாகின்றன. முக்கியமாக இக்காரணம் பற்றியே ஸ்ரீ ராமகிருஷ்ணரது சாதன வாழ்க்கையும் அவர்க்கும் பிறர்க்கும் உள்ள ஒற்றுமை வேறுபாடுகளையும் சற்று விரிவாக எழுதலானோம்.

## (2) ஞானசாதனமும் அதன் பண்பும்

[ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர்சீடருள் ஒருவரான ஸ்ரீ சுவாமி சாரதாநந்தர் கூறியதைத் தழுவி எழுதியது.]

அங்கிங்கெனாதபடி எங்கும் பரம்பொருளைக் காணலே ஞான வாழ்வின் முடிவான நிலையாம், என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். பரம்பொருளை வடிவும் குணமும் பொருந்திய நிலையிற் காணினும், வடிவும் குணமும் அற்ற நிலையிற் காணினும் சரியே; உருவமாயிருப்பதும் அருவமாயிருப்பதும் அப் பரம்பொருளே யாதலின், இருவகைக் காட்சியில் எதுவும் முத்திப்பயனை அளிக்க வல்லதாகும். இதுவே ஞானசாஸ்திரங்களின் தீர்ந்த முடிபுமாகும்- 'எல்லாம் இறைவனே' என்றும் 'எல்லாம் பிரம்மமே' என்றும் நூல்கள் கூறுகின்றன. இப் பரம்பொருள் அனைத்திற்கும் அதீதமான மெய்ப்பொருள்; காலம் இடம் காரியகாரணநியதியெனும் மூன்றையும் கடந்த அழிவற்ற பொருள்; மனம் வாக்குகட்கும் எட்டாத தத்துவம்; உலகப் பொருள்கட்கு அப்பாலான ஒன்று. பரம்பொருளே எங்கும் இருக்கவும், அதை நம்மனோர் காணமாட்டாமைக்குக் காரணம் நமது அறி

யாமையே. இந்த அறியாமையை நீக்கி மெய்க்காட்சியைப் பெறும் பொருட்டுச் செய்யப்படும் முயற்சியே சாதனம் எனப்படும்.

பரம் பொருளைக் காணுதற்காகச் செய்யும் இம் முயற்சி, மெய்ப்பொருட் காட்சிக்கெனவே வாழ்ந்துவந்த புண்ணிய பூமியாகிய நம் பரதமா நாட்டில் தொன்று தொட்டே இருவகைப் பட்டதாக அமைந்துள்ளது. ஒன்று 'நேதி நேதி' (பரம்பொருள் புலன்கட்கும் மனத்திற்கும் புலப்படும் இது வல்ல, இது வல்ல) என்னும் நெறி, மற்றொன்று 'இதி இதி' (இதுவே அது இதுவே அது) என்னும் நெறி. முன்னது ஞானநெறி யென்றும், பின்னது பக்திநெறியென்றும் பெயர் பெற்றுள்ளன. இவ் விரண்டில் ஞான நெறியிற் செல்வோன் தொடக்க முதலே தனது நெறியின் முடிவிடம் இன்னதென்பதை அறிவான்; ஆனால் பக்திநெறியிற் செல்வோன் ஆரம்பத்தில் அம்முடிந்த நிலையை உணரானாகி, படிப்படியாக மேலேறி இறுதியில் அதே பரம் பொருட் காட்சியை எய்துகிறான். ஆயினும் இருவரது மனநிலையும் காட்சியும் வரவர மாறுபட்டு மேன்மை பெற்று வருகின்றன; இருவரும் புறப்பற்றுக்களையும் அகப்பற்றுக்களையும் வேரற மாய்க்கின்றனர். இது உண்மையாயினும் ஞானி ஆரம்பத்திலேயே அனைத்தையும் துறக்க வேண்டியவனாகின்றான். பக்தனோ தனது அன்பிற்குரிய இறைவனுக்காகச் சிறிது சிறிதாகப் பற்றுக்களைக் குறைத்து, முடிவில் முழு வைராக்கியத்தைப் பெற்று, இரண்டற்ற நிலையினை எய்துகிறான். உபநிடதங்களில் ஞான நெறியே உயர்வற உயர்ந்த நிலைவரை விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது; பக்தி நெறியின் பல வகைப் பகுதிகளும் கண்டு பிடிக்கப்படுமுன்பே ஞான நெறியே ஓங்கி வந்தது; எனினும், இரு வகை நெறிகளும் பண்டைய காலமுதலே வழங்கி வந்தன என்று கூறுவதற்கு ஆதாரம் உள்ளது. ஞானியாயினும் பக்தனாயினும் உலகத்தின் மீதுள்ள பற்றை ஒழித்தாக வேண்

டும். துறவு முற்றுப் பெற்று, உலகத்தைப் பற்றிய நினைவும் கருத்தும் மனத்தில் எழ இயலாதபடி மனம் அமைதி நிரம்பி, மனம் இல்லையென்னலாம் நிலைவரும் போது, நிர்விகற்ப சமாதி நிலை கை கூடுகிறது. இதனைப் புத்தியின் விசாரித்தறியும் இயல்பினால் ஞானி அடைகிறான்; பக்தனும் இதே நிலையினைத் தனது நெறியின் முடிவில் வேறொரு வழியாகப் பெறுகிறான்.

பகவான் ஒருவன் உளன் என நம்பும் பக்தன் உலகத்தை அவனால் படைக்கப்பட்ட உண்மையான பொருளெனக் கருதி வருகிறான்; ஆயினும் உலகத்தை நிலையற்றதெனக் கருதுகிறான். உலக மக்களும் உலகப் பொருள்களும் அவனது உடைமைகளாகவும் அடிமைகளாகவும் எண்ணப்படுதலின், எல்லாம் அவனுடைய சம்பந்தத்தால் பிரியமானவையாகின்றன. ஆயினும் தனது அன்பிற்குரிய இறைவனைத் தெளிவாகக் காணுதற்கு இடையூறாகும் பொருள்களைப் பக்தன் துறந்து வருகிறான். அவனது வாழ்க்கையின் நோக்கமெல்லாம், பகவானது பலவகைப்பட்ட வடிவங்களில் ஒன்றைப் பற்றி, அந்தத் தெய்வத்தின்மீதுள்ள அன்பிலும் நினைவிலும் முழுதும் ஈடுபட்டுத் தன்னையும் மறத்தலே (இழத்தலே) யாம்; அத்தெய்வத்தின் மீதுள்ள பக்தியெனும் பலி பீடத்திலே தன் வாழ்க்கை முழுவதையும் பலியாக அர்ப்பணம் பண்ணுதலே அவனது குறிக்கோளாகின்றது. அவன் தனது இஷ்டதெய்வத்தை இடைவிடாது தியானித்து வருகிறான். முதலில் தனது மனக்கண் முன் அத்தெய்வத்தின் முழுவடிவத்தையும் நிறுத்துதல் இயலாது போயினும், நாளடைவில் பழக்கத்தின் பயனாய், அவனது மனம் ஒருவாறு நிலைபெறுகின்றது. மனப்படமும் தெளிவாக விளங்குகின்றது. பின்னர் அத்தெய்வம் உயிருள்ள தாவதைக் காண்கிறான். தன்னைத் தொடுவதையும் தன்னோடு பேசுவதையும் உணர்கிறான்; தியானம் ஆழ்ந்து செல்லும்போது, திறந்த கண் முன்னும் தெய்வம் திகழ்வதைத் தரிசிக்கிறான். தெய்வத்தின் உயிருள்ள

சாந்நித்யத்தையும் உணர்கிறான். நாளடைவில் புற உலகம் முழுவதும் தன் நினைவு மயமாய் இருப்பதையும், தெய்வ சிந்தனையில் ஈடுபடும்போது தன் உணர்வை விட்டு முழுவதும் நழுவுவதையும் அவன் அனுபவத்தில் காண்கிறான். புறஉலகம் இவ்வாறு மறையினும், அகவுலகம் (மன உலகம்) உண்மையானதாய்க் காணப்படுகிறது; இவ்வுலகத்தில் பக்தனும் அவனது பக்திக்குக் கொள்கலமான தெய்வமும் அத்தெய்வ சம்பந்தமாக எழும் இன்ப துன்ப உணர்ச்சிகளும், ஆசை கோபம் தாபம் முதலியவைகளும் உண்மையாக உணரப்படுகின்றன. தியானத்தின் பயனாக முதலில் புற உலகம் உணர்ச்சியை விட்டு நழுவுகிறது; மன உலகமே நிற்கின்றது; பின் ஒரு நினைவே (இஷ்ட தெய்வத்தைப் பற்றிய நினைவே) அவ்வுலகத்தில் வலுத்து நிலைத்தலும், மற்றைய நினைவுகள் யாவும் தாமே நழுவி விடுகின்றன. நினைவுகள் சுருங்கச் சுருங்க, மெய்ப்பொருட் காட்சி மேலும் மேலும் தெளிவடைந்து வருதலை உணரும் சாதகன், அந்த ஒரு நினைவையும் ஒழித்து நினைவற நிற்கும் நிலையினை அடையின், காட்சிக்குரிய இடையூறு அறவே நீங்கும் என்ற உணர்ச்சி தலையெடுக்க, அதற்காக முயல்கிறான். அந்த நினைவும் ஒழியும்போது, மன உலகமும் நழுவி விடுகின்றது; அப்போது 'இயல் உண்மை அறிவு இன்ப' வடிவாய் இலகும் ஏகமான பரம்பொருளின் காட்சியே எய்தப்படுகிறது; தற்போதம் ஒழிய, மெய்ப்பொருட் போதம் ஒன்றே எஞ்சுகிறது. மனவுலகத்தில் ஒரு நினைவே குடிகொண்டிருக்கப் பெறும் பக்தன் முற்கூறியபடி அந்நினைவை அகற்ற முயலாமலே மன உலகத்தைத் தாண்டவும் கூடும். தெய்வத்தின்மீதுள்ள பக்தியின் முதிர்ச்சியினால், அத் தெய்வத்தோடு தானற இரண்டறக் கலந்து, தான் அத்தெய்வமாய் நிற்கும் போதத்தைப் பெறுகிறான். அன்பின் வலிமையினாலேயே இங்ஙனம் கோபிமார் கண்ணபிரானோடு ஐக்கியமெய்தி, தம்மைக் கண்ணனாகவே உணர்ந்தார்; இது பாகவத நூலில் கூறப்பட்டுள்ளது. இங்ஙனமே உத்தமமான பிற மெய்யடியார்களும் ஏகமான பரம்பொருளா

செய்தல் வேண்டும் என்று கூறியுள்ளனர். இம்மாதிரி ஈசனிடத்தில் அன்பு செய்யும்போது, உலக மக்களிடத்தும் உலகப் பொருள்களிடத்தும் எழும் பற்று பகவான் மீது எளிதாகத் திருப்பப்படுகிறது; பகவானிடத்தில் கொள்ளும் மனித உறவும் நாளடைவில் சூக்குமமாகித் தூய்மைபெற்றுத் தெய்விக உறவாகிறது. இம்மட்டோ! மனிதர்களைப் பாவச் செயல்கட்கு உள்ளாக்கும் காமம் குரோதம் முதலிய ஆறும்கூட பகவான்மீது திருப்பப் படும்போது மாறுபாடடைந்து, பக்தர்களை உய்வித்தற்குரிய சாதனங்களாகவும் மாறிவிடுகின்றன. உதாரணமாக, காமம் பகவான்மீதுள்ள அன்பை வலுக்கச்செய்து, மனதில் எழும் எல்லா வகைப்பட்ட ஆசைகளையும் பகவானை நோக்கிக் குவியும்படிச் செய்ய உதவுகிறது; கோபம் பகவானை அடைதற்கு இடையூறுயுள்ள தொன்றின்மீது மட்டும் செலுத்தப்படுகின்றது; லோபம் பகவானோடு அளவளாவுதலிலுள்ள பேராசையாக மாறுகின்றது; பொறுமை பகவானது அடியை யடைந்து உள்ளந் தேறியுள்ள பெரியார்கள்மீது செலுத்தப்பட்டு, பகவானைக் காணும் முயற்சிக்குப் பெருந் தூண்டுகோ லாகிறது; இவ்வாறே பிறவும் பக்தியை வளர்க்கும் ஏதுக்களாக அமைகின்றன. ஆக, சாந்தம் தாஸ்யம் முதலிய ஐந்து பாவனைகளும் பகவானை அடைதற்கு எளிய வழிகளாகின்றன.

பற்பல பெரியார்கள் பற்பல இடங்களிலும் காலங்களிலும் தோன்றி, ஒவ்வொருவரும் முற்கூறிய ஐந்து நெறிகளில் யாதேனும் ஒன்றைப் பின்பற்றிப் பிறவித் தளையினின்றும் விடுபட்டுப் பின்னர்ப் பிறக்கும் அதனையே போதித்து வந்துள்ளனர். இப்பெரியார்களது சரித்திரங்களை யெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, இரண்டு பேருண்மைகள் நமக்குக் கிடைக்கின்றன. (1) எல்லாப் பாவனை நெறிகட்கும் அடிப்படையாய் நிற்கும் கொள்கையாவது, உருவமும் குணமும்கொண்ட பரம்பொருளின் மீதுள்ள பேரன்பேயாகும். பகவானிடத்து மெய்யன்பு தலையெடுக்கத் தொடங்கியதும், பக்த

கத் தாம் இருப்பதை உணர்ந்துள்ளனர். 'கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும், கடல் ஞாலம் ஆவேனும் யானே என்னும்' என்ற நம்மாழ்வாரது வாக்கு வைணவ நூல்களில் இதற்குச் சான்றாகும். ஆக, நிர்விகற்ப சமாதி நிலை பக்தர்களாலும் தமது அன்பு நெறியின் வாயிலாகவும் அடையப்படுவதாகிறது.

இடையறாத அன்பினாலும் தியானத்தாலும் எல்லாம் வல்ல ஈசனை அடைய முயலும் பக்தர்கள் அவனோடு (சாந்தம், தாஸ்யம், ஸக்யம், வாத்ஸல்யம், மதுரம் என்னும்) ஐந்து வகை பாவனைகளில் (உறவு முறைகளில்) ஒன்றைப் பொதுவாக அமைத்துக் கொள்வது வழக்கம்; ஈசனும் தனது அடியார்களது விருப்பத்திற் கிணங்க வெவ்வேறு தெய்விக வடிவங்களை அமைத்துக்கொண்டு அவர்களோடு ஒழுகுவதும் வழக்கம். ஈசன் உயிர்களோடு எல்லாவித உறவுகளும் உடையவனாதலின், தன்னைத் தந்தையாகப் பாவிப்பவர்க்குத் தந்தையாகவும், தோழனாகப் பாவிப்பவர்க்குத் தோழனாகவும், இம்மாதிரியே ஆண்டானாகவும் குழந்தையாகவும் நாயகனாகவும் நின்று, அவரவர்களது விருப்பத்திற்கேற்றபடி அருள் சுரக்கின்றான். மனிதன் இயல்பாகவே பிறமக்களோடு கூடி வாழும் இயல்புடையவன்; அவனது அன்பு குடும்ப வாழ்க்கையிலும் ஸமூக வாழ்க்கையிலும் ஏற்படும் பல வகை உறவுகளில் ஒன்றின் வாயிலாகவே வெளிப்படுகின்றது. தந்தை தாய் கணவன் மனைவி வேலைக்காரன் தோழன் எஜமானன் முதலிய உறவு முறைகளில் ஒன்றைப் பெற்றவரிடத்து அன்பு உண்டாதலும், யாதொரு தொடர்பும் இல்லாதவரிடத்து உபேக்ஷை ஏற்படுதலும் மனிதனுக்கு இயல்பாக அமைவனவாம்; ஆதலின் பக்தி நெறியை உபதேசிக்கும் ஆசாரியர்கள் ஸமூக வாழ்க்கையிலுள்ள உறவு முறைகளையெல்லாம் ஐந்திற்குள் அடக்கி, இவைகளில் ஒன்றை ஒரு மனிதன் தனது திறமைக்கும் சுபாவத்திற்கும் ஏற்றவாறு தெரிந்தெடுத்துக் கொண்டு பகவானிடத்தில் அவ்வுறவைக் கொண்டாடி அன்பு

னுக்கும் பகவானுக்கும் இடையே வெகுதூரம் உள்ளது என்னும் எண்ணம் வரவரக் குறைந்துவிடுகிறது; பகவானது ஐச்வரியத்திலும் மேன்மையிலும் கண்ணுயிருக்கும் தன்மை பக்தனிடம் குறைந்து வருகின்றது; வரவர இருவரும் ஒருவரை மற்றொருவர் அணுகலும், முடிவில் இருவரும் ஒன்றாகி விடுகின்றனர். ஆகையால், எந்தப் பாவனையைப் பின்பற்றிப் பக்தி செய்தாலும், பக்தன் பகவானைத் தனது மிக்க அன்பிற்குரிய ஒருவராகவும் தனக்குச் சொந்தமான நெருங்கின உறவினராகவும் கருதுவதனால், பகவானோடு கூச்சமும் பயமும் இல்லாமல் நெருங்கி அளவளாவுகிறான்; பகவானிடம் தனக்கு வேண்டியவற்றைத் தரும்படி வற்புறுத்தவும் மன்றாடவும், தராதபோது அவனைக் கண்டிக்கவும் வையவும், அவன்மீது கோபங்கொள்ளவும் சிறிதும் தயங்குவதில்லை. அன்பின் முதிர்ச்சிக்கு இம்மாதிரி நெருங்கி யுறவாடுதலே அறிகுறியாகும்;. முற்கூறிய ஐந்து பாவனைகளும் முறையே ஒன்றுக்கொன்று உயர்ந்தனவாகும். அன்பு சாந்த பாவனையில் தொடங்கி மேலும் மேலும் வளர்ந்து, மதுரபாவனையில் முற்றுகிறது; ஆதலால் மதுரபாவனையே அனைத்திலும் உயர்ந்த அன்பைக் குறிப்பதாகிறது. இது ஒரு வழியில் நோக்கும்போது உண்மையாயினும், ஒவ்வொரு பாவனையும் விடாமுயற்சியோடு பழகும் சாதகனுக்கு உயர்வற உயர்ந்த பூரணமான மெய்ப்பொருட் காட்சியை உண்டுபண்ணும் தகுதி வாய்ந்ததேயாம்: (2) மற்றொரு பேருண்மையாவது, எந்த பாவனையைப் பின்பற்றி ஒழுகினும், முடிவில் பக்தன் தனது அன்பிற்குரிய இஷ்டமூர்த்தியின் தியானத்தில் பெரிதும் ஈடுபட்டு, தன்னைப் பற்றிய நினைவு முழுவதும் ஒழியும்படியான நிலையினை அடைந்துவிடுகிறான்; தனது அன்பிற்குக் கொள்கலமாகிய பகவானை மகிழ்வித்தலிலேயே தனக்கு மிக்க ஆனந்தம் உண்டாவதை உணர்கிறான்; அவனைவிட்டு ஒருகணம் பிரிந்தாலும், பொறுக்கவொண்ணுத துயரத்திற்கு உள்ளாகிறான்; பகவானைப்பற்றிய நினைவொன்றே பக்தனது மனதில் குடிகொண்டு உறைவதினால், தான் வேறு

கத் தனியாக இருக்கும் நினைவு சிலசமயம் மனதைவிட்டு அறவே நீங்க, தன்னைப் பகவானாகவே உணர்கின்றான். அந்நிலையில் தற்போதம் ஒழிந்து மெய்ப்பொருட் போதமே நிற்கிறது. பக்தன் பகவானோடு கலந்து ஒன்றாகி விடுகிறான்; பகவானாகவே தன்னை நினைக்கிறான். இத்தகைய ஐக்கியம் எவ்விதமான பாவனையோடு பகவானை நெருங்குவோர்க்கும் முடிவில் ஏற்படுகிறது. முதலில் அன்பின் முதிர்ச்சி, பின்னர்ப் பகவானைப்பற்றிய உணர்வின் மிகுதியில் பக்தனுக்குத் தான் வேறாக இருக்கும் உணர்வு நழுவுதல், முடிவில் பக்தனும் பகவானும் ஐக்கியமாகி ஏகமாய் நிற்கும் உயர்ந்த நிலை, இம்மூன்று படிகளும் எல்லா அன்பு நெறிகட்கும் பொதுவானவையாகும்.

யாதானும் ஒரு பாவனையின் (உறவு முறையின்) வாயிலாக அன்புசெய்யும்போது, அன்பு செய்பவன் அன்புசெய்யப்படுபவன் எனும் துவிதபாவனை வலுக்குமேயல்லாது, குறைந்து அத்துவிதமாகும் ஏகபாவனை உண்டாவது எப்படி என்று சிலர் கேட்கலாம். மனநூல் (மனோதத்துவ சாஸ்திரம்) வாயிலாக இதற்கு மறுமொழி கூறலாம். மனிதனது மனத்தில் ஒரு நினைவு பலமாக நிலை நாட்டப்படும்போது, அதற்கு எதிரான நினைவுகள் யாவும் தாமாக மறைகின்றன; நாளடைவில் அந்த ஒரு நினைவொழிந்த மற்றைய நினைவுகளெல்லாம் மனத்தை விட்டு ஓட்டப்படுகின்றன. இது மன நூலார் கண்டறிந்துள்ள ஓர் உண்மையாகும். பகவானை ஒரு பாவனையோடு வழிபடும்போது, அன்பு செயப்படும் பகவானது நினைவே மனதில் குடிகொள்ளுகின்றது; நமது உணர்விற்கு இலக்காகும் இடம் முழுவதிலும் அந்த ஒரு நினைவே நிரம்பி மற்ற நினைவுகளை நமது உணர்விற்கு வராதபடித் தடுத்து வருகின்றது. மனம் ஒருமுனைப்பட்டுக் குவிந்து நிற்கும் இம்மாதிரியான மேம்பட்ட தியான நிலையில், வழிபடுவோன் வழிபடப்படும் பொருள் என்னும் பாகுபாட்டைப் பற்றிய உணர்ச்சி மாறிவிடுகிறது. 'நான்-நீ' என்ற இரண்டான பாவனையில் 'நீ' என்பது முறுகும்

போது 'நான்' என்பது மறைந்து விடுகிறது; அல்லது, 'நான்' 'நீ' எனும் இரண்டும் அன்பினால் இரண்டறக் கலந்து, பிரிக்க வொண்ணாத ஏகமாகின்றன; இவ்விரண்டு வழிகளில் எவ்வழியாக நோக்கினும் மிஞ்சுவது ஒரு பொருளே. துவித நிலை போய் அத்துவித நிலை எழுகின்றது, உணரப் படுகின்றது, என்பது முடிவாகின்றது. காண்பான், காணப்படுபொருள், இவ் விரண்டிற்கு முள்ள சம்பந்தம் ஆகிய மூன்றையும் மனம் ஒரே சமயத்தில் உணர்வதில்லை என்று நமது பண்டைய தத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர்; ஒரு கணம் காண்பானையும், மறுகணம் காணப்படும் பொருளையும் நோக்குகிறது என்றும், மாறு மாறி இவ்விரண்டையும், விரைவாக ஒன்றினின்று மற்றொன்றிற்குச் சென்று, நோக்கும்போது இரண்டிற்கும் உள்ள தொடர்பை உணர்கிறது என்றும் அப்பெரியார் போதிக்கின்றனர். மனதை ஒரு வழிப் படுத்த முயலும்போது, சாதகன் தனதுள்ளத்தில் ஒரு நினைவைமட்டும் நிலைநாட்டப் பாடுபடும்போது, மனத்தின் அலைச்சல் வரவரக் குறைந்து வருகிறது; அப்போது மனம் காண்பானையும் காணப்படு பொருளையும் மாறி மாறிச் சென்று நோக்கும் இயல்பு சாதகனுக்கு நாளடைவில் புலனாகிறது; இந்த நுட்பமான அலைச்சலும் மனத்தை ஒரு நிலைப்படுத்தும் பழக்கத்தால் குறைந்து அடங்கும்; அப்போது, பிரிக்கவொண்ணாத ஏகமான மெய்ப்பொருளே வேறுபட்ட இரண்டு நிலைகளினின்றும் நோக்கப்படும்போது, காண்பான் காணப்படும் பொருள் என இரண்டாகப் பிளவுபட்டுக் காட்சியளிக்கின்றது என்ற உண்மை அனுபவத்தில் விளங்குகின்றது. மெய் யுணர்ந்தார்து அனுபவம் இப்படியிருத்தலின், பக்திநெறியைப் பின்பற்றுவோரும் அன்பின் முதிர்ச்சியால் ஏகாக்ர சித்தம் என்னும் நிலையினைப் பெற்று ஏகத்வ உணர்வை அடைதலில் ஐயமில்லை என்பதாயிற்று.

முற்கூறியபடி ஒரு. பாவனையைப் பின்பற்றி ஒரு பக்தன் உயர்வற உயர்ந்த இரண்டற்ற நிலையை அடைய

வேண்டுமாயின், அவனுக்குப் பொதுவாகப் பல பிறவி கள் வேண்டியிருக்கும். இது இவ்வளவு அருமை வாய்ந்த தாதலின் ஒவ்வொரு காலத்தில் ஒன்றோ அல்லது இரண்டோ காணப்படுவதன்றி, ஐந்து பாவனைகளும் காணப்படுவதில்லை; மஹான்கள் தாம் தாம் வாழ்க்கையிற் பின்பற்றிச் சித்தி பெற்றுள்ள அந்தந்த பாவனை நெறி களையே உலகத்தார்க்குப் போதித்தும் வந்துள்ளனர். உதாரணமாக, வேத காலத்தும் புத்தமதக் காலத்தும் சாந்தி பாவனையும் தாஸ்ய பாவனையும் வழங்கி வந்தன. ரிஷிகள் சாந்த பாவனையைப் பின்பற்றி வந்தனர். இராமாயண பாரதகாலங்களில் சாந்த பாவனையும் கடவுளைத் தந்தையாகப் பாவிக்கும் பாவனையும் வழங்கி வந்தன. தந்திர நூல்கள் (ஆகம நூல்கள்) உண்டான காலத்தில், கடவுளைத் தாயாகப் பாவிக்கும் பாவனையும் ஒருவித மதுர பாவனையும் உண்டாயின. வைணவமதம் தலையெடுத்தபின்பே வட நாட்டில் ஸக்ய வாத்ஸல்ய மதுர நெறிகள் மிக்க மேன்மையையும் பூரணத் தன்மையையும் பெறலாயின; தென்னாட்டில் வைணவமதம் தலையெடுத்த பின்பு மாத்திரமே தாஸ்ய வாத்ஸல்ய மதுர நெறிகள் தழைத்தோங்கின. சைவமதச் சமய குரவர்கள் மூலமாக தாஸ்ய ஸக்ய நெறிகளும் கடவுளைத் தந்தையாகக் கருதும் நெறியும் சிறப்பாகத் தழைக்கலாயின.

## (3) சரணாகதியும் அதன் மர்மமும்

பக்தியைக் கூறும் மதங்கள் யாவும், பக்தி உயர்ந்த நிலையில் பிரபத்தியாக மாறுகிறது என்று சொல்லுகின்றன. பிரபத்தி, சரணாகதி, நியாஸம் என்பன ஒரே பொருளைக் குறிக்கும் மொழிகளாம். பிரபத்தியை எளிய சாதனம் என்று காட்டுவார் தென்னிந்திய ஸ்ரீ வைணவர்; இவர்கள் கூறுவது விரிவாக முன்பு ஓரிடத்தில் விளக்கப் பட்டுள்ளது. இறைவனிடம் நம்மைஒப்புவிப்பதுபோலவே மெய்யன்பு பெற்ற ஆசாரியர்களிடத்து நம்மை ஒப்பு விக்கும் பழக்கமும் உள்ளது. நமது பாவத்தைப் போக்கு

வதற்காகவும் முத்தியடைவதற்காகவும் முயற்சி செய்ய வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளதன்றோ? இப்பொறுப் பாகிய பாரம் முழுவதையும் இறைவனிடம் ஒப்புவித்து விட்டு நீயே கதி என்று அவனைப் புகலாகப் பற்றுதல் பரந்நியாசம் எனப்படும்; இவ்வாறு ஒப்புவித்தற்கும் அப்பாரத்தை பகவான் ஏற்றுக்கொள்வதற்கும், நமக்கும் பகவானுக்கும் இடையே நின்று நமக்காகப் பரிந்து பேசு வதற்காக ஒரு மெய்யடியாரைப் பலர் துணையாகக்கொள் ளுவர். "நானும் என்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொறுப்பும் என்னைக் காப்பாற்றிக் கொள்வதன் பயனும் எனக்குரிய பொருள்களல்ல, பகவானுக்கு உரிமையான வைகளே என்று உணர்ந்து ஞானி தன்னை அவனிடமே ஒப்புவித்துவிடுவான்" என்றார் ஸ்ரீ வேதாந்த தேசிகர். "எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன் அடிமையே, எல்லாம் உன்னுடைய செயலே, எங்கணும் வியாபி நீ" என் றும், "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்றும் சைவசமய நூல்கள் போதிக்கின்றன. இவ்வாறு பிரபத்தி நெறி நாடெங்கும் வழங்கிவந்தாலும், இதன் இயல்பை உள்ளவாறு அறியாது போகின்றனர் பலர்; இதன் உட் கருத்தைத் தெரிந்துகொள்ளாது, பலர் தம்மிச்சைப் படியே அதற்குப் பொருள்கொண்டு, தவறான நெறிகளில் திரிந்து அல்லற்படுகின்றனர். அந்நெறியைப் பின்பற்று வதாகச் சொல்லுபவரது ஒழுக்கம் திருந்தாதிருப்பதைப் பிறர் காணும்போது, அந்நெறியில் அவநம்பிக்கை கொள் கின்றனர்: அதைப் பின்பற்றுவோரும் அதனால் தயங்கு கின்றனர்; அதன் உண்மை ஸ்ரீ ராமகிருஷ்ணரது சிஷ் யர்களில் ஒருவராகிய ஸ்ரீ கிரீச சந்திரகோஷ் என்பவரது வாழ்க்கையில் ஒரு தீபம்போல் விளங்குகின்றது. அவர் தமது குருவின் அருளைப்பெற்றவகையையும், அதற்கு முன்னும் பின்னும் இருந்த அவரது மனநிலைகளையும்பற்றி விரிவாக அக்குருவின் இன்னொரு சீடராகிய ஸ்ரீ சுவாமி சாரதாநந்தர் எழுதிவைத்திருக்கின்றனர்; பின்வரும் நிகழ்ச்சிகளும் சரணாகதியின் மர்மமும் அதைத் தழுவி அவர் கூறுவதாகவே சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

கிரீச சந்திரகோஷ் வங்காள மொழியில் பல நாடகங்களை எழுதியுள்ள புகழ்பெற்ற ஓர் அறிவாளர். அவர் தாம் எழுதிய நாடகங்களையும் பிறவற்றையும் நடித்தற்காக ஒரு நாடகசாலையைத் தாமே அமைத்தார்; நடிக்கும் தொழிலை மேற்கொண்ட பல ஆடவர்களையும் மாதர்களையும், தமக்குக் கீழ் வேலையாளராக அமர்த்திக் கொண்டு, அவர்களைச் செவ்வையாகப் பழக்கியும் தாமும் அவர்களோடு நடித்தும் நாடகசாலையைத் திறமையாக நடத்தி வந்தார். இதுவே அவர்க்கு வாழ்க்கைத் தொழிலாயிற்று, பெரும் புகழையும் அவர்க்குக் கொடுத்தது. ஆனால் அவர் தமது வாழ்க்கையில் உயர்ந்த இலக்ஷியம் ஒன்றையும் கொள்ளாதவரானார். நல்லொழுக்கத்தையும் தன்னடக்கத்தையும் தூய வாழ்வையும் பொருட்படுத்தாமல், கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று மனம் போனவழியே திரிந்தார்; குடியும் அதனையொட்டிய பாவச் செயல்களும் மெல்ல மெல்ல அவரிடம் குடிபுகுந்தன. ஆயினும் தமது வாழ்க்கையில் அவர்க்கு அந்தரங்கமாக ஓர் அதிருப்தி இருந்துவந்தது. கடவுள் இருப்பதைப்பற்றிய சந்தேகமும், அவர் இருப்பதானால் அவரைக் காணாத வாழ்க்கை பயனற்றதாகும் என்ற ஏக்கமும் அவரது மனதை இடையிடையே குடையலாயின; எனினும் வெளிப்பார்வைக்கு அவர் மதச்சிந்தனை இல்லாதவர்போலவும் குதூகலமாகவும் மதிப்பாகவும் வாழ்ந்து வந்தனர்.

மத சம்பந்தமான பல பெரியார்களைப்பற்றிய நாடகங்களை மிக அழகாக எழுதியும் நடித்தும் வந்த இவரது புகழை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேள்வியுற்றார். 'சைதன்ய லீலை' என்னும் நாடகத்தைப் பார்க்கும்பொருட்டு கிரீசரது அனுமதிபெற்று அவர் ஒருநாள் சில சீடர்களோடு சென்று, எல்லாவற்றையும் நன்கு கவனித்தார்; உருக்கமான பல பாகங்களில் இடையிடையே ஆனந்த பரவசமடைந்து, நாடகத்தையும் நடிப்பையும் மெச்சினார். அது முதல் இருவர்க்கும் பழக்கம் ஏற்பட, ஸ்ரீ ராமகிருஷ்ணர்

கடவுளை நேரிற் கண்டவரெனக் கேட்ட கிரீசர் அவரை அடிக்கடி காணவரலானார். அப்பெரியாரது ஞானமொழி களைக் கேட்டும், அவரது பணிவையும் அன்பையும் பெரு மையையும் வியந்தும் அவரிடம் ஈடுபடலானார்.

கிரீசர் ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணரைச் சார்ந்து, மனப்பூர்வமாக அவரைச் சரணமடைந்து, "நான் இனி மேல் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். குரு தேவர், "நீ இதுவரை செய்துவந்துள்ளதையே இன்னும் தொடர்ந்து செய்துவா; தற்காலம் கடவுள் உலகம் இரண் டையும் பற்றுக; பின்பு ஒன்று நழுவும்போது, காரியங் கள் ஒழுங்காகும். ஆனால் ஒன்றுமட்டும் கவனித்துக் கொள்; காலையிலும் மாலையிலும் கடவுளை நினைக" என்றார். சொன்னதும் பதிலை எதிர்பார்ப்பவரைப்போல் கிரீசரை நோக்கித் திரும்பினார். இதைக்கேட்ட கிரீசர் தமக்குள் யோசிப்பாராயினர்:— "எனது வேலையின் நிலை மையைப் பார்த்தால், உடலுக்கு அவசியமானவற்றை ஒழுங்காகச் செய்யவும் எனக்குப் பொழுது கிடைப்ப தில்லை. அவர் கூறிய இரண்டு வேளைகளிலும் கடவுளை நான் மறப்பது உறுதியே; அப்படி மறப்பேனாயின், குருவுக்குக் கொடுத்த வாக்கை மீறுவதால் எனக்குக் கேடும் பாவமும் விளையுமே; எனக்குக் கரையேற வழி காட்டும் குருவுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றாமற் போவதா?" என்று வருந்தினார். மீண்டும் சிந்திப்பார்:— "ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிகக் கஷ்டமான ஒன்றையும் செய் யச் சொல்லவில்லையே; பிறரிடம் இவ்வாறு கூறியிருந்தால் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியடைவார்!" ஆயினும் கிரீசர் வேறு என்ன செய்யக்கூடும்! உலககாரியங்களில் மூழ்கி யிருந்த அவர்க்கு ஞான சாதனம் பழகச் சிறிது அவகாச மும் கிடையாது என்பதை அவர் நன்கு அறிவார். விரதங் கட்கும் ஒழுங்குகட்கும் கட்டுப்பட்டு ஆயுள் முழுவதும் வாழவேண்டும் என்ற நினைவே அவர்க்குப் பெரும் கவலையை உண்டாக்கிற்று. பிறர் சொல்லுக்கு அடங்கி நடந்ததை அவர் அதுவரை அறியாதிருந்தார். ஒரு

பக்கம் தமது இயலாமையையும், மற்றொருபக்கம் அற்பக் காரியத்தையும் தமக்குச் செய்யமுடியாதென்று கூறு வதில் உள்ள அவமானத்தையும் மாறி மாறிச் சிந்தித்து, யாதொரு விடையும் கூறாது மௌனமா யிருந்தார். இந்நிலையை உற்றுநோக்கி யறிந்த குருதேவர் அவரிடம் மறுபடியும், "அதைச்செய்ய உனக்கு முடியாதாயின், உண்ணுமுன்னும் உறங்குமுன்னும் ஒருமுறை கடவுளை நினைப்பாயாக" என்றனர். ஆனால் கிரீசர்க்கு உண்ணுதற் கெனக் குறிப்பிட்ட வேளையொன்று இருந்ததில்லை; மேலும் உண்ண உட்காரும்போது, தமது வியாஜ்ஜியத் தைப் பற்றியும் வக்கீலைப்பற்றியும் நினைந்த வண்ணமே பலநாள் மெய்ம்மறந்த நிலையிலே உண்பார். இதை நினைந்து அவர் அற்பமான காரியமொன்றையும் செய்வ தாக வாக்களிக்க வழியில்லையே என்று மனங்குழம்பி மௌனமாயிருந்தார்; பெருங்கவலையும் திகைப்பும் பயமும் அவரது உள்ளத்தைக் குலைத்தன. குருதேவர் மறுபடியும் கிரீசரைப் பார்த்து, புன்னகை செய்து, "அதுவும் செய்ய முடியாதென்று நீ கூறுவையாயின், எனக்கு வக்கால்நாமா கொடுத்துவிடுக" என்றனர்; இவ்வாறு கூறும்போது, அவர் அருள்மேலோங்கிய பரவச நிலையில் இருந்தனர்.

இந்த அருள்மொழிகளைக்கேட்ட கிரீசர் மன அமைதி பெற்றார்; குருதேவரது அளவற்ற கருணையைக் கண்ட அவர்க்கு அவரிடம் இருந்த அன்பும் நம்பிக்கையும் ஆயிர மடங்கு பெருகின. அக்கணமே தமது பாரம் முழுவதும் நீங்கினதை உணர்ந்தார். "என்னை நடுங்கச்செய்த கட்டுப் பாடுகளும் விதிகளும் இன்றோடு எனக்கு ஒழிந்தன. நான் யாதுசெய்தால் என்ன? என்னை ஆட்கொண்ட குருதேவர் தமது தெய்விக சக்தியால் என்னை எப்படியாவது காப்பாற்றி விடுவார் என்ற உறுதியான நம்பிக்கையே எனக்குப் போதும்" என்று நினைத்துக்கொண்டார். வக்காலத்தைக் கொடுத்துவிட்டமையால், தமக்குப்பதி லாக எதனையும் செய்யும் அதிகாரத்தைத்தாம் அவர்க்கே

கொடுத்துவிட்டதாகக் கருதினர். தமது சுய முயற்சியாலும் ஞான சாதனங்களாலும் தாமாக ஒன்றையும் துறக்கவேண்டாம் என்று நினைத்தார்; அதிகாரம் பெற்ற குருதேவரே தமது திவ்விய சக்தியால் தமது சீடரின் மனதை உலகப்பொருள்களை விட்டு வலிய இழுத்து உயர்த்திவிடுவார் என்பது கிரீசரது நம்பிக்கையாயிற்று.

கிரீசர் ஓர் உண்மையை உணராது போயினர். யாதொரு விதிக்கும் கட்டுப்பாட்டுக்கும் இசையாத அவர் அவைகளினும் நூறு மடங்கு பலமாக மனதைக் கட்டுப்படுத்தும் அன்பிற்கு அடங்கியொழுகத் தாமே இணங்கினரன்றோ? அவர்க்கு வருங்காலத்து எது நடந்தாலும் அவர் கைகட்டி வாய்பொத்தி இருக்க வேண்டியதைத் தவிர எதிர்க்கவோ முறையிடவோ அதிகாரம் ஏது? வெற்றியோ தோல்வியோ புகழோ இகழோ இன்பமோ துன்பமோ, எதையும் பொறுக்கத்தானே வேண்டும்? இவ்வளவு தூரம் அவர் எட்டி யோசிக்கவில்லை. ஆயினும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமக்கு அருள் சுரந்தார் என்ற நினைவு மட்டும் எப்போதும் அவருள்ளத்தில் குடிகொண்டு விட்டது. "இனி உலகத்தார் என்னைத் தூற்றினும் அதைப் பொருளாகக் கருத மாட்டேன்; என்னை அவர் ஆட்கொண்டபின், நான் அஞ்ச வேண்டியது எதற்கு? என்னைப் பற்றிய முழுப் பொறுப்பும் அவர்க்கேதான்" என்ற நினைவு, எச்செயல் செய்யும்போதும் அவரை விட்டு நீங்காது. இவ்வாறு சதா அவரைப்பற்றி நினைத்து வந்தமையால், அவரது செயல்களும் நினைவுகளும் தாமாகவே மாறலாயின. குருதேவர் தம்மீது அன்பைப் பொழிவதை மட்டும் உணர்ந்தார்; அதனல் இவரது மனம் குருதேவரோடு அன்பாற் பிணைக்கப்பட்டது. இதுவே மகிழ்ச்சியைக் கிரீசர்க்கு அளித்தது.

ஒருநாள் ஓர் அற்பக் காரியத்தைப் பற்றிப் பேசும்போது கிரீசர் குருதேவரிடம் "சரி, அதை நான் செய்வேன்" என்றார். உடனே குருதேவர் அவரைப் பார்த்து, "நான் செய்வேன் என்று கூறுவது உனக்கு எப்படித்

தரும்? நீ செய்யத் தவறினாலோ? "கிருபை உண்டானால் செய்வேன் என்க" என்று அவரது அஹங்காரத்தைத் தடுத்தார். கிரீசர் அதனை உணர்ந்து கொண்டு, அவர் கூறுவது சரிதானே; நான் என்னை அவரிடம் ஒப்புவித்த பின், அவரும் என்னை ஏற்றுக் கொண்டபின், அவ்வாறு சொல்லலாமோ? அதைச் செய்வது எனக்கு ஏற்றது என்று அவர் கருதி எனக்கு அதைச்செய்ய அனுமதி கொடுத்தாலன்றி நான் எப்படிச் செய்ய முடியும்?" என்று சிந்தித்தார்; அது முதல் அம்மாதிரியான நினைவு களையும் வார்த்தைகளையும் விட்டுவிடத் தொடங்கினார்.

நாள்கள் பல கழிந்தன. குருதேவர் மண்ணுலகை விட்டுச் சென்றார். கிரீசர்க்கு மனைவியின் மரணமும் குழந்தையின் மரணமும் இன்னும் பல துயரங்களும் அடுக்கி வரலாயின. "எல்லாம் அவரது சித்தப்படியே நடக்கட்டும். என் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டது உண்மையே; இன்ன வழியாக என்னை நடத்தி வரவேண்டும் என்ற ஒப்பந்தமோ இல்லை. எது நேர்ந்தாலும் முணு முணுக்கவோ வேண்டாமென்று கூறவோ எனக்கு அதி காரம் ஏது? உண்டாயின் எனது வக்காலத்தும் நான் அவரைச் சரண்புகுந்ததும் பொய்யாகுமன்றோ?" என்று தமக்குள்ளே சொல்லிக் கொள்வார். நாளடைவில் அவர்க் குச் சரணாகதி இன்னதென்பது வரவர நன்கு விளங்கலா யிற்று. பிற்காலத்தில் அவரே பின்வருமாறு ஒருவரிடம் கூறினார்:—"நான் இன்னும் அதைப்பற்றி அறியவேண் டியது உள்ளது. வக்காலத்துக் கொடுத்துவிடுதல் என்ப தற்கு இவ்வளவெல்லாம் பொருள் உண்டு என்று யான் அன்று உணராது போனேன். பிரார்த்தனைகட்கும் சாதனைகட்கும் தவத்திற்கும் ஒரு முடிவு உண்டு; ஆனால் சரணாகதியைப் பழகுதற்கு முடிவே இல்லை—இவ்வுண் மையை இப்பொழுதே உணர்கிறேன். பகவானுக்கு வக் காலத்துக் கொடுத்தவன் ஒவ்வொருசெயலைத் தொடங்கும் போதும் மூச்சுவிடும்போதும் ஓர் அடி எடுத்து வைக்கும் போதும் தன்னை ஆராய்ந்து பார்க்கவேண்டும்; தன் பலங்

கொண்டு அதைச் செய்யாமல் பகவானது சக்தியால் மட்டும் அதைச் செய்ய வேண்டும்; தன் செயலை முற்றும் ஒழிக்கவேண்டும். இவ்வளவு விழிப்பாயிருத்தல் அவசிய மாகிறது."

வக்காலத்துக் கொடுத்தல் என்னும் சரணாகதி மார்க் கத்தை நினைக்கும்போது, அதையொட்டிய பல கருத்து கள் எழுகின்றன. சாதாரண ஞான குருக்கள் பிறர்க்கு மந்திரோபதேசம் செய்வார்கள், ஞான சாதனங்களைப் போதிப்பார்கள், தாங்கள் எதைப் பின்பற்றி ஞானம் பெற்றார்களோ அதை வார்த்தைகளாலும் வாழ்க்கையா லும் எடுத்துக் காட்டுவார்கள். "சொன்னதைக் கேட்டு நடக்கும் சக்தி இல்லையே" என்று பரிதவிக்கும் பாவி யொருவனுக்குப் பலத்தை யளிக்க அவர்கட்கு இயலாது. "உனது பாவங்களை நானே ஏற்றுக்கொண்டு, உனக்குப் பதிலாக அவைகளை அனுபவித்துக் கொள்கிறேன்" என்று வாக்களித்தலும் அதை நிறைவேற்றலும் அவர்க ளால் ஆகாதவை. அவதார புருடர்களே அவ்வாறு செய்யவல்லார்; ஆயினும் அவர்களும் பிறரது வினைப் பயன் முழுவதையும் தாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை; அதற்கு உரியவர் நல்லறிவைப் பெறும் பொருட்டு ஒரு வாறு அவரை அவ்வினையின் பயனாகிய துயரத்தினால் வருந்தும்படி விடுவர். அவதார புருடர்களின் கிருபை யினால் பத்துப் பிறவிகளின் துன்பம் ஒரு பிறவித் துன்ப அளவிற்குச் சுருங்கிவிடும் என்பர் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

கிருபையின் திறமையைப் பற்றிப் பல நூல்கள் பல வாறு பேசுகின்றன. பகவான், தமது விஸ்வ ரூபத்தை அர்ச்சுனன் காணும் திறமை பெறுவதற்காக, ஞானக் கண்ணைக் கொடுத்தது அருளின் செயல் என்கிறது கீதை. காரணம் பற்றாதெழும் கடவுளின் கருணையைப் பெற லாம் என்று புராணங்கள் கூறுகின்றன. ஜகை மாதை என்னும் இரு மூர்க்கர் ஸ்ரீ சைதன்யரது அருளால் நல் லோரானார் என வங்காள வைணவர் எழுதி வைத்துள்ள

னர். பாவிகளாகிய உலக மக்கள் நல்ல கதியை அடையும் பொருட்டு, இயேசுநாதர் அவர்களுடைய பாவங்களைத் தாம் ஏற்றுச் சிலுவையில் உயிர் துறந்தார் என்று கிறிஸ்தவ மதம் பறையறைகின்றது. இவைகளை யெல்லாம் கேட்டிருந்தும் ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கையில் அருளின் செயல்களை யாம் கண்ணாரக் கண்ட பின்பே கிருபை உண்மையானதென்ற தெளிவும் உறுதியும் எம்மிடம் எழுந்தன.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அந்திம காலத்தில் நோயால் வருந்தும்போது, ஒருநாள் தாம் கண்ட காட்சி யொன்றைப்பற்றிப் பின்வருமாறு கூறினார் :—"எனது சூக்கும உடல் தூல உடலைவிட்டுப் பிரிந்து என்முன் உலாவிற்று; அதில் முதுகுப் பக்கம் முழுவதிலும் பல புளைவைகள் தென்பட்டன. ஒரு பாவமும் அறியாத யான் அதன் காரணம் தெரியாது திகைத்தேன். அப்போது அம்பாள் தோன்றி, 'பலவகைப் பாவங்களும் புரிந்தோர் உன்னைத் தொட்டு வணங்குகின்றனர்; நீ மனமிரங்கி அவர்களுடைய பாவங்களை யெல்லாம் ஏற்றுக் கொள்கின்றனை. அடிக்கடி அவ்வாறு செய்ததன் பயனாக அவ்வுடல் அப்படியாயிற்று' என்று காட்டி யருளினாள். என் தொண்டைப் புளைவுக்கும் காரணம் அதுவே" என்றார். இன்னொரு சமயம் உடலில் வெண்குட்டம் உண்டான ஒருவன் குருதேவரை அடைந்து, "உமது கையால் வெண்குட்டமுள்ள இடத்தை நீர் தடவுவீராயின் எனது நோய் தீர்ந்துவிடும்" என்று மனமுருக வேண்டினான். அவரும் இரக்கம் மிகுந்து; "அம்பிகையின் திருவுளமானால் உன் பிணி நீங்கட்டும்" என்று சொல்லித் தடவினார். அவனது நோய் மறைந்தது : ஆனால் அன்று முழுதும் கையில் பெரும் வலி உண்டாகி அவரை வருத்தியது. "அவனது நோய் தீர்ந்தது. அவனுக்குரிய துன்பம் இவ்வுடலைப் பற்றியது" என்றார் குருதேவர். இவ்விரண்டு செயல்களிலிருந்தும் நாங்கள் அருளை இன்ன தன்மையதென்று அறிந்தோம்.

வக்கால்நாமா கொடுத்தல் மிக எளிதான காரிய மென்றும், நாம் நினைத்தபோது அவ்வாறு செய்யலாம் என்றும் முதலில் நமக்குத் தோன்றும்; ஆனால் உண்மை யில் அது அவ்வாறில்லை. மனிதன் இயல்பாகவே ஆசைக் கும் சுகத்திற்கும் ஆட்பட்டவன். ஆதலின் ஞான வாழ்க் கையைப் பின்பற்றத் தொடங்கும்போதும் அவன் தனது சுகத்தையே நாடுபவனாகிறான். ஒரு கையால் உலகத்தை யும் மற்றொரு கையால் பகவானையும் பற்றவும், சிற்றின் பத்தையும் பேரின்பத்தையும் சேர்த்துப் பற்றவும் அவன் எப்போதும் முயல்கிறான். உலக இன்பங்களில் உள்ள இனிமையினால் அவைகளைவிட மனம் வருவதில்லை; அவை களை விடுவதனால் வாழ்வு பாழாகிவிடும் என்று தோன்று கிறது. இதனால்தான், பகவானுக்கு வக்காலத்துக் கொடுப்பதைக் கேட்டதும் அவன் துள்ளி விடுகிறான்; "நான் இனி என் இச்சைப்படியே திரியலாம்; களவாடி னால் என்ன? மோசம் செய்தால் என்ன? போகத்தில் மூழ்கினால் என்ன? ஞான முயற்சி செய்யும் பொறுப்பை நான் ஒப்புவித்து விட்டேன். நான் இறந்தபின், இராம கிருஷ்ணரோ ஏசுவோ சைதன்யரோ எனது நல்ல கதி யைப் பற்றிப் பார்த்துக் கொள்ளட்டும்" என்று நினைக் கிறான். இதெல்லாம் மனதின் சூழ்ச்சி யென்பதை அவன் அறிவதில்லை; தன் மனம் இவ்வாறு தன்னையே சதா வஞ் சிப்பதை உணராது போகிறான். இவன் தன் கண்ணை மூடிக் கொண்டு நிற்கிறான்; அதனால் இவனது தீவினைப் பயன் இவனைப் பிடிப்பதற்காக விரைந்து பின்தொடர்ந்து வருவது நின்றுவிடாது. ஒருநாள் அதன் கையில் சிக்கு வது திண்ணம்; அப்போதுதான் அவன்தான் கொடுத்த வக்காலத்தை ஒருவரும் ஒப்புக்கொள்ளாததை உணர் வான். வஞ்சகனது வக்காலத்தை யார் ஏற்றுக் கொள் வார்? அந்தோ! எல்லாம் மாயையின் செயலே!

பகவானுக்கு வக்காலத்துக் கொடுப்பது அவ்வளவு எளிதன்று; அதற்குமுன் அதற்குரிய மனப் பக்குவம் வேண்டும். உலகப் பொருள்களால் இன்பம் அடைய

லாம் என்ற நம்பிக்கை ஒழியவேண்டும். கானல் நீரைக் குடித்துத் தாகத்தைத் தணிக்க நினைப்பதாகும் அது என்ற புத்தி வரவேண்டும். ஞானத்திற்காக நம்மால் இயன்றமட்டும் ஆடியோடிப் பின் அமரவேண்டும்; நமது முயற்சி ஓயவேண்டும், எவ்வளவு அரும்பெரும் முயற்சி யையும் ஈடாகக் கொடுத்தும் பகவானை விலைக்கு வாங்க முடியாது என்ற உணர்ச்சி வேண்டும். "என் முயற்சி யாற் பயனில்லையே, இனி என் செய்வேன்" என்று மனம் சோர்ந்து ஏங்கவேண்டும். அப்போதே, "எல்லாம் உன் செயல், நீயே கதி, அடியேன் உன் அடைக்கலம்; காத் தருள்க" என்று ஒருவன் உண்மையாகச் சரணடை வான், அப்போதுதான் பகவான் அவனது வக்காலத்தை ஏற்றுக்கொள்கிறார். ஆனால் சிலர்க்கு மனத்தை அடக் கும் முயற்சி கசப்பாயிருக்கும்; இறைவனிடம் பிரார்த் திப்பதிலும் அவரது மனம் செல்லாது, அவர்களும் வக் காலத்துக் கொடுத்து விட்டதாகச் சொல்வது பொருந் தாது. மனம்போன போக்கெல்லாம் தாமும் செல்லுவர் அவர்; பிறர் கண்டிக்க வரும்போது மட்டும், "நான் இறைவனைச் சரண் புகுந்துவிட்டேன்; எல்லாம் அவன் செயல், என்னால் யாது செய்யக்கூடும்? அவன் மனம் வைத்தால் என்னைத் திருத்தி விடமாட்டானா?" என்று வாய் வேதாந்தம் பேசுவர். இது தம்மையும் பிறரையும் ஏமாற்றும் வழியே யாகும்; அவர்க்கு இகத்திலோ பரத் திலோ நன்மை உண்டாகாது.

இன்னொரு வழியாலும் இதை ஆராய்வோம். நாம் பகவானுக்கு வக்காலத்துக் கொடுத்துவிட்டோம் என்ப தாகவும், ஆதலால் நாம் செய்யவேண்டியது ஒன்றுமில்லை என்பதாகவும் வைத்துக் கொள்வோம் நாம் உண்மை யாகச் சரணடைந்து விட்டோமானால், அவரது அருளே நம்மை ஆட்டிவைக்கு மல்லவா? அதனை நாம் உணராமற் போக முடியுமா? பிறவிக் கடலில் நாம் மூழ்குவதா யிருந்தபோது, அவர் நம்மைக் கைதூக்கி விட்டாரே என்ற நினைவு தானாக நமது நெஞ்சில் எழாதா? . அப்

போது நமது நெஞ்சத்தில் அன்பும் நன்றியும் வெள்ளமெனப் பெருகாதா? அவரை மறக்க நமக்கு முடியுமா? அவரை சதா நினைக்கவேண்டும் என்று பிறர் போதிக்கும் அவசியம் ஏற்படுமா? வீட்டில் பாலுண்டு வாழும் பாம்பும் வீட்டிலுள்ளாரைக் கடிப்பதில்லை. பாம்புக்குள்ள நன்றியும் நம்மிடத்து உண்டாகாதோ? ஆதலின் வக்காலத்துக் கொடுத்த பின்னும் அவரைப்பற்றிய நினைப்பும் அதனால் இன்பமும் தானாகவே நம்மிடம் உண்டாகவில்லை என்றால், நாம் வக்காலத்துக் கொடுத்ததும் பொய், அவர் ஏற்றுக்கொண்டு விட்டார் என்பதும் பொய்—இதுவே முடிவான வார்த்தை.

இவ்வுண்மையைவிளக்க ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்வரும் கதையைக் கூறுவதுண்டு. ஒரு காலத்தில் ஒரு பிரபு ஒரு தோட்டத்தை உண்டாக்கி, அருமையாக அதைப் பாதுகாத்துவந்தார். ஒருநாள் அத்தோட்டத்திற்குள் ஒரு பசு புகுந்து அவருக்குப் பிரியமான ஒரு செடியை அழிக்கலாயிற்று. அதைக்கண்டு கோபங்கொண்ட பிரபு அதை வெகு பலமாக அடிக்க, அது கீழே விழ்ந்து இறந்தது. பசுவைக் கொன்ற பாவம் ஒரு பயங்கரமான உரு வெடுத்துவந்து, அவரைப் பிடித்துக்கொள்ள முயன்றது. அப்போது அவர் சாஸ்திரம் படித்தவராதலால், அப்பாவத்தைப் பார்த்து, "ஏ பாவமே, பசுவைக்கொன்றது என் கையேயன்றி யானல்ல; அக்கைக்கு அதிதேவதை இந்திரன்; ஆதலால் அவனையே பற்றுவது முறை" என்று கூறினார். பாவமும் அவ்வாறே இந்திரனிடம் சென்றது. இந்திரன் மானிட வடிவோடு பிரபுவின் தோட்டத்திற்கு வந்து, அத்தோட்டத்தின் அழகையும் அதை உண்டாக்கினவரது திறமையையும் பிரபுவின் காதில் விழும்படிப் புகழலானான். பின் அங்கு நின்ற பிரபுவைப்பார்த்து. "ஐயா, இத்தோட்டம் யாருடையது? அதோ நிற்கும் அழகிய செடியை யார் உண்டாக்கினார்?" என்று வினவினார். புகழ்ச்சியால் மனம் பூரித்திருந்த பிரபு பெருமைதோன்ற, "தோட்டம் என்னுடை

யது; நானே என்கையால் அச்செடியை வைத்துப் பாடு பட்டு வளர்த்தேன்" என்று கூறினார். உடனே இந்திரன் தன் சுயரூபத்தோடு முன்னின்று, செடியை வளர்த்தது உன்கை, அதனால் வரும் புகழும் உனக்கு; ஆனால் பசுவைக் கொன்றதுமட்டும் உன்கைக்கு அதிதேவதையான இந்திரனோ? அதனால் வரும் பழியும் இந்திரனுக்கோ? இதுதானா உனது சாஸ்திரஞானம்? பசுவைக் கொன்ற பாவமே, இந்த அயோக்கியனையே போய்ப் பற்றிக்கொள்" என்று கூறி மறைந்தான்.

ஆக, வக்காலத்துக் கொடுத்து விட்டதாக வாயால் மட்டும் கூறிவிட்டு, நல்லவையாவும் நம்செயல், நாம் செய்யும் தீயவையெல்லாம் அவரது செயல் என்பதும், புகழ் நம்மது ஆனால் பழி அவரதே என்பதும் வஞ்சனையேயாம். உண்மையாக வக்காலத்துக் கொடுத்தோர் கிரீசரைப்போல எப்போதும் மறவாதே இறைவனை நினைப்பவராவார், அதனால் மனம் தானாகவே விரைவில் திருந்தப்பெறுவார், இதில் ஐயமில்லை.

## (4) ஸமரஸம்

ஸ்ரீ ராமகிருஷ்ணரது வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சியினால் நாயன்மார்கள் ஆழ்வார்கள் மதாசாரியார்கள் முதலிய அனுபூதிமான்களுடைய சாதனங்களும் அனுபவங்களும் செயல்களும் தெளிவாக விளங்கும் என்பதை முன்பு காட்டினோம். தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி என்னும் நூல்களில் உள்ள பாடல்களில் பொதுவாகப் பக்திரஸம் ததும்புவது வெளிப்படை. அவைகள் பக்தி நெறியை வற்புறுத்துகின்றன என்றாலும், கருமம் யோகம் ஞானம் என்னும் நெறிகளும் அவைகளில் உள்ளடங்கி யிருப்பது எவர்க்கும் புலப்படும். உண்மையை ஆராய்வோமாயின் கருமம் பக்தி யோகம் ஞானம் என்னும் நான்கு நெறிகளும் ஒன்றுக்கொன்று முற்றும் வேறுபட்டனவல்ல; அவை ஒன்றோடொன்று கலந்து, சில சமயங்களில் பிரித்தறிய முடியாதபடி ஒன்

ருக மருவிவிடுகின்றன. ஒன்று மற்ருென்றுக்குப் பெருந்துணையாகின்றது; ஒரு நெறியை இடைவிடாது பின்பற்றி முன் செல்லும்போது, ஓரளவிற்குப் பிறநெறியிலும் முன்னேறி வருவது காணப்படுகின்றது. இவைகட்குக் காரணமாவது, மனிதனது மனதிலேயே இந்த நான்கு நெறிகட்கும் அடிப்படையான இயல்புகள் காணப்படுவதே; மனிதனுடைய மனது, இயல்பாகவே, அறியும் தொழிலையும் அன்பு செய்யும் தொழிலையும் ஸங்கற்பிக்கும் தொழிலையும் உடையதாகின்றது; அன்றியும் இம்மூன்று தொழில்களும் ஒன்ருேடொன்று இணைந்தே நிற்கின்றன. அறியும்போதே அன்பும் தழைக்கின்றது, இன்னின்ன செய்யவேண்டும் என்னும் ஸங்கற்பமும் உண்டாகிறது; அம்மாதிரியே முறையே அன்பு செய்யும் போதும் ஸங்கற்பிக்கும் போதும் மற்ற இரு தொழில்களும் அதேசமயம் நடைபெறுகின்றன. இம்மூன்று தொழில்களில் எது முனைத்திருக்குமோ, அத்தொழிலையே மனம் செய்வதாகச் சொல்கின்ருேம்; ஆனல் அப்போது மற்ற இரண்டும் உள்ளடங்கியே இருக்கின்றன. முத்தொழில்களையும் செய்வது ஒரே மனமாதலின், எத்தொழிலும் மனத்தை மாறுபடுத்தியாகவேண்டும்; அப்போது மற்ற இரு தொழில்களைச் செய்யும் திறமையும் மாறுபடல்வேண்டும்; திறமையாகக் கருமம் செய்வதற்கும் அன்பு செய்வதற்கும் அறிவதற்கும் மனம் ஒருமைப்படவேண்டும். ஆகக் கருமநெறி பக்திநெறி ஞானநெறி என மூன்று நெறிகளும், மனதை ஒருவழிப் படுத்தும் நெறியாகிய யோக நெறியும்—இந்நான்கு நெறிகளும் உண்டு என்பது ஏற்படுகின்றது. மேலும் இந்நெறிகட்குள் ஸமரஸம் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றது. இன்னும், மனிதனுடைய மனத்தைக்கொண்டுதான், சித்தாந்தங்களை நிலைநாட்டுவதும், உயர்ந்த அனுபவங்களைப் பெறுவதும்; ஆதலால், அனுபவங்கட்குள்ளும் சித்தாந்தங்கட்குள்ளும் மார்க்கங்கட்குள்ளும் ஸமரஸம் இயல்பாகவே அடங்கியிருத்தல் வேண்டும். ஊன்றி யோசிப்பார்க்கு, உண்மை நெறி பேறு (தத்வம் ஹிதம்

புருஷார்த்தம்) இவை யொவ்வொன்றும் ஒன்றேதான் ஆகவேண்டும் என்பதும், உண்மையில் அவை ஒன்றே யாயினும், அவைகளைப் பலவேறு இயல்புடையார் பல வேறு மொழிகளால் பலவழியாகப் பேசுகின்றனர் என்ப தும் முடிவாகும். இதையே மறைநூல், உள்ளது ஒன்று; அதனை மெய்யுணர்ந்தோர் பலவாறாகப் பேசுவர்' (ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி) என்று சுருங்கக்கூறுகின் றது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்றார் திருமூலர். 'அவரவர் தமதமது அறிவு அறிவகைவகை, அவரவர் இறையவர் என அடி அடைவர்கள், அவரவர் இறையவர் குறைவிலர், இறையவர், அவரவர் விதிவழி அடைய நின்றனரே' என்றார் நம்மாழ்வார். "வேறு படும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில் விளங்குபரம் பொருளே நின்விளையாட்டல்லால், மாறுபடும் கருத் தில்லை முடிவில் மோனவாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா' என்றார் தாயுமானவர். இக்கருத்திற்கு ஒரு விரிவுரை யாகவே அமைந்தது, ஸ்ரீ ராமகிருஷ்ண ரது வாழ்வு. அவர் ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தோன்றும் பற்பல கொள்கைகளையும் நெறிகளையும் அனுபவத்தாலும் அறிவாலும் ஸமரஸப்படுத்திக்காட்டு கின்றனர். பலவகைப்பட்ட மதங்களையும் கொள்கை களையும் இயல்புகளையும் கொண்ட பலவகை மக்களும் ஒன்றாகக்கூடி ஒத்துழைப்போடு வாழவேண்டியது தற் காலத்திற்கு இன்றியமையாததாகின்றது. அதற்கு முற் கூறிய ஸமரஸ பாவனையே பெருந்துணையாகும். இந்த ஸமரஸ பாவனையில் ஒருவரேனும் தமது சிறப்பியல்பை இழக்கவேண்டாம். அவரவர் தமது தமது இச்சைப் படியே அவரவர்க்கேற்ற தொரு நெறியைப் பின்பற்ற லாம்; ஆயினும், பிறரைக் குறைகூறாது பிறரது நெறி களைப் போற்றியும் தமது நெறியிலிருந்து சிறிதும்வழுவா மலும் வாழலாம். இனிவருங்காலத்துக்கு இம்மாதிரி யான மனப்பான்மை அவசியம். இதனால் நாடெங்கும் உலகமெங்கும் சமாதானமும் அன்பும் ஐக்கியமும் வள ரும், அதனால் இன்பமே எங்கும் பெருகும். இக்காரணத்

தால் ஸ்ரீ ராமகிருஷ்ணரது ஸமரஸநிலை பின் சுருக்கமாக விளக்கப்படுகின்றது.

(1) பரம்பொருள் கலியாண குணங்களோடு கூடியது என்னும் ஒரு சித்தாந்தம், பரம்பொருள் குணமற்றது, குணங்களைக் கடந்தது என்னும் மற்றொரு சித்தாந்தம். ஸகுண வடிவில் நம்பிக்கையுடையார் நிர்க்குண நிலை பொய்யென்கிறார்; நிர்க்குண நிலையில் நம்பிக்கை யுடையார் ஸகுண வடிவைக் கற்பனையென்பர். இறைவனுக்கு உருவம் உண்டென்பர் ஒரு சாரார், கடவுள் அருவம் என்பர் மற்றொரு சாரார். இறைவனுக்கு ஒரு குறிப்பிட்ட வடிவமே சொந்தமாகும் என்றும், அவனே வெவ்வேறு வடிவங்களை வேண்டியபோது எடுத்துக்கொள்கிறான் என்றும் சில பெரியார் கூறுகின்றனர். ஒவ்வொரு மதத்தினரும் வணங்கும் இறைவன் தனித்தனியான பெயரும் வடிவமும் உடையவனாகக் காணப்படுகிறான். இத்தனை வேறுபாடுகளையும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அனுபூதியால் ஸமரஸப் படுத்தும் முறை பின்வருவது:—பரம்பொருள் ஸகுணமாயும் நிர்க்குணமாயும் உள்ளது. நிர்க்குண வடிவத்தைப் பிரம்மனென்றும் ஆத்மனென்றும் கூறுவர்; ஸகுணவடிவத்தைப் ‘பகவான்’ ‘இறைவன்’ என்கின்றனர். குணங்களோடு கூடிய பகவான் அருவமாகச் சோதி வடிவமாகவும் தென்படலாம்; சிவன் விஷ்ணு தேவி முருகன் முதலிய பல திவ்விய வடிவங்களோடு காட்சி யளிக்கலாம். உலகத்துள்ள பொருள்கட்குள்ளும் உயிர்கட்குள்ளும் மறைந்து எங்கும் வியாபித்துள்ளான்; அவைகளோடு கலந்தும் கடந்தும் நிற்கிறான். உருவம்-அருவம், ஸகுணம்-நிர்க்குணம் இவற்றிற்கு அப்பாலான நிலையும் கடவுளுக்கு உண்டு. பகவானும் அவனது பல வடிவங்களும் உண்மையே. இவ்வாறு ஒன்றேயான மெய்ப்பொருள் பலவாறு பலர்க்குக் காட்சியளிக்கின்றது.

(2) பரம்பொருளுக்கு இவ்வாறு பலவகை நிலைகள் இருத்தலால், எந்த ஒரு நிலையை வழிபட்டு அடைபவரும் பரம்பொருளை அடைந்தவரே. பரம்பொருளைக் கண்ட

வர் பிறப்பிறப்புச் சுழலினின்றும் விடுபட்டு, எவ்வகைத் துயரங்களினின்றும் நீங்கி, அழியாத மாறுத தெவிட்டாத பேரானந்தப் பேற்றைப் பெறுகின்றனர்; இதுவே முத்தி யடைதல் எனப்படும். மதங்களை நிலைநாட்டிய பெரியார் ஒவ்வொருவரும் மெய்ப்பொருட்காட்சியைப் பெற்றவராதலின், ஒவ்வொருவரது அனுபூதியின் பயனுக உதிக்கும் மதம் ஒவ்வொன்றும் உண்மையே. ஒவ்வொரு மதமும் பரம்பொருளை யடைய (அம்மதக்குரவர் கண்ட) ஒரு வழியைக் காட்டுகின்றது. எப்பெயரைக் கொண்டு அழைத்தாலும், எவ்வடிவத்தை வழிபட்டாலும், எல்லாம் ஒரே பரம்பொருளுக்கே சேரும். நெறிகள் பலவானுலும், அவைகள் முடியும் இடம் ஒன்றேதான். ஒரு சக்கரத்தின் விளிம்பிலுள்ள எப் புள்ளியிலிருந்து புறப்பட்டாலும், அதன் மையத்தை நோக்கிச் செல்ல ஒரு பாதை உண்டு; எல்லாப் பாதைகளும் மையத்தினிடத்தே ஒன்று கூடுகின்றன. மையத்தை விட்டு விலகிச் செல்லச் செல்ல, பாதைகள் ஒன்றுக்கொன்று அதிகமாக விலகிக்கொண்டே போகும்; மையத்தை நோக்கி வரவர, பாதைகள் ஒன்றையொன்று சமீபிக்கும். பரம்பொருளே மையம்; பரம்பொருளிருக்கும் இடத்திலிருந்து பிரிந்து செல்லும் பல மார்க்கங்களே பல மதங்களாம். ஆதலின் எல்லா மதத்தினரும் பரம்பொருளை அடையும்போது ஓரிடத்தில் ஒன்று கூடுவர்; அப்போது வேறுபாடு தோன்றுதொழியும். பரம்பொருளின் அனுபவத்தைப் பெறுவது மையத்தில்; மையத்தைச் சாரும்வரை, மக்கள் வெவ்வேறு பாதைகளிற் சென்றுகொண் டிருக்கும்வரை, வேறுபாடுகளைப் பற்றிய பேச்சும் இருக்கும். மையத்தைச் சார்ந்து அனுபவம் பெறும்போது அப்பேச்சு நீங்கும். பரம்பொருளின் அனுபவம் மனம்வாக்குகட்கு அதீதமானது; அது உரைக்கவெண்ணுத ஒன்றேதான். ஆயினும், அதை மனம்வாக்குகட்கு உட்படுத்திப் பேச முயலும்போது, அவரவர் தமது தமது புத்திபேதங்கட்குத் தக்கபடி வேறு வேருகக் கூறுவர். இதுவே மதவேறுபாடுகளின் மர்மமும் ஸர்வசமய ஸமரசமும்.

(3) பரம்பொருளுக்குப் பல நிலைகளும் பரம்பொருளை யடையப் பலவழிகளும் இருத்தலின், ஒவ்வொருவரும் யாதேனும் ஒரு நிலையையும் ஒரு வழியையும் பின்பற்றலே போதும்; ஒன்றைப் பின்பற்றுவதே அனுபவத்தைப் பெறுதற்கு இன்றியமையாதது மாகும். நிர்க்குணத்தை உபாசிப்போர் அம்முறை யொன்றினிலேயே ஈடுபடல் வேண்டும். பகவானது ஒரு வடிவத்தில் ஈடுபடுவோர் அந்த ஒரு வடிவத்தையே வழிபட்டும் சிந்தித்தும் வரல்வேண்டும். அந்த நெறிவழியாகச் சென்று பரம்பொருளின் அனுபவம் பெறும்வரை அதைவிட்டு வேறொரு நெறியிற் புகுதல் தகாது; அவ்வாறு செய்யின் பழைய முயற்சி வீணாகும். ஒரே இடத்தில் தண்ணீர் கிடைக்கும்வரை தோண்டிக்கொண்டே போகவேண்டும்; பத்து வெவ்வேறு இடங்களில் இருபது அடிவரை கிணறு தோண்டித் தண்ணீர் பெறாதவன் ஓரிடத்திலேயே நிலைத்துத் தோண்டியிருந்தால் நாற்பது ஐம்பது அடி தூரத்திற் குள்ளேயே தண்ணீர் பெற்றுவிடலாம். ஒவ்வொருவனுக்கு எந்த நெறியில் எந்த வடிவத்தில் ருசி உள்ளதோ அதையே பின்பற்றவேண்டும்; பொதுவாகக் கூறில், குல பரம்பரையின்படி வரும் நெறியே பொருத்தமாகும். கற்புடைய மனைவி நாயகனைத் தவிர வேறொருவர்மீது ஆசையைச் செலுத்தமாட்டாள்; அதுபோல், தெரிந்தெடுக்கும் ஒரு நெறியை விட்டு விலகாத மனஉறுதி வேண்டும்—இதுதான் இஷ்ட நிஷ்டையாகும். ஆனாலும், மற்ற நெறிகளையும் அவைகளைப் பின்பற்றுவாரையும் பழிக்கவேண்டாம், அவமதிக்கவேண்டாம். கற்புடைய மனைவி நாயகனிடம் கொள்ளும் அன்பிற்கு ஈடாகவே, வேறெந்த ஆடவரிடத்தும் அன்பு கொள்ளாள்; ஆயினும் நாயகனது தந்தை அண்ணன் முதலிய ஆடவரையும் பிற ஆடவரையும் மனைவி மதியாது அவமதிப்பது முறையன்று, அது நாயகனுக்கும் கசப்பை உண்டுபண்ணும். அதுபோல், தனது மதத்திலும் கொள்கையிலும் பெரும் பற்றுடைய ஒருவன் பிறமதங்களில் தம்மைப்போற் பற்றுள்ள பிறரையும் மதித்தல் வேண்டும்; ஆனால் தனது

நெறியை விட்டுவிடல் தவருகும். இதுவே சுயமத-பரமத (சொந்தமத-பிறமத) ஸமரஸமாகும்.

(4) பரம்பொருளை அடைவதற்குரிய மார்க்கங்களை யெல்லாம் கருமம் பக்தி யோகம் ஞானம் என்னும் நான்கு நெறிகட்குள் அடக்கிவிடலாம். அவைகளில் பக்தி நெறியிலோ ஞான நெறியிலோ செல்வார்க்குக் கரும நெறியும் அவசியந்தான். மனத்தை ஒருவழியில் நிலைநிறுத்தும் யோக நெறியும் அவசியம்தான். கருமமும் யோகமும் முன்னைய இரண்டுள் இவ்வாறு அடங்கி விடுதலின், மிஞ்சுவன பக்தி மார்க்கமும் ஞான மார்க்கமுமே. இவை யிரண்டுமே பெரும்பாலும் மக்களாற் பின்பற்றப்படுவன. இவைகளில் பக்தி மார்க்கம் ஸகுணப் பிரம்மமாகிய இறைவனை அடைவதற்கும், ஞானமார்க்கம் நிர்க்குணப் பிரம்மமாகிய பரம்பொருளை (ஆத்மனை, பிரம்மனை) அடைவதற்கும் வழிகளாகின்றன. பக்தி மார்க்கத்தினர், இறைவனே உலகிலுள்ள யாவும் என்ற கொள்கையை ('இதி' மார்க்கத்தை)ப் பின்பற்றுகின்றனர்; ஞான மார்க்கத்தினர், பிரம்மன் இதுவன்று இதுவன்று என்று ('நேதி' மார்க்கம்) மனம் வாக்குகட்கு உட்பட்ட எல்லாப் பொருள்களையும் கழிக்கின்றார். முத்திக்கு இடையூறான 'அஹம்' (நான்) என்னும் உணர்ச்சியை ஒழித்தல் இருவர்க்கும் பொது. முந்தியவர் அதை மாய்க்க, "என்னால் ஒன்றும் இயலாது, எல்லாம் அவனது செயல், யானும் அவனது கருவியே' என்று அது அழியும்வரை சிந்தித்து வருவார்; பிந்தியவர், "காண்பதொன்றும் என்னைக் கட்டுப்படுத்தாது, யான் பிரம்மன், எனது சக்தியே அனைத்துலகங்களையும் ஆட்டுவிக்கின்றது" என்று சிந்தித்து, அதை அழித்துவிடுவார். இவ்வாறு இரு வகையினருடைய சாதன முறைகள் வேறுபட்டாலும், அழிவது அஹமே, அடையப்படுவது பரம்பொருளே. பொதுவாக, நிர்க்குணப் பிரம்ம அனுபவத்தைப் பெறுவார் ஸகுணப் பிரம்ம அனுபவத்தை விரும்புவதில்லை. ஸகுணப் பிரம்ம அனுபவத்தை விரும்புவார் நிர்க்குணப் பிரம்ம

அனுபவத்தை விரும்புவதில்லை. ஆயினும், உண்மை யாதெனின், ஸகுணமான பகவானை அடைந்தபின்னும், நிர்க்குணப் பிரம்ம அனுபவத்தைப் பெற ஆசைப்பட்டுப் பகவானிடம் பிரார்த்தித்தால், பகவானே தமது நிர்க்குண நிலையையும் காட்டி யருள்கிறார்; அதுபோல் நிர்க்குண அனுபவம் பெற்றவனும் அதைவிட்டுப் பக்தி ரஸத்தை அனுபவிக்கவும் கூடும். மேலும், பகவானின் ஒரு வடி வத்தைத் தரிசித்தவர் பிற வடிவங்களையும் தரிசிக்க விரும்பி வேண்டினால், இறைவன் அவ்வாறே அருள்கிறான். நிர்க்குணப் பிரம்மம் கடல்போன்று நாமமும் உருவமும் அற்றது. கடல்நீரில் ஒருபாகம் குளிர்ச்சிக்கு உட்பட் டால், அங்கே தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாகி நீரில் மிதக்கும்; அதுபோல, பிரம்மமே பக்தியினால் ஒரு குறிப்பிட்ட நாமத்தோடும் வடிவத்தோடும் கூடி இறைவனாகத் தோன்றுகிறது. பனிக்கட்டியின்மீது சூடு தாக்குமாயின், அது உருகி மறுபடியும் தண்ணீரோடு ஒன்றாகும்; அதுபோல, ஞானியின் விவேக உணர்ச்சி யினால் இறைவன் நாமமும் உருவமுமற்றுப் பிரம்மமாகின் றான், ஆனால் பனிக்கட்டியும் நீரும் ஒரு பொருளே; அதுபோல நிர்க்குணமும் ஸகுணமும் ஒரு பரம் பொருளே. இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணரது பக்தி-ஞான ஸமரஸம்.

(5) வேதாந்த நெறி யெனப்படும் 'நேதி' மார்க்கத் தைப் பின்பற்றுவார், நித்யப் பரம்பொருளான பிரம் மமே உண்மை, அதுவல்லாத காணப்படும் பொருள் களும் நினைக்கப்படும் பொருள்களும் பொய்த் தோற் றம் என்பர். சித்தாந்த நெறி யெனப்படும் 'இதி' மார்க்கத்தைப் பின்பற்றுவார் உலகத்தை உண்மை யென்றும், பரம்பொருளின் லீலைக்கு அது இடமாகும் என்றும், எப்பொருளும் எவ்வுயிரும் பரம்பொருள் வாழும் இடம் என்றும் கூறுவர். வேதாந்திகள் கூறு கிறபடிப் பரம்பொருளே உள்ளது வேறொன்றும் இல்லை யென்றால், நாம் காண்பதெல்லாம் பரம்பொருளே

யாகும், பரம்பொருள் மயமே யாகுமன்றோ? அஞ்ஞானக் கட்சிக்குத் தோன்றுவதெல்லாம் பொய்யாகட்டும், ஞானக் காட்சிக்கு எல்லாம் மெய்யாக வேண்டுமன்றோ? பக்தி முற்றிப் பகவானை எங்கும் காணப்பெற்றவனுக்கும், ஞானம் முற்றிப் பிரம்மத்தையே எங்கும் காணப்பெற்றவனுக்கும் சாதாரணக் காட்சிக்குத் தோன்றுகிறபடி உலகம் தோன்றுவதில்லை. இறைவனும் பிரம்மமுமே ஒரே பரம்பொருளாதலின், இருவரும் உலகில் காண்பது உண்மையான பரம்பொருளையே யன்றோ? இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்ட வேதாந்த-சித்தாந்த (நித்ய-லீலைகளின்) ஸமரஸமாகும்.

(6) மனிதன் தனது முயற்சியாலே முத்திப்பேறு வரையுள்ள எல்லாப் பேறுகளையும் பெறுகின்றான் என்பர் ஒரு சாரார்; அப்படியன்று, இறைவனது கிருபையாலே எல்லாப் பேற்றையும் அடைகிறான் என்பர் மற்றொரு சாரார். அவனவன் செய்யும் கருமத்திற்குத் தக்கவாறு பலனை அடைகிறான் என்பர் முதல் வகையினர்; முயற்சி செய்தாலும் செய்யாவிட்டாலும் கிருபை இருந்தால் பலன் கைகூடும் என்பர் இரண்டாவது வகையினர். முன்பு செய்துள்ள கருமம் பக்குவமடையும்போதுதான் பலன் வருகின்றது என்பர் முந்தினவர்; கருமம் எவ்வளவு செய்திருப்பினும், கடவுளின் அருள்நோக்கம் விழும்போதுதான் பலன் வருகின்றது என்பர் பிந்தினவர். பொதுவாக, நிர்க்குணப் பிரம்ம உபாஸகரான ஞானிகள் தமது சுய முயற்சியில் நம்பிக்கை வைத்து விடாமுயற்சியைக் கைக்கொள்கின்றனர்; ஸகுணப் பிரம்மமாகிய இறைவனை வழிபடுகின்றவர் அவனது அருளை நம்பித் தமது முயற்சியை ஒழித்து, அவனையே சரணமடைகின்றனர். சுயமுயற்சி சரணாகதி யென்னும் இரண்டு நெறிகளும் ஒன்றோடொன்று முரண்படுவதாகத் தோன்றுகின்றன. ஆனால் இருவகையினரும் அஹங்காரத்தை ஒழிக்கும் அளவிற்கே தமது நெறிகளில் முன்னேறுகின்றனர். 'நான் ஸர்வ வல்லமையுள்ள ஆத்மன்'

என்று எண்ணி முயலும்போது, ஞானி தனது அஹங்காரத்தை ஒழித்து, பிரம்மனது அளவற்ற ஆற்றலில் நம்பிக்கைகொண்டு, அதை மெல்ல மெல்லத் தன் வாயிலாக வெளிப்படுத்துகிறான். 'இறைவனே அனைத்தையும் ஆட்டிவைப்பவன், நான் அவனது கருவியே' என்று அவனிடம் சரண்புகும் பக்தனும் தனது அஹங்காரத்தை ஒழித்து, இறைவனது அளவற்ற ஆற்றலில் நம்பிக்கை கொண்டு, அதை மெல்ல மெல்லத் தன் வாயிலாக வெளிப்படுத்துகிறான். ஒருவனுக்குத் தியானம் ஆத்மனைப்பற்றி; மற்றொருவனுக்குத் தியானம் பகவானைப்பற்றி. பிரம்மமும் பகவானும் ஒரே உண்மைப் பொருளாதலின், இரு நெறிகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாகா. ஒருவனது சுயமுயற்சியும் மற்றொருவனது சரணாகதியும் முழுதும் பலிப்பது, அவனவனது அஹங்கார உணர்ச்சி முழுதும் ஒழியும்போதுதான். தன்னைக் கருத்தாவாகக் கருதுவது தவறானது என்பது இருவர்க்கும் பொதுவான கருத்து. ஒருவன் அஹத்தை எல்லையறும்வரை பெருக்கி அதன் சாதாரண உருவத்தை யழித்து, பிரம்மத்தோடு அதை ஒன்றாக்குகிறான்; மற்றொருவனும் அஹத்தை எல்லையறும்வரை சுருக்கி அதன் சாதாரண உருவை யழித்து, இறைவனது அஹம் ஒன்றே இருக்கும்படிச் செய்கிறான். தன் வாயிலாக நடக்கும் முயற்சிகள் அனைத்திற்கும் தான் சாக்ஷியே என்கிறான் ஒருவன்; அம்மாதிரியே, தன்னைக் கருவியாகக்கொண்டு இறைவன் ஆட்டுவிக்கும்போது, தானும் சாக்ஷியே என்கிறான் மற்றொருவன். ஞானி தன்னைப் பிரம்மனாக உணரும்போது யாதொரு செயலும் அற்ற தன்மையையும் அடையலாம்; பக்தன் இறைவனுக்கு முற்றிலும் கருவியாகும்போதும், அவன் வாயிலாக வரம்பிலா ஆற்றலை வெளிக்காட்டும் பெரு முயற்சிகளும் கிளம்பலாம். சுயமுயற்சியை நாடும் ஞானியும் இறைவனது அருளால் பிரம்மத்தை அடைகிறான்; சுய முயற்சியின்றிச் சரண் புகும் பக்தனும் இறைவனது அருளால் முழு சுதந்திரமும் பெறுகிறான். மனிதனது ஸங்கற்பமாகிய பசு இறைவ

ளைக் காணும்போதெல்லாம் அவர்களை நடமாடும் கோயில்களாகவும் இறைவனது திருவுருக்களாகவும் பாவித்துத் தனது உடல்பொருள் ஆவிகளை அந்த இறைவனுக்கே வழங்கி, இனிய தொண்டுகளைச் செய்கிறான். இருவரும், இறைவனை விக்கிரகத்திலும் மனித உருவிலும் மறைவாக எழுந்தருளியிருப்பதாக நினைந்து, அவனைக் காண முயலுகிறார்; அந்தர்யாமியான அவனுக்குப் பணி செய்வதாக நினைக்கின்றனர். மக்களை மனிதராக எண்ணி, அவர்கட்கு உபகாரமாகத் தயையினால் செய்வதாக நினையாது, உள்ளிருக்கும் இறைவன்மீது சிந்தனையைச் செலுத்தித் தொண்டாகச் செய்யும்போது, அச்செயல் பூஜையே யாகின்றது, தியானமேயாகின்றது. இறைவனது அருமைக் குழந்தைகட்குச் செய்யும் தொண்டு அவர்கட்கும் இறைவனுக்கும் மகிழ்ச்சியை விளைக்கும். தனியிடத்தே கோயிலில் செய்யும் பூஜையும் தியானமும் இறைவனுக்கு மட்டும் உவப்பாகும். கருமத்தைத் தியானமாகவும் பூஜையாகவும் செய்யும்போது ஜீவ ஸேவையே சிவ பூஜையாகிறது, நர ஸேவையே நாராயண பூஜையாகிறது. இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்ட தியான - ஸேவா ஸமரஸம்.

(8) தனது முத்தியை நாடுதலே மனிதனது கடமையென்பர் ஒரு சாரார்; அதையும் கவனியாது, மன்னுயிர்க்கு (உலகத்தார்க்கு) நன்மை யளிக்கும் செயல்களை அன்போடு செய்தலே கடமையென்பர் மற்றொரு சாரார். உலக நன்மை செய்யப் போகும்போது மனம் புறமுகமாகி முத்திநெறியை மறக்கின்றது என்பர் முதல்வகையினர்; மனத்தை அகமுகமாக்கித் தனது முத்தியை நாடுதல் சுயநலம் என்பர் இரண்டாவது வகையினர். உண்மை யாதெனின், முத்தியைப் பெறுபவன் தன்னுணர்ச்சியை இழந்துவிடுதலின், சுயநல மற்றவனாகிறான்; உலகத்தார்க்கு நன்மை செய்வதாக ஆணவத்தோடு கருதுவார்க்கு முத்திநிலை ஒரு நாளும் கைகூடாது. ஆயினும் உலகத்தார்க்குச் செய்யும் செயல்களைப் பூஜையாகவும் தொண்டாகவும் கருதிச் செய்வார்க்கு அதுவே முத்திக்

னது இச்சையென்னும் முளேயோடு கட்டப்பட்டுள்ளது. இறைவன் தனது திருவுள்ளப்படியே பசுவைப் பிணைக்கும் கயிற்றை நீட்டலாம், சுருக்கலாம் (மனிதனது சுதந்திரத்தை அதிகப்படுத்தலாம், குறைக்கலாம்); அன்றியும் கயிற்றை அவிழ்த்தும் விட்டுவிடலாம் (முழு சுதந்திரமும் கொடுத்துவிடலாம்). இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்ட சுய முயற்சி - இறைவனது அருள் ஸமரஸம்.

(7) முத்திபெற விரும்புபவன் உலக முயற்சிகளினின்றும் நீங்கித் தனியிடத் தமர்ந்து மனதை உண்முகமாக்கிப் பரம்பொருளை இடைவிடாது தியானித்தல் வேண்டும் என்பர் ஒரு சாரார்; இவர் தியானபரர், நிஷ்டாபரர், பக்தர் எனப்படுவார். முத்தியை விரும்புபவன் உலக மக்களை ஈசனது வடிவமாகக்கருதி, அவர்களுடைய துயரங்களை நீக்குதற்குரிய முயற்சிகளில் சதா ஈடுபட்டுத் தனக்கென வாழாது பிறர்க்கெனவே செய்யப்படும் தொண்டில் ஈடுபடல்வேண்டும் என்பர் மற்றொரு சாரார்; இவர்கள் ஸேவாபரர், கருணாபரர், பாகவதர் எனப்படுவர். பக்தன் பரம்பொருளின் திவ்விய இயல்பையோ அவனது திவ்விய குணங்களையோ சிந்தித்து, அந்தச் சிந்தனையில் தன்னை மறந்து இன்பம் எய்துகிறான்; பாகவதனோ, பகவானுக்கோ அவனது மக்கட்கோ உவந்த தொண்டுகளைச் செய்து தன்னை மறந்து இன்பம் அடைகிறான். தியானத்தின் முழு நோக்கமும் முடிவும், தன்னுணர்ச்சியை இழந்து பரம்பொருளுணர்ச்சியை மனதில் நிலைநாட்டலே; தொண்டின் நோக்கமும் முடிவும், தனக்கென் ஒன்றையும் விரும்பாது, அனைத்தையும் கண்முன் மனித உருக்கொண்டுவிளங்கும் பரம்பொருளின் உணர்ச்சியை நிலைநாட்டலே. பூஜை செய்யும்போது நிஷ்டாபரன் தன் வீட்டிலுள்ள ஒரு சிறு கோயிலில் கண்முன் உள்ள ஒரு திருவுருவத்தில் இறைவன் எழுந்தருளியிருப்பதாகத் தியானித்து, அவனுக்குப் பேரன்போடு தனது உடல்பொருள் ஆவிகளை வழங்குகிறான், அவனுக்குப் பிரியமான தொண்டுகளைச் செய்கிறான்; கருணாகரன் மக்க

சாரார். இல்வாழ்வைத் துறந்தாலன்றி முத்தி கைகூடா தென்பர் மற்ருெரு சாரார். உண்மை யாதெனின், 'யான்' 'எனது' என்னும் பற்றை அறுத்தவனே முத்திக்கு உரியவனுவான். இல்வாழ்க்கையிலிருக்கும்போதே ஒருவன் தனது செயல்கள் யாவற்றையும் முற்கூறியபடி பூஜை வடிவமாக்கியும் வீட்டிலும் வெளியிலும் உள்ள மக்களை இறைவனது திருவடிவங்களாக எண்ணியும் வாழ்க்கையை நடத்தக்கூடுமாளுல், அதனினும்வேருன முத்திக்குரிய சாதனம் வேண்டாம். மனைவி நாயகனை இறைவனுகவும், நாயகன் மனைவியைத் தேவியாகவும், இருவரும் இல்லத்தைக் கோயிலாகவும் எண்ணி வாழும் இல்லம் துறவியின்மடமேயாகும். எல்லாரும் ஆண்டவனுடைய மக்கள், எல்லாம் அவனுடைய சொத்து, யாவும் அவனது ஆணையின்படி நடக்கும் செயல்களே, எங்கும் அவனே உள்ளான் என்று சதா சிந்தித்துப் பற்றற்று வாழும் இல்லறத்தான் அகத்துறவுடைய துறவியேயாவான். துறவிவேடம் புனைந்தும் உள்ளத்தே உலகப்பற்று தேயாதிருப்பவன், 'தான்' எனும் செருக்கு ஒழியாதவன், இல்லறத்தானிலும் தாழ்ந்தவனே. ஆயினும், வாயாற் பற்றற்று விட்டதாகக் கூறி, உலக போகங்களில் மூழ்கிய சிந்தையனுய், மனையாளைப் பெண்ணுக மதித்து மக்களைப்பெற்று மகிழ்பவனைவிட, உள்ளத்திலுள்ள பற்றை அறுத்ததற்காகத் துறவுபூண்டு அடக்க நெறியில் ஈடுபட்டு நிற்பவன் மேலானவனே. பற்றை விளைக்கும் உலகப் பொருள்கட்கு நடுவேயிருந்து, மனதில் எழும் பற்றுக்களோடு போராடி, மெல்ல மெல்ல வெற்றிபெறுவாரும் உளர்; அப்பொருள்களை விட்டு விலகித் தனியிடம் சென்று பற்றுக்களோடு போராடி அவைகளை வேரறுப்பதில் விரைவாக வெற்றிபெறுவாரும் உளர். பற்றற்ற தன்மையே முக்கியமானது, அவரவர் தமது தமது ஆற்றலுக்கும் ருசிக்கும் தக்கவாறு எந்த நெறியையும் பின்பற்றலாம். இல்லறத்தில் இருப்போர்க்கும் தனியிடத்தமர்ந்து சாதனம் பழகுதல் இன்றியமையாதது; வைராக்கியம் கொழுந்து விட்டெரியும்போதும், ஞானம் முதிரும்போதும், மனைவி மக்கட்கு நடுவே

குரிய நெறியுமாகும். சுய முத்தியை நாடுவோர் தியான பரராகி ஆணவத்தை வளர்ப்பதும் பிழை; உலக நன்மையை நாடுவார் செயல்களில் மனம் ஈடுபட்டுத் தொண்டாகச் செய்வதை மறந்து, ஆணவத்தால் தாமே பிறர்க்கு நன்மை செய்வதாக நினைத்தலும் பிழை. தியானம் பண்ணுபவனும் தனது ஈசுவர சிந்தனையால் உலகில் நல்லெண்ணங்களைப் பரப்பி உலக நன்மை செய்கிறான்; தொண்டு செய்பவனும் முத்தியடைகிறான். ஏழைகட்கு இடமும் அன்னமும் அளித்தலும், நோயாளர்க்குச் சிகிச்சை செய்தலும், கல்லார்க்குக் கல்வியறிவை ஊட்டுதலும், இம்மாதிரியான நற்செயல்கட்குப் பணம் தேடுதலும், துயரங் கண்ட இடத்தெல்லாம் அதை இயன்றவாறு நீக்க முயலுதலும் இவை முதலான உலக நன்மைக்காகும் செயல்களெல்லாம் லௌகிகச் செயல்கள் (உலகச் சார்பானவை) என்றும், பூஜை தியானம் பாராயணம் ஸத் காலக்ஷேபம் முதலியவை வைதிகச் செயல்கள் (ஞானச் சார்பானவை) என்றும் சிலர் கூறுகின்றனர். முதல்வகைச் செயல்களைக் கண்கண்ட தெய்வங்கட்குச் செய்யும் பணிவிடைகளாகச் செய்தால், அவை வைதிகச் செயல்களாகும்; அதுபோல் இரண்டாவது வகைச் செயல்களைப் புகழ் லாபம் மரியாதை முதலிய உலக சம்பந்தமான பயன்களைக் கருதிச் செய்யும்போது, அவை லௌகிகச் செயல்களாகவே முடிகின்றன. வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்யும் வேலை, உடல்நலத்திற்காகச் செய்யும் முயற்சி முதலான எல்லா வகைச் செயல்களையும் ஒரு மனிதன் இறைவனுக்குச் செய்யும் பூஜையாகும்படிச் செய்யலாம். ஒரு குறிப்பிட்ட செயலை வைதிகச் செயலென்றோ லௌகிகச் செயலென்றோ வரையறுத்துக் கூறமுடியாது; எச் செயலையும் வைதிகமாகும்படிக்கோ லௌகிகமாகும்படிக்கோ செய்தலும் இயலும். இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் போதிக்கும் வைதிக - லௌகிக ஸமரஸம், சுயநன்மை - பரநன்மை ஸமரஸம்.

(9) இல்லறமே முத்தி பெறுதற்கு நல்லறமாகும். இல்வாழ்க்கையைத் துறத்தல் வீண் என்கின்றனர் ஒரு

இல்லத்து இருத்தல், பெரும் நெருப்பின் நடுவே யிருத்தலைப்போன்று, பொறுக்கமுடியாது போகும் நிலையும் வருதல் உண்டு. இல்லத்தில் பற்றற்று வாழ்தலும் முற்றத் துறந்த முனிவராதலும் ஆண்டவனது அருளால் நடப்பனவாம்; ஆதலின் உடல்பொருள் ஆவியனைத்தையும் இறைவன்பால் ஒப்புவித்து, அவனுக்கு உவந்த தொண்டு செய்து வாழ்வதே மனிதனாற் செய்யக்கூடியதாகும்; அவனை இல்லறத்தின் வழியாகவோ துறவறத்தின் வழியாகவோ முத்திக்குச் செலுத்துவது இறைவனது செயலாகும். இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்ட இல்லற-துறவற ஸமரஸமாகும்.

(9) உலகத்திலுள்ள பல்வகை மக்கட்குள்ளும் ஆண் பெண் வேறுபாடும், ஜாதிநிறம் பாஷை பணம் அதிகாரம் குலம் கல்வி குணம் முதலிய பலவகைப்பட்ட ஏனைய வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இத்தன்மையவான வேறுபாடுகளால் உயர்வு தாழ்வுகளும் பலபல பிணக்குகளும் மாறுபாடுகளும் பகையும்போரும் அழிவும் உண்டாகின்றன. இவைகளையெல்லாம் ஒழித்து, அனைவரும் மனம் ஒன்றுபட்டு ஒத்துழைப்பு மிகுந்து, ஒரே இலக்ஷியத்திற்காக உலகவாழ்க்கையை நடத்தும்போதே உலகமெங்கும் நிலையான சாந்தியும் அன்பும் இன்பமும் பெருகும். அதற்கு வழி ஒன்றே. நாம் காணும் வேறுபாடுகள் யாவும் உடலையும் இடத்தையும் காலத்தையும் சந்தர்ப்பத்தையும்பற்றி எழுந்தவைகளேயன்றி வேறல்ல. இவைகட்கெல்லாம் அதீதமாய், இவைகளால் சிறிதும் மாறுபடாது ஒவ்வோர் உயிரிடமும் வேறுபாடின்றிக் குடிகொண்டு வாழும் பொருள் பரம்பொருளேயாகும். இப்பரம்பொருளைக் காணுவதே மனிதவாழ்க்கையின் நோக்கம். ஆதலின், மக்கள் வேறுபாடுகளில் மனத்தைச் செலுத்தாது, எவ்விடத்தும் தங்கியிருக்கும் பரம்பொருள் ஒன்றே என்றும், அதை வழிபட்டுக் காணுதலே வாழ்க்கையின் பயன் என்றும், அறிதல்வேண்டும். ஒவ்வொரு மனிதனும் பிறர்க்குச் செய்யும் செயல்களை யெல்லாம்

எங்கும் பரந்து விளங்கும் பரம்பொருளின் வழிபாடாகு மாறு போற்றிச் செய்தல்வேண்டும். இம்மாதிரியான சிந்தனையினால், சிந்திப்பவனும் தெய்வமாகச் சிந்திக்கப் படும் பிறமக்களும் உயர்ந்து நன்னிலை யடைவார்கள். ஆகவே, ஒன்றே மக்கட்குலம், ஒன்றே பரம்பொருள் என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு, மக்களின் தனிவாழ்க்கையையும் ஸமூக வாழ்க்கையையும் அப்பரம்பொருட்குத் தொண்டு மயமாகும்படி அமைத் தலே, உலகம் உய்ய வழியாகும். சந்திரன் எல்லாக் குழந்தைகட்கும் மாமா ஆவதுபோல எல்லார்க்கும் யாதொரு வேறுபாடும் தடையும் இன்றிக் கடவுளை வழி படவும், சொந்தமாக்கிக் கொள்ளவும், இறைவனது பெய ரைச் சொல்லவும், புகழைப்பாடவும், அவனது அருளைப் பெறவும் உரிமையுண்டு ; ஆதலின் இறைவனை அடைதற் குரிய ஞான நெறியினும், இம்மை மறுமைப் பயன்களை அடைதற்குரிய அறநெறியினும் பிற மக்களனைவரும் செல்லுமாறு அவர்கட்கு வேண்டியவற்றை யெல்லாம் இயன்றவரை தொண்டாகச் செய்தலே எவர்க்கும் மிக வுயர்ந்த கடமையாகும். இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் காட்டும் ஸர்வ மனித ஸமரஸமாகும்.

கொண்டு தொடங்கிப் பதிகத்தைப் பாடி அருளினார் என்பர். ஏடு உடைய மலரால் முனைநாள்........செய்த— இதழ்களையுடைய மலர்களால் முற்காலத்து அருச்சித்து வழிபட்டதனால் இன்று என்னை ஆட்கொண்டு, அருள் செய்த (ஞானப் பால் ஊட்டிய) என்றுமாம். உள்ளம்.... கள்வன்—என் மனத்தை யான் அறியாமல் கவர்ந்து கொண்டதால், உனக்கு அது உடைமையாக, எனக்கு என ஒரு செயலும் இல்லாமல், நீ ஆட்டுவிக்கிறபடி ஆடும் ஒரு கருவியாக இருப்பவன் என்றவாறு; உள்ளம் ஜீவ போதத்தைக் குறிப்பதாகலின் அதை யொழித்துச் சிவ போதத்தைத் தந்தருளியவன் என்பது குறிப்பு. 'உள்ளங் கவர் கள்வன்' என்றும் 'வளை சோர' என்றும் இப் பதிகத்தில் நாயனார் கூறுதலின், தம்மைத் தலைவி யாகவும் இறைவனைத் தலைவனாகவும் காதல்மேலீட்டினால் கருதிப் பாடியது குறிக்கப்படுகிறது. 'விடையேறி' சிருஷ்டியையும், 'மதிசூடி' திதியையும், 'சுடலைப் பொடி பூசி' சங்காரத்தையும், 'உள்ளங்கவர் கள்வன்' திரோ தானத்தையும், 'அருள் செய்த' அனுக்கிரகத்தையும் (ஆக, சிவபெருமானுக்கு உரிய ஐந்து தொழில்களையும்) குறிக்கும் என்ப.

## 2. 'மெய்யநின்ற பெருமான்'

செய்ய மேனி வெளிய பொடிப் பூசுவர் சேரும்
அடியார்மேல்,
பைய நின்ற வினை பாற்றுவர் போற்றிசைத் தென்றும்
பணிவாரை
மெய்ய நின்ற பெருமான் உறையும் இடம் என்பர்
அருள்பேணிப்,
பொய்யிலாத மனத்தார் பிரியாது பொருந்தும்
புகலூரே. 1. 2. 5.

சிவந்த திருமேனியிலே வெண்மையான திருநீற்றைப் பூசிக்கொள்பவரும், தம்மை அடையும் அடியவர்களி டத்து மெல்லச் சிறிது சிறிதாகத் தங்கியுள்ள வினைகளைக்

# திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

## 1. 'உள்ளங்கவர் கள்வன்'

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே. 1. 1. 1.

*தோட்டை, அணிந்த காதை உடையவனாகி, இடப வாகனத்தின்மேல் ஏறிக்கொண்டு, சுத்த வெண்மையான ஒரு பிறைச்சந்திரனைத் தலையிலே சூடி, சுடுகாட்டிலே உள்ள விபூதியைப் பூசிக்கொண்டு என் மனத்தை (யான் அறியாமலே) தன்வசம் ஆக்கிக்கொண்டவன், இதழ்கள் விரிந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் முன்னாளில் வணங்கித் துதிக்க, அவனுக்கு அருள்செய்த பெருமையை யுடைய திருப் பிரமபுரத்தில் எழுந்தருளிய பெருமானாகிய இவன் அன்றோ!*

*இப் பதிகம், சம்பந்தர் மூவாண்டிலே, பார்வதிதேவி யார் ஊட்டிய ஞானப் பால் உண்டு பெரு ஞானம் பெற்ற வுடன், பெருமானும் பிராட்டியும் காட்சியளித்தருள, அதனைக் கண்டு இன்ப மேலீட்டினாலே பாடியதாகும். சம்பந்தருடைய பிள்ளையுள்ளம் காந்தத்தால் இழுக்கப் பட்ட இரும்புபோலப் பெருமானாலே கவரப்பட்டது என்பது இதனால் அறியப்படும். சீகாழிக்கு உரிய பல வேறு காரணப் பெயர்களுள் பிரமபுரம் என்பது ஒன்று; பிரமன் பூசித்து அருள்பெற்றமையின் அப்பெயர் வந்தது. அருள் வடிவாகிய அன்னைக்கு உரிய இடப்பாகத்திலே, காதில் தோடு பிள்ளைப் பெருமானது கண்களுக்கு நன்கு புலப்பட, அதனைச் சிறப்பிக்க 'தோடு உடைய செவியன்' எனத் திருவாக்கில் உதித்தலும், அதையே முதலாகக்*

கெடுப்பவரும் (முத்தியைக் கொடுப்பவரும்) (தம்மை) எந்நாளும் துதித்துப் பாடி வணங்குவோரை மெய்ம்மை யாக்கி நிற்பவருமான பெருமான் வாழும் இடம், (தமது) அருளைக் கோரிப் பொய்யில்லாத மனமுடைய அடியவர் (எக் காலத்தும்) நீங்காது வசிக்கின்ற திருப்புகலூர் என்று பெரியோர் கூறுவர்.

போற்று இசைத்து....பெருமான்—(சிவபெருமானை யன்றி வேறொன்றையும் வேண்டாது) பல்லாண்டு (போற்று) பாடி எப்பொழுதும் வாழ்த்தி வணங்கும் உயர்ந்த அடியாரை மெய்யாக்கும் பெருமான் ; வணங்கு வாரை மெய்யாக்குதல் ஆவது, அவர்களோடு ஒன்றாகக் கலந்து சிவமாக்கின்று, தமது அருளை அவர்கள் வாயி லாகப் பொழிந்து உலகத்தாரை உய்வித்தல்.

### 3. ‘ நானாவித உருவாய் நமை ஆள்வான் ’

நானாவித உருவாய்நமை யாள்வான் நணுகாதார்
வானார்திரி புர(ம்)மூன்றெரி உண்ணச்சிலை தொட்டான்
தேனார்ந்தெழு கதலிக்கனி உண்பான்திகழ் மந்தி
மேனோக்கிநின் றிறங்கும்பொழில் வேணுபுரம் அதுவே.
1. 9. 5.

பல வகைத் திருவடிவங்களாய் எழுந்தருளி நம்மை ஆட்கொள்பவனும், (உலகுக்குப்) பகைவர் ஆன அசுரர் களின் ஆகாயத்திலே திரிந்த புரங்கள் (கோட்டைகள்) மூன்றும் தீ யுண்ணும்படி (மேரு மலையாகிய) வில்லை வளைத்து அழித்தவனுமாகிய பெருமானது (ஊர்) சிறந்த மந்திகள் (மரங்களில்) மேல் நோக்கிச் சென்று அண் ணாந்து தேன் (இனிமை) நிறைந்துள்ள வாழைப் பழத்தை (கண்டு) உண்ணும் பொருட்டுக் கீழே இறங்கும், சோலை களை யுடைய வேணுபுரமே.

### 4. ‘ தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ

மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.
1. 10. 1.

*உண்ணாமுலை அம்மையாகிய பார்வதி தேவியாரோடும் கூட ஒன்றாக எழுந்தருளியுள்ள ஒப்பற்றவன் ஆன (பாதித் திருவுருவம்) பெண்ணாக உள்ள பெருமானுடைய மலையாகிய, (தம்மிடத்தே) சிறந்த அழகிய ரத்தினங்கள் விளங்கத் தரையில் விழுகின்ற அருவிக் கூட்டங்கள் இனிய மத்தள ஓசை போல ஒலிக்கின்ற திருவண்ணாமலையை வணங்குமவர்களுடைய வினைகள் (வேருடன்) தொடர் பற்றுப் போகும்.*

*திருவண்ணாமலைப் பெருமான் அழற் பிழம்பு வடிவுடையராதலால், அவரைச் சேர்பவர்களின் வினைகள் சுட்டு எரிக்கப்படும் என்பது கருத்து.*

### *5. 'உம் அன்பினொடு எம் அன்பு செய்து'*

வம்மின்அடி யீர்நாண்மலர் இட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்அன்புசெய் தீசன்உறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித்திசை எங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மிழ லையே. 1. 11. 3.

*சிவபெருமான் எழுந்தருளிய கோவில், 'மும்' என்ற ஓசையுடன் ரீங்காரம் பண்ணுகிற வண்டுகள் (மலர்களைக்) கிண்டிக் கொண்டு எல்லாப் பக்கங்களிலும் மகிழ்கின்ற சோலைகளையும் அவற்றைச் சூழ்ந்துள்ள குளிர்ந்த வயல்களையும் உடைய திருவீழி மிழலையே. அடியவர்களே நீவிரும் நாமும் சேர்ந்து பக்தி செய்து புதிய பூக்களை இட்டு (அர்ச்சித்து) வணங்கி உய்யும் பொருட்டு (இங்கே) வாருங்கள்.*

### *6. 'நெறியின் தாயானவன்'*

ஆயாதன சமயம்பல அறியாதவன் நெறியின்
தாயானவன் உயிர்கட்குமுன் தலையானவன் மறைமுத்
தீயானவன் சிவன்எம்இறை செல்வத்திரு வாரூர்
மேயானவன் உறையும்இடம் வீழிம்மிழ லையே. 1. 11. 5.

(உண்மைப் பொருளை) ஆராய முடியாதனவான பல சமயங்களால் அறியமுடியாதவனும், (மெய்ந்) நெறிக்குத் தாயானவனும், (உற்பத்தியானவனும்), (எல்லா) உயிர் கட்கும் பழமையான காலமுதல் தலைவனுயிருப்பவனும், வேதங்களிற் கூறப்பட்டுள்ள மூன்று தீக்களின் வடிவ மானவனும், சிவனுகிய எமது இறைவனும், அருமையான திருவாரூரில் எழுந்தருளியிருப்பவனும் ஆன பிரான் வாசஞ்செய்யும் இடம் (இந்தத்) திருவீழி மிழலையே.

ஆயாதன....அறியாதவன் - சமயங்களை நிலைநாட்டிய பலர் தமது அறிவுக்கு எட்டியமட்டுமே உண்மைகளைக் கூறியுள்ளார், மிகவுயர்ந்த முழுமுதற் கடவுள் வரை ஆராய்ந்து சென்றவரல்ல ராதலால். நெறியின் தாயான வன் - உண்மையான சமய நெறியை அருளால் தனது மெய்யடியார் மூலமாகத் தோற்றுவித்தவனுதலின், அதற் குப் பிறப்பிடமானவன்; அன்றியும், அச்சமய நெறிக்குத் தீங்குவாராது காப்பவனுதலாலும் தாய்போன்றவன். உயிர் கட்கு முன் தலைவன் - உயிர்களும், இறைவனும், உயிர் கட்கு அவனோடு உள்ள 'தொடர்பும் அநாதியாதலின்; 'என்று நீ அன்று நான்' (மாணிக்கவாசகர்). மறைமுத் தீயானவன் - வேள்விகட்கு உரிய அக்கினி வடிவமாக நின்று உலகத்தைக் காப்பவன்.

7. 'தளையாயின தவிர் அவ்வருள் தலைவன்'

விளையாததோர் பரிசில்வரு பசுபாசவே தனையொண்
தளையாயின தவிர்அவ்வருள் தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிரம் உடைஅவ்வவ னோடு
முளைமாமதி தவழும்உயர் முதுகுன்றடை வோமே. 1. 12. 3.

(திருமுதுகுன்றம்) (ஒருகாலத்தில்) உண்டான தென் னப்படாத (அநாதியாயுள்ள) ஒரு தன்மையை யுடைய தாய் வரும், பசுக்களாகிய ஆன்மாக்கட்குரிய (ஆணவம் கன்மம் மாயை என்னும் மலங்களாகிய மூன்று) பாசங்கள் தரும் துன்பத்தையும் மிக்க பந்தத்தையும் ஒழிக்கும் (புகழ்பெற்ற) அந்த அருளோடு கூடிய (பதியான) தலை

வன் சார்ந்திருக்கும் இடமாகும்; (ஆதலின்) பிரகாசம் நிறைந்த கதிர்களை ஆயிரக்கணக்காக உடைய அந்தசூரிய னோடு, இளமையான பெருமையுடைய சந்திரனும் (பிறைச் சந்திரனும்) (கடந்து செல்லமுடியாது, மலைச்சாரிவில்) தவழ்ந்து செல்லும்படி உயர்ந்துள்ள (அத்) திருமுதுகுன் றத்தை (நாம்) அடைவோமாக (அடைந்து உய்வோமாக.)

## 8. 'எண்ணார்தரு பயனாய்'

எண்ஆர் தரு பயனாய்அயன் அவனாய்மிகு கலையாய்ப்
பண்ஆர் தரு மறையாய்உயர் பொருளாய் இறையவனாய்க்
கண்ஆர் தரும் உருவாகிய கடவுள்ளிடம் எனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழு விரிநீர்விய லூரே.

1. 13. 5.

எண்ணத்திலே அமைந்துள்ள பயனாய், பிரம்மாவாய், மிகுந்த (பல) கலைகளாய், இசைபொருந்திய (தமிழிலும்வட மொழியிலும் உள்ள) வேதமாய், (மிக) உயர்ந்த உண் மைப்பொருளாய், (உயிர்கட் கெல்லாம்) தலைவனாய், (நெற் றியிலே) கண்ணுடைய (முக்கண்ணன் எனும்) வடிவங் கொண்ட கடவுள் வாழும் இடம் என்னத்தகும்; (எது என்னில்) வானவரோடு பூமியிலுள்ளோரும் (விரும்பித்) தொழும் நீர்வளமுடைய திருவியலூர் என்னும் இடமே.

எண்ணார்தரு பயனாய் - எண்ணத்தின் பயனாவது, எண்ணியதை எண்ணியவாறே பெறுதலாம்; அப்பயனை அளிப்பவனாய். அயனவனாய் - எண்ணத்தினால் உலகங் களைப் படைக்கும் அயன்வடிவமாய். நினைப்பின் வலி மையே அனைத்திற்கும் ஆதாரமாதலின், நினைத்ததை நினைத்தவாறே நடக்கும்படிச் செய்யவல்ல நினைப்பின் பயனானான்; நினைப்பின் வலிமையால் உலகங்களையும் உயிர்களையும் தோற்றுவிக்கும் பிரமனானான்; பின் உயிர் களின் நினைப்பின் வல்லமையைப் பெருக்க உதவும் பல கலைகளும் ஆனான்; அக்கலைகட்கெல்லாம் தலைமைபெற்ற வேதமானான்; அவ்வேதத்தின் உட்பொருளானான்; உயிர்க ளனைவரையும் உய்விக்கும் தலைவனுமானான் என்றவாறு.

## 9. 'அச்சம் இலர் பாவம் இலர்

அச்சம்இலர் பாவம்இலர் கேடும்இலர் அடியார்
நிச்சம்உறு நோயும்இலர் தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட று (உ)டையார்நறுங் கொன்றைநயந் தாளும்
பச்சம்உடை அடிகள்திருப் பாதம்பணி வாரே. 1. 18. 2.

திருநின்றியூரிலே (உள்ள) (ஆலால) விடத்தைத் திருக்கழுத்தில் உடையவராய் நல்ல மணமுள்ள கொன்றைப்பூவை விரும்பி ஏற்கும் அன்புடைய சுவாமியின் திருவடிகளைப் பணிகின்ற அடியார்கள் தாம் (எவ் வகையான) அச்சமும் இல்லாதவர் ஆவர்; பாவங்கள் அற்றவர் ஆவர்; (புத்தி) கேடுகளும் இல்லாதவர் ஆவர்; தினமும் அடைகின்ற (காமம் முதலிய) நோய்களும் இல்லாதவர் ஆவர்; (எனவே எப்போதும் இன்புற்று வாழ்வர்).

இறைவனது பாதம் பணிவதனால் நித்தமும் மக்களை வருத்தும் காமம் கோபம் முதலிய மனப் பிணிகள் நீங்கும்; அதன் பயனாகப் புத்தித் தெளிவு உண்டாகும்; அதன் பயனாகப் பாவங்கள் செய்யாது ஒழிவர்; அதன் பயனாக மரணபயம் முதலிய எல்லா அச்சங்களும் நீங்கும்; அப்போது மெய்யன்பு தலை யெடுக்கும் என்றவாறு

## 10. 'நினைபவர் செய மகள் தலைவரே'

நறைமலி தருமள றொடுமுகை
நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடும் அடியவர்
குறைவில பதமணை தரஅருள்
குணமுடை இறைஉறை வனபதி
சிறைபுனல் அமர்சிவ புரமது
நினைபவர் செயமகள் தலைவரே. 1. 21. 4.

வாசனைப் பண்டங்கள் மிகுந்த சந்தனக் குழம்பு, அரும்புகளாய் விளங்குகின்ற பூ, தூபம், ஏற்றிய தீபம், நிறைந்த நீர் முதலிய இவற்றை (பூசைப் பொருள்களைக்)

கொண்டு, தன்னை ஒரு முகமான மனதோடு எந்நாளும் தவறாது வழிபடும் அடியார்கள் குறைவில்லாத (சிவ) பதத்தை அடைய அருள் செய்யும் பெருங்குணமுடைய இறைவன் எழுந்தருளியுள்ள அழகிய தலமானதும் நீர் நிலைகள் பொருந்தியது மான சிவபுரத்தைத் தியானிப்பவர்கள் ஜயலக்ஷ்மியின் தலைவராய்விளங்குவர். (அதாவது எதிலும் வெற்றியுடையவராய் விளங்குவர். நினைந்ததை நினைந்தவாறே முடிக்கும் ஆற்றலுள்ளவராவர் )

இப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் செல்வம், புகழ், கல்வி, வெற்றி முதலிய பயன்களில் ஒவ்வொன்றை அடியார் பெறுவர் எனக் கூறப்பட்டுள்ளது.

**11. 'கீழ் உடையும் கொண்ட உருவம் என் கொலோ'**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ. 1. 23. 1.

(நீர் பாயும்) மடையில் வாளைமீன்கள் துள்ளிக் குதிக்கும்படிப் பெண்கள் தண்ணீரிலே (அமிழ்ந்து) நீந்திக் குளிக்கும் தடாகங்களையுடைய திருக்கோலக்காவில் உள்ள பெருமான் (தலையிலே) சடையும், (அதில்) பிறைச் சந்திரனும், (திருமேனியிலே) திருநீற்றின் பூச்சும் அரைக் கச்சும் (கோவணமும்) கொண்ட இத் திருவுருவமாய் இருப்பது எக்காரணம் பற்றியோ? (எல்லாம் உடையவனயினும் ஒன்றுமற்றவன் போன்று இவ்வாறு இருப்பது ஏனோ?)

**12. 'ஞானப் பொருள் கொண்டு அடி பேணும்'**

ஊனத் திருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனைத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. 1. 38. 3.

(உலக மக்களே) நமக்குக் குற்றமாக உள்ள (அக) இருள் நீங்க விரும்புவீரர்கில், (அக இருளைப் போக்கும்) ஞானப் பொருளாக விளங்குகிற பெருமானை (மனத்திலே இடையறுது) தியானித்து (அவருடைய) திருவடிகளைப் போற்றுவீர்களாக. (அவன் எழுந்தருளியுள்ள இடமாவது, தேன்போல் (நமக்கு) இனிய பெருமான் அமர்ந்துள்ள, ஆகாயத்தை அளாவிய (வானம் சேர்) திருமயிலாடு துறையாகும்.

### 13. 'பொய்ம்மைகள் தீர்ந்த புண்ணியர்'

நிலஞெடுவோனும் நீரோடுதீயும் வாயுவுமாகியோர் ஐந்து
புலஞெடுவென்று பொய்ம்மைகள்தீர்ந்த புண்ணியர்வெண்
போடிப் பூசி
நலஞெடுதீங்கும் தானலதின்றி நன்கெழுசிந்தைய ராகி
மலஞெடுமோசும் இல்லவர்வாழும் மல்குபெருந்துறையாரே.
1. 42. 4.

நிலம் வான் நீர் தீ காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்களின் (சூரியன் சந்திரன் உயிர் ஆகிய மூன்ருெடும் கூடி எட்டுப் பொருள்களின்)வடிவுடையனுகி, (மெய் வாய் கண் மூக்கு செவி என்ற) ஐந்து ஞானேந்திரியங்களையும்) உலகப்பொருள்களிற் செல்ல விடாதபடி அவைகளை அடக்கி) வென்று, எல்லாப் பொய்ம்மைகளையும் நீங்கின புண்ணியர் (யார் என்னின்)வெண்மையான திருநீற்றை அணிந்து தானல்லாமல் (சிவபெருமானுடைய அருள் தன்மை யல்லாமல்) (உலகத்திலுள்ள) நன்மை தீமைகள் (ஆகிய தொந்தங்கள்) இல்லாதவராகி, நன்மையையே உயிர்கட்குச் செய்யும் உள்ளத்தினை உடையவராகி, (ஆணவம் கன்மம் மாயை எனும் மும்) மலங்களும் (அவைகளால் வரும்) குற்றங்களும் நீங்கின அடியார்கள் வசிக்கின்ற (அருள்) நிறைந்துள்ள திருப்பேணு பெருந்துறை யென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்; (ஆதலின் அடியவர்களே, அவரை அடைந்து வழிபடுங்கள்.)

நிலனெடு........மாகி - சூரியன் சந்திரன் உயிரோடு கூடி எட்டுப் பொருள்களாகும்; சிவபெருமானுடைய

அட்டமூர்த்தி வடிவம் கூறப்பட்டது. பொய்ம்மைகள்.... புண்ணியர் - மாயா தத்துவங்கட்குரிய நன்மைதீமை ஆண் பெண் முதலிய துவந்தங்களிலிருந்து நீங்கிய அருள்மய மான தரும வடிவினர். வெண்பொடிப்பூசி-வெண்மை புறத் தூய்மையோடு அகத்தூய்மையையும் குறிப்பது. தான் அலது - 'தான்' என்பது 'தத்' என்னும் வட மொழியைப் போன்று பிரம்மத்தைக் குறிக்கும் என்பர்; 'தான் எனை முன் படைத்தான்' (சுந்தரர்). நலனொடு.... இல்லார்-சிவபெருமானைப்போல அவரது அடியார்களும் துவந்தங்களினின்று நீங்கி, அருள்நிறைந்த புண்ணிய வடிவினராவார் என்பதைக் குறிப்பிடுகிறது. "தானெக் கும் தன் அடியார்" (அப்பர்).

## 14. 'மயல் செய்வதோ இவர் மாண்பே'

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்து(உ)றைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 1. 44. 1.

துண்டமாகிய வளர்பிறைச் சந்திரன் அசைந்து (அழ காக) விளங்கும்படி (சிவந்த) ஒளி பொருந்திய சடையைச் சுற்றிக் கட்டிக்கொண்டு, பாம்பு தங்குகின்ற இயல்பை யுடையவராய்ப் பூத கணங்கள் (தம்மைச்) சூழ்ந்துவர நீண்ட பூமி முழுதும் (எங்கும்) போய்ப் பிச்சை கேட்பார் இவர். அழகு மிகும் கோலங்களெல்லாம் (அலங்காரங் கள்) செய்துகொண்டு திருப்பாச்சிலாச்சிரமத்தில் எழுந் தருளி யிருக்கின்ற (விடத்தால்) நீலமணி போன்றுள்ள திருக்கழுத்தை உடைய சிவபெருமானோ? (தம்மை அடையக் கருதும்) இம்மங்கையை (பிரிவாற்றாது) வாடும் படி மயங்கச் செய்வதோ இவருடைய பெருமை?

இப்பதிகம் 'தாய் இரங்கல்' என்னும் அகப்பொருள் துறையில் அமைந்துள்ளது; இதனை 'அற்புதப் பதிக' மாகக் கொள்வது சைவ மரபு.

### 15. 'அரு மறை சொன்னது என்னே!'

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி அருமறை சொன்னதென்னே!
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. 1. 48. 1.

சேல் மீன்கள் மிகுதியாக உள்ள குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருச்சேய்ஞலூரில் வீற்றிருக்கும் பெருமானே! சமய நூல்கள் சொல்லும் கொள்கையால் (நெறியினால்) உன் திருவடிகளை அடையப் பெரும் ஆசைகொண்ட (சனகாதி) நால்வர் (உன்னை) வேண்டிக்கொள்ள, அவர்களுக்கு உபதேசித்த (அந்த) ஞான மார்க்கத்தை (ஓர்) ஆலமரத்தின் நிழலிலே போய் அரிய இரகசியமாக (மௌனமாக) சொல்லி யருளியது என்ன காரணமோ! (என் போல்வாரும் அறிந்து உஜ்ஜீவிக்கும் வண்ணம் வெளிப்படையாக உபதேசித்தருளலாகாதோ?)

இப்பதிகத்தின் ஒவ்வொரு பாசுரத்திலும் இவ்வாறு ஏதேனும் ஒன்றை வினவுகின்றார் சம்பந்தர்.

### 16. 'தாயு நீயே தந்தை நீயே'

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே அடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னு ளைவர்நின்(று)ஒன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே. 1. 50. 7.

திருவலிவலத்தில் கோயில்கொண்ட பெருமானே, (அன்பர்க்கு) நன்மை செய்பவனே! (எல்லார்க்கும்) தாயும் நீதான். தந்தையும் நீதான். வேதங்கள் இன்னமும் ஆராய்ந்துகொண்டிருக்கும் (முடிவு காணாத) உன் மீது என்மனம் பக்திசெய்ய விரும்புகின்றது. (ஆனால்)

(அதற்கு இடையூறாக) மாயா காரியமாகிய இவ்வுடம்பிற்குள் ஐந்துபேர்கள் (பஞ்சேந்திரியங்கள்) இருந்துகொண்டு (மனத்தை உன்னிடம்) பொருந்தவிடாது செய்கின்றனர். இவர்களின் மாயம் இத்தன்மையதே! என்று இதற்கு அஞ்சுகின்றேன். (இம்மாயம் தீர்த்து ஆண்டருள்வாயாக).

*தாயும்....சங்கரனே* - பிரியத்தைச் செய்யும் தாயும், நன்மையை நாடிச்செய்யும் தந்தையும் நீயே; உயிர்கட்கு நன்மை செய்தலையே இயல்பாகக்கொண்டு, அதனாற் காரணப் பேர் (சங்கரன்) பெற்றவனன்றோ?

### 17. 'நின் அடியார் இடர் களையாய்'

நின்னடியே வழிபடுவான் நிமலாநினைக் கருத
என்னடியான் உயிரைவல்வேல் என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே. 1. 52. 3.

திருநெடுங்களத்தில் அமர்ந்த பெருமானே! சுத்த இயல்புடையவனே! (வேறொன்றையும் வேண்டாது) உன் திருவடிகளையே (மறவாது) வழிபடும் மார்க்கண்டேயன், (யம பாதையினின்றும் தன்னை விடுவிக்கும்படி) உன்னைக் கருதித் துதிக்க, 'என் அடியவனது உயிரை அபகரிக்காதே' என்று சொல்லி வலிய யமனை உதைத்த (உன்னுடைய அந்தப்) பொன் போன்ற திருவடிகளையே தினமும் புகழ்ந்து, (திருமஞ்சனத்திற்கு) நீரும், (அருச்சனைக்குப்) பூவும் எடுத்துச் சென்று வழிபடும் உன் அடியார்களின் துன்பங்களைத் தீர்த்தருள்வாயாக.

இப் பதிகத்துள் ஒவ்வொரு பாட்டிலும் அடியாரின் இடர் களைய ஆண்டவனை வேண்டுகிறார்.

### 18. 'மிக்கு ஒன்றும் வேண்டா விமலனிடம்'

மயல்தீர்மை இல்லாத தோற்றம்இவை
மரணத்தோ டொத்தழியும் ஆறுதலால்
வியல்தீர மேலுக மெய்தலுறின் மிக்கொன்றும்
வேண்டா விமலனிடம்

உயர்தீர ஓங்கிய நாமங்களால் ஓவாது நாளும்
அடிபரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை
மாடந் தொழுமின்களே. 1. 59. 5.

*மயக்கம் தீர்தல் இல்லாத (இவ்வுலகத்துள்ள) இவ் வெளித் தோற்றங்கள் (நம்முடைய) மரணத்தைப் போலவே அழியும் தன்மை உள்ளன ஆதலால், (இத் தோற்றங்களில் நமக்கு உள்ள) பெரிய மயக்கம் தீர (இத் தகைய மாயா காரியங்களுக்கு உட்படாதபடி) மேலான முத்தி உலகத்தை அடையவிரும்பினால், (தனக்கு) மேலாக (உள்ள) ஒரு பொருளையும் விரும்பாத (ஒப்பு உயர்வு இல்லாத) மல மற்றவனை பெருமானது இடமாகியதும் தம்மினும் உயர்வு (வேறு) இன்றி மேம்பட்டுள்ள (108, 1008) திருநாமங்களால் (அடியார்கள்) இடைவிடாது தினமும் வணங்குவதும் (அதனால்) பலவகைத் துன்பங் களையும் போக்குவதும் ஆன கடந்தை (கடத்தூர்?) பெரியகோவிலை அடுத்துள்ள திருத் தூங்கானை மாடத்தை வழிபடுங்கள்.*

*இப் பதிக முழுதும், 'பிறப்பு இறப்பு முதலிய துன் பங்களினின்று நீங்கி உய்ய வேண்டின், திருத் தூங்கானை மாடத்தை வழி படுக, என்னும் இம்முறையிலே உள்ளது.*

*மிக்கொன்றும் வேண்டா விமலன் - (முத்தியடையும் விருப்பத்தைக் காட்டிலும்) அதிகமாக வேறொன்றையும் வேண்டாத (அவ்விருப்பம் ஒன்றைக் கருதியே முழு அருளையும் சுரக்கும்) விமலன் எனினுமாம்; 'தனது நாமங்களை ஓதித் திருவடிகளை வழிபடுதற்கு மேலாக யாதொன்றையும் (முத்தியை அருளும் பொருட்டு) விரும் பாத விமலன் என்னலுமாம்.*

## *19. திருநாமம் எனக்கு ஒரு காற் பேசாயே'*

சிறையாரு மடக்கிளியே இங்கேவா தேனோடுபோல்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்

துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே.
1. 60. 10

*(அழகிய) சிறகுடைய இளங்கிளியே ! (தயவு செய்து) இங்கே வா. (உனக்குத்) தேனும் பாலும் முறையாக உண்ணும்படித் தருவேன். மிக்க பவளமும் முத்தும் துறையிலே நிறைந்துள்ள கடலை அடுத்த திருத் தோணி புரத்து ஈசனை, அசைகின்ற இளம்பிறை சூடிய பெருமானுடைய திருநாமங்களை எனக்கு (மன மகிழ) ஒருமுறை சொல்வாயாக. (அதனைக் கேட்டாயினும் சிறிது ஆறுதலடைவேன்.)*

*இப் பதிகம், தலைவனை நினைந்து வருந்தும் ஒரு தலைவி, தன் நிலையைக் குறித்துத் தலைவனுக்கு அறிவிக்க, வண்டுகளையும் பறவைகளையும் தூது விடும் துறையில் அமைந்துள்ளது.*

## *20. 'பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்'*

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளைஎருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியின்உரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே. 1. 67. 1.

*வேதங்களை ஓதிக்கொண்டு, வெண்மையான முப்புரி நூல் (பூணூல்) அணிந்து, வெள்ளை இடபத்தின் மேல் ஏறி, பூதப் படைகள் (பக்கங்களிலே) சூழ்ந்து வர (தாம்) அழகு விளங்க வருவாராகிய புலியின் உரிக்கப்பட்ட தோலை ஆடையாக உடையவர், (உலகத்துக்கு) நாதனே (தலைவனே) என்றும், நக்னனே (ஆடையற்றவனே) என்றும், நம்பியே (பெருமானே) எனவும் (சொல்லிச் சந்நிதியிலே) நின்று தம்முடைய திருவடிகளை வணங்குமவர்களுடைய பாவங்களை யெல்லாம் போக்கி அருளுபவரான திருப் பழனப் பெருமான்.*

வரு மேல் வினை........தீர்க்கும்—'போன பிழையும் புகு தருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' (திருப் பாவை.) 'வருமேல்' வினை ஆகாமியத்தையும், 'பந்தித்த' பிராரத்தத்தையும், 'இருந்த' சஞ்சிதத்தையும் குறிக்கும் என்னலுமாம்.

இப் பதிகத்தில் 6, 10 பாட்டுகளிலும் இதிலும் அண்ணாமலையை அண்ணாமலையார் என்று கூறி யுள்ளது பெருமை பற்றி யென்க. இவ்விடங்களால் அண்ணாமலை யாமே என்று பாடம் இருப்பின், பொருள் கொள்ளல் எளிதாகும்.

## 23. 'நினைப்பவர் மனத்து உளான்'

நீருளான்தீஉளான் அந்தரத்துள்ளான்
நினைப்பவர்மனத்துளான் நித்தமாஏத்தும்
ஊருளான்எனதுரை தனதுரையாக
ஒற்றைவெள்ளேறுகந் தேறியஒருவன்
பாருளார்பாடலோ டாடலறாத
பண்முரன் றஞ்சிறை வண்டினம்பாடும்
ஏருளார்பைம்பொழில் இலம்பையங்கோட்டூர்
இருக்கையாப் பேணிஎன் எழில்கொள்வதியல்பே.
1. 76. 7.

நீரினிடத்து இருப்பவனும், தீயினிடத்து இருப்ப வனும், ஆகாயத்தில் இருப்பவனும், தன்னை (மறவாது) தியானிப்பவர் மனத்தில் இருப்பவனும், (அடியார்கள்) தினந்தோறும் துதித்து வணங்கும் ஊர்களில் (தலங் களில்) (அவர்கள் பொருட்டு) எழுந்தருளியிருப்பவனும், என் வார்த்தைகள் தனது வார்த்தைகளாகும்படி (அருள் செய்து) தனக்கு இணை இல்லாத வெண்மையான இட பத்தை (வாகனமாக) விரும்பி ஏறிச் செலுத்தும் ஒப்பற்ற வனுமான பெருமான், பூமியில் (எங்கும்) உள்ள தொண் டர்களின் தோத்திரப் பாடலும் (சிவானந்த மேலீட்டால் உண்டாகும்) ஆடலும் (என்றும்) நீங்கப் பெறாததும், அழகிய சிறகுகளை யுடைய வண்டுகள் ரீங்காரம் செய்து

### 21. 'ஞானத் திரளாய் நின்ற பெருமான்'

ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லஅடியார் மேல்
ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப்பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான்கரடி இழியும்இரவின் கண்
ஆனைத்திரள்வந் தணையும்சாரல் அண்ணாமலையாரே.
1. 69. 3.

*ஞானப் பிழம்பாய் உள்ள பெருமான் (தம்முடைய) உண்மை அடியார்களுக்கு உள்ள குறைகளின் மிகுதியை நீக்குவதும் (முத்தியை அளிப்பதும்) உண்மைப் பொருளே யாகும். (அப் பெருமானே) காட்டுப் பன்றிக் கூட்டமும் மான் கூட்டமும் கரடிகளும் சஞ்சரித்தற்கு இடமான, இரவிலே யானைக் கூட்டமும் வந்து சேருகின்ற திருவண்ணுமலையில் அமர்ந்தவர்.*

*ஞானத் திரளாய் - இவ்வூரிலுள்ள சிவபெருமான் தனது அடிமுடிகளைத் தேடிக் காணமுடியாதபடி ஒளிப் பிழம்பாக நின்ற புராண வரலாற்றைக் குறிக்கின்றது. ஊனத் திரள் - இடைவிடாத அலைபோல மேலும் மேலும் திரண்டு வரும் வினைத் தொடர்பு.*

### 22. 'பாவம் தீர்க்கும் பரமன்'

வந்தித்திருக்கும் அடியார்தங்கள் வருமேல்வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமன்உறைகோயில்
முந்தியெழுந்த முழவின்ஓசை முதுகல்வரைகள்மேல்
அந்திப்பிறைவந் தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே.
1. 69. 7.

*(தன்னை எப்போதும்) வணங்கிக் கொண்டிருக்கும் அடியார்களுடைய இனி வர நிற்கும் வினைகளோடு முன்பு கட்டுப் படுத்தியுள்ள பழ வினைகளாகிய பாவங்களையும் தீர்த்து அருள் செய்யும் பரம்பொருளாகிய பெருமான் தங்குகிற கோவில், முற்பட்டு எழுந்த மத்தள ஓசை (போலும் அருவியின் ஓசை) யுடைய பழைய கற்குன்று களில் மாலைக் காலத்துச் சந்திரன் வந்து தங்குவதற்கு இடமான மலைச்சரிவில் அமைந்த திருவண்ணுமலையாகும்.*

இசை பாடுவதற்கு இடமான அழகு நிறைந்த பசிய சோலைகளை உடையதுமான இலம்பையங்கோட்டூர் என்னும் தலத்தை (தனது) இருப்பிடமாக விரும்பிக் கொண்டு (வாழ்ந்து) (தன்னைக் குறித்து வாடி வருந்தும்) எனது அழகை (இவ்வாறு பிரிவாற்றாமையால் கெடும்படி)ப் பெற்றுக்கொள்வது (அவனுடைய பேரருட்) குணத்திற்கு ஏற்றதாகுமோ? (ஆகாது.)

எனது உரை தனது உரையாக - எனது வார்த்தைகளைத் தன்னுடைய வார்த்தைகளைப்போல நிறைவேற்றி வைக்கும் அருளைக் குறிக்கும்; என்வாக்கு அவனது வாக்கேயாகும்படி என்னுள்ளிருந்து பாடுவித்தலைக் குறிக்கும் எனினுமாம். கோட்டூர்........இயல்பே - என்னை மயக்கி என்னைக்கூடியபின், எனக்கருகே கோட்டூரிலேயே விரும்பிவாழ்ந்தும் என் அழகு கெடும்படி என்னைப் பிரிவாற்றாமையால் வருந்தும்படிச் செய்தல் (முன்பு எனது உரை தனது உரையாகும்படிச் செய்த) அருட் குணத்திற்கு ஏற்றதாகுமோ என்றவாறு. இப் பதிகம், தலைவி இரங்குதலாகிய அகப்பொருள் துறையில் அமைந்தது.

## 24. 'தேனினும் இனியர்'

தேனினும்இனியர் பாலனநீற்றர்
தீங்கரும்(பு) அனையர் திருவடிதொழுவார்
ஊன்நயந்து(உ)ருக உவகைகள்தருவார்
உச்சிமேல்உறைபவர் ஒன்றலாதூரார்
வானகம்இறந்து வையகம்வணங்க
வயங்கொள நிற்பதோர் வடிவினை உடையார்
ஆனையின்உரிவை போர்த்தஎம்அடிகள்
அச்சிறுபாக்கம(து) ஆட்சிகொண்டாரே. 1. 77. 2.

(பத்தி நிறைந்து நினைப்பவர் மனத்திலே) தேனைவிட இனிமை யுள்ளவரும், பால்போலும் திருநீறு அணிந்தவரும், இனிய கரும்பு போன்றவரும், தமது திருவடியைத் தொழுபவர் உடல் நெகிழ்ந்து உருகும்படி (அவர்களுக்கு) சிவானந்தத்தைத் தருபவரும் (அவர்களுடைய) சிரசின்

மேலே வீற்றிருப்பவரும், ஒன்றல்லாத் (பல) தலங்களை உடையவரும், ஆகாயத்தையும் கடந்ததாயினும் இவ் வுலகத்தார் (வழிபட்டு) வணங்கும்படி வெற்றியோடு விளங்குவதொரு திருவடிவத்தை உடையவரும், (தாருகவனத்து இருடிகள் தம் அகந்தையால் ஏவிய) ஆனையின் உரித்த தோலைப் போர்த்துக் கொண்டவருமான எம் சுவாமிகள் அச்சிறுபாக்கத்தைத் தாம் ஆளும் இடமாக (இருப்பிடமாக) கொண்டுள்ளவரே.

தேனினும்........அனையர் - இனிய உள்ளத்தையும், இனிய மேனியையும், இனிய சொற்களையும் உடையவர் என்றவாறு.

## 25. 'பற்று பாவமே'

கற்றுங் கேள்வீப் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்று வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்று பாவமே. 1. 80. 1.

(வேதத்தை) நன்கு ஓதி, அதில் விதித்தபடியே தீயை (தவறாது) பாதுகாத்து (அக்கினி காரியங்களை விடாது செய்து) கலி புருஷனை (தீமையை) (அங்கு) வாராதபடி வென்று தொலைத்த, அந்தணர் வாழும் தில்லையிலே சிற்றம்பலத்தில் விரும்பி எழுந்தருளிய, (கலைகள்) நிரம்பாத வெள்ளிய (பிறைச்) சந்திரனைச் சூடிய முதற் பொருளாகிய பெருமானுடைய திருவடிகளே (தமக்குப்) புகலாகப் பற்றி உறுதியாக வாழ்வார்களைப் பாவங்கள் தொடர மாட்டா.

## 26. 'முத்தி ஆகுமே'

சித்தம் தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி ஆகுமே.
பிறவி அறுப்பீர்காள், அறவன் ஆரூரை
மறவா தேத்துமின், துறவி ஆகுமே.
துன்பந் துடைப்பீர்காள், அன்பன் அணிஆரூர்
நன்போன் மலர்தூவ, இன்பம் ஆகுமே. 1. 91. 1-3.

## 28. 'கள்ளம் ஒழிந்திடு மின்'

உள்ளம்ஓர் இச்சையினால் உகந்தேத்தித் தொழுமின்
[தொண்டீர் மெய்யே
கள்ளம் ஒழிந்திடுமின் கரவா திருபொழுதும் [மேய
வெள்ளம்ஓர் வார்சடைமேற் கரந்திட்ட வெள் ளேற்றான்
அள்ளல் அகன்கழனி ஆரூர் அடைவோமே. 1. 105. 3.

*தொண்டர்களே! (பெருமானை) உண்மையாக மனத்தில் அன்போடு (பக்தியோடு) விரும்பித் துதித்து வணங்குங்கள். (மனத்தில்) வஞ்சகம் நீங்குங்கள். கங்கை வெள்ளத்தைத் தனது நீண்ட சடையில் அடக்கிவிட்ட, வெண்மையான இடப வாகனத்தை உடைய, பெருமான் அமர்ந்துள்ளதும் அகன்ற சேறு கொண்ட வயல்களையுடையதுமான திருவாரூரை மறவாமல் (காலைமாலை) இருவேளைகளிலும் (நாம் போய்) அடைவோம்.*

## 29. 'திரு நீலகண்டம்'

அவ்வினைக் கிவ்வினை ஆமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக் கூனமன்றே [ம்
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாம்அடியோ
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறாதிரு நீலகண்டம்.
1. 116. 1.

*(மானிடரே!) (முன் செய்த) வினைக்கு ஏற்றவாறே இப்போது அநுபவிக்கப்படும் நிலை என்று (பெரியோர்) சொல்லும் வார்த்தைகளை நீங்கள் அறிவீர். (அவ்வினைத் தொடர்பினின்றும்) தப்பும்வகையை நாடாமல் இருப்பது உமக்குக் குறைவு அன்றோ? அடியவராகிய நாங்கள், கையால் இயன்ற) திருத்தொண்டு செய்து எம்பெருமான் திருவடிகளைத் துதித்து வணங்குவோம். (ஆதலால்) முன் செய்த பாவங்கள் வந்து எங்களைத் தொடரப் பெறா. (இதற்குப் பெருமானது) திருநீலகண்டத்தின்மீது ஆணை.*

*எனவே, எல்லீரும் பெருமானுக்கு ஆட்பட்டு வினைத் தொடர்பினின்றும் நீங்கி உய்யுங்கள் என்பதாம்.*

மனம் தெளிவை அடைய விரும்பு மவர்களே! அப்பனார் எழுந்தருளிய திருவாரூரை (திருவாரூரில் உள்ள பெருமானை)ப் பக்தியோடு மலர்களால் அருச்சித்தால் முக்தி உம்முடையதாகும். பிறப்பை அறுக்க விரும்பு மவர்களே! தரும சொரூபியாகிய பெருமானது திருவாரூரை மறவாமல் (தினமும்) துதித்து வழிபடுங்கள். (அதனால்) துறவு உம்முடையதாகும். (உலக பந்தங்களினின்றும் விடுபட்ட இடமாகிய முக்தியும் ஆம்.) (பிறப்பினால் வரும்) துன்பங்களைப் போக்கிக் கொள்ள விரும்புமவர்களே! (அடியார்க்கு) அன்பனான பெருமானது அழகிய திருவாரூரை நல்ல பொன் நிறமான மலர்களால் அருச்சித்து வழிபட்டால் பேரின்பம் (சிவானந்தம்) உம்முடையதாகும்.

## 27. 'சென்று அடையாத திரு உடையானை'

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே(று)
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருஉடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்உள்ளங் குளிரும்மே. 1. 98. 1.

நல்லனவற்றையே (கலியாண குணங்களையே) உடையவனும் தீயது (தீயகுணம்) ஒன்றும் இல்லாதவனும், மிக வெள்ளிய ஓர் இடப வாகனத்தை உடையவனும், உமாதேவியை (திருமேனியில்) ஒரு பாகத்தில் உடையவனும் (தன்னிடம்) வந்து (இனி) அடையவேண்டிய நிலையில் இல்லாத (என்றும் பிரியாத நிறைவுற்ற) செல்வமாகிய சீரிய குணங்களை யுடையவனை, திருச்சிராப்பள்ளி மலையை (இருப்பிடமாக) உடையவனும் (ஆன) நம் பெருமானைத் துதிக்க, என் மனம் (இன்பம் நிறைந்து) குளிர்ச்சி யடைகின்றது.

நன்று....லானை - தீமை கலவாத முழு நன்மையுடையவனை. நரை வெள்ளேறு....உடையானை - அற வடிவும் அருள் வடிவும் கொண்டோன் என்பதைக் குறிக்கும். (வெள்ளேறு - அறவடிவம், உமை - அருள் வடிவம்.)

*நித்தியம் நைமித்திகம் காமியம் என்று வகுக்கப்பட்டுள்ள கருமங்கள் ஒரு பயன் கருதிச் செய்யப்படுபவைகளாம்; இவைகளால் வினைத் தொடர்பு மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வரும், முத்தி கைகூடாது; வினைத்தொடர்பை நீக்குதற்குப் பயன் கருதாது சிவபெருமானுக்கென்றே அன்போடு தொண்டு செய்தலே ஏற்ற வழியாம் என்ற வாறு. அவ்வினைக்கு இவ்வினை ஆம்—பழைய வினையை நீக்குதற்கு இப்பிறவியிற் செய்யப்படும் முயற்சி மாற்றாகும் எனினுமாம்; ஆதலின் பழமையான வினையை நீக்கக் கழல் போற்றுக என்றவாறு.*

## 30. *'கணபதி வர அருளினன்'*

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே. 1. 123. 5.

*மிக்க வள்ளன்மையே வடிவான புண்ணிய சீலர் வாழும் திருவலிவலத்தில் வீற்றிருக்கும் எம் இறைவன் (தன் சங்கற்பத்தாலே) உமை ஒரு பெண் யானையின் வடிவங் கொள்ள (தான்) மேம்பாடுள்ள ஆண் யானையின் வடிவங்கொண்டு, தன் திருவடியை வழிபடும் அடியார்களுக்கு வரும் இடையூறுகளை யெல்லாம் போக்கியருளும் கணபதி (யானை முகக் கடவுள்) அவதரிக்குமாறு அருள் செய்தான்.*

*அடியார்களின் இடர்களைத் தான் தீர்த்து அருளுவதன்றி, அதிற் சிறிதும் குறை நேராதிருக்குமாறு அதற்கென்றே தன் அம்சமான ஒரு மூர்த்தியையும் தந்து நியமித்துள்ளான் இறைவன். அவன் கருணைத்திறம் என்னே! என்று வியந்தவாறு. தேவாரம் ஓதுவோர் 'பிடியதனுரு' என்னும். இப்பாசுரத்தைக் காப்பாக முதலில் ஓதுவது வழக்கம்.*

## 31. 'அஞ்சேல் என்று அருள் செய்வான்'

புலன்ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைம்மேல்உந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்
அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்குந்
திருவையாறே. 1. 130. 1.

*ஐம்புலன்களும் (அவற்றிற்கு உரிய) ஐம்பொறிகளும் கலக்கமடைந்து வழி தடுமாறி, அறிவு சோர்ந்து கோழை (கபம் - ஐ) மேலிட்டு (உயிர்) தத்தளிக்கும் (இறக்கும்) போதில் 'அஞ்சாதே' என்று திருவருள் செய்யும் எம் பெருமான் அமர்ந்துள்ள திருத்தலம், (ஆடலில்) திறமை மிக்க கணிகைப் பெண்கள் கூத்து வகைகளை ஆட, அதற் கேற்ப மத்தளம் முழங்க, சிலமந்திகள் (அம்முழக்கத்தை) மேக முழக்கம் என்று (நினைத்து) பயந்து கலக்கமடைந்து மரங்களில் ஏறி மேகத்தை (அண்ணாந்து) பார்க்கும் இடமான திருவையாறாகும்.*

## 32. 'நெறி காட்டும் விகிர்தனாகி'

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங் கோயில்
காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச்
சேயிழையார் நடமாடுந் திருவையாறே. 1. 130. 6.

*(எல்லா உலகங்களுக்கும்) தலைவனாகி, தேவர்க்கும் மானிடர்க்கும் (நல்ல) நெறிகளைக் காட்டியருளும் கடவுளாகி, நறுமணம் கமழும் கொன்றைப் பூமாலையைச் சடையில் சூடிய புண்ணிய மூர்த்தி அன்புகொண்டு*

வீற்றிருக்கும் தலம், அழகு மிக்க வீதிகளிலே (அமைந்த) அரங்குகளில் ஏறி (சில) பெண்கள் சுருதி கூட்டிக் காந்தாரப் பண்ணைப் பாட (அதற்கேற்ப) செவ்விய ஆபரணங்களை அணிந்த நடனமாதர் 'தேம் - தாம்' என்று நடனம் செய்யும் (சிறப்பு வாய்ந்த) திருவையாறுமாகும்.

திருவையாறு, இசை நர்த்தனங்களுக்குப் பேர் போனதென்பது இப் பதிகத்துள் நான்கு பாசுரங்களிற் குறிக்கப்பட்டுள்ளது.

### 33. 'உயிர்க்கு உயிராய்......நின்றான்'

உரைசேரும் எண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே. 1. 132. 4.

(நூல்களாலே) சொல்லப்படுகிற எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களையும் முறையாக ஒருங்கே படைத்து, அந்த யோனி பேதங்களில் உள்ள உயிர்களுக்கெல்லாம் தானே உயிர் (ஆதாரம்) ஆகி அவ்வவ் உயிர் தோறும் தங்கியுள்ள பெருமானது கோயில், மலையிலே வந்து தங்கும் மேகங்கள் மத்தள ஓசையைச் செய்யப் பல மயில்கள் நர்த்தன மாட, வண்டுகள் பண்பாட (இவற்றைக் கண்டும் கேட்டும் அநுபவித்த கொன்றை மரங்கள் பிரபுக்களைப் போல) மணமுடைய (பூக்களாகிய) பொன்னைப் பரிசாகக் கொடுக்க, (அதனை) மெல்லிய காந்தட் செடிகள் தம் பூவாகிய கைகளால் ஏற்றுக்கொள்ளும் (வளம் மிக்க) திருவீழி மிழலையாகும்.

இப் பதிகத்துள் இயற்கை வருணனை மிக அழகாக உள்ளது. விரைசேர்....ஏற்கும் - கொன்றைப்பூ கீழ்நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும் ஆதலாலும், காந்தள் மேல்

நேர்க்கி விரிந்த நிலையிலிருக்கும் ஆதலாலும், இவ்வாறு தமது குறிப்பை ஆசிரியர் ஏற்றினார் என்க.

### 34. 'உள்ளப் புண்டரிகத்துள் ளிருக்கும் புராணர்'

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்
றைம்புலனும் அடக்கிஞானம்
புகலுடையோர் தம்உள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யும் மிழலையாமே. 1. 132. 6.

மனம் பொருந்திய அன்புடையவராய் (அந்தரங்க பக்தியோடு) உட்பகை ஆறையும் (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்) ஒழித்து, ஐந்து இந்திரியங்களின் விஷயங்களையும் அடக்கி, ஞான மார்க்கத்தை விரும்பும் தொண்டர்களின் மனத் தாமரையில் எழுந்தருளியிருக்கும் பழம் பொருளாகிய பெருமானுடைய கோவில், சிறப்புற்ற நீர்நிலையில் (உள்ள) பளிங்குக் கற் பீடத்தில், சங்குகள், தம் இனங்கள் சூழ்ந்து விளங்க, தாமரைப் பூவாகிய தீயிலே புன்க மரங்கள் தாம் மிகுதியாக உடைய பூக்களாகிய பொரியை இட்டுச் சடங்கு செய்ய மணம் செய்துகொள்ளும் (நீர்வளம் மிக்க) திருவீழி மிழலையாகும்.

திருமணச் சடங்கிலே பொரி இடுதல் இன்றும் வழக்கமாக வுள்ளது. இப்பதிகத்துள் இயற்கையழகின் வருணனையும் கற்பனையழகும் நிரம்பியுள்ளன.

### 35. 'வேதமொடு ஏழ் இசை பாடுவர்'

மாதர் மடப்பிடியும் அன்னமும் அன்னதோர்
நடை யுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூதஇ னப்படைநின் றிசை பாடவும் ஆடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதோர் புனலர்

வேதமோ டேழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்திரை
இரைந் நுரை கரை பொருது விம்மி நின்றயலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
எழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே.
1. 136. 1.

(நம் பெருமான்) விரும்பத் தக்க இளமையான பெண் யானையும் இளைய அன்னமும் போன்ற (அழகிய) நடையை உடைய மலைமகளை (பார்வதி தேவியை) தமக்குத் துணைவியாகக் கொண்டு. மகிழ்ந்திருப்பர்; பூத கணங்களாகிய படைகள் (சூழ) நின்று கீதம்பாட (தாம்) ஆடவும் ஆடுவர்; அவர், விரிந்து நீண்ட சடை முடியிலே ஒரு (கங்கை) நீரையும் உடையவர்; வேதத்தை ஸப்த ஸ்வரங்களையுடைய கீதத்தோடு பாடுவர்; (இத்தகைய அப்பெருமானது) ஊர், ஆழ்ந்த கடலின் வெள்ளிய அலைகள் இரைத்து நுரைத்துக் கொண்டு கரையைத் தாக்கி மேலோங்கி விழ, பக்கத்திலே, மகரந்தம் சிந்திக்கொண்டு விளங்கும் புன்னைப் பூக்களில் (நுட்பமான) சிறகுகளையுடைய வண்டுகள் ரீங்காரம் பண்ணும் அழகிய சோலையில் குயில்கள் மிகுதியாக வாழும் தருமபுரம் ஆகும்.

## 36. 'அடிசேர்வது ஞானமே'

வீடு ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னாவதும் எந்தைவ லஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே. 2 2. 11.

முத்தியையும் (அதற்கு ஏதுவான) ஞானத்தையும் (அடைய) விரும்புவீராகில், (அதற்கு) விரதங்களாலே உடல் மெலிவதனால் ஞானம் எப்படி உண்டாகும்? எம்பிரானுடைய திருவலஞ் சுழித்தலத்தை நாடி, ஞான சம்பந்தனது (அவர் சொன்ன) செந்தமிழ்ப் பாசுரங்களைப் பக்தியோடு பாடும் ஞானம் வல்ல தொண்டருடைய அடிகளை அடைவதே (சிறந்த) ஞானமாகும்.

*நோன்புகளால் உடம்பை வாட்டி வருத்துவதினும் உண்மையான தொண்டரிடத்துச் செய்யும் பக்தியே முத்திதர எளிய நெறியாகும்.*

### 37. *'அங்கம் ஆறும் சொன்னன்'*

எங்கும் ஆகிநின் ருனும் இயல்பறி யப்படா
மங்கை பாகங்கோண் டானுமதி சூடு மைந்தனும்
பங்க மில்பதி னேட்டோடு நான்குக்கு ணர்வுமாய்
அங்கம் ஆறும் சோன் ளுனும்ஐ யாறுடை ஐயனே. 2 6. 6.

*எல்லா இடங்களிலும் தானேயாய் நிறைந்து நிற்பவனும், தனது இயல்பு இன்னதென்று ஒருவராலும் அறியப்படாமல் பெண்ணை (பார்வதியை) தன் உடம்பின் ஒரு பாதியாய்க் கொண்டவனும் (திருவடியிற் சரண் புகுந்த) சந்திரனைத் திருமுடியிலே சூடும் வலியவனும், குற்றமில்லாத பதினெண் புராணங்களுக்கும், நான்கு வேதங்களுக்கும் பொருளாகி, வேத அங்கங்கள் ஆறையும்தானே கூறி அருளியவனும் திருவையாற்றுப் பெருமானே.*

### 38. *'உறைவானை அல்லது உள்காது என் உள்ளமே'*

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவேண்
பிறையானைப் பேண்ணோ டாணுகிய பேம்மானை
இறையானை ஏர்கோள்கச் சித்திரு ஏகம்பத்(து)
உறைவானை அல்லது(உ)ள் காதேன துள்ளமே. 2. 12. 1.

*(உண்மைத் தொண்டருக்குத் தன்னை) மறையாதவனும், குற்ற மற்ற (தீப் போன்ற) செந்நிறமுடைய சடையினிடத்தே விளங்கும் வெண்மையான பிறைச் சந்திரனை உடையவனும், (ஒரு பாதி) பெண்ணும், (ஒரு பாதி) ஆணும் ஆகிய பெருமானும், யாவர்க்கும் தலைமையானவனும் அழகைக் கொண்ட கச்சித் திருவேகம்பத் தலத்தில் எழுந்தருளியவனுமான எம்பிரானையன்றி (வேறெவரையும்) எண்ணாது என் மனம்.*

*மறையானை - வேதத்தில் உள்ளவனை; வேதம் அருளியவனை என்றுமாம்.*

### 39. ‘கழல் வாழ்க எனு எழுவாள்’

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனு
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர்ஆக் கினையே. 2. 18. 7.

*மழுப்படையை உடையவனே, திருமருகற் பெருமானே, (இவள்) (உன்னிடத்து அன்பு செய்தலினின்றும்) தவறுதவள்; எம்பெருமான் திருவடிகள் வாழ்க என்று சொல்லிக்கொண்டே (கண் விழித்து) எழுவாள்; (உன்னை) இரவும் பகலும் (மறவாது) தியானிக்கின்றவள்; (இத்தகைய) இவளைத் துயர் உறச் செய்தாயே! இதுதகுமோ?*

*தாய் தலைவியின் நிலைமையைத் தலைவனுக்குக் கூறி இரங்குவதாக அமைந்துள்ளது.*

### 40. ‘வல்வினைகள் தீர்த்தருளும் மைந்தன்’

நல்குரவும் இன்பமு(ம்) நலங்களவை யாகி
வல்வினைகள் தீர்த்தருளு(ம்) மைந்தனிட மென்பர்
மல்குமடி யார்கள்படி யாரஇசை பாடிச்
செல்வமறை யோர்உறை திருப்புகலி யாமே. 2. 29. 7.

*வறுமையும் இன்பமும் பிறநன்மைகளும் ஆகி(வரும்) வலிமையுள்ள வினைத் தொடர்புகளை அறுத்து அருள் செய்யத்தக்க வல்லாளனது (பெருமானது) இருப்பிடம் (பத்தி) நிறைந்த அடியார்களும் (அறிவுச்) செல்வத்தையுடைய வேதியரும் (எம்பெருமானுடைய) கல்யாண குணங்களைத் தகுதியோடு இசையால் பாடிக்கொண்டு வசிக்கின்ற திருப்புகலி (சீகாழி) ஆகும் என்று (பெரியோர்) கூறுவர்.*

*இன்பம் - துன்பம், நன்மை - தீமை எனவரும் தொந்தங்களும் எல்லாம் வினையால் வருவனவாதலால், அவ்வினைத்தொடர்பு வேண்டத்தகுந்ததன்று; அத்தொடர் பறுப்பவர் எம்பெருமானே; ஆதலால் அவரைப் பத்தியோடு அடைதல் வேண்டும்.*

### 41. 'சித்தம் ஒன்ற வல்லார்க்கு அருளும் சிவன்'

நித்தலும் நியமஞ் செய்துநீர் மலர்தூவிச்
சித்தமொன்ற வல்லார்க்(கு) அருளும் சிவன்கோயில்
மத்தயா னையின்கோ டும்வண் பீலியும்வாரித்
தத்துநீர்ப் பொன்னி சாகரமேவு சாய்க்காடே. 2. 38. 1.

*தினந்தோறும் விதிப்படி நித்திய கடன்களை முடித்தும், அபிடேகம்செய்தும், மலரால் அருச்சித்தும், மனம் ஒன்றித் தியானம் செய்யவல்ல தொண்டருக்குத் திருவருள் செய்யும் சிவபெருமானது திருக்கோயில், மத யானையின் கொம்புகளையும் அழகிய மயிற்பீலிகளையும் வாரிக்கொண்டு, (மேடு பள்ளங்களிலே) தாவியோடும் நீர்ப்பெருக்குடைய காவிரியாறு (ஓடிக்) கீழ்க்கடலை அடையுமிடத்து உள்ளதான திருச்சாய்க் காடாகும்.*

### 42. 'இங்கே என்று அருள் புரியும் எம்பெருமான்'

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்அடியார்க்(கு)
இங்கேயென் றருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயு மலர்ச்சோலைக் குளிர்பிரமா புரத்துறையும்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே.
2. 40. 6

*எம்பெருமான், தன் அடியார் எவ்வுலகத்திலேனும் எப் பிறப்பாகவேனும் பிறந்தாலும், அவர்களுக்கு இங்கே (நான் உள்ளேன்) என்று கூறி அருள்புரிவான். இடபத்தை வாகனமாகக் கொண்டு, தேன் பொருந்திய பூக்களையுடைய குளிர்ந்த சோலைகள் சூழ்ந்த பிரமபுரத்தில் அமர்ந்துள்ள (திருநீற்றினாலே) சங்குபோல் வெள்ளொளி வீசும் திருமேனியை உடைய சங்கரனாகிய பெருமானது திருவருளின் திறம் இருந்தவாறு என்னே!*

### 43. 'பெறலாமே நல்வினையே'

நீநாளும் நன்நெஞ்சே நினைகண்டாய் யார்அறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம்பெருமாற்கே

பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 2. 41. 3.

*நல்ல மனமே! நீ தினமும் (எம்பெருமானைத் தவறாது) தியானிப்பாயாக. (அவரவர்) உலகத்தில் வாழும் நாட்களையும் சாகும் நாட்களையும் யார் அறிவர்? திருச்சாய்க்காட்டு எம்பெருமான் பொருட்டுத் தலை தினமும் பூக்களைத் தாங்கிச் செல்லவும், காதுகள் அவனுடைய புகழைக் கேட்கவும், நாக்கு நாளும் (அவனுடைய) திருநாமங்களைச் சொல்லித் துதிக்கவும் செய்தால் (எப்போதும் தீவினையின்றி) நல்வினையே பெறலாம்.*

### 44. ‘பரஞ்சோதி பயிலும் இடம்’

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலும்இடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 2, 43. 5

*(பெருமானுடைய புகழ் நிரம்பிய) பண்களை மிகவும் பாடும் அடியவர்கள் பரம்பரையாகத் தொண்டராகித் திருவடிகளை (இடைவிடாது நினைத்து) வணங்கும்வண்ணம் நிலைபெற்ற பேரொளியாகிய பெருமான் (தன் சங்கற்பத்தாலே) தங்கும் இடம், (தனது) சிவஞான மேலீட்டினாலே, வெண்மையான மணலே சிவலிங்கமாகக் கொண்டு வேத மந்திரங்களால் பூசித்து வழிபட்டவனான சடாயுவுக்குரிய திருப்புள்ளிருக்கு வேளூர் ஆகும்.*

*இத் தலம், சடாயுவும் வேதமும் பூசிக்கப்பெற்றது என்பர். புள் - சடாயு. இருக்கு - வேதம்.*

### 45. ‘போதியோ பூம்பாவாய்’

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்(கு)
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய். 2. 47. 1.

மணமுள்ள புன்னை மரங்கள் நிறைந்த அழகிய கடற்கரையை யுடைய அழகிய திருமயிலாப்பூரில் கட்டப்பட்டுள்ள கபாலீச்சரம் என்னும் ஆலயத்தில் அமர்ந்தருளிய பெருமானிடத்தே (மனம்) பொருந்திய தன்மையை உடைய கூட்டமான பல சிவனடியார்களுக்கு (அன்பர்கள் பலர்) திருவமுது சமைத்து விருந்து இடுதலைக் காணுமல் போவையோ, பூம்பாவாய் !

திருமயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேசர் என்னும் வைசியர் சம்பந்தப் பெருமானிடத்து அளவிலா அன்புடையவர். தமது மக்கட் செல்வமாகிய ஒரே மகளையும் பொருட் செல்வத்தையும் சம்பந்தப் பெருமானுக்கே அர்ப்பணம் செய்திருந்தார். பூம்பாவை யென்னும் பெயருடைய அப் பெண் பாம்பு தீண்டப் பெற்று உயிர் நீங்க, தந்தையார் அவளுடலைத் தகனம் செய்வித்து, அவ்வெலும்புகளை ஒரு குடத்தினுள் இட்டுச் சேமித்து வைத்திருந்தார். சம்பந்தப் பெருமான் திருமயிலாப்பூர் வந்த பொழுது, சிவநேசரின் செய்தி யறிந்து வியந்து, மட்குடத்தில் இட்டு வைத்திருந்த எலும்புகள் கூடி மீண்டும் பெண் உருவம் பெற்று எழும் வண்ணம் கபாலீச்சரப் பெருமான் திருவருளை வேண்டி, இத் திருப்பதிகத்தைப் பாடி அருளினுர்.

பூம்பாவையைப் பெயரிட்டு அழைத்து, கபாலீச்சுரத்துப் பெருமான் திருவிழாக்களையும், அவ் விழாக் காலங்களிலே சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் பெருஞ் சிறப்பையும் காணுமல் இவ் வுலகைவிட்டு நீ போகலாமோ? என வினவும் வகையில் அமைந்தது இப்பதிகம்.

### 46. 'கண் காட்டு நுதலானும்'

கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடி
யானே. 2. 48. 1

*கண்ணை வெளிக் காட்டும் நெற்றியை உடையவனும், நெருப்பை வெளிவிடும் (மழு ஏந்திய) திருக்கரத்தை உடையவனும், பெண்ணை (பார்வதியை) பாதியாகக் கொண்ட திருவடிவத்தை உடையவனும், பிறைச் சந்திரனை வெளியிலே தோற்றுவிக்கும் சடையை உடையவனும், பண்களுக்கு உரிய இசையாக (கீதமாக) உள்ளவனும், பயிர்களுக்குத் தோற்றம் தரும் மேகமாக உள்ளவனும், திருவெண்காட்டில் (இலிங்கமாக) அமர்ந்திருப்பவனும் இடபத்தைத் தோற்றுவிக்கும் (விடை யுருவம் எழுதப் பெற்ற) கொடியை உடைய எம்பெருமானே ஆவன்.*

## *47. 'தோயாவாம் தீவினையே'*

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே.
2. 48. 2.

*(திருவெண்காட்டைத் தெரிசித்து வழிபடுவோர்களை) பேய்கள் பிடிக்க மாட்டா; முன்னே ஒரு கால் பிடித்திருப்பினும் (தரிசித்த பின்) அது நீங்கிவிடும். பிள்ளை வரத்தோடு (மற்றும்) அவரவர்கள் மனத்தில் எண்ணிய வரங்களையும் பெறுவர்; (பசுமையான) மூங்கில் போலும் தோள்களை உடைய உமாதேவியை ஒரு பாதியாகக் கொண்ட பெருமானது திருவெண்காட்டிலே (உள்ள) 'முக்குளம்' என்னும் தீர்த்தத்தில் நீராடும் பேறு உடையவர்களைத் தீ வினைகள் தீண்டாதன ஆகும். (இவற்றில்) ஒரு சிறிதும் ஐயம் கொள்ள வேண்டுவதில்லை.*

## *48. 'மைந்தர் மணாளர்'*

சிந்தை யிடையார் தலையின் மிசையார் செஞ்சொல்லார்
வந்து மாலை வைகும் போழ்தென் மனத்துள்ளார்
மைந்தர் மணாளர் என்ன மகிழ்வார் ஊர்போலும்
பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூரே. 2. 60. 1.

(என்) எண்ணத்தில் உள்ளவர்; (என்) தலையின் மேல் உள்ளவர்; செம்மையான (இனிய அருள் நிரம்பிய) சொற்களை உடையவர்; அந்தி மாலை வேளை வருதலும் வந்து (எனது பிரிவாற்றாமையைப் போக்க) என் மனத்திலேயே வீற்றிருப்பவர்; எல்லா வல்லமையும் உடையவர்; என் நாயகர் என்று பலவாறாக (யான்) கூற, அதற்கு மகிழ்கின்றவராகிய பெருமானது ஊர், பசுமையும் குளிர்ச்சியும் பொருந்திய குருக்கத்தி மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருப்பாசூர் ஆகும்.

## 49. 'பிழையைப் பொறுப்பாய் பெரியோனே'

தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
ஆவா என்றங்(கு) அடியார் தங்கட்(கு) அருள் செய்வாய்
ஓவா உவரி கொள்ள உயர்ந்தாய் என்றேத்தி
மூவா முனிவர் வணங்குங் கோயில் முதுகுன்றே. 2. 64. 1.

தேவ தேவனே, (அறிவிலாச்) சிறியோர்கள் செய்யும பிழைகளைப் பொறுப்பவனே, (உலகுக் கெல்லாம்) பெரியவனே, அடியவர்களுக்கு எளிதில் இரங்கி அருள் செய்பவனே, ஒழியாத கடல் (பிரளயகாலத்து உலகத்தை) மூடிக்கொள்ள (அதில் அகப்படாது) உயர்ந்து நின்றவனே என்று, (தவ வலிமையால்) மூப்பு இல்லாத முனிவர்கள் துதித்து வணங்கத் தக்க கோவில் திருமுதுகுன்றம் ஆகும்.

ஓவா........உயர்ந்தாய்-பிரளயகாலத்து உலகங்களும் உயிர்களும் அழியும்போது, அழியாது நிற்பவனே.

## 50. 'மந்திர மாவது நீறு'

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.
2. 66. 1.

மந்திரங்களின் வடிவமானது திருநீறு; தேவர்களால் உடம்பில் அணியப் படுவது திரு நீறு; (மேனிக்கு) அழகாவது திருநீறு; (யாவராலும்) துதிக்கப்படுவது திருநீறு; (ஞான) உபாயமாக உள்ளது திருநீறு; (சைவ) சமயத்தில் உண்மைப் பொருளானது திருநீறு; (இஃது யாருடைய தெனில்) சிவந்த பவளம் போலும் (அழகிய) வாயை உடைய உமாதேவியை ஒரு பங்கில் உடைய திரு வாலவாய்ப் பெருமானுக்கு உரிய திருநீறாகும்.

## 51. 'வேதத்தில் உள்ளது நீறு'

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.
2. 66. 2.

வேதத்தில் கூறப்படுவது திரு நீறு; கொடிய துன்பங்களை யெல்லாம் தீர்ப்பது திரு நீறு; ஞானத்தைத் தருவது திரு நீறு; தாழ்வை நீக்குவது திரு நீறு; (யாவரும்) சிறப்பித்துச் சொல்லத் தக்கது திரு நீறு; உண்மையாக உள்ளது திருநீறு; (அது) குளிர்ந்த நீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திரு ஆலவாயில் அமர்ந்துள்ள பெருமானது திருநீறு ஆகும்.

## 52. 'முத்தி தருவது நீறு'

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.
2. 66. 3.

மோக்ஷத்தைத் தருவது திருநீறாகும்; (உலகை வெறுத்த) முனிவர்களும் தரிப்பது திருநீறாகும்; சத்தியமாயிருப்பது திருநீறாகும்; தகுதியுடைய ஞானிகளால் புகழப்படுவது திருநீறாகும்; (அணிபவருக்கு) பக்தியைத்

*தரவல்லது திருநீறாகும்; புகழ்வதற்கு இனியது (புகழ்ந்தால் மனத்தில் இன்பம் தருவது) திருநீறாகும்; (யோக, ஞான) சித்திகளைத் தர வல்லது திருநீறாகும்; அது திரு ஆலவாய்ப் பெருமானது திருநீறாகும்.*

*இத் திருநீற்றுப் பதிகம், கூன் பாண்டியனது வெப்பு நோயைத் தீர்த்தற் பொருட்டுப்பாடி யருளியது. இப்பதிகத்தை ஓதித் திருநீற்றை அவன் உடம்பிலே பூச, வெப்புநோய் உடனே நீங்கியது.*

### *53. 'அஞ்சல் நெஞ்சே'*

தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும்போவார்
கோந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
கொண்டு போவார்
எந்தநாள் வாழ்தற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே
அந்தண் ஆரூர் தொழுதுய்யலாம் மையல்கொண்டஞ்சல்
நெஞ்சே. 2. 79. 2.

*தகப்பனார் போய் விட்டார்; தாயாரும் போய் விட்டார்; தாமும் இனிப் போய் விடுவார்; (இது உலக இயற்கை.) (வாழ்நாள் முடிவிலே ஒவ்வொருவரையும்) கொந்திக் கொண்டு போவதன் பொருட்டுச் சூலத்தைத் தாங்கிக் கொண்டு யமனார் (காலம்) பார்த்துக் கொண்டிருக்கிறார்; (ஆதலால் உன்னையும்) கொண்டே போவார். அறிவில்லா மனமே! (நீ) எவ்வளவு காலமும் (இவ்வுலகில்) வாழ்வதற்கே நினைக்கிறாயே. (வீணே) மயக்கங் கொண்டு (இறப்பதற்கு) அஞ்சாதே. ஏ, மனமே! அழகிய குளிர்ச்சி பொருந்திய திருவாரூரை வழிபட்டு நற்கதி பெறலாம். (வருக)*

### *54. 'நல்ல நலல அடியார் அவர்க்கு மிகவே'*

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தேன்
உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார்
அவர்க்கு மிகவே. 2. 85. 1.

மூங்கில் போலும் தோள்களையுடைய பார்வதி தேவியின் தலைவனும், (உலகம் உய்யும் பொருட்டு) ஆலகால விடத்தை உண்டு தரித்துக் கொண்ட திருக்கழுத்தை உடையவனுமான பெருமான், மிகவும் இனிய வீணையை வாசித்துக் கொண்டும், குற்ற மற்ற சந்திரனையும் கங்கையையும் திரு முடி மேல் அழகாகக் கொண்டும் (இவ் வினிய திருக்கோலத்தோடு என் மனத்திலே குடிகொண்டுள்ள அக்காரணத்தால், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவை (இராகு கேதுக்களாகிய) இரண்டு பாம்புகளோடும் (நவக்கிரகங்களும்) குற்ற மற்ற நல்லவாகும். ஈசன் அடியவர்களுக்கு அவை மிகவும் நல்லவை, நல்லவை. (இது முக்காலும் உண்மை.)

ஈசனது அடியார்க்குக் கோள்களால் உண்டாகும் தீங்குகள் வாரா என்னும் துணிவுபற்றி 'நல்ல நல்ல' எனப் பல்முறை கூறினார். திருஞான சம்பந்தப் பெருமான் திருநாவுக்கரசருடனே திருமறைக்காட்டில் இருந்தபோது, பாண்டி நாட்டிலே சமண மதம் தலைதூக்கிச் சைவ சமயம் தாழ்ந்திருந்த நிலையைப் பாண்டிய அரசனுக்கு மந்திரியாகிய குலச்சிறையார் விடுத்த ஆட்கள்மூலம் அறிந்து, மதுரைக்கு எழுந்தருள எண்ணினார். அப்போது கூட இருந்த திருநாவுக்கரசர், 'சமணர்கள் மிகக்கொடியவர்கள்; அவர்கள் பல தீங்குகள் செய்யக்கூடும். மேலும் நமக்குக் கோள்களின் நிலையும் நன்றாயில்லை ; ஆதலால் இப்போது மதுரைக்கு எழுந்தருளுதல் தகாது' எனக் கூற, அதற்கு விடையாக இக்கோளறு திருப்பதிகத்தைப் பாடி அருளினார். கிரக நிலை முதலியவற்றால் நேரும் தீங்குகள் (கோள்) நீங்கத்தக்க (அறு) பதிகம்—கோளறு பதிகம். 'வீணா தக்ஷிணா மூர்த்தி' என்பது சிவ மூர்த்தி பேதங்களுள் ஒன்று. இம்மூர்த்தி கையில் வீணையை வைத்துக்கொண்டு வாசிப்பதாகக் கூறுவர். 'எம் இறை வீணை வாசிக்குமே.'

### 55. 'தனம் வரும் நன்மை ஆகும்'

தனம்வரு நன்மையாகும் தகுதிக்குழந்து
வருதிக் குழன்ற உடலின்
இனம்வளர் ஐவர்செய்யும் வினையங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
முனம்ஒரு காலமூன்று புரம்வெந்து மங்கச்
சரமுன் தெரிந்த அவுணர்
சினம்ஒரு கால்அழித்த சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே. 2. 86. 7.

முன்பு ஒரு காலத்தில் (அசுரர்களுடைய) திரிபுரங்கள் (தீயால்) வெந்து அழியும்படி (அதற்கேற்ற சிரிப்பாகிய) பாணத்தைத் தெரிந்து ஏவியவரும், அவ்வசுரர்களுடைய கோபத்தையெல்லாம் ஒரே முறையில் (அவர்களை அழிப்பதன் மூலம்) அழித்தவருமாகிய சிவபெருமான் எழுந்தருளிய செல்வம் மிக்க திருநாரையூரைக் கைகுவித்துத் தொழுவதனால், (முத்திச்) செல்வம் உண்டாகும். பெருமைக்காக வருந்திப் பல திக்குகளிலும் அலைகிற உடலிலே கூட்டமாக வளரும் ஐந்து பேர் (ஐம்பொறிகள்) செய்யும் விஷமங்களை அழித்து எண்ணம் ஒன்றுபடத் தக்க மனம் (ஏகாக்ர சித்தம்) மேலிடும். (அம்மன ஒருமைப் பாட்டினாலே பெருமானை நன்கு சிந்தித்து அவன் அருள் பெறலாம்; அதனால் முற்கூறிய நன்மைகள் எல்லாம் வரும்.)

### 56. 'வரமும் ஆயிரம் உடையார்'

பரவு வாரையும் உடையார் பழித்(து)இகழ்
வாரையும் உடையார்
விரவு வாரையும் உடையார் வெண் தலைப்
பலிகொள்வ துடையார்
அரவம் பூண்பதும் உடையார் ஆயிரம்
பேர்மிக உடையார்
வரமும் ஆயிரம் உடையார் வாழ்கொளி
புத்தூர் உளாரே. 2. 94. 5.

திருவாழ்கொளிப்புத்தூரில் உள்ள எம்பெருமானார் (தம்மைப்) புகழ்வாரையும் உடையவர்; அதற்கு (மாறு கப்) பழித்து இகழ்வாரையும் உடையவர். (தம் திருவடிகளிலே) மனம் கலந்த தொண்டரையும் உடையவர். வெண்மையான தலை ஓட்டிலே (பிரம்ம கபாலத்திலே) பிச்சை ஏற்கும் தொழில் உடையவர். பாம்பை (ஆபரணமாக) அணிவதும் உடையவர். மேலாக ஆயிரம் பேர்களை (ஸஹஸ்ர நாமம்) உடையவர். (அவர்) அடியார்க்கு அளித்தருளும் வரங்களும் ஆயிரக்கணக்காக உடையவர்.

இதனால், எம்பெருமானது எல்லாம் கடந்த இயல்பும் அவர் கருணைத் திறமும் இனிது கூறப்படுகின்றன.

## 57. 'நலங்கொள் காழி சேர்மினே'

நம்பொருள் நம்மக்கள்என்று நச்சிஇச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்துசால அல்லல்உய்ப்ப தன்முனம்
உம்பர்நாதன் உத்தமன் ஒளிமிகுந்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள்காழி சேர்மினே.

2. 97. 1.

மானிடரே, 'நம்முடைய பொருள், நம்முடைய மக்கள்' என்று விரும்பி ஆசைவைத்து நீர் (அவைகளைக் காப்பாற்றும் பொருட்டு) திக்குகளெல்லாம் போய்ப் பெருந் துன்பங்களை அனுபவிப்பதன் முன்னமே தேவர் தலைவனும், (யாவர்க்கும்) மேலானவனும், ஒளிமிக்க சிவந்த சடையை உடையவனு (மான) நம்பெருமான் அமர்ந்துள்ள எல்லா நலங்களும்கொண்ட சீகாழியாகிய நல்ல நகரத்தை அடையுங்கள்.

சீகாழியை அடைந்து அங்கே சிவபெருமானைச் சேவித்தால் பற்று அற்று வீடுபெறுவீர் என்பது கருத்து.

## 58. 'உள்ளம் ஒன்றி உள்குவார்'

கள்ளநெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட்(டு) அருத்தியோ(டு)
உள்ளம்ஒன்றி உள்குவார் உளத்துளான் உகந்தவூர்

துள்ளிவாளை பாய்வயற் சுரும்பு(உ)லாவு நெய்தல்வாய்
அள்ளல்நாரை ஆரல்வாரும் அந்தணூர் என்பதே.
2. 101. 6.

*கள்ளம் உடைய உள்ளத்திலே உண்டாகும் வஞ்சனையான எண்ணங்களை விட்டு, பக்தியோடு மனம் ஒன்று பட்டுத் தியானிப்பவர் மனத்திலே என்றும் வீற்றிருக்கும் பெருமான் திருவுள மிசைந்த ஊர், வாளை மீன்கள் துள்ளிப்பாயும் வயல்களிலே வண்டுகள் மொய்க்கும் அல்லிப் பூக்கள் மலரப் பெற்றதும், அச் சேற்று நீரில் நாரைகள் ஆரல் மீனை வாரி உண்ணுதற்குரிய (நீர் வளம் உடையது மான) நல்ல குளிர்ச்சி பொருந்திய திருவாரூர் என்பது.*

### *59, 'வல்வினை அடையாவே'*

குணங்கள் கூறியுங் குற்றங்கள் பரவியுங்
குரைகழல் அடிசேரக்
கணங்கள் பாடவுங் கண்டவர் பரவவுங்
கருத்தறிந் தவர்மேய
மணங்கொள் பூம்பொழில் அரிசிலின்
வடகரை வருபுனல் மாகாளம்
வணங்கும் உள்ளமோடு அணையவல் லார்களை
வல்வினை அடையாவே. 2. 103. 3.

*பெருமானது ஒலிக்கும் வீரக் கழலை அணிந்த திருவடிகளை அடையும் பொருட்டு (அவருடைய) கலியாண குணங்களைச் சொல்லியும் தம்முடைய குற்றங்களை விரித்துக் கூறியும் (தேவ மனித) கணங்கள் பாடவும், (உண்மை) கண்டவர்கள் - மெய்ஞ்ஞானிகள் - துதிக்கவும் (அவரவர்) கருத்தை அறிந்து (அதற்குத் தக) அருள்பவராகிய எம்பெருமான் அமர்ந்த, மணத்தைக் கொண்ட பூஞ்சோலைகளை உடையதும் அரிசிலாற்றின் வட கரையில் உள்ளதும் நீர்வளம் மிக்கதும் ஆன திருமாகாளத்தை வழிபடும் மனத்தோடு (சென்று) அடைபவர்களை வலிய தீவினைகள் சேர மாட்டா.*

### 60. 'கேடிலர் பழியிலர் புகழாமே'

விண்க ளார்தொழும் விளக்கினைத்
துளக்கிலா விகிர்தனை விழவாரும்
மண்க ளார்துதித் தன்பராய் இன்புறும்
வள்ளலை மருவித்தம்
கண்க ளார்தரக் கண்டுநங் கடிக்குளத்
துறைதரு கற்பகத்தைப்
பண்க ளார்தரப் பாடுவார் கேடிலர்
பழியிலர் புகழாமே. 2. 104. 2.

மேல் உலகங்களில் உள்ளவர் வணங்கும் சோதியானவரும், (எக்காலத்தும்) அசைவில்லாத கடவுளும், அன்பு நிறைந்த மண்ணுலகத்தவர் பக்தராகித் துதித்து இன்பமடைவதற்குக் காரணமான கருணை வள்ளலும், திருவிழா நிறைந்த திருக்கடிக்குளத்தில் வீற்றிருக்கும் தமது கற்பகத் தருவுமாகிய பெருமானை அடைந்து தம் கண்ணாரத் தரிசித்துப் பண்களால் (வாயாரப்) பாடுமவர்கள் (எப்போதும்) தீங்குகள் இல்லாதவராவர்; பழி இல்லாதவராவர்; அவர்களுக்குப் புகழ் மிகும்.

### 61. 'என்ன புண்ணியம் செய்தனை'

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே. 2. 106. 1.

மனமே! சிறந்த மணியாகிய முத்துக்கள் பொருந்திய காவேரி ஆறு சூழப் பெற்ற திருவலஞ்சுழிப் பெருமானைப் பக்தியோடு பல முறை வாயாரப் புகழ்ந்தும் பாடியும் வழிபடும் பேறு இப்போது (நீ) பெற்றதனால்,

பெரிய கடல் சூழ்ந்த இவ் வுலகத்தில் முன்னே நீ செய்துள்ள நல்வினைப் பயன்களுக்கு இடையே (இப்பேறு பெறுதற்கு ஏதுவாய்) என்ன புண்ணியம் செய்தாய்? (அது பெரிது!)

### 62. 'அருளாய் சுருங்க எம் தொல்வினையே'

ஆடினாய்நறு நெய்யொடுபால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாய்இடமா நறுங்கொன்றைநயந்தவனே
பாடினாய்மறை யோடுபல்கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்கஎம் தொல்வினையே.
3. 1. 1.

நல்ல மணமுள்ள (பசுவின்) நெய்யோடு பாலையும் தயிரையும் (சிறந்த) அபிஷேகப் பொருள்களாகக் கொண்டவனே! தில்லைவாழ் அந்தணர் (எப்போதும்) நீங்காத (தில்லைச்) சிற்றம்பலத்தை உனது இருப்பிடமாக விரும்பினவனே! நறுமணம் கமழும் கொன்றைப்பூவை விரும்பியவனே! வேதத்தோடு பலவகையான கீதத்தையும் பாடுகின்றவனே! பலவாகத் தொங்கும் சடையின்மீது குளிர்ச்சி வீசும் கிரணங்களை உடைய வெண்மையான (பிறைச்) சந்திரனைச் சூடியருளியவனே! எம்முடைய பழவினைகள் கெடும் வண்ணம் அருள் செய்வாயாக.

### 63. 'இதுவோ எமை ஆளுமாறு'

இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோஉன தின்னருள் ஆவடுதுறை யரனே. 3. 4. 1.

(எத்தகைய) வறுமை வந்தபோதும், தளர்ச்சியுற்ற போதும், எனது மிக்க (பழவினையால் வரும்) துன்பங்

வன் ஆயிரம் பொன் கொண்டதொரு கிழியை (முடிச்சை)ப் பிள்ளையார்க்கு உதவியருளினன் என்பர்.

65. 'அனல்எரி யாடும் எம் அடிகள்'

நனவிலுங் கனவிலும் நாளுந் தன்னொளி
நினைவிலும் எனக்குவந் தெய்தும் நின்மலன்
கனைகடல் வையகந் தொழுக ருக்குடி
அனல்எரி ஆடும்எம் அடிகள் காண்மினே. 3. 21. 1

நனவிலும் கனவிலும் சிந்தையிலும் எப்போதும் சிவபெருமானது (பேரறிவு என்னும்) ஒளி எனக்குவந்து சேர்கின்றது; (இவ்வாறு அருள் செய்யும் மும்) மலங்களற்றவன், பேரொலி செய்யும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் உள்ளாரெல்லாம் (வந்து) வணங்கும் திருக்கருக்குடியிலே அனல்வீசும் மழுவோடு (நடனம்) ஆடியருளும் எமது பெருமானாவான்; இதை அறிவீராக (தொண்டர்களே!)

66. 'நினைமின்......அஞ்செழுத்துமே'

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சஉ தைத்தன அஞ்செ ழுத்துமே. 3. 22. 1.

உறங்கும்போதும் உறக்கம் இல்லாதபோதும் மனமுருகித் தினந்தோறும் (ஐந்தெழுத்துக்களை) நினையுங்கள்; (மனத்திலே) கபடமற்று (உண்மையுடன்) மார்க்கண்டேயன்) திருவடிகளைத் துதித்ததனால் (அவனைக் கொல்ல) வந்த யமனை அஞ்சி ஓடும்படி அவனை உதைத்தவை (பெருமானுடைய) திரு ஐந்தெழுத்துக்களே.

அஞ்செழுத்தை ஓதிச் சிவபெருமானை வழிபட்டதனால் மார்க்கண்டேயனுக்காகச் சிவபெருமான் கூற்றை உதைத்தார்; ஆக, சிவபெருமானது தொழில் ஐந்தெழுத்தின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது; ஐந்தெழுத்தின் பெருமையையும் கூறியவாறு.

கள் தொடரும்போதும் உன் திருவடிகளை மறவாது தொழுபவனானேன், (திருப்பாற்) கடலில் அமுதத்தோடு கலந்து (முதலில்) வந்த நஞ்சைத் திருக்கழுத்தில் அடக்கிக்கொண்ட வேத முதல்வனே ! நீ எம்மை ஆட்கொள்ளும் வகை இதுதானோ ? எம்மை அண்டிக் கேட்பவர்க்கு (தந்தையார்க்கு)க் கொடுக்கத்தக்க பொருள் ஒன்றும் இல்லையே ; (இந்நிலையில் எம்மை வைத்திருக்கும்) அது தானோ உனது இனிய திருவருள் (திருவுள்ளக் குறிப்பு)? திருவாவடு துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே!

### 64. 'அதுவோ உனது இன்னருள்'

நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே

இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோஉன தின்னருள் ஆவடுதுறை யரனே. 3. 4. 3.

விழிப்பிலும் கனவிலும் சிவபெருமானே ! (வெளிப்படையாகவும்) உன்னை வழிபடுதலை நான் மறப்பதில்லை ; எம்பெருமானே ! கங்கை நீரையும் மலர்ந்த மணம்மிக்க கொன்றைப் பூவையும் (சடையிலே) அணிந்தருளியவனும் கனன்று எரியும் மழுவை ஏந்திய திருக்கரத்தையுடையவனும் ஆனவனே ! இதுதானோ நீ எம்மை ஆட்கொள்ளும் வகை ? எம்மை அடுத்தவர்க்குக் கொடுக்கத்தக்க பொருள் ஒன்றும் எமக்கு இல்லையே, அவ்வாறு எம்மை வைத்திருப்பதோ உனது இனிய திருவருள் (குறிப்பு)? திருவாவடுதுறையிலுள்ள சிவபெருமானே !

திருஞான சம்பந்தப் பெருமான், தம் தந்தையார் வேள்வி செய்வதற்குப் பொருள்வேண்டும் என்று தம்மைக் கேட்டபோது, அப்பொருளை அளிக்குமாறு, இறைவனைப் 'பொருள் வினவிய' பாசுரங்கள் இதுவும் இதற்கு முந்தியதும். இப்பதிகம் பாடி முடிந்ததும் இறை

67. 'இடரான கெடுப்பன அஞ்செழுத்துமே'

ஊனில்உ யிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்(து)
ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3. 22. 3.

உடம்பில் உள்ள சுவாசத்தை ஒடுக்கி விளங்கும் நல்ல ஒளி பொருந்திய (சிவ) ஞான தீபத்தை (இதய ஆகாசத்திலே) ஏற்றி, (அந்த) நல்ல நெறியாகிய வேறொரு (சுழிமுனை) வழியைத் திறந்து பெருமானைத் துதிப்பவர்களுக்கு வரும் துன்பங்களைப் போக்குவன திரு ஐந்தெழுத்துக்களே.

இதில், பிராணயாமம், சுழிமுனை திறத்தல், தாரணை முதலிய சிவயோக முறைகள் கூறப்பட்டுள்ளன.

68. 'சிவமுத்தி காட்டுவ......அஞ்செழுத்துமே'

நல்லவர் தீயரே னாது நச்சினர்
சொல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்(து)
அல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே. 3. 22. 4.

இவர் நல்லவர் இவர் கெட்டவர் என்று கருதாமல் (தன்னை) விரும்பியவர் (பக்தி செய்பவர்) யாவராயினும் அவர்களுடைய துன்பங்கள் நீங்கும் வண்ணம் (அவர்களுக்கு) சிவ ஸாயுஜ்யம் என்னும் முக்தி மார்க்கத்தைக் காட்டுவனவும், யம தூதர்கள் (வருத்தப் படுத்தும் பொருட்டு நமது உயிரைக்) கொண்டுபோகும்போது அத் துன்பத்தைப் போக்குவனவும் (இறைவனுடைய) ஐந்தெழுத்துக்களே.

நாமம் சொல்லுவதற்கு ஜாதி முதலிய தகுதி வேண்டுவதில்லை; மெய்யன்பு ஒன்றே வேண்டுவது.

69. 'நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை'

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்

கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.
3. 24. 1.

*இப்பூவுலகில் (இம்மையிலே) நன்மையாக வாழ லாம்; (தினமும்) நினைத்தால் (மறுமையில்) நல்லகதி அடைவதற்கும் யாதொரு குறையும் இல்லை; (எதை நினைத்தால் என்றால்) கண்ணிலே நல்லதே படத்தக்க திருக்கழுமலமெனும் வளமுள்ள நகரத்திலே பெண்களிற் சிறந்த உமாதேவியோடும் பெருந்தன்மை மிக்கஎம்பெரு மான் வீற்றிருப்பதை (எத்தகை சிறப்புடையது இது!)*

### *70. 'புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை'*

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.
3. 25. 1.

*(பிறவிப் பிணிக்கு) மருந்து வேண்டில் இவையே மருந்தாகும்; (வேத) மந்திரங்களும் இவையே; (நல்லோ ரால் விரும்பிக் (வரமாகக்) கேட்கப்படும் புண்ணியப் பயன்களும் இவையே; (எவையென்னில்) திருந்து தேவன் குடியில் எழுந்தருளிய தேவதேவரான, அரிய தவம் கை வரப் பெற்றவர்கள் வணங்கும் (நம் சுவாமியினுடைய திருவேடங்கள்.*

*எம்பெருமானுடைய திருக்கோலங்கள், எண்ணு வார் எண்ணும்படியெல்லாம் இருந்து, (அவ்) எண்ணு வார்க்கு எப்பயனையும் அளிக்க வல்லன என்பதாம்.*

### *71. 'அவர்க்கலாற் களைகிலார் குற்றமே'*

நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை யவர்க்கலாற் களைகிலார் குற்றமே. 3. 26. 4.

அமைதியுடைய மனத்தாலும், நீரினாலும், பூவினாலும்(நல்ல) ஓசையையுடைய மத்தளத்தாலும் பலியினாலும் (நைவேத்யத்தினாலும்) இனிய பாட்டினாலும்,(விடம் தங்கினமையால்) கருநிறம் பொருந்திய திருக்கண்டத்தை யுடைய பெருமான் (தனது இருப்பிடமாகக்) கருதிய திருக்கானப் பேரை வழிபடும் (குறை வேண்டிக் கொள்ளும்) தொழில் உடையவர்க்கன்றிப் பிறர்க்குக் குற்றங்களை நீக்கார் (அவரை வழிபடுவார்க்கன்றிப் பிறர்க்குக் குற்றங்கள் நீங்கா).

72. 'எந்தையென்று நின்று ஏத்திடே'

ஊடினாலினி ஆவதேன்உயர் நெஞ்சமேயுறு வல்வினைக்(கு)
ஓடிநீயுழல் கின்றதேன்அழல் அன்றுதன்கையில் ஏந்தினான்
பீடுநேர்ந்தது கொள்கையான்பிர மாபுரத்துறை வேதியன்
ஏடுநேர்மதி யோ(டு)அராவணி எந்தையென்றுநின் றேத்திடே. 3. 37. 6.

(நீ) பிணங்கினால் இனி உன்னால் என்ன செய்யக் கூடும்? உயர்ந்த மனமே! மிக்க பாவ காரியங்கள் செய்வதற்காக நீ ஓடித் திரிவதேன்? முன்னொரு கால் (தனக்குத் தீமையாக வந்த) மழுவைத் தன்கையிலே தாங்கிக் கொண்டவன்; பெருமை பொருந்திய (கல்யாண) குணங்களை யுடையவன்; திருப்பிரமபுரத்தில் அமர்ந்த வேத மூர்த்தி; (அகத்திப்) பூவின் இதழ்போன்ற (வடிவுடைய) பிறைச் சந்திரனோடு பாம்புகளையும் அணிந்துள்ள என்னப்பன்; என்று (அவன் சந்நிதியில்) நின்று (நிலையாகத்) துதித்திடுவாயாக.

73. 'எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே'

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலன்ஈங்கிவன் என்றுநீபரிவெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய் இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்(கு)எளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே.
3. 39. 1.

மானின் கண்கட்கு ஒப்பான கண்களையுடைய பெண்ணே, பாண்டியராசனுக்குரிய பெருமை மிக்க தேவியே, (என்வார்த்தையைக்) கேள்; பால் மணம் மாறுத இனிய வாயையுடைய ஒருசிறுவன் இவன் என்று கருதி (என்பொருட்டு) நீ வருத்தம் அடையாதே; ஆனை மலை முதலிய பல இடங்களிலும் உள்ள துன்பம் மிக்க ஈனர்களான சமணர்கட்கு நான் எளியவன் அல்லேன் (தோற்க மாட்டேன்), திருவாலவாய்ப் பெருமான் (எனக்குத் துணையாக) நிற்கும்போது; (அவர்களால் எனக்கு யாதொரு தீங்கும் செய்ய இயலாது என்றவாறு.)

சம்பந்தப் பெருமானது இளமைப் பருவத்தைக் கண்டு, சமணர்களால் அவருக்குத் தீமையேதேனும் நேருமோ என்று அச்சமுற்ற மங்கையர்க் கரசியாரின் குறிப்பை யறிந்து அவரைத் தேற்றும் பொருட்டுப் பாடப்பட்டது இத்திருவாலவாய்ப் பதிகம்.

### 74. 'கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன்'

கல்லா நேஞ்சின், நில்லான் ஈசன்
சொல்லாதர்ரோ, டல்லோ(ம்) நாமே. 3. 40. 3.

(தனது புகழைக்) கல்லாத மனங்களிலே தங்கியிருக்கமாட்டான் ஈசன்; (ஆதலால், அவன் பெருமைகளை வாயாரச்) சொல்லாதவர்களோடு நாம் உறவுடையோமல்லோம்.

சிவபக்தி இல்லாதவரோடு சேர்தலும் தகாது என்றவாறு.

### 75. 'விதியுமாம்......நற்பாதமே'

விதியு மாம்விளை வாம்ஒளி யார்ந்ததோர்
கதியு மாம்கசி வாம்வசி யாற்றமா
மதியு மாம்வலி யா(ம்)மழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதன்நற் பாதமே. 3. 48. 2.

அவரவர்க்கு விதியுமாகும்; விதியின் பயனும் ஆகும், சோதிமிக்க மோக்ஷகதியும் ஆகும்; (அடியா

ருடைய) மனக்கசிவும் (பக்தியும்) ஆகும்; (உலகத்தை) வசியம் செய்ய (கவரச் செய்ய) சிறந்த புத்தியும் ஆகும், வலிமையுமாகும்; (எவையென்னில்) திருமழபாடியுள் எழுந்தருளிய கங்காநதி தங்கப்பெற்ற சடையையுடைய தலைவன் (எம்பெருமானுடைய) நல்ல (திவ்விய) பாதங்களே.

விதி - கட்டளை, நெறி, பாக்கியம், என்பவற்றையும் குறிக்கும்.

எம்பெருமானே எல்லாமும் என்றவாறு.

## 76. – 'நாம நமச்சிவாயவே'

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்(கு) உய்ப்பது
வேத நான்கினு(ம்) மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே. 3. 49. 1.

பக்தி மிகுந்தவராய் மனம் உருகிக் கண்ணீர் (ஆனந்தக் கண்ணீர்) பெருகச் சொல்லுமவர்களை நல்ல முக்தி நெறியிலே செலுத்துவதும் நான்கு வேதங்களிலும் சொல்லப்படும் உண்மைப் பொருளானதும் எம்பெருமானது திருநாமமாகிய நமச்சிவாய என்பதே.

## 77. 'எல்லாத் தீங்கையும் நீங்குவர்'

கோல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு(ம்) நீங்குவர் என்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. 3. 49. 5.

(உயிர்களைக்) கொலைசெய்யும் பாவிகளாயினும் பல நற்குணங்கள் (நற்செயல்கள்) இல்லாதவராயினும் (பஞ்சாக்ஷரத்தைச்) சொல்வாராயின், (அவர்கள் தமக்கு வரும்) எல்லாத் தீமைகளினின்றும் விடுபடுவர் என்று பெரியோர் கூறுவர்; (அத்தகைய நன்மைவாய்ந்த திருநாமம் 'நமச்சிவாய' என்பதே.

78. 'சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்

மந்த ரம்அன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு(ம்) மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. 3. 49. 6.

*மந்தரமலை போன்ற (அவ்வளவு) பாவங்கள் பொருந்திய கருமத் தொடர்புடையவர்களும் தாம் சொல்லுவார்களாயின் (அவர்களுடைய) பாவங்கள் சிதறிப்போகும்; (சிவாநந்தச்) செல்வமும் பெருகும்; (எதைச் சொல்லுவார்களாயின் என்றால்) நந்தி எனப்படும் எம்பெருமானுடைய திருநாமமாகிய நமச்சிவாயஎன்பதை.*

3-49ம் *பதிகம் நமச்சிவாயத்திருப்பதிகம் எனப்படும்.*

79. "குற்றம் நீ குணங்கள் நீ"

குற்ற(ம்)நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்ற(ம்)நீ பிரானு(ம்)நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்து(ம்)நீ அருத்தமின்ப மென்றிவை
முற்று(ம்)நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே.
3. 52. 3.

*(தொண்டர்களிடத்தே உள்ள) குற்றங்களும் நீயே; குணங்களும் நீயே; கூடலில் (மதுரையில்) உள்ள திருவாலவாய் என்னும் ஆலயத்தில் எழுந்தருளிய பெருமானே! பந்துவாக உள்ளவனும் நீயே; தலைவனாக உள்ளவனும் நீயே; (இடைவிடாது) தொடர்ந்து விளங்கும் சோதி வடிவானவனும் நீயே; (நாங்கள்) கற்ற நூல்களின் உட்பொருளும் நீயே; செல்வம் இன்பம் என்று சொல்லப்படும் இவையெல்லாமும் நீயே; (இத்தகைய உன்னை) உன்முன் என்னவென்று புகழ்ந்து துதி (உபசார வார்த்தை) கூறுவது!*

*(ஒப்பிடுக) "நீயே தாய், நீயே தந்தை, நீயே பந்து, நீயே தோழன், நீயே வித்தை, நீயே செல்வம், நீயே எல்லாம் எனது தேவதேவனே" (பாண்டவ கீதை).*

## 80. 'ஆதியந்த மாயினாய்'

ஆதியந்தம் ஆயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்தம் ஆயினாய் சோதியுள்ளோர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையாற் கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்க லாகுமே.

3. 52. 7.

*(நீ) முதலும் முடிவும் ஆனாய்; திரு ஆலவாயில் அமர்ந்த பெருமானே! (உலகில்) ஒளிக்குள் ஓர் ஒளியாய், அவ்வொளிக்கு அழகு தருவதானாய் (எல்லையானாய்); (அன்போடு) கீதம் பாடவல்லராய், சத்தியத்தில் நிலைநிற்பதினால் உண்டாகும் வலிமையுடையவர்க்கன்றி, நூல்களைக் கற்றுக் (கண்மூடித்தனமாகச்) சொல்லும் சொல்லினால் உணர்ந்து உரைத்தல் கூடுமோ?*

*எம்பெருமானுடைய பெருமைகளை அறிந்து அவனைத் துதிப்பதற்குச் சாதாரணநூற் கல்விபயன்படாது. உண்மையான பக்தியோடு கூடிய உருக்கமான இசையே அதற்கேற்றது.*

## 81. 'வாழ்க அந்தணர்'

வாழ்க அந்தனர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதேல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே. 3. 54. 1.

*அந்தணரும் தேவரும் பசுக்களும் வாழட்டும்; குளிர்ந்த மழை (பொய்யாது) பெய்யட்டும்; அரசனும் (செங்கோலில்) ஓங்கட்டும்; (உலகில்) தீயன எல்லாம் ஆழ்ந்து ஒழியட்டும்; சிவபெருமான் திருநாமமே உலக முழுவதும் பரவுக; உலகமுழுவதும் துன்பம் நீங்கட்டும்.*

*அந்தணர் வாழ்ந்தால் வானவர்களை வேள்விகளால் போற்றுவர், அதனால் வானவர் வாழ்வார்; வேள்வி இயற்றுதற்கு இன்றியமையாத பால்நெய் இவைகளைத் தரும் ஆனினமும் வாழும்; வேள்விகளால் மகிழ்ந்து*

தேவர் மழை பொழிவர்; மழையால் வரப்பு உயர்ந்து மன்னன் ஓங்குவான்; மன்னன் வாழும்போது, நாட்டில் தீமை உண்டாகாதவாறு காப்பான், தீமை ஒழியும்; அரசனும் குடிகளும் தீமையின்றி வாழும்போது, ஈசனது நாமம் தழைக்கும்; நாம மகிமையால் உலகமக்கள் துயரம்நீங்கி உய்வடைவர்.

'ஸ்வஸ்தி' வசனத்தோடு இதை ஒப்பிடுக.

## 82. 'கேட்பான் புகில் அளவில்லை'

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்.

3. 54. 4.

ஆட்கொள்ளத் தகுதியுடையாரை (இறைவன் ஆட்கொண்டு) அருளும் வகையும், ஆதியான இறைவனுடைய குணங்களும் ஆராயப்போனால் (ஆராய்ச்சிக்குள்) அடங்குவனவல்ல; அவற்றை (நான்) சொல்லவேண்டியதில்லை, (தங்களைப்) பற்றக்கூடியனவும் (இன்பதுன்பங்களும் அவைகட்குக் காரணமான (நல்வினை தீவினையாகிய) வினைகளும் (தங்களைச்) சேராதபடி, எம்பெருமானுடைய) திருவடிகளிலே வணங்கி, (அவரது) திருத்தொண்டிலே முதன்மையாக நின்று (அவரது பெருமைகளும் அருள் திறமும் ஆகிய) இவற்றை (இறைவனோடு ஒன்றித்து நின்று) உணரக் கடவராக, தகுதியுடைய அறிஞர்கள்.

ஆட்பாலவர்க்கு அருளும் - ஆளத்தகுந்த பக்குவம் அடைந்தவர்க்கு அருளுதலே பயன்படும்; அதை யடையாதவர்க்கு அருளுதல் பயன்படாது போகும். அருளும் வண்ணம் - நான்கு சமயாசாரியார்களையும் (சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்) நான்கு வகையாக (முறையே, ஸத்புத்ர தாஸ ஸஹ ஸன்மார்க்கங்களால்) இறைவன் ஆட்கொண்டமை இங்கே நோக்கத் தக்கது. கோட்பாலனவும் - கோள்கள் (நவக்கிரகங்கள்)

வாயிலாக வாழ்வில் வருவனவான இன்பதுன்பங்களும் என்றுமாம்.

இப்பாட்டும் 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும் பதிகத்தில் உள்ளது. இப்பதிகத்தைச் சம்பந்தர், மதுரையிலே சமணரோடு புனல்வாதஞ் செய்தபொழுது பாடி ஏட்டில் எழுதி வையையாற்றில் விட, அந்த ஏடு நீரோட்டத்தை எதிர்த்துச் சென்ற வரலாறு குறிப்பிடத்தக்கது.

## 83. 'எனது அல்லல் உரையீரே'

பொன்னம்பூங் கழிக்கானற் புணர்துணையோடுடன் வாழும்
அன்னங்காள் அன்றில்காள் அகன்றும்போய் வருவீர்காள்
கன்னவில்தோள் சிறுத்தொண்டன் கணபதீச் சரமேய
இன்னமுதன் இணையடிக்கீழ் எனதல்லல் உரையீரே.

3. 63. 2.

பொன்னிறமான அழகிய பூக்களை உடைய உப்பங் கழிகளிலும் கடற்கரைச் சோலையிலும் (முறையே) இணைந்த துணையாகிய பெடையோடு கூடவாழும் அன்னங்களே! அன்றிற் பறவைகளே! நீங்கள் (உங்கள் இடங்களை விட்டு) நீங்கியும் (பல இடங்கட்குப்) போய் வரத்தக்கவர்களே; (ஆதலால்) கருங்கல்லை யொத்த (உறுதியான) தோள்களையுடைய சிறுத்தொண்ட நாயனார் (வணங்கும்) கணபதீச்சர மென்னும் கோயிலில் அமர்ந்த இனிய அமுதம்போன்ற எம்பெருமானுடைய உபயபாதங்களிலே என்னுடைய (பிரிவாற்றாமையாகிய) துன்பத்தை விண்ணப்பஞ் செய்வீர்களாக.

'பைங்கோட்டு மலர்ப்புன்னை' என்று தொடங்கும் இப்பதிகம், தலைவனைக் கருதி வருந்தும் தலைவியொருத்தி, தனது பிரிவாற்றாத வருத்த மிகுதியைத் தலைவனுக்கு அறிவிக்கும் வண்ணம், அன்றில் அன்னம் நாரை தாரா முதலிய பறவைகளைத் தூதனுப்பும் வகையில் அமைந்துளது. சிறுத்தொண்ட நாயனாரது வேண்டுகோட்கு இணங்க அவரூராகிய திருச்செங்காட்டங்குடி சென்ற

சம்பந்தர் அங்கே கணபதீச்சரம் என்னும் ஆலயத்தில் அமர்ந்த பெருமானைத் தரிசித்தபொழுது பாடியதாகும். இதன் ஒவ்வொரு பாட்டிலும் சிறுத்தொண்டரது பெருந் தொண்டு சிறப்பிக்கப்படுகின்றது.

84. 'வேடன்......ஈசனடி கூடு காளத்திமலையே'

வேயனைய தோள்உமையோர் பாகமது வாகவிடையேறி
சடைமேல்
தாயமதி சூடிசுடு காடில்நட மாடிமலை தன்னைவினவில்
வாய்கலசமாகவழி பாடுசெயும் வேடன்மலராகு(ம்)நயனம்
காய்கணையி னலிடந்(து) ஈசனடி கூடு காளத்தி மலையே.
3. 69. 4.

(பசுமையான) மூங்கிலைப்போன்ற தோள்களை யுடைய உமாதேவி (திருமேனியின்) ஒரு பாகத்தில் இருக்க இடப வாகத்தின்மேல் ஏறுபவனும், சடையில் பரிசுத்தமான சந்திரனைச் சூடியவனும், சுடுகாட்டில் நர்த்தனம் ஆடுபவனும் ஆகிய பெருமானது மலையை (எது வென்று) கேட்பீராகில், தனது வாயே அபிஷேகக் கலசமாகக் கொண்டு (திருமஞ்சனமாட்டி) வழிபாடு செய்த வேடனை கண்ணப்பன் மலராகிய தன் கண்ணைக் கொடிய அம்பினல் தோண்டி யெடுத்து (இலிங்கத்திற்குச் சாத்திப் பெருமானது திருவடிகளைக் கூடுதற் கிடமான திருக்காளத்தி மலையே.

இத்திருப்பாட்டில், கண்ணப்ப நாயனரது பேரன்பு வழிபாடு குறிக்கப் பெறுதல் காண்க.

85. 'இன்னஉரு இன்னநிறம் என்றறிவதேல் அரிது'

இன்னஉரு இன்னநிறம் என்றறிவ தேல்அரிது நீதிபலவும்
தன்னஉரு வம்மெனமிகுத்தவன் நீதியோடு தானமர்விடம்
முன்னைவினை போய்வகையி னல்முழு துணர்ந்து முயல்
கின்றமுனிவர்
மன்னஇரு போதுமரு வித்தொழுது சேரும்வயல்
வைகாவிலே 3. 71. 4.

(பெருமானது வடிவம்) இன்ன வடிவம், (அவனது நிறம்) இன்ன நிறம் என்று ஆராய்ந்தறிவதாயின் அது முடியாது; நீதிகள் பலவும் தன்னுடைய வடிவமாகும் என்னும்படி மேம்பட்டவனை அப்பெருமான் முறைப்படி அமர்ந்துள்ள இடம், பழைய பாவங்கள் நீங்கப் பெற்று, (பெருமானை அடையும் நெறியை) முறைப்படி முற்றும் அறிந்த, (அந்நெறியிலே) முயலும் தவ முனிவர்கள் (காலை மாலையாகிய) இரண்டு வேளைகளிலும் மிகுதியாக வந்து சேர்ந்து (பெருமானை) வணங்கித் தியானித்தற்கு இடமானதும் வயல் சூழ்ந்ததுமான திருவைகாவூரே (ஆகும்).

வைகாவூர் முற்காலத்து 'வைகாவில்' என வழங்கியதென்பது இப்பதிகத்தால் அறியப்படும்.

## 86. 'வேதியர் விரும்பு பதி'

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு
நற்கலைதெ ரிந்தவ வரோ(டு)
அந்தமில்கு ணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்யஅமர் கின்றஅரனூர்
கொந்தலர்போ ழிற்பழன வேலிகுளிர்
தண்புனல்வளம் பெருகவே
வெந்திறல்வி ளங்கிவளர் வேதியர்வி
ரும்புபதி வீழிநகரே. 3. 80. 4.

செம்மையான தமிழை அறிந்தவர்களும் தெய்வத் தன்மையுள்ள வேதம் ஓதும் நாவையுடையவர்களும் பொருள் வளமிக்க நல்ல கலைகளை ஆராய்ந்தறிந்தவர்களுமான பெரியாரோடு, அளவற்ற பல நற்குணங்களையுடைய முனிவர்களும் (தன்னை மலரால்) அருச்சனைகள் செய்து வழிபடும் வண்ணம் அமர்ந்துள்ள சிவபெருமானது ஊர், கொத்தான பூக்களையுடைய சோலைகள் வயல்களுக்கு வேலியாகும் வண்ணம் மிக்க குளிர்ச்சியுள்ள நீர்வளம் மிகுவதனால், விரும்பத்தக்க திறமை மேன்மேலும் சோபித்து வளர்கின்ற சிவபெருமான் (தாம் வசிக்க) விரும்பும் இடமாகிய திருவீழிமிழலை நகரமே யாகும்.

### 87. 'முதல்வினையற அருளினர்'

சொன்னய முடையவர் சுருதிகள் கருதிய தொழிலினர்
பின்னையர் நடுவுணர் பெருமையர் திருவடி பேணிட
முன்னைய முதல்வினை யறஅரு ளினர்உறை முதுபதி
புன்னையின் முகைநிதி பொதியவிழ் பொழிலணிபுறவமே.

3. 84. 6.

(சொல்வதிலே (இனிமை) நயமுடையவரும், வேதங்களில் விதித்துள்ள கருமங்களைச் செய்பவரும், பின்வருவதை அறிபவரும், நடுவாய் நிற்கும் கடவுளை உணரும் பெருமையுடையவரும், தமது திருவடிகளைப் போற்ற, (அவர்களுடைய) பழைய வினைகள் அடியோடு அறும் வண்ணம் (வேரற்றுப்போகும் வண்ணம்) அருள்செய்பவருமான எம்பெருமான் அமர்ந்துள்ள பழைய ஊர், புன்னை மரத்தின் அரும்புகள் பொன்போல் மலர்கின்ற சோலைகளால் அழகு செய்யப் பெற்ற திருப்புறவமேயாகும்.

### 88. 'பழுதிலை மெய்ம்மையே'

தளிரிள வளரொளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை இணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே.

3. 87. 1.

இளந்தளிரின் மிக்க ஒளி, விளங்குகின்ற தன் (திருமேனியின்) அழகைக் காட்டும் (மாந்தளிர்போலும் சாயல் பொருந்திய திருமேனியுடைய) பார்வதி தேவியின் குளிர்ச்சி பொருந்திய இளமையான, காந்தி மிக்க அழகிய இரு தனங்களையும் தழுவுதலால், பெருமையுடைய இளமைக்குரிய மிக்க ஒளி பொருந்திய திருநள்ளாற்றுப் பெருமானது திருநாமமே (இப்பாசுரங்கள் எழுதப்பெற்ற ஏடு) ஜொலித்து ஓங்கி வளரும் இளந்தீயில் இட்டால் பழுதாகாது (எரிக்கப்படாது), இது சத்தியமே.

மதுரையிலே சமணரொடு அனல்வாதம் செய்த போது திருநள்ளாற்றுப் பதிகமாகிய 'போக மார்த்த

பூண் முலையாள்' என்பது எழுதப்பெற்ற ஏட்டைத் தீயில் இடுகையில் அதற்குப் பாதுகாப்பாக இப்பதிகம் பாடப் பெற்றது. இதில் ஒவ்வொரு பாசுரமும் 'எரியினில் இடில் இவை பழுதிலை மெய்ம்மையே' என முடிகின்றது.

89. 'நாமமே சிந்தை செய்'

மருந்தவை மந்திர மறுமைநன்
 னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
 சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
 சொரிதரத் துன்றுபைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே
 லியுறை செல்வர் தாமே. 3. 92 1.

(எனது) நல்ல மனமே! (நாமங்கள்) அவை (பிறவிப் பிணிக்கு) மருந்தாகும்; (நன்மை தரும்) மந்திரங்களாகும்; மறுமையில் அடையத்தக்க நல்ல (முத்தி) நெறி (காட்டுவன) அவையே; மற்றும் எல்லா நலங்களும் (ஆவன) அவையே. (அவற்றால்) எல்லாக் கடுந்துயரங்களும் ஒழியும்; (ஆதலால்) அவர் திருநாமங்களையே (எப்போதும்) நினைப்பாயாக; (எவரது நாமங்களை என்னில்) குளிர்ச்சி பொருந்திய காடுகளில் ஒருபுறம் கொன்றை மரங்கள் பொன்போன்ற தாதுக்களைச்சொரிய, (ஒருபுறம்) நெருங்கிய பசுமையான அழகிய செருந்தி மரங்களில் மாற்றுயர்ந்த பொன்போலும் பூக்கள் மலர்தற்கு இடமான திருநெல்வேலியில் அமர்ந்த (குணச்) செல்வர் (தம்முடைய நாமங்களை).

90. 'உயரும் தவமாகி'

ஊழியும் இன்பமும் காலமாகி உயருந் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும்வாழ்க்கை வினையின்புணர்ப்
நாழிகை யும்பல ஞாயிறாகி நளிர்நாரை யூர்தன்னில் [பாகி
வாழியர் மேதகு மைந்தர்செய்யும் வகையின் விளைவாமே.
3. 107. 7

யுகமாகி, இன்பமுமாகி, கால அளவையுமாகி, (பல காலம் செய்யப்படும்) உயர்ந்த தவமாகியும், ஏழு சுரங்களாலாகிய இசையால் கூறப்படும் பொருளாகியும், (நாம்) வாழும் வாழ்க்கைக்குரிய கருமங்களின் பயனைக் கூட்டுவிப்பவனும், பல நாழிகையாயும் (அதை அளக்கும்) சூரினும், பெருமை பொருந்திய திருநாரையூரில் எழுந்தருளிய மேன்மைத் தகுதியுடைய (எல்லா) வல்லமையுமுள்ள பெருமான் செய்யும் (விளையாட்டு) வகையின் (லீலா விசேடங்களின்) பயனுகும்; (அப்பெருமான் வாழ்க.)

இறைவனே எல்லாவற்றிற்கும் காரணன் என்றவாறு.

### 91, 'உணர்வது நின்னருள் மெய்யினையே'

உற்றுமை சேர்வது மெய்யினையே
　　உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
　　கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே
　　அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
　　பிரம புரத்தையு கந்தனையே　　　　3. 113, 1.

உமாதேவி இணைந்து சேர்ந்திருப்பது உனது திருமேனியையே; உயிர்கள் உணர்வது உனது திருவருளின் உண்மையையே; (உன் பெருமைகளைக்) கற்றிருந்தவர் வெறுப்பது (எல்லோரும்) பாதுகாக்கும் மனைவி (மக்கள் வீடுமுதலியவற்றையே); உனது) நெருப்புக்கண் எரித்தது மன்மதனையே; (உன் உடலில்) மறைக்கவேண்டிய இடத்தை மறைப்பதும் முன்னேயுள்ள பாம்பே; தேவர்கள் (தலையாலே) செய்வதும் உனது திருத்தொண்டே. (நீ மகனைப்) பெற்று மகிழ்ந்ததும் கந்தப்பெருமானையே; (இத்தகைய பெருமையுடைய நீ) பிரமபுரத்தை (உனது இருப்பிடமாக) மகிழ்ந்து கொண்டாயே.

இப்பதிகத்தின் பாசுரங்களில் அடிதோறும் 'மடக்கு' என்னும் சொல்லணி அமைந்துள்ளது.

பதிகத்தைப் பாடிக்கொண்டே நகருட் புகுந்து திருக் கோயில் சென்று வழிபட்டார். இது இப்பதிகத்தின் வரலாறாகும்.

## 93. 'தாயினும் நல்ல தலைவர்'

தாயினு ம்) நல்ல தலைவரேன் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு(ம்) மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலையமர்ந்தாரே. 3. 123. 5.

(எம்பெருமான் எல்லா உயிர்களுக்கும்) தாயைக் காட்டிலும் நன்மை செய்யக்கூடிய தலைவரும் ஆவர் என்று (கருதி) அடியவராகித் தம் திருவடிகளைப் புகழும் தொண்டர்களின் வாக்கிலும் மனத்திலும் சென்று நிலைத்து (அங்கு நின்றும்) நீங்காத பெருங்குணமுடைய வரும், (உலகத்தார்) காணத்தக்க பல திருவடிவங்களை யுடையவரும், (பிறவி) நோய்க்கு இடமாகிய உடம்பை யும் (அவ்வுடம்புக்குக் காரணமாகிய) கருமத் தொடர் பையும் (தமது அடிமைத்) தொழிலை உடையவர்களிடத் தினின்றும் நீக்கி, (வேத) நூலில் நுழைந்திருப்பவரும் (யார் எனில்) (இப்) பூமியிலே திருக்கோயிலும் அதனை அடுத்த சுனையும் கடலால் சூழப்பெற்ற திருக்கோண மலையில் அமர்ந்துள்ள எம்பெருமானுரே-ஆவர்.

நுழைதரு நூலினர் - நுட்பம் மிகுந்த நூலாகிய வேத சொரூபியானவர். திருக்கோணமலை இலங்கைத் தீவில் உள்ளதொரு சிவஸ்தலம். இதனைச் சம்பந்தப் பெருமான் பாண்டி நாட்டில் இராமேசுரத்தில் இருந்த வாறே பாடினார்.

*கற்றவர்....காமனையே - உண்மையை யுணர்ந்த பெரியோர்கள் வெறுப்பது, கற்பகச் சோலையிலுள்ள அரண்மனையையே (இந்திர போகத்தையே).*

### *92. 'ஆலவா யாவதும் இதுவே'*

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாள்தோறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யக(ன்)
நால் வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடும்
அமர்ந்த ஆலவா யாவதுமிதுவே. 3. 120. 1.

*மங்கையர்க்கரசி என்னும் பெயருடையவளும், சோழ அரசன் புதல்வியும் வரிகளையுடைய வளையல் அணிந்த கைகளையும் இளமான்போலும் பார்வையையும் உடையவளும், செந்தாமரைச் செல்வி (இலக்குமி) போன்றவளுமான பாண்டிமாதேவி தினமும் திருத்தொண்டு செய்து வழிபடும் வண்ணம், ஓங்கியெழும் தீப்போலும் திருமேனியுடையவனும், உயிர்களுக்கெல்லாம் தலைவனும், நான்கு வேதங்களையும் அவற்றின் பொருளையும் (உலகுக்கு) அருளிச் செய்தவனும் ஆன பெருமான் அங்கயற்கண்ணி (மீனாக்ஷி) அம்மையோடுகூடி அமர்ந்துள்ள திருவாலவாய் இதுதானோ?*

*திருஞான சம்பந்தப்பெருமான் மதுரைமாநகர்க்கு எழுந்தருளி அந்நகரைச் சமீபித்தபோது, அவரைப் பாண்டியன் மந்திரியாராகிய குலச்சிறை நாயனார் எதிர்கொண்டார். சுவாமிகள், 'திருவாலவாய் எந்தப்புறம் உள்ளது?' என்று குலச்சிறையாரைக் கேட்க, அவர் சோலைகளின் இடையேயுள்ள ஆலவாய்க் கோயிலின் கோபுரங்கள் அருகிலே காணப்பட்ட பக்கத்தைச் சுட்டிக் காட்டினர். அப்பொழுது ஆளுடைய பிள்ளையார் இப்*

## 94. 'ஏத்துவார் துன்புறுவாரல்லர்

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்(று)
இன்புறும் எந்தை இணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 3. 125. 3.

*பக்திமிக்க மனமுடையவராய் (தம்) அடியார்கள் நன்மை அடைவதற்கு இடமான திரு நல்லூர்ப் 'பெரு மணம்' என்னும் கோயிலில் எழுந்தருளி யிருந்து (அத னால்) மகிழும் எம் தந்தையாருடைய இரண்டு திருவடி களையும் துதிப்பவரும் (அத்திருவடிகளுக்குத்) திருத் தொண்டு செய்பவரும் (எப்போதும்) (பிறவித்) துன்ப மடைய மாட்டார் (முத்தியாகிற பேரின்பத்தை அடைவர்).*

*ஏத்துவாரும் தொண்டு செய்வாரும் துன்புறுவாரல் லர் எனக்கூட்டுக; ஏத்துவார் துன்புறுவாரல்வர், (நித் தியமாய திருக்கைலாயத்தில்) சிவத்தொண்டு செய்யும் பேறு உடையவராகவே யிருப்பார் எனவும் கூறலாம்.*

## 95. 'எமைப் போக்கு அருளீரே'

தக்கிருந் தீரன்று தாளால் அரக்கனை
உக்கிருந் தொல்க உயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீர்இன்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீர்எமைப் போக்கரு ளீரே. 3. 125. 8.

*தகுதியுள்ளவராய் இருப்பவரே, திருவடியால் அரக் கனாகிய இராவணனை மெலிவுபட்டு வருந்தும்படி உயர்ந்த கைலாய மலையின்கீழ் வைத்து (நசுக்கிச்) சிரித்துக்கொண் டிருந்தீர்; இப்போது நல்லூர்ப் பெருமணம் என்னும் கோயிலில் புகுந்து எழுந்தருளியுள்ளீர்; உம்மைத் தொழும் எங்களை நற்கதியாகிய முக்தியை அடையும்படி அருள்செய்வீராக.*

இப்பாட்டும் இதற்கு முந்திய 'அன்புறு சிந்தையர்' என்ற பாட்டும் திருஞான சம்பந்த மூர்த்திகள் திருவருட் சோதியிற் கலந்தபோது பாடியருளியதாகும்.

திருநல்லூர்ப் பெருமணத்திலே சம்பந்தருக்குத் திருமணம் நிகழ்ந்தது. மனைவாழ்க்கையில் மனம்பற்ரு மல் பெரியோருடைய வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு வாறு திருமணத்துக்கு மனமிசைந்த சம்பந்தர், மண வினையில் நம்பாண்டார் நம்பியின் புதல்வியைக் கைப் பற்றியவுடன், அத்திருமணக் கோலத்துடனே அப் பெண்மணியோடும் சுற்றத்தார் முதலியவரோடும் இறை வனது திருவடிகளிலே கலக்கும் பெருநோக்கத்துடன் இறைவனை வேண்டி இப்பதிகத்தைப் பாடியருளினர். உடனே சிவபெருமான் ஒருபெருஞ் சோதியையும் அத னுட்புக ஒரு வழியையும் நியமித்து 'நீவிர் எல்லீரும் இதனுள் வருக' எனத்திருவருள் செய்ய, ஆளுடைய பிள்ளையார் 'காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடியருளி, எல்லோரையும் முன்னே சோதியுள் அனுப்பி, இறுதியில் தாம் காதலியோடு அதனை வலம் வந்து அதனுட் புகுந்து கலந்தருளினர். இத்தருணம் இவருக்குப் பிராயம் பதினாறு என்பர்.

# ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

## 1. 'கூற்றுயினவாறு விலக்ககிலீர்'

கூற்றுயினவாறு விலக்ககிலீர்
கோடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றுயடிக் கேஇரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்போழுதும்
தோற்றுதேன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்து(உ)றை அம்மானே. 4. 1. 1.

கெடிலநதி பாயும் திருவதிகையிலே திருவீரட்டான மென்னும் ஆலயத்திலே கோயில் கொண்டருளிய பெருமானே! எனக்கு எமன்போலக் கொடுந் துன்பத்தைத் தருகிற இதை (சூலைநோயை) நீர் விலக்கியருள மாட்டாதவரோ? இதற்குக் காரணமாகும்படி பல கொடுமைகளைச் செய்திருப்பினும் அவை நான் அறியாமற் செய்தவை. (உமக்கு ஆளாக அவ்வழியினின்றும் மீட்டு என்னை) ஏற்றுக்கொண்டவராகிய உம்முடைய திருவடிகளிலேயே (இனி) நீங்காமல் (மனம் வைத்து) இராப் பகலாக எக்காலத்தும் (உம்மை) வணங்குவேன். வெளிப் படத் தோன்றுமல், என் வயிற்றின் உள்ளேயே (இருந்து கொண்டு, இந்நோய்) குடலோடு சேர்த்து முடக்கி (என்னைத் துன்புறுத்துவதனுல்) அடியேன் (அதனை) தாங்க மாட்டாதவனுயிருக்கிறேன். (ஆதலால் அதனைப்போக்கி அருள்வீராக.)

இப்பதிகம்பாடி அடிகள் சூலைநோய் நீங்கப்பெற்று, 'நாவுக்கு அரசர்' என்ற நாமத்தையும் பெற்றுர். ஏற்றுய் என்பது ரிஷப வாகனனே எனவும் பொருள்

கொள்ளலாம். பகல் உச்சி இரவு என்ற சிறப்பான மூன்று போதிலும், விழிப்பு, சொப்பனம் சுழுத்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும், தம் மனம் திருவதிகையை யன்றி வேறொன்றையும் நினையாது என்பதை விளக்க 'இரவும்........எப்போதும்' என்கிறார்.

## 2. 'உன்னை மறந்தறியேன்'

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோா(டு)இசை பாடல் மறந்தறியேன்
நலம்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டு(உ)ழல்வாய்
உடல்உள்ளுறு சூலை தவிர்த்(து) அருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 4. 1. 6.

திருமஞ்சனம் செய்தலையும், பூ சாத்துதலையும் தூபம் இடுதலையும் (ஒருக்காலும்) மறந்திருந்ததாக அறியவில்லை; தமிழோடு இசைந்த பாடல்களை நான்பாட மறந்ததாக அறியவில்லை. நன்மை தீமையில் (இரண்டிலும்) உன்னை மறந்ததாகத் தெரியவில்லை. உன் திருப்பெயரை என் நாவால் ஓதுதலையும் விட்டதாகத் தெரியவில்லை. அழிந்தவராகிய (பிரம்மனது) தலையோட்டில் பிச்சைகொண்டு திரிபவனே, (எனது) உடலிற்குள் பொருந்தியுள்ள சூலை நோயை நீக்கி யருள்கின்றாயில்லை. அதனால் அடியேன் துன்ப முழந்தேன். கெடிலநதி பாயும் திருவதிகையில் உள்ள திருவீரட்டானம் என்னும் கோயிலில் எழுந்தருளிய பெருமானே!

சிவபெருமானது திருவருளைப் பெற்றதும் நாயனார்க்குத் தாம் கைலாயத்தில் வாகீசராகத் தொண்டு செய்து வந்தது நினைவுவர, சலம்........மறந்தறியேன் என்றார். தமிழோடு இசைபாடல்—தமிழ்ப் பாடலோடு ஏழு இசையால் ஆகும் பண் இசை பாடுதலையும் என்னலுமாம்.

3. 'அஞ்சுவது யாதொன்றுமில்லை'

பலபல காமத்தராகிப் பதைத்தெழு வார்மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாயமலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவது மில்லை.

4. 2. 5.

பலபல ஆசையை உடையவர்களாய் (அக்காரணத்தினால்) எப்பொழுதும் (மனம்) பதறிப் பலவற்றையும் செய்பவர் மனத்துள்ளே (போய்) அவர்களைச் சமட்டிக் கொண்டு திரியும் 'கணபதி' என்று சொல்லப்படுகிற ஆண் யானையையும், (உலகத்துக்கு) வெற்றி அமைந்து ஆதரவாகத் தாங்குகின்ற சூரிய சந்திரர்களாகிய இரண்டு பேரொளிகளையும், பெருமைமிக்க கயிலாய மலையையும், நன்மை பொருந்திய கெடிலநதியின் நீரையும் உடையவராகிய ஒருவருடைய (ஒப்பற்ற சிவபெருமானுடைய) உறவினர் யாம். (ஆதலால், நாம்) பயப்படுவது எதற்கும் இல்லை. (நாம்) பயப்படும்படி (எம்மிடம்) வரத் தக்கதும் ஒன்றுமில்லை.

சிவபெருமானுடைய அடியார்கள் யாம். ஆதலின் சிவபெருமானது (பிறரை அஞ்சச் செய்யும்) புதல்வரும், யானை முகத்தருமாகிய கணபதியும் பெரிய மலையும் சுடர்களும் நதியும் எமக்கு நட்பாயிருக்கும். இவை எமக்கு நட்பாகும்போது, இவைகளினும் மிகத் தாழ்ந்த யானையும் மலையும் தீயும் நீரும் எமக்கு அச்சத்தை உண்டாக்க மாட்டா என்று மன உறுதியோடு கூறுகிறார். ஆசையுள்ளவர்களது மனத்தை மிதித்து அழித்துத் திரியும் கணபதி ஆசையற்று அடியாரான எம்மைக் காத்து, ஆசைக்குட்பட்ட எமது பகைவர்களை அழிக்கிறார் என்கிறார். அப்பரை, அரசன் யானையை ஏவிக் கொல்ல முயன்றபோது பாடிய பதிகம் இது.

4. 'கண்டேன் அவர் திருப்பாதம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான்
மகளோடும் பாடி
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார்
அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுபே டாமல் ஐயா(று)
அடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன
கண்டேன்
கண்டேன் அவர் திருப் பாதங் கண்டறியாதன
கண்டேன் 4. 3. 1.

*(கண்டோர்) விரும்பத்தக்க பிறைச் சந்திரனைத் தலை மாலையாக உடைய பெருமானை, மலையரசன் மகளான பார்வதி தேவி யுடனே கூடப் பாடி (அர்ச்சனைக்கு) பூவும், (திருமஞ்சனத்துக்கு) நீரும் தாங்கித் துதித்துக் கொண்டு போகும் தொண்டர் பின்னே (தொடர்ந்து) கயிலாயத்துக்குப் போகின்ற நான், வந்த சுவடு தெரியாமல் (பெருமானது அருளினாலே) திருவையாற்றை அடைந்த போது, அன்புடைய இளைய பெண் யானையோடு ஓர் ஆண் யானையும் (சக்தியும் சிவமும் போல ஒன்று பட்டு) வருவனவற்றைக் கண்டேன். (கயிலாயத்திலே உள்ள) இறைவனுடைய திருவடிகளை (இங்கே) கண்டவனானேன். இதற்கு முன் கண்டறியாத அதிசயங்களையும் கண்டவனானேன்.*

*அப்பர் திருக்கயிலாயத்தை நேரே அடைந்து தரிசிக்கக் கருதிக் காலால் நடந்து சென்றார். கால்கள் தேய்ந்து நடக்க முடியாது போகவே கையையும் தரையில் ஊன்றி நடந்தும், அதுவும் முடியாமற் போகவே மார்பினால் ஊர்ந்தும் எவ்வாறாயினும் கயிலையை அடைய வேண்டு மென்னும் பிடிவாதத்தோடு சென்றார். இறைவன் அப்பருடைய உறுதியைக் கண்டு வியந்து அவர் எதிரிலே ஒரு குளத்தைத் தோற்றுவித்துத் தாமும் ஓர் அந்தணராய்த் தோன்றி, 'கயிலாயத்தை இம் மானுட*

சரீரத்தோடு அடைதல் இயலாது. வீண் பிடிவாதத்தை விட்டு இக் குளத்திலே மூழ்கித் திருவையாற்றை அடைந்து அங்கே கயிலாய தரிசனத்தைக் காண்பாய்' என்று கட்டளை இட, அவ்வாறே அப்பர் அக்குளத்தில் மூழ்கித் திருவையாற்றிலே கரை ஏறினர் என்பது வரலாறு. இதனையே, 'யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது' எனக் குறிப்பிட்டுள்ளார். கயிலாயம் போலவே திருவையாற்றிலும் எல்லாவற்றையும் சிவமும் சக்தியுமாகக் கண்டு அத் திறத்தையும் வியந்து பாராட்டுகின்றார்

## 5. 'ஆயிரம் பேருகந்தான்'

ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடையானும்
ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந்தானும் ஆரூர் அமர்ந்தஅம் மானே. 4. 4. 8.

ஆயிரம் தாமரைப் பூக்களைப் போன்ற (அழகிய) ஆயிரம் திருவடி யுடையவனும், ஆயிரம் மேரு மலைகளைப் போன்ற ஆயிரம் புஜங்களை உடையவனும், ஆயிரம் சூரியர்கள் (வரிசையாக உதித்தது) போலும் (மேன்மையுடைய) ஆயிரம் திருமுடிகளை உடையவனும், ஆயிரம் நாமங்களை விரும்பியவனும் திருவாரூரில் வீற்றிருக்கும் எம்பெருமானே (ஆவான்.)

இது இறைவனது விராட் சொரூபத்தைக் குறிக்கும்.

## 6 'உள்ளம் கோயிலாக்கி'

என்பிருத்தி நரம்புதோல் புகப் பெய்திட்(டு)
என்னையோர் உருவமாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்த்திட்(டு)
என் உள்ளங் கோயில் ஆக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்(டு)
அருள் செய்த ஆரூரர்தம்
முன்பிருக்கும் விதி யின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே. 4. 5. 2.

7. 'கண்டாள் கொல்லோ'

பழியிலான் புகழுடையன் பால்நீற்றன் ஆனேற்றன்
ஏன்கின் றுளால்
விழி உலாம் பெருந்தடங்கண் இரண்டல்ல மூன்று
(உ)ளவே என்கின் றுளால்
சுழிஉலாம் வருகங்கை தோய்ந்த சடையவனே
என்கின் றுளால்
கழிஉலாம் சூழ்ந்த கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டாள் கோல்லோ. 4. 6. 5.

(என் உள்ளம் கவர்ந்த தலைவன்) பழி (சிறிதும்) இல்லாதவன்; புகழ் (மிகவும்) உடையவன்; பால் (போலும் வெண்மையான) திரு நீற்றை (திருமேனி யெங்கும்) பூசி யுள்ளவன்; இடப வாகனத்தை உடையவன் என்கிறுள். (அவனுக்கு) விழிகள் புரளும் பெரிய விசாலமான கண்கள் (எல்லோரையும் போல) இரண்டு இல்லை; (அவை) மூன்று இருக்கின்றனவே ! என்கிறுள். சுழிகளை உடையதான (வேகம்) மிகுந்த கங்கை படிந் துள்ள சடையுடையவன் என்கிறுள். (இவள்) உப்பங் கழிகள் சூழப் பெற்ற திருக்கழிப்பாலையில் எழுந்தருளி யுள்ள பெருமானை நேரே கண்டாள் போலும். (அதனு லேயே இவ்வா றெல்லாம் பிதற்றுகின்றுள்; என்ன செய்வேன் !)

தலைவியினிடத்துள்ள வேறுபாடுகளைக் கண்ட தோழி தாயிடம் தலைவிக்கு உண்டான காதலின் அறி குறிகளையும் அதன் காரணத்தையும் கூறுவதாக அமைந்த பாசுரம் இது. தலை மகனிடத்து ஈடுபட்ட தலைவியினது செயல்கண்ட தாய் வியந்து கூறியதும் ஆக லாம். தலைவி தன் உள்ளத்தைக் கவர்ந்த தலைவன் மீது காதல் கொண்டதைத் தாய் அறியும்போது ஒருக்கால் கண்டிக்கலாமோ என்று ஐயமுற்று, அவனது குணங் களையும் தெய்வத் தன்மையையும் கூறுகிறுள்; தலைவன் பழி இல்லாதவன், அதற்கு மேல் புகழும் பெற்றவன், அதற்குமேல் உள்ளத் தூய்மைக்கு அறிகுறியாகப்

எலும்புக் கூட்டை (உண்டாக்கி) வைத்து, நரம்புகளையும் தோலையும் முறையே உள்ளே புகுத்தி (மேலும் மூடி) என்னை ஒரு மனித உருவமாக்கிப் பேரின்பத்தில் நிலைக்கச் செய்து, முன்பு (என்னிடம்) இருந்த பாவத்தைப் போக்கி, என் நெஞ்சை அவர் இருப்பதற்கு உரிய கோயிலாகச் செய்துகொண்டு, அடியவனை என் மீது அன்பு வைத்து என்னைத் தன் முழு அடிமையாக்கித் திருவருள் செய்த திருவாரூர்ப் பெருமான் சந்நிதியிலே (எப்போதும்) இருக்கும் பாக்கியம் இல்லாமல் முயலை விட்டுக் காக்கையின் பின் போனது போன்ற வீண் செயலைச் செய்தேனே !

சிவபெருமான் தமது அருளால் தமக்குத் தநு கரணங்களைக் கொடுத்து, சிவாநந்தத்தை அடையச் செய்து, அது நிலையாக இருத்தற்கு இடையூறான பழைய வினைகளை அறுத்து, அவ்வாறு மனத்தைத் தூயதாக்கிய பின், அதிலே எப்போதும் குடி கொண்டிருந்து, எனக்கு இடையறாத அன்பு தலையெடுக்கச் செய்து, மெய்யன்பின் பயனாக என்னை அவரது திருவடிகட்கே மெய்யடிமை செய்யும்படி ஆட்கொண்டருளினார், என்று படிப்படியாகத் தமக்கு அருள் செய்ததைக் கூறியவாறு. இப் பதிகத்தில் அப்பர் தாம் சமண மதத்திற் சேர்ந்து வீணில் உழன்ற காலத்தை நினைத்து வருந்திக் கூறுகின்றார். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒரு பழமொழி அமைந்துள்ளது.

முயலை விட்டுக் காக்கையின் பின் போவது என்பது முற்காலத்து வழக்கில் இருந்த ஒரு பழமொழி. தக்க தொன்றைக் கைவிட்டுத் தகாத தொன்றைக் கைப்பற்றும் செயலைக் குறிப்பித்தல் காண்க.

ஒப்பிடுக :

**ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே ?**

**—திருமங்கையாழ்வார், சிறிய திருமடல், 8.**

புறத்தே திருநீறு அணிந்தவன், காளை மீது ஏறி வரும் வலிமை உள்ளவன், அன்றியும் அவன் சாதாரண மனிதனல்லன் தெய்வமானவன், பெண்ணைப் பரிபாலிக்கும் இரக்க முடையவன், ஆதலின் அவனைக் காதலிப்பதில் குற்றமில்லை என்றும், தலைவி இவ்வாறு கூறுவதின் காரணம் தலைவனாகிய சிவபெருமானை நேரில் கண்டிருத்தல் வேண்டும் என்றும் கூறியவாறு.

சுழியுலாம்........சடையன்-கோபத்தோடு உலகிற்கு வந்த கங்கையையும் தலையில் ஏந்தி அருளோடு அணிந்து கொண்டவன் ஆதலால், தன்னிடம் காதல் கொள்ளும் நங்கையைப் போற்றி மகிழ்வான் என்று குறிப்பிட்டவாறு.

ஒப்பிடுக :

**சிலை யிலங்கு பொன் ஆழி**
**திண் படை தண்டொண் சங்கமென்கின்றாளால்**
**மலையிலங்கு தோள் நான்கே**
**மற்றவனுக் கெற்றே காணென்கின்றாளால்**
**முலை யிலங்கு பூம் பயலை**
**முன் போட அன்போடியிருக்கின்றாளால்**
**கலை யிலங்கு மொழியாளர்**
**கண்ணபுரத்து அம்மானைக் கண்டாள் கொலோ?**

—திருமங்கையாழ்வார். 8. 1. 1.

8. 'கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியான்'

கரவாடும் வன்நெஞ்சர்க்(கு) அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல்ஏந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே.

4. 7. 1

வஞ்சனையுள்ள கடினமான நெஞ்சம் உடையவர்களுக்கு அடைய முடியாதவனும், வஞ்சனையில்லாதவரிடத்திலே கலந்திருக்கும் தலைவனும், இடபத்தை (வாகனமாகக் கொண்டு) ஏறுகின்ற ஞான ஸ்வரூபியும் (ஆகி)

பாம்புகள் படம் எடுத்து ஆடவும் சடை நீண்டு தொங்க வும் ஒரு திருக்கரத்திலே மழுவை வைத்துக்கொண்டு (ஊழிக் காலத்து) இருளிலே கூத்தாடுகின்ற எம்பெரு மானை என் மனத்திலே (இடையறாது) சிந்திக்கின்றேன்.

## 9. 'தலையே நீ வணங்காய்'

தலையே நீவணங்காய்—தலைமாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்.
4. 9. 1.

வாயே வாழ்த்துகண்டாய்—மதயானை உரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத்(து) ஆடும்பி ரான்தன்னை வாயே
வாழ்த்துகண்டாய். 4. 9. 5

நெஞ்சே நீநினையாய்—நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய்.
4. 9. 6.

தலையே நீ வணங்குவாயாக; தன் தலையிலே தலை களாலாகிய மாலையை அணிந்து மற்றொரு தலை யோட்டினாலே (பிரம்ம கபாலத்திலே) பிச்சை வாங்கும் பெருமானை - என் தலையே - நீ வணங்குவாயாக.

தலை மாலை - கொன்றைப் பூவாலாகிய தலை மாலை எனவும் ஆம்.

வாயே நீ வாழ்த்து. (தாருக வனத்து இருடிகளால் தன்னைக் கொல்லும் பொருட்டு விடப்பட்ட) மத யானை யின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு, பேய்கள் வசிக்கும் சுடுகாட்டிலே கூத்தாடும் பெருமானை - என் வாயே - நீ வாழ்த்துவாயாக.

மனமே நீ (எப்போதும்) நினை. மேலோங்கிய கண்டோர்க்கு அச்சந்தரும் சடையை உடைய மலமற்ற வனும், மேக சஞ்சாரமுள்ள இமயமலையின் மகளுக்கு நாயகனுமான பெருமானை - என் மனமே - நீ நினைப் பாயாக.

### 10. 'நற்றுணை யாவது நமச்சிவாயவே'

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 4. 11. 1.

*(அடியார்களுக்குச் சிறப்பாகச்) சொல்லப்படும் துணையான வேதத்தில் புகழப்படுபவனும், ஞான ஒளி வடிவாகிய தேவனுமான பெருமானுடைய அழகிய செம்மையான இரண்டு திருவடிகளையும் (நான்) மனம் பொருந்தி வணங்குவதனால், (என்னை) கல்லோடு சேர்த்துக் கட்டி ஒரு கடலிலே தள்ளினாலும் (அவ்விடத்தும்) எனக்கு நல்ல துணையாய் இருப்பது (அவனுடைய ஐந்து எழுத்தாகிய) 'நமச்சிவாய' என்பது.*

*ஆணவத்தினின்றும் உண்டாகும் பலவித ஆசைகளாகிய கல்லோடு புண்ணியம் பாவம் என்னும் இரு வினைகளாகிய கயிற்றினால் கட்டப்பட்டுப் பிறவிக் கடலில் ஆழ்ந்து மாண்டு போகும் நிலையிலுள்ள உயிர்கட்குப் பஞ்சாக்ஷரமே உய்விக்கும் தெப்பமும் துணையுமாகும் என்பது குறிப்பு.*

### 11. 'என் புதுநலமுண்டு இகழ்வானோ'

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் (டு) இகழ்வானோ.
4. 12. 1.

*(ஆண்டவனை) சொற்களை அடுக்கித் (துதிக்கின்றது போலப்) பாடுகின்ற குயிற் கூட்டங்களே (நீங்கள் அவனுக்கு என் நிலையை) எடுத்துச் சொல்ல மாட்டீர்களா? பல கோடுகளையுடைய வண்டுகள் வரிசையாக இசை பாடுதற்கு இடமான திருப்பழனத்தலத்தில் எழுந்தருளியவனும், அந்திமாலையில் (அழகாக) ஒளி வீசுகின்ற*

பிறைச் சந்திரன் விளங்குகின்ற சடை முடியைத் தரித்த சிரசை உடையவனும், (யான் அணிந்த) பொன் நிற மான (கொன்றை) மாலையைச் சூடிய மார்பை யுடைய வனும் (ஆன எம்பெருமான்) என்னுடைய புதிய இன் பத்தை அநுபவித்தபின் (என்னைப் பிரிந்து சென்று) அலக்ஷியம் செய்வரோ?

சொன் மாலை........சொல்லீரே - தனக்கு ஈசன் மீதுள்ள காதலினால் குயில் இயல்பாகக் கூவுதலையும் தனது நாயகனைப் பற்றிப் பாடிக்கொண்டிருப்பது போலப் பாவித்து, ஈசனோடு சம்பந்தப்பட்டதாகக் கருதி அவைகளைத் தூது விடுகிறாள். நகு திங்கள்........ மார்பன் — சரண மடைந்த சந்திரனுக்குப் புகலாய் ஆத ரித்தமைக்கு அறிகுறியாகச் சந்திரனைச் சூடியிருந்ததைக் கண்டு யான் அவர்க்கு மாலை யிட அம்மாலையை அங்கீ கரித்தவன்; முடியில் அழகான சந்திரனையும், மார்பில் அழகிய பொன் மாலையையும் காட்டி என்னை மயக்கிய வன் எனினுமாம். என் புது நலம்........இகழ்வாரோ - புதியவளாகிய என்னோடு கூடி இன்பம் அனுபவித்த பின், இவள் இனிப் பழையவளாகி விட்டாள் என்று கருதி என்னை இகழ்ந்து அகன்று விட்டாரோ என்ற வாறு. ஒப்பிடுக:

> **என் நலனும் என் நிறைவும் என் சிந்தையும்**
> **என் வளையும் கொண்டு என்னை யாளும் கொண்டு**
> **பொன் அலர்ந்த நறுஞ் செருந்திப பொழிலின் ஊடே**
> **புனல் அரங்கம ஊரென்று போயினாரே.**
>
> —*திருமங்கையாழ்வார், திருநெடுந்தாண்டகம்,* **25.**

## 12. 'என்ன குறை யுடையேன்'

பூங்கழல்தொழு தும்பரவியும் புண்ணியாபுனி தாஉன் [பொற்கழல்
ஈங்(கு)இருக் கப்பெற்றேன் என்னகுறை யுடையேன்
ஓங்குதெங்கிலை யார்கமு(கு)இள வாழைமாவொடு மாது [ளம்பல
தீங்கனி சிதறுந் திருவாரூர் அம்மானே. **4. 20. 4.**

புண்ணிய மூர்த்தியே, மலமற்ற பரிசுத்தனே, உன்னுடைய அழகிய திருவடிகளை வணங்கியும் துதித்தும் பொன்மயமான அத்திருவடிகள் இங்கே (என் மனத்தில்) நீங்காது நிலைபெற்று இருக்கும் பேறு பெற்றேன்; (அதனால் நான்) என்ன குறையை உடையேன். (ஒரு குறையுமில்லை) (வானளாவ) உயர்ந்த தென்னை (வளப்பமான) மட்டைகளை யுடைய கமுகு, இளமையானவாழை, மா, மாதுளை, பலா (முதலிய) மரங்கள் இனிய பழங்களைச் சிந்துகிற (வளம் மிக்க) திருவாரூர்ப் பெருமானே!

தொழுதும்........பெற்றேன் - ஈசனது திருவடிகளை வணங்கியும் பாடியும் வருவார், அவை மனத்தே நிலையாக இருக்கப் பெறுவார் என்றும், அவர்க்கு ஒரு குறையும் இல்லை என்றும் தமது உறுதியை வெளியிடுகிறார். தீங்கனி சிதறும்........அம்மானே - அவ்வூரைப் போன்று நீயும், பலவகை ரசங்களும் அமைந்த கனி போன்ற நின் அடிகளைத் தந்தாய் என்று குறித்தவாறு.

### 13. 'இழித்தேன் பிறப்பினை'

பிறத்தலும்பிறந் தாற்பிணிப்பட வாய்ந்(து) அசைந்து(உ)ட
[லம்புகுந்துநின்(று)
இறக்குமாறு(உ)ளதே இழித்தேன் பிறப்பினைநான்
அறத்தையேபுரிந்த மனத்தனாய் ஆர்வச்செற்றக்கு ரோத
[நீக்கியுன்
திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே. 4. 20. 8.

(பிறப்பு மிக இழிவானது என்பதைக் கருதாது உலகத்திலே) பிறத்தலையும் செய்தால், (உயிர்) ஓர் உடம்புக்குள் புகுந்து (அங்கே) தங்கி, நோய் வாய்ப்பட இசைந்து (மிகவும்) தளர்ந்து இறத்தலும் (கூடவே) இருக்கின்றதே! (ஆதலால்) நான் பிறப்பினை வெறுக்கின்றேன். திருவாரூர்ப் பெருமானே, (நல்ல) தருமத்தையே விரும்பிய மனமுடையவனாய் ஆசை, பகை, கோபம் (இவற்றை) நீக்கி உன் வசப்பட்டவனாய் விட்டேன். (என்னைக் கைவிடாது ஆண்டருள்க.)

*பிறத்தலும்........நான் - யான் பிறந்த சிறிது காலத்திற்குள், பிறப்போடு இறப்பும் வருமே யென்று உணர்ந்து, பிறவியை வெறுத்தேன் என்றுமாம். அப்பர் இளமையிலே உலகம் நிலையாமையை உணர்ந்து, அறங்களைச் செய்து துறவு பூண்டமை இங்கு ஞாபகத்தில் வைக்கத் தக்கது.*

## *14. 'பரமனே பரம யோகி'*

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ இகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்(து) ஆடு கின்ற
அத்தாஉன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே.

**4. 23. 1.**

*(நான் உண்மையான) பக்தனாய் உன்னைப் பாட மாட்டாதவன் பரம்பொருளே, (யோகிகளுக் கெல்லாம்) மேலான யோகியே! உன்னிடத்து நான் எவ்வகையால் பக்தி செய்வேன்! (ஆயினும், அவ்வகை அறியாதவன் என்று) என்னை நீ இகழ்ந்து தள்ளிவிட வேண்டாம். முத்தியை அளிக்க வல்லவனே, (யாவர்க்கும்) முதல்வனே தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் (ஆநந்தத்) தாண்டவம் செய்யும் (என்) அப்பனே! உன்னுடைய (அந்தத் திவ்விய) நடனத்தைக் காணும் பொருட்டே அடியவனாகிய நான் இப்பொழுது வந்தேன் (அருள்புரிவாயாக.)*

*உண்மையான பக்தராயிருந்தும் நாயனார் தம்மை இவ்வாறு கூறியதற்குக் காரணம்: (1) தம்மைத் தாழ்வாகக் கருதும் இயல்பு. (2) பூரண பத்தியையே நோக்கமாகக் கொண்டவர்க்குத் தம்மிடத்திலுள்ள பக்தி குறைவாகத் தோன்றுதல். (3) இறைவனது அருள் இல்லாத போது பக்தி உண்டாகாமையே மனித இயல்பு என்பது. (4) பக்தி யில்லாத உலகத்தாரோடு தாம் ஒன்றி யிருந்து கூறியது; இவைகளுள் ஒன்றையேனும் பலவற்றையும் கொள்ளலாம்.*

17

### 15. 'கரும்பினிற் கட்டி போல்வார்

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி
அரும்போடு மலர்கள் கொண்டு (ஆ)ங்(கு) ஆர்வத்தை
[உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே.
4. 31. 4.

(விடியற் காலத்தில்) நீராடி, (அருட்) பித்தராகிய பெருமானிடத்துப் பக்தி யுடையவராய், அரும்புகளையும் பூக்களையும் கைக்கொண்டு (அருச்சனை செய்வதில்) ஆசையை மனத்தினுள் வைத்து, உள்ளன்போடு திரு விளக்கையும் தூபத்தையும் முறைப்படி இட வல்லவர்க்குத் திருக்கடவூர் வீரட்டத்துப் பெருமான் கரும்பினின்றும் பெற்ற வெல்லக் கட்டிபோல் இனியவரா யிருப்பார்.

காலை மூழ்கல் சரியையும், மலர்களை இடுதலும் தூப மிடுதலும் கிரியையும், 'ஆர்வத்தை உள்ளே வைத்தலும் பித்தர்க்குப் பத்தராதலும் யோகத்தையும், கரும்பினிற் கட்டிபோல் இறைவனை அநுபவித்தல் ஞானத்தையும் குறிப்பன. சரியை கிரியை யோகம் எனும் மூன்று படிகளிலும் நின்று மேல் வருவார்க்கு ஞானம் கிட்டும் என்றார்

### 16. 'கலந்தபின் பிரிவதில்லை

தொண்டலால் துணையு மில்லை
தோலலா து(உ)டையு மில்லை
கண்டலா தருளு மில்லை
கலந்தபின் பிரிவ தில்லை
பண்டைநான் மறைகள் காணாப்
பரிசின னென்றென் றெண்ணி
அண்டவா னவர்க ளேத்தும்
ஐயன்ஐ யாற னார்க்கே. 4. 40. 4.

பழமையான நான்கு வேதங்களும் கண்டறிய முடியாத தன்மையுடையவன் என்று எண்ணி எண்ணிப் பல

அண்டங்களிலும் உள்ள தேவர்களெல்லாம் துதிக்கும் தலைவராகிய திருவையாற்றுப் பெருமானுக்கு (அடியார்களுடைய) தொண்டையன்றித் துணை வேறில்லை; தோலையன்றி வேறு உடையும் இல்லை; அவர் அடியார்க்குச் செய்யும் அருள், காட்சிதருதலன்றி வேறில்லை. (அவர் அடியார் மனத்தினுள்ளே) கலந்தபின் (அவ்விடத்தை விட்டு) நீங்குதலும் இல்லை.

தொண்டலால் துணையுமில்லை - மெய்யடியார்களல்லாது அவனுக்கு வேண்டியவர்கள் வேறு இல்லை எனினுமாம்.

## 17. 'உணர்வை நல்காய்'

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறி கடல் ஓடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ(து) அறிய்
[வொண்ணு(து)
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே.
4. 46. 2.

மனம் என்று சொல்லப்படும் தோணியைக்கொண்டு புத்தி என்னும் ஓடக் கோலை ஊன்றி (நிறுத்தி) கோபம் என்னும் சரக்கை (அத் தோணியில்) ஏற்றிக்கொண்டு (உலக வாழ்க்கையாகிற) துன்பம் மிக்க கடலிலே போகும்போது, அகங்காரம் என்னும் பாறையில் மோதிக் கவிழும் நிலையில் (கலக்கத்தாலே புத்தி எதையும்) அறியமுடியாது; (அப்போதும் எப்போதும்) உன்னை நினைக்கும் நல் உணர்வை அளித்தருள்வாயாக, திருவொற்றியூரை ஆளும் அரசே!

பிறவிக் கடலிலே செல்லும் மக்கள் வாழ்க்கையாகிய படகிலே ஏற்றியுள்ள சரக்குகள் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்சரியம் என்பவைகளே யாம். இப்படகு அகங்காரம் எனும் பாறையில் மோதிக் கவிழ்தல் திண்ணம். ஆதலின் கரையேறும் வழி ஆண்டவனைத் தியானிப்பதே என்கிறார்.

### 18. ‘ உபாயம் பற்றி உகக்கின்றேன் ’

மெய்யுளே விளக்கை ஏற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம்பற்றி உகக்கின்றேன் உகவாவண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சாலச்
செய்வ(து)ஒன்று அறியமாட்டேன் திருப்புக லூர னீரே.

4, 54. 9.

என் உடம்பின் உள்ளே (உனது அருளாலே ஞான) விளக்கை ஏற்றி, அதை வேண்டிய அளவு மேலே தூண்டி (அதன் உதவியால்) உய்விக்கும் ஓர் உபாயத்தை (அறிந்து) கடைப்பிடித்து, (அதனாலே சிறிது) மகிழ்கின்றேன். இம் மகிழ்ச்சிக்கு இடையூறாக (ஐம்புலன்களாகிய துஷ்டர்) ஐந்துபேரை என் உள்ளே இருக்கச் செய்துள்ளீர்; அவர்களே (என்னிலும்) மிக வலியவர்கள். (ஆதலால்) இன்னது செய்வதென்று அறிய மாட்டாதவனாயிருக்கிறேன், திருப்புகலூர்ப் பெருமானே !

### 19. ‘ உய்யலாம் நெஞ்சினீரே ’

மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்த ழுந்தி வேதனைக் கிடமா காதே
கனையுமா கடல்சூழ் நாகை மன்னுகா ரோணத் தானை
நினையுமா வல்லீ ராகில் உய்யலாம் நெஞ்சி னீரே.

4. 71. 1.

மனமுடையீர் ! மனைவி, தாயார், தகப்பனார், குழந்தைகள் பிற சுற்றத்தார்கள் என்று சொல்லப்படுகிற வினைக்கடலிலே அகப்பட்டு (வெளியேற மாட்டாமல்) அழுந்தித் துன்பப்படுவதற்கு இடமாகாமல், இரைச்சலிடும் பெரிய கடல் சூழ்ந்த நாகபட்டினத்தில் உள்ள காரோகணப் பெருமானை முறைப்படி நினைக்க (தியானிக்க) வல்லீராயின் (நீர்) உய்யலாம்.

நெஞ்சினீரே—உய்யும் மனமுடையீரே என்றுமாம். உய்யவேண்டும் என்னும் விருப்பம் ஒன்றே போதும், விருப்ப மிருப்பின் இறைவனை நினைப்பீர்கள். நினைக்க முடியுமாயின் உய்வது உறுதி என்றவாறு.

ஒப்பிடுக :

தந்தை தாய் மக்களே சுற்றமென்று உற்றவர் பற்றிநின்ற
பந்தமார் வாழ்க்கையை நொந்து நீ பழியெனக் கருதினாயேல்
அந்தமாய் ஆதியாய் ஆதிக்கு மாதியாய் ஆயனாய
மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவுநெஞ்சே.
—பெரிய திருமொழி, 9. 7. 1.

## 20. 'கழல் அடி காணலாமே'

உடம்(பு)எனும் மனைஅகத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிர்எனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழல்அடி காணலாமே. 4. 75. 4.

உடம்பு என்னும் வீட்டுக்குள்ளே மனமே அகலாக, அறியாமை நீங்குதற்குக் காரணமான நல் உணர்வாகிய நெய்யை ஊற்றி, உயிர் எனப்படும் திரியைச் சேர்த்து விசாலமான (ஆத்ம) ஞானமாகிய தீயால் (விளக்கை) பற்றச்செய்து (அவ்வொளியில்) இருந்து (ஆழ்ந்து) பார்த்தால் கடப்பமலர் மாலையை விரும்பும் முருகனுடைய தந்தையாரின் வீரக் கழல் அணிந்த திருவடிகளை (அங்கே) காணலாம்.

உணர் - உலகம் நிலையற்றது, சிவம் மெய்ப்பொருள் என்ற தெளிந்த அறிவு. உயிர் எனும் திரி - உயிரினிடம் தெளிவான அறிவு உண்டாகும்போது, சிவத்தின் அருளொளி அதனிடம் சேருமாதலின், உயிர் திரியாயிற்று.

## 21. 'காயமே கோயிலாக'

காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.
4. 76. 4.

உடம்பே கோவிலாகவும், (புலன்களின் வழிப் படாது) காக்கப்படுகிற மனம் (கோவிலில் தொண்டுகள்

செய்யும்) அடிமையாகவும், வாய்மையே (கோவிலின்) பரிசுத்தமாகவும், (அப்பரிசுத்தம் பெற்ற) மனத்தி லுள்ள ஒளியே அழகிய இலிங்கமாகவும் (கொண்டு), அன்பே (பக்தியே) நெய்யும் பாலுமாக நன்கு நிறைய அபிஷேகம் செய்து துதியை உணவாக்கி, ஈசனுக்குப் பூசனை செய்யும் முறையைக் காட்டினேம்.

முதலில் இவ்வாறு அபிஷேகம் நடத்தி மானஸிக மாகத் திரு ஆராதனம் செய்வோம் என்றவாறு. போற்றவி - போற்று (துதியை) அவி (உணவு) (ஆக). மனமணி - மனத்தில் உள்ள (இறைவனது) (ஞான) ஒளி, ஒளிவடிவான இறைவன்.

## 22. 'சிந்தித்து எழு மனமே'

சிந்தித்(து) எழுமன மேநினை யாமுன் கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்கவல் லானைப் பசுபதியைச்
சந்தித்த கால மறுத்துமென் றெண்ணி யிருந்தவர்க்கு
முந்தித் தொழுகழல் நாடோறும் நந்தமை ஆள்வனவே.

4. 82. 5.

(என்) மனமே திருக்கழுமலத் தலத்தை எப்பொழு தும் நினைத்திரு. தன்னை நினைக்கு முன்னமே (ஒரு முறை நினைத்த மாத்திரத்திலே) (நம்மைப்) பிடிக்கும் கொடிய வினைகளைத் தீர்க்க வல்லவனும் (உயிர்களாகிய பசுக்களுக்குத் தலைவனுதலால்) பசுபதியுமாகிய எம்பெரு மானை நேரே தெரிசிக்கும் காலத்திலே தாம் வினையை அறுப்போம் என்று எண்ணி, (அவனைத் தெரிசிக்க இய லாமலும் நினையாமலும் வறிதே) இருப்பவர்களுக்கு முந்தி (நீ) வணங்கு; திருக்கழுமலப் பெருமானுடைய வீரக் கழல் அணிந்த திருவடிகளே எந்த நாளும் நம்மை ஆட்கொள்வன.

சிந்தித்தெழு........கழுமலத்தை—(உறங்கி விழித்த தும்) (வேறு ஒன்றை) நினைக்கு முன்பே திருக்கழுமலத் துப் பெருமானைத் தியானித்து எழுந்திரு என்னுமாம். சந்தித்த கால மறுத்தும்....இருந்தவர்க்கு—(சிவபெரு

மான் இருப்பதை யாம் அறியோமாதலின்) அவனைக் கண்டபின் நமது பாவங்களைப் போக்க வழிதேடிக் கொள்ளலாம் என்று துணிந்து நாத்திகராய்க் காலங் கழிப்பவர்க்கு (உரிய காலம்) வரும்போது (வினையை) அறுத்துக் கொள்வோம், இது கால மன்று என்று எண்ணிச் சும்மா இருந்தவர்க்கு எனினுமாம்.

## 23. 'அருள்தரு கை கொடுத்து ஏற்றும'

இருள்தரு துன்பப்படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருள்தரு கண்ணிழந்(து) உண்பொருள் நாடிப் புகல்
இழந்த
குருடருந் தம்மைப் பரவக் கோர்நர கக்குழிநின்(று)
அருள்தரு கைகொடுத்(து) ஏற்றும்ஐ யாறன் அடித்தலமே
4. 92. 4.

திருவையாற்றுப் பெருமானுடைய திருவடிகள் (புத்திக்கு) மயக்கத்தைத் தரும் துன்பத் திரை மறைப்பதனாலேயே மெய்ஞ்ஞானம் என்னும் உண்மைப் பொருளை அறிவிக்கும் (அகக்) கண்ணை இழந்து, (உலகத்திலே) போக்கியமான (பொய்ப்) பொருள்களை விரும்பி (சிறந்த) புகலிடத்தைக் கைவிட்ட குருடர்களும், தம்மைத் துதித்த மாத்திரத்திலே (அவர்களைக்) கொடிய நரகத்தினின்றும் அருளாகிய கையைக் கொடுத்துக் கரை ஏற்றும். (ஆதலால் அத் திருவடிகளைச் சரண மடையுங்கள் என்றவாறு.)

## 24. 'தோன்றாத் துணையாய் இருந்தனன்'

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்து(உ)கந் தான்மனத் துள்இருக்க
ஏன்றான் இமையவர்க்(கு) அன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடி யோங்
களுக்கே. 4. 94. 1.

எல்லா உயிர்கட்கும் பெற்ற தாயும் ஆகித் தந்தையும் ஆகி, உடன் பிறந்தவர்களும் ஆகி சுவர்க்கம், பூமி

பாதளம் என்னும் மூன்று வகையாக உலகங்களையெல்லாம் படைத்தலை விரும்பினான். மனத்துள்ளே (சென்று) இருக்க மேற்கொண்டுள்ளான். தேவர்களுக்கும் அன்புடையவன். தன் அடியார்கள் பொருட்டுத் திருப்பாதிரிப் புலியூரிலே கண்ணுக்குத் தோன்றாத் துணையாக எழுந்தருளி யிருக்கின்றான்.

இறைவன் ஈன்றாளுமாய் உலகம் படைத்துகந்தான். படைத்தபின் உயிர்களின் நன்மையைக் கருதித் தந்தையுமாய் உயிர்களின் நெஞ்சத்தில் இருக்க விரும்பினான். உடன் தோன்றியவரைப் போன்று இமையவர் மீது அன்புடையவனாய் அவர்க்கு நேரும் துன்பங்களை நீக்குபவன் ஆனான். தன் அடியார்கட்குத் தாயும் தந்தையும் உடன் பிறந்தாருமாக நின்று மறைவாகக் காப்பவன் என்றவாறு. கல்லோடு சேர்த்துக் கட்டிக் கடலிலே போடப் பெற்ற வாகீசர், பெருமானை நினைத்துத் துதித்த பொழுது அக்கல்லே தெப்பமாகி மிதக்க, அதன் உதவியால் திருப்பாதிரிப்புலியூரின் சமீபத்திலே கரை சேர்ந்து ஆநந்த மேலீட்டோடு அவ்வூர்ப் பெருமானைத் துதித்துப் பாடியது, ‘ஈன்றாளுமாய்’ என்று தொடங்கும் இப்பதிகம்.

## 25. ‘வழுவாதிருக்க வரந்தரவேண்டும்’

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்அடி என்மனத்தே
வழுவா(து) இருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க்(கு) இரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீ வண்
ணனே.] 4. 94. 8.

புண்ணிய மூர்த்தியே! (நான்) புழுவாகப் பிறந்தாலும் (அப்பிறவியிலும்) உன் திருவடிகள் என் மனத்தினின்றும் நழுவாமல் இருக்க (உன் திருவடித் தியானத்தை நான் மறவாமல் இருக்க) எனக்கு வரம் தந்தருள வேண்டும். இவ்வுலகத்திலே (உன்னை) வழிபடும் அடியவர்க்கு இரங்கித் திருப்பாதிரிப்புலியூரிலே கோவில்கொண்டு

இருந்து (அவர்களுக்கு) அருளைச் செய்கின்ற வளப்பமிக்க நீரையுடைய கங்கையைச் சிவந்த சடையிலே தரித்துள்ள தீப்போலும் செந்நிறமுடையவனே.

உன் திருவடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் பெற்றால், புழுப்போன்ற எப்பிறவியாயினும் அதனை அஞ்சேன் என்கிறார். பிறக்கினும்—உன் அருளைப்பெற்ற எனக்கு இனிப் பாவத்தால் பிறவி வராது என்பது திண்ணம்; ஒருக்கால் உனது திருவுள்ளத்தால் எனக்குப் பிறவி வந்தாலும்.

ஒப்பிடுக:

**'எழுவகைத் தோற்றத்து இன்னுப் பிறப்பின், என் பொழியாக்கையுட் சேர்ப்பினும், அவர்பால் அன்பொழியாமை அருண் மதி யெனக்கே'—(திருவரங்கக் கலம்பகம்) (அவர்பால்—அடியார்கள்பால்)**

அகலிகை சாப விமோசனம் அடைந்தபின், இராமபிரான் வரங் கேட்குமாறு அருள, அவள், 'உன்னுடைய திருவடித் தாமரைகளில் இடையறாத பக்தி வாய்க்குமாயின், பன்றிப் பிறவியை எடுப்பதற்கும் அஞ்சேன்' என்றாள்.

'ஞானமற்றவர்க்குச் சிற்றின்பங்களிலுள்ள பிரீதியைப் போன்று இடைவிடாத பிரீதி எனக்கு உன்மேல் உண்டாகும்படி வரந்தருக' என்று பிரஹ்லாதரும் இறைவனை வேண்டினர்.

26. 'உன்தாள் என்தன் நெஞ்சத்து எழுதியவை

வெம்மை நமன்தமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மைஉன் தாள்என்தன் நெஞ்சத்(து) எழுதிவை ஈங்கி
கழில்
அம்மை அடியேற்(கு) அருளுதி என்பதிங்(கு) ஆர்அறிவார்
செம்மை தருசத்தி முற்றத்(து) உறையுஞ் சிவக்கொழுந்தே.
4. 96. 6.

கொடிய யமதூதர்கள் மிகவும் நெருங்கி (என்னை) இறக்கச் செய்தற்கு முன்னம், இவ்வுலகத்து வாழும்

போதே, உன் திருவடிகளை என் மனதிலே பதியவைத்து அருள்வாயாக. (அவ்வாறின்றி) (இம்மையில் அருளாது போயின்) மறுமையில் நீ எனக்கு அருள்செய்வாய் என்பதை யார் அறிவார்கள்? (தன்னிடத்தே வாழ்வோர்க்கு) சிறப்பைத் தருகின்ற திருச்சத்தி முற்றமென்னும் தலத்தில் எழுந்தருளிய சிவக்கொழுந்தீசனே.

இம்மை........அறிவார்—இறக்குமுன்பே இவ்வாழ்க்கையிலேயே அருள்செய்க; இறந்தபின் நீ அருள் செய்வாய் என்பதை இவ்வுலகத்தார் எப்படி அறிந்து தாமும் உய்வர்? எனக்கு இவ்வுலகத்தில் நீ அருள் செய்வையாயின் உன்னை நம்பும் அடியார்க்கு நீ அருள் செய்வதை உலகம் அறிந்து உன்னிடம் ஈடுபடும்; செய்யாயாயின், உலகத்தார் நீ எனக்கு அருள் செய்வதைக் காணாது ஒழிவார் என்றவாறு. நீ காப்பதில் உலகத்தார்க்கு நம்பிக்கை வருமாறு அருள்செய் என்பதன் வாயிலாகத் தமது பெருங் காதலையும் ஆற்றாமையையும் தெரிவிக்கிறார் எனினுமாம். இத்தலத்திலே அப்பர் சிவபெருமானுடைய திருவடிகளைத் தம் உள்ளத்தில் பதியவைக்கும்படி வேண்டிக்கொள்ள, இவ்வேண்டுகோள் அடுத்ததாகிய திருநல்லூர் என்னும் தலத்திலே நிறைவேற்றி வைக்கப்பெற்றார். அத்தலத்துப் பதிகத்தின் திருப்பாடல்தோறும் இறுதியில் 'திருவடி என் தலைமேல் வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே' என்று 'ஒழியாத்தனம் பெரிதும் பெற்று உவந்த வறியோன் போல' மனந்தழைத்துப் பாடியுள்ளார்.

## 27. 'இரங்காய் கச்சி ஏகம்பனே'

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்(று)என் உள்ளமும் நானுங் கிடந்தழிந் தெய்த்
தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவால வாயா திருவா ரூரா
ஒரு பற்(று) இலாமையுங் கண்(டு)இரங் காய்கச்சி யேகம்
பனே. 4. 99. 6.

*திருவொற்றியூரிலும், திருவால்வாய் எனப்படும் மதுரையிலும், திருவாரூரிலும், திருக்கச்சி யேகம்பத்தி (ஒருங்கே) எழுந்தருளியுள்ள பெருமானே! கர்ப்பத்திலே பொருந்திய நாள்முதலாக உன்னுடைய திருவடிகளையே காண என்மனம் உருகுகின்றது. நானும் (பலவாறு பிறவிக் கடலில்) கிடந்து உழன்று சலித்துவிட்டேன். (அவ்வாறு துன்புற்றதையும், எனக்கு) (உன்னையன்றி) வேறு ஒரு பற்றும் இல்லாமையையும் அறிந்து எனக்கு இரங்கி யருள் புரிவாயாக.*

## 28. 'இன்னல் களைவன இணையடியே'

மன்னு மலைமகள் கையால் வருடின மாமறைகள்
சொன்ன துறைதொறுந் தூப்பொருளாயின தூக்கமலத்
தன்ன வடிவின அன்புடைத் தொண்டர்க் கமுதருத்தி
இன்னல் களைவன இன்னம்பரான்றன் இணையடியே.

**4. 100 1.**

*திரு இன்னம்பரில் எழுந்தருளிய பெருமானுடைய இரண்டு திருவடிகளும் நிலைபெற்ற பார்வதி தேவியாரின் திருக்கரங்களால் தடவப்பெற்றவை; சிறந்த வேதங்கள் சொல்லிய பல மார்க்கங்களிலும் (ஒன்றாக விளங்கும்) சுத்த (சத்துவப்) பொருளாகி யுள்ளன; தூய்மையான தாமரைப் பூப்போலும் வடிவமுடையன; தம்மிடத்து அன்பு (பக்தி) உடைய அடியார்களுக்குச் (சிவானந்தமாகிய) அமுதத்தை ஊட்டி (அவர்களுடைய) பிறவித் துன்பங்களை யெல்லாம் போக்குவன.*

*தூப்பொருளாயின-வேதம், இருடியர்களின் வாயாற் பலவாறு கூறப்படினும் எச்சிற்படாத தூய்மை பொருந்தியனவாம்; எவ்வாறெனின் வேதங்கள் இறைவனைப் பற்றிக் கூறும்பொழுதெல்லாம அவனது தன்மை மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதது என்று கூறி வருதலின்.*

*ஒப்பிடுக :*

**'பரம்பொருள் ஒன்றே எச்சில் இல்லாதது, ஏனெனில் அது மனிதர்து வாயினால் சொல்ல முடியாதது.**

*—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.*

## 29.

தன்னைச் சரணென்று தாள்அடைந்
 தேன்றன் அடியடையப்
புன்னைப் பொழில்புக லூர்அண்ணல்
 செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்(பு)அறுத்(து) என்வினை
 கட்டறுத்து ஏழ்நரகத்(து)
என்னைக் கிடக்கவொட் டான்சிவ
 லோகத் திருத்திடுமே. 4. 105. 1.

*அவனைச் சரணமாக நம்பி, அவனுடைய திருவடிகளை அடைந்தேன். அவ்வாறு நான் அடி அடையவே, புன்னைச் சோலைகள் மிக்க திருப்புகலூர்ப் பெருமான் (எனக்கு) செய்யும் நன்மைகளைக் கேளுங்கள் : என்னைப் பிறப்பினின்றும் நீக்கி, என்னுடைய (இரு) வினைகளையும் களைந்து தொலைத்து என்னை எழுவகை நரகத்திலே (விழுந்து) கிடக்கவொட்டாதவனாய்ச் சிவலோகத்திலே இருக்கச் செய்வான்.*

## 30. 'திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்'

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
 விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்ஆவி காப்பதற்(கு) இச்சைஉண்
 டேல்இருங் கூற்(று)அகல
மின்னாரு மூவிலைச் சூலமென்
 மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
 மாடச் சுடர்க்கொழுந்தே. 4. 109. 1.

*(உன்னுடைய) பொன்போன்ற திருவடிகளுக்கு (நான் செய்துகொள்ளும்) விண்ணப்பம் ஒன்று உளது. (அதாவது) (உன்னை அன்போடு) துதிக்கும் என் உயிரைப் பாதுகாப்பதற்கு (உனக்கு) விருப்பமுண்டானால், பெரிய (கொடிய) யமன் (என்னிடம் நெருங்காமல்) வில*

கும்படி, மின்னல்போல் ஒளிமிக்க (உனது) மூன்று (கவர்த்த) இலை (வடிவமான) சூலத்தை (திரிசூல முத்திரையை) என் தோளில் பதியச் செய்வாயாக. (மேலே பொருந்திய) மேகங்கள் நெருங்குவதற்கு இடமான (சிறப்பு) மிக்க பெண்ணாகடம் என்னும் ஊரிலேயுள்ள திருத் தூங்கானை மாடமென்னும் ஆலயத்தில் அமர்ந்த ஒளிப் பிழம்பாகிய இறைவனே.

இருங்கூற்று அகல—பிறப்பு இறப்புகளினின்றும் நீங்க. இங்கே வாகீசர், சிவ தீக்ஷைக்குரிய சின்னங்களாகிய இடப முத்திரை திரிசூல முத்திரை இவற்றைத் தம்மீது பதிக்கும்படிப் பெருமானை வேண்ட, அவரும் அவ்வாறே அவ்வேண்டுகோளை நிறைவேற்றினார்.

## 31. 'அல்லல் என் செயும்'

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமைபூண் டேனுக்கே. 5. 1. 4.

தில்லையாயே சிறந்த நகரத்திலே சிற்றம்பலமுடைய பெருமானாரிடத்து அளவற்ற அடிமைபூண்ட என்னை (இப்பொழுது வரக்கூடிய) துன்பங்கள் என்ன செய்யும். கொடிய பாவம் என்ன செய்யும்? பழமையான வலிய வினைத்தொடர்புதான் (கர்மபந்தம்) என்ன செய்ய முடியும்? (எவையும் ஒரு தீங்கும் செய்யமாட்டா.)

அல்லல்—சாதாரணமாக விளையும் துன்பம். அருவினை—தடுக்கமுடியாதபடித் துன்பத்தை விளைக்கும் பழவினைகள். தொல்லை................தொந்தம்—அநாதியாகத் தொடர்ந்து வருவதும் பிறவிகளை மீண்டும் மீண்டும் எடுக்கச் செய்வதுமான கருமத்திற்குக் காரணமான அஞ்ஞானத் தொடர்பு. அல்லல், அருவினை, வல்வினைத் தொந்தம்—முறையே பிராரர்த்தம், ஆகாமியம், சஞ்சிதம் ஆகவுமாம். தம்மை எவ்வகைத் துன்பங்களும் அணுகமாட்டா என்னும் உறுதியைத் தெரிவிக்கிறார்.

## 32. 'மறந்து உய்வனே'

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந்(து) உய்வனே. 5. 2. 1.

*பனைபோன்ற துதிக்கையையும் மூன்று மதங்களையும் உடைய (தாருகவனத்து இருடிகள் ஏவிய) யானையை (கொன்று அதன் தோலை) உரித்தவனும், தன்னை (அன்போடு) நினைப்பவர் மனத்தை (எப்போதும் தனக்கு) இருப்பிடமாகக்கொண்டு வீற்றிருப்பவனும், (அவரவர் நினைக்கும்) எல்லா வடிவமும் கொள்பவனுமான, சிற்றம்பலத்திலே கூத்தாடும் பெருமானை, ஒரு தினையளவு நேரமும் (நினையாது) மறந்தால் (நான் உய்வடைவேனோ!*

*பனைக்கை.......கொண்டவன்—தன்னோடும் பகைமைகொண்டு எதிர்ப்பாரை எளிதில் வெல்பவனாயினும், தன்னை அன்போடு சிந்திப்பாரிடத்துத் தான் பேரன்பு கொண்டு, அவரது மனத்தையே கோயிலாகக் கருதி விரும்பி வாழ்பவன் என்றவாறு. தினைத்தனை........மறந்துய்வனோ—என் நெஞ்சில் பேரன்போடு குடியாக வாழ்பவனை ஒரு கணம் நான் மறப்பினும் அது செய்ந்நன்றி கொன்றமையாகுமாதலின் நான் உய்ய முடியுமோ?*

*ஒப்பிடுக :*

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. —திருக்குறள்.**

*அவ்வனை மறவாதிருப்பதினாலேயே, அவனைப் பற்றிய நினைவு இருப்பதினாலேயே, நான் உலக நினைவுகளில் நீங்கி யிருக்கிறேனாதலின், அவனை மறந்தால் ஐம்புல வசப்பட்டு அல்லற்படுவது திண்ணம் என்றாராதலுமாம். அவன் எனக்கு உயிர்போன்று இன்றியமையாதிருப்பதினால், அவனை ஒரு கணம் மறந்தாலும் என் உயிர் தரியாது என்று தமது அன்பின் திறத்தை அறிவிக்கிறார் எனினுமாம்.*

33. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. 5. 19. 9.

நமது முருகக்கடவுளைப் பெற்றவளான உமா தேவியை ஒரு பக்கத்திலுடையவனும், தெற்கேயுள்ள திருக்கடம்பூர்த் தலத்திலுள்ள திருக்கரக் கோயிலில் எழுந்தருளி யிருப்பவனுமான பெருமான் தன்னுடைய கடமையாவது; (கேவலமான) அவனது அடிமையான என்னையும் பேணிப் பாதுகாத்தலாம்; எனது கடமை யாவது, அவருக்கு (இடைவிடாது) திருத்தொண்டு செய்து, (எனக்கென் ஒன்றுமில்லாது, எல்லாம் அவனே யென்று கிடத்தலே.

இறைவனுக்கும் எனக்கும் அழியாத ஒரு சம்பந்தம் உண்டு; அது யாதெனில், அவன் ஆண்டான், நான் அவனது அடிமை யென்பது. (தாஸமார்க்கத்தை நிலைநாட்டவே அப்பர் சுவாமிகள் அவதரித்தார்.) இருவர்க்கும் உறவு உள்ளமையால், இருவரும் ஒருவர்க்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைப் பெற்றுள்ளவர். ஆண்டவனது கடன், தகுதியில்லாத என்னையும் தனக்கே அடைக்கலமான அடிமை யென்றெண்ணி, அருளால் என்னைத் தீ நெறியில் விழவிடாது ஆதரித்துக் காத்து உய்யும்படிச் செய்தலே. எனது கடன் ஆண்டானுக்கு மனமுவந்த பணிவிடைகளைச் செய்து, எல்லாம் அவனருள் என்று பற்றிக்கிடத்தலே. செய்துகிடத்தலே - ஆண்டவன் மீதுள்ள அன்பால் எல்லாத் தொண்டுகளையும் செய்யினும், 'எல்லாம் அவன் செயல், ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்று நினைந்து உயிரற்ற பொருள்போலத் தனக்கென ஒன்றும் இன்றிக்கிடத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கும். படுத்தல் உயிருள்ள பொருளின் தொழில் ஆனால் கிடத்தல் உயிரற்ற பொருளின தொழில். பணிசெய்தல் ஞானத்தாலும் அன்பா

னும் உண்டாவது; கிடத்தல், நமது ஆன்மாவுக்கு அவன் உயிராதலின், அவனது துணையில்லாதபோது ஆன்மா உயிரற்ற உடலே போன்றது என்னும் மெய்ஞ்ஞானத்தால் தற்போதம் ஒழிந்து நிற்றல்.

ஒப்பிடுக :

(1) "நம் இருவர்க்கும் இடையே ஓர் ஒப்பந்தம் உள்ளது" (ஈசன் உயிரைநோக்கிக் கூறுவதாக பைபிளில் கூறப்பட்டுள்ளது.) (2) 'எல்லா அறங்களையும் விட்டுவிட்டு என்றனையே சரண்புகுக, நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் முற்றும் விடுவிப்பேன், துயருறுதே' (கண்ணபிரான் அருச்சுனர்க்குக் கூறிய உபதேசம் கீதை, 18-66; இதில் இருவரது கடமைகளையும் உற்றுநோக்கி ஒப்பிடுக.) (3) 'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே' (குலசேகரர்)

### 34. 'என்னிலும் இனியான் ஒருவன்'

என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்(கு)
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே. 5. 21. 1.

என்னைவிட எனக்கு இனிமையானவர் (மானுடரில் எவரும்) இல்லை; (ஆனல்) என்னையும் விட இனியவன் ஒருவன் இருக்கின்றான். (அவன் யாரெனில்) என் உடம்புக்குள்ளே ஆவி (மூச்சு) ஆகி வெளியிலே வந்தும் உள்ளே போகியும் எனக்குள் (அந்தர்யாமியாய்) நிற்கும் திரு இன்னம்பர்ப் பெருமானே யாவான்.

என்னிலாரும்........யாரில்லை - பிறரிடத்து ஒருவன் பிரியம் செய்வதெல்லாம் தனது சந்தோஷத்துக்காகவே யாகும்; தன்மேல் உள்ள இனிமையினால் தான் பிறரிடம் பிரியமாயிருக்கிறானதலின், தன்னிலும் இனிய பிறர் ஒருவற்கு இல்லை. என்னிலும்....உளன் - யான் என்னிடத்துக் கொள்ளும் பிரியத்திலும், மிக்க பிரியம் என்னிடம் கொண்டு எனது நன்மையையே (நான் அறியாத போதும்) கோரி முயன்று வருதலின் ஈசன் என்னைக் காட்டிலும் எனக்குப் பிரியமானவன்; என்னை அறியா

மையால் யான் கெடுக்க நினைத்தாலும் அதற்கு இடங் கொடாதவன் ஈசன். உயிர்ப்பாய் - உயிர் தருபவனாய்; உயிர்க்கு உயிராய் இருப்பவனாய் என்றலுமாம். புறம் போந்து....ஈசன் எனக்குப் புறத்தே கண் காணத் தோன்றி நிற்பவனும், மீண்டும் என் நெஞ்சினுள்ளே புகுந்து நிற்பவனும் ஆன ஈசன். ஈசன் உள்ளும் புறமும் தமக்குக் காட்சி தருதலின் இவ்வாறு கூறினார் என்னலுமாம்.

## 35. 'வானங் காட்டுவர்'

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்
தானங் காட்டித்தன் தாள்அடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே. 5. 26. 3.

திருவன்னியூர்ப் பெருமான் தம்மை அடைந்தவர்களுக் கெல்லாம் ஞான ஒளியைக் காட்டுவார். (அதைப் பெறுதற்குரிய) நல்ல பக்தி மார்க்கத்தைக் காட்டுவார். உயர்ந்த நிலையைக் காட்டுவார். அப்படிக் காட்டிய பின் தமது திருவடிகளை அடைந்தவர்களுக்கு அழியாத நாடாகிய கைலாயத்தையும் காட்டுவார்.

சிவபெருமானார் தம்மை அடைந்தவர்க்கு முதலில் அறிவொளியைக் கொடுத்து, அதனால் பிறவித் துன்பத்தை உணர்த்தி அதை ஒழிக்கும் சிகிச்சையை உண்டு பண்ணுவார்; பின் அதற்குரிய நல்ல பக்தி நெறியைக் காட்டுவார். பின் பக்திநெறியின் உயர்ந்த நிலையாகிய சிவாநந்தப் பெரும் பேற்றைக் காட்டுவார். அதன் பின் அந்த ஆனந்தத்தை எப்போதும் இடைவிடாது அநுபவித்தற்குரிய இடமாகிய திருக்கைலாய மெனும் முத்தியுலகையும் காட்டுவர் (தருவர்) - இவ்வாறு படிப்படியாக உயிர்களை உயர்த்தி வருவார் என்றபடி.

## 36. 'அருகு நின்றிடும்'

திருகு சிந்தையைத் தீர்த்துச்செம் மைசெய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்(து)

என்று (அவர்) விடை கூறினார். 'நான் பிழைத்தேன்' என்று மனமுவந்து எழுந்து ஓடி வந்தேன்; (அவர் மறைந்துவிட்டார்.) திருவாய்மூர்ப் பெருமான் கணக்கிலா மாயத் திருவிளையாடலில் வல்லவராயிருக்கிறார்.

அப்பர் திருமறைக்காட்டி லிருக்கும்போது, சிவபெருமான் ஒரு வேதியராய் அப்பர்முன் தோன்றி, 'திருவாய்மூருக்கு வா' என்று கட்டளையிட்டு முன்னே சென்றார். அவ்வாறே அப்பர் சம்பந்தரும் உடன்வர, வேதியரைப் பின்தொடர்ந்து சென்றபோது, வாய்மூரைச் சமீபித்தவுடன் வேதியர் மறைந்துவிட, அப்பொழுது பாடப் பெற்றது இப்பதிகம்.

38. 'உள்ளத்தே மாதும் தாமும் மகிழ்வார்'

ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்உணர் வார்கட்குப்
பேத மின்றி அவர்அவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே. 5. 60. 1.

எவ்வகையிலும் ஒருசிறிதும் (சாஸ்திர) அறிவில்லாதவர்களாயினும் (நின்) ஐந்தெழுத்தை, அதன் பொருளை (பக்தியோடு) ஓதி அறியும் அடியவர்க்கு (ஒரு) வித்தியாசம் இல்லாமல் அவரவர் மனத்திலே உமையாளும் தாமுமாக மகிழ்ந்து எழுந்தருளி யிருப்பார் திருமாற்பேற்றுப் பெருமான்.

ஒன்றும் அறிவிலராயினும் - (சிவபெருமானுடைய சிறப்பியல்பை அறிந்து, அவரோடு இரண்டறக் கலக்கக் கூடும் என்னும்) மெய்யறிவு இல்லாதவராயினும்; இவர்களும் அஞ்செழுத்தை ஓதினாற் பயனடைவரோ என்ற ஐயம் நிகழவேண்டாம் என்று அறிவுறுத்தியவாறு.

39. 'உயக்கொள்ளும் காண்மினே'

வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உயக்கொளுங் காண்மினே. 5. 71. 9

உருகி நைபவர்க்(கு) ஊனமொன்(று) இன்றியே
அருகு நின்றிடும். ஆனைக்கா அண்ணலே. 5. 31. 2.

குற்றமுள்ள மனத்தை, அக் குற்றத்தினின்றும் விலக்கித் திருத்தி (ஒரு வழி நிறுத்தி) உள்ளே சிவானந்த ஊற்றைக் கண்டு பிடித்து, அதன் நீரைக் குடித்து, அதன் இனிமையை அறிந்து மிகவும் உருகுகின்றவர்களுக்குத் திருவானைக்காப் பெருமான் குறை வொன்று மின்றி (எப்போதும்) அருகே நின்று தன் (வடிவம் காட்டி) நிற்பான்.

சிந்தையில் உள்ள குற்றமாவது ஐம்புல இன்ப விருப்பே. அதை நாடாது மனதைத் தடுத்தல் முதற் படி; புறமுகமாய் ஓடும் மனதை அகமுக மாக்கித் திருத்துதல் இரண்டாம்படி. மனதை ஒரு நிலைப்படுத்திச் சிவானந்த ஊற்றைத் தேடிக் கண்டுபிடித்து, அவ்வானந்தத்தைச் சிறிது அநுபவித்தல் மூன்றும்படி. அதன் இனிமையை உணர்ந்து, அதையே சதா அநுபவிப்பதற்காக உள்ளம் குழைந்து மெலிந்து சிவனை வேண்டி, அதன் பயனாக எப்போதும் எளிதாகக் காட்சி பெற்று ஆனந்தத்தில் நிலைத்தல் நான்காம் படி. திருகு சிந்தையைத் திருத்தல் சரியை; செம்மை செய்தல் கிரியை; ஊறலைப் பற்றிப் பருகல் யோகம்; பத மறிந்து உருகி நைதல் ஞானம்; ஆக நான்கு படிகளும் கூறப் பட்டவாறு.

## 37. ‘அஞ்சேல், உன்னை அழைக்கவந்தேன் என்றார்’

தஞ்சே கண்டேன் தரிக்கிலா தாரேன்றேன்
அஞ்சேல் உன்னை அழைக்கவந் தேன்என்றார்
உஞ்சேன் என்று(உ)கந்தே எழுந் தோட்டந்தேன்
வஞ்சே வல்லரே வாய்மூர் அடிகளே. 5. 50. 3.

எனக்குப் பற்றுக்கோடாக ஒருவரைக் கண்டேன். (அவரை இன்னார் என்று நிதானித்து அறிந்துகொள்ளாமல்) அவசரப்பட்டு ‘நீர் யார்?’ என்றேன். ‘பயப்படாதே; உன்னை (திருவாய்மூருக்கு) அழைத்துப்போக வந்தேன்’

ஆசைகளை விட்ட மனிதர்களே, (சிரத்தையோடு) வந்து (நான் கூறுவதைக்) கேளுங்கள். நெருப்பிலே வெந்து தூயதான திருநீற்றை அணிந்தவனுகிய திருவிசய மங்கைப் பெருமான், மனத்தால் (பக்தியோடு) தன்னை நினைப்பவர்களை (உடனே) உறுதியாகத் தன்னுடைய உறவினராக்கி (அவர்கள்) உய்வடையும்வண்ணம் ஆட்கொண்டருளுவான். (இதை நீங்கள் அநுபவத்திலே) காணுங்கள்.

மயல்தீர் மனிதர்காள் - உலக மாயையிலிருந்து விடுவித்துக்கொள்ள விரும்பும் மனிதர்களே என்றுமாம். சிந்தையால்............பந்துவாக்கி - தன்னை நினைப்பவரை ஈசன் தனது உறவினராகக் கருதி, அவர்க்கு வரும் துன்பத்தைப் போக்கத் தானே முயல்வான் என்றவாறு.

## 40. 'பருகலாம் பரமாய ஓர் ஆனந்தம்'

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோர் ஆனந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. 5. 88. 1.

தவத்தில் மேம்படலாம்; அறியாமை நீங்கப்பெறலாம்; மாறுபட்ட மனத்தைத் திருத்திக்கொள்ளலாம்; (எதற்கும்) மேலானதொரு சிவானந்தம் (ஆகிய தேனை) உண்டு அனுபவிக்கலாம்; திருமருகற் பெருமானுடைய திருவடிகளை (வாயினுல்) துதித்து, உடம்பினுல் வணங்கின மாத்திரத்திலே.

திருவடிகளை வாழ்த்தி வணங்குதலே-மெய்யன்பை வளர்க்கும். அவ்வாறு மெய்யன்பு பெருகுதலே உண்மையான தவமாம். இத் தவம் முற்ற முற்ற அறியாமை தானே நீங்கும்; அதன் பலனுக மனத்திலுள்ள மாறுபாடு அடியோடு அழியும்; மனம் திருந்தும்; அவ்வாறு திருந்திய மனத்தில் பேராநந்தம் பெருக்கெடுக்கும் என்றவாறு.

## 41. 'எந்தை இணையடி நீழலே'

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 5. 90. 1.

குற்ற மில்லாத வீணை யிசையும், மாலையில் உதிக்கும் பூர்ண சந்திரனது குளிர்ச்சியும் (மென்மையாக) வீசுகின்ற தென்றற் காற்றின் இனிமையும், (இன்பம்) மிக்க இளவேனிற் காலத்தின் அநுபவமும் (நெருங்கி) மொய்க்கும் தேன் வண்டுகள் பாடுகின்ற (மலர்ப்) பொய்கையின் (மனங் கவரும்) மாட்சியும் (ஒருங்கே கலந்தது போன்றதாகும்) எம் தந்தையாகிய பெருமானுடைய இரண்டு திருவடிகளின் நிழல்.

செவி கண் மெய் முதலிய ஐம்புலன்களுக்கும், மனத்துக்கும் இனிமையைத் தருவனவாக உலகத்தார் கருதும் எப்பொருளினும் மிக்க இன்பம் தருவது இறைவன் திருவடி நிழல். ஆதலின் அப் பேரின்பத்தை இடைவிடாது அநுபவிப்பவர்க்கு உலகத்துன்பம் எதுவும் தோன்றாது ஒழிகின்றது என்பதாம். வாசுதேவனுடைய திருவடி நிழல் மிக்க வெம்மையும் மிக்கக் குளிரும் இன்றி மிதமாய், இன்பமாய் இருப்பது என்று கூறினார் அனந்தாழ்வார் என்னும் வைணவ அடியார். சமணர் திருநாவுக்கரசரை நீற்றறையில் இட்டபோது அவர் பாடியது இப் பதிகம்.

## 42. 'மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்'

விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 5. 90. 10.

விறகில் (அரணிக் கட்டையினிடத்தில் உள்ள) தீயைப் போலவும், நல்ல பாலில் உள்ள நெய்யைப் போல்

வும் (பெருமான் எல்லாப் பொருள்களிடத்தும் வெளிப் படாமல்) மறைவாக நிலைத்திருக்கிறான். அவன், சிறந்த ரத்தினத்தில் உள்ள சோதியைப்போலும் இருக்கிறான். அவனிடத்து உறவு (பக்தி) என்னும் கோலை நட்டு, உணர்வு (விவேகம்) என்னும் கயிற்றினால் நன்றாக இழுத்துக் கடைந்தால் (அவ்வாறு கடைபவர்க்கு) அவன் எதிரே வெளிப்பட்டு நிற்பான்.

விறகிலுள்ள தீயும் பாலிலுள்ள நெய்யும் மணியிலுள்ள சோதியும் வெளியில் தோன்றாது மறைந்து நிற்பதுபோல, இறைவன் நமது கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்திருக்கின்றான் என்கிறார். விறகில் உள்ள தீ 'முறுக வாங்கிக் கடைய முன்னிற்கும்;' அதுபோல் தாமத குணமுள்ளவர்க்கு இறைவன் மிக்க பிரயாசைப் பட்டுத் தம் மனத்தே பக்தியை நிலைநாட்டித் தீவிரமாக விவேகத்தால் உண்மைப் பொருளை மீண்டும் மீண்டும் சிந்திப்பதன் பயனாக, விளங்குவான். பாலில் உள்ள நெய் 'வாங்கிக் கடைய முன் நிற்கும்;' அதுபோல், இராஜஸ குண முள்ளவர்க்கு இறைவன் அவ்வளவு பிரயாசையின்றிப் பக்தியோடும் விவேகத்தால் மீண்டும் மீண்டும் சிந்திப்பதால் விளங்குவான். மணியிலுள்ள சோதி 'கடைய முன் நிற்கும்;' அதுபோல், சத்துவகுண முள்ளவர்க்குச் சிறிது முயற்சியோடு தியானித்த உடனே பத்தியால் விளையும் விவேகத்தினால் அவன் தோன்றுவான். நமது மனதிற்குள்ளேயே மறைந்துநிற்கும் ஈசன் மனத்தைத் தியானத்தால் கடையும்போது வெளிப்படுகிறான். அதற்குப் பக்தியைக் கோலாகவும், தூய அறிவைக் கயிறாகவும் கொள்ளவேண்டும். ஈசனிடத்து ஏதேனும் ஓர் உறவு (அடிமை, மகன், தோழன், நாயகி முதலிய உறவுகளில் ஒன்று) கொண்டாடும்போது, பக்தி ஏழும். ஈசனே பரம் பொருள்; மற்றவை யாவும் நிலையற்ற பொருள்களாம் என்ற உறுதியே தூய அறிவு அல்லது விவேகம் எனப்படும். பக்தியோடும் விவேகத்தோடும் இறைவனைத் தியானிப்பார்க்கு இறைவன் காட்சி

*யளிப்பான் என்பது முடிந்த பொருள். மனத்தைப் பக்திக்கோலாலும் விவேகக் கயிற்றாலும் கடைந்து ஈசனைப் பெற்றுப் பிறப்பும் இறப்பும் அறுதலே, வாழ்க்கையின் பயனாகும்.*

*ஒப்பிடுக :*

'புகையினால் அக்கினியும், அழுக்கினால் கண்ணாடியும், கருப்பையினால் கருவும் மறைக்கப்படுவதுபோல, உண்மைப்பொருள் மறைக்கப்படுகிறது.' —*கீதை* (3-38).

### 43. *'பிரான் என்று அறிந்தேனே'*

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடி யான்என்(று) அறிதலும்
தன்னை நானும் பிரான்என்(று) அறிந்தேனே. 5. 91. 8.

*எம்பெருமான் என்னைத் தன் அடியவனாக (முதலில்) சிறிதும் சங்கற்பிக்கவில்லை; அதுவரை நானும் எம்பெருமானை முதலில் சிறிதும் அறிந்து கொள்ளவில்லை. (பெருமான்) என்னைத் தனது அடியவனாகக் கருதியவுடன் நானும் அவரைத் தலைவரென்று அறிந்துகொண்டேன்.*

*பெருமானை அறிதற்கும் அவர் திருவருளே வேண்டுமாதலாலும் அது இன்றி எதுவும் நிகழாதாதலாலும் இவ்வாறு கூறினார்.*

*ஒப்பிடுக :*

அவன் அருளாலே அவன் தாள் வணங்கி —*திருவாசகம்.*

### 44. *'நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை'*

துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கு நீதியை
நஞ்சு கண்டத்(து) அடக்கிய நம்பனை
வஞ்ச னேன்இனி நான்மறக் கிற்பனே. 5. 93. 8.

*(நான் மறந்திருக்கும்) போதும் என் மனத்துள்ளே ஒளி வீசிக்கொண்டிருக்கும் சோதி சொரூபியாய், (மனத்*

துள்) எப்போதும் இருந்து தன்னை நினைக்கச் செய்யும் நேர்மை யுடையவனும், உயிர்கள் எல்லாம் பிழைத்தற் பொருட்டு ஆலகால விஷத்தைக் கழுத்திலே அடக்கிக் கொண்டவனுமான நம்பெருமானை வஞ்சகனுகிய நான் மறக்கக் கூடுமோ? (ஒரு நாளும் மறக்க முடியாது.)

வஞ்சனேன் - ஈசன் என்மீது அன்பு கொண்டிருந்தும் அவனை மறந்து திரிந்த வஞ்சக முடையேன்; முன்பு சமண சமயத்திருந்தமையைக் குறித்தது. நம்பன் - 'நண்பன்' என்பது 'நம்பன்' என மருவிற்று என்னலுமாம்.

## 45. 'கெடும் தடுமாற்றமே'

ஞமனேன் பான்நர கர்க்கு நமக்கெலாம்
சிவனேன் பான்சேழு மான்மறிக் கையினன்
கவனஞ் செய்யுங் கனவிடை ஊர்தியான்
தமர்என் றலும் கேடும்தடு மாற்றமே. 5. 97. 18.

வளமான மான் குட்டியை ஏந்திய கையையுடைய பெருமான், நரகத்துக்கு ஆளாகும்படிப் பாவம் செய்தோர்க்கு யமனென்று சொல்லும்படி(அச்சத்தை உண்டு பண்ணுபவனாய்) இருப்பான். (அடியவரான) நமக்கெல்லாம் சிவன் (மங்களம் செய்பவன்) என்று சொல்லப்படுவான். விரைவாகச் செல்லும் பெரிய ரிஷபவாகனத்தை யுடையவனுக்கு உறவினர் (பக்தர்) என்று சொன்ன மாத்திரத்தில் உலகத்தில் உழலும் தடுமாற்றம் நீங்கிவிடும்.

ஊர்தியான்....தடுமாற்றமே - சிவபெருமானைச் சேர்ந்தவர்கள் யாம் என்ற உறுதி யுணர்ச்சி இருந்தாலும் நமக்கு உலக வாழ்க்கையில் மனத்தடுமாற்றம் உண்டாகாது.

## 46. 'கங்கை யாடி லென்'

கங்கை யாடிலேன் காவிரி யாடிலேன்
கோங்கு தண்கும ரித்துறை யாடிலேன்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலேன்
எங்கும் ஈசன்என் னாதவர்க்(கு) இல்லையே. 5. 99. 2

(புண்ணிய தீர்த்தங்களான) கங்கையில் நீராடினால் என்ன, காவேரியில் நீராடினால் என்ன, மணமுள்ள குளிர்ந்த கன்னியாகுமரித் துறையில் நீராடினால் என்ன, (அலைகள்) ஓங்குகின்ற பெரிய கடல் நீரிலே மூழ்கினால் என்ன, எங்கும் அச்சிவபெருமான் உளன் என்னும் நினைவு இல்லாதவர்க்கு ஒன்றும் பயனில்லை.

எத்தகைய புண்ணிய காரியங்களைச் செய்யினும் சிவத்தியானமில்லாவிடில் பயனில்லை என்பது இப்பதிகத்தின் பாடல்களிற் கூறப்படுகின்றது.

ஒப்பிடுக :

'இங்கு (உள்ளத்தில்) இல்லாவிடில் (சிவபெருமான்) எங்கும் இல்லை (காண முடியாது.) —ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர்.

### 47. 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழ்ஒளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 6. 1. 1.

கிட்டுதற்கு அருமையானவனும், (எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும்) அந்தணருடைய மனத்தில் (எப்போதும்) இருப்பவனும், அரிய வேதத்தினுள் இருப்பவனும், அணுவடிவானவனும், எவருக்கும் அறிய முடியாத (ஆத்ம) தத்துவமா யிருப்பவனும், தேனும் பாலும்போல் இனியவனும், விளங்குகின்ற ஒளிமயமானவனும், தேவர்கள் தலைவனாகிய இந்திரன், கரிய திருமேனி யுடைய திருமால், நான்கு முகங்களையுடைய பிரமன் (என்னும்) இவர்கள் வடிவானவனும், தீ, காற்று, ஓசையிடும் கடல், சிறந்த மலைகள் இவற்றிலெல்லாம்

கலந்தும் (கடந்தும்) உள்ள பெருமை யுடையவனும் ஆன பெரும்பற்றப் புலியூர் (சிதம்பரம்) வாழும் பெருமானைத் துதித்துப் புகழாத நாட்களெல்லாம் (இவ்வுலகத்திலே யான்) பிறவாத நாட்களே.

சாதாரண மக்களாற் கிட்டுவதற்கு அரியவனாயினும், அறத்தின் வழி நிற்கும் அந்தணரது நெஞ்சில் இருப்பவனாகிறான்; அவர்கள் ஓதும் வேதத்தின் உட்பொருளாகவுமிருப்பவன்; அவ்வாறு இருப்பினும், அந்தணர்க்கும் வேதங்கட்கும் யார்க்கும் அருளாலன்றி அறிய முடியாத (நுட்பமானவற்றுள்ளும் மிக) நுட்பமான தத்துவ வடிவமா யிருப்பவன்.

ஒப்பிடுக:

'அணுவுக்குள் அணுவாய் இருப்பவன்' —வேதம்.

'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே.' — மாணிக்கவாசகர்.

அவ்வளவு உயர்ந்த வடிவுடையவன் அவனது அடியார்களுடைய அநுபவத்துக்கு எட்டுபவனாகி, தேனும் பாலும்போன்று மிக்க இன்பம் தருபவனாயும் அவர்களது அறிவிற்குள் ஞான ஒளியாய்த் திகழ்ந்து தனது இயல்பை விளக்குபவனாயும் இருப்பான். அக உலகில் முற்கூறியவாறு தோன்றுபவன் புற உலகில் பிரம்மா விஷ்ணு தேவேந்திரன் முதலிய எல்லா உயிர்களிடத்தும், எல்லாப் பொருள்களிடத்தும் உள்நின்று கலந்து ஆட்டி வைத்தும், எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பெரியானும் ஆகிறான்

ஒப்பிடுக:

'எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும் இயலுண்மை யறிவின்ப வடிவாகி நடிக்கும் மெய்ப்பொருளாம் சிவம்.'

—திரு அருட்பா.

புலியூரானை........நாளே - சிற்றம்பலவனைப் புகழும் ஞானம் உண்டாகுமுன் (பிறந்ததன் பயனைப் பெறுமுன்) தம்மைப் பிறந்ததாக நாயனார் நினையார். ஞானப் பிற

வியே பிறப்பாகும். ஞானம் பெறுமுன் பிறந்திருந்தும் எவரும் பிறவாதவரே யாவர்.

ஒப்பிடுக :

**'அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்.**

**—திருமழிசை யாழ்வார்.**

48. 'தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னை'

முந்தி யுலகம் படைத்தான் தன்னை
மூவா முதலாய மூர்த்திதன்னைச்
சந்த வெண்திங்கள் அணிந்தான் தன்னைத்
தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னைச்
சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச்
செழுங்கெடில வீரட்டம் மேவி னானை
எந்தை பெருமானை ஈசன் தன்னை
ஏழையேன் நான்பண்(டு) இகழ்ந்த வாறே. 3. 6 3.

(யாவர்க்கும்) முதல்வனாய் இவ்வுலகங்களை யெல்லாம் படைத்தவனும், (எப்போதும்) மூப்பில்லாத முதற்பொருளா யிருக்கும் வடிவுடையவனும், (அடைக்கலம் புகுந்த) அழகிய வெண்மையான (பிறைச்) சந்திரனை (முடியிலே) சூடியவனும், தவம் செய்யும் வழிகளை (அவைகளின் முடிவுகளை)த் தவம் செய்வார்க்கு அருளவல்லவனும், (அடியார்) தியானத்திலே உண்டாகும் இடையூறுகளை ஒழிக்கும் (நல்) முயற்சியாய் (அருள் வடிவாய்) இருப்பவனும், தேனும் பாலும்போல இனிமையானவனும், செழுமை பொருந்திய கெடில நதியை அடுத்துள்ளதாகிய (திருவதிகை) வீரட்டானத்திலே விரும்பி வீற்றிருப்பவனும், என் தந்தையும் தலைவனும் (ஆகிய) ஈசனை, அறிவிலியான நான், முன்னே (அவன் பெருமை அறியாமல்) இகழ்ந்திருந்தது என்ன மூடத்தனம்!

சாதிக்க வல்லான் - செய்து காட்டியருள வல்லவன். சிவபெருமான் யோகிகட்குத் தலைவனாயும் உதாரணமாகவும் விளங்குதலின். வாகீசர் தாம் சைவ மதத்

தைத் துறந்து சமண மதத்திலே சேர்ந்திருந்த காலத்தை நினைத்து இவ்வாறு கூறுகிறார்.

### 49. 'அழகு எழுதலாகா அருட்சேவடி'

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
அழ(கு)எழுத லாகா அருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையும் காலனையும் காய்ந்தவடி
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி
திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்அடி. 6. 6. 4.

(காலையில்) உதிக்கும் செம்மையான (பால) சூரியனை ஒத்த திருவடி; (தன்) அழகை (சித்திரத்திலோ அல்லது வருணித்தோ) எழுத முடியாததும் (சிந்திப்பவர்க்கு) அருள் செய்வதுமாகிய செவ்விய திருவடி; இசை பாடும் வண்டுக் கூட்டங்கள் (தாமரைப் பூ என நினைத்துச்) சுற்றுதற்கு இடமான திருவடி; சோமனையும் யமனையும் கோபித்து உதைத்த திருவடி; பெரிய (பக்திப்) பித்து உடையவர்கள் சேர்ந்து (பக்தி மேலீட்டால் தம்மை மறந்து பரவசராகித் துதிகளை முறைகெடப் பல படியாக) வாய்விட்டுக் கூறுதற்குரிய திருவடி; தவறு செய்தவர்களுடைய தவற்றை அறிந்து (அவர்களை மன்னித்து ஆதரிக்க) வல்ல திருவடி; நல்ல நீரையுடைய இனிமையான கெடில நதி பாயும் (நடு) நாட்டை ஆள்பவனது திருவடி; (திருவதிகை) திருவீரட்டானத்தில் (அமர்ந்துள்ள) எம்முடைய (குணச்) செல்வனாகிய பெருமானது திருவடி.

### 50. 'என் கண்ணுளானே'

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்அடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின்மேலான்
ஏழண்டத்(து) அப்பாலான் இப்பாற் செம்பொன்

புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றில் உள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் து(உ)ச்சி உள்ளான்
காளத்தி யான்அவன்என் கண்ணு ளானே. 6. 8. 5.

*அடியார் மனத்துள் இருப்பவனும், அவர்கள் சிரசிலே இருப்பவனும், (துதிப்பவர்) வாக்கில் உள்ளவனும், தன்னுடைய திருவடிகளை வாயாரப் பாடித் துதிக்கும் தொண்டர் கூட்டத்தில் உள்ளவனும், தேவர்கள் தம் சிரசின்மேலே கொள்ளப் பெற்றவனும், ஏழு உலகங்களுக்கும் அப்பால் (கடந்து) நிற்பவனும், இப் பூமியிலே பொன்மயமான தில்லை வனத்துள் உள்ளவனும், நல்ல வாசனையுள்ள கொன்றைப் பூவில் உள்ளவனும், மலை, தீ, காற்று இவற்றில் உள்ளவனும், மேகத்தில் உள்ளவனும், திருக்கயிலாய மலையின் உச்சியில் உள்ளவனும் திருக்காளத்திப் பெருமானே. அவன் என் இரு கண்களிலும் நிறைந்துள்ளான்.*

*மனத்தகத்தான்....தலை மேலான் - அடியார்களது மனம் வாக்குக் காயம் என்னும் மூன்று கரணங்களிலும் இருப்பவன்.*

*'திருவடி என் தலைமேல் வைத்தார்'*

நினைந்து(உ)ருகும் அடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்திருகு களிற்று(உ)ரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்லவாறே. 6. 14. 1.

*திருநல்லூரில் கோயில்கொண்ட எம்பெருமானார் (தம்மை எப்போதும்) நினைத்து (மனம்) உருகுகின்ற தொண்டர்களை இன்னும் மனந் தளரச்செய்தார்;*

(அவர்களுடைய) பாவங்கள் (அவர்களிடத்து) நிற்காமல் நீங்கும்படி செய்தார்; கோபம் மிக்க யானையை உரித்து அணிந்த தோலாகிய போர்வையை உடையவர். (ஒளி) வளம் மிக்க சந்திரனது கொழுந்தை (பிறையை)த் திருமுடியிலே வைத்துள்ளார். (எவற்றினும்) மேம்பட்டு, தேவகணங்கள் தேடி (தம்முடைய) அழகிய (பூவாலான) கிரீடத்திலே (படும்படி) நெருங்கிய மலர்கள் அரும்பி மலர்ந்து தம்மிடமுள்ள தேனைச்சிந்த (அதனால்) நனையப்பெற்றதுபோன்றுள்ள (சிறப்புடைய) திருவடிகளை என் தலைமேல் (பதிய) வைத்தருளினார்.

நினைந்து........வைத்தார்—நினைந்து உருகும் அடியார்களுடைய மனத்தை வாடச்செய்து, அதனால் அவர்கள் செய்த பாவங்களை நீக்கியவர். 'ஈசனை நினைத்து மனமுருகிச் சொரியும் கண்ணீர், சொரிவாருடைய வினைகளை அரித்துக்கொண்டு சென்று நீக்கிவிடும்' என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். வானோர்........திருவடிகள்—ஈசனது திருவடிகளாகிய மலர்கள் அரும்பி மலர்ந்து தேனாகிய அருளமுதத்தைப் பொழிந்தனவோ என்னும்படி அமைந்துள்ள திருவடிகள் என்றுமாம். மகுடங்களின்மீதுள்ள பூக்கள் திருவடிகளின்மீது பட்டு மலர்ந்து தேனைச் சொரிந்தமையால் நனைந்ததுபோன்ற திருவடிகள் எனினுமாம்.

## 52. 'அடியவர்கட்கு ஆரமுதமாகித் தோன்றும்

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி ஊர்திரிவா னாகித் தோன்றும்
ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லால் எரித்தல் தோன்றும்
செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த
பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்(து)எம் புனிதனார்க்கே.

6. 18. 2.

சோலைகள் (செழித்து) விளங்குகின்ற திருப்பூவணத்தில் எழுந்தருளிய எம் புனித மூர்த்திக்கு (பாதி) ஆணாகி (மற்றொரு பாதி) பெண் ஆகிய (அர்த்தநாரீசுவர) வடிவம் தோன்றும். (அந்த வடிவம்) அடியார்களுக்கு அரிய தேவாமிர்தமாகித் தோன்றும். (ஒரு சமயம் அவர்) உணவுக்காக ஊரூராய்த் திரியும் பிச்சைக்காரனாகத் தோன்றுவார். (அவர் முடியிலே) வெண்மையான ஒரு பிறைச் சந்திரன் தோன்றும். (அவர் தோற்றத்திலே) விரோதிகளாகிய திரிபுர அசுரர்களை நெடுந்தூரத்திலிருந்தவாறே மேருமலையாகிற வில்லை (வியாஜமாகக்) கொண்டு (சிரித்து) எரித்து அழித்த செயல் காணப்படும். அவர் திருமேனியிலே செத்தவர்களுடைய எலும்பினால் ஆகிய ஆபரண நாணும் (அரையிலே பாம்பாகிய) அரைஞாணும் (அழகாக) விளங்கித் தோன்றும்.

## 53. 'சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே'

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்(து) அறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த் திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றேன்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 6. 19. 8.

(துதிக்கும்) வாயில் இருப்பவனும், (நினைக்கும்) மனத்தில் இருப்பவனும், (அந்த) மனத்துக்குள்ளும் நிலை பெற்ற எண்ணமானவனும், (அடியார்) எண்ணங்களை அறிந்து (அவைகளை) நிறைவேற்றி வைப்பவனும், நிர்மலமானவனும், சுத்த வெள்ளையான ரிஷபத்தை (வாகனமாக) உடையவனும், ஒளி வீசும் சந்திரனைத் தரித்த சடையை உடையவனும், (என்னை விடாது) தொடர்ந்து நின்று என் தாய்போல் இருப்பவனும், தவம்போலப் பயன் அளிக்கும் தன்மை யுடையவனும்,

(உலகத்திலே) முதல்வரான தேவ தேவர்க்கு (பிரமன் முதலியவர்களுக்கு எப்போதும் எட்டாத) தூரத்திலிருப்பவனும் ஆன தென்நாட்டிலுள்ள கூடல் எனப்படும் மதுரையிலே உள்ள திருவாலவாய் என்னும் ஆலயத்தில் எழுந்தருளிய சிவபெருமான் திருவடிகளையே நினைக்கும் பேறு பெற்றேன் நான். (எனக்கு அரியது ஒன்றும் இல்லை.)

## 54. 'படேன் உம் பண்பில்'

விரைந்தாளும் நல்குரவே செல்வே பொல்லா
வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்
நிரைந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்(கு)
இல்லையே நுகர்போகம் யானேல் வானோர்
கரைந்தோட வருநஞ்சை யமுது செய்த
கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்
பரஞ்சோதி தனைக்காண்பேன் படேன்நும் பண்பிற்
பரிந்தோடி யோட்டந்து பகட்டன்மின்னே. 6. 27. 8.

விரைவாக (மக்களைப் பற்றி) அடிமையாக்கும் வறுமையே, செல்வமே, பொல்லாத கோபமே, மகிழ்ச்சியே, வெறுப்பே நீங்களெல்லாம் வரிசையாக (ஆறு (போல்) ஓடி, இப் பெரிய உலகத்தையே அரித்துத் தின்றுவிடக் கூடியவர்கள்; அத்தகைய உங்களுக்கு அநுபவிக்கத்தக்க இன்பம் (என்னை விட) வேறிடத்தில் இல்லையா? (நானோ) தேவர்களெல்லாம் (அச்சத்தால் மனம்) சிதறி ஓடும்படி (கடுமையாக வந்த) ஆலகால விஷத்தை (அவர்களைக் காக்கும் பொருட்டுக் கருணையினால்) உண்டருளிய, கற்பகம் போன்றவரும், தானே பரம்பொருளானவரும், திருவாரூரில் எழுந்தருளிய பெரிய ஜோதி ஸ்வரூபியும் ஆன பெருமானை எப்போதும் தரிசித்து மகிழ்ந்திருப்பவன்; (அதனால்) உங்களுடைய (கெட்ட) குணத்தில் (ஈடுபட்டு) உங்கள் வசப்பட மாட்டேன். (என்னைப் பற்றலாமென்று வீணே) ஆசை கொண்டு (என்னிடம்) ஓடிவந்து பகட்டாதீர்கள். (உங்கள் முயற்சி பயன்படாது.)

## 55. 'திருவையாறு அகலாத செம்பொற் சோதி'

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா(று) அகலாத செம்பொற் சோதி.

6. 38. 7.

*பூமி சுவர்க்கம் முதலிய எல்லா உலகங்களும் ஆனது நீயே. திருவேகம்பத்தில் விரும்பி அமர்ந்திருந்ததும் நீயே. நல்லவர்களிடத்து அவர்களுடைய நன்மையை அளந்தறிபவன் நீயே. ஞான ஒளி வீசும் விளக்காய் நிற்பவன் நீயே. பொல்லாத பாவங்களைப் போக்குபவன் நீயே; கீர்த்தி மிக்க உன் திருவடியை என் தலையிலே சூட்டி (என்னை) ஆட்கொண்டவனும் நீயே. (உண்மைப் பொருளான) முத்திச் செல்வத்தைத் தருபவனும் நீயே. (ஆதலால் உன்னை அன்றி ஒன்றும் இல்லை) திருவையாற்றைவிட்டு நீங்காத நல்ல பொன்னொளி போன்ற சோதிமயமான எம்பெருமானே!*

*செல்வாய........நீயே - சென்று அடைதற்குரிய குறிக்கோளாகிய முத்திச் செல்வம் தருபவனும் ஆனாய்; செல்வமாகிய செல்வம் தருபவனும் ஆனாய் எனினுமாம். பெருமான் திருவடி சூட்டித் தம்மை ஆட்கொண்டமையை இப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் குறிக்கின்றார்.*

## 56. 'கல்லாதனவெல்லாம் கற்பித்தானை'

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாஎன் நெஞ்சை நினைவித் தானைக்
கல்லா தனஎல்லாம் கற்பித் தானைக்
காணா தனஎல்லாம் காட்டி னானைச்

சொல்லாதன எல்லாம் சொல்லி என்னைத்
தொடர்ந்(து)இங்(கு) அடியேனை ஆளாக்கொண்டு
பொல்லாஎன் நோய்தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே. 6. 43. 1.

(ஓரிடத்தில்) நில்லாமல் (வேகமாய் வந்த) (கங்கை) நீரை (அடக்கிச்) சடையில் நிற்கச் செய்தவனும், (தன்னை) நினையாமல் இருந்த என் மனத்தைத் தன்னை நினைக்கும்படி செய்வித்தவனும், (நான்) கற்க முடியாதவற்றையெல்லாம் கற்கச் செய்தவனும், (என்னால்) அறிய முடியாதவற்றையெல்லாம் அறியச்செய்தவனும், எனக்குச் சொல்லத் தகாதவற்றையெல்லாம் சொல்லி என்னை வலியத் தொடர்ந்துவந்து பின்பு (தன் கருணையாலே) தன் திருவடியில் அன்புகொண்ட என்னை அடிமையாகக் கொண்டு எனது பொல்லாத (வயிற்று) நோயோடு (பிறவி நோயையும்) தீர்த்த பரிசுத்தனும், புண்ணிய மூர்த்தியும் (ஆன எம்பெருமானை) நான் திருப்பூந்துருத்தியிலே கண்டேன்.

புனிதன் தன்னைப் புண்ணியனை - இயல்பாகவே மலமற்றவனை, புண்ணிய வடிவினனை (உயிர்கட்கு நன்மை செய்யும் வினையையே செய்கின்றவனை.)

## 57. 'திகழ் ஒளியே, உன் அபயம் நானே'

மூத்தவனாய் உலகுக்கு முந்தி னானே
முறைமையால் எல்லாம் படைக்கின் றானே
ஏத்தவனாய் ஏழ்(உ)லகும் ஆயி னானே
இன்பனாய்த் துன்பங் களைகின் றானே
காத்தவனாய் எல்லாந்தான் காண்கின் றானே
கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழ்ஒளியே சிவனேஉன் அபயம் நானே. 6. 44. 1.

(எவர்க்கும்) முதல்வனாகி உலகத்துக்கே முந்தித் தோன்றியவனே, (அவ்வாறு முதலில் தோன்றிப் பின்பு) வரிசையாக எல்லாவற்றையும் படைக்கின்றவனே, (யாவ

ராலும்) துதிக்கப்படுகிறவனாகி ஏழு உலகங்களிலும் நிறைந்தவனே, இன்பவடிவாகித் துன்பங்களைப் போக்கு கின்றவனே, (படைத்த உலகத்தைக்) காப்பவனும் (தானேயாகி) எல்லாவற்றையும் தான் ஒருவனாகவே காண் பவனே, கொடிய பாவியாகிய எனது பாவத்தைக் கண்டு (அது முற்றும்) தொலைந்து போகும்வண்ணம் தீர்த்த வனே, திருச்சோற்றுத்துறையில் அமர்ந்தவனே, விளங்கு கின்ற சோதியே, சிவபெருமானே, உன் அடைக்கலம் நான், (என்னைக் கைவிடாது ஆண்டருள்.)

## 58. 'யான் ஆயும் பெரியோய் நீயே'

மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
  மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை எழுத்தல்லை எரியு மல்லை
  இரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை ஆணல்லை பேடு மல்லை
  பிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை
  உணர்வரிய ஒற்றியூர் உடைய கோவே. 6. 45. 9.

(ஒருவராலும் எவ்வகையிலும்) அறிதற்கு அருமை யான திருவொற்றியூர்ப் பெருமானே, (நீ) இப்பூமியாக இல்லை. ஆகாசமில்லை. (எந்த) மண்டலமும் இல்லை. மலையாக இல்லை. கடலாக இல்லை. காற்றாக இல்லை. எண் ணாக இல்லை. எழுத்தாக இல்லை. தீயுமில்லை. இரவாக இல்லை. பகலாக இல்லை. எப்பொருளும் இல்லை. பெண் ணும் இல்லை. ஆணும் இல்லை. பேடும் இல்லை. வேறொன் றும் இல்லை. (இவ்வாறு) நான் ஆராயும் பெரியவன் நீயே. (நீ) நல்லவர்களுக்கு நல்லவனாக அவர்களுக்குள் ளேயே இருக்கின்றாய்.

எவர்க்கும் ஒருக்காலும் தீமை செய்பவன் அல்லை. உலகத்திலுள்ள பல பொருள்களும் மட்டும் அல்ல இறைவன் என்றவர், அவைகளைக் கடந்து அப்பாலாயும் நிற்கும் பெரியோன் அவன் என்கிறார். நல்லார்க்கு

இறைவன் நல்லவனும் இருப்பினும் அல்லாதவர்க்குத் தீயனும் அல்லன் என்கிறார்.

## 59. 'அடைந்து உய்ந்தேனே'

நம்பனை நால்வேதங் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்ஆல் இருந்தான் தன்னைக் கற்பகமாய்
அடியார்கட்(கு) அருள்செய் வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை ஆவடுதண் துறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து(உ)ய்ந் தேனே.
6. 46 1.

கடவுளும், நான்கு வேதங்களையும் கரைகண்டவனும், பெரிய ஞானக் கடலானவனும், நன்மையின் வடிவமாகவே யிருப்பவனும் (திருக்கச்சி) ஏகம்பத்தானும், கல்லால விருட்சத்தின் கீழிருந்து (தக்ஷிணா மூர்த்தியாய் சனகாதியருக்கு உபதேசித்தவனும்) கற்பக விருக்ஷமாகி (தன்) அடியவர்கள் வேண்டுவதை அநுக்கிரகம் செய்பவனும், நல்ல பொன் நிறமானவனும், பவள நிறமானவனும், உருட்சியையுடைய (நல்ல) முத்தானவனும், சந்திர சூரியர்கள், தீ, நீர் இவைகளின் வடிவானவனும், அழகிய செல்வமானவனுமான திருவாவடுதுறையில் எழுந்தருளிய சிவபெருமான் திருவடிகளையே, கீழ்ப்பட்ட அடிமையாகிய நான் (தஞ்சமாக) அடைந்து (பிறவித் துன்பத்தினின்றும்) பிழைத்தவன் ஆனேன்.

நால் வேதம்....கண்டானை - நான்கு வேதங்கட்கும் அப்பாலானவனை, முடிவானவனை.

## 60. 'அடியார்க்கு முத்தி காட்டும் ஏணியை'

பேணியநற் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்திகாட்டும்
ஏணியை இடர்க்கடலுட் சுழிக்கப் பட்டி(இ)ங்கு
இளைக்கின்றேற்(கு) அக்கரைக்கே ஏறவாங்கும்

தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் துறையுள் மேய
அரன்அடியே அடிநாயேன் அடைந்து(உ)ய்ந் தேனே.
6. 46. 4.

*(தன்னால்) ஆதரிக்கப்பட்ட நல்ல பிறைச் சந்திரன் விளங்குகின்ற செந் நிறமுள்ள (செவ்வானம் போன்ற) சடையை உடையவனும், (தன்னிடம் பேரன்பினால் பித் தங் கொண்டவராகிய அடியவருக்கு முத்திக்கு வழி காட்டும் (ஏற்றி விடத் தக்க) ஏணியானவனும் (உலக பாச) துன்பமாகிய கடலிலே சுழற்றி அமிழ்த்தப்பட்டுத் தளர்கின்ற தொண்டனை எனக்கு அக் கடலினின்றும் அக்கரைக்கே (முத்திக் கரைக்கே) ஏற்றிச் செல்வதும் (பின் பிறவிக்கு மீளாதபடி) நீக்கப்படுவதுமான தோணி யானவனும், தூய சோதி மயமாய் விளங்குகின்ற வெள்ளிய (சங்கு) குண்டலங்களை அணிந்தவனும், ஒளி வீசுகின்ற பொற் காசுக்கும் உரையாணியான மேன்மை பெற்றவனுமாகிய திருவாவடுதுறையில் எழுந்தருளி யுள்ள சிவபெருமான் திருவடிகளையே அடிமையாகிய நான் (தஞ்சமாக) அடைந்து உஜ்ஜீவித்தேன்.*

*ஏணி - கீழே இருந்து மேலுள்ள இடத்திற்குச் செல் லும் நெறி காட்டும். தோணி - கடலைக் கடக்கச் செய்ய உதவும். பித்தராம் அடியார்............ஏணியை - பேரன்பு இயல்பாகவே உதிக்கப் பெறும் அடியார்க்கு அவர்கள் அடைந்து செல்லுதற்குரிய முக்திப்படிகளை முறையாகக் காட்டுபவனை. இடர்............தோணியை - உயிர்கள் தமது இயலாமையை உணர்ந்து தவித்துத் தன்னையே புகலாகப் பற்றும் போது தோணியாய் அமைந்து அவர்களை முத்திக் கரைக்கு ஏற்றிச் செல்பவனும், சென்றபின் மீண்டும் பிறவிக் கடலுட் புகவிடாது காப்பவனுமாகிய பெருமானை. முன்கூறிய அடியார்கள் இருவகையின ருள், முன்னவர் பக்தரெனப்படுவர், பின்னவர் பிர பன்னர் எனப் படுவர்; முன்னவர் தாமே இறைவனைப்*

பற்றி உய்பவர்கள், பின்னவர் இறைவனாற் பற்றப்பட்டு உய்விக்கப்படுபவர்கள்.

### 61. 'தானன்றி வேறொன்றில்லாத் தத்துவனை'

மிக்கானைக் குறைந்தடைந்தார்மேவ லானை
வெவ்வேறாய் இருமூன்று சமய மாகிப்
புக்கானை எப்பொருட்கும் பொதுஆ னானைப்
பொன்உலகத் தவர்போற்றும் பொருளுக்(கு) எல்லாந்
தக்கானைத் தான்அன்றி வேறுஒன்(று) இல்லாத்
தத்துவனைத் தடவரையை நடுவுசெய்த
திக்கானைத் திருவீழி மிழலையானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே. 6. 50. 7.

*எப்பொருளுக்கும் மேலானவனும், குறை உடையவர்களாய்த் தன்னை அடைந்தவர்களை விரும்பி ஆதரிப்பவனும், தனித் தனியே அறுவகை (அக) சமயங்களாகி அவைகளில் இருப்பவனும், எல்லாப் பொருளுக்கும் பொதுவாக இருப்பவனும், தேவலோகத்தவர் துதிக்கும் எல்லாப் பொருளுக்கும் தகுதியுடையவனும், தன்னைத் தவிர வேறு ஒன்று (மேலாக) இல்லாத பரதத்துவமானவனும், பெரிய (மேரு) மலையை நடுவாகக் கொண்ட (எட்டு) திக்குகளாய் இருப்பவனும் ஆகிய திருவீழி மிழலைப் பெருமானைப் புகல் அடையாதவர்கள் கெட்ட வழிகளிலேயே செல்லுகின்றார்கள். அந்தோ! துன்பத்தையே அடைகின்றார்கள்.*

### 62. 'மெய்த்தவன் காண்'

மெய்த்தவன் காண் மெய்த்தவத்தில் நிற்பார்க் கெல்லாம்
விருப்பிலா இருப்புமன வினையர்க் கென்றும்
பொய்த்தவன்காண் புத்தன் மறவா தோடி யெறிசல்லி
புதுமலர்க ளாக்கி னான்காண்
உய்த்தவன்காண் உயர்கதிக்கே உள்கினாரை
உலகனைத்தும் ஒளித்துஅளித்திட்(டு) உய்யச் செய்யும்
வித்தகன்காண் வித்தகர்தாம் விரும்பி யேத்தும்
விண்இழிதண் வீழி மிழலை யானே. 6. 52. 8.

*உண்மையான தவ மார்க்கத்திலே நிற்பவர்க்கெல்லாம் மெய்யான தவ வடிவாயிருப்பவன் ; பக்தியில்லாத இரும்புபோலும் கடின மனமுடையவர்களுக்குக் கடவுள் இல்லை (பொய்) என்று சொல்லும்படித் தோன்றுதிருப்பவன். சாக்கிய நாயனார் (தினந்தோறும்) மறவாமல் (உள்ளன்புடன்) ஒடி வீசியெறிந்த சிறு கற்களைப் புதிய பூக்களாக்கிக் கொண்டவன் ; தன்னை நினைப்பவரை உயர்ந்ததான சிவகதியில் செலுத்துபவன் ; (தான்) மறைந்து நின்று உலகம் முழுவதும் காத்து உஜ்ஜீவிக்கச் செய்யும் ஞான சொரூபி. ஞானிகள் விரும்பித் துதிக்கும் - மழை (பொய்யாது) பெய்யும் குளிர்ச்சி யுடையதான திருவீழிமிழலையில் எழுந்தருளிய பெருமான்.*

*மெய்த்தவன்...........கெல்லாம் - அன்போடு மனமுருகித் தியானிக்கும் தவமுடையார்க்கு உண்மைப் பொருளாய்த் தோன்றுபவன் என்றுமாம்.*

*உய்த்தவன்...........வித்தகன் - தன்னைப் புகலாக நினைப்பவர்க்கு உயர்ந்த கதியை அளிப்பவனும் தன்னை நினைப்பார் நினையாதார் என்னும் வேறுபாடு இல்லாது உலகத்துள்ள எல்லா உயிர்களின் உள்ளத்திலும் (அவர்கள் காணாது) மறைந்து நின்று காத்து அவர்களை நல்வழிக்குச் செலுத்தும் பேரறிவு வடிவானவனும்.*

*ஒப்பிடுக :*

**மெய்யர்க்கே மெய்யனாகும் விதியிலா என்னைப் போல**
**பொய்யர்க்கே பொய்யனாகும் புட்கொடி யுடைய கோமான்.**

—*திருமாலை.* 15.

## *63. 'கயிலை மலையானே போற்றி போற்றி'*

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
　　பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும்சொல் ஆனாய் போற்றி
　　என்சிந்தை நீங்கா இறைவா போற்றி

விண்ணும் நிலனுந்தீ யாளுய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்ருய் போற்றி
கண்ணின் மணியாகி நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6. 55. 7.

*பண்ணிற் பொருந்தும் இசைகளாகி நின்றவரே, (அன்போடு) தியானிப்பவரது பாவங்களை ஒழிப்பவரே, எண்ணுகின்ற எழுத்துக்களும் சொற்களும் ஆனவரே, அடியேன் மனத்தை நீங்காத இறைவரே, ஆகாயமும் பூமியும் தீயும் ஆனவரே, மேலோருக்கும் மேலாகி நின்றவரே, கண்ணின் கருவிழியாகி நின்றவரே, திருக் கயிலை மலையில் எழுந்தருளி யிருப்பவரே, உம்மைத் துதிப்போமாக. (வாழ்த்துவோமாக.)*

## 64. *'கற்பகத்தைக் கண்ணுரக் கண்டேன்'*

வானவனை வானவர்க்கும் மேலா ளுனை
வணங்குமடி யார்மனத்துள் மருவிப் புக்க
தேனவனைத் தேவர்தொழு கழலான் தன்னைச்
செய்குணங்கள் பலவாகி நின்ற வென்றிக்
கோனவனைக் கொல்லைவிடை யேற்றி ளுனைக்
குழல்முழவம் இயம்பக்கூத் தாட வல்ல
கானவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணுரக் கண்டேன் நானே.
6. 60. 8.

*முத்தி யுலகிற்கு உரியவனும், தேவர்கள் எல்லோருக்கும் மேலானவனும், தன்னை வழிபடும் அடியவர்களுடைய மனத்தினுள்ளே புகுந்து கலந்த தேனனவனும், தேவர்கள் வணங்கும் திருவடிகளை உடையவனும், (பல தொழிலையும்) செய்வதற்குக் காரணமான பல குணங்களின் வடிவமாகி நிலைபெற்ற வெற்றியை யுடைய தலைவனும், கொல்லைகளில் மேயும் வீறு தங்கிய இடபத்தை உடையவனும், குழலும் மத்தளமும் ஒலிக்க (தாளத்துடன்) நர்த்தனம் செய்ய வல்ல கீத சொரூபியும், திருக் கற்குடியில் எழுந்தருளிய பெரியோனும் (அடியார்*

குறை தீர்ப்பதில்) கற்பகம் போன்றவனுமான பெருமானை நான் (என்) கண்ணாரத் தரிசித்தேன்.

### 65. 'கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே'

எவரேனுந் தாமாக இலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்து(அ)டிமைத் திறநினைந்(து)அங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணி
கவராதே தொழுமடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. 5. 61. 3.

நெற்றியில் இட்ட விபூதியும் (உருத்திராக்கம் முதலிய) சிவ சின்னங்களும் (ஒருவரிடத்திலே) கண்டால், அன்பால் மன முருகி வியந்து அவர் எத்தன்மையராயினும் மனம் வெறுப்பின்றி, அவரவரைக் கண்டபோது மனமகிழ்ந்து (அம்மெய்) அடியார்களது அடிமைத் திறத்தை நினைந்து ஆனந்தத்தோடு பார்த்து, இவர் சிறந்த அடியார், அவர் சிறந்த அடியார் என்று (வேற்றுமை பாராட்டி) பலபட நினையாமல் சிவபெருமானுடைய அடியாராயிருக்கும் மேன்மையையே போற்றி, மனம் மாறுபடாது வழிபடும் (சீவன்முத்தரான) அடியவருடைய மனத்தினுள்ளே திருக்கன்றாப்பூர் இலிங்கப் பெருமானைக் காணலாம்.

சிவனடியார்களுடைய திருவேடத்தைக் கொண்டு அவர்களை அரனெனத் தொழல்வேண்டும் என்று சிவ ஞான போதம் கூறுகின்றது. எவரேனும்....கண்டால்— சிவ சின்னங்களைக் காணும்போதே சிவனைக் கண்டாற் போல அன்பு பெருகுதல் வேண்டும் என்பதும் சாதி குலம் பால் நிறம் எனும் வேறுபாடின்றி யாரிடத்து அவைகளைக் காண்கினும் அவ்வாறு ஒழுகுதல் வேண்டும் என்பதும் குறிக்கப்பட்டன.

உகந்து அடிமை....நோக்கி—சிவ சின்னம் தரித்த வர்களை அடியார்கள் என எண்ணி, அவர்கட்கு மன முவந்து தொண்டுசெய்ய விரும்பி, அக் குறிப்புத் தோன்ற அன்போடு அவர்களை நோக்கி.

இவர் தேவர்....பேணி—பல மெய்யடியார்களை ஒப் பிட்டுச் சீர்தூக்கிக் குற்றம் குறைகளை ஆராய்தல் அப சாரமாகும்; அதை நீக்கி அனைவரையும் சிவனாகக் கருதி தம்மை அவ்வடியார்கட்கு அடிமைகளாகக் கருதி வணங் கல் வேண்டும் என்றவாறு.

நெஞ்சினுள்ளே .... காணலாமே — அடியார்களான சீவன்முத்தர்களுடைய உள்ளத்தில் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்து, அவர்களைச் சிவமேயாக்கி அவர் களோடு இரண்டறக் கலந்து விளங்கியிருப்பவன் ஆத லின், அவ்வுள்ளத்திலே சிவபெருமானைக் காணலாகும்; அந்த அடியார்கள் சிவபெருமானுக்கு நடமாடும் கோயில்கள் ஆவார் என்றவாறு. ஓர் அன்பர் வழிபாட் டிற்காக நடப்பட்ட கட்டை அந்த அன்பரது அன்பி ஞல் சிவலிங்கமாக மாறியது என்று திருக்கன்றுப்பூர்த் தலப் புராணம் கூறும்; ஆக, நடுதறி என்பது இலிங்கப் பெருமான் என்று பொருள்படலாயிற்று.

### 66. ‘எத்தாயர் எத்தந்தை’

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந்(து) உதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காஉடைய செல்வா என்றன்
அத்தாஉன் பொற்பாதம் அடையப் பெற்ருல்
அல்லகண்டங் கொண்டடியேன் என் செய்கேனே.
6. 62. 1.

(எத்தனையோ பிறப்பில் வந்த) எந்தத் தாய்மார், (அவ்வாறே வந்த) எந்தத் தந்தைமார், (பிற) சுற்றத்

தார், மற்ற எவர் நல்லார்? (உற்றதுணை யாவார்?) அல்லது எந்தச் செல்வம் சும்மாடாகும்? (பயன்படும்?) நாம் இறந்தபிறகு போகும் வழிக்குக்கூட வந்து உதவுகிறவர்கள் ஒருவரும் இல்லை. சிறிய (சுள்ளி) விறகுகளால் (நம் உடலுக்குத்) தீயை மூட்டிவிட்டு (திரும்பிப் பாராமல்) போய்விடுவார்கள். சித்ஸ்வரூபியே! பெருகுகின்ற (நீண்ட) காவிரிக்கரையில் உள்ள திருவானைக்காவை (இடமாக) உடைய செல்வனே! என் அப்பனே! உன்னுடைய பொன்போலும் திருவடியை அடையப் பெற்றால், துன்பத்துக்கு இடமா யிருக்கிற உடலினால் நான் என்ன ப்யனை அடைவேன். (ஒரு பயனுமில்லை என்றபடி.)

சிவனது திருவடியை அடையப் பெற்றபின், உடலால் அடையத்தக்க பயன் ஒன்றுமில்லை. வினைப்பயனை அனுபவித்தற்கே உடல் வேண்டும்; வினை நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்றுத் திருவடி யடைந்தபின், உடல் வேண்டப்படுவதில்லை என்பது கருத்து.

## 67.

பரந்தவன்காண் பல்உயிர்களாகி எங்கும்
பணிந்தெழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண் தூமலரங் கண்ணி யான்காண்
தோற்ற நிலையிறுதிப் பொருளாய் வந்த
மருந்(து)அவன்காண் வையகங்கள் பொறைதீர்ப் பான்காண்
மலர்தூவி நினைந்(து)எழுவார் உள்ளம் நீங்காது
இருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன்என் எண்ணத் தானே. 6. 64. 2.

(உலகத்தின்) பல உயிர்களாகி எங்கும் பரவி யிருப்பவன். (தன்னை) வழிபடுபவர்களுடைய பாபமும் (எல்லா) கருமங்களும் (விலகிப்) போகும்படித் துரத்தியவன். தூய (கொன்றைப்) பூவாலாகிய மாலை யுடையவன். ஆதி நடு முடிவு ஆகிய முக்காலங்களிலும் உள்ள, மெய்ப்பொருளான (பிறவிப் பிணிக்கு) மருந்தானவன்.

எல்லா உலகங்களிலும் (உள்ள) பாரத்தைத் தீர்ப்பவன். பூவால் அருச்சித்துத் தியானிப்பவருடைய மனத்தை (விட்டு) நீங்காமல் இருப்பவன். அழகுமிக்க சோலைகள் நிறைந்த காஞ்சீபுரத்திலுள்ள திருவேகம்பத்தில் எழுந்தருளியவன்; அத்தகைய பெருமான் என் நினைவில் (எப்போதும்) இருப்பவன்.

## 68. 'சிலம்பொலிகள் ஆர்ப்பக் கண்டேன்'

அடியார் சிலம்பொலிக ளார்ப்பக் கண்டேன்
அவ்வவர்க்கே ஈந்த கருணை கண்டேன்
முடியார் சடைமேல் அரவ மூழ்க
மூரிப் பிறைபோய் மறையக் கண்டேன்
கொடியார் அதன்மேல் இடபங் கண்டேன்
கோவணமுங் கீளுங் குலாவக் கண்டேன்
வடியாரும் மூவிலைவேல் கையில் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே. 6. 77. 6.

திருவடிகளிலே பொருந்திய சிலம்பின் ஒலி பேரோசை செய்யக் கண்டேன். (அடியார்) அவரவர்க்கும் (தனித்தனியே பெருமான்) செய்த கருணையைக் கண்டேன். முடிப்பாகக் கட்டப்பட்ட சடையின்மேல் பாம்பு மூடிக்கொள்வதனால் வலிய பிறை (இருந்தவிடம் தெரியாமல்) போய் மறைவதைக் கண்டேன். கொடியாகப் பொருந்திய அதன்மேல் (கொடியில்) ரிஷபத்தைத் தரிசித்தேன். (அரையிலே) கோவணமும் (அது கட்டுதற்குரிய) துணிக் கயிறும் (கீள்) விளங்கக் கண்டேன்; கூர்மை பொருந்திய திரிசூலத்தைக் கையிலே கண்டேன். திருவாய் மூர்ப் பெருமானை நான் கண்ட வகை இதுவாகும்.

சிவபெருமானது காட்சியைப்பெற்ற அப்பர் இப்பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் இவ்வாறே பல திருச்சின்னங்களைக் கண்டேன் என்கிறார்

## 69. 'தீர்த்தங்கள் ஆனார் தாமே'

ஒன்று உலகனைத்து மானார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ ஆகாச மானார் தாமே
கொன்றுடேங் கூற்றை உதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்(று)ஆடும் தீர்த்தங்கள் ஆனார் தாமே
திருஆலங் காடு(உ)றையுஞ் செல்வர் தாமே. 6. 78. 1.

*திருவாலங்காட்டில் அமர்ந்துள்ள அஷ்ட ஐசுவர்ய வானாகிய பெருமான் உலகம் முழுவதும் தாம் ஒருவரே யானவர்; ஒவ்வொரு கற்பகாலத்தும் (முடிவு இன்றி நின்று) மேம்பட்டவர்; (எப்போதும்) நிலையுடைய வராய் எவ்விடத்தும் நிறைந்திருப்பவர். தண்ணீரும் காற்றும் நெருப்பும் ஆகாசமும் ஆனவர். (உயிர்களை யெல்லாம்) கொன்று மகிழும் யமனை (மார்க்கண்டேய னுக்காக) உதைத்தவர். அழகிய பழனை (திருப்பழ னத்தை) என்னும் திருப்பதியை இருப்பிடமாக உடைய வர். (உலகத்தவர்கள்) போய் நீராடும் புண்ணிய தீர்த் தங்கள் ஆனவரும் அவரே.*

*ஒன்று—ஒன்றி என்றுமாம். உலகனைத்தும் ஆனார்-எல்லாப் பொருள்களுக்கும் உள்ளும் புறமும் நிலைபெற நிற்றலின் அவையானார்; 'மண்ணா லீலை' யென்ற பாட் டில், உலகப் பொருள்களைக் கடந்து நிற்கும் தன்மை யைக் குறித்தார்.*

## 70. 'இரு விசும்பில் இருக்கலாமே'

தந்தையார் தாயா ருடன் பிறந்தார் தாரமார்
புத்திரரார் தாந்தா மாரே
வந்தவாறு எங்ஙனே போமா(று) ஏதோ மாயமாம்
இதற் கேதும் மகிழ வேண்டாம்

சிந்தையீர் உமக்(கு)ஒன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க்(கு) இரு விசும்பில் இருக்க லாமே.
6. 93. 10.

*தகப்பன் யார்? தாய் யார்? கூடப் பிறந்தவர்கள் (யார்)? மனைவியார்? மக்கள் யார்? தாமே (அவரவர்) யார்? (எல்லோரும் இவ் வுலகத்திலே) வந்த வகை எவ்வாறு? (திரும்பவும் போகும் வகை எதுவோ! (எல்லாம்) மாயமாகும். இத்தகைய மாயமாகிய (உலக உறவைக்) குறித்துச் சிறிதும் மகிழ வேண்டாம். பந்தங்களிலே உழன்று எப்போதும்) கவலையுடையவர்களே! உங்களுக்கு (நான்) ஒன்று சொல்வதைக் கேளுங்கள். விளங்குகிற சந்திரனும் ஒளி பொருந்திய பாம்புகளும் கலந்து விளையாடும் சடை முடியை உடைய (உலகுக்கு) தந்தையாகிய சிவ பெருமானுடைய திருநாமத்தை 'நமச்சிவாய' என்று (அடிக்கடி ஒவ்வொரு செயலிலும்) சொல்லிக்கொண் டிருப்பவருக்கு, பெரிய மோட்ச உலகத்தில் இருப்பது இலகுவாகும்.*

*உண்மையான தந்தை தாய் முதலிய எல்லா உறவினரும் சிவபெருமானே என்பது கருத்து.*

*ஒப்பிடுக :*

**நீயே தாயும் தந்தையும்**
**நீயே உறவும் தோழனும்**
**நீயே வித்தையும் செல்வமும்**
**எனது தேவ தேவனே நீயே எல்லாம்.**

*—பிரபன்ன கீதை.*

*71. 'இன்றாகி நாளையாகி நிமிர்...அடிகள்'*

இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாய்அட்டமூர்த்தி யாகிப்

பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிற உருவுந் தம்உருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே. 6. 94. 1.

*பெரிய பூமியாகியும், நெருப்பாகியும், தண்ணீராகியும், வீசும் காற்றாகியும், ஆகாயமாகியும், அரிய நிலைமையை உடைய சந்திர சூரியர்களாகியும் (இவைகளின் மேம்பட்ட) யஜமானன் (புருஷதத்துவ) மாகியும், இவ்வாறான) எட்டு (அஷ்ட) மூர்த்தியாகியும், பெரிய நன்மையும் (அதற்கு மாறான) குற்றமும், பெண்ணும் (அதற்கு மாறான) ஆணும், (உலகத்திலுள்ள) பிறர் (ஜீவர்கள்) வடிவமும் தமது திருவடிவமும் தாமே யாகியும், நேற்று இன்று நாளை என்னும் முக்காலமாகியும் ஓங்கிய அச்சந்தரும் சடாதாரியாகிய எம் கடவுள் (உயிர்களின் பொருட்டு ஐந்தொழில் செய்து) நிற்கும் வகை என்ன வியப்புடையது!*

*பெருநிலமும் குற்றமும் - வீட்டின்பமும் கட்டுப்படுதல் ஆகிய குற்றமும்; 'பந்தமும் வீடுமாயினார்'- (மாணிக்கவாசகர்.) நெருநலை....நாளையாகி - காலதத்துவத்தை இயக்குமவனாகி.*

### 72. 'மண்ணாகி விண்ணாகி'

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப்
பிரளயத்துக்(கு) அப்பால்ஓர் அண்ட மாகி
எண்ணாகி எண்ணுக்கு ஓர் எழுத்துமாகி
எழுஞ்சுடராய் எம்அடிகள் நின்ற வாறே.
6. 94. 2.

*பூமியாகியும் ஆகாசமாகியும் மலைகளாகியும் வயிரம் மாணிக்கம் முதலிய நவமணிகளாகியும் (உயிர்களுக்குக்)*

கண்ணாகியும், அக்கண்ணில் கருமணி ஆகியும், (பல) கலைகளாகியும் அக்கலைகளை அறியும் அறிவும் தானே ஆகியும், பெண் வடிவாகி அப் பெண்ணுக்கு ஏற்ற ஒரு ஆணும் ஆகியும், (உலகமெல்லாம் அழியும்) பிரளய காலத்தின் பின்னும் (மீள எல்லாம் தோன்றுதற்குக் காரணமான) ஓர் அண்டமாகியும், (உயிர்களுடைய) எண்ணங்களாகி, அவ் வெண்ணங்களை எழுதி (வெளி யிட்டுக்) காட்டுவதற்குரிய எழுத்துக்களும் ஆகியும், (மேன்மேல்) ஓங்கும் சோதி வடிவாகியும் எம் கடவுள் நிற்கும் வகை என்ன வியப்புடையது!

## 73. 'அப்பன் நீ அம்மை நீ'

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓர்ஊ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன் நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏ(று)ஊர்ந்த செல்வன் நீயே.

6. 95. 1.

தகப்பன் நீ; தாய் நீ; ஆசானும் நீ; அன்புள்ள மாமன் மாமிகளும் நீ; (குடித்தனத்துக்கு) தகுதியுள்ள பெண்களும் சிறந்த செல்வமும் நீ; (எல்லார்க்கும் பொது வான) ஒப்பற்ற ஒரே பரம்பரையும் (அதற்கேற்ற) சுற்ற மும் (ஒவ்வொருவருக்கு) ஒவ்வோர் ஊரும் நீ; அனுப விக்கும் (போகப்) பொருள்களும் (பிறவி நோயினின்று) கடைத்தேறச் செய்யும் பொருள்களும் தோன்றிச் செய் பவன் நீ; (எனக்குத்) துணையா யிருந்து என் மனத்தை (அனைத்தையும்) துறக்கச் செய்பவன் நீ; (யாவரும் விரும் பும்) இந்தப் பொன் நீ; இந்த நவரத்தினங்கள் நீ; இந்த முத்துக்களும் நீ. (எங்கும்) தங்கியிருப்பவன் நீ; ரிஷ பத்தை வாகனமாக உடைய ஈசுவரனும் நீயே.

அப்பன் - நன்மையைக் கோருதலின்; அம்மை - பிரியத்தைச் செய்தலின்; ஐயன் - அறியாமையை நீக்குதலின்; அன்புடைய மாமனும் மாமியும் - கொடுத்தற்கு உரிமை பூண்டு கொள்ளலை விரும்பாதிருத்தலின்; மாதரும் ஒண் பொருளும் - உலக இன்பங்களைத் தருதலின் (அறம் பொருள் இன்பம் மூன்றிற்கும் காரணமாதலின்); ஒரு குலமும்....ஓர் ஊரும் நீ - அழியாததும் எல்லார்க்கும் பொதுவாக உரியதும் ஆன ஆதிப் பொருளும் அனுதியான உறவும் முடிவில் அடைதற் குரிய (அல்லது) ஆதியில் நமக்குச் சொந்தமான) இடமும் ஆதலின்; துய்ப்பனவும் உய்ப்பனவும் - வினைப்பயனை விளைப்பவனும் வினையறுத்து விடுவிப்பானும் ஆதலின்; துணையாய்....துறப்பிப்பாய் - ஞானத்திற்கு ஆணி வேர் போன்ற துறவைப் பெறத் துணை செய்தும், துறக்கும்படிக் கட்டாயம் செய்தும் வருதலின்; இப் பொன்....நீயே - இவ்வுலகச் செல்வமாயும், அவைகட்கு அப்பாலாய் ஆணவத்தை அடக்கியாளும் பரவுலக ஞானச் செல்வமாயும் இருத்தலின்.

## 74. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'

ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடா தாரே
 அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆர்ஒருவர் ஓடா தாரே
 உருகுவித்தால் ஆர்ஒருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆர்ஒருவர் பாடா தாரே
 பணிவித்தால் ஆர்ஒருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆர்ஒருவர் காணா தாரே
 காண்பார்ஆர் கண்ணுதலாய்க் காட்டாக்காலே.

6. 95. 3.

(நீ) ஆட்டுவித்தால் ஆடாமல் இருப்பவர் ஒருவர் யார்? அடங்கச் செய்தால் அடங்காமலிருப்பவர் ஒருவர் யார்? (நீ பல விடங்களிலும் அலைந்து) ஓடும்படி செய்தால் ஓடாதவர் ஒருவர் யார்? (நீ மனம் உருகச் செய்தால் (பக்தி கொண்டு) உருகாத ஒருவர் யார்? (உன் மீது) பாடச் செய்தால் பாடாதவர் ஒருவர் யார்? (அது

போலவே) உன்னைப் பணியும்படி செய்தால் பணியாத வர் ஒருவர் யார்? உன்னை (நீயே) காண்பித்தால் காணு தவர் ஒருவர் யார்? (நீயே) நெற்றிக் கண்ணைக் காட் டாவிட்டால் உன்னைக் காண்பவர் யார்? (உன்னு டைய சங்கற்பம் இன்றி உலகத்து ஒன்றும் நடை பெருது.)

உள்ளிருந்து மக்களின் மனத்தை ஆட்டுவித்து அவர் களை ஆடவும் அடங்கவும் ஓடவும் உருகவும் பாடவும் பணியவும் காணவும் செய்பவன் நீயே யாகின்றனை என்றவாறு.

ஒப்பிடுக :

**'எல்லாம் உன்னுடைய செயலே'**

—தாயுமானவர்.

**'எல்லாம் எவையாளும் ஈசன் செயல்'**

## 75. 'நற்பதத்தார் நற்பதமே'

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத்து அப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுஉன் தன்மை
நிற்பதுஒத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத புலால்உடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யான்உன்னை விடுவேன் அல்லேன்
கனகமா மணிநிறத்துஎங் கடவுளானே.

6. 95. 4.

நல்ல பதவியை நாடுபவர்க்கு (அந்த) நல்ல பதவி யாயிருப்பவனே, ஞான மயமானவனே, நல்ல சோதி வடிவே, நான்கு வேதங்களுக்கும் அப்பால் உள்ளதான— சொல் வன்மை யுடையவர்கள் (குறித்துச்) சொல்லும் நிலையையும் கடந்து நின்றதான (எவரும் குறித்துச்) சொல்ல முடியாத இடத்தில் இருப்பவனே! இது உன் இயற்கை. (அவ்வாருயினும்) (ஒரு நிலையில்) நிற்பது போலத் தோன்றி (எப்போதும் ஒரு) நிலையில்லாத (சஞ்

சலமுள்ள) மன்த்தினுள்ளே (அதுவும்) அழியுந் தன்மை யுள்ள புலால் மயமான (என்) உடம்பினிடத்தே புகுந்து நிலைத்துள்ள கற்பகம் போன்றவனே! பொன்னும் மாணிக்கமும் போன்ற (சிவந்த) திருமேனியை யுடைய எம்பெருமானே, (என் உள்ளே புகுந்த) உன்னை இனி நான் எங்கும் போகவிட மாட்டேன்.

மனம் வாக்குக்கு எட்டாத அழிவற்ற பரம்பொருள் தமது நிலையற்ற உடலிலும் தங்கித் தமக்கு வேண்டுவன வற்றை யெல்லாம் தருதலின், நாயனார் அந்த அருமையை உணர்ந்து அவரைப் போகவிட மாட்டேன் என்கிறார்.

ஒப்பிடுக :

'யான் உனைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே' —திருவாசகம்.

## 76. 'அளியற்றார் பிறந்தவாறு ஏதோ'

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீ வண்ணர் திறம்ஒருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணா [ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீறு அணியா ராகில்
அளியற்றார் பிறந்தவாறு ஏதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.
6. 95. 6.

(இறைவனது) சிறந்த நாமமாகிய ஐந்தெழுத்தை யும் (பஞ்சாட்சரத்தை) (அடிக்கடி) சொல்லாதவர்களா னால், நெருப்புப் போலும் சிவந்த திருமேனி நிறமுடைய பெருமானுடைய பெருமைகளை ஒரு முறையேனும் பேசா தவர்களானால், அவருடைய திருக் கோயிலை ஒரு முறை கூட வலம் வராதவரானால் (தினமும்) தாம் உண்பதற்கு முந்திச் சில பூக்களைப் பறித்துப் பெருமானுடைய திரு வடிகளிலே அருச்சித்துவிட்டுப் பின்பு உண்ணாதவரா

ஞல், அரிய நோய்கள் தீரும் பொருட்டு வெண்மையான திருநீற்றை (உடம்பில்) அணியாதவராஞல், சிவபெருமானிடத்து அன்பில்லாத இம்மாதிரி மக்கள் உலகத்திலே பிறந்தது எதற்காக என்ருல், பெரிய (கொடிய) நோய்கள் தம்மை வருத்த, மீண்டும் மீண்டும் இறந்து, பிறப்பதே தொழிலாகி (பிறவிப் பிணி நீங்காமல்) இறந்து ஒழிகின்ருர்கள்; (இதன் பொருட்டே அவர்கள் பிறந்தது.)

77. 'அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
 தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
 மாதேவர்க்(கு) ஏகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்(து)அழுகு தொழுநோ யராய்
 ஆவுரித்துத் தின்று(உ)ழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்(கு) அன்ப ராகில்
 அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே.

6. 95. 9.

சங்கநிதி பதுமநிதி (எனப்படும்) நிதிகள் இரண்டையும் எமக்குக் கொடுத்து, இப் பூமியோடு சுவர்க்கத்தையும் ஆளும்படித் தருவார்களாயினும், அவர்கள் மகாதேவஞன பெருமானுக்கு அந்தரங்க பக்தர்களல்லாவிடின், (விரைவில் எல்லாம்) மங்கிப் போகத் தக்கவர்களான அவர்களுடைய செல்வத்தை மதிக்க மாட்டோம். உடம்பு முழுதும் அழுகிக் குறைந்து போகிற குட்ட நோய் உடையவர்களாய், பசுவையே உரித்துத் தின்று திரியும் புலையர்களாயினும், கங்கையை நீண்ட சடையிலே அடக்கியுள்ளவராகிய பெருமானுடைய பக்தர்களாஞல், அவர்களே நாம் வணங்கத் தக்க தெய்வம்.

நிலையான பக்திச் செல்வம் பெருது, நிலையற்ற உலகினைத்தையும் பெற்ருலும், அவ்வுலகச் செல்வத்தை ஒரு பொருளாக நினைக்க மாட்டோம் என்கிருர்.

ஒப்பிடுக :

'ஆன்மாவை மட்டும் இழந்துவிட்டு உலக முழுவதையும் பெற்றாலும், அதன் பயன் என்ன ?' —இயேசுநாதர்.

*பக்தி இருப்பின் இழிவான பிறப்பினரும் வணங்குதற் குரியரே என்கிறார்.*

ஒப்பிடுக :

பாதியா யழகியகால் கைய ரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தோ ரேனும்
ஆதியா யரவணையா யென்ப ராகில்
அவரன்றோ யாம்வணங்கும் அடிக ளாவார்
சாதியா லொழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றாதார் புலையர் தாமே.
—திருவரங்கக் கலம்பகம்.

## 78. 'எழுதிக் காட்டொணாதே

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னில் அல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவ னல்லன்
ஓர்ஊரன் அல்லன் ஓர்உவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவன்அருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவன்இறைவன் என்(று)எழுதிக் காட்டொ ணாதே.
6. 97. 10.

*'மை எழுதப்பட்ட கண்களையுடைய உமையும் தானுமாகத் திருக்கச்சி மயானம் என்னும் தலத்தில் எழுந்தருளியவன், நீண்ட சடையுடையவன்' என்று சொல்வதையன்றி, தனக்கு ஒப்பாக ஒருவரை உடையவன் அல்லன். (பாதிப் பெண் வடிவு உடைமையால்) தான் ஒருவனே யானவனு மல்லன். ஓர் ஊரில் இருப்பவன் அல்லன் ; ஓர் உவமையும் இல்லாதவன். (அவனுடைய) அந்தத் திருவடிவமும், அந்த நிறமும், அவ்வழ*

கும் அவனுடைய திருவருளையே கண்ணுகக் (கொண்டு) (நேரே) பார்த்தாலன்றி, இத்தகைய வடிவமுடையவன், இன்ன நிறமுடையவன், இத்தகைய அழகுடையவன்—இவன் தான் தலைவன் என்று (அவனுடைய திரு வடிவம் முதலியவற்றை வருணித்துக் காட்டமுடியாது.

### 79. 'நாமார்க்கும் குடியல்லோம்'

நாமார்க்குங் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாம் ஆர்க்குங்குடி யல்லாத்தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதிற்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னேமே.

6. 98. 1.

நாம் அரசர்) ஒருவருக்கு (உட்பட்ட) குடியல்லோம்; யமனுக்கும் அஞ்ச மாட்டோம். (அவனால்) நரகத்திலே (தள்ளப்பட்டுத்) துன்பப்பட மாட்டோம். (உலகத்தில் எம்மிடம்) பொய் வாழ்வு இல்லை. (எவரும் எம்மை ஒன்றும் செய்யமுடியாது என்று) இறுமாந்திருப்போம். மலத்தால் பிணிக்கப்படுதலை அறியமாட்டோம். (பந்தம் இங்கே சாராது.) (எவருக்கும்) தாழ மாட்டோம். (எமக்கு) எந்த நாளும் இன்பமே யன்றித் துன்பம் என்பது இல்லை. (ஏனெனில்) தாம் ஒருவருக்கும் (உட்பட்ட) குடியல்லாத தன்மை யுடையவரும், சங்கரன் எனப்படுகிறவரும், நல்ல வெண்மையான சங்குக் குண்டலத்தை ஒரு காதிலே உடையவருமான (எம்) தலைவருக்கே (நாம்) எந்நாளும் மாறுபடாத அடிமையாகி, (அவருடைய) பூக்கள் நிறைந்துள்ள செம்மையான இரண்டு திருவடிகளையே (கதியாக) அடைந்துவிட்டோம். (சிவத்தன்மை பெற்றுவிட்டோம்.)

பிறர்க்குத் தாம் அடிமைப்படாது பிறரைத் தம் அடிமைகளாகக்கொண்ட சுதந்திரமூர்த்தியான சிவபெரு

மானுக்கு மாருத அடிமையாய், அவரது திருவடிகளையே அப்பர் புகலாகப் பற்றினர். அதனுல், அவர் பிறர்க்குப் பணியவேண்டாத பெருமையையும், நோயும் துன்பமும் துன்புறுத்தமுடியாத நிலைமையையும் அடைந்த இறுமாப் பைத் தெரிவிக்கிருர். சமண மதத்தைப் பின்பற்றிய அரசன் நாவுக்கரசரை அழைத்து வரும்படி தன் ஆட்கள் சிலரை அனுப்ப, அவர்கள் வந்து அழைத்த பொழுது அவர்களுக்கு மறுமொழி கூறும் முறையிற்பாடியது இப் பதிகம். அதனுல் 'மறுமாற்றத் திருத்தாண்டகம்' என்னும் பெயருடையது. 'நாம்........குடியல்லோம்' (1) தன்வசமா யிருக்கும் தன்மையையும், 'நமனை அஞ்சோம்' (2) தூய உடம்புடைமையையும், 'நரகத்தில் இடர்ப்படோம்' (3) இயற்கையுணர் வுடைமையையும், 'நடலை யில்லோம்' (4) பாசங்களின் நீங்குதலையும், 'ஏமாப்போம்' (5) பொரு ளுடைமையையும், 'பிணியறியோம்' (6) முற்று முணர் தலையும், 'பணிவோமல்லோம்' (7) வரம்பிலாத ஆற்ற லுடைமையையும், 'இன்பமே எந்நாளும்' (8) வரம்பி லாத பேரின்ப முடைமையையும் குறிக்கும் என்றும், ஆக அப்பர் சுவாமிகள் இறைவனேடு கலந்திருந்தமை யினுல், இறைவனது எண் குணங்களும் தம்மிடத்து பதி யப் பெற்ருர் என்றும் உரைப்பர். குறுகினேமே - சீவத்தன்மை குறுகினுல் சிவத்தன்மை வருமன்ருே ? ('சீ' இன் குறுக்கம் 'சி') அடியை அடைந்து ஐக்கியம் பெற்ருேம்.

## 80. 'உன் அடிக்கே போதுகின்றேன்'

எண்ணுகேன் என்சோல்லி எண்ணு கேனே
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்இலேன் மற்ருேர் களைகண் இல்லேன்
கழல்அடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ(து) உணர மாட்டேன்
புண்ணியா உன்அடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 6. 99. 1.

எம்பெருமானுடைய திருவடிகளையே நினைப்பதல்லாமல் வேறு எதை எண்ணுவேன், எவ்வாறு என்ன சொல்லி எண்ணுவேன்? உன்னுடைய வீரக் கழல் அணிந்த திருவடியைக் காணுவதல்லாமல், வேறொன்றையும் பார்ப்பதில் என் கண்கள் செல்லா; வேறு பற்றுக் கோடும் எனக்கு இல்லை. அறிவுக்குள்ளே (அது வெளிச் சென்று உணரும்படி) ஒன்பது வாசலை (ஒன்பது துவாரங்களை)ப் படைத்துள்ளாய். (செயல்கள்) எல்லாம் ஒடுங்கும்போது (மரண காலத்தில்) உன்னை உணரமுடியாதவனுவேன். புண்ணியனே, திருப்பூம்புகலூரில் எழுந்தருளியுள்ள புண்ணிய மூர்த்தியே, உன் திருவடியையே புகலாகப் பற்றிக்கொண்டு உன்னிடமே வருகின்றேன்.

இப் பதிகத்தைத் திருப்பூம்புகலூர் என்னும் தலத்தில் நாயனுர். 'என்னை இனி உம்முடைய திருவடியின் கீழ் அமர்த்தி யருளவேண்டும்' என்ற பிரார்த்தனையோடு பாடி, சிவானந்த ஞானவடிவாகித் திருவடியில் அமர்ந்தருளினுர்.

# ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

---

## 1. 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன்'

பித்தாபிறை சூடீபெரு மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
[அருள்துறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேன்என லாமே. 1. 1.

பொழிப்புரை. *(அடியார்களுக்கு அருள் புரியும் வகையில் பெருங் கருணையால்) பித்தர் போன்றவனே, (திருவடிகளைத் தஞ்சம் என்று அடைந்த) பிறைச் சந்திரனை (உன் இயல்பாகிய கருணையினாலே) முடியில் சூடிக்கொண்டவனே, (அன்பர்களுக்கு எளியவனாயினும்) எல்லா உயிர்களுக்கும் தலைவனே, அருளையே செல்வமாக உடையவனே, (இனி உன்னை நான்) எவ்வகையிலும் மறவாமல் (இடைவிடாது) தியானிப்பேன். (அவ்வாறு நினைக்கின்ற என்) மனத்திலே எழுந்தருளியுள்ளாய், பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ளதாகிய திருவெண்ணெய் நல்லூரிலே 'திருவருட்டுறை' என்னும் ஆலயத்தில் அமர்ந்தருளிய என் அப்பனே! இனி நான் உனக்கு என்றென்றும் அடிமை என்று தெளிந்த பிறகும், அல்லேன் என்று கூறுதல் கூடுமோ?*

*பித்தர்—அடியார்கள்மீதுள்ள அளவுகடந்த பெருங் காதலினால் பித்தனைப் போன்றவர். அடியார்களுடைய அற்பமான உடல் பொருள்களுக்குப் பதிலாக ஒப்புயர்வற்ற தம்மையே அளிப்பதனாலும் பித்தனைப் போன்றவர். பிறைசூடீ—அடைக்கலம் புகுந்தவர்களைத் தகுதி கருதாது கைதூக்கி ஆளும் இயற்கையைப் பிறைசூடிய கதையில் காண்க. பெருமானே—எல்லா உயிர்களையும்*

தம் உடைமையாகக் கொண்டவர். இதில் ஆண்டான் அடிமைத் திறம் காண்க. அருளாளா—அருளினுல் ஆள் கின்றவன் என்னலுமாம். பித்தனுனபடியால் பிறை சூடினுன்; ஆண்டான் அடிமை உறவினுல் அருள் புரி கிருன். மனத்துள் வைத்து (எழுந்தருளி) எத்தாலும் மறவாது நினைக்கச் செய்வதும் அருளே. தடுத்தாட் கொண்டு காட்சி தந்து அருளியதால் பண்டைக் கைலாய வாழ்க்கை நினைவுவர 'ஆளாய் இனி அல்லேன் எனல்' இயலாது என்கிருர்.

2. 'இறை போதும் இகழ்வன்போல் யானே'

வெய்தாய வினைக்கடலில் தடுமாறும் உயிர்க்கு
மிகஇரங்கி அருள்புரிந்து வீடுபே(று) ஆக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத்(து)
எண்டோளெம் பெருமானைப் பெண்பாகம் ஒருபால்
செய்தானைச் செக்கர்வான் ஒளியானைத் தீவாய்
அரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ
எய்தானை எறிகெடில வடவீரட் டானத்(து)
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.
38. 7.

(உயிர்களை மீண்டும் மீண்டும் பிறவியில் புகுத்து வதனுல்)கொடியனவாகிய (புண்ணியம் பாவம் எனப்படும் இரு) வினைக் கடலில் (கரை காண அறியாது) தடுமாறு கின்ற உயிர்களுக்கு (இயல்பாகிய) கருணையினுல் மிகவும் இரங்கி அருள் செய்து, முத்தி பெறுதலாகிய பெருஞ் செல்வத்தைத் தருபவனும், (தீமையை) அழிப்பவனும் உலகை அழிக்கவந்த ஆலாலவிடத்தை (அருளால் உவந்து ஏற்றுத் தங்குவித்ததனுலேயே) கருநிறம் பொருந்திய திருக்கழுத்தையும் எட்டுத் திருக்கரங்களை யும் (உடைய) எந்தலைவனும், (தன் திருமேனியில்) ஒரு பாதியை (சத்தியாகிய) பெண்ணின் பாகமாகச் செய்து கொண்டவனும், அந்திக் காலத்துச் செவ்வானம்போல (இனிய திருமேனி) ஒளியுடையவனும், தீப்போலும் விடம் பொருந்திய வாயையுடைய பாம்பு (படமெடுத்து)

ஆடப்பெற்ற சடையை உடையவனும், ஆகாயத்திலே திரிகின்ற அசுரர்களுடைய மூன்று நகரங்கள் வெந் தொழியும்படி (தன் புன்னகையைச்) செலுத்தி அழித்த வனும், கரையை அழிக்கின்ற கெடிலநதியின் வடபால் உள்ள (திருவதிகை) வீரட்டானம் என்னும் தலத்தில் எழுந்தருளி யிருப்பவனுமான எம்பெருமானை ஒரு கணப்பொழுதும் நான் மறந்து அலக்ஷியம் செய்வேனோ.

கடலைச் சித்தமாகவும், வினைகளை விருத்திகளாகவும் கொள்வது யோகநூல் மரபு. இவைகளே பிறப் பிறப்புக்குக் காரணமாம். இன்னாததாகிய விஷத்தைத் தான் உவந்து உண்டு இனியதாகிய அமுதத்தை உல குக்கு அளிப்பது இறைவனுடைய இயல்பு என்பதைத் திருநீலகண்டம் விளக்குகிறது. திரிபுரம் எரித்தல் என் பது அசுரர்போலத் தீங்கிழைக்கும் உட்பகையாகிய முக்குணம் மும்மலம் மூவுடல் போன்றவைகளையும் அழித்து அருள் செய்தலைக் குறிக்கும். "இகழ்வன் போல்"—திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தொண்டு செய்த திருவதிகையை மிதித்தற்கு அஞ்சி அருகிலிருந்த சித்திவட மடத்தில் புகுந்து நித்திரை செய்கையில், சிவ பெருமான் ஒரு விருத்தப் பிராம்மணராக வந்து அவ ருடைய தலையைத் தமது காலால் தீண்ட, வந்தவர் இறை வன் என்பதை அறியாது கோபித்து இகழ்ந்ததைக் குறிக்கிறார்.

### 3. 'சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே'

பிணிகோள் ஆக்கை பிறப்பிறப் பென்னும்
இதனைநீக்கி ஈசன் திருவடி யிணைக்காள்
துணிய வேண்டிடிற் சொல்லுவன் கேள்நீ
அஞ்சல் நெஞ்சமே வஞ்சர்வாழ் மதில்மூன்(று)
அணிகொள் வெஞ்சிலை யால்உகச் சீறும்
ஐயன் வையகம் பரவிநின் றேத்தும்
திணியும் வார்பொழில் திருத்தினை நகருள்
சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே. 64. 2.

(பல) நோய்களைக் கொண்டதாகிய இவ்வுடல் பிறப்பு இறப்பு என்னும் பெருந் துன்பங்களை நீக்கி எம் பெருமானுடைய திருவடிகளுக்கு ஆளாகும் வகையை (நீ) துணிவாகக் கொள்ள விரும்பின் (அதற்கு நான் ஒன்று) சொல்லுவேன் கேள்; (என்) நெஞ்சே, நீ (இது நம்மால் இயலாத தென்று) அஞ்சாதே; வஞ்சகரான அசுரர் (மூவர்) வாழ்ந்து திரியும் கோட்டைகள் மூன்றும் அழிய, அழகைக்கொண்ட (பொன்மயமான) கொடிய (மேரு மலையாகிய) வில்லாலே கோபித்து அழித்த தலைவன் ஆகிய, உலகத்தார் புகழ்ந்து நின்று துதிக்கும் அடர்ந்த பெரிய சோலைகளையுடைய திருத்தினைநகருள் (எழுந்தருளிய) சிவக்கொழுந்தீசனைப் போய் (தஞ்சமென்று) அடைவாயாக என் மனமே.

உடற்பிணி நீக்கச் சில பச்சிலைக் கொழுந்துகள் உதவுவதுபோலப் பிறவியாகிய பெரும்பிணி நீக்கச் சிவக்கொழுந்து உதவுதல் உற்று நோக்கற்பாலது. வஞ்சர் வாழ் மதில்....உகச் சீறும் - மும்மலங்களால் விளையும் பிறப்பிறப்புகளைக் கருணையால் ஒழித்தல் இதன் குறிப்பாகும். சிவக்கொழுந்து - சிவனைக் கொழுந்தென்றமை மென்மை இனிமை அழகு விரும்பப்படும் தன்மை பற்றி.

### 4. 'ஐயனை...கண்டு கொண்டேனே'

வரும் பெரும் வல்வினை யென்றிருந் தெண்ணி
 வருந்தலுற் றேன்மற வாமனம் பெற்றேன்
விரும்பியென் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி
 வேண்டிநின் றேதொழு தேன்விதி யாலே
அரும்பினை அலரினை அமுதினைத் தேனை
 ஐயனை அறவனைஎன் பிறவிவேர் அறுக்கும்
கரும்பினைப் பெருஞ்செந்நெல் நெருங்கிய கழனிக்
 கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே. 58. 6.

(பிறப்புக்குக் காரணமாகிய) பெரிய கொடிய வினைகள் (விடாது தொடர்ந்து) வருமே என்று (நிதானமாக)

இருந்து நினைத்து வருந்தலுற்ற நான், (பெருமானருளால் அவனை என்றும்) மறவாத மனத்தைப் பெற்றேன். காதல்கொண்டு என் மனத்திடைத் தியானித்து (அந்த ஆனந்தத்தால்) உடம்பு முழுதும் குளிரப்பெற்று (உன்னையே) வேண்டி நிலையாகத் தொழுதேன்; (உனது) அருளாலே (தொழுவார்க்கு மனத்திடையே முதலில்) அரும்பாகி(த்தோன்றி)(பின்பு விரிந்த) மலராகி, அமுதம் போல் இனித்து, (தன்னிடத்துப் பக்தி வெறியினைத் தரும்) தேனும் ஆகிய தலைவனும், தரும சொரூபியும், என்பிறவி (யாகிய செடியின்) வேரை அறுக்கும் (எனக்கு மிகவும் இனிய) கருப்பஞ் சாறுகியவனுமான எம்பெருமானை, ஓங்கி வளர்ந்த செந்நெற் பயிர்கள் அடர்ந்த வயல்களையுடைய திருக்கழுமல மென்னும் வளம் மிக்க ஊரிலே நான் கண்டுகொண்டேன்.

கண்டு கொண்டேன் - சம்பந்தப் பெருமானது திருவவதாரத் தலமாகிய சீகாழியை மிதித்தற்கு அஞ்சிச் சுந்தரர் அதன்புற எல்லையில் ஊரை வலம் வரும்போது, சிவபெருமான் காட்சியருளியதைக் குறிக்கிறது. அரும்பினை....கரும்பினை - வல்வினை வரும் என்று வருந்தலுற்ற போது, இறைவனைப்பற்றிய நினைவு அரும்பியது; மறவா மனம்பெறலும், அது அலர்ந்தது; விருப்பம் எழுந்ததும், அது அமுதமாயிற்று ; மனத்திடைத் தியானிக்க ஆனந்தம் பொழிந்து, மெய் குளிர்ப்பித்தலின், தேனாயிற்று. இறைவனையே வேண்டியது, அவன் ஐயனாகிய அறவனாதலின்; அவனை நிலையாக எண்ணியது, பிறவி வேரறுக்கப் படுதலின் ; அவனைத் தொழுதல் (அதாவது, இனிய தொண்டுகளைச் செய்தல்) அவன் கரும்பு போன்றவனாயிருத்தலின்.

## 5. ‘அடியார்க்கும் அடியேன்’

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் எல்லார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்

முப்போதும் திருமேனி தீண்டுவோர்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 39, 10.

*(சிவ) பக்தர்களாய் (சிவபெருமானை) வழிபடுவோர் எல்லார்க்கும் (நான்) அடியவன். பரம்பொருளாகிய அவனையே பாடிப் புகழ்வார் எல்லார்க்கும் (நான்) அடியவன். (பிறக்க முத்தி தரும் தலமாகிய) திருவாரூரிலே பிறந்தவர் எல்லார்க்கும் (நான்) அடியவன். (காலை, நண்பகல், மாலை என்னும் முக்காலங்களிலும் பெருமானது) திருமேனியைத் தொட்டு (அபிடேகம் அருச்சனை முதலாயின செய்யும் பேறுடையாராகிய) ஆதி சைவர்க்கும் (நான்) அடியவன். பெருமை மிக்க திருநீற்றைப் பூசிய முனிவர்களுக்கும் (நான்) அடியவன். தமிழ்நாட்டுக்கு அப்புறத்திலும் இறைவனடியை அடைந்த பெரியாருடைய அடியவர்க்கும் நான் அடியவன். நம்பியாரூரனாகிய யான் திருவாரூரின் பெருமானுக்கு எப்போதும் அடிமையே (என்பது சொல்லாமலே அமையும்).*

*"திருத்தொண்டத் தொகை" என்ற இப்பதிகம் நம்பியாண்டார் நம்பி அருளிய திருவந்தாதிக்கும், சேக்கிழார் சுவாமி அருளிய பெரிய புராணத்துக்கும் மூலம்.*

## 6. *'அட்டித்தரப் பணியே'*

நீள நினைந்தடியேன் உமைநித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே [றேன்
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப் பெற்
ஆளிலை எம்பெருமான் அவைஅட்டித் தரப்பணியே. 20. 1.

*(உமது அடியவனாகிய நான் உம்மை நெடுக நினைத்துத் தினந்தோறும் (விடாது) முறையாகத் தொழுவேன். (ஆடவர் நெஞ்சை அறுத்தலின்) வாள்போலும் கண்களையுடையவளாகிய அப்பரவை (பசியால்) வாடி வருந்தா வண்ணம், திருக்கோளிலியில் எழுந்தருளிய எம்பெருமானே, குண்டையூரில் உமது அருளால் சிறிது நெல்லைப்*

பெற்றுள்ளேன். அதனைத் திருவாரூரிற் கொண்டு சேர்க்க ஆள் இல்லை. எம்பெருமானே, அதனைக் கொண்டுபோய்ச் சேர்க்கக் கட்டளையிட்டருளுவீராக.

### 7. 'உகவீராகிலும் உகப்பன்'

ஐவாய் அரவினை மதியுடன் வைத்த
அழகா அமரர்கள் தலைவா
எய்வான் வைத்ததோர் இலக்கினை அணைதர
நினைந்தேன் உள்ளமுள் ளளவும்
உய்வான் எண்ணிவந் தும்மடி அடைந்தேன்
உகவீ ராகிலும் உகப்பன்
நைவான் அன்றுமக் காட்பட்ட தடியேன்
நாட்டியத்தான் குடி நம்பீ. 15. 7.

(ஐம்பொறிகள் போன்ற) ஐந்து வாய்களை (தலைகளை) உடைய கொடிய பாம்பை (அதனால் விழுங்கப்படும் பகைமை பொருந்திய) சந்திரனுடனே (நின் பெருமை தோன்றத்) திருமுடியிலே வைத்துள்ள அழகனே, தேவர்கள் தலைவனே, (அம்பால்) எய்வதற்கு (வைத்ததொருகுறி போல நான் அடைவதற்கு என் மனத்தில்) வைத்துள்ள ஒருகுறியை(முத்தியை) அடைவதற்கு நினைந்தேன், என்னுள்ளத்தால் முடியுமளவும். (அவ்வாறு அந்த இலக்கினை அடைந்து நான்) கடைத்தேறக் கருதிவந்து உம்முடைய திருவடிகளை (ப்பற்றுக) அடைந்தேன். நீர் என்னை விரும்பீராகிலும் (நான் உம்மைவிடாது) விரும்பி வருவேன். (நீர் அன்று என்னைத் தடுத்து ஆட்கொண்ட பொழுது என்னிடத்து உண்டாக்கிய) மனக் கசிவால் அன்றோ உமக்கு அடியேன் ஆளானது? திருநாட்டியத்தான் குடியில் எழுந்தருளிய நம் பெருமானே.

### 8. 'கல்லியல் மனத்தைக் கசிவித்துக் கழலடி காட்டி'

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப் பானைத்
தொண்டனேன் அறி யாமை அறிந்து

கல்இயல் மனத்தைக் கசிவித்துக் கழலடி
காட்டிஎன் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே. 67. 5.

*நல்ல புகழையுடைய திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், திருநாவுக்கரசரும் (தமது பத்திமேலீட்டாலே) பாடிய நல்ல தமிழ்ப் பாமாலைகளிலே சொல்லியவற்றையே சொல்லித் துதித்தலை விரும்பி (ஏற்பவனும்) அடியவனாகிய (எனது) அறியாமையைத் தெரிந்தும், கல்லின் தன்மையை உடைய (கடினமான) என் மனத்தை இளகச் செய்து, வீரக்கழலை அணிந்த, (எவனும் காணுதற்கரிய) தனது திருவடிகள் (வலிய வந்து எனக்குக் காட்டியும், என் தலைமேல் சூட்டியும்) என் பாசங்களை வேரறுத்தவனும், (அமுதம் உண்டதனால்) வலிய தன்மையை உடைய தேவரும் வணங்கும்வண்ணம் (மேம்பட்டு) நிற்பவனும் (ஆன பெருமானை) திருவலிவலத்திலே வந்து (நான்) கண்டுகொண்டேன்.*

### *9. ‘சிவலோகம் ஆள்வதற்(கு) ஐயுற வில்லையே’*

தம்மையே புகழ்ந்(து) இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம்இடர் கெடலும் ஆம்
அம்மையேசிவ லோகம்ஆள்வதற்(கு) யாதும்
ஐயுற வில்லையே. 34. 1.

*தம்மையே (மிகுதியும்) புகழ்ந்து இச்சகமாகப் பேசினாலும், (எப்போதும்) தம்மை அடுத்திருந்தாலும் (உண்மைத்) தொண்டருக்குச் சிறிதும் தரமாட்டாத பொய்ம்மையுடைய (அற்ப) மானுடரைப் பாடாமல், என்னப்பன் (எழுந்தருளிய) திருப்புகலூரை (ப்பணிந்து) பாடுங்கள், புலவர்களே. அவ்வாறு பாடினால், இம்மை*

யிலே (வேண்டுவனவாகிய நல்ல) உணவும் (சிறந்த) உடையும் அவன் தருவான். (இவ்வகையால் இறைவனைத்) துதித்தலும் ஆகும். (அதனால்) துன்பங்களையெல்லாம் போக்கிக்கொள்ளலும் ஆகும். மறுமையிலே சிவலோகத்தை நம்முடையதாக (அவனருளால் உரிமையுடன்) ஆளுவதற்கும் சிறிதும் ஐயமில்லை.

### 10. 'உய்வகை அருளாய்'

நரைப்பு மூப்போடு பிணிவரும் இன்னே
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை யறிந்தேன்
அஞ்சி னேன்நம னாரவர் தம்மை
உரைப்பன் நானுன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்றறி யாத
இரைப்ப னேனுக்கோர் உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 60. 2.

நரைப்பும் (நரைப்பை அறிகுறியாகக் கொண்ட) கிழத்தனமும், (எப்போதும் வருதற்குரிய) நோயும் விரைவிலே வரும். (இது தெரிந்தும் இதுவரை நான்) நன்மையில்லாத செயல்களையே துணிந்து செய்து சலித்தேன். என் வாழ்க்கை அரைபட்ட மஞ்சளைப்போல் (அவலம்) ஆனதை அறிந்தேன். (ஆதலால்) இயமனாருக்கு அஞ்சுகின்றேன். (இவ்வாறு பலமுறை வாயாற்) சொல்லுகின்றேன் நான். (ஆனால் அவ்வாறு அஞ்சாவண்ணம்) உன்னுடைய செம்மையான திருவடிகளைச் சேர்தற்கு (மெய்) உணர்வுடைய (திருந்திய) வாழ்க்கையை ஒரு சிறிதும் அறியாத (வீண் வாய்ச் சொற்களால்) இரையும் எனக்குக் கடைத்தேறும் (ஓர்) உபாயத்தை அருளிச்செய்வாயாக, திருவிடைமருதூரிலே யெழுந்தருளிய என் தந்தையாகிய பெருமானே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆண்டவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டு அவனை எப்போதும் மறவாத சிந்தையினராயினும், உலகத்தார்களின் மனநிலையைக் கண்டு,

அவர்கள் அவலமாகும் தன்மைக்கு இரங்கி, அவ்வுலகத் தார் உய்யும்படி உபதேசிக்கிறார். அரைத்த மஞ்சளை உடனே உபயோகிக்காவிட்டால் பயனிலதாகும். சரீரம் நல்ல நிலைமையில் இருக்கும்போதே நாளைக்கென்று தள்ளிவைக்காமல் ஆண்டவனுடைய திருவடிகளை அடைய முயலவேண்டும்.

## 11. 'கடைமுறை உனக்கே பொறையானேன்'

அழிப்பர் ஐவர் புரவுடை யார்கள்
ஐவ ரும்புர(வு) ஆசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமு றைஉனக் கேபொறை யானேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
வேண்டேன் மானுட வாழ்க்கை யீதாகில்
இழித்தேன் என்றனக்(கு) உய்வகை அருளாய்
இடைம ருதுறை எந்தை பிரானே. 60. 5.

என் மனமாகிய நிலத்துக்கு ஆட்சி உடையவரான ஐவர் (ஐம்பொறிகள்) அந் நிலத்தையே அழிக்கின்றனர். அவ் ஐவரும் (அந்) நிலத்தை (தமது) பற்று அற ஆண்டு கழித்து (இனிப் பயனில்லையென்று அங்கு நின்றும்) கால் வாங்கிப் போனபின் (மனம் செயலற்ற பின்) கடைசியாக (உன்னை அடைந்து என்னைக் காக்கும் பொறுப்பை உன்மேல் ஏற்றி) (உனக்கே சுமையானேன்.) (என் மனக் கண்) விழித்து (உண்மைப் பொருளாகிய உன்னைக்) கண்டேன். மனித வாழ்க்கை இத்தன்மையதாயின் (இதனை நான் இனிச் சிறிதும்) விரும்பேன் (இதனை) இகழ்ந்தேன். (ஆதலால்) எனக்குக் கடைத்தேறும் வகையை அருளிச் செய்வாயாக, திருவிடைமருதூரிலே யெழுந்தருளிய என் தந்தையாகிய பெருமானே.

இளமையிலே, மனம் வலிமை யுள்ளபோதே, அதனைப் புலன்கள் வழிச் செல்லவொட்டாது தடுத்து உன்பால் திருப்புவதே முறை; ஆயினும் அவ்வாறு செய்யாது, மனம் அலைப்புண்டு சோர்ந்தபின் உனை யடைந்து

உனக்குப் பாரமானேன், என்றார். உலகத்தாரது இயல்பைத் தம்மேல் ஏற்றிக் கூறியது.

### 12. 'என்றும் தொலையாச் செல்வம்'

இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழும் தவத்தோர்க் கென்றும்
தொலையாச் செல்வச் சோற்றுத் துறையே. 94, 9.

*(இலகுவாகக் கிடைக்கும்) பச்சிலையால் அன்போடு (அருச்சித்து) துதிக்கும் அடியவர்க்கு, நிலையில்லாத (இவ்வுலக) வாழ்க்கைப் பற்றை நீக்கியருளுபவரான பெருமான் (அமர்தற்கு) இடமாய, தன்னை (ஒரு முறை) தலையால் வணங்கும் தவம் உடையவர்க்கு (என்றும்) அழியாத (முத்திச்) செல்வத்தைத் தரவல்ல திருச்சோற்றுத் துறையாகும்.*

*ஒப்பிடுக :*

**பூவும் பெருவிடில் பச்சிலை யுண்டு புனலுண்டு**

—*பட்டினத்தார்.*

### 13. 'உன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே'

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 24. 1.

*பொன்னை ஒத்த (சோதி பொருந்திய) திருமேனியுடையவனே, (தாருக வனத்தவர் ஏவிய) புலியை உரித்த தோலை அரையிலே உடுத்து, மின்னல் போன்ற (ஒளியுடைய) செவ்விய சடையில் (பொன்போல்) ஒளி பிரகாசிக்கும் கொன்றைப் பூவைச் சூடியவனே, (என்றும்) நிலையான அரசே, பெரிய இரத்தினமே, திருமழபாடியில் (எழுந்தருளிய விலையில்லா) மாணிக்கமே, (அருட்சக்தியாகிய) உலகமாதா வடிவானவனே, உன்னை அன்றி வேறு யாரை (நான்) நினைப்பேன் !*

பொன்னார்மேனி காணுதற்கினிய வடிவழகையும், புலித்தோலே அரைக்கசைத்தல் சீறி வரும் ஐம்புல வேட்கையை அழிக்கும் திறலேயும், மின்னார் செஞ்சடை தம்மைச் சார்ந்தாரது மலங்களை நீறுக்கும் செந்தீ போன்ற ஞானத்தையும், கொன்றை (பொன் சொரிவதுபோன்று, இருத்தலால்) வள்ளல் தன்மையையும், மன்னுதல் உயிர்களை ஆட்கொள்ளும் பசுபதியான தன்மையையும், மாமணி (எடுத்தாளக்கூடிய) எளிமையையும் (சௌலப்யத்தையும்) மாணிக்கம் பெறுதற்கரிய பரமான தன்மையையும், அன்னையாதல் பிரியத்தைச் செய்யும் பெருங்கருணையையும் குறிக்கும். இனி யாரை நினைக்கேனே - பிறர் நினைத்தற்கு ஏதுவாகும் அழகு திறல் ஞானம் வண்மை உரிமை பெருமை பரத்வம் கருணையாகிய குணங்களனைத்தும் உன்னிடம் உறைதலின்.

ஒப்பிடுக :

> அத்தா ! அரியே ! என்று உன்னை அழைக்க
> பித்தா வென்று பேசுகின்றார் பிறர் என்னை
> முத்தே ! மணி மாணிக்கமே ! முளைக்கின்ற
> வித்தே ! உன்னை எங்ஙனம் நான் விடுகேனே ! 7. 1. 8.
>
> —திருமங்கையாழ்வார்.

## 14. ‘பரமாய பரஞ்சுடரே’

கண்ணாய் ஏழு (உ)லகும் கருத்தாய அருத்தமுமாய்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே.
24. 5.

ஏழு உலகங்களிலும் (உள்ள உயிர்களுக் கெல்லாம் அறிவைத் தருதலின்) கண்ணாகி, (அவ்வுயிர்கள் எல்லாம்) குறியாகக் கொள்ளுதற்குரிய மெய்ப் பொருளுமாகி, இசை நிறைந்த இனிய தமிழ் மொழியுமாகி, (எவற்றுக்கும்) மேலாகிய பேரின்ப ஒளியும் ஆனவனே, மண் (வளம்) மிக்க பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடியுள் (எழுந்தருளிய விலை யில்லா) மாணிக்கமே, (மனத்திற்கு)

எட்டாதவனே, உன்னையன்றி இனி வேறு யாரை நினைப்பேன்?

அறிவித்தாலன்றித் தானே அறியாத் தன்மைய தான உயிர்க்குச் சிவபெருமான் பேரறிவாய் விளங்கி அறிவூட்டுதலின் 'கண்'ணாகியும், அதன் பயனாய் வாழ்க்கையில் குறியாகக் கொள்ளுதற்குரிய அன்பு வடிவான மெய்ப் பொருள் தானே என்பதை உணர்த்துதலின் 'கருத்தாய அருத்த' மாகியும், அன்பு பெருகும்போது அதற்குப் போக்கு வீடாக அதனை வெளியிடுதற்குத் துணையாகும் 'பண்ணார் இன் தமிழா'கியும், அவ்வாறு தமிழ்ப் பண்களால் பாடும்போது நிலையான பேரின்ப மயமாதலின் 'பரமாய பரஞ்சுடராகியும் இருத்தலின், 'இனியாரை நினைக்கேனே' என்றவாறு.

## 15. 'எம்மையும் ஆளுடையாரே'

தந்தை யாயுல குக்கோர் தத்துவன் மெய்த்தவத்தோர்க்குப்
பந்த மாயன பெருமான் பரிசுடை அவர்திரு வடிகள்
அந்தண் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்
எந்தை யென்றடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே
75. 4.

உலகத்து உயிர்கட்கு நலத்தைக் கருதலின் தந்தையாய் (நிற்கும்) ஒப்பற்ற (மூல) தத்துவம் ஆனவரும், (உண்மைத் தவம் ஆகிய பேரன்பை வளர்க்கும் இயல்புடையவர்களுக்குப் பற்றுக் கோடாகிய தலைவரும், (அளவிலடங்காத மெய்யன்பாகிய) பரிசை (அருளால்) பெற்றவருக்கு (அவர்களை விட்டு நீங்காது நிற்கும்) பெருங் கடவுளும் ஆன அழகிய குளிர்ச்சி பொருந்திய பூக்களைக் கொண்ட நீர் (வளம் மிக்க) திருவானைக்காவை (இடமாக) உடைய முதற்பொருளை எந்நாளும் 'எம் தந்தை', எனக் கருதி (அவர்) திருவடிகளை (புகலாக) அடையும் மெய்யடியார் என்போல்வாரையும் ஆட்கொள்பவராவர்.

அறிவுக் கண்ணுல் நோக்குவோர்க்கு இறைவன் நன்மைபுரியும் பரம்பொருளாதலின் 'தத்துவன்' என்கிருர். அன்புக் கண்ணுல் நோக்குவார்க்குத் தலைவியின் நெஞ்சைக் கொள்ளைகொள்ளும் குணங்களுடைய தலைவஞதலின் 'பந்தமாயின பெருமான்' என்கிருர். தமக்கென வாழாது இறைவனுக்கென்றே வாழும் மெய்யன்புப் 'பரிசு' பெற்றவர்க்கு அவர்கள் செய்யும் தொண்டுகளை ஏற்கும் இன்பமயமான திருவடிகளையுடையவராதலின் 'அடிகள்' என்கிருர்.

## 16. 'திருவடிக் கடிமை'

வைத்தனன் தனக்கே தலையுமென் நாவும்
நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கும்
பைத்தபாம்(பு) ஆர்த்தோர் கோவணத்தோடு
பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே ஒத்(து)ஓர் நச்சில ராகில்
இவரலாது இல்லையோ பிராஞர். 14. 1.

(பெருமான் என்) தலையையும், நாவையும், மனத்தையும் (திரிகரணங்களையும்) தமக்கே பணிசெய்யும் பொருட்டுத் தந்துள்ளார். (அவைகளை நானும்) வஞ்சகம் சிறிதுமில்லாமல் (சிவபெருமான் பணிக்கே) செலுத்தினேன். (அவ்வாறு) அவருக்கே (நான்) திருவடிகளில் அடிமை செய்பவன் என்று (இப்போது) சொல்லுமிடத்து (அது வெறும் உபசார வார்த்தையாகவே முடியும். படத்தையுடைய பாம்பை (அரைநாணுகக்) கட்டிக்கொண்டு ஒரு கோவணத்துடனே (பித்தர் கோலங்கொண்டு) திருப்பாச்சிலாச்சிராமத்தில் (எழுந்தருளியுள்ள) எம்முதல்வர், (உண்மைப்) பித்தரைப்போலவே (ஆகி) என்மீது ஒரு சிறிது பற்றும் இல்லாதவராய் நடிப்பின் இவரையன்றி வேறு தலைவர் எவரும் இல்லையோ?

இவரலாது இல்லையோ பிரானார் - ‘அன்பு நீங்கா அச்சமுடன்’ பணிசெய்யும்சுந்தரர் பொருள் வேண்டியும் பெறாத காரணத்தால் மனம் புழுங்கித் தமது தோழமை பற்றிய உரிமையால் ஏசித் திருத்தொண்டர் முன்பு நின்று முறையிடுவார்போலக் கூறியது.

17. ‘நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே’

மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேன்இனிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்தும்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே. 48. 1.

எனக்கு வேறு பற்று (ஒன்றும் இல்லாமையின்) உம் திருவடிகளையே என் மனத்துள் எப்போதும் தியானிக்கிறேன். (அத்தன்மையை உமது அருளால்) பெற்ற போதே (பக்தி செய்ய) பிறந்தவனானேன். இனிப் பிறக்காத தன்மையும் கைகூடப் பெற்றேன். அறிந்தவர் (எப்போதும்) வணங்கித் துதிக்கும் பெருமையை யுடைய, கறையூரைச் சார்ந்த திருப்பாண்டிக் கொடுமுடியிலே (எழுந்தருளியுள்ள உயிர்களின்) நன்மையை நாடுபவரே உம்மை நான் மறந்தாலும் நமச்சிவாய என்னும் (உமது) ஐந்து எழுத்தை என் நாக்கு (எப்போதும் மறவாமல்) சொல்லும்.

பாவித்தேன் - இதுவே பிறவிப்பயன்; பிறந்தேன் - பிறவிப் பயனை அடையாதவரை என்னைப் பிறந்ததாக நினையேன் என்றவாறு; “பெரும்பற்றப் புலியூரானைப், பேசாத நாளெல்லாம் பிறவாநாளே” (அப்பர்.) பிறவாத் ....எய்தினேன் - அப்பயனைப் பெற்றபின், பிறக்கவேண்டிய அவசியம் இல்லை என்கிறார். நற்றவா - நற்றம் (நன்மை) உடையவனே; ‘குற்றம் நற்றமாகவே கொள்

ஞால நாதனே' (திருமழிசையாழ்வார்.) 'சங்கரன்' என்பதன் பொருளைக் குறிக்கின்றது. மறக்கினும் - மறக்கவொண்ணுமையைக் குறிப்பது. சொல்லும் நா நமச்சிவாயவே - நாமத்தின் இன்சுவையில் பழகிய நா தானே இடையரு து கூறுகின்றது என்றவாறு. மற்றுப் பற்றென....பாவித்தேன் - உன் திருவடிகளை எப்போதும் னிப்பதின் பயனுக வேறு பற்றுக்கள் அற்றவனுனேன் என்னலுமாம்.

ஒப்பிடுக :

> பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு. —குறள்.

கற்றவர் தொழுதேத்தும்—

> கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவன்
> நற்ருள் தொழாஅ ரெனின் —குறள்.

மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே - 'வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால் மற்று நானறியேன் மறு மாற்றம்' என்பது வேறிடத்து இவருடைய திருவாக்கு.

## 18. 'மனை வாழும் வாழ்க்கையும் நினைப் பொழி'

> பதியுஞ்சுற்றமும் பெற்றமக்களும்
> பண்டையரல்லர் பெண்டிரும்
> நிதியில்இம்மனை வாழும்வாழ்க்கையும்
> நினைப்பொழிமட நெஞ்சமே
> மதியம்சேர்சடைக் கங்கையானிடம்
> மகிழும்மல்லிகை சேண்பகம்
> புதியபூமலர்ந்த தெல்லிநாறும்
> புறம்பயந் தொழப்போதுமே. 35. 2.

(நாம் வாழும்) ஊரும், ஊரில் உள்ளாரும், சுற்றத்தாரும், (நாம் மணந்து கொள்ளும்) பெண்டிரும், (அவர்கள் பெற்ற) குழந்தைகளும் (நமக்குப்) பழமையான (அநாதியான) தொடர்புடையவரல்லர். (ஆதலால்) அறியாமைமிக்க மனமே, செல்வத்தோடு மனையில் இருந்து வாழும் இத்தகைய வாழ்க்கையும் நினைத்தலை

விட்டொழி. (தனது காரண மற்ற கருணையாலே) சந்திரன் தங்கும்படிக் கொடுத்த சடையிலே, கங்கையையும் தாங்கியவனுகிய எம்பெருமான் (தனக்கு) இடமாகக் (கொண்டு) மகிழ்வதும், மல்லிகை செண்பகம் முதலிய புதிய பூக்கள் மலர்ந்து பகலெல்லாம் (எங்கும்) மணக்கும் பூஞ்சோலைகளை யுடையதும் (ஆன) திருப்புறம்பயத் தலத்தை (அன்போடு கண்டு) தொழ (நாம்) போவோம்.

நம்மோடு அநாதியான தொடர்பையுடைய சிவ பெருமானை மறந்து, இப்பிறவியில் மட்டும் உண்டான தொடர்பில் ஈடுபடுதல் பேதமை என்றவாறு.

19. வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
போடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கோடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே.
85. 1.

சோதி மயமான தோற்றத்தையுடைய மழுவாயுதத்தை (வலக்கையில்) தாங்கி, (தாருக வனத்து இருடிகளால் ஏவப்பட்ட) மத யானையின் தோலை (உரித்து)ப் போர்த்துக்கொண்டு, திருநீற்றை அணிந்த திருமேனியின் பாதியிலே பின்னப்பட்ட கூந்தலையுடைய உமாதேவியாரோடும், துகிற் கொடிகள் அழகு செய்யும் பெரிய மாளிகைகளை யுடைய திருக்கூடலையாற்றூர்ப் பெருமான் இவ்வழியே என் கண்கள் காண எதிர்வந்த அதிசயம் இன்னவாறென்று அறியேன்.

திருமுதுகுன்றத்துக்குப் போகும் நோக்கங் கொண்ட சுந்தரர் திருக்கூடலையாற்றூரின் வழியே செல்கையில் பெருமான் ஓர் அந்தணர்வடிவுடன் அவர்முன் தோன்றினர். அவரிடம் சுந்தரர் திருமுதுகுன்றுக்கு வழிகேட்க, அவர் இதுதான் திருக்கூடலை யாற்றூருக்குப் போகும் வழி என்று கூறி, வழிகாட்டிக் கொண்டு சிறிது தூரம் சென்று பின்பு மறைந்தருளினர். அப்போது சுந்தரர் அந்தணராக வந்தவர் பெருமானென்று அறிந்து அதிசயத்துடன் பாடியது.

## 20. 'எழு பிறப்பும் எங்கள் நம்பி'

சொல்லை நம்பிபொரு ளாய்நின்ற நம்பி
தோற்றம் ஈறுமுதல் ஆகிய நம்பி
வல்லை நம்பிஅடி யார்க்(கு)அருள் செய்ய
வருந்தி நம்பிஉனக் காட்செய கில்லார்
அல்லல் நம்பிபடு கின்றதென் நாடி
அணங்கொரு பாகம்வைத் தெண்கணம் போற்ற
இல்ல நம்பியிடு பிச்சைகொள் நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 63. 8.

*சொற்களின் வடிவமாகிய நம்பியே, (அவற்றின்) பொருளாயும் இருக்கின்ற நம்பியே, (உலகத்தின்) தோற்றம் முடிவு முதலிய எல்லாமாகிய நம்பியே, (எல்லாம்) வல்ல நம்பியே, அடியார்க்கு அருள் செய்யும் பொருட்டு (அவர்கள் நம்மை நாடி வரவில்லையே என்று) வருந்துகின்ற நம்பியே, அவ்வளவு கருணையனை உனக்குஆளாக மாட்டாதவர்களாய் உலகத்தார் (வீணே) துன்பப்படுவது என்ன காரணம்? நம்பி, (உயிர்களுக்கு அருள் சுரத்தலையே) கருதிச் சக்தி வடிவாகிய உமா தேவியைத் திருமேனியின் ஒரு பாதியிலே வைத்துக்கொண்டு, மதிக்கத்தக்க சிவ கணங்கள் புகழ, வீடுகள் தோறும் நீ உண்மையாகவே பிச்சை கேட்பவன் என்று நம்பி, இட்ட பிச்சையை அவர்கள் நன்மையின் பொருட்டு ஏற்றுக் கொண்ட நம்பியே, நீ (இன்றைக்கும் இன்னும்) ஏழு பிறப்புக்களிலும் எங்கள் தலைவனே அன்றோ?*

*நம்பி—ஆடவரில் சிறந்தவன்; புருஷோத்தமன். முதலாகிய—ஆக்கல் அழித்தல் இரண்டிற்குமன்றிக் காத்தற்கும் மறைத்தற்கும் அருளுவதற்கும் முதற் கடவுள் என்றவாறு. எழுபிறப்பும் எங்கள் நம்பி—'இன்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் றன்னோடு உற்றோமே யாவோம்.' (ஆண்டாள் திருப்பாவை.)*

## 21. 'அடி வீழுந் திருவினார்

பேராது காமத்திற் சென்றார்போ
 லன்றியே பிரியாது (உ)ள்கிச்
சீரார்ந்த அன்பராய்ச் சென்றுமுன்
 னடிவீழுந் திருவி னாரை
ஓராது தருமனார் தமர்செக்கில்
 இடும்போது தடுத்(து)ஆட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்(து)எம்
 பெருமானைப் பெற்றாம் அன்றே. 90. 2.

*மீளாது காம வசப்பட்டுச் சென்றவனைப்போல், நீங்காது (வேறொரு நினைவும்) இல்லாமலே தியானித்துப் பெருமை வாய்ந்த மெய்யடியார்களாய் (கோவிலுக்குச்) சென்று (இறைவன் முன்) அடிவணங்கும் (பெறுதற்கு அரிய பக்திச்) செல்வத்தையுடையாரை, (அவர்களது பெருமையை) ஆராயாமல் யமபடர்கள் (அந்த அடியார்கள் ஒருவேளை நல்ல நெறியினின்று வழுக்கி விழுந்தாலும், அதற்காக அவர்களைச்) செக்கிலிடுதல் முதலிய நரகவேதனைக்கு உட்படுத்த முயலும்போது (அச்செயலைத்) தடுத்து (அடியார்களை அருளால்) தன்னைச் சேர்ந்தவனாக்கிக் கொள்ளுபவனாகிய, (தில்லைவாழ் அந்தணராகிய) அடியார்கள் போற்றும் புலியூரில் உள்ள சிற்றம்பலத்தில் ஆடும் எம் சிவபெருமானைப் பெற்றோமல்லவா?*

*பேராது காமத்திற....உள்கி - 'விவேகமில்லாதவர்க்கு இந்திரிய சுகப்பொருள்களில் எவ்வாறு இடைவிடாத பிரீதி நிகழுமோ, அதுபோல இடைவிடாத பக்தி உன்மீது எனக்கு உண்டாகி, என்நெஞ்சைவிட்டு நீங்காதிருக்கட்டும்''—பிரஹ்லாதர் கேட்டவரம் (பாகவதம்). சீரார்ந்த அன்பர் - தேசினால் எத்திசையும் விளங்கினார், 'பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்' (சேக்கிழார் - திருக்கூட்டச் சிறப்பு). திருவினார் - 'கருவிலே திருவுடையார்' (நம்மாழ்வார்). ஓராது - வழுக்கி வீழினும் மெய்யடியார்கள் போற்றத் தகுந்தவர்களே யாதலையும், தண்டிக்கத் தகுந்தவர்களாகாமையையும் ஆராயாமல் -*

'ஒருக்கால் தீய ஒழுக்கமுடையோனாயினும் (வேறொன்றையும் நினையாது) என்னையே நினைப்பானாகில், அவனை நல்லானாகவே கருதுதல் வேண்டும்; ஏனெனில் அவன் நல்ல மன உறுதியை யுடையவனுவானன்றோ?" - கீதை (9-30) 'திறம்பேல் மின்கண்டீர் திருவடி தன் நாமம், மறந்தும் புறந்தொழா மாந்தர் - இறைஞ்சியும், சாதுவராய்ப் போமின்கள் என்றான் நமனுந்தன், தூதுவரைக் கூவிச் செவிக்கு.' ஓராது....தடுத்து ஆட்கொள்வான் - உயிர்கள் பிழை செய்யும்போது அதற்கு ஏற்றவாறு தண்டிப்பதே தருமனது நெறியாயினும், மெய்யன்பர்களைத் தன் பெருங் கருணையால் தடுத்தாட்கொள்ளும் திறத்தை வியந்து, தாம் அநுபவத்தில் கண்டவாறு கூறுகிறார்.

### 22. 'அவர் நமக்கு இனிய வாறே'

நீற்றானும் மேனியராய் நினைவார்தம்
　　உள்ளத்தே நிறைந்து தோன்றும்·
காற்றானைத் தீயானைக் கதிரானை
　　மதியானைக் கருப்ப றியலூர்க்
கூற்றானைக் கூற்றுதைத்துக் கோல்வளையா
　　ளவளோடுங் கோகுடிக் கோயில்
ஏற்றானை மனத்தினால் நினைந்தபோது
　　அவர்நமக்(கு) இனிய வாறே. 　　　　30. 2.

திருநீற்றால் நிறைந்த திருமேனியுடையவராய் (தம்மை இடைவிடாது) நினைக்கும் அடியவர் மனத்துள்ளே (இன்ப மயமாய்) நிறைந்து தோன்றுபவரும், காற்று, தீ, சூரியன், சந்திரன் முதலியனவாக இருப்பவரும், (தொண்டனுக்காக) யமனை உதைத்து, திருக்கருப்பறியலூரிலே உள்ள கொகுடிக்கோயில் என்னும் ஆலயத்தில் அழகிய வளைகளை யணிந்த உமாதேவியை ஒரு பாகத்து உடையவரும், இடபவாகனத்தை யுடையவருமான எம்பெருமானை மனத்தினாலே (பக்தியோடு) நினைக்கும்போது அவர் நமக்கு (எல்லா வகையாலும்) இனியவரா யிருக்கும் தன்மை என்ன வியப்பு!

*நீற்றாரும் மேனியராய் - மலங்களை எரித்து நீறாக்கி யுள்ள தூய்மைக்கு அறிகுறியாகத் திருநீறு பூசியவராய் என்றுமாம்.*

## 23. ‘ தூளி கொண்டு சூடுமின் ’

ஆடுமின் அன்புடையீர் அடிக்காட்பட்ட தூளிகொண்டு
சூடுமின் தொண்டர்உள்ளீர் உமரோ(டு)எமர் சூழவந்து
வாடுமின் வாழ்க்கைதன்னை வருந்தாமல் திருந்தச்சென்று
பாடுமின் பத்தர்உள்ளீர் பழமண்ணிப் படிக்கரையே. 22. 3.

*(பெருமானுடைய திருவடிகளிலே) அன்புடையவர்களே, அத்திருவடிகளுக்கு ஆளான (தொண்டருடைய பாத) தூளியில் முழுகுங்கள். தொண்டராக உள்ளவர்களே! உம்மைச் சார்ந்தவரோடு எம்மைச் சார்ந்தவரும் சூழ (கோயிலுக்கு) வந்து (பெருமானுடைய திருவடிகளைத் தலையிலே) சூடிக்கொள்ளுங்கள். (தலையால் வணங்குங்கள்) (உலக) வாழ்க்கையிற் பற்றை வாடச்(பற்றறச்) செய்யுங்கள். (அவ்வாழ்க்கையில் உழன்று) வருந்தாதபடி திருந்திய நிலையை அடையும்பொருட்டு, பக்தராயுள்ளவர்களே, திருப்பழமண்ணிப்படிக்கரைக்குப் போய்ப் பெருமானை (பக்தியோடு) பாடுங்கள்.*

*ஆடுமின்....தூளிகொண்டு - ‘ அரங்கவோ! என்றழைக்கும் தொண்டரடிப்பொடி, ஆட நாம் பெறில் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை யென்னாவதே’ (குலசேகரர், பெருமாள் திருமொழி 2. 2) அடிக்காட்பட்ட தூளிகொண்டு சூடுமின் - சிவபெருமானது திருவடிக்கு அடிமைப்பட்டதற்கு அறிகுறியாகிய திருநீற்றை அணியுங்கள் எனினுமாம். அப்போது ‘ஆடுமின்’ என்பது ‘கூத்தாடுங்கள்’ என்பதாகும். ‘ஆடுமின்’ (கூத்தாடுங்கள்) என்று உடலால் வழிபடுதலையும், ‘பாடுமின்’ என்று வாக்கால் வழிபடுதலையும், ‘சூடுமின்’ (மனத்தால் திருவடிகளைப் போற்றுங்கள்) என்று மனத்தால் வழிபடுதலையும் ஆக முக்கரணங்களாலும் வழிபடுதலைக் குறித்தார் என்க.*

## 24. 'மறந்து என் நினைக்கேனே'

வெந்த நீறுமெய் பூசவல் லானை
வேத மால்விடை யேறவல் லானை,
அந்தம் ஆதி அறிதற்(கு) அரியானை
ஆறு அலைந்த சடையானை அம்மானைச்,
சிந்தை என்தடு மாற்றறுப் பானைத்
தேவதேவன் என்சொல்முனி யாதே,
வந்தெனுள் ளம்புகும் வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத்தை மறந்(து) என்நினைக்கேனே. 57. 3.

*(தீயிலே குற்றமற) வெந்த திருநீற்றைத் திருமேனி முழுதும் பூச வல்லவனும், வேதமாகிய பெரிய இடபத்தை யேறிச் செலுத்த வல்லவனும், ஆதியையும் அந்தத்தையும் பிறர் அறிய முடியாத தன்மையனும், கங்கையாறு அலையப்பெற்ற சடையை யுடையவனும் (யாவர்க்கும்) முதல்வனும், என் மனத்திலுள்ள தடுமாற்றத்தை நீக்குபவனும், தேவ தேவனும், எனது (தாழ்ந்த) சொல்லையும் வெறுக்காமல் (என் வேண்டுகோளின்படி) வந்து என் மனத்துள்ளே புகுகின்ற (வனுமான) திருவாழ்கொளிபுத்தூர் மாணிக்கவண்ணனை மறந்து (நான்) வேறெதை நினைப்பேன் !*

*வெந்த நீறு மெய் பூச வல்லான்—உயிர்களின் மும்மலங்களை அருளெனும் தீயால் நீறாக்கி, அதனையே தனது அருளுக்கு அறிகுறியாகப் பூசும் திறலுடையான்.*

## 25.

அருமணியை முத்தினை ஆனஞ்சும் ஆடும்
அமரர்கள் தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந் தேனைத்
தெரிவரிய மாமணியைத் திகழ்தருசெம் பொன்னைக் [ய்க்
குருமணிகள் கொழித்(து)இழிந்து சுழித்(து)இழியும் திரைவா
கோல்வளையார் குடைந்(து)ஆடுங் கொள்ளிடத்தின் கரை
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக் [மேல்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. 40. 7.

(விலை மதித்தற்கு) அரிய மாணிக்கமும், (நல்ல) முத்துமானவனும், பசுவினிடத்திருந்து பெறப்படும் பஞ்ச கவ்ய அபிஷேகத்தைக் கொண்டருளும் தேவர் தலைவனும், அரிய வேதத்தின் பொருள் ஆனவனும் (தொண்டர்க்குப் பெருஞ்) செல்வமானவனும், இனிய கருப்பஞ்சாறும் சிறந்த தேனும் (போல மனத்திற்கு) இனியவனும், (யார்க்கும் எங்கும்) காணுதற்கரிய பெரிய இரத்தினமும், விளங்குகின்ற மாற்றுயர்ந்த பொன்னும் போன்றவனுமான எம்பெருமானை (மலையினின்றும்) ஒளி பொருந்திய மணிகளைக் கொழித்துக்கொண்டு இறங்கிச் சுழித்துக்கொண்டு ஓடுவதால் (உண்டாகும் சிறு) அலைகளையுடைய நீரிலே அழகிய வளையல்கள் அணிந்த பெண்கள் முழுகி நீராடுகின்ற கொள்ளிடத்தின் (தென்) கரையில் (உள்ள) நீலமணிகள்போல நீலோற்பலப் பூக்கள் மலர்கின்ற வயல்களையுடைய திருக்கானாட்டு முள்ளூரிலே (நேரில்) கண்டு வணங்கப்பெற்றேன்.

கண்டு—திருக்கானாட்டு முள்ளூருக்குள்ளே வரும் போதே பெருமான் எதிரில் காட்சி அளிக்கக்கண்டு கனிவோடு பாடியதைக் குறிக்கிறது. அருமணியை........... பொருளை—சிவபெருமானது கிட்டுதற்கரிய பெருமையையும், திருமணியை........பொன்னை—தமக்கு அப்பெருமான் அருளால் பேரின்பந்தரும் தன்மையையும் குறிப்பன.

## 26. 'வைத்த உள்ளம் மாற்ற வேண்டா'

மத்த யானை யேறி மன்னர் சூழவரு வீர்காள்
சேத்த போதில் ஆருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த வுள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர்கோயில் எதிர்கொள்பாடி யென்ப(து)அடைவோமே.
7. 1.

மதங்கொண்ட (ஆண்) யானைமீது ஏறி, சிற்றரசர் (உம்மைச்)சூழ (பெருங்களிப்போடும்) பவனி வருகின்றவர்களே, நீவிர் இறக்கும்போதில் உமக்கு இவர்களில்

எதிரே பொன் திரளைக் காட்டுமாறு வேண்டினதைக் குறிக்கிறது.

### 28. 'நமக்கு அடிகளாகிய அடிகளே'

வந்துசொல்லுமின் மூடனேனுக்கு வல்லவா
நினைந்(து) ஏத்துவீர்
வந்தசாயினை அறிவரோதம்மை
வாழ்த்தினார்கட்கு நல்லரோ
புந்தியால்உரை கொள்வரோஅன்றிப்
பொய்யில் மெய்யுரைத்(து) ஆள்வரோ
அன்றியேமிக அறவரோ நமக்(கு)
அடிகளாகிய அடிகளே. 67. 6.

(பெருமானை) வல்லபடி தியானித்துத் துதிக்கும் அன்பர்களே, (பெருமான் தம் அடியவர்க்கு) நேரும் தளர்ச்சியை அறிவாரோ? தம்மைத் துதிப்பவர்க்கு நல்லவராய் அருள் புரிவாரோ? தமது திருவுள்ளத்தில் (எமது புன்) மொழிகளை ஏற்றுக் கொள்வாரோ? (அது) அன்றியும் (எம்மை ஆட்கொள்ளும் வகையில்) பொய் படாத மெய் சொல்லி (தவறாமல்) ஆட்கொள்வாரோ? இவையொன்றும் செய்யாமல் (நமக்குத் தலைவராகிய பெருமான் கருமப் பயன்படி ஆகுக என்றிருக்கும் தரும வடிவினரோ? (நீங்கள்) வந்து (ஒன்று மறியாத) மூடனாகிய எனக்கு இவற்றைச் சொல்லுங்கள்.

### 29. 'மறந்து என் நினைக்கேனே'

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்
காம கோபனைக் கண்ணுத லானைச்
சொற்ப தப்பொருள் இருள்அறுத்(து) அருளுந்
தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ ஆவணங் காட்டி
அடியனா வென்னை ஆளது கொண்ட
நற்ப தத்தை நள் ளாறனை அமுதை
நாயினேன் மறந்(து) என்நினைக் கேனே. 68. 6.

ஒருவரும் இல்லாதொழிகின்றனர். (இதனை) மனத்தில் வையுங்கள். (பெருமானை அடையும்) விருப்பமுடைய வர்களே, (இவ்வுண்மையை) வைத்த (உங்கள்) உள்ளத்தை (மீண்டும் உலக வாழ்க்கையில் புகும்படி) மாற்ற வேண் டாம். (அது மாறுமுன்பே) வாருங்கள்; (நம்) தந்தை யாரின் திருக்கோயிலாகிய திருவெதிர்கொள்பாடி என் பதை (நாம்) போய் அடைவோம்.

வைம்மின்கள்—இறைவனைச் சிந்தையில் வைம் மின்கள் எனினுமாம். அடைவோம்—அடைந்து, நமது சித்தம் இறைவன்மீது நிலைக்கப்பெறுவோம் என்க.

## 27. 'ஏத்தா திருந்தறியேன்'

ஏத்தா திருந்தறியேன் இமையோர்தனி நாயகனே
மூத்தா உலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்தா அருங்குழலாள் பரவையிவள் தன் முகப்பே
கூத்தா தந்(து)அருளாய் கோடியேன்இட் டளங்கெடவே.
25. 9.

தேவர்களுக்கெல்லாம் (ஒப்பும் மேலும் அற்ற) தனி யான தலைவனே, எல்லா உலகத்துக்கும் முந்தியவனே, திருமுதுகுன்றத்தில் விரும்பி எழுந்தருளியவனே, (அம் பலக்) கூத்தனே, (இதுவரை நான் உன்னை ஒருபொழுதும்) துதியாமல் இருந்தறியேன். (இதனை நீ அறிவாய்) பூவைச் சூடிய கூந்தலை யுடையவளாகிய இப்பரவையின் (கண்) முன்னே கொடியவனாகிய எனது துன்பந் தீரும் வண்ணம் (பொருளைத்) தந்தருள்வாயாக.

இருந்து அறியேன்—பராமுகமாய் இருந்து அறி யேன். பரவை யிவள்........தந்தருள்வாய்—திருமுது குன்றிலே பெருமான் சுந்தரருக்கு அளித்த மிக்க பொன்னை அவரது கட்டளைப்படி மணிமுத்தாநதியில் இட்டபின் திருவாரூரிலே பரவையார் முன்பு அதைக் குளத்திலிருந்து எடுக்க முயல, அப்போது பொன் அகப் படாமையால், பரவையார் நகை செய்தபோது, அவள்

(அடியார் வேண்டுவதைத் தருதலிற்) கற்பக மானவனும், பெரிய பொன் மலையாகிய மேருவைப் போன்ற பொன் மேனியுடையவனும், தன்னை எதிர்த்த காமனைக் கோபித்து எரித்தவனும், நெற்றிக் கண்ணையுடையவனும், வேத மந்திரங்களின் உட்பொருளாகி (அஞ்ஞான) இருளை நீக்கி அளித்தருளத்தக்க பரிசுத்தமான சோதி வடிவானவனும், திருவெண்ணெய் நல்லூரில் (அன்று) அதிசயமான பழைய (அடிமை) ஓலையை (பிரமாணமாகக்) காட்டி (தன்னை மறந்திருந்த) என்னை (தனக்கு) அடியவனாக ஆட்கொண்ட உயர்ந்த பதமானவனும், திரு நள்ளாற்றில் எழுந்தருளியவனும், (அன்பர்க்கு) அமிர்தமாயிருப்பவனும் (ஆகிய) பெருமானை நாய்போற் கடைப் பட்ட நான் மறந்து (வேறு) எதை நினைப்பேன்! ஒன்றையும் நினையேன்).

தம்மை அருளால் ஆண்ட வரலாற்று முறையைக் கூறுகிறார். பொன்னும் போகமும் வேண்டிய போது கொடுத்ததைக் குறித்துக் 'கற்பகம்' என்றார், பின்னர் பொன் மயமாயும், இன்ப மயமாயும் உள்ள திருவடியில் ஈடுபடுத்தியதைக் குறித்து 'கனக மால் வரை' என்றார். பின் அத் திருவடியின் நினைவுக்கு இடையூறான காம நினைவை அகற்றியமையின் 'காம கோபனைக் கண்ணுதலானை' என்றார். மறைத்த மன இருளைப் போக்கி உண்மையை அறிவித்தலின் 'இருள்...........சோதியாய்.' என்றார். அனைத்திற்கும் அடியாகத் தம்பால் பேரன்பு கொண்டு தடுத்தாண்டதை 'அற்புதப்...........நற்பதத்தை' என்றார். அருளால் தமக்குப் பிறப்பு ஒழிந்தமையைக் குறிக்க 'அமுதே' என்றார்.

## 30. 'எளி வந்த தூதன்'

மாதினுக்(கு) உடம்(பு) இடங்கொடுத் தானை
மணியினைப்பணி வார்வினை கெடுக்கும்
வேதனைவேத வேள்வியர் வணங்கும்
விமல னைஅடி யேற்(கு) எளி வந்த

தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனைநள் ளாறனை அமுதை
நாயினேன்மறந்(து) என்நினைக் கேனே. 68. 8.

(உமாதேவிக்கு (தன்) உடம்பின் இடப் பாகத்தை அன்பினால் (இடமாகக்) கொடுத்தவனும், மாணிக்க மணி போன்றவனும், (தன்னைப்) பணியும் பக்தருடைய அஞ்ஞான இருளினைத் தொலைக்கத்தக்க ஞான ஒளியானவனும், வேதத்திற் கூறப்படும் யாகம் (முதலிய கருமங்களை) செய்வோர் (வேத மந்திரத்தால்) வழிபடுதற்குரிய குற்றமற்றவனும், (தனது) அடியவனான எனக்கு (தன் கருணையாலே) எளிய தூதனாகியவனும், தன்னையே எனக்குத் தோழனாகத் தந்தருளி, தொண்டனாகிய நான் செய்த அபராதங்களைப் பொறுத்துக் கொள்ளும் தலைவனும், திருநள்ளாற்றில் எழுந்தருளியவனும் (மனத்துக்கினிய) அமிர்தம் போன்றவனும் (ஆகிய பெருமானை) நாய்போற் கீழ்ப்பட்ட நான் மறந்து வேறென்ன நினைப்பேன்!

*வேத வேள்வியர் வணங்கும் விமலனான மிகப் பெரியோன் தடங் கருணையால் தமக்குத் தூதாக வந்த எளிமையை வியக்கிறார்.*

### 31. 'ஆர் துணை நீ யலதே'

மையார் கண்டத்தினாய் மதமாவுரி போர்த்தவனே
பொய்யா(து) என்உயிருட் புகுந்தாய்இன்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா கடவூர்தனுள் வீரட்டத்தெம்
ஐயா என்அமுதே எனக்(கு) ஆர்துணை நீயலதே. 28. 5.

(விடம் தங்கியதனால்) கரு நிறம் பொருந்திய திருக்கழுத்தை யுடையவனே, (நீ) உண்மையாகவே என் உயிருக்குட் புகுந்தாய்; (என்னோடு கலந்தாய்) அங்கு (நின்றும்) இன்னும் (பிரிந்து) வந்தறிய மாட்டாய் (வெளி வரவில்லை); கையினிடத்தில் ஆடுகின்ற பாம்பை யுடையவனே! திருக் கடவூரிலே வீரட்டான ஆலயத்தில் எழுந்தருளிய எம்முடைய ஐயனே! எனக்கு அமுதமான

வனே ! உன்னை யல்லாமல் எனக்கு வேறு யார் துணை யாவார்கள் ?

மையார் கண்டம் - அடியார்களின் குற்றமாகிய நஞ்சையும் அமுதம் போன்று விழுங்கி அவர்களைத் தூய ராக்குதற்கு அறிகுறியாம். மதமாவுரி போர்த்தவன் - ஆணவ மலத்தை அடியோடு அழித்தற்கு அறிகுறியாம். புகுந்தாய்........போந்தறியாய் - அடியாரைக் காட்டினும் பன்மடங்கு பெருவிருப்போடு (தன் உவந்த பேறாக எண்ணி) உயிருட் புகுந்து கலந்து அநுபவிக்கும் இறைவனது இயல்பைக் குறிக்கின்றது.

### 32. 'எழுமையும் மனக் கினியவன்'

எனக்(கு)இனித் தினைத்தனைப் புகலிடம் அறிந்தேன்
பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்(கு)இனி யவன்தமர்க்(கு) இனியவன் எழுமையும்
மனக்குஇனி யவன்தன(து) இடம் வலம் புரமே. 72. 1.

எனக்கு இனி மேலுக்கு (ஏற்ற ஒரு) புகலிடம் ஆனவனைத் தினையளவு அறிந்து கொண்டேன். (அவன் யாரெனில்) எனக்கு (நினைக்குந்தோறும்) இனிமையானவனும், (அது போலவே) தன் அடியவர் யாவர்க்கும் இனியவனும், (இவ்வொரு பிறப்பிலன்றி இன்னும்) ஏழு பிறப்புக்களிலும் (நினைப்பவர்) மனத்துக்கு இனிமை பொருந்தியவனுமாகிய பெருமான்; அவனுக்கு இடமாவது கடற்கரையில் உள்ளதும், பனையின் கனிந்த பழங்கள் (தாமே) உதிர்ந்து கிடக்கும் அழகிய காட்சியை உடையதுமான திருவலம்புரமே.

### 33. 'பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர்'

பண்ணுளீராய்ப் பாட்டுமானீர் பத்தர்சித்தம்
பரவிக் கொண்டீர்
கண்ணுளீராய்க் கருத்தில்உம்மைக் கருதுவார்கள்
காணும்வண்ணம்

மண்ணுளீராய் மதியம் வைத்தீர் வானநாடர்
மருவிஏத்த
விண்ணுளீராய் நிற்பது என்னே வேலைசூழ் வெண்
காடனீரே ; 6,

இசையில் உள்ளவராய் (அவ்விசையோடு பாடப்படும்) பாட்டும் ஆகியிருக்கின்றீர். பக்தர் மனதில் (நீர் பரவி) இருந்து அதனை (உமதாக்கிக்) கொண்டீர். மனத்தில் உம்மை (விடாது) தியானிக்கிறவர்கள் (கண்ணொளிக்கு உள்ளொளியாய்) (உம்மை) வெளியிலும் காணும்படிப் பூமியிலே சந்திரனைச் சூடியவராய் எழுந்தருளி, கடல் சூழ்ந்த திருவெண்காட்டை யுடைய பெருமானே, (நீர்) கைலாயத்தவர் நெருங்கி (வந்து) துதிக்கும் வண்ணம் பர உலகத்திலும் உள்ளவராயிருப்பது என்ன ஆச்சரியம்!

இவ் வுலகத்தவர் புறக்கண்முன் காணும்படிக் காட்சி தந்தருளும் அவ்வளவு எளிய இயல்பினராயிருந்தும், உண்மையில் திருக்கைலாயத்து நித்தியர்களது பெருவிருப்புக்கும் புகலிடமாய் நிற்கும் நினைப்பிற் கெட்டாப் பெருமையை வியக்கிறார். கண்ணுளீராய்ப் பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர் - கண் எதிரே நிற்பவர் போன்று அன்பர்களது சித்தத்தில் பரவியிருப்பீர் என்னலுமாம்.

### 34. 'மனத்தாலும் நினைப்பறியான்'

வானுடையான்பெரி யான்மனத் தாலும் நினைப்பறியான்
ஆனிடை ஐந்தமர்ந் தான்அணுவாகியோர் தீ உருக்கொண்டு
ஊனுடை இவ்வுட லம்ஒடுங்கிப் புகுந் தான்பரந்தான்
ஞானுடை மா(டு)எம்பிரான்நண்ணும் ஊர்நனி பள்ளியதே.
97, 3.

முக்தர் வாழும் திருக்கைலாயத்தை யுடையவனும், (மிக்க) பெருமையுடையவனும், மனத்தால் (முழுதும்) நினைப்பதற்கும் அருமையான தன்மையனும், பசுவினிடத்தினின்றும் (பெறப்படும்) ஐந்தை(பஞ்ச கவ்யத்தை) விரும்புகின்றவனும், அணுவடிவாய்க் குறுகி

ஒளியுருக்கொண்டு மாமிசமயமான இச்சரீரத்தினுட் புகுந்தவனும், உடல்முழுவதும் பரந்திருப்பவனும், நான் பெற்ற செல்வமும் (ஆன) எம்பெருமான் திருவுளங் கொண்டெழுந்தருளிய ஊர் திருநனிபள்ளி ஆகும்.

## 35. 'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்'

பண்ணிடைத் தமிழ்ஒப்பாய் பழத்தினிற் சுவைஒப்பாய்
கண்ணிடை மணிஒப்பாய் கடுஇருட் சுடர்ஒப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்துஇடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீஅன்றே. 29. 6.

(எம்பெருமானே, நீ) இசையிலே பொருந்திய தமிழை (இசைத் தமிழை) ஒத்து (இனிமையாய்) இருக்கின்றாய். (நல்ல) பழத்தில் (உள்ள) ருசியைப் போன்றிருக்கிறாய். (அஞ்ஞானமாகிய) கொடிய இருட்டுக்கு (அதனைப் போக்க வல்ல ஞான) சூரியன் போலுள்ளாய். இப் பூமியில் அடியார் மனத்தில் துன்பங்கள் வராதபடிக் காத்துக் கொண்டு ஆகாயத்தை அளாவிய திருக்குருகாவூரில் வெள்ளடை (யென்ற ஆலயத்திலும்) எழுந்தருளியிருப்பது நீயே யன்றோ?

செவிக்கினிய செந்தமிழாய், நாவிற்கு இனிய பழச் சுவையாய், கண்ணிற்கு இனிய கருவிழியாய், புலன்கட்கு மட்டுமன்றி, மனத்திலுள்ள அஞ்ஞானத்தை நீக்கும் அறிவொளியாகி மனத்திற்கும் இனியனாய் இருக்கும் தன்மையைப் புகழ்கிறார். பயிரை வளர்க்கும் நோக்கமுடையவன் பயிரின் அருகே குடிசை கட்டிக்கொண்டு வாழ்வதுபோல, பூமியில் வாழும் அடியார்களுக்குத் துயரம் உண்டாகாது காக்கும் பொருட்டுப் பூமியிலே கோயில் கொண்டு சிவபெருமான் எழுந்தருளியிருப்பதைக் குறிக்கிறார். பசி தாகங்களால் வருந்திய சுந்தரர்க்கு, வரும் வழியில் சிவபெருமான் பந்தர் அமைத்து வேதியரது வடிவத்துடன் தண்ணீரும் பொதி சோறும் வைத்துக் கொண்டு வழி பார்த்திருந்து, வந்ததும் அவைகளை நாயனார்க்கும், கூடவந்த திருத்தொண்டர்க்கும்

அன்போடு அளித்து இளைப்பை நீக்கியதை உணர்ந்த போது ஆதரவு பொங்கப் பாடியது இப் பதிகம்.

## 36. 'நினைந்தால்...உடனாகி நின்று அருளி'

எங்கே னும்இருந்து(உ)ன் அடியேன்உனை நினைந்தால்
அங்கே வந்(து)என்னொடும் உடனாகி நின்(று)அருளி
இங்கே என்வினையை அறுத்திட்(டு) எனைஆளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. 23. 2

உன் அடியவனாகிய நான் எந்த விடத்திலேனும் இருந்துகொண்டு உன்னை நினைத்தால் (உடனே) அவ் விடத்துக்கு வந்து என்னோடும் கூடத் துணையாகி நின்று அருள்செய்து இவ்வுலகத்திலே என்னுடைய கருமத் தொடர்பை வேரறுத்து என்னை ஆட்கொள்ளுகிற கங்கை யின் தலைவனே, திருக்கழிப் பாலையில் எழுந்தருளிய வனே.

இறைவன் வேண்டுவோர்க்கு வேண்டியவற்றை வேண் டும்போதெல்லாம் தவறாமல் அருளுகிறார் என்கிற நம் பிக்கையைக் குறிக்கிறார்.

## 37. 'தாயவளாய்த் தந்தையாகி'

தாயவ ளாய்த்தந்தை ஆகிச், சாதல் பிறத்தல்இன்றிப்
போயக லாமைத்தன் பொன்னடிக்(கு) என்னைப் பொரு
[ந்தவைத்த
வேயவ னார்வெண்ணெய் நல்லூரில் வைத்(து)என்னை
[ஆளுங்கொண்ட
நாயக னார்க்(கு)இட மாவது நந்திரு நாவலூரே. 17. 7.

(எனக்குத்) தாயாகி, தந்தையும் ஆகிச் சாதலும் பிறத்தலும் இல்லாமல், நான் (தன்னை விட்டு) விலகிப் போகாதபடி தனது அழகிய திருவடியில் என்னை (மனம்) பொருந்தச் செய்தவராகிய மூங்கிலில் இருப்பவரும், திரு வெண்ணெய் நல்லூரில் வைத்து என்னை (வெளிப்படை யாக) அடிமையும் (ஆக்கிக்) கொண்டவருமான தலை வர்க்கு (உகந்த) இடமாயிருப்பது நம் திருநாவலூரே.

தமக்குப் பிரியமானவற்றைச் செய்தலின் 'தாயவளாய்' என்றும், நன்மையைச் செய்தலின் 'தந்தையாகி' என்றும், திருவடி தன்னிடம் ஒருமுறை சென்றவரை மயக்கிப் பின் அகலவிடாத அழகுடைமையின் 'போயகலா மைத்தன் பொன்னடி' என்றும், திருவடியில் மனம் பொருந்துவார்க்குப் பிறப்பு இறப்புக்கள் அறுதல் இயல்பாதலின் 'சாதல் பிறத்தலின்றி....அடிக்கு என்னைப் பொருந்த வைத்தாய்' என்றும் கூறினர். 'மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே' (அப்பர்.)

## 38. 'உன்னை மறவேன்'

காதல்செய்து களித்துப் பிதற்றிக் கடிமாமலரிட்டு (உ)னை ஏத்தி
ஆதல் செய்யும் அடியார்இருக்க ஐயங்கோள்வ(து) அழகிதே
ஓதக் கண்டேன் உன்னைமறவேன் உமையாள் கணவா எனை ஆள்வாய்
ஆதற்பழனக் கழனிக்கச்சூர் ஆலக்கோயில் அம்மானே.
41. 9.

பக்தி செய்து ஆனந்த வெறி மேலிட்டு (தம்மை மறந்து வாயால் முறை கெடப் பெருமைகளைப்) பிதற்றி, மணமுள்ள சிறந்த பூக்களால் உன்னை அர்ச்சித்துத் துதித்து (உனக்கு) வேண்டியவற்றைச் செய்யும் அடியார் (பலர்) இருக்க, (நீ என் பொருட்டுப்) பிச்சையெடுப்பது அழகாமோ? (சோறு இரந்து வருவதாகச் சொன்ன அச்) சொல்லைக் கேட்டபின் இனி உன்னை (எப்பொழுதும்) மறக்க மாட்டேன். உமாதேவியின் தலைவனே, என்னை ஆட்கொள்பவனே, (நல்ல) விளைவையுடைய கொல்லைகளும் வயல்களும் (பொருந்திய) திருக்கச்சூரில் (உள்ள) ஆலக் கோயிலில் எழுந்தருளிய எம்பெருமானே.

திருக்கச்சூரில் சுந்தரர் பசியோடு ஆலயத்தில் இருந்ததைச் சகியாத சிவபெருமான் அந்தணரது வடிவங் கொண்டு, கையில் ஒரு வெற்றோடு ஏந்தி, 'உமது பசியை நீக்கச் சோறு இரந்து கொண்டு வருவேன்' என்று கூறி,

அன்னங்கொண்டு வந்து கொடுத்து அமுதூட்டியபின் மறைய, அந்தணரைச் சிவபெருமான் என்று உணர்ந்த போது பாடியது இப்பதிகம்.

39.

ஆள்தான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்(டு)ஒழிந்
சேட்டார் மாளிகைசூழ் திருமேற்றளிஉறையும் [தேன்
மாட்டே உன்னைஅல்லால் மகிழ்ந்(து)ஏத்த மாட்டேனே.
21. 2.

(உனக்கு) அடிமை ஆனமையால், (அதன் பலனும்) உன் அடியார்கட்கும் அடிமைப்பட்டு, அடியார்களது தொண்டிற்காகவே பல பொருள்களையும் கேட்டேன். (எனக்காக) யான் உன்னை வேண்டிக் கேட்பது பிறவாமை ஒன்று மாத்திரமே என்னும்படியானேன். ஆழகு மிக்க மாளிகைகள் சூழப்பெற்ற திருமேற்றளியில்வாழும் (என்) செல்வமே, உன்னை யல்லாமல் (வேறொன்றில்) மகிழ்ச்சி யடைந்து (உன்னைப்) புகழ மாட்டேன்.

இறைவனுக்கு அடிமைப்பட்டதன் முதிர்ந்த நிலை அவனது அடியார்கட்கு அடிமைப் படுதலே யாதலின் 'ஆள் தான்பட்டு' என்றார்; நெல்லும் பொருளும் பிறவும் இறைவனிடம் வேண்டியது தொண்டர்களது பணிக்காகவே என்பதைத், 'தொண்டுபட்டுக் கேட்டேன்' என்பதால் குறிப்பிட்டார். ஆனால் தமக்காக வேண்டிய தெல்லாம் பிறவாமையே என்பதையும் அறிவிக்கிறார். பிறவாமை - உலக வாழ்க்கை• ஆண்டவனை மறக்கச் செய்தலின் அதனை அஞ்சிப் பல முறையும் பிறவாமையே வேண்டுகிறேன்.

40. 'ஒற்றிவைத்து இங்கு உண்ணலாமோ'

பெற்றபோழ்தும் பெறாதபோழ்தும்
பேணிஉம்கழல் ஏத்துவார்கள்
மற்றோர்பற்றிலர் என்(று)இரங்கி
மதியுடையவர் செய்கைசெய்யீர்

அற்றபோழ்தும் அலந்தபோழ்தும்
ஆபற் காலத்(து) அடிகேளும்மை
ஒற்றிவைத்(து)இங்கு (உ)ண்ணலாமோ
ஓணகாந்தன் தளிஉளீரே. 5. 3.

*(நன்மைகளைப்) பெற்ற காலத்தும் (அவற்றைப்) பெறாத காலத்தும் (ஒரு தன்மையாக) விரும்பி உமது திருவடியைத் துதிக்கும் அடியார்கள் வேறோர் ஆதரவும் இல்லாதவர்களென்று இரக்கம் கொண்டு (அவர்கள் விஷயத்தில்) புத்தியுள்ளவர் செய்கையைச் செய்ய மாட்டீர். (அவர்களை நன்கு ஆதரிக்க மாட்டீர்.) (அவர்கள்) (கைப்பொருள்) அற்ற காலத்தும், (அதனால்) துன்பப் படுங்காலத்தும், (பிற) ஆபத்துக் காலங்களிலும், கடவுளே, உம்மைத்தவிர வேறு கதியில்லாதவர்கள் உம்மை அடகு வைத்து (பொருள் பெற்று) உண்டுவாழ முடியுமோ, திருவோணகாந்தன் றளியில் உள்ள பெருமானே!*

*பெற்ற........ஏத்துவார்கள் - உம்மிடமிருந்து ஒரு நன்மையையும் எதிர் பாராது, பக்தி செய்தலையே போதுமான பாக்கியமாகக் கருதி வழிபடுபவர்கள். தாயினிடத்தும் குழந்தைகள் தமக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெறாதபோது பிடிவாதம் செய்தும் வைதும் விடாது மன்றாடுவது போல, சுந்தரர் தமது தோழமையால் பெருகும் அடிமைத் திறம் பேசி உரிமையோடு பொன் கொடுத்தே தீரவேண்டு மென்கிறார்.*

### 41. 'இன் அருள் எய்துவிப்பானை'

துன்னு வார்சடைத் தூமதி யானைத்
துயக்கு (உ)றுவகை தோன்றுவிப் பானைப்
பன்னும் நான்மறை பாடவல் லானைப்
பார்த்த னுக்(கு)அருள் செய்த பிரானை
என்னை இன்அருள் எய்துவிப் பானை
ஏதிலார் தமக்(கு) ஏதிலன் தன்னைப்,
புன்னை மாதவி போதலர் நீடேர்ப்
புனிதனைப்பணி யாவிட லாமே. 56. 2.

நெருங்கிய நீண்ட சடையில் வெண்மையான சந்திரனை யுடையவனும், (கருமத் தொடர்புகளில்) கட்டுறுத வழியை (அடியவர்க்குக்) காண்பிப்பவனும், (சிறப்பாகச்) சொல்லப்படுகிற வேதங்கள் பாடித் துதித்தற்குரியவனும், அருச்சுனனுக்கு அருளைச் செய்த (பாசுபத அஸ்திரம் அளித்த) தலைவனும், (தாழ்ந்த) என்னையும் தனது இனிய அருளை அடையச் செய்தவனும், (தன்னை நினையாத) அயலார்க்கு (தானும்) அயலானவனும், புன்னை குருக்கத்தி (முதலிய இனிய வாசனைப்) பூக்கள் மலர்கின்ற திரு நீடூரில் எழுந்தருளிய பரிசுத்தனும் (ஆகிய பெருமானை) வணங்காது விடலாமோ?

என்னை........தன்னை - ஆண்டவன் தன்னைப் புகலாக அடைபவர்கட்குத் தானே அருளால் முயன்று தனக்கு அடிமையாக்கிக் கொள்வான் என்றாலும், தன்னை ஆணவத்தால் பொருட்படுத்தாது சேராதவர்கட்கு அவரவர்களின் வினைப் பயன்களை அநுபவிக்க விட்டு, தம்மால் ஆவதொன்றில்லை யென்ற உணர்ச்சி வந்து தன்னைச் சேரும் வரை அயலார் போன்றே ஒழுகுவான் என்ற வாறு. திருநின்றியூரினின்றும் போம் வழியில் திருநீடூரைப் பணியாமல் மனத்தால் நினைந்து அப்பால் சென்ற சுந்தரர் மீண்டும் அவ்வூர்க்கு விருப்பத்தால் எழுந்தருளி, அவ்வூர்ப் பெருமானை வணங்காது செல்லலாமோ என்று பாடியவை இப் பாட்டும் அடுத்ததும்.

## 42. 'பணியா விடலாமே'

குற்ற மொன்(று)அடி யார்இலர் ஆனுற்
கூடும் ஆ(று)அதனைக்கோடிப் பானைக்
கற்ற கல்வியி லும்இனி யானைக்
காணப்பேணும் அவர்க்(கு) எளி யானை
முற்ற ஐஞ்சும் துறந்(து)இருப் பானை
மூவ ரின்முதல் ஆயவன் தன்னைச்
சுற்று நீள்வயல் சூழ்திரு நீடூர்த்
தோன்றலைப்பணி யாவிட லாமே. 56. 5.

(தன்) அடியவர் குற்ற மொன்றும் இல்லாதவராயின் (பரிசுத்த மன முடையவர்களாயின் அவர்களுக்குத்) தன்னை அடையும் வழியை அருள் செய்பவனும், (ஆழ்ந்து) கற்ற கல்வியை விட (மனத்துக்கு) இனிமையானவனும், (தன்னைக்) காண விரும்புகின்ற (உண்மைத்) தொண்டருக்கு எளிமையானவனும், (சுலபமாய்க்காணத் தக்கவனும்) ஐம்புலன்களின் தீமை முழுதும் நீங்கி யிருப்பவனும், (முத்தொழிலில் இயற்றும்) மும் மூர்த்திகளுள் முதன்மையானவனும், (ஆகிய) சுற்றிலும் பெரிய வயல்கள் சூழ்ந்த திருநீரேர்ப்பெருமானை வணங்காது விடலாமோ?

## 43.

தண்ட முடைத்தரு மன்தமர் என்தம ரைச்செயும்
வன்துயர் தீர்க்குமிடம்
பிண்ட முடைப்பிற வித்தலை நின்றுநி னைப்பவர்
ஆக்கையை நீக்குமிடம்
கண்ட முடைக்கரு நஞ்சைநு கர்ந்தபி ரானதி
டங்கடல் ஏழுகடந்(து)
அண்ட முடைப்பெரு மானதி டம்கலிக் கச்சிய
னேகதங் காவ தமே. 10. 6.

(ஆன்மாக்களைத்) தண்டித்தலையுடைய யமதருமன் தூதர், என் சுற்றத்தவராகிய தொண்டருக்குச் செய்யும் கொடிய துன்பங்களைத் தீர்த்து வைக்கும் (அடியவருக்கு யம பாதையைப் போக்கும்) இடமும், கருவிலிருந்து வரும் (இப்) பிறப்பினின்றும் (நீங்க) நினைப்பவருடைய இக் கரும பந்தங்களைப் போக்கு மிடமும், திருக் கழுத்திலே தங்கிய கருமையான (ஆலகால) விஷத்தை (இனிதாக) உண்ட தலைவரது இடமும், ஏழு கடலையும் கடந்து (அப்பாலும் உள்ள) அண்டங்களை யெல்லாம் (தனக்குரிமையாக) உடைய பெருமானது (உகந்த) இடமும் (ஆவது) (அடியார்களுடைய துதி) ஓசை (பொருந்திய) திருக்கச்சியனேகதங்காவத மென்னும் தலமே.

## 44. 'பேசாதார் பேச்சென்னே'

நெற்றிக்கண் உடையானை நீறேறுந் திருமேனிக்
குற்றமில் குணத்தானைக் கோணாதார் மனத்தானைப்
பற்றிப்பாம்(பு) அரைஆர்த்த படிறன்தன் பனங்காட்டூர்ப்
பெற்றேன்(று)ஏ றும்பிரானைப் பேசாதார் பேச்சென்னே.
86 4

(குற்றங்களைப் போக்கும் தீயாகிய) நெற்றிக் கண்ணை உடையவனும், திருநீறு மிகுதியாகப் பூசப்பட்ட திருமேனியையும், குற்றம் (ஒன்றும்) இல்லாத (எட்டுக்) குணங்களை உடையவனும், (ஒழுக்க நெறியினின்றும்) விலகாதவருடைய மனத்தில் (எப்போதும்) இருப்பவனும், பாம்பைப் பிடித்து அரையிலே கட்டிக் கொண்ட (தொண்டர் மனத்தைக் கவரும்) கள்வனும், தனது பனங்காட்டூரிலே ஓர் இடபத்தின் மேல் ஏறுபவனும், (ஆகிய) பெருமானைப் (புகழ்ந்து) பேசாதவருடைய பேச்சு என்ன பேச்சு!

பேசாதார் பேச்சென்னே - இப்பதிகத்தில் 'இறைவனைச் சாராதார் சார்வென்னே,' 'உணராதார் உணர்வென்னே,' 'பேசாதார் பேச்சென்னே,' 'பரவாதார் பரவென்னே,' 'பயிலாதார் பயில்வென்னே,' 'அறியாதார் அறிவென்னே,' 'நினையாதார் நினைவென்னே,' 'குழையாதார் குழைவென்னே' என்று தமது ஆற்றாமையாலும் பரிவாலும், உலகத்தாரை எல்லாப் படியாலும் தனு கரண புவன போகங்களை ஆண்டவன் பால் செலுத்தி உய்யுமாறு வேண்டுகிறார்.

## 45.

நீறார் மேனியனே நிமலாநினை அன்றிமற்றுக்
கூறேன் நாவதனுல் கொழுந்தேஎன் குணக்கடலே
பாறார் வெண்தலையிற் பலிகொண்(டு)உழல் காளத்தியாய்
ஏறே உன்னைஅல்லால் இனி(து)ஏத்த மாட்டேனே. 26. 8.

திருநீறு பொருந்திய திருமேனியை உடையவனே, மலம் (அழுக்கு) அற்றவனே, உன்னை யன்றி வேறு

(தெய்வத்தை என்) நாவினால் பேசமாட்டேன். (பக்திக் கொடியின்) கொழுந்தே, என்னுடைய (அளவிடற்கரிய கல்யாண) குணக்கடலே, (ஊன் இருப்பதாக மயங்கி) பருந்துகள் சூழ்கின்ற வெண்மையான (பிரம்ம) கபாலத்தில் பிச்சை ஏற்றுத் திரிகின்ற திருக்காளத்தி நாதனே, (கம்பீரமான) ஆண் சிங்கமே, உன்னையன்றி (வேறொருவரை) இனிமையாக (மனமொப்பித்) துதிக்க மாட்டேன்.

## 46. 'வாழ்வாவது மாயம்'

வாழ்வாவது மாயம்இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழா(து)அறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேல்உற நின்றான்திருக் கேதாரம் எனீரே. 78 1.

உலகில் செல்வம் முதலியவற்றோடு வாழும் வாழ்க்கையானது நிலையில்லாதது. இவ்வாழ்வு மண்ணாய்ப் போவது (அழிவது) நிச்சயம். பசி நோயினால் கொள்ளை கொள்ளப்படுதலின், பிறப்பென்னும் கடலிலே (தத்தளித்து) அமிழ்ந்து இவ் உடல்வாழ்க்கை வீண்போகும். (ஆதலால், பின்னே பார்த்துக் கொள்வோமென்று தாமதியாமல்) நல்வினையைச் செய்யுங்கள். பெரிய (தாமரை போன்ற) கண்களையுடைய திருமாலும், (அவருடைய திருவுந்தித் தாமரை) மலரில் உள்ள பிரமனும் (முறையே திருவடியையும் முடியையும் காணும் பொருட்டுப் பூமியின்) கீழும் (ஆகாயத்தின்) மேலும் போகும்படி (சோதி வடிவுடன்) நின்ற பெருமானது 'திருக்கேதாரம்' என்று சொல்லுங்கள். (அதுவே உம்மை உய்விக்கும்.)

உலக வாழ்க்கை நிலையற்றதாதலின் அழிவது உறுதி. அதனால் உயிருள்ள போதே காலதாமதம் செய்யாது அறஞ்செய்யுங்கள் என்கிறார். ஏனெனில் உடல் அழியினும் அழியாத துணை அறமேயன்றோ? 'அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க, மற்றது பொன்றுங்கால் பொன்றாத் துணை' (குறள்.) பசி..........தான் - பசி

நோய்க்கு (இடமாகிய) உடல்தான் பிறவிக் கடலில் தடுமாறி வீணுகிறது. பசி நோய் மனிதனது நற்குணங்களையெல்லாம் பறித்துக்கொண்டு போகும் இயல்புடைமையின், பசி நோயின் காரணமாக ஆசையின் வலைப்பட்டுத் தீய நெறிச் சென்று பிறவிக் கடலில் அமிழ்கிறான்; ஆதலின், பிறவிப் பெருங் கடலை நீந்தும் பொருட்டு, இறைவனைச் சரணமடையுங்கள் என்னும் கருத்தால், திருக்கேதாரம் என்னீர்' என்கிறார்.

## 47. 'பிழைப்பனுகில் உன் திருவடிப் பிழையேன்'

அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்
அதுவும் நான்படப் பால(து)ஒன்று ஆனுல்
பிழுக்கை வாரியும் பால்கோள்வர் அடிகேள்
பிழைப்ப னுகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும்திருப்பெயர் அல்லால் மற்று
நான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என்கணுக்(கு) ஒரு மருந்து (உ)ரையாய்
ஒற்றி யூர்எனும் ஊர்உறை வானே. 54. 1.

குற்றங்கள் (தங்கும்) உடலோடு உன் திருவடிகளைச் சரணமாகப் பற்றினேன்; குற்றங்கட் குரிய தண்டனையும் நான் அநுபவித்தற்குரிய தொன்றே என்று கொண்டாலும் (பாலில் பிழுக்கையே வீழ்ந்து விட்டால்) பிழுக்கையை வாரி எறிந்து விட்டுப் பாலை எடுத்துக் கொள்வர்; நாதனே, பிழை செய்து விட்டேனுயினும் உமது திருவடியை மறக்கும் குற்றத்திற்கு ஆளாகவில்லை. நன்னெறியினின்று வழுக்கிக் கீழே விழுந்தாலும், உமது திருப்பெயரைச் சொல்லுதலன்றி, வேறு (ஐயோ அப்பா முதலிய) வார்த்தைகளைச் சொல்லி அறிய மாட்டேன். துளி துளியாக ஊற்றுதற்கு (நான் இழந்துள்ள) என் கண்ணுக்கு (பார்வை மீளும்படி) ஒரு மருந்தைச் சொல்லியருளுக, திருவொற்றியூரில் வாழும் பெருமானே.

திருவொற்றியூரை விட்டு நீங்கேன் என்று சபதம் செய்திருந்தும், அதை மீறி, ஊரை விட்டுப் புறப்பட்ட

போது, கண்பார்வை மறைய, அப்போது பாடியது இது. அதுவும் - கண் இழந்து உழலும் துயரமும் என்னுமாம். பிழுக்கை...........கொள்வர் - அதுபோல் என்னிடம் இருக்கும் குற்றங்களை நீக்கி விட்டுக் குணத்தை மாத்திரம் கொண்டு எனக்குக் கண் அருளல் வேண்டும் என்றவாறு. குணமாவது, திருவடிக்குப் பிழையாமையும், திருப்பெயரன்றி மற்று அறியாமையும், கண் இழந்தது தகுதியேயாயினும், குற்றத்தை நீக்கிக் குணத்தையே கொள்ளும் அருளொழுக்கம் சிவபெருமானுக்கு உரியதாதலின், 'ஒழுக்க' (ஒழுக்க முடையோனே) என்றார் எனினுமாம்.

## 48. 'இடர் ஆர்க் கெடுத்து உரைக்கேன்'

கங்கை தங்கிய சடைஉடைக் கரும்பே கட்டியே
　　பலர்க் குங்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே அத்தா
　　என்இடர் ஆர்க் கெடுத்(து) உரைக்கேன்
சங்கும் இப்பியுஞ் சலஞ்சலம் முரல வயிரம்
　　முத்தொடு பொன்மணி வரன்றி
ஒங்கு மாகடல் ஓதம்வந்(து) உலவும் ஒற்றி
　　யூர்எனும் ஊர்உறை வானே. 54. 3.

கங்காநதி தங்கப்பெற்ற சடையையுடைய கரும்பே, (கரும்பினின்றும் பெறும்) கற்கண்டே, (உலகத்திலே) பலருக்கும் ஆதரவானவனே, உள்ளங்கை நெல்லிக் கனிபோல் (உள்ள) அமுதம் போன்றவனே, (என்) தந்தையே, என் துன்பத்தை (உன்னை யன்றி வேறு) யாரிடம் எடுத்துச் சொல்வேன். சலஞ்சல மென்னும் சங்குகளும், (இன்னும் பலவகைச்) சங்குகளும், சிப்பிகளும் ஒலித்துக் கொண்டிருக்க, முத்துக்களையும் (ஆறுகளால் கொண்டு வந்து சேர்க்கப் பெற்ற) வயிரம், பொன், மாணிக்கம் (முதலியவற்றையும்) வாரிக்கொண்டு சிறந்த பெரிய கடலின் அலைகள் (கரை மேல்) வந்து வீசுகின்ற திருவொற்றியூர் என்னும் தலத்தில் எழுந்தருளிய பெருமானே.

ஓங்கு - ஓங்கு. பெருமை தங்கிய அன்போடு நாமஞ் சொல்வார்க்குத் தித்தித்தலின் 'கரும்பே' என்றும், சிந்திப்பார்க்குப் பேரின்ப வடிவாய் இருத்தலின் கருப் பஞ்சாற்றினின்றும் காய்ச்சி யெடுத்த 'கட்டியே' என் றும், அதற்கு மேலும் புகலிடமாகப் பற்றுவார் அனைவ ரையும் விடாது காத்தலின் 'பலர்க்கும் கனிகண்ணே' என்றும், அவ்வாறு பற்றுவார்க்குக் கண்முன் தெள்ளத் தெளிய நின்று பேரின்ப மூட்டிப் பிறவியை வேரறுத் தலின், 'அங்கை...........அமுதே' என்றும் கூறினார். சங் கும்...........உலவும் - சங்குகளையும் சிப்பிகளையும் உருட்டி ஒலிக்கச் செய்யும்போது, கடல் அலைகளிலும் விலை உயர்ந்த வைரம் பொன் மணி ஆகியவைகளைக் கரையில் வீசி யெறிதல், சிவபெருமான் சுந்தரரிடத்துள்ள குற்றங் களை வெளிப்படுத்தும் போதும், குணங்களையே அரு ளால் பற்றி ஓங்கச் செய்தல் வேண்டும் என்றும் பிரார்த் தனையைக் குறிப்பாகக் காட்டியவாறு.

## 49. 'குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும்'

மற்றுநான் பெற்றது ஆர்பெற வல்லார் வள்ளலே
கள்ளமே பேசிக்
குற்றமே செயினும் குண மெனக் கொள்ளும்
கோள்கையால் மிகைபல செய்தேன்
செற்று மீதோடுந் திரிபுரம் எரித்த திருமுல்லை
வாயிலாய் அடியேன்
பற்றிலேன் உற்ற படுதுயர் களையாய் பாசுப
தாபரஞ் சுடரே. 69. 6.

நான் பெற்ற (நன்மைகளை) வேறு யார் பெறக் கூடிய வர்? அருட் செல்வத்தை அளவிலாது அளிக்கும் வள் ளலே, (நீ உன் அடியவர்) வஞ்சனை யுள்ள பேச்சுகளையே பேசிக் குற்ற முள்ள செயல்களையே செய்யினும் (உன் கருணையால் அவற்றையும்) குணமாகக் கொள்ளும் (உனது கொள்கையால்) நான், தைரியங் கொண்டு வரம்பு கடந்த செயல்கள் பலவற்றைச் செய்தேன். (உலகத்தை)

விருத்திக் கொண்டு மேலே திரிந்த (அசுரரின்) முப் புரங்களை (சிரிப்பினால்) எரித்த திரு முல்லைவாயிற் பெரு மானே, அடியவனாகிய நான் (வேறு) ஆதரவில்லாதவன். சிவபெருமானே, பரஞ்சோதியே, (எனக்கு) நேர்ந்துள்ள மிக்க துன்பத்தைப் போக்கி யருளுவாயாக.

படுதுயர் - கண் இழந்தமை. சிவபெருமானிடம் கொண்ட தோழமையின் உரிமையாலும், அவரிடம் கண்ட அருள் வலிமையில் வைத்த பெரு நம்பிக்கை யாலும், 'மிகை பல செய்தேன்' என்றார்.

### 50. 'பொறுத்திட நீ வேண்டாவோ'

செய்வினை யொன்(று) அறியாதேன் திருவடியே
சரண் என்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திடநீ
வேண்டாவோ
பையரவா இங்(கு)இருந்தா யோஎன்னப்
பரிந்(து) என்னை
உய்யஅருள் செய்யவல்லான் உளோம்
போகீர் என்றானே. 89. 3.

செய்யத் தக்கதொரு காரியத்தை அறியாத நான், பெருமானுடைய திருவடிகளே புகல் என்று (கருதி) அடியேன், தவறு (சபதம்) செய்தாலும் பொறுத்தலை யுடைய நீ பொறுத்துக் கொள்ள வேண்டாமோ. நச்சுப் பையை யுடைய பாம்புகளை அணிந்த பெருமானே, 'இங்கே (கோயிலில்) இருக்கின்றாயோ' என்று கேட்க, (என்னிடம்) அன்பு கொண்டு (வலிய வந்து) என்னைக் கடைத்தேறும் வகை அருள் செய்ய வல்ல பெருமான் (இப்பொழுது அத்தன்மையை விட்டு, அயலார் போல) '(நாம்) இருக்கின்றோம்; (நீர்) போம்' என்று கூறினானே. (யான் யாது செய்வேன்?)

பையரவா - நஞ்சுடைய பாம்பை அணிந்தது, பொய்யுடைய என்னையும் அங்கீகரித்துக் கொண்டருள வேண்டியதைக் குறிப்பிட்டவாறு. சுந்தரர் கண் பெறாத

வருத்தத்திற் பெருமானைக்குறித்து 'நீர் கோவிலில் உள்ளீரோ?' என்று கேட்க, பெருமான் சுந்தரருக்கு ஊன்றுகோல் தந்து, 'உள்ளோம், போகீர்' என்று விடை யருளினதைக் குறிக்கிறது.

## 51. 'தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்'

தூண்டா விளக்கின் நற்சோதீ தொழுவார்
தங்கள் துயர்தீர்ப்பாய்
பூண்டாய் எலும்பைப் புரமூன்றும்
பொடியாச் செற்ற புண்ணியனே
பாண்டுஆழ் வினைகள் அவைதீர்க்கும்
பரமா பழைய னூர்மேய
ஆண்டா ஆலங் காடாஉன் அடியார்க்(கு)
அடியேன் ஆவேனே. 52. 3

தூண்டாத விளக்கின் நல்ல (பிழம்பு) ஒளியே! (உண்மையாக) வழிபடுபவர்களுடைய வருத்தங்களைத் தீர்ப்பவனே, (வெறுக்கத்தக்க) எலும்பை (விரும்பி) அணிந்தவனே, (அசுரருடைய) முப்புரங்களும் (வெந்து) சாம்பல் ஆகும்படி அழித்த புண்ணியமூர்த்தியே, (உலக விஷயங்களில்) ஆழ்த்துகின்ற பழமையான இருவினைகளை ஒழிக்கும் பரம்பொருளே, பழையனூரில் எழுந்தருளி யுள்ள ஆண்டவனே, திருவாலங்காடு உடையவனே (எளிய நான்) உன் அடியார்களுக்கு அடியவன் ஆவேன்.

பாண்டு-'பண்டு' என்பது எதுகைபற்றி நீண்டது.

## 52. 'சிந்தையில் திகழும் சிவன்'

சிந்தித்(து) என்றும் நினைந்து எழுவார்கள் சிந்தையில்
திகழும் சிவன்தன்னைப்
பந்தித் தவினைப்பற்(று)அறுப் பானைப் பாலோ(டு)
ஆனைஞ்சும் ஆட்(டு)உகந் தானை
அந்தமில் புகழாள்உமை நங்கை ஆதரித்து வழி
படப் பெற்ற
கந்த வார்சடைக் கம்ப(ன்)எம் மானைக் காணக்
கண்அடி யேன்பெற்ற வாறே. 61. 8.

நாள் தவறாது தியானித்தும் நினைத்துக் கொண்டும் (காலையில்) எழுபவர்களுடைய மனத்தில் விளங்கும் சிவ பெருமானும், (என்னைக்) கட்டுப்படுத்திய (பழ)வினைகளின் தொடர்பை வேரோடு ஒழிப்பவனும், பால் முதலிய பசு வின் பொருள்கள் ஐந்திலும் (பஞ்ச கவ்வியத்தில்) முழுகு வதில் மகிழ்பவனும், முடிவில்லாத புகழ் உடையவளாகிய உமாதேவியாரால் அன்போடு வணங்கப் பெற்ற மண முடைய நீண்ட திருச்சடையையுடைய திருவேகம்பனு மாகிய எம்பெருமானைக் காணும் பொருட்டு (இடக்கண்) பார்வையை அடியேன் பெற்ற விதத்தை என்னவென்று சொல்வது!

கண் இழந்த சுந்தரர் திருவேகம்பம் சென்று பணிந்துத் தமக்குக் கண் அளிக்க வேண்ட, அதற்கு இரங் கிய பெருமான் இடக்கண்ணை அளித்தபோது, உள்ளம் மகிழ்ந்து அன்பு பொங்கிப் பாடியது இப் பதிகம்.

## 53. 'என்று கொல் எய்துவதே'

அந்தியும் நண்பகலும் அஞ்சுப தஞ்சொல்லி
முந்தி யெழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்(கு)
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே. 83. 1.

காலை மாலைகளிலும் நடுப்பகலிலும் (எப்போதும்) ஐந்தெழுத்தை (பஞ்சாக்ஷரத்தை நாவால்) சொல்லிக் கொண்டு மனத்திலே (பெருமானை) அன்புடன் இருத்தி, (ஒழிக்குமாறு நாம் செய்யும் சூழ்ச்சிகளை மீறி) முன்னாக வருகின்ற பழைய கொடிய வினை (பாபம்) (வந்து) மனதை மூடிக் கொள்ளுமுன் (மூடுதலால் நான் அறிவு கலங்குமுன்) இனிய திருவாரூரிற் போய் என் தந்தையா கிய பெருமானை என்று (நான்) அடைவது?

காலையும் மாலையும் நடுப்பகலும் பஞ்சாக்ஷரத்தை ஜெபஞ் செய்தற்குரிய நல்ல வேளைகளாம். இவ்வேளை களில் ஜெபஞ் செய்வாருடைய மனம் தெளிவான நிலையி

யிருக்கும். அந்த நிலையைப் பழைய வினைகள் கலைக்க மாட்டாதனவாம்.

## 54. மனத்து இன்புற்று இருப்பவனே'

பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்(து) என்னைப் [போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தின் உட்பொரு ளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத்து இன்புற் றிருப்பனே.
45. 8.

(சகல) ஐசுவரியங்களு முடையவனும், (வேண்டும் போதெல்லாம் எனக்குப்) பொன்னைத் தந்து என்னை (தன் அடிமைத் திறத்தைக் கடந்து) போகவிடாத, மின்னல் போல் பேரொளியுடையவனும், வேதத்தின் உள்ளடங்கிய பொருளாகிய அத்தன்மையுடையவனும் (ஆன) திருவாமாத்தூரில் உள்ள அழகனை, அன்பினால் (நான்) எனக்கு உரியவன் எனக் குரியவன் (என்று எண்ணி) என் மனத்தில் (எப்போதும்) இன்ப மடைந்திருப்பேன்.

பொன்னவன் - பொன் நிறமுடையவன் என்னலுமாம். 'பொன்னவன்,' 'மின்னவன்,' 'அன்னவன்,' 'என்னவன்,' இவை ஒவ்வொன்றும் மறுமுறை கூறப்படுதல் அன்பின் மிகுதிபற்றியே யாம். ஐயன் - ஐ அழகாதலின், அழகுடையவன் எனப் பொருள்படுகின்றது; அழகர் என்பது திரு ஆமாத்தூர்ப் பிரானது திருநாமம்.

## 55. 'உனக்கே பொறை ஆனேன்'

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை
வலிய வந்தெனை ஆண்டுகொண் டானே
கண்ணி லேன்உடம் பில்அடுநோயாற்
கருத்தழிந்(து)உனக்கே பொறை யானேன்

தெண்நி லாஎறிக் குஞ்சடை யானே
　　தேவனே திருவாவடு துறையுள்
அண்ண லேயெனை அஞ்சல்என் றருளாய்
　　யார்எனக்(கு) உற(வு) அமரர்களேறே. 70. 2.

*இப்பூமியில் (உன்னை யறியாது) மயங்கி (உழன்று) கிடக்க விருந்த என்னை (கருணையினாலே) வலிய வந்து (திருவெண்ணெய் நல்லூரிலே) (உனக்கு) ஆளாக்கிக் கொண்டவனே, (நான் ஒரு) கண் இல்லாதவனாயிருக்கிறேன். (மேலும்) உடம்பில் (வந்து) வருத்துகின்ற நோயால் மனம் (உன்னை நினைக்கும்) செயலற்று உனக்கே (வீண்) சுமையாக (என்னைக் காக்கும் பாரத்தை உன்மேல் வைத்தவனாக) ஆகி யிருக்கின்றேன். தெளிந்த (களங்கமற்ற) ஒளி வீசும் சடையுடையவனே, (தேவ) தேவனே, திருவாவடுதுறையில் எழுந்தருளிய பெருமானே, தேவர்களுக்கெல்லாம் தலைவனே, என்னை 'அஞ்சாதே' என்று அருள்செய்வாயாக. (உன்னையன்றி வேறு) யார் எனக்கு (உற்ற) உறவினர்? (ஒருவருமில்லை.)*

*ஒரு கண் இல்லாமையோடு, உடம்பினை ஏதோ ஒரு கொடிய நோய் பீடிக்க, அதனாலும் துன்புற்ற சுந்தரர் அவ்விரண்டையும் தீர்த்தருளுமாறு திருவாவடுதுறையிற் பெருமானை வேண்டுகின்றார்.*

## *56. 'அஞ்ச லென்று அருளாய்'*

குறைவி லாநிறை வேகுணக் குன்றே
　　கூத்தனேகுழைக் காது(உ)டையானே
உறவி லேன்உனை யன்றி மற்(று)அடியேன்
　　ஒருபிழைபொறுத் தால்இழி வுண்டே
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
　　செம்பொ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேயெனை அஞ்சலேன்(று) அருளாய்
　　யார்எனக்கு (உ)ற(வு) அமரர்கள் ஏறே. 70. 9

(எப்பொழுதும்) குறைதல் இல்லாத பரிபூரணனே! (எல்லா) குணங்களுக்கும் இருப்பிட மாகும் மலையே, (அனைவரும் உய்யச் சிற்றம்பலத்தில் ஆடும்) கூத்தை உடையவனே, (இரு கந்தர்வர்களாகிய) குண்டலங்களை அணிந்த திருச்செவிகளை யுடையவனே, அடியவனுன நான் உன்னையன்றி வேறு (உற்ற) உறவினர் இல்லாதவன். (அடியாரிடத்துள்ள எல்லாப் பிழைகளையும் பொறுத்தருளும் உனக்கு) (எனது சபதம் தவறுதலாகிய) ஒரு பிழையைப் பொறுத்தருளின் ஏதேனும் குறைவு உண்டோ? சிறகுகளை உடைய (தேன்) வண்டுகள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் எழுந்தருளிய செம்பொன் மேனியுடைய தியாகேசப் பெருமானே, திருவாவடுதுறையில் (அமர்ந்த) தரும சொரூபியே, (தேவர்கள் தலைவனே) என்னை 'அஞ்சாதே' என்று அருள் செய்வாயாக. (உன்னை யன்றி வேறு) யார் எனக்கு உறவினர்?

குறை வில்லா நிறைவே - (எத்தனை வடிவங்களோடு எத்தனை கோயில்களில் வாழ்ந்தாலும், ஒன்றிலும்) குறைவை அறியாத பூரணமாய் இருப்பவனே - "பூரணத்தினின்றும் பூரணம் தோன்றிய பின்னும் பூரணமே மிஞ்சுகின்றது". (உபநிடதம், ஈசா - 1.) குணக் குன்று - குணமே உருக்கொண்ட மலை என்னலுமாம். சிறை வண்டார் பொழில் - வண்டுகளை (தன் அழகால்) சிறைப்படுத்தி (அப்புறம் செல்ல வொட்டாதபடி) வைக்கும் சோலை யென்னலுமாம்.

## 57. 'உய்யப் போவதோர் சூழல் சொல்லே'

கோடு(உ)யர் கோங்கலர் வேங்கையலர் மிகஉந்தி
வரும்நிவ வின்கரைமேல்
நீடு(உ)யர் சோலைநெல் வாயில்அரத் துறைநின்
மலனேநினை வார்மனத்தாய்

ஓடு புனற்கரை யாம்இளமை உறங்கிவிழித்
தால்ஒக்கும் இப்பிறவி
வாடியி ருந்து வருந்தல் செய்யா(து) அடியேன்(உ)ய்
யப் போவதோர் சூழல்சொல்லே. 3. 4.

*உயர்ந்த கிளைகளில் உள்ள கோங்கம் பூக்களையும் வேங்கைப் பூக்களையும் மிகுதியாக (தள்ளி அடித்து)க் கொண்டு வருவதுமான நிவாநதிக் கரையில் (உள்ள) மிக உயர்ந்த சோலைகளையுடைய திருநெல்வாயிலரத்துறையில் எழுந்தருளிய நிர்மலனை மூர்த்தியே, (அன்போடு) நினைக்கும் பக்தர் மனத்தில் (எப்போதும்) உள்ளவனே, (காலமென்னும்) ஓடுகின்ற நீரால் (அரிக்கப்படும்) கரை போன்ற தாகும் (நிலையற்ற) இளமையில், தூங்கி விழிப்பது போன்றதாகும் இப் பிறவியில், துன்பத்தால் (மனம்) வெம்பி இருந்து கொண்டு (உன்) அடியவனை நான் வருந்துதலைச் செய்யாமல் (இத் துன்பங்களினின்றும்) தப்பும்படித் தக்கதோர் இடத்தை (உபாயத்தைச்) சொல்லி அருளுவாயாக.*

*ஒப்பிடுக :*

**உறங்குவது போலும் சாக்கா(டு) உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.**

**—திருக்குறள்.**

*இளமையோ நில்லாது. இப் பிறவியிலோ முற்பிறப்பின் உணர்ச்சி இருப்பதில்லை. இந் நிலையில் துன்பத்தால் வாடி, பிறவிப் பயன் பெறாது போகாமல் என்னை ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறார்.*

## 58.

சிகரம் முகத்தில் திரள்ஆர் அகிலும் மிகவுந்தி
வரும்நிவவின்கரைமேல்
நிகரின்மயில் ஆரவர் தாம்பயிலும் நெல்வாயில்
அரத்துறை நின்மலனே

மகரக் குழை யாய்மணக் கோலமதே பிணக்கோலம
தாம்பிற வியிதுதான்
அகரம்முத லின்எழுத்(து) ஆகிநின்றாய் அடியேன்
உய்யப் போவதோர் சூழல் சொல்லே. 3. 7.

*மலைச் சிகரத்தின் உச்சியில் திரளும் ஆத்தியென்ற மரத்தையும், அகிற்கட்டையையும் நிறையத் தள்ளிக் கொண்டுவரும் நிவாநதிக் கரையின்மேல் ஒப்பற்ற மயில்போன்ற (சாயலுடைய) மாதர்கள் தங்கும் திரு நெல்வாயிலரத்துறையில் வாழும் பரிசுத்தமானவனே, மகர (மீன்வடிவான) குண்டலமணிந்தவனே, மணம் செய்யும் சமயத்துள்ள கோலமே (திடீரென்று மரண மடைதலின்) பிணக்கோலமாய் முடியும் தன்மை யுடையதாகும் (மனிதர்கள் பெரிதும் மதிக்கும்) இப் பிறவி; (அத்தன்மையதாதலின்) அகரமாகிய முதல் எழுத்தின் வடிவாய் நின்றவனே, அடியேன் இதனின் றும் கடைத்தேறும் உபாயம் ஒன்றைக் கூறி அருள் வாயாக.*

*மணக்கோல.......பிறவி - வாழ்க்கையின் நிலையாமை யைக் குறித்தது.*

*ஒப்பிடுக :*

**மின்னின் நிலை யில**
**மன்னுயிர் ஆக்கைகள்**
**என்னு மிடத்து இறை**
**உன்னுமின் நீரே.**

—*நம்மாழ்வார், திருவாய்மொழி*, 1. 2. 2.

**'அகரம் முதல் எழுத்தாகி நின்றாய்'**

**'அக்ஷரங்களுக்குள் அகர மாகிறேன்'** —*கீதை.*

**'அகர முதல் எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே யுலகு.'** —*திருக்குறள்* - 1.

*இதனால் உலகிற்கு முதற் பொருள் ஆனாய் என்ற வாறு.*

## 59.

மின்னுமா மேகங்கள் பொழிந்(து)இழிந்(து) அருவி வெடி
 படக் கரையோடு திரைகொணர்ந்(து) எற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை உறைவார் அடியிணை
 தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்னவா று) அறிவார் துருத்தியார் வேள்விக் குடிஉளார்
 அடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா(று) எம்பெரு மானை என்உடம்(பு)
 அடும் பிணி இடர்கெடுத்தானை. 74. 1.

*மின்னுகின்ற பெரிய மேகங்கள் பொழிவதால் அருவியாகப் பெரு முழக்கத்துடன் இறங்கி (வந்து) கரையில் அலைகளை மோதுவதும், அன்னங்களை உடையதுமான காவேரியின் அகன்ற கரையில் (உள்ள பல தலங்களிலும்) எழுந்தருளி யிருப்பவரும், (தம்முடைய) இரண்டு திருவடிகளையும் இடைவிடாது தொழும் அன்பர்களான அடியவர் (குறைகளைச்) சொன்னபடியே அறிந்து தீர்ப்பவரும், திருத்துருத்தியிலும் திரு வேள்விக்குடியிலும் அமர்ந்தவரும், என் உடம்பை வருத்துகின்ற நோய்த் துன்பத்தைப்போக்கியவரும், என் தலைவருமாகிய சுவாமியைப் பாவியும் நாய்போற் கீழ்ப்பட்டவனுமான நான் மறப்பது எவ்வாறு? (மறக்க முடியாது).*

*அடியவரின் குறையை அறிந்து நீக்கும் எஜமானர் உலகில் அருமை. அப்பெருமை எம்பெருமானுக்கு இயல்பிலே அமைந்ததாகும். திருவாவடுதுறையிற் பிணி தீர்க்கும்வண்ணம் வேண்டின சுந்தரர், திருத்துருத்தியை அடைந்து அங்கே இறைவன் கட்டளைப்படி குளத்தில் முழுகிப் பிணிநீங்கப் பெற்றுப் பாடியது.*

## 60.

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயா கண்டுகொண் டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்(கு)
ஆவாஎன் பரவையுண் மண்டளி அம்மானே. 96. 1.

(வேதத்தை அருளிய) பரிசுத்தமான திருவாக்கையுடையவனே, உனக்குத் திருவடித் தொண்டு செய்யும் அன்பர் (வினை வசத்தால்) அநுபவிக்கின்ற துக்கங்களை (நீக்கி)க் காக்க மாட்டாயா? (உலக விஷயங்களாலே புகுத்தும் முறையை நன்கு) அறிந்துகொண்டவர்களான ஐவர் (ஐம்புலன்கள்) (நான் உன் வழிப்படாது) தடுப்பினும், (உன் பெருமைகளைப் பேசுதற்கு ஆதாரமான) நாக்கையுடைய வாயினால் உன்னையே நல்ல வார்த்தைகள் (துதிகள்) சொல்லும் எனக்கு, ஆஹா! (இவன் இரங்கத் தக்கவன்) என்று திருவருள் செய்வாயாக, (திருவாரூர்ப்) பரவையுண் மண்டலி யென்னும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள பெருமானே.

தூ—பற்றுக்கோடு; தூ வாயா—பற்றுக்கோடானவனே என்றுமாம். ஐம்புலன்கள் வழியே சென்று அல்லற்படுவேனாயினும், உன்னைத் துதிப்பவன் அன்றோ வென்று நீ இரங்கி அருளவேண்டும் என்கிறார்.

**61. 'உறக்க மில்லாமையையும் உணர்த்த வல்லீர்களே'**

பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கண்ணென் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகணில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே. 37. 2.

(எதிரிலே) பறக்கின்ற எம்முடைய கிளிகளே, (இனிமையாகப்) பாடுகின்ற எம்முடைய நாகணவாய்ப் புட்களே, தருமத்தின் 'கண்' என்று சொல்லத்தக்க (நம்) சுவாமியாகிய திருவாரூர்ப் பெருமானை (நான்) மறக்க முடியாமையையும் (அது காரணமாக உடல் மெலிவதனால் என் கையில்) வளைகள் நில்லாது கழன்றுபோகும் தன்மையையும் (எப்போதும் எனக்குத்) தூக்கம் இல்லாமையையும் (நீங்கள் அப்பெருமானுக்கு) அறிவிக்கக் கூடுமோ? (அவ்வாறாயின் தயைசெய்து அறிவிப்பீர்களாக).

## 63. 'விரும்பி ஆட்பட்டேன்'

விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்ததில்லை கோத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக்கண் தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே
95. 2.

*நான் உம்மிடத்து ஒருவரால் அடகு வைக்கப்பட்டவன் அல்லேன். (என்) மனமொப்பி (உமக்கு) அடிமைப்பட்டேன். ஆதலால், நீர் வேண்டும் போது என்னை விற்றுக் கொள்வதற்கு உரிமை யுடையீர். (நான் என் மனமறிய) ஒரு குற்றமும் செய்ததில்லை. (இரக்கமின்றி என்னைக்) குருடாக்கிவிட்டீர். என் சுவாமியே, என் கண்ணை எதற்காக அபகரித்தீர்? (இதனால்) நீரே (நம்பினவரைக் கெடுத்த) பழிக்கு உட்பட்டீர். (எனக்கொன்றுமில்லை) (என்மீது இரங்கி) மற்றொரு (வலக்)கண்ணையும் தந்தருளா விட்டால், (நீரே) வாழ்ந்து போம். (நான் கெட்டால் கெடுகிறேன்.)*

*விற்று........ஆட்பட்டேன் - நானே விரும்பி உமக்கு அடிமையானேன். சிறிது காலம் அடிமையாகிப் பின் மீட்டுக்கொண்டு போம்படி என்னை ஒற்றிவைக்க வில்லை. மீளா அடிமையாய் உமது உடைமையானேன்; ஆதலின் என்னை நீர் வேறு ஒருவருக்கு விற்றுவிடும்வரை உம்மிடமன்றி வேறெங்கு முறையிடுவேன் என்றவாறு. இப்படி மனம்புழுங்கி முறையிட்டதன் பயனாகச் சுந்தரர் வலக் கண்ணும் பெற்றனர்.*

## 64.

நற்றமிழ் வல்லஞான சம்பந்தன் நாவினுக் கரையன்
நாளைப் போவானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி கண்ணப்பன்
கணம் புல்லன் என்(று) இவர்கள்

சுந்தரர் ஆண்டவன்மீது கொண்ட பெருங்காதலி ஞல் ஆனந்தமடைந்து பின்னர்ப் பிரிதலும், நாயகியின் நிலையை அடைய, தமது நாயகனை சிவபெருமானிடம் தமது காதலையும் பிரிவாற்ருமையையும் நிகழ்ச்சிகளையும் அறிவிக்குமாறு கிளிகளையும் நாகணவாய்ப் புட்களையும் தூது அனுப்புகிருர்.

## 62. 'மீளா அடிமை உமக்கே'

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாஅங்(கு) இருப்பீர் திருவா ரூரிர் வாழ்ந்து போதீரே.
95. 1.

உமக்கே என்றும் பிரியாத அடிமை ஆளாகி, (உம் மையன்றி) வேறு எவரையும் (எஜமாஞக விரும்பாமல்) ஆட்பட்டிருக்கும் அடியவர்கள் வெளியில் கிளம்பாது (உள்ளேயே குமுறுகின்ற) தீயைப்போல (மனத்துக்கு) உள்ளேயே (துன்பமாகிய தீ) ஜொலித்து மிகவும் முகவாட்டமடைந்து தங்கள் துன்பத்தை (உம்மிடம் முறையிட்டுச்) சொன்ஞல், (அதனைச் செவியேற்றுத் தீர்த்தருளாமல்) சும்மா இருக்கின்றீர்; திருவாரூர்ப் பெருமானே, (உமக்கு இது தகுமாயின்) நீரே வாழ்ந்து போம். (நான் கெட்டால் கெடுகிறேன்).

இதுவரை மற்ருெரு கண் பார்வையைப் பெருத சுந்தரர், வருத்த மிகுதியாலும், தோழமை முறையாலும் உரிமையுடன் திருவாரூர்ப் பெருமானை வேண்டித் தம் வருத்த மிகுதியைப் புலப்படுத்திப் பாடுகிருர். மீளா அடிமை—(உம்மைவிட்டு) விலக்க முடியாத அடிமை. உயிர்கள் கட்டுப்பட்ட நிலையிலும், முத்தி நிலையிலும் இறைவனுக்கு அடிமைகளே என்பது சித்தாந்தக் கொள்கை. உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி—துய ரத் தீயால் மனம் வெந்துபோயிருப்பினும் உள்ளடக்கிக் கொண்டு வெளிக்காட்ட விரும்புவதில்லை; ஆனல் அது வெளியில் முகத்தை மிகவும் வாட்டுவிக்கிறது என்கிருர்.

குற்றம் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொன்தி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே. 55. 4.

*நல்ல தமிழ்ப்பாடலில் திறமைபெற்ற திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருநாளைப் போவாரும் (நந்தனார்) சூதாட்டம் கற்று வல்ல மூர்க்க நாயனாரும், நல்ல சாக்கிய நாயனாரும், சிலந்திப் பூச்சியும் கண்ணப்ப நாயனாரும் கணம்புல்ல நாயனாரும் என்று கூறும் இவர்கள் யாவரும் பல விதமாகிய குற்றஞ் செய்தாலும் அவற்றைக் குணமாகக் கொண்டு அருளின தேவரீரது திருவருட் கொள்கையைப் பார்த்து; பொன்னின் திரளும், மணிகளும் தாமரைகளும் பரந்து விளங்கும் தடாகங்கள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளிய பெருமானே, தேவரீரது ஒலிக்கின்ற வீரக் கழலை அணிந்த திருவடியைச் சரணமடைந்தேன்.*

## 65.

எண்ணியிருந்து கிடந்தும் நடந்தும்
அண்ணல் எனநினை வார்வினை தீர்ப்பார்
பண்இசை ஆர்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய னார்உறை பூவண மீதோ. 11. 2.

*(திருவடிகளையே) தியானித்துக் கொண்டு இருந்தும் படுத்தும், நடந்தும் (எக்காலத்தும்) அளவிடற்கரிய பெருமை யுடையவர் என்று (அவரை) நினைப்பவருடைய வினைகளைத் தீர்க்கும் பரிசுத்தராகிய பெருமான் பண்ணோடு கூடிய கீதம் பொருந்திய (இனிய) சொற்களை யுடைய ஆடற் பெண்கள் பலர் (துதி) பாட (இனிதாக) எழுந்தருளியுள்ள திருப்பூவணம் இதுவோ.*

*எக்காலத்தும், எச் செயலிலும் இறைவனை நினைத்தல் வேண்டுமென்று குறிப்பிடுகிறார்.*

## 66.

ஊனாய்உயிர் புகலாய்அக லிடமாய்முகில் பொழியும்
வானாய்வரு மதியாய்விதி வருவான்இடம் பொழிலின்
தேன்ஆதரித்(து) இசைவண்டினம் மிழற்றுந் திருச்சுழியல்
நானாவிதம் நினைவார்தமை நலியார்நமன் தமரே. 82. 1.

(உயிர்களின்) சரீரங்களாகியும் (எல்லா) ஜீவராசிகளுக்கும் புகலிடமாயும், பரந்த (இவ்) உலகமாகியும், மேகங்கள் (மழை)பொழிதற்குஇடமான ஆகாசமாகியும், அதில் தோன்றும் கலைகள் நிறைந்த பூர்ண சந்திரனாகியும் (அவரவர்க்குரிய) மெய்ப் பொருளாயும் இருக்கின்ற பெருமானுக்குரிய இடமான, சோலைகளிலே இனிய தேனை விரும்பி (நல்ல) கீதத்தை உடைய வண்டுக் கூட்டங்கள் ரீங்காரம் செய்கிற திருச் சுழியலைப் பல வகையில் நினைப்பவர்களை யம தூதர்கள் வருத்த மாட்டார்கள். (திருச்சுழியலை உண்மையுடன் வழிபடுவோர்க்கு யமபயமில்லை.)

ஆண்டவன் எல்லா உடல்களுமாகி, உடல்களில் தங்கும் உயிர்கட்குப் புகலிடமாகி, உயிர்கள் வாழ்தற்குரிய உலகமாகி, உலகம் வாழ்தற்கு இன்றியமையாத மழையைப் பொழியும் வானாகி, அவ் வானை விளக்கஞ் செய்யும் மதியாகி, இவைகட் கெல்லாம் மேலாக, அழியாத மெய்ப் பொருளுமாகி இருப்பவன் என்றவாறு.

## 67. 'எய்துவ தென்று கொலோ'

நானுடை மா(டு)எனவே நன்மை தரும்பரனை
நற்பத மென்று(உ)ணர்வார் சொற்பத மார்சிவனைத்
தேனிடை இன்னமுதை மற்றத னிற்தெளிவைத்
தேவர்கள் நாயகனைப் பூஉயர் சென்னியனை
வானிடை மாமதியை மாசறு சோதியனை
மாருத மும்அனலும் மண்டல மும்மாய
கானிடை மாநடனென்(று) எய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேர்உறை காளையையே.

84. 3.

நான் (உரிமையாகப்) பெற்றுள்ள செல்வம் போல (எனக்கு) நன்மைகளைச் செய்யும் பரம்பொருளும், (தன்னையே அடைதற்கு உரிய) நல்ல பதவி யென்று உணரும் அடியவர்களின் சொற்களாலாகிய துதிகளில் நிறைந்திருக்கும் மங்கள மூர்த்தியும், தேனிட்டுள்ள இனிய அமுதமும் அவ்வமுதத்தின் ஸாரமும் ஆனவனும், தேவர்களுக் கெல்லாம் தலைவனும், (பொன் மயமான கொன்றைப்) பூச்சூடிச் சிறந்து விளங்குகின்ற சிரசை யுடையவனும், ஆகாயத்தில் (விளங்கும்) சந்திரனானவ னும், குற்ற மற்ற (சூரியன் போன்ற) ஜோதி ஸ்வரூபியும் (ஆன) (பயிர்களின் பசுமை மிகுதியாலே) கருமை நிறம் தோன்றும் வயல்கள் சூழ்ந்த திருக் கானப்பேரில் அமர்ந்துள்ள காளைப்பெருமானை, பூமி முதலிய உல கங்களும் ஆகியவனும், காட்டினிடத்தே பெரிய ஆநந்த நர்த்தனம் செய்பவனும் என்று அறிந்து அடைவது எந்நாளோ ?

திருச்சுழியலில், பெருமான் சுந்தரர் கனவிலே கா ளைப் (யௌவன) பருவமும் கையிலே பொற்செண்டும் தலை யிலே உச்சிக்கொண்டையுமுடைய ஓர் இனிய கோலத் துடன் தோன்றி, தாம் இருப்பது ‘கானப்பேர்’ என்று கூறி மறைந்தருள, சுந்தரர் அதிசயித்துப் பெரு விருப் புடன் திருக்கானப்பேருக்குச் சென்று ‘கானப்பேர் உறை காளையை அடைவது என்று கொலோ’ என்று பாடிக்கொண்டே ஆலயத்தை அடைந்தார்.

மண்டலமும் மாய - உலகங்கள் எல்லாவற்றையும் அழித்த பின்பு என்றுமாம். முதலில் இறைவனை இம் மைக்கு உரிய செல்வ மென்றும், பின் மறுமைக்கு நன்மை யளிக்கும் பரம்பொருள் என்றும், அவரை உணர்ந்த பின்பு துதிக்கு உரியவர் என்றும் துதிப்பவர்க் குப் பேரானந்தத்தையும் பிறவாமையையும் தருபவர் என்றும் கூறுகிறார்.

## 68. 'என்றனையாள் தோழனை'

நாதனை நாத(ம்) மிகுத்து ஓசைய(து) ஆனவனை
ஞான விளக்(கு)ஒளியாம் ஊன்உயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன் பத்தர் மனத்(து)இறையும்
பற்றுவி டாதவனைக் குற்றமில் கொள்கையனைத்
தூதனை யென்றனைஆள் தோழனை நாயகனைத்
தாழ்மக ரக்குழையும் தோடும் அணிந்ததிருக்
காதனை நாயடியேன் எய்துவ(து) என்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேர்உறை காளையையே.

84. 9.

(காதால் கேட்க முடியாத நுட்பமான) நாததத்துவ மானவனும், அந்நாதம் தூலமாகி முதிர்ந்து (வெளிப் படும்) சப்தம் ஆனவனும், ஞான தீபச் சுடராய் (உல கத்திலுள்ள) (உடலுக்குள்) உயிராயிருப்பவனும், தாவ ரங்கள் ஆனவனும், பெண்ணை (பாதியில்) உடையவனும், மேன்மை யுடைய தன் பக்தர்களின் மனத்தினின்றும் (ஒரு) கணமும் பிரியாதவனும், குற்ற மற்ற கோட்பாடு (ஒழுக்கம்) உடையுவனும், (எனக்குத்) தூதனும் என்னை ஆட்கொண்ட தலைவனும் தோழனுமாகியவனும், (ஒரு பால்) தொங்குகின்ற மகர குண்டலமும் (மற்றொருபால்) (உமையாளுக்குரிய இடப்பாகத்தில்) தோடும் அணிந்த திருச்செவிகளை யுடையவனும், (ஆன) கரிய வயல்கள் சூழ்ந்த திருக்கானப் போரில் எழுந்தருளிய காளைப் பெருமானை, நாய் போற் கீழ்ப்பட்ட அடியவனாகிய னநா (போய்) அடைவது என்றோ?

## 69. 'அப்பனே அஞ்சினேனே'

இறைகளோ(டு) இசைந்த இன்பம்
இன்பத்தோ(டு) இசைந்த வாழ்வு
பறைகிழித்(து) அனைய போர்வை பற்றியான்
நோக்கினேற்குத்

திறைகொணர்ந்(து) ஈண்டித் தேவர்
செம்பொனும் மணியுந் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே
அஞ்சினேனே. 8. 1.

தேவர்கள் கூடி நல்ல பொன்னையும் மணியையும் காணிக்கையாகக் கொண்டுவந்து செலுத்துகின்ற, ஒலிக்கின்ற வீரக் கழலை அணிந்த திருவடிகளிலே வணங்குதற்கு இடமான திருவாரூர்ப் பெருமானே, பறையை (மூடிய தோலைக்) கிழித்தாற்போன்ற (தோற்) போர்வையை யுடைய உடம்பைப் பிடித்து நான் (ஆராய்ந்து) பார்த்தபொது, இறைவராகிய உம்மோடு பொருந்திய பேரின்பமும் அந்த இன்பத்தோடு பொருந்திய (முத்தி) வாழ்க்கையும் (ஆகிய இவை எனக்குக் கிட்டுமோ என்று) அஞ்சுகின்றேன்.

இறைகளோடு........வாழ்வு - உலக இன்பம் பல துன்பங்களோடு பொருந்தியது, அத்தகைய (துன்பங்கலந்த) இன்பத்தோடு கூடிய உலக வாழ்க்கைக்கு என்றுமாம்.

## 70. 'ஐயாறுடைய அடிகளோ'

எங்கே போவே னுயிடினும் அங்கே வந்(து) என்
மனத்தீராய்ச்
சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள்
கடைநாள் ஒக்கவே
கங்கை சடைமேற் கரந்தானே கலைமான்
மறியும் கனல்மழுவும்
தங்குந் திரைக்கா விரிக் கோட்டத்(து)
ஐயா றுடைய அடிகளோ. 77. 2

(மிக்க செருக்கும் விசையும் கொண்ட) கங்கையைச் சடையில் மறைத்துக் கொண்டவரே, கலைமான் குட்டியும், தரிக்கின்ற மழுவும் (திருக்கரங்களிலே) தங்கப் பெற்ற, அலைகள் பொருந்திய காவிரி சூழ்ந்த திருவையாற்றை (இடமாக) உடைய சுவாமியே, (நான்) எங்கே

போவேனானாலும் அங்கே (நீர்) வந்து சந்தேகம் ஒரு சிறிதும் இன்றி (என்னை ஆட்கொண்ட) முதல் நாளிலும், கடைசியாகிய இந் நாளிலும் ஒரே வகையாக என் மனத்தில் எழுந்தருளியவரா யிருக்கின்றீர். (ஆதலால் என் குறையைத் தீர்த்து அருள்வீராக)

சுந்தரர் சேரமான்பெருமான் நாயனாருடன் சென்று திருவையாற்றைத் தரிசிக்க விரும்பினார். அப்போது காவிரி ஆற்றில் வெள்ளம் ஓடங்கள் செல்ல முடியாதபடி பெருக்கெடுத்துக் கரைப்புரண்டு ஓடியது. சுந்தரர், ஐயாற்றுப் பெருமானை வேண்டிப் பாடிய அளவில் ஆற்று வெள்ளம் இருபுறமும் விலகி வழிவிட்டது. அப்போது, பாடியது இப்பதிகம்.

## 71. 'ஆரூரானை மறக்கலு மாமே'

பொன்னும் மெய்ப்பொரு ளும்தருவானைப்
போகமும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப்பானை
இன்ன தன்மையன் என்(று)அறி வொண்ணா
எம்மா னைஎளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூ ரானைமறக்கலு மாமே. 59. 1.

(இம்மைக்கு வேண்டிய நிலையில்லாத) பொன்னையும் (என்றும் அழிவில்லாத திருவருளாகிய) உண்மைப் பொருளையும் (எனக்குத்) தருபவரும் (உலக) போகங்களையும் (அழியாத மோட்சமாகிய) செல்வத்தையும் சேர்ப்பிப்பவரும், மற்றும் என் குற்றங்களைப்பொறுத்து அருளுபவரும், குற்றங்களே (என்னிடம்) இல்லாதவாறு நியமிப்பவரும், இப்படிப்பட்டவரென்று வரையறுத்து அறிய முடியாத இயல்பையுடைய எம்பெருமானும், ஆயினும் (எனக்கு) எளிதாக்க் கிடைத்த தலைவரும் (ஆகிய) அன்னப் பறவைகள் தங்கப்பெற்ற வயல்களை

*யுடைய மருந்தநிலங்கள் அழகு செய்யும் திருவாரூர்ப் பெருமானை (நான்) மறக்கவும் முடியுமோ?*

*சிலகாலம் சேரமான் பெருமான் நாயனாருடன் மலை நாட்டிலே இன்பமாகத் தங்கியிருந்த சுந்தரர், திருவாரூர்ப் பெருமானுடைய நினைவு வரப்பெற்றவராய்க் கொடுங்கோளூரில் இருந்தபடியே திருவாரூரைப் பாடிக் கொண்டு புறப்பட்டார். இகத்திலும் பரத்திலும் அடியார் வேண்டியவற்றை யெல்லாம் சிவபெருமான் தருவார் என்றவாறு. இகத்தில் பொன்னையும் போகத்தையும் தந்தார்; என் பிழையைப் பொறுத்தார்; எனக்கு எளிதாகக் கிட்டுதற்கு உரியரானார், ஆயினும், பரத்திற்குரிய மெய்ப்பொருளையும் முத்திச் செல்வத்தையும் தந்தார்; என் பிழையை முழுதும் நீக்கிப் பரவாழ்க்கைக்கு உரியராக்கினார். தமது இயல்பை இன்னதென்று வரையறுக்க முடியாத மகிமை வாய்ந்தவராய்ப் பர உலகத்தில் விளங்குகிறார் என்றவாறு.*

## 72. 'உயிர்க்குப் பரிந்தானை'

கார்க்குன் றமழை யாய்ப்பொழி வானைக்
கலைக்கெ லாம்பொரு ளாய்உடன் கூடிப்
பார்க்கின் றஉயிர்க் குப்பரிந் தானைப்
பகலுங் கங்குலும் ஆகிநின் றானை
ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை
உணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை
ஆரு ரானை மறக்கலுமாமே. 59. 3

*கரிய மலையினிடத்து மழையாகப் பொழிபவரும் எல்லாக் கலைகளுக்கும் (உரிய) பொருளாகி அக்கலைகளுடன் சேர்ந்திருப்பவனை, காணப்படும் ஜீவர்களுக்கு அருள் செய்பவரும், பகலும் இரவும் (முதலிய காலங்கள்) ஆகியிருப்பவரும் (சத்தத்தை) அறிகின்ற காதுகளாகியவரும், உருசியை அறியும் நாக்கு ஆகியவரும் (பொருள்களைக்) காணும் கண்களாகியவரும், ஒலிக்கின்ற கடலாய்*

இருப்பவரும், (சலிப்பில்லாத) மலையானவரும் (ஆகிய) திருவாரூர்ப் பெருமானை (நான்) மறத்தலும் கூடுமோ?

*கார்க்குன்ற....பொழிவானை - அதுபோல், உயிர்களிடத்துத் தன் அருளைப்பொழிபவன் எனினுமாம். உடன்கூடிப் பார்க்கின்ற....தன்னோடு கூடியிருந்தும் தன்னை அறியாது பார்க்கின்ற; சிவன் உயிரினுள் இருப்பினும், அதனை உயிர் அறியாது வருந்துகின்றமையின், அதற்காக இரங்குகின்றான்.*

## 73. 'உன்னையே உள்குகின்றேன்'

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாய்என்(று)உன்னையே உள்குகின்றேன் உணர்ந்(து)
புற்றா டரவா புக்கொளி யூர்அவி நாசியே [உள்ளத்தால்
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே. 92. 1.

*உன்னையே (எனக்கு) உற்றனனென்று மனத்தால் அறிந்து (எப்போதும்) நினைக்கின்றேன். புற்றிலுள்ள (படமெடுத்து) ஆடுகின்ற பாம்பை யுடையவனே, திருப்புக்கொளியூர் அவிநாசியில் எழுந்தருளியிருப்பவனே, (ஆன்மாக்களாகிய) பசுக்களுக்குத் தலைவனே, பரமஞான ஸ்வரூபியே, (நீயே) பற்றுக்கோடாக வாழ்கின்றேன். (ஆதலால்) எம்பெருமானாகிய உன்னை எழு பிறப்பிலும் எவ்வகையால் மறப்பேன்.*

*இப்பதிகம் பாடி சுந்தரர் இறைவன் அருளால் முதலை உண்ட பாலனை அழைத்துப் பெற்றோரிடம் ஒப்புவித்தார்.*

## 74. 'சொல்லுவார் சொற்பொருள் அவை நீ'

ஆக்கும் அழிவும் அமைவும்நீ என்பன்நான் சொல்லுவார்
　சொற்பொருள் அவைநீ என்பன் நான்
நாக்கும் செவியும் கண்ணும்நீ என்பன்நான் நல்லனே
　இனிநான் உனைநன்(கு) உணர்ந்தேன்

நோக்கும் நிதியம் பலஎத் தனையுங் கலத்திற்
புகப்பெய்து கொண்(டு)ஏற நுந்தி
ஆர்க்குங் கடலங் கரைமேல் மகோதை அணியார்
பொழில்அஞ் சைக்களத்(து) அப்பனே. 4. 7.

*படைப்பும் அழிப்பும் (காப்பும்) பூரணமும் நீ என்று சொல்லுவேன் நான். (பலவாறு) செல்லுகின்றவர்களுடைய சொற்களின் பொருளாகிய அவை நீயே என்று சொல்லுவேன் நான். (சுவை அறியும்) நாக்கும், (கேட்கும்) காதும், (பார்க்கும்) கண்ணும் நீயே என்று சொல்லுவேன் நான். (எனக்கு நன்மையாகிய பெருமானே (பிரகாசமாகக்) காணப்படும் (முத்து பவளம் முதலிய) செல்வங்கள் எத்தனைப் பலவற்றையும் மரக்கலங்களிலே இட்டுக் கரையில் ஏறும்படி மோதித் தள்ளிக் கொண்டு சப்திக்கின்ற (மேல்) கடலின் கரையில் உள்ள 'மகோதை' என்னும் ஊரில், திருவஞ்சைக்களக் கோயிலில் எழுந்தருளியுள்ள (என்) பிதாவே, இப்போது உன்னை நான் நன்கு அறிந்துகொண்டேன்.*

*சொற் பொருள் அவை நீ - சிவபெருமான் நாதவடிவாய் நிற்றலின் எல்லா ஒலிகளும் அவனையே குறிக்கின்றன என்றார். நாக்கும்....நீ - புலன்களூடு நின்று அறிவிப்பானும் நீ. நலனே இனி....உணர்ந்தேன் - நீ நன்மையின் வடிவமே ஆனாய். நீ செய்வ தெல்லாம் உலகத்தில் உள்ள உயிர்களின் நன்மைக்கே யாகும் என்பதை அறிந்து கொண்டேன். நலன் - மங்கள வடிவினன்; சிவன் என்பதன் பொருள். சிவபெருமானை நன்குணர்ந்தவர்க்கு மனைவாழ்க்கையில் வெறுப்பெழுதலும் பரவாழ்க்கையை விரும்புதலும் இயல்பாதலின், 'வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழித்தேன்' என்று அடுத்த பாட்டில் கூறுகிறார். இவ்வாறு நாயனார் தமது விருப்பைக் குறிப்பால் உணர்த்தலும், பெருமான் அவரைக் கைலாயத்துக்கு அழைத்தேக ஏற்பாடு செய்தருளினர்.*

## 75. ‘அருள் புரிந்ததும் தர்மோ’

மந்திரம் ஒன்றுஅறியேன் மனை வாழ்க்கைமகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே.
100. 3.

*அடியவனாகிய நான் (பெருமானை மகிழ்விக்கும் சிவ) மந்திரம் ஒன்றையும் அறியமாட்டேன். இவ் வாழ்க் கையிலே மன மகிழ்ச்சி கொண்டு (வெளிக்கு) அழகிய (சிவ) வேடங்களுடன் குற்றங்களையே செய்யும் தொண்ட னான எனக்குத் திரு நொடித்தான் மலை யெனப்படும் கயிலாயத்தில் எழுந்தருளிய முதல்வனாகிய பெருமான், மேலிடத்து உள்ளதாகிய பெரிய ஆகாயத்திலே (செல் லத்தக்க) அழகிய (வெள்ளை) யானையை (நான் ஏறிச் செல்ல) அருள் செய்ததும் தகுதியுடையதாகுமோ (என்றுச் சொல்லும் தரத்ததாகுமோ?) (என்னுடைய) மனமே!*

*நாயனார் கைலாயத்திற் கெழுந்தருளும் போது, ஆண்டவனது பெருங்கருணைத் திறத்தையும் தன்னு டைய சிறுமையையும் நினைந்து நன்றி பாராட்டுகிறார். ‘இறைவர் என்னையும் பொருட்படுத்தி, இந்திராதியர்க் குரிய வெள்ளை யானையை எனக்கருளிய கருணைத் திறத்தை எவ்வாறு வியப்பேன்!’ என்கிறார். இவ்வாறு சுந்தரர் வெள்ளை யானைமீது ஏறித் திருக்கயிலாயத்தை அடைந்து, சிவபெருமானாலே தம்மிடம் சேர்த்துக் கொள்ளப் பெற்றார்.*

# திருவாசகம்

## 1. 'நமச்சிவாய வாஅழ்க'

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க;
இமைப் பொழுதும்என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க;
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க;
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க;
ஏகன், அனேகன் இறைவன் அடிவாழ்க;
வேகம் கெடுத்(து)ஆண்ட வேந்தன் அடிவெல்க;
பிறப்(பு)அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க;
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க;
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க;
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க;

(சிவபுராணம் 1—10)

'நமச்சிவாய' என்னும் ஐந்தெழுத்துவாழ்க. (அந்த ஐந்தெழுத்தின் பொருளாகிய) இறைவனுடைய திருவடி வாழ்க; இமைக்கும் அளவு காலம் கூட என்னுடைய நெஞ்சிலிருந்து நீங்காதவனுடைய திருவடி வாழ்க; திருவாவடுதுறைக்குத் தலைவனாகிய உயர்ந்த மாணிக்கம் போன்றவனுடைய திருவடி வாழ்க; ஆகமப் பொருள் ஆகி நின்று, (நினைத்த நெஞ்சம்) தித்திப்பவனுடைய திருவடி வாழ்க; ஒன்றாக இருப்பவனும் பலவாக இருப்பவனும் ஆன இறைவனுடைய திருவடி வாழ்க; மனக் கலக்கத்தைப் போக்கி என்னை ஆட்கொண்டருளிய மகாப் பிரபுவினுடைய திருவடி வெற்றி பெறுக; பிறவித் துன்பங்களை ஒழித்தருளுகின்ற சிவபெருமானுடைய (வீரக் கழலை) அணிந்த திருவடிகள் வெற்றி பெறுக; (அன்பில்லாத) பிறர்க்கு வெகு தூரத்தில் இருப்பவனுடைய தாமரை போன்ற திருவடிகள் வெற்றி பெறுக; (அன்போடு) கைகளைக் கூப்பி வணங்குவோருடைய உள்ளத்தைச் சந்தோஷிப்பிக்கும் இறைவனுடைய திருவடி

போய்தான் தவிர்ந்(து)உன்னைப் போற்றி
சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே. —திருச்சதகம், 1.

(எனது) உடல் மயிர்க்கூச் செறிந்து, நடுநடுங்கி, உன்னுடைய வாசனை நிரம்பிய திருவடியை அடைவதற்கு என்னுடைய கைகளைத் தலைமீது வைத்து, கண்களில் நீர் ததும்பி, மனம் கொதித்து, பொய்யை நீக்கி, உன்னை 'போற்றி, ஜய ஜய போற்றி' என்று துதிக்கின்ற ஒழுக்கத்தை (நான்) தளர விடமாட்டேன்; (ஆதலால்) எல்லாவற்றையும் உடையவனே! நீ என்னுடைய நிலைமையைக் கண்டு (இரங்கி) (உன் அடியவர்களில் ஒருவனாக என்னை) ஏற்றுக் கொண்டருள்வாயாக.

ஆண்டவனிடத்து மெய்யன்பு உண்டாகும் போது, மனம் கொதிக்க வஞ்சனைகள் நீங்கும். நா அவனை வாழ்த்தித் துதிக்கும்; உடல்துடித்துக் கண்ணீர் பொழியும்.

பொய்தான் தவிர்ந்து—

'மனமும் வாக்கும் ஒன்றுபட்டு நிற்றலே திருவருளைப் பெற இன்றியமையாத சாதனம். —ஸ்ரீராமகிருஷ்ண தேவர்.

3. 'அருள் பெறும் நாள் என்றென்றே வருந்துவனே'

யானேதும் பிறப்(பு)அஞ்சேன்; இறப்பதனுக்(கு)
என்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான்
மதித்தும் இரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே
எம் பெருமான்எம்
மானேஉன் அருள்பெறும்நாள் என்றென்றே
வருந்துவனே. —திருச்சதகம், 12.

இனி எந்தப் பிறவி வருவதாக இருந்தாலும், நான் அதற்குப் பயப்படவில்லை, (பிறந்தவனுக்கு மரணம் நிச்சயமாகையால் அந்த) மரணத்துக்கு நான் என்ன

கள், தலையால் வணங்குவார்களை உயர்த்துகின்ற புகழை யுடையவனுடைய திருவடிகள் வெற்றி பெறுக.

நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க — இறைவனைக் காட்டிலும் இறைவனுடைய நாமத்திற்கு மகிமை அதிகமாதலின், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை முதலில் கூறி, அதன் பொருளாகிய இறைவனைப் பின் கூறினர்.

ஒப்பிடுக :

'இராம பக்தியிற் சிறந்த அநுமான் அவரது திருநாமத்தையே துணையாகக் கொண்டு எளிதில் கடலைக் கடந்தான்; ஆனால் இராமபிரானுக்கோ கடலைக் கடக்க அணைகட்டவேண்டி யிருந்தது.
—ஸ்ரீராமகிருஷ்ண தேவர்.

நமச்சிவாய - மங்களங்கட் கெல்லாம் மங்களமாகிய ஐந்தெழுத்தைக் கொண்டு நூலைத் தொடங்குகிறார். வாழ்க - இறைவனிடத்து உள்ளன்பு மேலிட்டுப் பொங்கும் போது, அவனுக்கு என்ன தீங்கு வருமோ என்று அடியார் அஞ்சி மனங்கலங்கிப் பரிவினால் அவனை வாழ்த்துதல் இயல்பு; பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடியதும் இக்காரணம் பற்றியே யாகும்.

தாள் வாழ்க.

அடியாரைப் பரிந்து காப்பன பத்தியில் வருவன மத்தமாம் பிணி மருந்து மாவன மந்திர மாவன வலஞ்சுழி யிடமாக [நோய்க்கு இருந்த நாயகன் இமையவர் ஏத்திய இணையடித் தவத்தானே.'
—சம்பந்தர்.

'சிந்திப் பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறை அணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே.'
—அப்பர்.

## 2. 'உடையாய் என்னைக் கண்டு கொள்ளே'

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்(து)
உன்விரையார் கழற்(கு)என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பிஉள்ளம்

செய்யக்கூடும்? (ஒன்றும் அஞ்சுவதற்கில்லை). எனக்குச் சுவர்க்கலோகம் வருவதாக இருந்தாலும் அதை நான் விரும்பவில்லை; பூலோக அரசாட்சியையும் பொருளாகக் கருதவில்லை; தேன் பொருந்திய கொன்றைமலர் மாலையை அணிந்த சிவபெருமானே! எமது இறைவனே! எமது பெரியோனே! உமது அருளை நான் பெறும் காலம் எப்போது வரும் என்று வருந்துகின்றேன். (நினைந்து நினைந்து துடிக்கிறேன்.)

## 4. 'என் சொல்லி வாழ்த்துவனே'

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதுஎன்(று) அவர்அவரைக்கூத்தாட்டு
வான்ஆகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

—திருச்சதகம், 15.

ஆகாசம் ஆகி, பூமி ஆகி, காற்று ஆகி, தீ ஆகி, உடம்பு ஆகி, (அந்த உடம்பில் உள்ள) உயிர் ஆகி, உள்ளதும் ஆகி, இல்லாததுமாகி, இறைவன் ஆகி, 'நான்', 'என்னுடையது' என்று சொல்லி அவர் அவர்களை ஆட்டிவைப்பவனாகி நிற்கும் உன்னை என்ன வார்த்தைகளைச் சொல்லி வாழ்த்துவேன் (புகழ்வேன்)?

உண்மையுமாய் இன்மையுமாய்.
'உளன் எனில் உளன்.' (நம்மாழ்வார், திருவாய்மொழி, 1. 1. 9.)

சிவபெருமான் எல்லாப் பொருள்களின் வடிவமாயும் அவைகளோடு ஒன்றாகக் கலந்தும், அவைகளைக் கடந்தும், அவைகளை ஆட்டிவைப்பவனாயும் இருக்கின்ற தன்மையைச்சொல்லுக்கு அடங்காதது என்கிறார்.

## 5. 'அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை'

தனியனேன் பெரும் பிறவிப் பௌவத்(து) எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)

இனிஎன்னே உய்யுமாறு என்றேன்(று) எண்ணி
அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதல்அந்தமில்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

—*திருச்சதகம்*, 27.

*(யாதொரு துணையுமின்றி) தன்னந்தனியனாக இருக்கின்ற நான், பிறவியாகிய பெருங்கடலில் (இருவினை) துன்பமாகிய பெரிய அலைகளால் மோதுண்டு யாதொரு பற்றுக்கோடும் இல்லாமல், கொவ்வைக் கனியை ஒத்த சிவந்த வாயையுடைய பெண்கள் என்கிற பெருங் காற்றினால் கலக்குண்டு, காமம் என்கிற பெரிய சுறா மீன் வாயில் அகப்பட்டு, இனிமேல் 'உய்யும் உபாயம் எது?' என்று பல முறை நினைந்து நினைந்து (நமச்சிவாய என்னும்) ஐந்தெழுத்தாகிய தெப்பக்கட்டையைப் பிடித்துக் கொண்டு கிடக்கிறேன். மூர்க்கனாய்க் கிடந்த எனக்கு அழகிய தலைவனே, முதலும் முடிவும் இல்லாத வளம் பொருந்திய வீடாகிய கரையை (கருணையால்) காட்டி ஆட்கொண்டு அருளினாய்.*

*அஞ்செழுத்தின் புணைபிடித்து.*

'கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்,
நற்றுணையாவது நமச்சிவாயவே' —*அப்பர்.*

## 6. 'வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்'

போகம் வேண்டி வேண்டி லேன்பு ரந்த ராதி இன்பமும்
ஏக நின்க ழலிணை அலாதி லேன்என் எம்பிரான்
ஆகம் விண்டு, கம்பம் வந்து, குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை ஆற தாக ஐயனே.

—*திருச்சதகம்*, 72.

*எனது ஐயனே! எனது தலைவனே! (எனது) உடல் நெகிழ்ந்து, நடுக்கம் உண்டாகி, கைகள் தலை மீது (சேர்ந்து உன்னை) அஞ்சலி செய்வன வாகட்டும்; கண்களிலிருந்து பெருகும் நீர் (ஓர்) ஆறாகப் பெருகட்டும். (இவைகளே எனக்கு வேண்டுமேயன்றி அற்பமான*

இந்திரிய) சுகங்களை விரும்பி இந்திரன் முதலியோரு டைய இன்பங்களையும் நான் விரும்பவில்லை. தனிமையாக இருப்பவனே, உன்னுடைய இரண்டு திருவடிகளைத் தவிர வேறொன்றினிடத்தும் நான் விருப்பங் கொள்ளவில்லை.

புரந்தராதி இன்பமும் முடிவடைந்துவிடு மாதலின், 'வேண்டிலேன்' என்கிறார். ஆண்டவனுடைய திருவடிக ளின் சம்பந்தமே நிலையான ஆனந்த மாதலின், 'அலாது இலேன்' என்கிறார்.

### 7. 'அன்பருக்கு உரியன் ஆக்கிணுய்'

விச்ச(து) இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலைய னேனைஉன் கோயில் வாயிலிற்
பிச்சன் ஆக்கிணுய் பெரிய அன்பருக்(கு)
உரியன் ஆக்கிணுய் தாம்வ ளர்த்த ஓர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே.

—திருச்சதகம், 96.

என்னை அடிமையாக உடைய தலைவனே, நீ விண் ணுலகம் மண்ணுலகம் ஆகிய இவற்றை முழுவதையும் வித்து இல்லாமலே உண்டாக்குவாய்; (அவைகளைக்) காப்பாற்றி அழிக்கவும் செய்வாய்; வஞ்சனையை யுடைய பெரிய புலையனாகிய என்னை உன் (திருப்பெருந்துறை) கோயில் வாசலில் (அருள் புரிந்து உன்மேல்) பித்தனாக் கிணுய்; உன்னுடைய சிறந்த அடியார்களுக்கு என்னை உரியவனாகவும் செய்தாய். தம்மால் வைத்துப் பயிரிடப் பெற்றது ஒரு விஷ மரமே யானாலும், அதை வைத்தவர் களே வெட்ட மாட்டார்கள். நானும் அவ்வாறே. (நீ என்னையும் கைவிடல் தகாது.)

விச்சது........செய்குவாய்—ஆண்டவன் தன் இச்சை யொன்றினாலேயே (வேறொன்றையும் வேண்டாமலே) எத்தொழிலையும் செய்ய வல்லவன் என்றவாறு.

### 8. 'அழுதால் உன்னைப் பெறலாமே'

யானே பொய்என் நெஞ்சும் பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்(து) உறுமாறே.

—திருச்சதகம், 90.

நான் பொய் ஒழுக்கமுடையவன்; எனது நெஞ்சமும் வஞ்சகமானது; எனது அன்பும் போலியானது; ஆகவே, இப்படிப்பட்ட தீவினையை உடைய நான் அழுதால் உன்னைப் பெறலாம். தேனும் அமிர்தமும் கருப்பஞ்சாறும் போன்றவனே! அடியார்களுடைய மனத்தில் இனிக்கின்ற பெரியோனே! அடியேன் உன்னை வந்து அடையும்படி அருளவேண்டும்.

பொய்—இடையறுத் ஆழ்ந்த மெய்யன்பையே நோக்கமாகக் கொண்டுள்ள மணிவாசகப் பெருமான், இந்த அன்பின் தீவிரம் சிறிது குறைந்தாலும், தம்மைப் பொய்யன் என்கிறார். அழுதால்........பெறலாமே—ஆண்டவனை நினைந்து 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குதல்' அவனை அடைய ஓர் எளிய வழியாகும். இவ்விதம் அழுவார்க்குப் பொய்ம்மைகளெல்லாம் நீங்கி மெய்யன்பு உண்டாகும்.

### 9.

இருந்(து)என்னை ஆண்டுகோள் விற்றுக்கோள்
 [ஒற்றிவை என்னின்அல்லால்
விருந்தினனேனை விடுதிகண் டாய்மிக்க நஞ்(சு)அமுதா
அருந்தின னேமன்னும் உத்தர கோசமங் கைக்(கு)அரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே.

—நீத்தல் விண்ணப்பம், 18.

கொடுமை மிகுந்தவிடத்தை அமுதாய்க் கொண்டவனே, நிலைபெற்ற உத்தரகோச மங்கையில் எழுந்தருளியுள்ள தலைவனே, பிறவி நோயில் அகப்பட்டு முடங்கிக் கிடப்பவர்க்கு மருந்து ஆனவனே! என் எதிரில் எழுந்

தருளி யிருந்து என்னை ஆண்டுகொள், (அடிமையாக்கிக் கொள்.) (உன் உடைமையாகக் கருதி) விற்றுக்கொள்க, ஒற்றி வைத்துக்கொள்க என்று சொல்வது தவிர, (மற்றொன்று சொல்ல இடமில்லை); உன்னையே விருந்தாக வந்து அடைந்தவனைக் கைவிட்டு விடுவாயோ? (கைவிடாது காத்தருளவேண்டும்.)

## 10. 'அரும் பெரும் சோதி'

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து [போய்
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு)இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசுஏலோர் எம்பாவாய்.

—**திருவெம்பாவை, 1.**

முதலும் முடிவும் இல்லாத, அரிய பெரிய ஒளி உருவனை சிவபிரானை நாங்கள் புகழ்ந்து பாடுவதைக் கேட்டும், வாள் போன்றதும் அகன்றதுமான கண்களையுடைய பெண்ணே! நீ உறங்குகின்றாயோ? (அல்லது) உன் காதுகள் வலியனவோ (செவிடானவையோ)? மகா தேவனுடைய நீண்ட வீரக் கழல்களை யணிந்த திருவடிகளை (பக்தர்கள்) தெருவில் துதித்த துதிகளின் ஓசை (ஒருத்தி) (வீட்டிற்குள்) போய்க் காதில் வீழ்ந்ததும் ஏங்கி அழுது, தன்னை மறந்து, பூம்பள்ளிமீது புரண்டு இப்படி யாதொரு பொருளும் ஆகாமல் (மூர்ச்சித்துக்) கிடக்கின்றாள். (நீயோ, நாங்கள் வந்து உன் வீட்டு வாசலில் நின்று இறைவனுடைய புகழ்களைப் பாடுகிறபோது, அதைக் கேட்டும் நீ எழுந்திராமல் இப்படிப் படுத்துக் கிடக்கும்) இதுதான் எங்களுடைய தோழியாகிய உனது இயற்கையோ? இது என்ன வியப்பு! பாவை போன்றவளே! இதைக் கேட்டு ஆராய்வாயாக.

திருவண்ணுமலையில் மார்கழி மாதத்தில் பெண்கள் நீராடத் துயிலெழுப்பிச் செல்வதைக் கண்டு அடிகள் திருவெம்பாவையைப் பாடினர் என்ப. மும்மல இருளில் உறங்காமல் விழித்துப் பக்குவம் பெற்றவர் இறைவனது அருள் வெள்ளத்து முழுக வருக என்று அழைக்கும் உட்கருத்தை யுடையது இப் பிரபந்தம் என்பர் அறிஞர்.

யாம்....செவிதான் - இப்படி எழுப்பியும் அவள் எழ வில்லை; ஒருத்தி கதவின் இடைவெளி வழியாக உள்ளே பார்க்க, அங்கே அப்பெண் படுக்கையைவிட்டுப் புரண்டு தரையிலே கிடந்து உறங்குகிறுள்; அது கண்ட அவள் 'மாதேவன்....கிடந்தாள்' என்று நகையாடினுள்; அது கேட்ட ஏனைய சிறுமியர்கள் 'என்னே....பரிசு' என்று நகையாடினர்—இவ்வாறு பொருள் கொள்ளுதல் மிகவும் பொருத்தமாம்.

## 11. 'முன்னைப் பழம் பொருளே'

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிராளுகப் பெற்றஉன் சீர்அடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்(கு)அவர்க்கேபாங் [காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்(கு)எங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏல்ஓர் எம்பாவாய்.

—திருவெம்பாவை, 9.

(எல்லாவற்றுக்கும்) முந்தியதாகிய பழம் பொருளுக்கும் முந்தியதாகிய பழம் பொருளே! பின்னையதாகிய புதுப் பொருளுக்கும் மறுபடியும் அப்படிப்பட்ட புதியவனே! உன்னை இறைவனுகப் பெற்ற உன்னுடைய சிறப்பையுடைய அடியோம் (உன் சம்பந்தத்தால்) உன்னுடைய மெய்யடியார்களுடைய பாதங்களை வணங்குவோம். அவ்விதம் வணங்கியபடியே அவர்களுடைய பக்கத்தில் இருப்போம். அவர்களே எங்களுடைய கண

வர்கள் ஆவர்; அவர்கள் விரும்பிச் சொன்னவண்ணமே நாங்கள் அடியாராய்ப் பணி செய்யக் கடவோம்; எம் இறைவனே! எங்களுக்கு இந்த விதமாகக் கிருபை செய்வீராகில் எந்தக் குறையையும் உடையோம் அல்லோம்.

முன்னைப் பழம்........பெற்றியனே - பரமசிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவனாதலின், பழமைக்கும் பழமையானவன், புதுமைக்கும் புதுமையானவன் என்கிறார். சிவானந்தம் மற்ற இன்பங்களைப் போலல்லாது அனுபவிக்குந்தோறும் எப்போதும் புதிது புதிதாகத் தோன்றித் தெவிட்டாது இருத்தலின் புதுமையினும் புதுமை யென்கிறார். கணவர் - எல்லா வகையாலும் உரியார்.

## 12. 'உமக்கே அடைக்கலம்'

உம்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமேன்(று)
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்(கு)ஒன்று உரைப் போம்கேள்;
எம்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள்சேரற்க;
எம்கை உனக்(கு)அல்லாது எப்பணியும் செய்யற்க;
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க;
இங்(கு)இப் பரிசே எமக்(கு)எங்கோன்! நல்குதியேல்
எங்குஎழில்என்ஞாயிறு எமக்குஎல்லோர் எம்பாவாய்.

—திருவெம்பாவை, 19.

உமது கையில் உள்ள பிள்ளை உமக்கே அடைக்கலம். (உன் உடைமையைக் காப்பது உனக்கே உரியது.) என்னும் அந்தப் பழமொழியைப் புதியதாக்குகின்ற (நாங்களும் உன்னைச் சேர்ந்தவர்களே என்கின்ற) எமது பயத்தினால், எமது தலைவனே! உன்னிடம் ஒரு வார்த்தை சொல்வோம், கேட்டருள்வாயாக. எமது சரீரம் உன் அடியார் அல்லாதாருடைய தோள்களைத் தழுவாமல் இருக்கட்டும்; எமது கைகள் உனக்கே யல்லாமல் (வேறு எவருக்கும்) எந்தக் குற்றேவலும் செய்யாதிருக்கட்டும்; எமது கண்கள் இரவும் பகலும் (உன்னைத் தவிர) மற்றொருவரையும் காணாமல் இருக்கட்டும்; இங்கே, இந்த

திருவண்ணாமலையில் பெண்கள் அம்மானை யாடுவதைக்கண்டு அடிகள் இப்பதிகம் பாடினார் என்ப.

### 14. 'பந்தமுமாய் வீடும் ஆயினார்'

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமும் ஆய்இன்பம் ஆயினார்க்கு
பாதியும் ஆய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமும் ஆய்வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

—திருப்பொற்சுண்ணம், 20.

(நான்கு) வேதங்களும் (அவற்றில் சொல்லப்படும்) யாகங்களும் ஆனவருக்கு, மெய்ம்மையும் (அதற்குமாறான) பொய்ம்மையும் ஆனவருக்கு, ஒளியும் (அதற்கு மாறான) இருளும் ஆனவருக்கு, துக்கமும் (அதற்கு மாறான) இன்பமும் ஆனவருக்கு, பாதியும் (அதற்கு மாறான) முழுதும் ஆனவருக்கு, பந்தமும் (அதற்கு மாறான) வீடும் ஆனவருக்கு, முதலும் (அதற்கு மாறான) இறுதியும் ஆனவருக்கு, ஆடுதற் பொருட்டு நாம் பொற்சுண்ணம் இடிப்போமாக.

பொற்சுண்ணம் - விழாக்களில் மக்கள் உடலின்மீது தூவப்படும் பரிமளச் சுண்ணம். பொற் சுண்ணம் இடித்தல் - வாசனைப் பண்டங்கலந்து மஞ்சள் இடிக்கையாகிய ஒரு சடங்கு. தில்லைவீதியில் பெண்கள் பொற் சுண்ணம் இடித்தல் கண்டு அடிகள் பாடியது இப்பிரபந்தம். சத்திகளால் தனுகரண புவன போகங்களை இறைவனுக்குச் சுண்ணமாயிடிக்கக் கூவுதலே உட்கருத்தாக உடையது என்பர் அறிஞர்.

### 15. 'ஆனந்தத் தேன்சொரியும் குனிப்புடையான்'

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தோறுங் காண்தோறும் பேசுந்தோறும் எப்போதும்

விதமாக, எமது இறைவனே! நீ அருளுவாயாகில் சூரியன் எந்தத்திசையில் உதித்தால்தான் எங்களுக்கு என்ன?

உங்கையில்.......அடைக்கலம் - தாய் மடியிலுள்ள ஒரு சிறு குழந்தைக்குத் தாயே அதற்கு வேண்டியவற்றை யெல்லாம் வேண்டும்போது நினைந்து செய்வதைத் தவிர, அக் குழந்தை தானாக ஒன்றும் செய்வதில்லை; அது போல், எனக்கு வேண்டியவற்றை யெல்லாம் நீயே நினைந்து செய்.

எழில் என் ஞாயிறு

**' வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்**
**தானந் துளங்கித் தலை தடு மாறிலென் தண் கடலும்**
**மீனம்படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு**
**ஊனம் ஒன்று இல்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே.'**

—அப்பர்.

## 13. 'ஆடுவான் சேவடியே பாடுதும்'

சூடுவேன் பூங்கோன்றை; சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன்; கூடி முயங்கி மயங்கிநின்(று)
ஊடுவேன்; செவ்வாயக்(கு) உருகுவேன்; உள்உருகித்
தேடுவேன்; தேடிச், சிவன்கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனல்ஏந்தி
ஆடுவோன் சேவடியே பாடுதுங்காண், அம்மானாய்!

—திருவம்மானை, 17.

நான் கொன்றைப் பூ மாலை அணிவேன்; அணிந்து சிவபெருமானுடைய திரண்ட திருத்தோள்களைக் கூடித் தழுவுவேன்; (அப்படித்) தழுவி, புணர்ந்து, மயங்கி நின்று அவரோடு பிணங்குவேன்; அவருடைய சிவந்த வாய்க்கு மனம் உருகுவேன்; (அப்படி) மனம் உருகி அவரைத் தேடுவேன்; (அப்படித்) தேடி, சிவபெருமானுடைய திருவடிகளையே நினைப்பேன்; (நினைத்து) வாட்டம் அடைவேன்; மறுபடியும் சந்தோஷப்படுவேன். (இப்படி அனுபவிக்கும் என்னோடு நீ கூடுவையானால்) நெருப்பைக் கையில் கொண்டு ஆடுகின்ற சிவபிரானுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடுவோம், அம்மானாய்!

அனைத்தேலும்(பு) உள்நேக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்(று) ஊதாய் கோத்தும்பீ.
—திருக்கோத்தும்பி, 3.

*தினை அளவாய் இருக்கும் ஒரு பூவில் உள்ள தேனைக் குடியாமல், நினைக்குந்தோறும், பார்க்குந்தோறும் சொல்லுந்தோறும், மற்றும் எக்காலத்தும் எல்லா எலும்புகளும் உள்ளே உருகும்படி, பேரின்பத் தேனைச் சொரிகின்ற கூத்து உடையவனுக்கேபோய் ஊதுவாய், தலைமையான வண்டே.*

*அற்ப உலக இன்பங்களை விட்டுப் பேராநந்தத்தை நாடு என்று மனதிற்கு உபதேசம் செய்தவாறு.*

## 16. ‘மயக்கறுத்த கருணைக் கடல்’

கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தானெனக்கு [த்த
மரணம் பிறப்புஎன்(று) இவைஇரண்டின் மயக்(கு) அறு
கருணைக் கடலுக்கே சென்(று)ஊதாய் கோத்தும்பீ!
—திருக்கோத்தும்பி. 9.

*(அகக்கரணம் புறக்கரணம் என்ற) எல்லாக் கரணங்களையும் தாண்டி நின்று அருளும் நீலநிறமான கழுத்தையுடையவனுடைய திருவடிகளையேபோய் அடைந்தவுடன், தானே எனக்கு இருந்த இறப்பு பிறப்பு என்னப்படும் இந்த இரண்டின் மயக்கத்தைப் போக்கியருளிய கருணைக் கடலுக்கே சென்று ஊதுவாயாக, சிறந்த வண்டே.*

*மலர்கட்கிடையே தேனைத் தேடித் திரிந்து சென்ற வண்டைக்கண்டு, தில்லையில் அடிகள் இப்பதிகம் பாடினார் என்ப. போதத்தை வண்டாகக் கருதிச் சித்தவிகாரத்தை அறிவிக்கத் தூதாகச் சொல்லவிடும் உட்கருத்தை யுடையது என்பர் அறிஞர்.*

## 17. ‘செயல் மாண்டவா பாடி’

கயல் மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந்(து) ஆண்
டலுமே [மேல்
அயல்மாண்(டு), அருவினைச் சுற்றமும்மாண்டு அவனியின்

மயல்மாண்டு மற்று(உ)ள்ளவாசகம்மாண்(டு) என்னுடைய்
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.
—திருத்தெள்ளேணம், 11.

*கயல்மீன் போன்ற மாட்சிமையுடைய திருக்கண்களை உடைய உமாதேவியாரைத் தனது உடலில் ஒரு பாகத்தில் கொண்டருளிய சிவபெருமான் அடியேனை வலிய வந்து கூடி ஆட்கொண்டருளியதும், அயலாரும் அரிய வினைத்தொடர்பால் வந்த சுற்றத்தாரும் உலகத்தில் உள்ள ஆசையும், வேறுள்ள சொற்களும், எனது செய்கைகளும் அழிந்துபோன விதத்தைப் பாடி, தெள்ளேணம் கொட்டுவோமாக.*

*தெள்ளேணம் - கைகொட்டிப் பாடியாடும் மகளிர் விளையாட்டு வகை. ஆண்டவன் கருணையினால் அன்பர்களைக் கலந்து ஆட்கொண்டு விட்டால், தம்மை இறைவனுக்கு அன்னியமாக நினைக்கும் நினைவு நீங்கும்; உலகப் பற்றுக்கள் எல்லாம் ஒழியும்; ஆனந்தப் பரவசத்தினால் உலக சம்பந்தமான பேச்சுக்களும் செயல்களும் இயலாதவையாகும்; சுருங்கச்சொல்லில், தற்போதம் (தான் என்ற உணர்ச்சி) ஒழிந்து, சிவபோதம் (எல்லாம் சிவன் செயல் என்ற உணர்ச்சி) தலையெடுக்கும். சிவஞானம் மிகுந்து, அதனால் பேரின்பத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்து அடியார் ஆடிப்பாடலே உட்கருத்தாக உடையது என்பர் அறிஞர்.*

## 18. 'எவ்வுயிர்க்கும் இயல்பானன்'

பூசுவதும் வெண்ணீறு; பூண்பதுவும் பொங்(கு)அரவம்;
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்(டு)என்னை
ஈசன்அவன் எவ்வுயிர்க்கும் இயல்புஆனன் சாழலோ.
—திருச்சாழல், 1.

*இறைவன் தனது திருமேனியில் பூசிக் கொள்வது திருவெண்ணீறாகும்; ஆபரணமாக அணிவது சீறுகின்ற பாம்பு ஆகும்; திருவாயால் பேசுவதும் வேதங்களாம்.*

முகத்தில் (உண்டாகும்) எமக்கு அருளைச்செய்கிற அழகிய புன்முறுவலை ஏற்றுக்கொண்டு உன் திருவடிகளைத் தொழு வோம், (தொழச் சித்தமா யிருக்கிறோம்); சேற்றில் வள ரும் இதழ்களோடு கூடிய தாமரைப் பூக்கள் மலர்கின்ற குளிர்ந்த வயல்களால் சூழப்பெற்ற திருப்பெருந்துறை யில் உறைகின்ற சிவபெருமானே! உயர்ந்த ஏற்றுக் கொடியை உடையவனே! என்னை ஆண்டு கொண்ட வனே! எம்பிரானே! பள்ளி யெழுந்தருள்வீராக.

உன்னுடைய திருவடித் தாமரைகளுக்கு ஏற்றவாறு மென்மையும் இனிமையும் நறுமணமும் உடைய பூக்களைக் கொண்டு திருவடிகளை உள்ளன்போடு வணங்கி, உன் திருமுகத்தை நோக்குதலும், அதில் தோன்றும் அருள் நிறைந்த புன் முறுவலில் ஈடுபட்டு, வேறு பயனைக் கருதாது தொழக் காத்திருக்கிறோம், எழுந்தருள்வீராக, என்கிறார்.

## 20. 'எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே'

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருஉரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்(டு) இங்(கு)எழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

—திருப்பள்ளியெழுச்சி, 7.

அது பழத்தின் ரசம் எனவும் அமுதம் எனவும் (ஆணவத்தோடு கூடிய) அறிவுக்கு எட்டாதது எனவும், (மெய்யன்புக்கு) சுலபமானது எனவும் தேவரும் அறி யார்கள்; இது அவனது திரு உருவம், இவனே அவன் என்று சொல்லும்படியாக (கண்காண) எழுந்தருளி யிருக்கின்ற, தேன் பெருகுகின்ற சோலைகளையுடைய திரு உத்தரகோச மங்கையில் கோயில்கொண்டிருப்பவனே,

இது என்ன புதுமை! (எம் இறைவன்) பூசுவதையும் பேசுவதையும் பூண்பதையும்பற்றிப் பேசி என்ன பயன்? அவன் இறைவன்; எல்லா உயிர்களுக்கும் ஏற்ற பயன் அளிப்பவனுவான், சாழலோ.

சாழல் - பழைய காலத்து மகளிர் விளையாட்டு வகை; முன் இரண்டடிகள் வினவாகவும் பின் இரண்டடிகள் விடையாகவும், அவ்விடையின் முடிவில் 'சாழலோ' என்ற சொல்லுடையதாகவும் வரும் பாடல்களையுடைய பிரபந்தம். மாணிக்கவாசகர் புத்தனை வாதில் வெல்ல வந்தபோது, புத்தன் கேட்கும் வினக்கட்கு ஊமையாயிருந்த புத்த அரசனது பெண்ணை விடைகூறச் சொன்னுர் என்பது வரலாறு. புத்தன் வினவை முதல் இரண்டு அடியிலும், ஊமைப் பெண்ணின் விடையைப் பின் இரண்டு அடியிலும் காண்க. பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் முக்கியமானவை யல்ல; பரமசிவன் இறைவனுயும், எல்லா உயிர்கட்கும் தக்க பயனை அளிப்பவனுயும் உள்ளான் என்பதே அறிதற்குரியது என்பது கருத்து.

## 19. 'என் வாழ் முதல் ஆகிய பொருளே'

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்(கு) இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்(து) எமக்(கு)அருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்(று)இதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்று(உ)யர் கொடிஉடை யாய்எனை உடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

—திருப்பள்ளியெழுச்சி, 1

எனது வாழ்வுக்குக் காரணமான பொருளே. உனக்கு வணக்கம். (இப்போது) பொழுது விடிந்துள்ளது; (உனது) தாமரைப் பூப் போன்ற திருவடிகளுக்கு ஏற்றவையான (தமக்குத் தாமே) ஒப்பாகிய (ஒப்பற்ற) பூக்களைக் கொண்டு அருச்சித்து (அதனல்) உனது திரு

எங்களைப் பணிகொள்ளும் வழி யாது, அதனைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம், எம்பெருமானே எழுந்தருள்வாயாக.

### 21, 'உயிர்க்கு இரங்கி அருளாய்'

நல்காது ஒழியான் நமக்(கு)என்றும்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தால்
நினைந்(து) (உ)ருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப்
பொன்னம் பலம்என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்(கு)இரங்கி
அருளாய் என்னை உடையானே.

—கோயில் மூத்த திருப்பதிகம், 10.

நமக்கு அருள் புரியாது இருக்கமாட்டான் என்று நிச்சயித்து, உனது திருநாமத்தை (அன்பு வசப்பட்டு) அடைவு கெடவாயினும் பிதற்றி, கண்களில் நீரை நிறைத்து, வாழ்த்தி, வாய்குழறி, வணங்கி, மனத்தினால் நினைந்து உருகிப் பலகாலும் உன்னையே சிந்தனை செய்து துதித்து, பொன்னம்பலம் என்றே வாடுகிற எனது உயிருக்கு இரங்கி யருளவேண்டும், என்னை உடைய இறைவனே!

வாதவூரடிகள், தம்மை ஆட்கொண்ட சிவபெருமான் தமக்கு அருளுவது திண்ணம் என்று நம்பி, அவருடைய நாமத்தைச் சொல்லிக் கண்ணீர் சொரிந்து வாழ்த்தி வணங்கி- உள்ளம் உருகித் தீவிரமாகப் பல கால் நினைந்து, இடையறாது பொன்னம்பலமே யென்று வாடித் தவிக்கும் தம்மைத் தாமதமின்றி நித்திய அடியார் திருக் கூட்டத்திலே சேர்த்துக்கொண்டு அருளுமாறு பரிந்து வேண்டுகிறார். பிதற்றல், வாய் குழறல் - இவை அன்பு மேலீட்டால் நிகழ்வன.

## 22. 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்'

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
　　உடையாள் நடுவுள் நீஇருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
　　தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
　　புரியாய் பொன்னம்பலத்(து)எம்
முடியா முதலே என்கருத்து முடியும்
　　வண்ணம் முன்நின்றே.

—கோயில் மூத்த திருப்பதிகம், 1.

*உமையவள் உன்னிடையே இருப்பாள், உமையவளிடையே நீ இருக்கிறாய். அடியேனிடையே (உள்ளத்திலே) நீங்கள் இருவரும் எழுந்தருளி யிருப்பதானால், பொற்சபையில் உள்ள எமது முடிவற்ற முதற்பொருளே, என் கருத்து நிறைவேறும்படி என் எதிர் நின்று அடியேன் உன் அடியார் நடுவே இருக்கும்படி அருள்செய்வாயாக.*

*உடையாள்........இருத்தி - சிவமும் சக்தியும் எங்கும் ஒன்றாகக் கலந்திருக்குமாகையால்.*

## 23. 'நின் தன்மை நினைப்பற நினைந்தேன்'

இன்(று)எனக்(கு) அருளி இருள்கடிந்(து) உள்ளத்(து)
　　எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
　　நீஅலால் பிறிதுமற்(று) இன்மை
சென்றுசென்(று) அணுவாய்த் தேய்ந்துதேய்ந்(து) ஒன்றாம்
　　திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்று(ம்) நீஅல்லை அன்றிஒன்(று) இல்லை
　　யார்உன்னை அறியகிற் பாரே.

—கோயில் திருப்பதிகம், 7.

*திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! இப்போது நீ எனக்கு அருள்புரிந்து அஞ்*

ஞானமாகிய இருட்டை அகற்றி, மனத்தில் உதிக்கின்ற சூரியனையே ஒத்து நின்ற உன்னுடைய இயல்பை நான் நினையாமல் நினைந்தேன்; உன்னைத் தவிர வேறு ஒரு பொருளும் இல்லையாம்படிப் போய்ப்போய், அணு உருவமாகித் தேய்ந்து தேய்ந்து ஒரு ரூபமாகின்றனை. நீ ஒரு பொருளும் அல்லை. உன்னையன்றி ஒரு பொருளும் இல்லை. உன்னை உள்ளபடி அறிய வல்லவர் யாவர்?

நினைப்பற நினைப்பது, நினைவுக்கு அப்பாற்பட்ட போதம். ஒன்று நீ அல்லை, அன்றி ஒன்றில்லை - சிவபெருமான் எல்லாப் பொருள்களோடும் கலந்தும் கடந்தும் இருப்பவன்.

## 24. 'யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே'

தந்தது(உ)ன் தன்னைக் கொண்ட(து)என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம்ஒன்(று) இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதுஒன்(று) என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடல்இடங் கொண்டாய்
யான்இதற்(கு) இலன்ஓர்கைம் மாறே.

—கோயில் திருப்பதிகம், 10.

சங்கரனே! எனக்கு (மிகப் பெரியோனான) உன்னைத் தந்திருக்கிறாய்; (அதற்குப் பண்ட மாற்றாக) மிகச் சிறியேனான என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறாய். (இந்த விஷயத்தில் நம் இருவரில்) யார் சாமர்த்தியசாலி? முடிவு என்பதே இல்லாத இன்பத்தை உன்னிடமிருந்து நான் அடைந்திருக்கிறேன். (இதற்கு ஈடாக) நீ என்னிடமிருந்து பெற்றுக்கொண்ட பொருள் யாது? எனது நெஞ்சையே கோயிலாகக் கொண்ட எம்பெருமானே! திருப்பெருந் துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானே! எனது தந்தையே! ஈசனே! நீ உன் உடம்பையே இடமாகக் கொண்டிருக்கிறாய். இந்த உபகாரத்துக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றுமே இல்லை.

சங்கரா - நன்மை செய்பவனே ; ஒன்றையும் எதிர் பாராது அருள் காரணமாகவே உயிர்கட்கு நன்மையைச் செய்தல் ஆலத்தை அமுதமாகக் கொண்ட பெருமானது இயற்கை. இலன் ஓர் கைம்மாறே - என்னையே கொடுத்து விட்டபின், வேறு ஒன்றும் கொடுப்பது இயலாது என்பது கருத்து.

## 25. ' அடியாரிற் கூட்டிய அதிசயம் '

பித்தன் என்(று)எனை உலகவர் பகர்வதோர்
 காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும்
 உபாயம் அ(து) அறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற்(கு)
 ஒருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
 அதிசயங் கண்டாமே. —அதிசயப் பத்து, 4.

கேட்பீராக ; மனம் இசைந்து போய் இறைவனது திருவருளைப் பெறுதற்கு உரிய உபாயத்தை அறியாமல் (பிறவிப் பயன் அடையாது) செத்துப் போய் (சகித்தற்கு) அருமையான நரகத்தில் வீழ்ந்து வருந்த இசைகின்ற என்னை எனது தந்தையாகிய சிவபெருமான் ஆண்டருளி, தன் அடியாரோடு சேர்ந்த அதிசயத்தைக் கண்டோம் அல்லவா? பித்தன் என்று என்னைச் சொல்வதற்கு ஒரு காரணமா யிருந்தது இதுவே.

## 26. ' புக்குநிற்பது என்று கொல்லோ '

நெக்கு நெக்குள் உருகி உருகி
 நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
 நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்

செக்கர் போலுந் திருமேனி
திகழ் நோக்கிச் சிலிர் சிலிர்த்துப்
புக்கு நிற்ப(து) என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே
—*புணர்ச்சிப் பத்து*, 8.

*மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து, உருகி உருகி, நின்றும் இருந்தும், படுத்தும், எழுந்தும், சிரித்தும், அழுதும் தொழுதும் துதித்தும் பல வகையால் கூத்தாடி, செவ்வானம் போன்ற திருமேனி பிரகாசிக்கப் பார்த்து, மயிர் சிலிர்த்து, அடைந்து (இரண்டறக் கலந்து) நிற்பது எப்போதோ, எனது முழு மணியைச் சேர்ந்து.*

*உருகுதல் இருத்தல் கிடத்தல் ஆகிய செயல்கள் பிரிவாற்றுமையாலும், எழுதல் நகுதல் அழுதல் (ஆனந்தக் கண்ணீர் சொரிதல்) தொழுதல் வாழ்த்தல் கூத்தாடல் மெய் சிலிர்த்தல் ஆகிய செயல்கள் காட்சியால் விளையும் ஆனந்தத்தாலும் நிகழ்வனவாம்.*

### 27. ‘*உலகில் வாழ்கிலேன் கண்டாய்*’

பாரோடு விண்ணுய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்(று)இலேன் கண்டாய்
சீரோடு பொலிவாய் சிவபுரத்(து) அரசே
திருப்பெருந் துறைஉறை சிவனே
யாரோடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்டநீ அருள்இலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன்(று) அருள்புரி யாயே.—*வாழாப்பத்து*, 1.

*பூமியோடு ஆகாசமுமாய் எங்கும் பரந்த எம் ஈசனே! உன்னைத் தவிர வேறு பற்று எனக்கு இல்லை. சிறப்போடு விளங்குகின்றவனே! சிவபுரத்துக்கு அரசனே! திருப்பெருந் துறையில் உறையும் சிவபெருமானே! என்னை ஆட்கொண்ட நீயே எனக்கு அருள் செய்யாவிட்டால், நான் யாரிடம் இதைச் சொல்லி நொந்து கொள்வேன்? இதை யாருக்கு எடுத்துச்*

சொல்லுவேன்? முறையிடுவேன்? பெரிய கடல்சூழ்ந்த உலகத்தில் நான் உயிர் வாழ்கிலேன். ஆதலால் என்னை 'வருக' என்று அழைத்து நீ அருள் புரியவேண்டும்.

வாழ்கிலேன் - காதல் மேலீட்டினால் எழும் பிரிவாற்றாமையாலும், ஆண்டவனைக் கூடும் பேரவாவாலும் உயிர் தரித்தல் இயலாது என்கிறார்.

## 28. 'அஞ்சேலுமே என்று அருளாயே'

துப்பனே தூயாய் தூயவெண் நீறு
துதைந்(து)எழு துளங்(கு)ஒளி வயிரத்(து)
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித்(து) அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. —அருட்பத்து, 6.

பவளம் போன்றவனே! பரிசுத்தமானவனே! பரிசுத்தமான திருவெண்ணீறு படிந்ததனால் உண்டாகிய விளங்குகிற ஒளியையுடைய வயிரத்தைப் போன்றவனே! உன்னை நினைப்பவர்களுடைய மனத்தில் மிக்க சுவையைக் கொடுக்கும் அரிய அமிர்தமே! சிறந்த வேதங்கள் முழங்குகின்ற திருப்பெருந் துறையில் வளப்ப மிகுந்த பூக்களையுடைய குருந்த மரத்தடியில் அமர்ந்தருளிய சிறப்புற்ற தந்தையே! அடியேன் உன்னை விரும்பி அழைத்தால் 'அஞ்சாதே' என்று அருள் செய்ய வேண்டும்.

## 29. 'திருக்கோலம் நீ வந்து காட்டினாய்'

பிணக்(கு)இ லாதபெ ருந்து றைப்பெரு மான்உன்
நாமங்கள் பேசுவார்க்கு
இணக்(கு) இலாததோர் இன்ப மேவருந் துன்ப
மேதுடைத்(து) எம்பிரான்

உணக்(கு)இ லாதலர் வித்து மேல்விளை யாமல்
என்வினை ஒத்தபின்
கணக்(கு)இ லாத்திருக் கோலம் நீவந்து காட்டி
னாய்க்கழுக் குன்றிலே.

—திருக்கழுக்குன்றப் பதிகம், 1.

*மாறுபாடு இல்லாத திருப்பெருந்துறைப் பெருமானே, உன் திருநாமங்களை உச்சரிப்பவர்க்கு ஒப்பு இல்லாததாகிய இன்பமே வரும்; துன்பங்களை ஒழித்து எம்பெருமானே, உலராத (முளைக்கும் தன்மை குன்றாத) ஒப்பற்ற (பிறவி) விதையானது இனிமேல் முளையாதபடி (இனிமேலும் பிறவிக்கு உள்ளாகாதபடி) என் இருவினைகள் ஒத்து வந்தபின்பே, நீ திருக்கழுக்குன்றிலே எழுந்தருளி, அளவற்ற திருக்கோலங்களைக் காட்டி அருளினாய்.*

*இருவினை யொத்தலாவது, நல்வினை தீவினைகளின் பலனாகிய சுக துக்கங்களைச் சமமாகப் பாவித்தலாகிய நிலையாகும்.*

## 30. ‘கோதில் அமுதானன்’

சாதிகுலம் பிறப்(பு)என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல்அறுத்து ஆட்கொண்டு [துக்
பேதைகுணம் பிறர்உருவம் யான்என(து)என் உரைமாய்த்
கோதில்அமு(து) ஆனானைக் குலாவுதில்லை கண்டேனே.

—*கண்ட பத்து*, 5.

*சாதி, குலம், குடிப் பிறப்பு என்னும் சுழலில் அகப்பட்டுத் தடுமாறுகின்ற கதியற்றவனான, எளியேனான என்னை, துன்பத்தைப் போக்கி ஆட்கொண்டருளி, பேதைக் குணத்தையும் இதர தேவதைகளின் தரிசனத்தையும், ‘நான்’, ‘எனது’ என்கிற எண்ணங்களையும் போக்கி, குற்றமில்லாத அமிர்தம் ஆகியிருப்பவனை, விளங்குகிற தில்லை நகரில் கண்டு கொண்டேன்.*

*சாதி குலம் பிறப்பு இவைகள் காரணமாக வருகின்ற உயர்வு தாழ்வுகளைப் பற்றிய எண்ணங்களும், எல்லா*

உருவங்களும் சிவ ரூபங்கள் என்பதை உணராது வேற்றுமை பாராட்டும் புத்தியும், அகங்கார மமகாரங்களும் பேதமையுள் அடங்கும்.

### 31. 'அடியேன் இடர்களைந்த அமுதே'

வேண்டும் வேண்டும் மெய்யடியார் உள்ளே
விரும்பி எனைஅருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே
அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடர்அனையாய் தொண்ட
னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா(து) ஒன்றும் வேண்டாது மிக்க
அன்பே மேவுதலே.

—*பிரார்த்தனைப் பத்து, 4.*

உன்னையே பலகாலும் விரும்புகிற மெய்யடியார் நடுவே எளியனான என்னைப் பெருங்கருணையால் விரும்பி ஆண்டருளினவனே, அடியேனது துன்பத்தை ஒழித்த அமுதமே, அரிய பெருமை பொருந்திய இரத்தினமாகிய முத்தே, தூண்ட வேண்டாத தீபச்சுடரைப் போன்றவனே, (அவசிய மில்லாமையால்) வேண்டாமலும், யாதொரு வரமும் வேண்டும் என்ற எண்ணமும் எழாமலும், மிக்க அன்பையே பொருந்துதல் தொண்டனாகிய எனக்கும் உண்டாகுமோ ?

வேண்டாது, ஒன்றும் வேண்டாது - மெய்யன்பல்லாத, விரும்பத்தகாததாகிய ஒரு பொருளையும் விரும்பாமல்.

### 32. 'என்தான் கெட்டது இரங்கிடாய்'

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எங்கோவே

குன்றே அனைய குற்றங்கள் குணமா
மேன்றே நீகோண்டால்
என்தான் கெட்ட(து) இரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே.

—குழைத்த பத்து, 3.

*ஒன்றுக்கும் உதவாத கடைப்பட்ட என்னை உய்விக்க முன்னமே ஆட்கொண்ட உனது அருள் இப்போது இல்லாமல் போய்விட்டதோ? உமாதேவியைச் சரீரத்தில் கொண்டவனே! எமது இறைவனே! மலைபோன்ற குற்றங்களையும் குணங்களே என்று நீ மனத்தில் கொண்டு அருளினால் அதனால் உனக்கு என்னதான் கெடுதிவந்து விடும்? எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடைய எனது இறைவனே! எனக்கு இரங்கி அருள வேண்டும்.*

## 33. 'வேண்ட முழுதும் தருவோய் நீ'

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்(கு) அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகோண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே
வேண்டின்அல்லால்
வேண்டும் பரி(சு)ஒன்று(உ)ண்(டு)என்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

—குழைத்த பத்து, 6.

*(யாம்) விரும்பத் தகுந்தது இன்னது என்பதை அறிபவன் நீயே; (யாம் தக்கதை அறிந்து) வேண்டும் போது முழுவதையும் தருகின்றவன் நீயே. (ஆணவத் தோடு காண) முயன்ற பிரம்மனுக்கும் விஷ்ணுவுக்கும் காண அருமையானவன் நீ. (வலிய வந்து) விரும்பி என்னை (அருளால்) அடிமை ஆக்கிக் கொண்டாய். (மனம்) விரும்பி நீ எதனை அருள் செய்வாயோ அதனையே நானும் (பெற) விரும்புவதல்லாது, (எனக்காக) வேண்*

### 35. 'எனை நான் என்பது அறியேன்'

எனைநான்என்ப(து) அறியேன்பகல் இர(வு)ஆவதும் [அறியேன்
மனவாசகங் கடந்தான்எனை மத்தோன்மத்த னாக்கிச்
சினமால்விடை உடையான்மன்னு திருப்பெருந்துறை [உறையும்
பனவன்எனைச் செய்தபடி(று) அறியேன் பரஞ்சுடரே.

—உயிருண்ணிப்பத்து, 3.

*பரஞ்சோதியே! நான் என்னும் உணர்ச்சி மறந்து போயிற்று; பகல் இரவு இவைகள் வருதலையும் உணரவில்லை; மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத இறைவன் என்னைப் பெரும் பித்தன் ஆக்கி, கோபத்தையுடைய பெரிய ரிஷபத்தை ஏறுபவன், திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கிற வேதியன் எனக்குச்செய்த மோசத்தை நான் அறிந்திலேன்.*

*தன்னை மறத்தல், இரவு பகல் அறியாமை, மதோன்மத்தனாதல் - இவை சிவானந்த மேலீட்டினால் உண்டாவன. படிறு - யான் அறியாது அவன் செய்த திருவிளையாடல்.*

### 36. 'அம்ம நாம் அஞ்சுமாறே'

கோள்நிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீள்நிலா அணியி னானை நினைந்துநைந்(து) உருகிநெக்கு
வாள்நிலாம் கண்கள் சோர வாழ்த்திநின்(று) ஏத்தமாட்டா
ஆண்அலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சும்ஆறே.

—அச்சப்பத்து, 10.

*கொலைத்தன்மை பொருந்திய அம்புக்கு நான் பயப்படமாட்டேன்; எமனுடைய கோபத்துக்கும் நான் அஞ்சமாட்டேன்; நீண்ட பிறைச்சந்திரனைத் தலையில் அணிந்து கொண்ட சிவபெருமானை எண்ணி எண்ணி, மனம்கசிந்து உருகி, நெகிழ்ச்சியடைந்து, ஒளிபொருந்திய கண்களில் நீர் வடியும்படி, துதித்து நின்று புகழமாட்டாத ஆண்*

டும் வரம் ஒன்று உண்டு என்றால், அதுவும் உன் விருப்பமே (உன் திருவுள்ளப்படி ஆகட்டும் என்பது ஒன்றே) அல்லவா.

வேண்டும் பரிசு........அன்றே - அன்றே (என் வசமின்றி) யான் எதையேனும் விரும்புந்தன்மை என்னிடம் உண்டாகுமாயின், அதுவும் உன் திருவுளப்படியே உண்டாயிற்று என்பதே உண்மையன்றோ, எனினுமாம்.

## 34. 'நானோ இதற்கு நாயகமே'

அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்(று) ஓர் இடையூ(று) எனக்(கு) உண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே. —குழைத்த பத்து; 7.

மலையைப்போலக் கம்பீரமாக இருப்பவனே! என்னை நீ ஆண்டுகொண்ட அக்காலத்தில் தானே என் உயிரையும் உடலையும் மற்றுள்ள எல்லாப் பொருள்களையும் நீ ஏற்றுக் கொண்டு விடவில்லையோ? இப்போது எனக்கு இடையூறு ஏதேனும் உளதோ? எட்டுத்தோள்களையும் மூன்று கண்களையும் உடைய எனது இறைவனே! நீ எனக்கு நல்லவற்றைச் செய்தாலும் செய்; அல்லது தீமையைச் செய்தாலும் செய். அதை ஆராய நான் அதிகாரி அல்லேன்.

திருப்பெருந்துறையில் நீ என்னை ஆட்கொண்ட போதே, என் உடல்பொருள் ஆவி எல்லாம் உன்னுடைய உடைமைகளாய் விட்டன; ஆதலால் உடைமைக்கு ஏற்படும் நன்மை தீமைகள் யாவும் உடையவனையே சேருமல்லாது, உடைமையைச் சேரா. (அதற்கு யாதொரு சம்பந்தமுமில்லை) என்பது கருத்து.

தன்மையை உடையரல்லாதவரைக் கண்டால் நாம் பயப்படுவோம்.

கொடிய அம்புக்கும் யமனுக்கும் சற்றும் பயமில்லை; ஆனால் ஆண்டவனுக்கு அடியார்கள் அல்லாதவரைக் கண்டாலே மனம் நடுங்குகிறது என்கிறார். ஆண் அலாதவர் - மானிடப் பதரானவர், பிறவிப்பயனைப் பெறாதவர், அடியாராகாதவர்.

## 37. 'அன்பினில் விளைந்த ஆரமுதே'

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்(கு) எழுந் தருளுவ(து) இனியே.

—பிடித்த பத்து, 3.

தாயே! தந்தையே! உவமை இல்லாத மாணிக்கமே! அன்பாகிய கடலில் உண்டான அரிய அமுதமே! பொய்யை அதிகமாகச் சொல்லிப் பொழுதை வீணாகக் கழிக்கின்ற பயனற்ற இழிவானவனுக்கு மிகச் சிறந்ததாகிய சிவபதத்தைக் கொடுத்தருளிய செல்வனே! சிவபெருமானே! இந்தப் பிறவியிலேயே உன்னை உறுதியாகப் பற்றினேன். இனிமேல் நீ எழுந்தருளுவது வேறே எந்த இடத்துக்கு (எவ்வாறு)?

## 38. 'உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்'

பால்நினைந்(து) ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்(பு) இலா ஆனந்தம் ஆய

தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்(கு) எழுந் தருளுவ(து) இனியே.

—பிடித்த பத்து, 9.

(தன் குழந்தைக்குக்) காலம் அறிந்து பாலை ஊட்டு கிற தாயைக் காட்டிலும் அதிகமாகப் பரிவு கொண்டு நீ பாவியேனுகிய எனது உடலை உருகச் செய்து, மனத்தில் ஞானமாகிய ஒளியை அதிகமாக உண்டாக்கி, அழிவில் லாத இன்பமாகிய தேனைச் சொரிந்து (நான்) போகுமிட மெல்லாம் கூடத்திரிந்த செல்வனே! சிவபெருமானே நான் உன்னைப் பின்தொடர்ந்து உறுதியாகப் பற்றியுள் ளேன். இதன்மேல் நீ எழுந்தருளுவது எங்கே?

பால் நினைந்து........தாய்-அழுத போது குழந்தைக் குப் பால் ஊட்டுவோம் என்று இராது தாய் தக்க காலத்துப் பால் ஊட்டுவது போல், ஆண்டவன் தனது அருமைக் குழந்தைகட்கு வேண்டியவற்றையெல்லாம் (அவர்கள் கேளாமலே) தானுக அறிந்து செய்வான். சாலப் பரிந்து - தாய் தனது பரிவால் ஒரு பாவமும் அறியாத குழந்தைக்குப் பால் ஊட்டுகிருள்; அந்தப் பால் ஊனைப் பெருக்கி, அதோடு உலகப் பற்றையும் பெருக்கி ஞான ஒளியைக் குறைத்து, அழியும் ஆனந்தத் தைத் தருகின்றது. ஆனுல், இறைவனே என்னைப் பாவி யேன் என்று அறிந்தும் தன் பரிவால் சிவாநந்தப் பால் ஊட்டுகிருன்; அந்தப்பால் ஊனினை உருக்கி உள் ஒளி யைப் பெருக்கி, அழிவற்ற ஆனந்தம் சொரிகின்றது; இதனுல் தாயினும் ஆண்டவன் மிக்க பரிவுடையவன் ஆகிருன். புறம் புறம்திரிந்த........பிடித்தேன் - நீ என் மீதுள்ள விருப்பால் நான் செல்லுமிடந்தோறும் பக் கத்தே முன்பு திரிந்தாய், அதை உணராது போனேன், பாவியேன்; உன் அருளால் உனை உணர்ந்ததும் யான் உனைத் தொடரலானேன். சிக்கெனப்பிடித்தேன்-முன்பு ஒரு முறை நீ எனக்குக் காட்டியருளியபோது உன்னைப்

பிடித்தேனாயினும் நழுவ விட்டேன்; இப்போது உன்னை நழுவ விடாது உறுதியாகப் பற்றிக் கொண்டேன். எங்கு........இனியே - உறுதியாகப் பற்றிய பின், உனக்கு உவந்த இடமாகிய என் மனத்தே நிலையாக அமர்ந்தருளல் வேண்டுமென்கிறார்.

## 39. 'நானேயோ தவஞ்செய்தேன்'

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந்(து) என(து)(உ)ள்ளம் புகுந்(து) அடியேற்(கு)
அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்(து)அன்றே வெறுத்திடவே

—திருவேசறவு, 10.

தவம் செய்தவன் நான் தானா? (ஆயினும்) 'சிவாயநம' என்று சொல்லும் பாக்கியத்தைப் பெற்றேன். தேனாகியும் இனிமையான அமுதமாகியும் தித்திக்கின்ற சிவபெருமான் தானாகவே எழுந்தருளி என் மனத்தில் புகுந்து உடம்போடு சேர்ந்துள்ள உயிர் வாழ்க்கையை இகழ்ந்து வெறுக்கும்படி அடியேனுக்கு அருள் செய்தான்.

நான் இப்போது பெற்றுள்ள பேறு, தவம் முதலிய எனது யாதொரு முயற்சி (சாதனை) யாலும் பெற்றதன்று; 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' னேன் என்பது கருத்து.

## 40. 'கசிந்துருக வேண்டுவனே'

உற்றாரையான்வேண்டேன்ஊர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும் [ன்
குற்றாலத்(து)அமர்ந்து(உ)றையும்கூத்தாஉன்குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்து(உ)ருக வேண்டுவனே.

—திருப்புலம்பல், 3.

உறவினர்களை நான் விரும்பவில்லை. ஊரை நான் வேண்டுவதில்லை. புகழிலும் எனக்கு ஆசை இல்லை.

கற்றவர்களிடமும் எனக்குப் பற்றில்லை. கற்க வேண்டு வனவும் எனக்கு இனிப் போதும். திருக் குற்றாலத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கும் கூத்தனே! ஒலிக்கின்ற கழல்களை அணிந்த உன் திருவடிகளை அடையும் பொருட்டே, கன்றையுடைய பசுவின் மனத்தைப்போல எனது மனம் கசிந்து உருக வேண்டுகிறேன்.

உலகப் பொருள்களில் ஒன்றையும் பொருளாகக் கருதவில்லை. உன்னிடத்து மெய்யன்பு ஒன்றையே வேண்டுகிறேன் என்றவாறு.

41. 'சேவடிக்கண் நம்சென்னிமன்னிப் பொலியுமே'

நங்கை மீர்எனை நோக்குமின் நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கை மார்கையில் வளையும் கொண்(டு)எம்
உயிரும் கொண்டேஎம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவடிக் கண்நம்
சென்னி மன்னிப் பொலியுமே.

—சென்னிப்பத்து, 3.

பெண்களே, என்னை நோக்குங்கள். நம் இறைவனும், நம்மை அடிமையாகக் கொண்டவனும், தென்னஞ் சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையிற் பொருந்திய வீரனும், நாதன் ஆனவனும், பெண்களாகிய எமது கைகளில் உள்ள வளையலையும் உயிரையும் கவர்ந்து கொண்டு எம்மை அடிமையாகக் கொள்பவனும் ஆன சிவபெருமானது விளங்குகின்ற, பெரிய மலரைப்போன்ற திருவடிகளில் நம் தலைபொருந்தி விளங்கும்.

42. 'அருளும் பொய்யோ'

உரியேன் அல்லேன் உனக்(கு)அடிமை
உன்னைப் பிரிந்(து)இங்கு ஒருபொழுதும்
தரியேன் நாயேன் இன்ன(து) என்(று)
அறியேன் சங்கரா கருணையினுற்

பெரியோன் ஒருவன் கண்டுகோள்
என்று(உ)ன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றேன்(று) அருளியஅருளும்
பொய்யோ எங்கள் பெருமானே.

—*எண்ணப்பதிகம்*, 2.

*சங்கரனே! (உன்னைப் பெறும்) தகுதி உடையவன் அல்லேன். (அப்படி இருந்தும்) உன் அடிமை உன்னை விட்டுப் பிரிந்து இங்கே ஒரு கணப்போதும் சகித்திருக்கமாட்டேன். சிற்றறிவுடையவனுன நான் இன்னதென்று இதை அறியமாட்டேன். உனது அருளால் 'பெரியவனுன ஒப்பற்றவன் நான், என்னைக் கண்டுகொள்' என்று உனது வீரக் கழலை அணிந்த திருவடிகளைக் காட்டி, 'உன்னைவிட்டு ஒருபோதும் பிரிய மாட்டேன்' என்று சொல்லி அருளிய கிருபையும் பொய்யோ, எங்கள் பெருமானே!*

## *43. 'தாமே தமக்கு விதிவகையும்'*

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாம்ஆர்? எம(து) ஆர்? பாசம் ஆர்?
என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரோடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா(று) அமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்அடிக்கே.

—*யாத்திரைப் பத்து*, 3.

*தமக்கு (தமது அடியார்களுக்கு) உறவு ஆவாரும் அவர்தாமே; நமக்கு விதி வகை யாவதும் அவர்தாமே; 'நாம்' என்பது யார்? 'எமது' என்பது யாவர்? பாசம் (உலகப் பற்றுக்கள்) என்பது யாவர்? இவை என்ன மாயம்? இவை நீங்கும்படியாக, ஆண்டவனுடைய பழைய அடியார்களோடும், அவனுடைய திருவுள்ளக் குறிப்பையே நமது குறிக்கோளாகக்கொண்டு, பொய்*

*யான வாழ்வை நீக்கி, பாம்பை அணிந்தவனும் எம்மை ஆள்பவனுமாகிய சிவபெருமானுடைய பொன்போன்ற திருவடிகளின் கீழ்ப் போகும்படிச்செய்துகொள்ளுங்கள்.*

*தாமே.........வகையும்—தமக்குத் தாமே உண்மையான சுற்றத்தார், தாமே தமது விதிக்குக் காரணமாவார் என்னலுமாம்;—'ஒருவன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்க. தன்னைக் கீழோன் ஆக்காதிருக்க; தானே தனக்கு உறவு, தானே தனக்குப் பகை. (கீதை, 6—5)*

### 44. 'புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்'

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்(டு)
இகழ்மின் எல்லா அல்லலையும் இனிஓர்
இடையூ(று) அடையாமே
திகழும் சீரார் சிவபுரத்துச் சென்று
சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே.

—*யாத்திரைப் பத்து*, 6.

*பாம்பை ஆபரணமாய்க் கொண்ட சிவபெருமானது திருவடிகளையே துதியுங்கள். (அவைகளை) மனத்தில் வைத்துக்கொண்டு எல்லாத் துன்பங்களையும் அற்பமாய்க் கருதுங்கள். இனிமேலும் ஓர் இடையூறு (துன்பம்) அடையாமல் இருக்க (வாராமல் தடுப்பதற்காக) சிறப்பமைந்த சிவபுரத்தில் போய், சிவபெருமானது திருவடியை வணங்கி, யாம் விளங்கும் அடியார்களின் முன்பு சென்று மனம் உருகி நிற்போம்.*

### 45. 'அளவிலாச் சீருடையான்'

யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீர்உடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்(று)அறியா இன்பத்துள் வைத்தாய்க்(கு)என் எம்
மற்(று)அறியேன் செய்யும் வகை. [பெருமான்

—*திருவெண்பா*, 8.

எல்லாருக்கும் மேம்பட்டு, அளவில்லாத சிறப்பை யுடையவனும், எல்லாருக்கும் கீழ்ப்பட்ட அடியேனை ஒருவருக்கும் கிடைக்காத இன்பத்தில் வைத்தவனுமான உன்பொருட்டு, என் எம்பெருமானே! வேறு கைம் மாறு செய்யும் விதத்தைத் தெரிந்திலேன்.

46. 'ஏறுடையான் எனை ஆளுடைநாயகன்'

ஒன்றினோ(டு) ஒன்றும் ஓர்ஐந்தி னோ(டு) ஐந்தும்உயிர்ப்பதும் [ஆகாதே
உன்அடி யார்அடி யார்அடி யோம்என உய்ந்தன ஆகாதே
கன்றை நினைந்(து) எழு தாய்என வந்த கணக்கது ஆகாதே
காரண மாகும் அனாதி குணங்கள் கருத்துறும் ஆகாதே
நன்(று)இது தீதுஎன வந்த நடக்கம் நடந்தன ஆகாதே
நாமும்எ லாம்அடி யாருட னேசெல நண்ணுதும் ஆகாதே
என்றும்என் அன்பு நிறைந்த பராவமு(து) எய்துவ(து) ஆகாதே
ஏறுடை யான்எனை ஆளுடை நாயகன் என்உள் புகுந்தி [டிலே.

—திருப்படையாட்சி, 2.

இடபத்தை ஏறி நடத்துபவனும் என்னை ஆட்கொண் டருளிய இறைவனும் என் நெஞ்சில் புகுந்து விட்டால், ஒன்றோடு ஒன்றும், ஐந்தோடு ஐந்தும் பிழைத்திருக்க முடியாது. உன் அடியார்களுக்கு அடியோங்கள் என்று உயர்ந்த தொழில்கள் இசையா; கன்றுக்குட்டியை நினைத்து எழுகின்ற தாய்ப் பசுவைப் போல வந்த விதமும் ஆகாது; காரணமாகிய பழைமைக் குணங்கள் கருத்தில் பொருந்தவும் செய்யா; இது நல்லது இது கெட்டது என்று சொல்லும்படி வந்த நடக்கங்கள் உண்டாகா. நாம் எல்லாரும் அடியவர்களோடு செல்லும் பொருட்டாக நெருங்குவதும் கூடாது; எப்போதும் என்னிடம் நிறைந்த அன்பு கொண்டருளிய மேலான அமிர்தத்தை அடைவதும் ஆகாது.

ஒன்றினோடு ஒன்று - ஆத்மாவுடன் ஆத்மா; ஐந்தினொடு ஐந்து - பொறிகளோடு புலன்கள். ஆண்டவன்

தாயே என்று(உ)ன் தாள் அடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய், நான்தான் வேண்டாவோ.

—ஆனந்த மாலை, 5.

நம்பி! எனக்குத் தாயாகிப் பால் ஊட்டக் கடமைப் பட்டவனே! நீ அப்படி ஊட்டாவிட்டால் கீழ்ப்பட்டவனான நான் சவலைப் பிள்ளையாகி இளைத்துப் போய் விடுவேனே. 'தாயே' என்று கூவிக்கொண்டு நான் உன் திருவடிகளை அடைந்திருக்கிறேன்; இதன் பிறகாவது நீ அருளவேண்டும். என்னிடத்து நீ தயை காட்டவில்லையே. எனது அடிமைத் திறம் நிலைத்திருக்கும்படி நீ ஆண்டருளினை. அதன் பின்னும் (தயை காட்டாவிடில்) அடியேன் மட்டும் வேண்டாமோ? (அடியேன் வேண்டாதவன் என்பது உன் கருத்தோ?)

நம்பி - பூரணமானவனே.

## 49. 'அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்'

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவம்ஆக்கி எனைஆண்ட
அத்தன்எனக்(கு)அருளியவா(று) ஆர்பெறுவார் அச்சோவே.

—அச்சோப்பதிகம், 1.

முக்தி மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளாத அறிவில்லாதவர்களோடு சேர்ந்து, அவர்களுடைய வழியில் முயல்கின்ற எனக்கு, பக்தி மார்க்கத்தை உபதேசித்து, எனது பழைய வினைகள் ஓடிப்போகும் வண்ணம் மனத்தின்கண் உள்ள மலங்களைப் போக்கி, சிவ ரூபமாக்கி என்னை ஆண்டுகொண்ட என் தந்தை எனக்கு அருள் செய்த பேற்றை வேறு யார் பெற வல்லார். இது ஆச்சரியம்!

உள்ளத்தில் குடி கொண்டு எழுந்தருளும் போது, ஆனந்த பரவசம் உண்டாகும்; இந்நிலையில் இந்திரியங்கள், கரணங்கள் முதலிய தத்தம் தொழில்களைச் செய்ய முடியாமற் போகும்.

## 47. 'என்னால் அறியாப் பதந்தந்தாய்

என்னால் அறியாப் பதம்தந்தாய்
யான்அ(து) அறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவில்லை உடையாய்
அடிமைக்கு ஆர்என்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்(து) ஏத்தும்
பழைய அடிய ரோடும் கூடா(து)
என்நா யகமே பிற்பட்(டு)இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே.

—ஆனந்தமாலை, 2.

என்னால் அறிய முடியாத பதவியை (முக்தியை)க் கொடுத்தாய்; அடியேன் அதனை அறியாமலே கெட்டேன். உன்னால் ஒரு குறைவும் இல்லை. உடையவனே அடியேனுக்கு (புகல்) யார் இருக்கிறார்கள் என்பேன். பல நாளும் (எக்காலமும்) உன்னை வணங்கித் துதிக்கும் பழமையான (நித்ய) அடியார்களோடு சேராமல், என்னுடைய தலைவனே, பின்னிட்டு (பிறவிப்) பிணிக்கு விருந்தாகும் (இரையாகும்) படி இவ்விடத்து (இவ்வுலகில்) இருந்தேன்.

பதம் - திருவடி எனினுமாம்.

## 48. 'ஆண்டாய், நான்தான் வேண்டாவோ'

தாயாய் முலையைத் தருவானே
தாரா(து) ஒழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனே
நம்பி இனித்தான் நல்குதியே

## 50.

சேம்மைநலம் அறியாத சிதடரோடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருள்ஆக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

—*அச்சோப்பதிகம்*, 9.

*செவ்விதாகிய நன்மையை அறியாத மதியீனர்களோடு கூடித் திரிந்த என்னை, மும்மலங்களும் அறும்படி செய்து முதற் பொருளாகிய இறைவன் நம்மையும் ஓர் பொருள் ஆக்கி, நாயைப் பல்லக்கில் ஏற்றிவைத்த தன்மை போல எனக்கு முக்தியை அருளிய பேற்றை வேறு யார் பெறுவார்? ஆச்சரியம்!*

# திவ்யப் பிரபந்தம் : முதலாயிரம்

---

## 1. 'பல்லாண்டு பல்லாண்டு'

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்து ஆண்டு
பலகோடி நூறு ஆயிரம்
மல்லாண்ட திண் தோள் மணிவண்ணா ! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.—*திருப்பல்லாண்டு, 1.*

*பல வருஷங்களிலும், பல வருஷங்களிலும், பல ஆயிரம் வருஷங்களிலும், பலகோடி நூறு ஆயிர வருஷங்களிலும், (காலதத்வம் உள்ள வரையிலும்) மல்லர்களை ஜெயித்த வலியையுடைய தோள்களைப் பெற்றிருக்கும் நீலமணிபோன்ற நிறத்தை யுடையவனே ! உன்னுடைய சிவந்த திருவடிகளின் அழகுக்கு மங்களமான ரக்ஷை உண்டாகுக.*

*பரதத்வ நிர்ணயம் (பரம்பொருள் எதுவென்று நிச்சயித்தல்) பண்ணிய பின் யானைமீது ஏறிப் பெரியாழ்வார் ஊர்வலம் வரும்போது பரமபதநாதன் பிராட்டியுடன் கருடாரூடனாய் அவர் முன்னால் தோன்றினான். அதைக்கண்ட ஆழ்வார், 'காலம் நடையாடாத பரமபதத்தில் இருக்கும் இப்பரம புருஷன் காலம் நடையாடுகிற இந்த உலகத்தில் வந்து நிற்கிறானே ! இவனுக்கு என்ன தீங்கு வருகிறதோ என்று பயந்து, ரக்ஷணம் பண்ணுகைக்காக, யானை மணிகளையே தாளமாகக் கொண்டு, 'பல்லாண்டு' என்று தொடங்கும், இப்பிரபந்தத்தைப் பாடினார். பல்லாண்டு - அடியார்கள் தங்களுக்குப் பகவான்மீதுள்ள பேரன்பின் மேலீட்டினால் அவனுடைய எல்லாம்வல்ல சக்தியையும், பெருமைகளையும் மறந்து, அவனுக்கு யாதொரு தீங்கும் வராதிருக்க அவனை ஆசீர்வதித்தல்.*

## 2. பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும்
சுடர்ஆழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே.—*திருப்பல்லாண்டு*, 2.

*அடியவர்களாகிய எங்களோடும் (தலைவனான) உம்மோடும் பிரிவில்லாமல் பல ஆயிர வருஷங்கள் (செல்லவேண்டும்.) நல்ல வடிவோடு உமது மார்பின் வலது பக்கத்தில் வசிக்கின்ற மங்கை (யாரான பெரிய பிராட்டி) யும் பல ஆயிர வருஷங்கள் வாழ்க. நல்ல உருவத்தைப்பெற்று பராக்கிரமத்துடன் (உமது) வலது (கையிலே) நிற்கும் ஒளிவிடுகின்ற சக்கரமும் பல ஆயிர வருஷங்கள் வாழ்க. ஆயுதங்களோடு (செய்யும்) யுத்தங் களில் புகுந்து ஆரவாரம் செய்கின்ற அந்தப் பாஞ்ச சன்னியம் (என்ற சங்கும்) பல வருஷங்கள் வாழ்க.*

*லீலாவிபூதி (திருவிளையாடல்) ஆகிய இந்த உலகத் தில் உள்ள தம்மைப் போன்றவர்களுக்கும், நித்ய விபூதி யாகிய பரமபதத்தில் இருக்கும் பெரியபிராட்டி முதலிய வர்களுக்கும் இதில் மங்களம் வேண்டப்படுகிறது. இந்த இரண்டு பாசுரங்களும் திருமந்திரார்த்தத்தை உபதேசிக் கின்றன. குருமூலமாகக் கேட்டு உணர்க.*

## 3. ‘குழல் ஊதின போது’

கருங்கண் தோகை மயிற்பீலி யணிந்து
கட்டி நன்கு(உ)டுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவன்ஒருவன் குழல்ஊதின போது

மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கிஅவை செய்யும் குணமே.
—பெரியாழ்வார் திருமொழி, 3. 6. 10.

*கருத்த கண்கள் அமைந்த மயில் இறகுகளை(தலையில்) அணிந்து, அழகாக உடுத்துக்கொண்ட பீதாம்பரத்தையும் அருமையான ஆபரணங்களையும் தரித்த திருமேனியை உடையவனை இடையர்களுக்கு அதிபதியான பிரசித்திபெற்ற ஒப்பற்றவன் (கண்ணன்) குழல் ஊதின போது (அறிவற்ற) மரங்களும் (அசைவற்று) நின்று மகரந்தப் பொடிகளை (தேனை) தாரையாகப் பெருக்கும்; புஷ்பங்களும் கீழேவிழும்; (மேலே நோக்கி) வளரும் கிளைகளும் தாழும்; (அம்மரங்கள்) உருகும்; (கை கூப்புவதைப்போலக் கொம்புகளைக்) குவிக்கும்; (இப்படியாக) அந்த மரங்கள் கண்ணன் நிற்கும் பக்கங்களை யெல்லாம் நோக்கிச்செய்யும் குணம் (வழிபாடுகள்) இருந்தபடிதான் என்னே!*

*பெரியாழ்வார் கண்ணபிரானது குழலோசையைக் கேட்டுத் தாம் பக்திபரவசமாகி ஆனந்தமடைவதுபோல, மரங்களும் மற்றவையும் அவ்விதமே அநுபவிக்கின்றன, என்கிறார். கண்ணனது குழலூதற் சிறப்பு இருந்தவாறு இது!*

## 4. 'இவள் மால் உறுகின்றாளே'

காறைபூணும்கண்ணாடிகாணும்தன்கையில்வளைகுலுக்கும்
கூறைஉடுக்கும் அயர்க்கும்தன் கோவ்வைச் செவ்வாய் திருத்தும்
தேறித்தேறி நின்றுஆயிரம் பேர்த்தேவன் திறம்பிதற்றும்
மாறில்மா மணிவண்ணன் மேல்இவள் மாலுறுகின்றாளே.
—பெரியாழ்வார் திருமொழி, 3. 7. 8.

*(என் பெண்ணான) இவள் (பொன்னால் செய்த) காறையை (தன் கழுத்தில்) பூட்டிக் கொள்கிறாள்; (அக்*

காறையும் கழுத்துமான அழகைக்) கண்ணாடியில் காண்கிறாள்; தன் கையில் (இடப்பட்டிருக்கும்) வளையல்களைக் குலுக்குகிறாள்; சேலையை (நன்றாக) உடுத்துக் கொள்கிறாள்; (இப்படி அலங்காரம் செய்துகொண்ட போதிலும் அவன் வரக் காணாமையாலே) தளர்கிறாள்; (பிறகு தெளிந்து) கோவைக் கனி போலச் சிவந்துள்ள தன் உதடுகளை (தாம்பூலம் தரித்து) ஒழுங்கு படுத்துகிறாள்; மிகவும் தெளிந்து நின்று ஆயிரம் பேர்களையுடைய எம்பெருமானுடைய குணங்களை அடைவுகெடச் சொல்லுகிறாள்; (பிறகு) ஒப்பில்லாத நீலமணி போன்ற நிறத்தை யுடைய கண்ணன்மீது பெருங்காதல் (வியாமோகம்) கொள்கிறாள்.

## 5. 'மணாட்டுப் புறம் செய்யுங் கொலோ'

ஒருமகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன் செங்கண்மால் தான்கொண்
டுபோனான்
பெருமகளாய்க் குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்ற அசோதை
மருமகளைக் கண்டு(உ)கந்து மணாட்டுப் புறம் செய்யுங்கொ
[லோ?] —பெரியாழ்வார் திருமொழி, 3. 8. 4.

ஒரே மகளை உடையவனாகிய நான், (அவளை) உலகமெங்கும் பரவிய கீர்த்தியோடு (பெரிய பிராட்டியாரான) திருமகளைப்போல வளர்த்தேன்; (அப்படி வளர்க்கப் பட்டவளைச்) செந்தாமரைக் கண்களை யுடைய திருமால் தானே (வந்து) கைக்கொண்டு போனான்; முதன்மை பெற்றவளாகக் குடிவாழ்க்கையைச் செய்பவளும், பெருமையை யுடைய பிள்ளையைப் பெற்றவளுமான யசோதைப் பிராட்டி (அப்படிக் கொண்டுவரப் பெற்ற தன்) மருமகளான என் மகளைக் கண்டு மகிழ்ச்சி யடைந்து, மணவாட்டிக்குச் செய்யவேண்டிய சீர்மைகளை (குறைவற)ச் செய்வாளோ?

தலைமகனுடன் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் பலவாறு வருந்திக் கூறும் பாசுரம் இது.

### 6. 'எங்ஙனம் படைத்தான் கொலோ'

நாவகாரியம் சொல்லிலாதவர்
நாள்தோறும் விருந்தோம்புவார்
தேவகாரியம் செய்துவேதம்
பயின்றுவாழ் திருக்கோட்டியூர்
மூவர்காரியமும் திருத்தும்
முதல்வனைச் சிந்தியாத அப்
பாவ காரிகளைப் படைத்தவன்
எங்ஙனம் படைத்தான் கொலோ!

—பெரியாழ்வார் திருமொழி, 4. 4. 1.

*நாக்கினால் சொல்லக்கூடாதவற்றைச் சொல்லி அறியாதவர்களும், தினந்தோறும் விருந்தினர்களை உபசரிப்பவர்களும், பகவத் ஆராதனம் பண்ணிக் கொண்டும், வேதங்களை ஓதிக் கொண்டும் இருப்பவர்களுமாகிய (ஸ்ரீ வைஷ்ணவர்கள்) வாழ்கிற திருக்கோட்டியூரில் (எழுந்தருளி யிருப்பவனும்) மும் மூர்த்திகளுடைய காரியங்களையும் செய்து தலைக்கட்டு மவனும் (எல்லார்க்கும்) முதல்வனானவனுமான எம்பெருமானை நினையாத அப்படிப்பட்ட பாவிகளைச் சிருஷ்டித்தவன் எதற்காகச் சிருஷ்டித்தானோ! (அறியோம்).*

### 7. 'எந்தம்மை விற்கவும் பெறுவார்களே'

காசின் வாய்க்கரம் விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டு
தேச வார்த்தை படைக்கும் வண் கையினார்கள் வாழ் [திருக்கோட்டியூர்
கேசவா! புருடோத்தமா! கிளர் சோதியாய்! குறளா!என்று
பேசுவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே.

—பெரியாழ்வார் திருமொழி, 4. 4. 10.

*ஒரு பொற்காசுக்கு ஒரு பிடி நெல் விற்கும்படியான (க்ஷாம) காலத்திலும், வஞ்சனையில்லாமலும் பிரதி உபகாரத்தை எதிர்பாராமலும் (அதிதிகளுக்கு) அன்னமளித்துப் புகழ் வார்த்தைகளைப் பெறும் உதாரமான கைகளை யுடையவர்கள் வாழும் திருக்கோட்டியூரில்*

(எழுந்தருளியிருக்கிற) கேசவனே! புருஷச் சிரேஷ்டனே! கிளர்ந்தெழுகின்ற தேஜஸை உடையவனே! வாமன வேஷம் பூண்டவனே! என்று இப்படி (எம்பெருமானுடைய திருநாமங்களை) ஓதுகிறவர்களான அடியார் எங்களை (தம் இஷ்டப்படி) விற்றுக் கொள்ளவும் உரியவர்களே.

### 8. 'மார்வம் என்பதோர் கோயில்'

சோர்வினால் பொருள் வைத்தது உண்டாகில்
சொல்லு சொல் என்று சுற்று மிருந்து
ஆர் வினவிலும் வாய் திறவாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்
மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூ இட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலுமாமே.

—பெரியாழ்வார் திருமொழி, 4. 5. 3.

மறைவாக (எவ்விடத்திலேனும் நீ) திரவியத்தை (ஒளித்து) வைத்திருப்பாயானால், (அதை ஞாபகப்படுத்திக்கொண்டு) 'சொல்லு சொல்லு' என்று சூழ்ந்து கொண்டு, எப்படிப்பட்ட அன்பினர்கள் கேட்டாலும், (பதில் சொல்ல) வாயைத் திறக்கக் கூடாத மரணகாலம் வருவதற்கு முன்னதாகவே, மனத்தைக் கோயிலாக்கி (அதில்) மாதவன் என்னும் தெய்வத்தை நிலையாக எழுந்தருளச் செய்து அன்பு என்னும் மலரைச் சாத்த வல்லவர்க்கு யம தூதர்களால் வரக்கூடிய துன்பங்களிலிருந்து தப்பிப் பிழைக்க முடியும்.

### 9. 'மற்றொருவர்க்கு ஆள் ஆவரே'

தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாள்
ஆகிலும் சிதகுரைக்கு மேல்
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல்
நன்று செய்தார் என்பர் போலும்

மன்னுடைய விபீடணற்கா மதிள் இலங்கைத்
திசை நோக்கி மலர்க்கண் வைத்த
என்னுடைய திருவரங்கற்(கு) அன்றியும்
மற்றொருவர்க்(கு) ஆள் ஆவரே?

—*பெரியாழ்வார் திருமொழி*, 4. 9. 2.

*தன்னுடைய அடியவர்கள் விஷயத்தில், தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் திருமகளார் தாமே, குற்றங்களைச் சொன்னாலும், 'என் அடியார்கள் அக் குற்றம் செய்ய மாட்டார்கள். (அப்படியே ஒரு சமயம்) செய்திருந்த போதிலும் (அவர்கள்) செய்ததை நன்மையாகவே கொள்கிறேன்' என்று சொல்கிறவனாகிய—செல்வம் நிறைந்த விபீஷணனுக்காக, மதிளையுடைய இலங்கையிருக்கும் (தென்) திசையை நோக்கித் தாமரைபோன்ற திருக்கண்களை வைத்தருளியவனும் ஆகிய என்னுடைய (இறைவனான) அரங்கநாதனைத் தவிர வேறொருவர்க்கு ஆட்படுவார் உளரோ?*

## *10. 'அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்'*

துப்பு (உ)டையாரை அடைவதெல்லாம்
சோர்விடத்துத் துணை யாவர் என்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின் அடைந்தேன்
ஆனைக்கு நீஅருள் செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்(கு)
ஏதும் நான்உன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்(கு) இப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளியானே.

—*பெரியாழ்வார் திருமொழி*, 4. 10. 1.

*(அடியார்களைக் காப்பதில்) வல்லவராகிய உம்மை அடைவது, சோர்வு வரும் (சாகும்) காலத்தில் நீர் துணை ஆவீர் என்ற எண்ணத்தினால் அல்லவா? (உனக்குத்) தகுதி யில்லாதவன் என்றாலும், நீர் கஜேந்திரனுக்கு அருள் செய்தவர் ஆதலால் (எனக்கும் அப்படிச் செய்வீர் என்ற நம்பிக்கையால்) நான் உம்மிடம் சரணம்*

*நாக்கு........அறியாது - உன் திருநாமத்தை என் நாக்கு உச்சரித்து, அதன் சுவையையும் ஆனந்தத்தையும் அறிந்திருப்பதினாலே, நான் தடுத்தாலும் கேட்காமல் இடைவிடாமல் சொல்லிக் கொண்டே இருக்கிறது.*

### 12. 'பிரானார் பேணும் திருக்கோயில்'

உற்ற உறுபிணி நோய்காள்! உமக்கொன்று
  சொல்லுகேன் கேண்மின்
பெற்றங்கள் மேய்க்கும் பிரானார் பேணும்
  திருக்கோயில் கண்டீர்
அற்றம் உரைக்கின்றேன் இன்னம் ஆழ்வினைகாள்!
  உமக்(கு) இங்கோர்
பற்றில்லை கண்டீர் நடமின் பண்டன்று
  பட்டினம் காப்பே.

—*பெரியாழ்வார் திருமொழி*, 5. 2. 6.

*நெடுநாளாக இருக்கிற மிகுந்த வருத்தத்தை உண்டாக்குகிற நோய்களே! உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கேளுங்கள். (எனது சரீரம் இப்போது) பசுக்களை மேய்க்கும் பிரான் ஆன கிருஷ்ணன் விரும்பி எழுந்தருளியுள்ள திருக்கோயிலாக உள்ளது. இதைத் தெரிந்து கொள்ளுங்கள். (பிறவிக் கடலில்) (என்னை) ஆழ்த்துகிற வினைகளே! இன்னும் ஓர் உறுதியான வார்த்தையையும் சொல்கிறேன். உங்களுக்கு இனி ஓர் ஆதரவும் கிடையாது. ஆதலால் (நீங்கள் இவ்விடத்தை விட்டுப்) போய்விடுங்கள். (எம்பெருமானுடைய) பட்டணமாகிய இது பழைய நிலைமையையுடையதல்ல. (அவனால்) காக்கப் பெற்றுள்ளது.*

### 13. 'உனக்குப் பணி செய்திருக்கும் தவம் உடையேன்'

உனக்குப் பணி செய்திருக்கும் தவம்
  உடையேன், இனிப் போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்

அடைந்தேன் ; (மரண காலத்தில் உண்டாகக் கூடிய) இளைப்பு என்னை மேலிட்டு வருத்தும்போது உம்மை ஒன்றும் நினைக்கமாட்டேனே. (நினைக்க முடியாமற் போதலும் கூடும்.) ஆதலால், அந்தக் காலத்துக்காக (அந்திம காலத்திற்குப் பதிலாக) (நல்ல அறிவோடு கூடிய) இந்தச் சமயத்திலேயே எனது (விண்ணப்பத்தைச்) சொல்லி வைத்தேன். திருவரங்கத்தில் (திரு அனந்தனாகிய) பாம்பின்மீது பள்ளிகொண்டிருப்பவனே!

### 11. 'காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்'

வாக்குத் தூய்மை இலாமையினாலே
மாதவா! உன்னை வாய்க்கோள்ள மாட்டேன்
நாக்கு நின்னை அல்லால் அறியாது
நான் அது அஞ்சுவன் என்வசம் அன்று
மூர்க்குப் பேசுகின்றான் இவன்என்று
முனிவாயேலும் என் நாவினுக்(கு) ஆற்றேன்
காக்கை வாயிலும் கட்டுரை கோள்வர்
காரணா! கருளக் கோடியானே!

—*பெரியாழ்வார் திருமொழி*, 5. 1. 1.

(எனது) வாய்ச் சொல் பரிசுத்தமானதல்ல ; ஆதலால் மாதவனே! உன்னை வாய்கொண்டு (துதிக்க யோக்கியதை) அற்றவனாக இருக்கிறேன் ; (என்றாலும்) எனது நாக்கு உன்னையொழிய (வேறொருவரையும்) துதித்தறியாது. (இப்படி அசுத்தமான வாக்கு உன்னிடம் ஈடுபடுவதைக் குறித்து) நான் பயப்படுகிறேன் ; அது என்னுடைய வசத்திலும் இருப்பதில்லை. 'இவன் மூர்க்கத்தனமாகப் பேசுகிறான்' என்று நீ கோபித்துக் கொண்டாலும், என் நாவின் பதற்றத்தைச் சகிக்க வல்லேன் அல்லேன். ஆதி காரணனானவனே! கருடனைக் கொடியாகக் கொண்டவனே! காக்கையின் வாய்ச் சொல்லையும் நற்சொல்லாக (அறிவுடையோர்) கொள்வார்கள் (அல்லவா?)

சாயை அழிவு கண்டாய்
புணத்தினைக் கிள்ளிப் புதுவவி காட்டி உன்
பொன் னடி வாழ்க என்று
இனக் குறவர் புதிய(து) உண்ணும்
எழில் மாலிருஞ் சோலை எந்தாய்!
—பெரியாழ்வார் திருமொழி, 5. 3. 3.

*விளைநிலங்களில் (உண்டாகும்) தினைக்கதிர்களைக் கிள்ளி வந்து, அவைகளை (எம்பெருமானாகிய) உனக்குப் புதிய உணவாக அமுதுசெய்வித்து, 'உன் பொன் போன்ற திருவடிகள் என்றென்றும் வாழவேண்டும்' என்று (காப்பிட்டு), குறவர் கூட்டங்கள் அப் பிரசாதத்தையே விருந்தினர்களோடு உண்ணுகிற அழகிய திருமாலிருஞ் சோலையில் (எழுந்தருளியிருக்கும்) எம்பெருமானே! உனக்குத் தொண்டுபண்ணிக்கொண்டிருக்கும் தவத்தையுடைய அடியேன் இனிமேல் புறம்பே போய் வேறொருவனுக்கு வேலை செய்துகொண்டு (அவனுடைய) வீட்டு வாசலில் நிற்க வேண்டியதாக வருமானால் அது உன்னுடைய மேன்மைக்குக் குறையாகும் என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டருள வேண்டும்.*

*14. 'அமுதஆறு தலைப் பற்றி வாய்க் கொண்டதே'*

பறவைஏறு பரம புருடா! நீஎன்னைக் கைக் கொண்டபின்
பிறவிஎன்னும் கடலும்வற்றிப் பெரும்பதம் ஆகின்றதால்
இறவுசெய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்
அறிவை என்னும் அமுதஆறு தலைப் பற்றி வாய்க்கொண்
[டதே. —பெரியாழ்வார் திருமொழி, 5. 4. 2.

*(கருடனாகிற) பறவைமேல் ஏறிவரும் பரம புருஷனே! நீ என்னை (உனக்கு) ஆளாக்கிக் கொண்ட பிறகு பிறவிக்கடல் வற்றிப்போயிற்று; அதனால் உயர்ந்த பதவி கிடைக்கப் பெற்றேன். (இந்த ஆத்மாவுக்கு) அழிவைச் செய்கிற எனது பாவங்களாகிற காடு நெருப்புப் பட்டு வெந்து போகின்றது; ஞானம் என்னும் அமிருத நதி மேன்மேலும் பெருகிச் செல்கின்றது.*

### 15. 'என்னையும் உன்னில் இட்டேன்'

பொன்னைக் கொண்டு (உ)ரைகல் மீதே நிறமெழ
　　உரைத்தாற் போல்
உன்னைக் கொண்டேன் நாவகம்பால் மாற்றின்றி
　　உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டேன்னுள் வைத்தேன் என்னையும்
　　உன்னில் இட்டேன்
என் அப்பா ! என் இருடீகேசா ! என்
　　உயிர்க் காவலனே.

—பெரியாழ்வார் திருமொழி, 5. 4. 5.

*பொன்னை நிறம் பார்ப்பதற்காக உரை கல்லில் இட்டு உரைப்பதுபோல, உன்னை என்னுடைய நாக்கில் உட்கொண்டு மாற்று அழியும்படி உரைத்துக் கொண்டேன். (அறிவதற்கு அரியனான) உன்னை என் (நெஞ்சினுக்குள்) அமைத்தேன். என்னையும் உன்னிடம் வைத்தேன். என் தந்தையே ! எனது இந்திரியங்களுக்கு நியாமகனே ! எனது ஆத்மாவைக் காக்க வல்லவனே !*

*மாற்றின்றி - (உனக்கு) மாற்று இவ்வளவென்று அறியமுடியாதபடி, எனினுமாம்.*

### 16. 'நாராயணனே நமக்கே பறை தருவான்'

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏர்ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரயணனே நமக் கேபறை தருவான்
பாரோர் புகழப் படிந்(து) ஏலோர் எம்பாவாய்.

—திருப்பாவை, 1.

*அழகான ஆபரணங்களை அணிந்தவர்களும், செல்வம் நிறைந்த திவாய்ப்பாடியில் அன்பார்ந்த இளம் பருவமுடையவர்களுமான பெண்களே ! (மாதங்களில்*

சிறந்த) மார்கழி மாதமாயும், பௌர்ணமியையுடைய மங்கள தினமாகவும் நமக்கு வாய்த்துள்ளது. மார்கழி நோன்பிற்காக நீராட்டத்தைச் செய்ய விருப்பமுடையவர்களே! வாருங்கள். (ஏன் என்றால்) கூரான வேலாயுதத்தையுடையவனும், துஷ்டர்களைக் குரூரமாகத் தண்டிப்பவனுமான ஸ்ரீ நந்தகோபருடைய திருமகனாய், அழகான கண்களையுடைய யசோதைப் பிராட்டிக்குச் சிங்கக்குட்டி போன்றவனாய், கரிய மேகம் போன்ற சரீரத்தையும், (செந்தாமரைப் போன்ற) சிவந்த கண்களையும் (பிரகாசத்துக்குச்) சூரியனையும், (சந்தோஷத்துக்குச்) சந்திரனையும் ஒத்த திருமுகத்தையுடையவனான ஸ்ரீமந்நாராயணன் தானே நமக்கே, நம்முடைய நோன்பிற்கு வேண்டிய பறை முதலிய பொருள்களைக் கொடுப்பான்.

'திருப்பாவை' என்பது மார்கழி மாதத்தில் அனுஷ்டித்து வந்த ஒரு நோன்பாகும். (அந் நோன்பு ஸ்ரீமத்பாகவதத்தில் உள்ள ஒரு கதையை ஒட்டியது.) கோப கன்னிகைகள் தாங்கள் கிருஷ்ணனை நாயகனாக அடையவேண்டி, மார்கழி மாதத்தில் காத்யாயனி தேவியைக் குறித்துச் செய்த விரதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஸ்ரீ ஆண்டாளே நோன்பு நோற்பதாகக் கொண்டு இயற்றப் பெற்றது இப்பிரபந்தம். அவளுக்கு ஸ்ரீ வில்லிபுத்தூரே ஆய்ப்பாடி ஆயிற்று. தன்னோடு ஒத்த பருவச் சிறுமிகளே கோப கன்னியர் ஆனார். வடபெருங் கோயில் உடையானே கண்ணன் ஆனான். திருப்பாவையில் முதல் ஐந்து பாசுரங்களில் கண்ணபிரானை அடைய வேண்டிய உபாயத்தைச் சொல்லுகிறாள்; அடுத்த பத்துப் பாட்டுகளில் இடைப் பெண்களை எழுப்புகிறாள்; பிறகு ஐந்து பாசுரங்களால் கண்ணனுக்கு அந்தரங்கமானவர்களை எழுப்பி, அடுத்த ஐந்து கவிகளால் கண்ணனைத் துயிலெழுப்பித் தான் வேண்டுவதைப் பிரார்த்திக்கிறாள். முடிவில் தாங்கள் விரும்பும் கிருஷ்ண அனுபவத்தை அவனே தரவேண்டுமென்று பிரபந்தம் பூர்த்தியடைகிறது. பகவானுக்குத் தொண்டு செய்வதே மனித வாழ்க்கையில் பெறக்கூடிய பேறு என்பது திருப்பாவையின் உள்ளுறைப் பொருள்.

## 17 நீங்காத செல்வம் நிறைந்து'

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்(து) ஏலோர் எம்பாவாய்.

—*திருப்பாவை, 3.*

*திரிவிக்கிரமனாக வளர்ந்து (மூன்று) உலகங்களையும் திருவடிகளால்அளந்த புருஷோத்தமனுடைய திருநாமங் களைப் பக்தியுடன் பாடி, நாங்கள் எங்கள் நோன்புக்கு என்று சொல்லி நீராடினால், தேசமெங்கும் (வியாதி முதலி யன) தீமைகள் எல்லாம் நீங்கி, மாதந்தோறும் மூன்று மழை பெய்திடும்; அதனால் மீன்கள் வளர்ந்து, பருத்த செந்நெற் கதிர்களிடையே போக இடம் பெறாமல் துள்ள வும், புள்ளிகளையுடைய வண்டுகள் மலர்ந்திருக்கிற நெய் தல் பூவிலே உறங்கவும், உதார குணமுடைய பெரிய பசுக்கள் (பால் கறப்போர்) சலியாமல் கறக்க ஒருப்பட்டு (ஒரு நிலையாகத் தொழுவினில்) உட்கார்ந்து, பசுக்களின் பருத்த மடிகளை இரு கைகளாலும் கறக்க, வெள்ளத் தாலே குடங்களை நிறையச் செய்யும்; இப்படி அழிவில் லாத செல்வம் நிறைந்திடும். (ஏல் ஓர் - அருத்தமற்ற மொழிகள்.*

## 18. 'தீயினில் தூசு ஆகும்'

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும்அணி விளக்கை
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை

தூயோமாய் வந்துநாம் தூமலர்தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூ(சு) ஆகும் செப்(பு) ஏலோர் எம்பாவாய்.

—*திருப்பாவை*, 5.

*ஆச்சரியமான குணமும் செயல்களும் உடையவனும், வடமதுரையில் திருவவதரித்த பராக்கிரமம் உடையவனும், பரிசுத்தமாய் ஆழம் மிகுந்த நீர்ப்பெருக்கத்தை யுடைய யமுனைத் தீரத்தை உடையவனும், இடையர் குலத்தில் உதித்த அழகிய (ரத்தின) தீபம் போன்றவனும், தாயாகிய யசோதைப்பிராட்டியின் திருவயிற்றை விளங்கச் செய்தவனுமான தாமோதரனை (கண்ணபிரானை) (தொண்டர்களாகிய) நாம் பரிசுத்தராய் வந்து அடைந்து, தூய பூக்களைத் தூவி, வணங்கி, வாயாரப் பாடி, மனமாரத் தியானம் பண்ண, (நல்ல ஞானம் பிறக்கும்) முன்செய்த பாபங்களும், பின்பு (நம்மை அறியாமல் நேரிடத்தக்க) வர இருக்கின்ற பாபங்களும் நெருப்பில் இட்ட பஞ்சுபோல் அழிந்துபோகும். (ஆதலின் அந்தப் பகவானுடைய திரு நாமங்களைச் சொல்லிச் சிந்தியுங்கள்.)*

### 19. 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது'

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந்து (உ)ண்போம்
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து (உ)ன் தன்னை
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாம் உடையோம்
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன் தன்னோ(டு)
உறவேல் நமக்கிங்கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன் தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே
இறைவா! நீ தாராய் பறை ஏலோர் எம்பாவாய்.

—*திருப்பாவை*, 28.

*பசுக்களின் பின்னே போய்க் காட்டை அடைந்து (கட்டுச் சோற்றை) உண்டு காலங் கழிப்பவர்கள் நாங்*

*கள். அறிவில்லாத இடைக் குலத்தில் உன்னை (எங்கள் குலத்தவனாக)ப் பெறுவதற்குத் தக்க புண்ணியம் உடையவர்களானோம். ஒருவகைக் குறையும் இல்லாதவனாகிய கோவிந்தனே, பகவானே! உன்னோடு எங்களுக்கு உண்டான உறவானது இங்கே (உன்னாலும் எங்களாலும்) ஒழிக்க ஒழியமாட்டாது. (உலக வழக்கம் ஒன்றும்) அறியாத சிறு பெண்களான நாங்கள் (உன்மீது உண்டான) அன்பினால் உன்னை (தோழமையினால்) சாதாரணப் பெயராலே நாங்கள் அழைத்ததைக் குறித்து (அடியார்க்கு அருள்புரியும் அண்ணலான நீ) கோபிக்காமல் எங்களுக்கு வேண்டியவைகளைத் தந்தருளவேண்டும்.*

*கல்வி குலம் முதலிய உலகப் பெருமைகள் இல்லாதவர்க்கும் பக்தியினால் பகவானுடைய அருளைப் பெறுதல் எளிதாகும் என்பது கூறப்படுகின்றது. உன் தன்னோடு ....ஒழியாது—பகவானுக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள சம்பந்தம் அனாதியும் நித்யமும் ஆனது; அதைப் பகவானாலும் ஆத்மாக்களாலும் தனியாகவும் சேர்ந்தும் ஒழிக்க முடியாது -'என்று நீ அன்று நான்' (மாணிக்கவாசகர்.)*

## *20. 'உனக்கே நாம் ஆட் செய்வோம்'*

சிற்றஞ்சிறுகாலே வந்து(உ)ன்னைச் சேவித்து(உ)ன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து(உ)ண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் (மாற்று)ஏலோர் எம்பாவாய்.

—*திருப்பாவை*, 29.

*அதிகாலையிலே (நாங்களே உன்னைத்தேடி) வந்து, வணங்கி, உன்னுடைய அழகிய திருவடித்தாமரைகளைத் துதிக்கும் குறிப்பைக் கேட்டருளவேண்டும். பசுக்களை மேய்த்து (அவைகள் பசி தீர்ந்தபின்) தாங்கள் உண்கிற*

இடைக்)குலத்தில் தோன்றியுள்ள நீ, நாங்கள் செய்யும் குற்றேவல்களை ஏற்றுக்கொள்ளாமற் போதல் தகாது. கோவிந்தனே! (பசுக்களைக் காத்தவனே) 'இன்றைக்கு ஒரு பலனைப்பெற்று விலகுதற்காக அல்ல; எக்காலத்தும் (எப்பிறவியிலும்) ஏழு ஏழு (பல) பிறவிகளிலும் உன்னோடு சம்பந்தம் உடையவர்கள் ஆகக்கடவோம். உனக்கே நாங்கள் அடிமைசெய்யக் கடவோம். எங்களுடைய மற்ற எல்லா விருப்பங்களையும் தவிர்த்தருளவேண்டும்.

ஜீவர்கள் பகவானுக்குத் தொண்டு செய்யவேண்டும். தொண்டு செய்யும்போது தமக்கென ஒரு பலனையும் கருதாமல் இருக்கவேண்டும். பகவானுடைய பிரீதி ஒன்றுக்காகவே செய்தல்வேண்டும். இந்தக் கோரிக்கைக்கு விரோதமான எவ்வித நினைவுகளும் ஆசைகளும் உண்டாகாமல் இருக்கவேண்டும். இதுவே பகவானிடம் வேண்டுவதற்குரிய மிக உயர்ந்த பிரார்த்தனையாகும்.

## 21. 'மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்'

வானிடை வாழும் அவ் வானவர்க்கு
  மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
  கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை ஆழி சங்கு (உ)த்தமர்க்கென்று
  உன்னித்தெழுந்த என் தட முலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
  வாழ கில்லேன் கண்டாய் மன்மதனே!

—நாச்சியார் திருமொழி, 1. 5.

மன்மதனே! தேவலோகத்திலே வாழ்கின்ற அந்தத் தேவர்களுக்காக (இங்குள்ள) அந்தணர்கள் (தாங்கள் செய்கின்ற) யாகங்களில் கொடுக்கும் அவிசை(உணவைக்) காட்டிலே திரிகின்ற நரியொன்று (அங்கு) புகுந்து அதைத் தனக்கு ஆக்கிக்கொள்வதையும், மூக்கினால் மோப்பதையும் செய்வதுபோல, (சத்துருக்களுடைய உடலைப் பிளப்பதற்காக) திருமேனியிலே சக்கரத்தையும்

சங்கையும் உடைய புருஷோத்தமனுக்கு உபயோகமாகும்படிக் கிளர்ந்து எழுந்த எனது பெருத்த முலைகளானவை மனிதர்களுக்கு என்கிற வார்த்தை (என்காதில்) படுமானால், என்னால் உயிர்தரித்திருக்க முடியாது, இதை அறிவாயாக.

ஆண்டாள் இளம்பிராய முதல் கண்ணனையே தனது நாயகனாக வரித்து, தனது உடல்பொருள் ஆவி எல்லாவற்றையும் அவனுக்கே உரிமையாக்கி, அவனிடத்திலேயே மனம் ஈடுபட்டவளாக வாழ்ந்துவந்தாள். ஆதலால் மனிதரை மணப்பதான பேச்சையே கேட்கச் சகியாதவளானாள் என்பது கருத்து.

### 22. 'வைகுந்தன் என்பதோர் தோணி'

என்பு(உ)ருகி இனவேல் நெடுங்கண்கள்
இமை பொருந்தா பலநாளும்
துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதுஓர்
தோணி பெறாது (உ)ழல்கின்றேன்
அன்புடையாரைப் பிரிவுறும் நோய்
அது நீயும் அறிதி குயிலே!
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்
புண்ணியனை வரக் கூவாய்.

—நாச்சியார் திருமொழி, 5. 4.

குயிலே! எலும்புகள் உருகிப்போனது மல்லாமல் (ஒன்றுக்கொன்று) ஒப்பான, வேல்போன்ற (காதளவும்) நீண்டிருக்கிற என்னுடைய கண்களானவை நெடுங்காலமாக இமைகொட்டவில்லை; (நாலேனவென்றால் அவனைக் கூடப் பெறாமையாலே) துக்கக் கடலில் அமிழ்ந்து (அதைக் கடப்பதற்கு) ஸ்ரீ வைகுந்தநாதன் என்று சொல்லப்படுகிற ஒரு தோணியைக் கிட்டப்பெறாமல் தடுமாறுகிறேன். காதலரைப்பிரிந்து படுகிற விசனத்தை நீயும் அறிவாய் அல்லவா? (ஆதலால்) பொன் நிறமுள்ள சரீரத்தையுடைய கருடக் கொடியையுடைய தரும வடிவான கிருஷ்ணனை வரும்படி நீ கூவவேண்டும்.

எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பேன்; துயரப் படாதே' என்பது. (பகவத் கீதை, அத். 18. சுலோ. 66.)

### 25. 'பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள்'

நடையொன்றில்லா உலகத்து நந்தகோபன் மகன்என்னும்
கொடிய கடிய திருமாலால் குளப்புக் கூறு கொளப்பட்டு
புடையும் பெயர கில்லேன்நான் போட்கன் மிதித்த அடிப் [பாட்டில்
பொடித்தான் கொணர்ந்து பூசீர்கள் போகா உயிர் என்உட [ம்பையே.

—நாச்சியார் திருமொழி, 13. 6.

இந்த லோகத்திலே ஒரு மரியாதை அற்றவனாய் ஸ்ரீ நந்தகோபருடைய பிள்ளையான கிருஷ்ணனாய் (தன் காரியத்தையே கவனிக்கும்) கொடியவனாய் (பிறர் துன்பம் அறியாத) கல் நெஞ்சனாய் இருக்கும் திருமாலாலே மிதித்த இடத்திலே மிதியுண்டு நான் பக்கத்திலும் கூட நகரச் சக்தி யற்றவளாக இருக்கிறேன். வெட்கங் கெட்டவனான கிருஷ்ணன் மிதித்த இடத்தில் உள்ள பொடியைக் கொண்டுவந்து பூசப் பாருங்கள்; (அது செய்தீர்களாகில்) பிராணன் என் உடம்பை விட்டுப் போகாது.

கண்ணன் மீதுள்ள பிரேமையின் மிகுதியினால் பிரிவாற்றாது வாட்டம் அடையும் ஆண்டாள், அதைத் தீர்ப்பதற்கு, அவனோடு சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு பொருளே மருந்தாகும் என்கிறாள்.

### 26. 'விருந்தா வனத்தே கண்டோமே'

கார்த்தண் கமலக் கண்என்னும்
  நெடுங் கயிறு படுத்திஎன்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடும்
  ஈசன் தன்னைக் கண்டீரோ?

### 23. 'கனாக் கண்டேன் தோழீ நான்'

இம்மைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ நான்.

—நாச்சியார் திருமொழி, 6. 8.

தோழீ! இப்பிறப்புக்கும் ஏழு ஏழு பிறவிகளுக்கும் (எக்காலத்திற்கும்) துணையாகி, நமக்கு உடையவனான, நாராயணனான கிருஷ்ணன் (தனது தாமரை மலர் போன்ற) சிவந்த திருக்கைகளாலே என்காலைப் பிடித்து அம்மி மிதிக்க வைப்பதாக நான் ஒரு கனவு கண்டேன்.

கலியாணகாலத்தில் மணமகளின் காலைப்பிடித்து ஓர் அம்மியின்மீது ஏற்றிவைப்பது ஒரு சடங்கு. இப் பதிகம் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய விவாக காலத்தில் 'ஆசீர்வாதம்' செய்யும்போது ஓதப்படுவது.

### 24. 'தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர்'

செம்மை உடைய திருவரங்கர் தாம் பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டு இருப்பர்
தம்மை உகப்பாரைத் தாம் உகப்பர் என்னும்சொல்
தம் மிடையே பொய்யானால் சாதிப்பார் ஆர்இனியே?

—நாச்சியார் திருமொழி, 11. 10.

(நினைவும் சொல்லும் செயலும்) ஒரே தன்மையாய் உள்ள திருவரங்கச் செல்வராகிய கிருஷ்ணபகவான் அருளிச்செய்த உண்மையான பெருமை வாய்ந்த கீதா வாக்கியத்தை விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்) கேட்டு (அதன்படியே) நடந்து ஒழுகுவார்; 'தம்மைக் கொண்டாடுபவர்களைத் தாம் கொண்டாடுவார்' என்கிற பழமொழி பகவானிடத்திலேயே பொய்யாய்ப் போய் விட்டால் இனி மெய்யாக்குவார் யார்?

மெய்ம்மைப் பெருவார்த்தை - 'எல்லாத் தருமங்களையும் விட்டு என்னையே சரண் அடைக; நான் உன்னை

போர்த்த முத்தின் குப்பாயப்
புகர்மால் யானைக் கன்றேபோல்
வேர்த்து நின்று விளையாட
விருந்தா வனத்தே கண்டோமே.

—நாச்சியார் திருமொழி, 14. 4.

*மேகம்போல, குளிர்ந்த தாமரை மலர்ந்தாற்போ லிருக்கிற, திருக் கண்களாகிற (போன இடம் எங்கும் போய்த் தப்பாதபடி அகப்படுத்திக் கொள்ளக் கூடிய தான) நீண்ட கயிற்றிலே என்னை அகப்படுத்தி இழுத் துக்கொண்டு விளையாடும் ஈசனாகிய கிருஷ்ணனைக் கண் டீரோ? முத்துச் சட்டை பூண்டு புள்ளிகளையுடைய பெரிய யானைக்குட்டி போலே, (வெயிலும் பாராதே பசுக்களைப் புல்லுள்ள இடந்தேடி மேய்க்கையாலே) வேர்வையுற்று நின்று விளையாடுவதைப் பிருந்தாவனத் திலே கண்டோம்.*

*கண் என்னும்....கொண்டு - கண்ணனுடைய அருட் பார்வையில் பட்டவர்கள் அதனுடைய கவர்ச்சிக்குத் தப்பமுடியாமல், அவனுக்கே தமது உள்ளத்தைப் பறி கொடுத்து விடுவார்கள் என்றவாறு.*

## *27. 'என்று கொலோ புரளும் நாளே?'*

தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம்குழுமித் திருப்புகழ்கள் பலவும்பாடி
ஆராத மனக்களிப்போ(டு) அழுத கண்ணீர்
மழைசோர நினைந்(து),உருகி ஏத்தி நாளும்
சீர்ஆர்ந்த முழலோசை பரவை காட்டும்
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
போர்ஆழி அம்மானைக் கண்டுதுள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே?

—பெருமாள் திருமொழி, 1.9.

*(ஒருக்காலும்) நிரம்பாத (தணியாத) ஆசையை யுடைய மனம் உடையவராய், அடியார்களுடைய கூட்*

டத்திலே கலந்து (அவனுடைய குணங்களைக் குறிக்கும்) திருநாமங்கள் பலவற்றையும் பாடி (அதனாலே) தெவிட்டாத மனக் களிப்பாலே அழுத கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் மழைபோலப் பெருக, (அவனை) நினைந்து (அதனால்) உருகி, துதித்து, நாள்தோறும் சிறப்பு மிக்க வாத்தியங்களின் ஓசை கடலொலிபோன்றதாயுள்ள திருவரங்கக் கோயிலிலே அரவணையில் பள்ளிகொள்ளும், சக்கராயுதத்தைக் கையிலே உடைய ஈசுவரனைக் கண்டு ஆனந்தக் கூத்தாடிப் பூமியில் புரளும் காலம் என்று வருமோ ?

28. 'தொண்டர் அடிப் பொடி ஆட நாம் பெறில்'

தோடு(வு) லாமலர் மங்கைதோள்இணை
தோய்ந்ததும்சுடர் வாளியால்
நீடுமாமரம் செற்றதும் நிரைமேய்த்ததும்
இவையே நினைந்து
ஆடிப் பாடி அரங்கவோ! என்(று) அழைக்கும்
தொண்ட ரடிப்பொடி
ஆடநாம்பெறில் கங்கை நீர்குடைந்(து) ஆடும்
வேட்கைஎன் ஆவதே ?

—பெருமாள் திருமொழி, 2. 2.

இதழ் மிகுந்துள்ள தாமரைப் பூவில் வீற்றிருக்கும் இலக்குமிப் பிராட்டியின் திருத்தோள்களோடு அணைந்தருளினதும், ஒளி மிக்க ஒரே அம்பாலே உயர்ந்த மராமரங்கள் ஏழையும் எய்ததும், பசு நிரையை மேய்த்ததும் (ஆகிய இந்த லீலைகளையே)நினைத்து (அன்பினாலே இருந்த இடத்தில் இருக்க மாட்டாதே) ஆடிப் பாடி, 'ஓ, அரங்கனே!' என்று கூப்பிடுகிற அடியார்களின் பாத தூளியிலே நாம் மூழ்க(அப்பாக்கியத்தை)ப் பெற்றால், கங்கையிலே நீராடும் ஆசையினால் என்ன பலன் உண்டாகும் ?

29. 'பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே'

பேயரே எனக்கு யாவரும் யானும்ஓர்
பேயனே எவர்க்கும் இது பேசிஎன்

செடி போல (திரும்பத் திரும்ப முளைக்கும்) கொடிய வினைகளை அழிக்கும் விஷ்ணுவே, மேன்மையானவனே! திருவேங்கட மலையில் எழுந்தருளி யிருப்பவனே! உன் கோயிலினுடைய வாசலிலே (உன்னை வணங்க வரும்) அடியார்களும் தேவர்களும், தேவ மாதர்களும் (ஆவலோடு) இருந்து நடந்து செல்லும்படியாகக் கிடந்து உம்முடைய பவளம் போன்ற வாயைக் காண வேண்டும்.

படியாய்........காண்பேனே—படியைப் போல எனக்கென்று ஒரு செயலும் இல்லாமல், உன் திருவுள்ளப் படியே அமைந்து கிடந்தாவது, உனது காட்சியை எப்போதும் பெறவேண்டும். இக்காரணம் பற்றியே வைணவ ஆலயங்களில், மூலஸ்தானத்திற்கு முன்னுள்ள வாசற்படி 'குலசேகரன் படி' என்று வழங்கப்படும்.

### 32. 'வங்கத்தின் கூம்பு ஏறும் மாப் பறவை போன்றேனே'

வெங்கண் திண் களிறடர்த்தாய்! வித்துவக்கோட்டம்மானே!
எங்குப்போய் உய்கேன் உன் இணைஅடியே அடையலல்
[லால்
எங்கும்போய்க் கரைகாணுதெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே.

—பெருமாள் திருமொழி, 5. 5.

கொடிய கண்ணையும் திண்ணிய நெஞ்சையும் உடைய (குவலயாபீடம் என்ற) யானையைக் கொன்றவனே! வித்துவக்கோடு (என்னும் திருப்பதியில்) எழுந்தருளி யிருப்பவனே! (ஒப்பற்ற) உமது இரண்டு திருவடிகளையே நான் புகலாக அடைவதொழிய, வேறு புகலிடம் இல்லை நாலு திக்குகளிலும் போய்ப்பார்த்து, கரையைக்காணுத படியாலே அலை எறிகிற சமுத்திரத்திலே திரும்பிவந்து அங்குள்ள கப்பலினுடைய கம்பத்தில் ஏறி அமருகின்ற பறவையைப் போன்றவனுகின்றேன்.

எங்கும்...........போன்றேனே—பிறவிக் கடலிலே கிடந்து துன்பப்படும் உயிர்கள் முதலில் தமது ஆணவத்

ஆயனே! அரங்கா! என்றழைக் கின்றேன்
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரா னுக்கே.

—பெருமாள் திருமொழி, 3. 8.

*(உலகப்பற்று உடையார்) எல்லாரும் (பகவானையே விரும்பும்) எனக்குப் பேயர் போலத் தோன்றுகின்றனர் (அவர்கள் மதிப்பிலே) நானும் ஒரு பேயனாகத் தோன்றுகிறேன். இதைப்பற்றி (விவரித்துப்) பேசுவதில் என்ன பயன்? கிருஷ்ணனே! என்றும், திருவரங்கனே! என்றும் கூப்பிடுகிறேன். எனது பெருமானுக்கே (பத்திப்) பித்தனாகி விட்டேன்.*

## 30. 'மீனாய்ப் பிறக்கும் விதி உடையேன்'

ஆனாத செல்வத்(து) அரம்பையர்கள் தற்சூழ
வான்ஆளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதிஉடையேன் ஆவேனே.

—பெருமாள் திருமொழி, 4. 2.

*அழியாத (இளமையாகிய) செல்வத்தையுடைய அரமபை முதலான தேவமாதர்கள் சூழ்ந்து நிற்க, சுவர்க்கத்தை ஆளுகையாகிய செல்வத்தையும் (இந்திர பதவியையும்) பூலோகத்தை ஆளுகையையும் நான் விரும்பவில்லை; தேன் மிகுந்துள்ள புஷ்பங்களையுடைய சோலை சூழ்ந்த திருவேங்கட மலையில் உள்ள நீர்ச் சுனைகளிலே மீனாக ஆவது பிறக்கத்தக்க விதியுடையவனாக ஆவேன்.*

## 31. 'படியாய்க் கிடந்து உன் பவள வாய் காண்பேனே'

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து(உ)ன் பவளவாய் காண்பேனே.

—பெருமாள் திருமொழி, 4. 2.

தால் பலவித வழிகளிலே முயன்று கடைத்தேறலாம் என்று நினைக்கிறார்கள்; ஆனால் கடலிலே நாலா பக்கங்களிலும் பறந்து திரிந்து, கரை காணமல் சோர்ந்து கப்பலில் உள்ள பாய்மரத்தின்மீது அமர்ந்து இளைப்பாறி, சுகமாகக் கரை சேர்கின்ற பறவை போல, உயிர்களும் இயன்றவரை முயன்றும் தங்களது முயற்சி பயன் படாது போனதைக் கண்ட பின்பே, இறைவனது திருவடிகளையே புகலாகப் பற்றி அவனது அருளால் பேரின்பப் பேற்றை அடைகின்றனர்.

## 33. 'நின்னையே தான் வேண்டி நிற்பன்'

நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல், மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக் கோட்டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே.

—பெருமாள் திருமொழி, 5. 9.

உன்னையேவேண்டி (அளவில்லாத) பெருஞ் செல்வத்தை விரும்பாதவனையே வலியவந்து அடையும் செல்வம்போலவே, மின்னல்போன்று ஒளிவிடும் சக்கராயுதத்தையுடைய, வித்துவக்கோட்டில் எழுந்தருளியுள்ள பெருமானே, உம்முடைய மாயையால் நீர் என்னை விரும்பாவிட்டாலும், அடியேன் உம் ஒருவரையே விரும்பி நிற்பேன்.

இறைவனையே வேண்டிச் செல்வத்தை வேண்டாதிருப்பார்க்குச் செல்வம் • அடிமைசெய்ய முன்வந்து நிற்கும் என்றவாறு.

## 34. 'மார்வில் மன்னிடப் பெற்றிலேன்'

தண்ணந் தாமரைத் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்தெழுந்து தளர்ந்த ஓர் நடையால்
மண்ணில் செம்பொடி ஆடிவந்துஎன்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன் அந்தோ!

வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்க்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடுவினையேன்
என்னை என்செய்யப் பெற்றது எம்மோயே.

—*பெருமாள் திருமொழி*, 7. 6.

*குளிர்ந்து அழகியதான தாமரைபோன்ற திருக்கண்களையுடைய கிருஷ்ணனே! நீ தவழ்ந்துகொண்டு எழுந்திருந்து தளர்நடையாலே, சிவந்த புழுதிமண்ணில் விளையாடி (அக்கோலத்தோடே) வந்து, என்னுடைய மார்பிலே (கட்டிக்கொண்டு) பொருந்தும்படிக் கிடக்க நான் பெறவில்லையே! ஐயோ! அழகியதாய், சிவந்த சிறிய கையில் ஐந்து விரல்களாலும் வாரிக்கொண்டு (நீ) அமுது செய்த உணவினுடைய எச்சிலை நான் உண்ணப்பெறவில்லையே. (அப்படி அநுபவிக்கப் பெறாத) பெரும்பாவத்தைப் பண்ணினேனே. ஐயோ! என் தாயாரானவள் என்னை எதற்காகப் பெற்றாளோ? (என் பிறவி வீணாயிற்று).*

*இப்பதிகத்தில் குலசேகராழ்வார் தம்மைத் தேவகியாகப் பாவித்து, கண்ணனது பாலலீலைகளை(யசோதைப் பிராட்டி அநுபவித்ததுபோல) தாம் அநுபவிக்கப் பெறாமையைக் குறித்து நொந்துகொள்கிறார்.*

## 35. ‘*இறைஞ்சுமினோ எப்பொழுதும்*’

அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றி
அடல்அரவப் பகைஏறி அசுரர் தம்மை
வென்றிலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம் மேவி
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம்தன்னுள்
என்று(ம்)நின்றான் அவன்இவன் என்றேத்தி நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர்! நீரே.

—*பெருமாள் திருமொழி*, 10. 10.

(இராமவதார முடிவில் பரமபதம் செல்லும்) அந் நாளில் சர அசரங்களை யெல்லாம் பரமபதத்திற்கு அனுப்பி, வலிமையுடைய பாம்புகளுக்கெல்லாம் பகைவன் ஆன (பெரிய திருவடியென்கிற) கருடன்மீது ஏறிக் கொண்டு, அசுரர்களை ஜெயிக்கையாலே விளங்குகிற அழகிய நீண்ட நான்கு திருத்தோள்கள் தோன்றவும், பரமபதத்தில் உள்ளோர் எல்லோரும் எதிர்கொண்டு வரத் தன்னுடைய வைகுண்டத்திலே போய்ப்புகுந்து இனிதாக (சிங்காதனத்திலே) தன்பெருமை தோன்ற எழுந்தருளியிருந்த ஈசனாகிய தில்லைநகர் திருச்சித்திர கூடத்தில் நித்தியமாக வாழ்பவனை, தொண்டர்களாகிய நீங்கள் 'அவன் அப்படிப்பட்டவன், இப்படிப்பட்டவன்' என்று இடைவிடாமல் துதித்து,நாள்தோறும் வணங்குங் கள்.

ஸ்ரீ ராமபிரான் வைகுந்தத்திற்கு எழுந்தருளுமுன் அயோத்தியில் வாழ்ந்த சராசரங்கள் எல்லாவற்றிற்கும் தனது அளவற்ற கருணையால் பரமபதம் அருளினன்; ஆகையினால் அந்த அருள்மூர்த்தியை வணங்குங்கள் என்கிறார். (சர அசரங்கள் - இடம்விட்டு இடம்செல்லக் கூடியவையும் செல்லக்கூடாதவையுமாகிய இருவகை உயிர்ப்பொருள்கள்.)

## 36. 'பிறந்த பின் மறந்திலேன்'

நின்றது எந்தை ஊரகத்(து) இருந்தது எந்தை பாடகத்து
அன்றுவெஃகணைக் கிடந்த(து) என்இலாத முன்எலாம்
அன்றுநான் பிறந்தலேன் பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சுளே.

—திருச்சந்த விருத்தம், 64.

பகவான் திருஊரகம் என்னும் திருப்பதியில் நின்றருளினதும், திருப்பாடகம் என்ற திருப்பதியில் வீற்றிருந்ததும், (எனக்கு ஞானம் பிறக்காத காலமாகிய) அன்று திருவெஃகா என்னும் திருப்பதியில் பள்ளி கொண்டருளினதும், நான் அவரை நாடாத முற்கால

மெல்லாம், அக்காலத்தில் நான் (ஞானப்பிறவி) பெற்றிலேன். (அப்பிறவி) பிறந்தபின் (ஒரு கணப்பொழுதும்) மறக்கவில்லை. (பின்பு) பகவான் நின்றதும் இருந்ததும் பள்ளிக்கொண்டதும் என்னுடைய நெஞ்சுக்குள்ளே ஆயின.

பகவானிடம் பக்தி செய்தலும் அவன் அருளைப் பெறுதலுமே மனிதப் பிறவியின் பயன்களாம்; அவைகளைப் பெறாதபோது ஆழ்வார் தம்மைப் 'பிறந்திலேன்' என்கிறார்.

ஒப்பிடுக :

"கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே
பற்றா வந்தடியேன் பிறந்தேன், பிறந்தபின்னை
வற்றா நீர்வயல் சூழ்வயலாலி அம்மானைப்
பெற்றேன் பெற்றதுவும் பிறவாமைப் பெற்றேனே"

பெரிய திருமொழி 8. 9 8.

"மற்றுப் பற்றெனக்கு இன்றி நின் திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மைவந்து எய்தினேன்."

—சுந்தரர்.

## 37. 'அன்பில் அன்றி யாவர் காணவல்லரே?'

புன்புல வழிஅடைத்து அரக்கு(இ)லச்சினை செய்து
நன்புல வழிதிறந்து ஞானநற் சுடர்கொளீஇ
என்பில் எள்கி நெஞ்சு(உ)ருகி உள்கனிந்தெழுந்ததோர்
அன்பில் அன்றி ஆழியானை யாவர்காண வல்லரே?

—திருச்சந்தவிருத்தம், 76.

புலன்கள் அற்பமான (இன்பங்களை நாடும்.) அந்த வழியை அடைத்து, அரக்கு முத்திரை இட்டு, (பகவானை நாடும்) நல்ல வழியைத் திறந்து, நன்றான ஞான தீபத்தை ஏற்றி, (பக்தியினால்) சரீரம் எலும்பு அளவாகக் குறைந்து, நெஞ்சு உருகி, உள்ளே பக்குவமாகி (பரம பக்தி ரூபமாகப் பெருகி) எழுந்த ஓர் அன்பினால் அல்லாமல் திருவாழியைக் கையில் தரித்திருக்கும் ஈசனைக் காண்பதற்கு யார் வல்லவர்?

*ஒத்து ஒவ்வாத பல் பிறப்பு - வாழ்க்கைப் பயனைப் பெறுவதற்கு அநுகூலமானதும் அநுகூலமில்லாததும் ஆன இருவகைப்பட்ட பல பிறவிகள், என்னலுமாம்.*

### 40. 'நாமம் கற்ற ஆவலிப்பு'

காவலில் புலனை வைத்துக் கலி தன்னைக்
 கடக்கப் பாய்ந்து
நாவலிட்டு (உ)ழி தருகின்றோம் நமன்தமர்
 தலைகள் மீதே
மூவுலகு உண்டு (உ)மிழ்ந்த முதல்வ!
 நின் நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டாய் அரங்கமா
 நகர் உளானே. —திருமாலை, 1.

*மூன்று உலகங்களையும் (பிரளயகாலத்திலே) திரு வயிற்றிலே வைத்துக் காத்து (பின்பு) வெளியில் கொண்டுவந்த முதற்காரணனே! உன்னுடைய திரு நாமத்தை (ஆசாரியன் மூலம்) கற்ற செருக்கினாலே (தைரியத்தாலே) (ஐந்து) இந்திரியங்களையும் (இதர விஷயங்களில் செல்லாதபடி) அடக்கி, பாபங்களை (முற்றிலும்) போக்கி, யமன் தலையிலும் அவன் தூதர்கள் தலையிலும் (வெற்றி தோன்ற) ஆரவாரம் செய்து திரிகிறோம் கண்டாய்.*

### 41. 'அச்சுவை பெறினும் வேண்டேன்'

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய்
 கமலச் செங்கண்
அச்சுதா! அமரர்ஏறே! ஆயர்தம் கொழுந்தே!
 என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர
 லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா
 நகர்உளானே. —திருமாலை, 2.

### 38. 'குற்றம் நற்றமாகவே கொள்'

வைது நின்னை வல்லவா பழித்தவர்க்கும், மாறில் போர்
செய்து நின்ன செற்றத் தீயில்வெந்தவர்க்கும், வந்து(உ)ன்னை
எய்தலாகும் என்பர் ஆதலால் எம்மாய! நாயினேன்
செய்த குற்றம் நற்றமாகவே கோள் ஞாலநாதனே!

—திருச்சந்தவிருத்தம், 111.

(துதிக்கப்படுவதற்கு உரியனான) உன்னை மிகுதியாக வைது நிந்தித்த (சிசுபாலன் முதலிய) வர்க்கும், (உன்னுடன்) ஒப்பில்லாத யுத்தத்தைச் செய்து உன்னுடைய கோபமாகிய நெருப்பில் வெந்துபோன (இராவணன், கம்சன் முதலிய) வர்க்கும் உன்னை வந்து அடையலாகுமென்று (ஆன்றோர்) சொல்கின்றனர். ஆதலால், என்னுடைய மாயனே! உலக நாதனே! (வேறு கதியற்று உன்னையே புகலாகக் கொண்ட) எளியேன் செய்த குற்றத்தைக் குணமாகவே நீ கொண்டருள வேண்டும்.

### 39. 'எத்தினால் இடர் கடல் கிடத்தி'

அத்தனாகி அன்னை ஆகி ஆளும் எம்பிரானுமாய்
ஒத்(து) ஒவ்வாத பல் பிறப்புஒழித்து நம்மை ஆட்கொள்
முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார் [வான்
எத்தினால் இடர்க் கடல் கிடத்தி? ஏழை நெஞ்சமே!

—திருச்சந்தவிருத்தம், 115.

முத்தியை அளிப்பவனும் முகுந்தனுமான பகவான் (ஆத்மா சம்பந்தப்பட்டமட்டில்) ஒன்றையொன்று ஒத்தும், (உடல்கள் சம்பந்தப்பட்டமட்டில்) ஒன்றுக்கு ஒன்று ஒவ்வாமலும் இருக்கிற நமது பல பிறப்புக்களைப் போக்கி; நம்மை அடிமை கொள்ளுகைக்காக (நன்மையைச் செய்யும்) தகப்பனுமாகி, (பிரியத்தைச் செய்யும் தாயுமாகி, அடிமை கொள்ளுதற்குரிய நாதனுமாகி, பிரவேசித்து நம்மிடத்திலே (விரும்பி) பொருந்தினார். அறிவிலியான நெஞ்சமே! நீ எதனால் துக்கக் கடலில் கிடக்கிறாய்.

திருவரங்கம் என்னும் நகரில் கோயில் கொண்டருள் பவனே! பெரிய மரகத மலையை யொத்த திருமேனியை யும், பவளத்தை யொத்த வாயையும், தாமரை மலரை ஒத்த சிவந்த திருக்கண்களையு முடையவனாய், 'சரண மடைந்தவரை நழுவ விடாதவனே!' நித்தியர்களுக்கு அதிபதியே! இடையர்களுக்கு இனியவனே!' என்று (திருநாமங்களைச் சொல்லி) இப்படி அநுபவிக்கும் (ருசியை) ஆனந்தத்தை விட்டு நான் (நெடுந்தூரம்) போய் இந்திரலோகத்தை ஆளுகிற அந்தச் சுகத்தைப் பெற்றாலும் விரும்ப மாட்டேன்.

### 42. 'ஆதலால் பிறவி வேண்டேன்'

வேத நூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன் அதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகர்உளானே!

—திருமாலை, 3.

மனிதர்கள், வேதங்கள் சொல்கிறபடியே நூறு வய தளவும் உயிரோடு இருப்பார்களே யானாலும், (அதில்) பாதியான (ஐம்பது வருஷங்கள்) தூக்கத்திலே கழிந்து விடும்; மிகுந்திருக்கிற ஐம்பது வருஷங்களோ வென்றால், (தாயின் அறிவின்படி நடக்கும்) குழந்தைப் பருவமும், (செய்யும் குறும்பைக் கண்டிக்க மாட்டாத) பால்யப் பருவமும், சிற்றின்பப் பிரியனாய்த் திரியும் யௌவனப் பருவமும் வியாதியும் பசியும் கிழத்தனமும் துன்பமு மாகக் கழிந்துவிடும். ஆகையாலே, (நான்) மானிட ஜன்மத்தை (ஒரு போதும்) விரும்பமாட்டேன், அரங்க நகரில் கோயில் கொண்டிருப்பவனே!

### 43. 'உடல் எனக்கு உருகு மாலோ'

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென் திசை இலங்கை நோக்கி

கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக் கு(உ)ருகும் ஆலோ! என் செய்கேன்?
[உலகத்தீரே! —திருமாலை, 19.

*மேற்கே திருமுடியை வைத்தருளி, கிழக்கே திருவடிகளை நீட்டி, வடக்கே (உள்ளவர்களுக்குப்) பின் அழகைக் காட்டியருளி, (ஸ்ரீ விபீஷணனுக்காக) தெற்கே உள்ள இலங்கையைப் பார்த்துக் கொண்டு, கடல் நீரை ஒத்த (நீல) நிறத்தையுடைய ஈசனாகிய என் அரங்கன் திருஅனந்தாழ்வான் ஆகிற படுக்கையிலே நித்திரை செய்கிற படியைக் கண்டு என் உடலானது (பக்தி பரவசத்தால்) உருகுகின்றது. உலகத்தில் உள்ளவர்களே! என்ன செய்யப் போகிறேன், நான்?*

## *44. 'என் உள்ளே சிரித்திட்டேனே'*

உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான்
உணர்வொன்றில்லா
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த் தொண்டுக்கே
கோலம்பூண்டு
உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடன்இருந்து
அறிதி என்று
வெள்கிப்போய் என்னுள்ளே நான் வில(வு)அறச்
சிரித்திட்டேனே —திருமாலை, 34.

*நெஞ்சிலே (எப்போதும்) வாழ்கிறதிருமாலை 'இவன் நம் உள்ளே இருக்கிறான்' என்பதை அறியாததன்மையை (பிறர் காணாதபடி) மறைத்து வைத்து (உன்னுடைய) அடிமை போல ஆகி அடியார்களைப் போல வெளி வேடம் தரித்து, நினைப்பார் (தம் மனத்தே) நினைப்பவற்றை யெல்லாம்கூட இருந்து அறிவாய் என்று, எனக்கு உள்ளே நான் வெட்கப்பட்டு, என் விலா ஒடியும்படிச் சிரித்தேன்.*

*ஒப்பிடுக :—*

**"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித், தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன் நாடிக் கண்**

டேன், உள்குவார் உள்கிற்(று) எல்லாம் உடன் இருந்து அறிதி என்று, வெள்கினேன் வெள்கிநாணும் விலாவிறச் சிரித்திட்டேனே."

—திருநாவுக்கரசர்

## 45. 'வழிபட அருளினாய்'

பழு(து) இலா ஒழுகல் ஆற்றுப் பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத் தவர்க ளேலும் எம்அடி யார்கள் ஆகில்
தொழுமின்நீர் கொடுமின் கொண்மின் என்றுநின் னோடும் [ஒக்க
வழிபட அருளி னாய்போல் மதிள்திரு அரங்கத் தானே.

—திருமாலை 42.

*'குற்ற மற்ற வம்ச பரம்பரையில் வந்தவர்களான நான்கு வேதங்களையும் ஓதினவர்களே! நம் அடியார்கள் ஆவார்களானால் அவர்கள் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களேயாகிலும் நீங்கள் அவர்களைத் தொழுங்கள்; (உங்களுக்குத் தெரிந்த உயர்ந்த ஞானத்தை அவர்களுக்கு) உபதேசியுங்கள். (அவர்களிடம் உள்ள ஞானத்தைப் பெற்றுக்) கொள்ளுங்கள்' என்று இப்படி அருளிச்செய்ததும், நீயாகவே கருதி அவர்களை வணங்கும்படிச் செய்தருளினாய், மதில் சூழ்ந்த திருவரங்கத்தில் கோயில் கொண்டருளுபவனே!*

*லோகசாரங்க முனிவராகிய அந்தணரை நோக்கி அரங்கநாதன், 'நீர் பஞ்சம குலத்தரான திருப்பாணாழ்வாரை உமது தோளில் ஏற்றிக்கொண்டு இங்கு வாரும்' என்று கட்டளை இட்டது இப்பாட்டில் குறிக்கப்படுகின்றது. 'சங்கநிதி.......கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.'*

*—அப்பர்.*

## 46. 'பள்ளி எழுந்தருளாயே'

சுடர்ஒளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்ஒளி சுருங்கி
படர்ஒளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாய்இருள் அகன்றது பைம்பொழில் கமுகின்

மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடல்ஒளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்(து) அம்மா! பள்ளி எழுந்தரு ளாயே.
—திருப்பள்ளி யெழுச்சி, 3.

பார்த்த இடம் எங்கும் சூரியனுடைய கிரணங்கள் பரந்தன; ஆகாயத்தில் நெருங்கியிருந்த நக்ஷத்திரங்களின் மினுக்கும் ஒளியானது குறைவு பட்டதுமன்றி, படரும் ஒளியையுடைய குளிர்ந்த சந்திரனும் ஒளி மங்கினன். பரந்த இருட்டானது நீங்கிற்று; விடியற் காலக் காற்றானது பசுமையான சோலைகளில் உள்ள பாக்கு மரங்களின் மடலைக் கீறி (அதனாலே) வளப்ப முள்ள பாளைகளின் மணத்தை (முகந்து கொண்டு) வீசிற்று. வலிமை யுடைய, பிரகாசம் விளங்குகிற சக்கரத்தைத் தரித்த அழகிய நீண்ட திருக்கைகளையுடைய அரங்கச் செல்வனே! நீ பள்ளி எழுந்தருள வேண்டும்.

## 47. 'அடியேனை ஆட்கொண்டதே'

பாரமாய பழவினை பற்றறுத் தென்னைத் தன்னுள்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள்புகுந்தான்
கோரமாதவம் செய்தனன்கொல் அறியேன் அரங்கத்தம்
[-மான் திரு
ஆர மார்(பு) அதன்றோ அடியேனை ஆட்கொண்டதே.
—அமலனாதிப்பிரான், 5.

தாங்குதற்கு அரிய, நெடுங்காலம் செய்த பாபங்களை வேரறுத்து, (பாபங்களுக்கு உறைவிடமான) என்னைத் தன் விஷயத்தில் அன்பு உண்டாகும்படி வைத்தான்; அதனுடன் நிற்காமல் என் மனத்துக்குள்ளும் புகுந்தான். (இப்படி அவன் புகுந்ததற்குக் காரணமாக) கடுமையான பெரிய தவங்களை நான் செய்தேனோ எனக்குத் தெரியாது. திருவரங்கத்திலே வளர்ந்தருளுகிற அழகிய மணவாளனுடைய இலக்ஷ்மி எழுந்தருளியுள்ள

முத்துமாலை அமைந்த அந்தத் திருமார்பு அல்லவா அடி யேனை ஆட்கொண்டது!

## 48. 'அமுது ஊறும் என் நாவுக்கே'

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெரு மாயன் என் அப்பனில்
நண்ணித் தென் குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுது ஊறும் என் நாவுக்கே.

—கண்ணிநுண் சிறுத்தாம்பு, 1.

பல பிணையல்களை யுடைய, நுட்பமான சிறிய கயிற்றினால் (யசோதைப் பிராட்டிக்குத் தாம்) கட்டுப்படுவதற்கு இசைந்த பெரிய மாயனை, எனக்கு நாதனை ஸ்ரீ கிருஷ்ணன் பெயரைச் சொல்வதைக் காட்டிலும், மனப் பூர்வமாக, தென்திசையிலே உள்ள குருகூர் (என்னும் திருப்பதியில் அவதரித்து ஞானம் பக்திகளில்) பூர்ணரான நம்மாழ்வார் திருநாமத்தைச் சொன்னால் (நினைத்த நெஞ்சம்) தித்திக்கிறது. நாக்கிலும் அமுதம் சுரக்கிறது.

தமது ஆசாரியராகிய நம்மாழ்வாரையே பகவானாகக் கருதி மதுரகவி யாழ்வார் வழிபட்டு முத்தியடைந்தவரா கையால், இவ்வாறு கூறினார். இவரது பாடல்கள் பத்தும் நம்மாழ்வார்மீதே பாடப்பட்டுள்ளன.

# திருமங்கையாழ்வார் : பெரிய திருமொழி

*49. 'கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்*

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

1. 1. 1.

*(கொள்கொம்பு இல்லாத கொடிபோல) வாடினேன்; வாடி மனத்தில் வருந்தினேன். மிக்க துன்பத்திற்கு இருப்பிடமான உடலில் பிறந்து, (உடலோடு) ஒன்றியினேன். அவ்வாறு உடல் வழியே நின்று இளம் பெண்களோடு பெறக்கூடிய சிற்றின்பத்தையே கருதி (அவர்களைப் பின்தொடர்ந்து) ஓடினேன். இவ்வாறு ஓடிக் கடைதேறுவதற்குக் காரணமாகும் பொருளான பகவானது கிருபையாலே, ஞானம் என்கிற பெரிய பதவியை அறிந்து, (நன்மை இது தீமை இது என்பதை) ஆராய்ந்தேன். ஆராய்ந்து, நான் நாராயணா என்கிற திருநாமத்தைக் கண்டு கொண்டேன்.*

*உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த திருமங்கையாழ்வார் தமக்கு அருள் புரியுமாறு வழிப்போக்கனது வடிவங்கொண்டு வந்த பகவானை இன்னாரென அறியாது வழிபறிக்கத் தொடங்க, அப்போது பகவான் தமது மெய்யுருவத்தைக் காட்டி நாராயண மந்திரத்தை உபதேசம் செய்தருளினார். இவ்வாறு ஞானம் பெற்றவுடன் ஆழ்வார் முதலிற் பாடிய பாசுரம் இது.*

### 50. 'எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்'

எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்
எனக்(கு) அரசு என்னுடை வாணாள்
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவர் உயிர்செகுத்த எம் அண்ணல்
வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

1. 1. 6.

*எனக்கு நன்மை செய்பவனாய், தகப்பனாய், எனக்கு (எல்லாவித) உறவினனுமாய், என்னை ஆண்டவனாய், என்னுடைய வாழ்நாளுமாய், அரக்கர்கள் பயப்படும்படி பாணங்களினாலே ஒன்றாகத்தள்ளி அவர்களுடைய உயிரைக்கொன்ற ஈசன் (நித்தியவாசம் பண்ணுகிற) வாசனை வீசும் சோலையையும் உயர்ந்த மதிளையுமுடைய தஞ்சை மாமணிக்கோயிலையே வணங்கி, பரிபூரண நிலையில் இருப்பவர்களே! நானும் உய்யும்படி நாராயணா என்கிற நாமத்தை அறியப்பெற்றேன்.*

### 51. 'அருளொடு பெருநிலம் அளிக்கும்'

குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படு துயர்ஆயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்(பு) அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லைநான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

1. 1. 9.

'நாராயணா' என்ற திருநாமமானது (தன்னை உச்சரித்தவர்களுக்கு) உயர்ந்த குலத்தைக் கொடுக்கும்; ஐச்வர்யத்தைத் தரும்; அடியார்கள் (அநுபவித்தே) கழிக்கவேண்டிய துக்கங்களை யெல்லாம் தரை மட்டம் செய்துவிடும். (வேரோடு அழித்துவிடும்.) பரமபதத்தைக் கொடுக்கும்;கிருபையோடுகூட, (தொண்டுசெய்யும்) பெரிய பதவியையும் தரும்; வெற்றியை பிறநன்மைகளையும் தரும்; பெற்ற தாயைக் காட்டிலும் மிக்க நன்மையானவற்றைச் செய்யும்; எல்லா நன்மைகளையும் தரத்தக்க திருநாமத்தை நான் காணப்பெற்றேன்.

## 52. 'உன்தன் சரணமே சரணம்'

ஊனிடைச் சுவர்வைத்(து) என்புதூண் நாட்டி
உரோமம் வேய்ந்(து) ஒன்பது வாசல்
தானுடைக் குரம்பை பிரியும்போது (உ)ன் தன்
சரணமே சரணம் என்றிருந்தேன்
தேனுடைக் கமலத் திருவினுக்(கு) அரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்
நானுடைத் தவத்தால் திருவடி அடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 1. 6. 9.

மாமிசத்தை இடையிடையே சுவராக வைத்து, எலும்பைத் தூணாக நட்டு மயிராலே மூடப்பட்டதாய், ஒன்பது துவாரங்களையுடைய குடிசையாகிய இந்தச் சரீரத்தைவிட்டு உயிர்பிரியும் காலத்தில், உன்னுடைய திருவடிகளே புகலாகவேண்டும் என்று நினைத்திருக்கிறேன். தேனையுடைய தாமரைப்பூவில் இருக்கிற இலக்குமிதேவிக்கு நாயகனே! அலைகளையுடைய பெரிய ஆழ்ந்த (திருப்பாற்) கடலிலே பள்ளிகொண்டவனே! (இப்போது) என்னுடைய தவத்தினால் தேவரீர் திருவடிகளை அடையப்பெற்றேன், நைமிசாரண்யம் (என்னும் திருப்பதியில்) எழுந்தருளியிருக்கும் எமது தந்தையே!

### 53. 'இன் அருள் செய்யும் தலைவன்'

மன்னா இம் மனிசப் பிறவியை நீக்கி
தன் ஆக்கித் தன்இன் அருள்செய்யும் தலைவன்
மின்னார் முகில்சேர் திருவேங் கடம்மேய
என்ஆனை என்அப்பன் என்நெஞ்சில் உளானே.
1. 10. 6.

*நிலையில்லாத இந்த மனிதப்பிறவியை நீக்கித் தன்னுடையவனாக்கிக்கொண்டு, தன்னுடைய இனிய அருளைச் செய்யும் தலைவனாய், மின்னல்கள் பொருந்திய மேகங்கள் சேர்ந்துள்ள திருவேங்கடமலையில் எழுந்தருளியுள்ள என் (கம்பீரத்தினால்) ஆனைபோன்றவனாய், எனக்கு அப்பனானவன் எனது நெஞ்சிலேயே எப்போதும் இருக்கிறான்.*

### 54. 'என்னை ஆளுடை அப்பனை'

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதுஇல்இன் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத் தோர்தொழ தேத்தும்
ஆதியை அமுதை என்னை யாளுடை
அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 2. 3. 2.

*வேத சொரூபியானவனும் வேதத்தின் சாரமும் பயனும் ஆனவனும், சிறந்த (சனகாதி) முனிவர்கள் அநுபவிக்கும் குற்றம் இல்லாத இனிய பழம்போலே இருப்பவனும், ஸ்ரீநந்தகோபனுக்கு யானைக் கன்றுபோல இனியனாக இருப்பவனும், பூமியில் உள்ளவர் தொழுது துதிக்கும் ஆதிகாரணனும், அமுதம்போன்ற இனிமையுடையவனும், என்னை அடிமை கொண்ட அப்பனும் ஆனவனை தமக்கு நிகரில்லாத பெண்கள் வாழும் மாடங்களையுடைய செல்வம் நிரம்பிய மயிலாப்பூரை அடுத்த திருவல்லிக்கேணியில் காணப்பெற்றேன்.*

### 55. 'பேசும் அளவு அன்று'

பேசும் அளவன்(று) இதுவம்மின் நமர்
பிறர் கேட்பதன்முன், பணிவார் வினைகள்
நாசம்அது செய்திடும் ஆதன்மையால்
அதுவே நமது உய்விடம், நாண்மலர்மேல்
வாசம்அணி வண்(டு) அறை பைம்புறவில்
மனம் ஐந்தொடு நைந்(து) உழல்வார் மதிஇல்
நீசர் அவர்சென்(று) அடையாதவனுக்(கு) இடம்
மாமலை ஆவது நீர்மலையே. 2. 4. 9.

*பகவானது பெருமையாகிய இது சொல்லில் அடங்காதது. நம்மவர்களே! வாருங்கள். பிறர் தம்மிடம் பிரார்த்தித்துக் கொள்ளு முன்னே (தம்மை) வணங்கினவர்களுடைய பாபங்களை நாசம் செய்கின்ற பெருந்தன்மை (அவனிடம் இருப்பதனாலே) அதுவே நமக்குக் கடைத்தேறுதற்கு இடமாகும். ஐம்புலன்களின் வழியே சென்று மெலிந்து திரிகின்ற அறிவில்லாத கீழானவர்களால் அடைய முடியாதவனுக்கு இடமாவது, அன்று அலர்ந்த பூவில் படிகையாலே வாசனையையுடைய அழகிய வண்டுகள் ஒலிக்கின்ற பசுமையான பக்கங்களையுடைய பெரிய மலையான திருநீர்மலை என்னும் திருப்பதியாம்.*

### 56. 'உருகும் நின் திருவுரு நினைந்து'

ஓதிலும் உன்பேர் அன்றி மற்(று)ஓதாள்
உருகும்நின் திருவுரு நினைந்து
காதன்மை பெரிது கையறவு (உ)டையள்
கயல்நெடுங் கண்துயில் மறந்தாள்
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது
தெள்ளியள் வள்ளிநுண் மருங்குல்
ஏதலர் முன்னா என்நினைந்(து) இருந்தாய்?
இடவெந்தை எந்தை பிரானே. 2. 7. 5.

(என் பெண் வாய்திறந்து) பேசும் போதெல்லாம் உன் பெயரைத் தவிர வேறொருவர் பெயரையும் சொல்லுவதில்லை ; உன்னுடைய வடிவழகை நினைத்து உருகுகிறாள் ; (உன்மேல்) ஆசையானது மேன்மேலும் பெருகுகின்றது ; (அதனால் கைப்பொருளை இழந்தவரைப்போல) வருத்த மடைகிறாள் ; கயல் மீன்போன்ற நீண்ட கண்கள் நித்திரை கொள்வதை மறந்துவிட்டாள் ; இள மனதுடைய (நிலையற்ற) எனது பெண்ணினுடைய பிள்ளைத்தனம் பெரியதாக உள்ளது ; (நீர் சம்பந்தப்பட்ட மட்டில்) மிகத் தெளிவுடையவளாக இருக்கிறாள் ; வள்ளிக் கொடி போல நுண்ணிய இடையையுடைய இவளை அயலார் முன்னே என்ன செய்ய நினைத்திருக்கிறாய் ? திருவிடவெந்தை (என்னும் திருப்பதி)யில் வந்து நிற்கிற என் குலநாதனே !

இது தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை கண்ட தாய் இரங்கித் தலைவனிடம் கூறும் பாசுரமாக அமைந்துள்ளது.

57. 'அஞ்சுவன் மற்று இவர் ஆர் கொள் ?'

தஞ்சம் இவர்க்(கு)என் வளையும் நில்லா
நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு
வஞ்சி மருங்குல் நெருங்க நோக்கி
வாய் திறந்தொன்று பணித்த(து) உண்டு
நஞ்சம் உடைத்(து) இவர்நோக்கும் நோக்கம்
நான் இவர்தம்மை அறிய மாட்டேன்
அஞ்சுவன் மற்(று)இவர் ஆர்கொல் ? என்ன
அட்ட புயகரத் தேன்என் றாரே. 2. 8. 9.

இவர்க்கே நான் தஞ்சம். (இவரே எனக்குக் கதி.) (இவர் மேல் உள்ள காதலால்) என் வளைகளும் கழன்று விடுகின்றன. ஆராய்ந்து பார்க்கும்போது எனது மனமும் அவருடையதே. வஞ்சிக் கொடிபோன்ற இடையானது துவளும்படியாகப் பார்த்து, வாயைத் திறந்து

அருளிச் செய்தது (மிகவும் இரகசியமான) ஒரு வார்த்தை உண்டு; இவர் பார்க்கும் பார்வை விஷத்துடன் கூடியது போல, (கொடுந் துன்பம் தருவதாக) இருக்கிறது. நான் இவரை ஒன்றும் அறிகிலேன். அதற்குமேல் (இவரைப் பார்த்தாலும்) பயப்படுகிறேன். "இவர் யார்?" என்று கேட்டபோது, "நான் திருவட்டபுயகரத்துப் பெருமாள்" என்று அருளிச் செய்தார்.

'நான் உன்னைவிட்டுப் பிரிவதில்லை' என்று தலைமகன் சொல்லித் தலைவியோடு கூடியிருக்க, அவள் அந்த நிலையில் மேல்வரப் 'போகும் பிரிவை எண்ணிப் பயங்கொள்ள, அவள் பயத்தை அவன் தீர்த்தான் என்ற அநுபவத்தைச் சொல்வது. ஆழ்வாருக்கும் திருவட்டபுயகரத்துப் பெருமாளுக்கும் நடந்த சம்பாஷணையை, தோழி நற்றாய்க்குச் சொல்லுவதாக அமைந்துள்ளது இப்பதிகம் முழுவதும்.

## 58. 'சிந்தனைக்கு இனியாய்'

வந்து(உ)னது அடியேன் மனம்புகுந்தாய் புகுந்ததற்பின் [வணங்கும்என்
சிந்தனைக்(கு) இனியாய்! திருவே! என்ஆருயிரே!
அந்தளிர் அணியார் அசோகின் இளந்தளிர்கள் கலந்துஅவை
செந்தழல் புரையும் திருஆலி அம்மானே. [எங்கும்
**3, 5. 1.**

(நான் இருந்த இடம்) வந்து, உனது அடியேனாகிய எனது நெஞ்சில் நீ புகுந்தாய்; (அப்படிப்) புகுந்த பிறகு (உன்னை) வணங்கும் என் மனத்துக்கு நீ இனியன் ஆனாய். எனக்குச் செல்வம் போன்றவனே! எனக்கு உயிரானவனே! அழகிய தளிர்களால் வந்த அழகு மிக்குள்ள அசோக மரத்தின் இளந்தளிர்கள், எங்கும் பரந்து சிவந்த நெருப்புப் போலிருக்கிற திருவாலியை (இருப்பிடமாக) உடையவனே!

### 59. 'அணி ஆலி புகுவர் கொலோ ?'

கள்வன்கொல்? யான்அறியேன் கரியான் ஒருகாளை வந்து
வள்ளி மருங்குல் என்தன் மடமானினைப் போதவென்று
வெள்ளிவளைக் கைபற்றப் பெற்றதாயரைவிட்(டு) அகன்று
அள்ளல் அம்பூங்கழனி அணிஆலி புகுவர் கொலோ?
3. 7. 1.

*(வந்தவன்) திருடனோ? (அது) எனக்குத் தெரிய வில்லை. (விவரம் என்னவெனில்) கரிய நிறமுடைய காளைப் பருவமுள்ள ஒருவன் வந்து, வள்ளிக் கொடி போன்ற (நுண்ணிய) இடையை யுடையவளும், மடப் பத்தையுடைய மானைப் போன்றவளுமான என் மகளை, 'வா' என்று சொல்லி, (அவளுடைய) வெள்ளி வளையலை அணிந்த கையைப் பிடிக்க, (அவளும்) பெற்ற தாயான என்னை (தனியே கிடக்க) விட்டுப் போய், (அவ்விருவரு மாகச் சேற்றில் உண்டான அழகிய பூக்கள் நிறைந்த நீர் நிலங்களையுடைய (பூமிக்கு) ஆபரணமான திருவாலி யிலே போய்ச் சேருவார்.*

*தலைவனோடு கூடச் சென்ற தலைமகளைக் குறித்துத் தாய் இரங்கிக் கூறியதாக உள்ளது. எம்பெருமானைக் கண்ட ஆழ்வார் அவனுடன் தான் சென்றதாகப் பாவித்து அருளிச் செய்த பதிகம் இது.*

### 60. 'நாடி எந்தன் உள்ளம் கொண்ட நாதன்'

நாடிஎந்தன் உள்ளம் கொண்டநாதன் என்றும்
நான்மறைகள்
தேடிஎன்றும் காணமாட்டாச் செல்வன் என்றும்
சிறைகொள் வண்டு
சேடு(உ)லவு பொழில்கொள் நாங்கைத் தேவதேவன்
என்றென்(று) ஓதி
பாடகம் சேர்மெல் அடியாள் பார்த்தன்பள்ளி
பாடுவாளே. 4. 8. 7.

பாடகம் என்ற கால் அணி பொருந்தி யிருக்கிற மெல்லிய பாதங்களையுடைய பெண்ணானவள், 'தேடிக் கொண்டுவந்து என் மனத்தைத் தம் வசமாக்கிக் கொண்டநாதன்' என்றும், 'நான்கு வேதங்களும் எக் காலமும் ஆராய்ந்து பார்த்தும் காணமாட்டாத சிறப் புடையவன்' என்றும், 'சிறகுகளையுடைய வண்டுகளின் கூட்டம் உலாவுகிற சோலைகளையுடைய திருநாங்கூரில் வாசம் பண்ணுகிற தேவதேவன்' என்றும் சொல்லி, பார்த்தன் பள்ளி என்னும் திருப்பதியைப் பாடுகிறாள்.

திருமாலிடத்து ஈடுபட்ட தலைமகளுடைய செயல் கண்டு நற்றாய் இரங்கிக் கூறிய பதிகம் இது.

(நற்றாய் - பெற்றதாய்.)

## 61. 'எல்லாம் அறிவீர்'

சொல்லா(து) ஒழியகில்லேன் அறிந்தசொல்லில் நும் அடியார்
எல்லாரோடும் ஒக்கஎண்ணி யிருந்தீர் அடியேனை
நல்லார் அறிவீர் தீயார் அறிவீர் நமக்(கு) இவ்வுலகத்தில்
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர் இந்தளூரீரே. 4. 9. 6.

இந்தளூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! (என்னால்) சொல்லாமல் இருக்க முடியவில்லை. (நான்) அறிந்த விஷயத்தைச் சொல்லுவதானால் (பிரிவாற்றாத) அடியேனை உம்முடைய அடியவர்களான மற்ற எல்லா ரையும்போல நினைத்திருக்கிறீர்; (உம்முடன் கூடியிருக்க விரும்பும்) நல்லவர்களுடைய (இயல்பையும்) அறிந்திருப் பீர்; (உம்முடன் உறவு வேண்டாத) தீயவர்களுடைய (இயல்பையும்) அறிந்திருப்பீர். இந்த உலகத்தில் உள்ள மற்ற எல்லாவற்றையும் அறிந்திருப்பீர். ஆனால் என் நிலைமை ஒன்றைத்தானா நீர் அறியமாட்டீர்?

### 62. 'வந்தானோ! திருவரங்கன் வாரானோ!'

பந்தோடு கழல்மருவாள் பைங்கிளியும்
பால் ஊட்டாள் பாவை பேணாள்
வந்தானோ! திருவரங்கன் வாரானோ!
என்றென்றே வளையும் சோரும்
சந்தோகன் பௌழியன் ஐந்(து)அழல் ஓம்பு
தைத்திரியன் சாம வேதி
அந்தோ! வந்தேன் மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகிலேனே. 5. 5. 9.

*பந்தையும் கழற்சிக்காயையும் பாராட்டுகிறதில்லை; பசுமையான (தன்) கிளிக்கும் பால் ஊட்டுவதில்லை; (தனது) மரப்பாவையையும் ஆதரிக்கிறதில்லை. திருவரங்கச்செல்வன் வந்துவிட்டானா? என்று கேட்பாள். (அவன் வரவில்லையென்று தெரிந்து) அவன் வரவேமாட்டானோ? என்று பலமுறை கேட்டுக் கைவளைகள் நழுவும்படித் தளர்கிறாள். சந்தோகத்தையும், (சாமவேதத்தின் ஒரு வகையையும்) கௌஷீதகி பிராம்மணத்தையும் அறிந்தவனும், ஐந்துவித அக்கினி சொரூபியும், தைத்திரியோபநிஷத், சாமவேதம் இவைகட்கு இலக்ஷியமானவனும் (பொருளானவனும்) ஆகிய ஈசன் (இவளிருக்குமிடம்) வந்து என் பெண்ணைச் செய்தகாரியங்களை, தாய்மார்களே! என்னால் அறியமுடியவில்லையே.*

### 63. 'தோழன் நீ'

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா(து)
இரங்கி மற்றவற்(கு) இன் அருள் சுரந்து
மாழைமான் மடநோக்கி உன்தோழி
உம்பி எம்பி என்(று) ஒழிந்திலை உகந்து
தோழன் நீ எனக்(கு)இங்(கு) ஒழிஎன்ற
சொற்கள் வந்(து) அடியேன் மனத்திருந்திட
ஆழிவண்ண! நின் அடிஇணை அடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத் தம்மானே. 5. 8. 1.

கடலைப்போன்ற கம்பீரமான குணமுடையவனே! அலங்காரமான சோலைகள் சூழ்ந்த திருவரங்கத்தில் கண் வளருகிற பெருமானே! (குகனை) ஞானமில்லாதவன், அன்னியன், தாழ்ந்த ஜாதியான் என்று நினையாமல், தயைபண்ணி, அதற்குமேல் அவருக்கு இனியதான கிருபையைச்செய்து, 'இளமையான மானின் மருண்ட பார்வையுடைய (இந்த சீதை) உனக்குத் தோழி; உன் தம்பியான இலக்குமணன் எனது தம்பி' என்று சொன்ன தோடு நின்றுவிடாமல், ஆதரத்துடனே 'நீயும் எனக்கு நண்பன்; இங்கேயே நீ நிற்கக்கடவாய்' என்று சொன்ன வார்த்தைகள் (கர்னபரம்பரையாக) வந்து அடியே னுடைய மனத்தில் பொருந்தியுள்ளன. (அதில் ஈடுபட்ட நான்) உமது இரண்டு திருவடிகளையும் சரணமாகப் புகுந் தேன்.

## 64. 'வேண்டேன் மனை வாழ்க்கை'

வண்டு(உ)ணும் நறுமலர் இண்டை கொண்டு
பண்டைநம் வினைகெட என்(று)அடிமேல்
தொண்டரும் அமரரும் பணியநின்(று) அங்கு
அண்டமோ(டு) அகல்இடம் அளந்தவனே! [தியேல்
ஆண்டாய்! உன்னைக் காண்பதோர் அருள்எனக்(கு) அருளு
வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே!
6. 1. 1.

'வண்டுகள் குடிக்கும் (தேன் பொருந்திய) வாசனை யுள்ள பூமாலையைக் கைக்கொண்டு, (பிறவிக்குக் காரண மான) பழைமையான எமது பாபங்களைப் போக்கியருள வேண்டும்,' என்று அடியார்களும் தேவர்களும் வேண் டித் திருவடிகளில் பணிய, (அவர்களுக்காக மகாபலியிடம் தானம் வாங்குபவனாக) நின்ற, அந்த இடத்திலேயே மேல் உலகங்களையும் பரந்த பூமியையும் திருவடிகளால் அளந்தவனே! என்னை அடிமை கொண்டவனே! திரு விண்ணகர் என்னும் திருப்பதியில் பொருந்தியிருப்ப வனே! உன்னைக் காணும்படி எனக்கு அருள் புரிவாயா னால் (இனி) உலகவாழ்க்கையை நான் விரும்பமாட்டேன்.

## 65. 'வெறுத்தேன் நின் அடைந்தேன்'

பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில் பொருள் இன்பம் என [இரண்டும்
இறுத்தேன் ஐம்புலன்கட் கடன்ஆயின வாயிலொட்டி
அறுத்தேன் ஆர்வச்செற்றம் அவைதம்மை மனத்(து)அகற்றி
வெறுத்தேன் நின்அடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே.
6. 2. 1.

*(பிறர் சொல்லும்) அற்ப வார்த்தைகளை மனத்தில் பொறுத்திருந்தேன். ஐம்புலன்கட்கும் (அநுபவித்தற்குக்) கடமையாக உள்ள பொருள் இன்பம் என்ற இரண்டையும் அநுபவித்துத் தீர்த்தேன். (வேண்டியவர்களிடத்தில்) விருப்பையும் (வேண்டாதவர்களிடத்தில்) வெறுப்பையும், 'அவசியம் நிறைவேற்றுவேன்' என்று சபதம் செய்து நிறைவேற்றி விட்டேன். (அந்த விருப்பு வெறுப்புகளை) மனத்தில் நீக்கி (பிறகு) வெறுத்தேன். திருவிண்ணகரில் பொருந்தி யிருப்பவனே! உன்னைச் சரணமாக வந்தடைந்தேன்.*

## 66. 'நின் உருவம் மறப்பேன் அல்லேன்'

துறப்பேன் அல்லேன் இன்பம், துறவாது நின்உருவம்
மறப்பேன் அல்லேன் என்றும் மறவாது யான்உலகில்
பிறப்பேன்ஆக எண்ணேன் பிறவாமை பெற்றதுநின்
திறத்தேன் ஆதன்மையால் திருவிண்ணக ரானே. 6. 3. 1.

*(உன்னுடைய அநுபவத்தினால் உண்டாகும்). இன்பத்தை விடமாட்டேன். அந்த இன்பத்தை விடாதவனாய், உன் வடிவழகை எக்காலமும் மறக்கமாட்டேன் என்றபடி. மறவாமையாலே நான் உலக வாழ்க்கையில் (இனி) பிறக்க எண்ணமாட்டேன் அவ்வாறு பிறவாத தன்மையைப் பெற்றமையும் உனக்கு (அடிமை) ஆனதனாலே யாம், திருவிண்ணகர் (என்னும் திருப்பதியில்) அமர்ந்திருப்பவனே!*

## 67. 'அண்டம் திருமுடியா நின்றான்'

பவ்வநீர் உடைஆடை யாகச் சுற்றிப்
பார்அகலம் திருவடியா பவனம் மெய்யா
செவ்விமா திரம்எட்டும் தோளா அண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்ல கிற்பீர்
கவ்வைமா களிறு(உ)ந்தி விண்ணி ஏற்றக்
கழல்மன்னர் மணிமுடிமேல் காகம்ஏற
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 6. 6. 3.

*(பூமியைச் சூழ்ந்திருக்கிற) கடலின் ஜலமானது உடுத்துக் கொள்ளத் தக்க ஆடையாகவும், பூமிப் பரப்பெல்லாம் திருவடியாகவும், வாயு திருமேனியாகவும், அழகிய எட்டுத் திக்குகளும் தோள்களாகவும், அண்ட வரிசைகள் திருமுடியாகவும் (வாய்ந்திருக்கிற) (உலக வடிவாக) நின்றருளும் பகவானை அடைய விரும்புபவர்களே! ஆரவாரத்தையுடைய பெரிய யானைகளைத் தள்ளி (அழித்து), விண்ணி என்னும் இடத்திலே எதிர்த்து வந்த வீரக் கழல்களை அணிந்த அரசர்களின் ரத்னகிரீடங்களைத் தரித்த தலைகளின்மீது காக்கைகள் ஏறி (மாமிசத்தைத் தின்னும்படியாக) சிறந்த வாளைக் கொண்டு வெற்றிபெற்ற சோழன் வாழும் மணிமயமான மாடங்களையுடைய திருநறையூர் என்னும் திருப்பதியை அடைந்து நித்திய வாசம் செய்யுங்கள்.*

## 68. 'உரைமின் நமோ நாராயணமே'

கானஎண்கும் குரங்கும் முசுவும் படையாஅடல் அரக்கர்
மானம் அழித்து நின்றவென்றி அம்மான் எனக்கென்றும்
தேனும் பாலும் அமுதும்ஆய திருமால் திருநாமம் [மே.
நானும் சொன்னேன் நமரும் உரைமின் நமோ நாராயண
6. 10. 6.

*காட்டில் வாழும் கரடிகளையும், குரங்குகளையும் கோலாங்குலம் என்னும் வானரங்களையும் சேனையாக*

(திரட்டிக் கொண்டு) வலிமைபொருந்திய அரக்கர்களின் கர்வத்தை அழித்த வெற்றியுடைய பெருமானும், எனக்கு எக் காலத்திலும் தேன் போலவும் பால் போலவும் அமுதம் போலவும், (இனியனான) திருமாலின் திருநாமமான 'நமோ நாராயணம்' என்பதை நானும் சொன்னேன்; நம்மைச் சேர்ந்தவர்களும் சொல்லுங்கள்.

### 69. 'பிறவாமை எனைப் பணி'

கறவாமட நாகுதன் கன்று (உ)ள்ளினாற்போல்
மறவா(து) அடியேன் உன்னையே அழைக்கின்றேன்
நறவார் பொழில்சூழ் நறையூர் நின்றநம்பி!
பிறவாமை எனைப்பணி எந்தை பிரானே! 7. 1 1.

பால் கறக்கப் பெறாத இளம்பசுவை அதன் கன்று நினைப்பதுபோல, உனது அடியேனான நான் மறவாமல் (தலைவனான) உன்னையே (எப்போதும் சொல்லி) அழைத்துப் பிரார்த்திக்கிறேன், தேன் மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருநறையூரில் எழுந்தருளி யிருக்கும் (கலியாண குண) பூர்ணனே! எனக்குத் தந்தையானவனே! என்னை (இனி உலகத்தில்) பிறவாதபடிச் செய்தருள வேண்டும்.

### 70. 'உன்னை எங்ஙனம் நான் விடுகேனே?'

அத்தா! அரியே! என்று (உ)ன்னை அழைக்க
பித்தா என்று பேசுகின்றார் பிறர் என்னை
முத்தே! மணி மாணிக்கமே! முளைக்கின்ற
வித்தே! உன்னை எங்ஙனம் நான் விடுகேனே?
7. 1. 8.

'தந்தையே! விரோதிகளைப் போக்குபவனே!' என்று (உன் திருநாமங்களைச்) சொல்லி உன்னை (நான்) கூப்பிட, அயலார் (இப்படிக் கூப்பிடுகிற) என்னைப் பைத்தியக்காரன் என்று சொல்லுகிறார்கள்; முத்துப் போன்றவனே! சிறந்த மாணிக்கம் போன்றவனே! முளைக்கின்ற விதை போன்றவனே! (இப்படிப்பட்ட) உன்னை (உன் மகிமை அறிந்த) நான் எவ்விதமாக விடக் கூடும்?

ஈசுவரனுடைய அடியார் அல்லாதவர்க்கு ஈசுவரனுடைய அடியவர் பித்தர் போலத் தோன்றுவார்.

### 71. 'பெரியோரை ஒரு காலும் பிரிகிலேனே'

தேர்ஆளும் வாள்அரக்கன்
தென்இலங்கை வெஞ்சமத்துப் பொன்றிவீழ
போர்ஆளும் சிலைஅதனால் பொருகணைகள்
போக்குவித்தாய் என்று நாளும்
தார்ஆளும் வரைமார்பன்
தண்சேறை எம்பெருமான், உம்பர் ஆளும்
பேராளன் பேர்ஓதும் பெரியோரை
ஒருகாலும் பிரிகிலேனே. 7. 4. 4.

*'தேர்களை நடத்த வல்லவனும் வாளாயுதத்தையுடையவனுமான ராவணனுடைய அழகிய இலங்கையானது கொடிய சண்டையில் அழிந்து விழும்படியாக, யுத்தத்தை நடத்த வல்ல வில்லினாலே (தானே) சண்டை செய்யும் அம்புகளை எய்தவனே!' என்று சொல்லி, தினந்தோறும் (திருத்துழாய்) மாலையை யுடைய மலை போன்ற திரு மார்பை யுடையவனாய், மேல் உலகங்களை ஆள்கின்ற பெருமை யுடைய குளிர்ந்த திருச்சேறை (என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும்) எம்பெருமான் திரு நாமங்களைச் சொல்லுகின்ற பெரியோர்களை (நான்) ஒரு கணமும் பிரிய மாட்டேன்.*

### 72. 'திருவுக்கும் திருவாகிய செல்வா'

திருவுக்கும் திருவாகிய செல்வா
தெய்வத்துக்(கு) அரசே! செய்ய கண்ணா!
உருவச்செஞ்சுடர்ஆழி வல்லானே!
உலகு(உ)ண்ட ஒருவா! திருமார்பா!

ஒருவற்(கு)ஆற்றி உய்யும் வகை இன்றால்
உடன்நின்று ஐவர்என் உள்புகுந்(து) ஒழியா(து)
அருவித்தின் றிடஅஞ்சி நின்அடைந்தேன்
அழுந்தூர்மேல் திசைநின்ற அம்மானே! 7. 7. 1.

*(எல்லாருக்கும்) செல்வத்தைக் கொடுக்கும் இலக்குமி தேவிக்கும் செல்வனே! தெய்வங்கட்கு அரசனே! சிவந்த (அழகிய) திருக்கண்களை யுடையவனே! அழகிய வடிவத்தையுடைய சிவந்த ஒளி மயமான சக்கர ஆயுதத்தைக் கையில் உடையவனே! உலகங்களை உண்டருளிய ஒப்பற்றவனே! திருமகளைத் திருமார்பில் உடையவனே! திரு அழுந்தூரில் மேற்கே எழுந்தருளி யிருக்கிற பெருமானே! ஓர் இந்திரியத்துக்கு வேண்டியதைச் செய்து தப்பிக்கும் வகை இல்லை. இந்நிலையில் ஐந்து இந்திரியங்கள் ஒருங்கே என்னிடம் (வந்து) புகுந்து, ஒரு கணமும் விடாமல் அரித்துத்தின்கின்றன. (அதற்கு) அஞ்சி (வேறு வழி இல்லாமல்) உன் திருவடிகளிலே சரணம் புகுந்தேன்.*

## 73. 'நாடிக் கண்டு கொண்டேனே'

ஏற்றினை இமயத்துள் எம்ஈசனை
இம்மையை மறுமைக்கு மருந்தினை
ஆற்றலை அண்டத்(து) அப்புறத்து (உ)ய்த்திடும்
ஐயனைக் கையில் ஆழி ஒன்றேந்திய
கூற்றினை குரு மாமணிக் குன்றினை
நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை
காற்றினைப் புனலைச் சென்று நாடிக்
கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே.

**7. 10. 5.**

*காளை போன்றவனாய், இமயமலையில் (திருப்பிரிதியில்) எழுந்தருளியிருக்கிற நமது பகவானாய், இம்மையில் கிடைக்கக் கூடிய பலன்களை அளிப்பவனாய், மறுமைப் பலன்களுக்கு மருந்து போலக் காரணமாய், எல்லாம்*

வல்லவனை; அண்டத்திற்கு அப்பாற்பட்ட பரமபதத்திற்கு (அடியார்களைச்) செலுத்த வல்ல தந்தையாய், கையில் ஒப்பற்ற சக்கரத்தைத் தரித்துக்கொண்டு யமன் போல (அடியார் அல்லாதவர்க்கு) பயங்கரமாய் இருப்பவனாய், சிறந்த நீலமணி மயமான மலை போல அழகு உடையவனாய், திரு நின்றவூரில் எழுந்தருளியிருக்கும் முத்துக் குவியல்போலக் குளிர்ந்த வடிவை யுடையவனாய், காற்றைப் போல் இன்பம் தர வல்லவனாய், தண்ணீரைப் போல ஆதாரமாய் உள்ளவனைத் தேடிப்போய், திருக்கண்ணமங்கை என்னும் திருப்பதியில் கண்டேன்.

## 74. 'மாமணி வண்ணரை நாம் மறவோம்'

எல்லியும் நன்பகலும் இருந்தே
　　ஏசிலும் ஏசுக ஏந்திழையார்
நல்லர் அவர்திறம் நாம்அறியோம்
　　நாண்மடம் அச்சம் நமக்கிங்கில்லை
வல்லன சொல்லி மகிழ்வரேலும்
　　மாமணி வண்ணரை நாம்மறவோம்
கொல்லை வளர்இள முல்லைபுல்கு
　　குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின். 9. 5. 6.

நடு ராத்திரியிலும் பகலிலும் (பெண்கள்) இருந்து கொண்டு (எப்படிப்பட்ட) பழிச் சொற்களைச் சொன்னாலும் சொல்லட்டும். ஆபரணங்களை அணிந்திருக்கிற (நற்குணங்களையுடைய) அவர்கள் நல்லவர்கள் (அல்லவா?) அவர்களுடைய மேன்மையை நாம் அறியமாட்டோம். (ஆனால்) நமக்கு வெட்கமும், மடமும், பயமும் இவ்விடத்தில் இல்லாமல் போய்விட்டன. (அவர்கள்) வாய்க்கு இயன்ற மட்டும் சொல்லிச் சிரித்தார்களாகிலும், சிறந்த நீலமணி வண்ணரை நாம் மறக்கமாட்டோம். தோட்டங்களில் வளருகிற இளமுல்லைப் பூக்கள் மலிந்த திருக்குறுங்குடி (என்னும் திருப்பதி)க்கு என்னைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்.

*தலைவி தனது தலைமகன் உள்ள இடத்தில் தன்னைக் கொண்டு விடும்படி உற்றாரை வேண்டும் பதிகம் இது.*

### 75. *'வெண்ணெய் உண்டு ஆப்புண்டிருந்தவனே'*

நீண்டான் குறளாய் நெடுவான் அளவும்
  அடியார் படும்ஆழ் துயர்ஆய எல்லாம்
தீண்டாமை நினைந்து இமையோர் அளவும்
  செலவைத்த பிரான், அது அன்றியும்முன்
வேண்டாமை நமன்தமர் என்தமரை
  வினவப் பெறுவார் அலர்என்று உலகேழ்
ஆண்டான் அவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால்
  அளைவெண்ணெய் உண்டு ஆப்புண்டு இருந்தவனே.

10. 6. 5.

*வாமன வேடத்துடன் வந்து, நீண்ட ஆகாசம் வரைக்கும் வளர்ந்தவனாய், அடியவர்களைத் துன்பமடையச் செய்து (பிறவிக் கடலில்) ஆழ்த்தக்கூடிய பாவங்களெல்லாம் (அவர்களைத்) தொடாதபடி நியமித்து, வானவர் உலகம் வரையும் செல்லும்படியாக (திருவடிகளை) வைத்தருளின பெருமானாய், அதுவும் அல்லாமல் முன்னே (உத்தரவிட) வேண்டாமலே 'யமதூதர்கள் எனது அடியார்களை ஆராயத் தகுந்தவர்கள் அல்லர்' (பிடிக்கக்கூடாது) என்று விளங்கும்படி ஏழு உலகங்களையும் தன் ஆணையாலே நடத்தினவன், இன்று கடைந்து திரட்டின வெண்ணெயை (களவு செய்து) உண்டு இடைச்சியர்களது தாம்பால் கட்டுப்பட் டிருந்தான். (இது என்ன ஆச்சரியம்!)*

### 76. *'அந்தணன் தோட்டமாக வைத்தாயே'*

நீர் அழல் வானாய் நெடுநிலம் காலாய்
  நின்றநின் நீர்மையை நினைந்தோ?
சீர்கெழு கோதை என்னல திலளென்(று)
  அன்னதோர் தேற்றன்மை தானே?

பார்கேழ பவ்வத்(து) ஆரமு(து) அனைய
பாவையைப் பாவம் செய்தேனுக்கு
ஆர்அழல் ஓம்பும் அந்தணன்தோட்டம்
ஆகநின் மனத்து வைத்தாயே. 10. 9. 9.

*தண்ணீரையும் நெருப்பையும் ஆகாசத்தையும் சரீரமாக உடையவனாகவும், நீண்ட பூமியையும் வாயுவையும் சரீரமாக உடையவனாகவும் நிற்கப்பெற்ற தேவரீருடைய பெருமையை நினைத்தோ? (அல்லது) நற்குணங்கள் நிறைந்த இந்தப் பெண்ணுக்கு நம்மை யொழிய வேறு ஒரு கதி இல்லை என்று நினைக்கும் அப்படிப்பட்ட மனத் தெளிவு (துணிவு) தானோ? (இவளை இழக்கும்படிப் பெரும்) பாவத்தைப் பண்ணிய என்னுடைய, பூமியைச் சுற்றியுள்ள கடலில் உண்டான அருமையான அமுதம் போன்ற (இனியளான) இப்பெண்பிள்ளையை, பிராம் மணனுடைய தோட்டமாகவே தேவரீர் திருவுள்ளத்திலே நினைத்திருக்கிறீரே.*

*அந்தணன் தோட்டம் - பிராம்மணனது பொழுது முழுவதும் வேள்வி முதலிய நித்திய கடமைகளிலே கழிவதால், அவனுடைய தோட்டம் கவனிப்பில்லாது பாழடையும் என்ற உண்மையைக் குறிப்பது. பகவான் தமது சுதந்திரத் தன்மையைக் கருதியோ, இப் பெண்ணிற்குத் தம்மைத் தவிர வேறு கதியில்லை யென்பதை நிச்சயமாக அறிந்தோ, ஆழ்வாராகிய நாயகியைப் பரிதவிக்கும்படி விட்டுக் கவனியாதிருக்கிறார் என்பது கருத்து. தலைவியின் ஆற்றாமையைக் கண்ட தாய் இரங்கித் தலைவனை வேண்டுவதாகப் பாடியது இப் பதிகம்.*

### 77. 'தம்மையே ஒக்க அருள் செய்வர்'

தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்கு
தம்மையே ஒக்க அருள் செய்வர் ஆதலால்
தம்மையே நாளும் வணங்கித் தொழுது இறைஞ்சி
தம்மையே பற்றா மனத்(து)என்றும் வைத்தோமே. 11. 3. 5.

*தம்மையே எப்போதும் வணக்கத்தோடு தொழுபவர்களுக்கு, (அவர்கள்) தம்மைப்போலே ஆகும்படிக் கிருபை செய்தருளுவர்; ஆகையினாலே, அவர் தம்மையே தினந்தோறும் வணக்கத்துடன் தொழுது துதித்து, அவர் தம்மையே எந்நாளும் தஞ்சமாக எங்கள் மனத்தில் வைத்தோம்.*

### *78. 'எண்ணாத போதெல்லாம் இனியவாறே'*

மண் நாடும் விண் நாடும்
வானவரும் தானவரும் மற்றும் எல்லாம்
உண்ணாத பெரு வெள்ளம்
உண்ணாமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல் சூடி அவனை உள்ளத்து
எண்ணாத மானிடத்தை
எண்ணாத போதெல்லாம் இனியவாறே. 11. 6. 7.

*பூலோகமும் சுவர்க்க லோகமும் தேவர்களும் அசுரர்களும் மற்றும் உண்டான (பொருள்கள்) எல்லாம் (கூடி முயன்றாலும்) உண்ண (அடக்க) முடியாத பெரு வெள்ளமானது (உலகத்தை) விழுங்காதபடித் தன் திருவயிற்றிலே வைத்துக் காப்பாற்றியவனாய், மகா கிருபையுள்ளவனாய், திருக்கண்ணமங்கைக்கு அதிபதியான பகவானுடைய திருவடிகளை (தம் தலையிலே) அணிந்து, அந்த எம்பெருமானை நெஞ்சாலே எண்ணாத மனிதர்களை நினைக்காத காலமெல்லாம் (எனக்கு) இனிதாகச் செல்லும் காலமாம்.*

### *79. 'உன் சேவடி அன்றி நயவேன்.'*

வேம்பின் புழு வேம்பன்றி உண்ணா(து) அடியேன்
நான் பின்னும் உன் சேவடி அன்றி நயவேன்
தேம்பல்இளந் திங்கள் சிறைவிடுத்(து) ஐவாய்ப்
பாம்பின் அணைப் பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ! 11. 8. 7.

வேம்பில் பிறந்த புழுவானது வேம்பை யொழிய (மற்றொன்றைத்) தின்னாது. (அதுபோல்) உன் அடியான் ஆன நான் (நீ அருள் செய்யாவிட்டாலும்) உன்னுடைய திருவடிகளை ஒழிய (மற்றொன்றை) விரும்பமாட்டேன். தேய்ந்து பருவம் நிரம்பாத சந்திரனுடைய (க்ஷய ரோகமாகிய) சிறையைப் போக்கி, ஐந்து தலை நாக அணையிலே பள்ளிக்கொண்டிருக்கும் பரஞ்சோதி ரூபனான சர்வேச்வரனே!

### 80. 'கரும்பின் இன் சாறுபோல......இனிய வாறே'

இரும்(பு) அன்று (உ)ண்ட நீர் போல் எம் பெருமானுக்கு [என்தன்
அரும் பெறல் அன்பு புக்கிட்(டு) அடிமைபூண்டு (உ)ய்ந்து [போனேன்
வரும் புயல் வண்ணனாரை மருவி என் மனத்து வைத்து
கரும்பின் இன்சாறு போலப் பருகினேற்கு இனியவாறே.

—திருக்குறுந்தாண்டகம், 5.

இரும்பானது காய்ந்து (அக்காய்ச்சல் அடங்கும்படி) குடித்த தண்ணீர் போல, பகவானிடம் என்னால் பெற அரிய அன்பைச் செலுத்தி அடிமையாகிக் கடைத்தேறி விட்டேன். (அன்றியும்) (அடியவர்கள் இருக்குமிடம் தேடி வருகிற) (மழைக் காலத்து) மேகம்போன்ற திரு நிறத்தை உடையவனைச் சேர்ந்து, என் மனத்தில் பொருந்த வைத்து, கரும்பினுடைய இனிய ரசம்போல் அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனிமையாக இருந்தபடி தான் என்ன!

### 81. 'பேசினேன் ஏச மாட்டேன்'

பேசினார் பிறவி நீத்தார் பேருளான் பெருமை பேசி
ஏசினார் உய்ந்து போனார் என்ப(து)இவ் வுலகின் வண்ணம்
பேசினேன் ஏச மாட்டேன் பேதையேன் பிறவி நீத்தற்கு
ஆசையோ பெரிது கொள்க அலைகடல் வண்ணர் பாலே.

—திருக்குறுந்தாண்டகம்

'திருப்பேர் நகரில் எழுந்தருளி யிருக்கிற பகவானுடைய பெருமையை (வாய்விட்டுப்) புகழ்ந்தவர்கள் பிறவிக் கடலைத் தாண்டினார்கள். (அவன் பெருமையைப்) பேசி வைத (சிசுபாலன் முதலிய)வர்கள் நற்கதி அடைந்தார்கள்' என்று சொல்வது இந்த உலகத்தாரின் இயல்பு. அவன் குணங்களைப் புகழ்ந்தேன். (ஆனால்) அவனை ஏச (எனக்கு) மனம் வருவதில்லை. இந்தப் பிறவித் துன்பத்தை நீக்குவதற்கு, அலை எறியும் கடல்போன்ற திரு நிறத்தை உடையவன்மீது (எனக்கு உண்டான) ஆசை மிகவும் அதிகமாய் இருக்கிறது. இது உண்மை.

## 82. 'வாழலாம் மட நெஞ்சமே'

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை
இருநிலம் கால் தீ நீர் விண் பூதம் ஐந்தாய்
செந்திறத்த தமிழ் ஓசை வட சொல் ஆகித்
திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறு ஆகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா
அந்தணனை அந்தணர் மாட்டு அந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும்
வாழுதியேல் வாழலாம் மட நெஞ்சமே!

—திரு நெடுந்தாண்டகம், 4.

இந்திரனுக்கும் பிரம்மதேவனுக்கும் காரணனாய், பெரிதான பூமி, காற்று, நெருப்பு, நீர், ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்களுக்குள்ளும் இருப்பவனாய், (தன்னை உள்ள படியே காட்டும்) செம்மையை யுடைய தமிழ் வேதமான பிரபந்தங்களுமாய், வடமொழி வேதங்களுமாய், நான்கு திக்குகளிலும் உள்ள பொருள்களுக்குள்ளும் இருப்பவனாய், சந்திர சூரியர்களுக்கும் அந்தராத்மாவாய், (இப்படி) உள்ளே பரவி நிற்குமிடத்தில், தேவர்களுக்கும் அறியக் கூடாத அழகிய அருளுடையவனாய், பிராம்மணர்களுக்கு அந்தி வேளையில் ஓதுவதற்குரிய வேத மந்திரமாய் இருப்பவனைத் திருமந்திரத்தால் இடைவிடாமல் அநுபவிப்பாயே யாகில் (எனக்குக்) கீழ்ப் படிந்து நடக்

கும் மனமே! (நித்தியமாக) ஆனந்தத்தை அநுபவிக்கப் பெறுவாய்.

## 83. 'காப்பார் ஆரே?'

பட்டுடுக்கும் அயர்ந்திரங்கும் பாவை பேணுள்
பனிநெடுங்கண் நீர்ததும்பப் பள்ளிகொள்ளாள்
எட்டுணைப்போ(து) என்குடங்கால் இருக்க கில்லாள்
எம்பெருமான் திருவரங்கம் எங்கே? என்னும்
மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்
மடமானை இதுசெய்தார் தம்மை மெய்யே
கட்டுவிச்சி சொல்என்னச் சொன்னுள், நங்காய்!
கடல்வண்ணர் இது செய்தார் காப்பார் ஆரே?

—திருநெடுந்தாண்டகம், 11.

(என் மகள்) பட்டுப் புடவையைக் கட்டிக் கொள்கிருள்; மயங்கிச் சோர்வுறுகிருள்; (தனது விளையாட்டுக் கருவியாகிய) பாவையை ஆதரிக்கிறதில்லை; குளிர்ந்து நீண்டிருக்கும் கண்களில் (துக்க) நீர் பெருகும்படி (நின்ற வண்ணமாக) இருக்கிருள்; படுக்கையில் படுத்துக் கொள்கிறதில்லை. ஒரு க்ஷணம்கூட என் மடியில் உட்காரச் சம்மதிக்கிறதில்லை. 'எனது நாதனுடைய, திருவரங்கம் எங்கே இருக்கிறது?' என்று கேட்கிருள். அழகிய வண்டுகள், தேனைக் குடித்து விக்கிப் பாடுகின்ற மயிர் முடியை உடையவளாய், மடப்பத்தையும் மான்போன்ற கண்களையும் உடையவளான என் மகளை 'இப்படிச் செய்தவர் யார்? என்பதை நிஜமாகச் சொல்' என்று கட்டுவிச்சியைக் கேட்டேன். (அவள்) 'கடலின் நிறம் போன்ற பகவான் இப்படிச் செய்தார்' என்று சொன்னுள். என் தோழியே! இதினின்றும் எங்களைக் காக்க வல்லவர் வேறே யார் இருக்கிருர்கள்?

இறைவனைக் காணவேண்டுமென்று தீவிர ஆசைப்படுபவர்க்கு அவன் அருளால்தான் காரியம் கைகூடும். தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றுமைகண்ட தாய் இரங்கிக் கூறியதாக அமைந்தது இப் பாசுரம்.

### 84. 'மடக் கிளியைக் கைகூப்பி வணங்கினாளே'

முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை மூவா
மூவுலகும் கடந்(து)அப்பால் முதலாய் நின்ற
அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய
அந்தணனை அந்தணர்தம் சிந்தையானை
விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக என்று
மடக்கிளியைக் கை கூப்பி வணங்கினாளே.

—*திருநெடுந்தாண்டகம்*, 14.

*இளம் சூரியனை ஒத்தவனும், திருக்குறுங்குடியில் (வாழ்கின்ற) மேகத்தை ஒத்தவனும், நித்தியமான மூன்று உலகங்களையும் கடந்து, அப்பால் (பரம பதத்தில்) எழுந்தருளி யிருப்பவனும், (சொரூப ரூப குணங்களால்) அளவிடப்படாதவனும், நிறைந்த அமுதம் போன்றவனும், திருவரங்கத்தில் பொருந்திய (இயல்பாகவே) பரிசுத்தனும், பரிசுத்தர்களுடைய நெஞ்சில் (என்றும்) இருப்பவனும், விளக்கின் ஒளிபோல (மனத்தில்) பிரகாசிப்பவனும், திருத்தண்காவிலே மரகதம்போல் (குளிர்ந்த வடிவையுடைய) பச்சை வண்ணனும், திருவெஃகாவிலே (கண் வளர்ந்தவனுமான) திருமாலைப் பிரீதியுடன் பாட, அதைக்கேட்டு, 'உன்னை வளர்த்ததினால் உண்டாகக் கூடிய பலனை அடைந்தேன். இங்கே வா' என்று அழைத்து, மடப்பம் பொருந்திய கிளியைக் கைகளைக் கூப்பி (அதின் காலிலும் விழுந்து) வணங்கினாள்.*

*தாய் இரங்கிக் கூறியது.*

### 85. 'இது அன்றோ எழில் ஆலி என்றார்'

கைவளம்ஒன்று ஆராயா நம்மை நோக்கா
நாணினார் போல்இறையே நயங்கள் பின்னும்
செய்வளவில் என்மனமும் கண்ணும் ஓடி
எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய இப்பால்

கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன்
கனமகரக் குழைஇரண்டும் நான்கு தோளும்
எவ்வளவுண்(டு) எம்பெருமான் கோயில் ? என்றேற்கு
இது அன்றோ எழிலாலி என்றார் தாமே.

—திருநெடுந்தாண்டகம், 22.

'நைவளம்' என்ற ஓர் ஒப்பற்ற பண்ணை ஆராய்ந்து (பாடி) நம்மை நோக்கி, சிறிது வெட்கப்பட்டவர் போல (நின்று) பின்னும் (சில) நய வார்த்தைகளைப் பேசும் போது என் மனமும் கண்களும் ஓடி எனது தலைவன் ஆன ஈசனது திருவடிகளிலே சேர, அதன்பின் (என்) கையில் (அணிந்திருந்த) வளையல்களையும் (அரையில் அணிந்திருக்கும்) மேகலையையும் (ஆபரணத்தையும்) காணவில்லை; (அவருடைய) கனமான இரண்டு மகர குண்டலங்களையும் நான்கு தோள்களையும் கண்டேன். (பின்னர்) 'என் நாதனே! (தேவரீர் எழுந்தருளி யிருக்கும்) ஸ்ரீரங்கம் எவ்வளவு தூரம் இருக்கும்?' என்று கேட்ட எனக்கு அவர், 'அழகிய திருவாலி இதுவன்றோ?' என்று தாமே சுட்டிக் காட்டியருளினார்.

'நைவளம்'—ஒரு பண். அது கேட்டாரையும் பாடினாரையும் ஒருங்கே நைவிக்கும் இயல்புடையது என்பர். 'நட்ட பாடை'யைக் குண யோகத்தால் 'நைவளம்' என்று சொல்வதுமுண்டு. உள்ளுறைப் பொருளில், வளையும் மேகலையும் முறையே அகங்கார மமகாரங்களைக் குறிக்கும்.

### 86. 'சூட்டினேன் சொல் மாலை'

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று. —*முதல் திருவந்தாதி*, 1.

*பூமியானது அகலாகவும், பெருகுகிற சமுத்திரமானது நெய்யாகவும், உஷ்ணமான கிரணங்களையுடைய சூரியன் தீபமாகவும் (கொண்டு இப்படிப் பகவானை அறிந்து), சிவந்த ஒளியையுடைய சக்கராயுதத்தை உடையவனை (பகவானுடைய) திருவடிகளிலே துன்பமாகிற கடல் விலகவேண்டும் என்று (உத்தேசித்து) சொற்களால் ஆன (இந்த) மாலையைச் சூட்டினேன்.*

*பொய்கையாழ்வாரான இவரும், பூதத்தாழ்வாரும் பேயாழ்வாரும் திருக்கோவலூரிலே ஓர் இடைகழியிலே இருக்கும்போது, ஈசுவரன் அங்கு வந்து நெருக்கியதும், அப்படி நெருக்குகிறவர் யார் என்று பார்ப்பதற்காக ஒரு தீபத்தை இவர் ஏற்றினர்; அதாவது, இவருக்கு ஞானோதயம் ஆயிற்று. பூதத்தாழ்வாருக்கு ஞானம் முற்றிப் பக்தி உண்டாயிற்று. பேயாழ்வாருக்குப் பக்தி முற்றிப் பகவானது காட்சி பிறந்தது. அப்போது உண்டான பிரபந்தம் இது.*

### 87. 'உருவம் எரிகார் மேனி ஒன்று'

அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ஊர்தி
உரைநூல் மறைஉறையும் கோயில்—வரைநீர்
கருமம் அழிப்(பு)அளிப்புக் கையதுவேல் நேமி
உருவம்எரி கார்மேனி ஒன்று. —*முதல் திருவந்தாதி*, 5.

*பெயர் (ஒருவனுக்கு) அரன் என்பது, (மற்றொருவனுக்கு) நாராயணன்; வாகனம் (ஒருவனுக்கு) காளை,*

(மற்றொருவனுக்கு) கருடன் என்கிற பக்ஷி ; பிரமாணம் (ஒருவன் விஷயத்தில்) ஆகமம், (மற்றொருவன் விஷயத்தில்) வேதம் ; வசிக்கும் இடம் (ஒருவனுக்குக் கைலாச) மலை, (மற்றொருவனுக்குக்) கடல்; தொழில் (ஒருவனுக்கு) அழிப்பு, (மற்றவனுக்கு) பாதுகாப்பு ; கையில் இருக்கும் ஆயுதம் (ஒருவனுக்கு) வேல், (மற்றவனுக்கு) சக்கரம் ; உருவம் (ஒருவனுக்கு) தீபோன்றது, (மற்றவனுக்கு) மேகம் போன்றது ; (இருவருக்கும்) சரீரம் ஒன்றே.

ஒருவனை ஈசன் விஷ்ணு வடிவத்தோடும் சிவன் வடிவத்தோடும் விளங்குகிறன்.

## 88. 'தாய்நாடு கன்றே போல்'

தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ ஞானத்
தெளிதாக நன்கு(உ)ணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய் நாடு கன்றேபோல் தண்துழாயான் அடிக்கே
போய் நாடிக் கொள்ளும் புரிந்து.

—முதல் திருவந்தாதி, 30.

*கசடுபோக மனத்தை நன்ருக நிலைநிறுத்தி, புத்தியில் தெளிவு உண்டாகும்படிச் செவ்வையாக அறிந்தவர்களுடைய நெஞ்சானது எளிதாக, தன் தாயைத் தேடும் கன்றைப்போல, குளிர்ந்த துழாயையுடைய எம் பெருமானுடைய திருவடிகளையே விரும்பிச் சென்று தேடிக்கொள்ளும்.*

*இறைவன் தாய், ஆத்மா கன்று என்ற சம்பந்த ஞானமுண்டாகவே, நெஞ்சு தானே ஈசனை விரைந்து பற்றும்.*

## 89. 'திறன் உரையே சிந்தித்து இரு'

குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என்நெஞ்சே !—என்றும்
புறன்உரையே ஆயினும் பொன்ஆழிக் கையான்
திறன்உரையே சிந்தித்(து) இரு.

—முதல் திருவந்தாதி, 41

எனது மனமே! (என்சொல் வெறும்) சொல்லளவே யாகிலும் அழகிய சக்கரத்தைக் கையில் ஏந்திய எம்பெரு மான் அருளிச்செய்த உறுதிமொழிகளையே, எப்போதும் (நம்பி) (தைரியமாய்) இரு; மலைபோன்ற அபராதங்களை நீ செய்தாலும், அவைகளை (சிந்திக்கத்தொடங்கிய) அவன் குணமாகவே கொள்வான்.

## 90. 'தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்'

தமர்உகந்த(து) எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர்உகந்த(து) எப்பேர்மற் றப்பேர்—தமர் உகந்(து)
எவ்வண்ணம் சிந்தித்(து) இமையா(து) இருப்பரே
அவ்வண்ணம் ஆழியானும். —முதல் திருவந்தாதி, 44.

சக்கரத்தை உடைய ஈசன் தன் பக்தர் விரும்பியது எந்த உருவமோ அந்த உருவத்தைத் தானே ஏற்றுக் கொள்வான்; இன்னும் தன் பக்தர் விரும்பியது எந்தத் திருநாமமோ அந்தத் திருநாமத்தையும் அங்கீகரிப்பான். தன் பக்தர் விரும்பி எந்தவிதமாகச் சிந்தித்து, இமை கொட்டாமல் நிற்பார்களோ (இடைவிடாத பாவனை பண்ணுகிறார்களோ) அந்த விதத்தை உடையனாகவே ஆவான்.

இறைவன் பக்தர்கள் நின்ற நிலையிலே, அவர்கள் பஜித்தபடியே அவர்களைப் பற்றுவான். (யார் என்னை எப்படி அடைகின்றார்களோ அவ்வாறே அவர்களை அடைகிறேன்)—கீதை.

## 91. 'சென்றால் குடையாம்'

சென்றால் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்(கு) அரவு.
—முதல் திருவந்தாதி, 53.

திருவனந்தாழ்வான், திருமாலான ஈசுவரனுக்கு உலாவினால் குடையாகவும், எழுந்தருளியிருந்தால் சிங்கா

தனமாகவும், நின்றால் பாதுகையாகவும், விசாலமான சமுத்திரத்தில் (பள்ளிகொண்டால்) எப்போதும் தெப்பமாகவும், இரத்தினத்தால் செய்யப்பட்ட தீபமாகவும், அழகிய பட்டுடையாகவும், தழுவிக்கொள்ளும் மெத்தையாகவும் இருப்பார்.

ஈசுவரனுக்குத் திரு அனந்தாழ்வான் எல்லாவிதத் தொண்டுகளும் செய்வதுபோல, அடியார்களும் எல்லா விதமான தொண்டுகளையும் பகவானுக்குச் செய்தல்வேண்டும் என்பது கருத்து. 'அஹம்ஸர்வம் கரிஷ்யாமி' யான் எல்லாத் தொண்டுகளையும் செய்வேன் என்று (இராமாயணத்தில்) ஸ்ரீராமனை நோக்கி இலக்குமணன் கூறினான்.

## 92. 'ஒருவனையே நோக்கும் உணர்வு'

பெயரும் கருங்கடலே நோக்கும்ஆ(று) ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும்—உயிரும்
தருமனையே நோக்கும்ஒண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு.

—முதல் திருவந்தாதி, 67.

நதியானது அலைந்துகொண்டிருக்கும் பெரிய கடலையே நோக்கிச் செல்லும்; அழகிய (தாமரைப்) பூவானது ஆகாயத்தில் எழும் சூரியனையே பார்த்து நிற்கும். பிராணிகளும் (முடிவில்) யமதரும ராஜனையே போய் அடையும். ஞானமானது அழகிய தாமரைப் பூவை இருப்பிடமாய்க் கொண்ட திருமகளுக்கு நாயகனை ஒப்பற்ற திருமாலையே விரும்பி நிற்கும்.

## 93. 'ஏத்துதிரேல் நன்று'

சொல்லுந் தனையும் தொழுமின் விழும்உடம்பு
செல்லுந்தனையும் திருமாலை—நல் இதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று.

—முதல் திருவந்தாதி, 70.

*பகவானை (உங்களுடைய) அழியக் கூடிய உடல் சாகும் வரை, அழகிய இதழ்களை உடைய மலர் மாலையாலும் யாகத்தாலும் தந்திரங்களாலும் மந்திரங்களாலும் தொழுங்கள்; சொல்லும் சக்தி இருக்கும் வரை திருநாமங்களாலே (அவனைப்) புகழ்வீர்களானால் நல்லது.*

## 94. 'என் ஆகில் என்னே எனக்கு'

நாடிலும் நின்அடியே நாடுவேன் நாள் தோறும்
பாடிலும் நின்புகழே பாடுவேன் - சூடிலும்
பொன்ஆழி ஏந்தினான் பொன்அடியே சூடுவேற்(கு)
என் ஆகில் என்னே எனக்கு?

—முதல் திருவந்தாதி, 88.

*(நான்) விரும்புவ தெல்லாம் உன்னுடைய பாதங்களையே; தினந்தோறும் துதிப்ப தெல்லாம் உன்னுடைய கீர்த்தியையே; தலையில் அணிவ தெல்லாம் அழகிய சக்கரத்தைத் தரித்தவனுடைய மேன்மையான திருப்பாதங்களையே. (இப்படியிருக்கும்) எனக்கு யாது நேர்ந்தால் தான் என்ன? (எதற்கும் அஞ்சுவதில்லை.)*

## 95. 'எண் தீக்கதிக்கண் செல்லும்திறன்'

நாவாயில் உண்டே நமோநா ரணஎன்று
ஓவா து(உ)ரைக்கும் உரைஉண்டே - மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகைஉண்டே என்ஒருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்?

—முதல் திருவந்தாதி, 95.

*நாக்கோ (நமது) வாயில் இருக்கிறது. ஓயாமல் 'நமோ நாராயணாய' என்று சொல்லக்கூடிய திரு மந்திரம் (நம்மிடம்) இருக்கிறது. திரும்புதல் இல்லாத மோக்ஷ மார்க்கத்தில் போவதற்கு உபாயமும் இருக்கிறது. (இப்படி இருக்க) ஒருவர் தீய நெறிகளிலே போகிற வகைதான் யாது?*

## 96. 'ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்'

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்பு(உ)ருகு சிந்தை இடுதிரியா - நன்பு(உ)ருகி
ஞானச் சுடர்விளக்(கு) ஏற்றினேன், நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

*இரண்டாம் திரு அந்தாதி*, 1.

*பக்தியே அகலாகவும, ஆசையே நெய்யாகவும், ஆனந்தத்தினாலே கரைகிற மனமானது போடத்தக்க திரியாகவும் (செய்து) ஞானத்தைத் தருவதான தமிழ்ப் பிரபந்தத்தைச் செய்த நான் ஞான ஒளி விளக்கை ஏற்றினேன்.*

*ஞானத்தால் உண்டாகும் பக்தியினால் இறைவனை அடையலாகும். திருக்கோவலூரிலே எம்பெருமானால் நெருக்குண்டபோது பொய்கையாழ்வார் ஏற்றிய (ஞான) தீபத்தில் (இந்த) பூதத்தாழ்வாருக்குப் பக்தி பிறந்த போது அவர் அருளிய பாசுரம் இது. பொய்கையாழ் வாருக்கு வையம் தகளி ஆயிற்று. இவருக்கு அன்பு தகளி ஆயிற்று.*

## 97. 'மாரி யார் பெய்கிற்பார்?'

தனக்(கு)அடிமைப் பட்டது தான்அறியா னேலும்
மனத்(து)அடைய வைப்பதாம் மாலை-வனத்திடரை
ஏரியாம் வண்ணம் இயற்றும் இதுவல்லால்
மாரியார் பெய்கிற்பார் மற்று?

—*இரண்டாம் திரு அந்தாதி*, 16.

*தனக்கு ஈசனிடம் அடிமைத்தனம் ஏற்பட்டிருக் கிறது என்பதை ஒருவன் தானே தெரிந்து கொள்ளாமல், போனாலும், அந்த ஈசனது நினைவை மனத்தில் அடையும் படி வைப்பது (பேறு அடைதற்குப்) போதும். காட் டில் உள்ள மேட்டை ஏரி யாகும்படி ஒருவன் (வெட்ட லாம்) செய்யலாம். அதைத் தவிர, அந்த ஏரி நிரம்பு வதற்காக மழையை யார் பெய்யச் சொல்லக்கூடும்?*

### 98. 'சேம நீர் ஆகும்'

இனி(து)என்பர் காமம் அதனிலும் ஆற்ற
இனி(து)என்பர் தண்ணீரும் எந்தாய்!—இனி(து)என்று
காமநீர் வேளாது நின்பெருமை வேட்பரேல்
சேமநீர் ஆகும் சிறிது. —இரண்டாம் திரு அந்தாதி, 35.

*எனது சுவாமியே! ஐம்புல இன்பத்தை இனியது என்று ஜனங்கள் சொல்வார்கள். அந்த இன்பத்தைக் காட்டிலும் (உணவு) நீர் முதலிய இன்றியமையாத பொருள்கள் மிகவும் இனிமை என்றும் அவர்கள் சொல்வார்கள். ஐம்புல இன்பத்தையும், நீர் முதலியவற்றையும் இனிமையானவையென்று ஆசைப்படாமல், உனது பெருமையைச் சிறிது ஆசைப்படுவார்களானால், அதுவே (உயர்ந்த) நன்மையைத் தரும் இயல்பினதாகும்.*

*விஷய சுகங்களுக்கு ஆசைப்படாதே, எம்பெருமானை அடையவே ஆசைகொள் என்றவாறு.*

### 99. 'பேர் சொல்லுவதே ஓத்தின் சுருக்கு'

ஓத்தின் பொருள்முடிவும் இத்தனையே உத்தமன்பேர்
ஏத்தும் திறம்அறிமின் ஏழைகாள்—ஓத்(து)அதனை
வல்லீரேல் நன்(று)அதனை மாட்டீரேல் மாதவன்பேர்
சொல்லுவதே ஓத்தின் சுருக்கு.
—இரண்டாம் திரு அந்தாதி, 39.

*வேதத்தின் பொருளினுடைய முடிவெல்லாம் இவ்வளவே. (அது யாதெனில்) புருடோத்தமனுடைய புகழைப் பாடும் மேன்மையே யாகும்; வேதத்தை அறிய முடியுமானால், (இது விளங்கும்); வேதத்தை நன்றாக அறிய முடியாவிட்டால், ஏழைகளே! மாதவனை திருமாலுடைய திருநாமத்தை உச்சரிக்கையே வேதத்தின் சாரம் என்று அறிவீர்களாக.*

### 100. 'ஓதுவதே நாவினால் உள்ளு'

சிறந்தார்க்(கு) எழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன்—அறந்தாங்கும்

மாதவனே ! என்னும் மனம்படைத்து மற்றவன்பேர்
ஓதுவதே நாவினால் உள்ளு.

—இரண்டாம் திரு அந்தாதி, 44.

*சான்றோர்களுக்கு உயர்ந்த துணையாகிய சிவந்த கண்களையுடைய திருமாலின் திருநாமத்தை மறந்திருப்பவர்களை (நான்) மனிதர்களாகக் கருத மாட்டேன். தருமத்தைத் தாங்கும் மாதவனே ! என்று சொல்லும்படி மனதைப் படைத்து (பழக்கி) அதன்மேல் அவனுடைய திருநாமங்களை நாக்கினால் உச்சரிப்பதையே நினை (கடைப்பிடி).*

## *101. ‘ திருக் கண்டேன் ’*

திருக்கண்டேன் பொன் மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்ஆழி வண்ணன்பால் இன்று.

—மூன்றும் திரு அந்தாதி, 1.

*(இறைவனுடைய அருளைப்பெற்ற) இன்று நான் எனது கடல் நிறமுடைய நாதனிடம் திருமகளைக் கண்டேன் ; அவனுடைய அழகிய திருமேனியைக் கண்டேன்; விளங்குகின்ற சூரியன்போல் பிரகாசமான வடிவையும் கண்டேன் ; யுத்தத்தில் விருத்தி அடையும் பொன்னாலான சக்கராயுதத்தைக் கண்டேன். (கண்டவர்) விரும்பும் (ஸ்ரீ பாஞ்ச ஜன்யம் என்ற) சங்கையும் கையில் கண்டேன் .*

*திருக்கோவலூரிலே எம்பெருமானால் நெருக்குண்ட போது பொய்கையாழ்வார் ஏற்றிய ஞான தீபத்தில் பேயாழ்வாரான இவர்க்கு ஈச்வர தரிசனம் கிடைத்தது. அப்போது அவர் அருளிய பாசுரம் இது.*

## *102. ‘ மாற் பால் மனம் சுழிப்ப ’*

மாற்பால் மனம்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு
நூற்பால் மனம்வைக்க நொய்விதாம்—நாற்பால

வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதம் பணிந்து.

—மூன்றும் திரு அந்தாதி, 14.

*வேதத்தால் அறியப்படுபவனும், திருவேங்கடத்தில் எழுந்தருளி யிருப்பவனும், நித்ய சூரிகளின் கிரீடங்கள் உறையும் பாதங்கள் உடையவனுமான ஈசுவரனின் திருவடிகளை வணங்கி, (அந்த) ஈசுவரனிடத்தில் மனத்தைச் சுழிக்க (ஆழ்ந்து ஈடுபடச்) செய்தால், மாதர்களின் தோள்களில் ஆசை நீங்கி ஞானசாஸ்திரப் பொருளில் மனத்தைச் செலுத்துவதற்கு எளிதாகும்.*

*பக்தி பண்ணினால் மாதர் ஆசை நீங்கும், சாஸ்திரங்களில் மனம் ஈடுபடும் என்பது கருத்து.*

## 103. 'மறவாது வாழ்த்துக என் வாய்'

சென்றநாள் செல்லாத செங்கண்மால் எங்கள்மால்
என்றநாள் எந்நாளும் நாள்ஆகும்—என்றும்
இறவாத எந்தை இணைஅடிக்கே ஆளாய்
மறவாது வாழ்த்துக என் வாய்.

—மூன்றும் திரு அந்தாதி, 17.

*சிவந்த கண்களையுடைய ஈசன் எங்களிடம் கிருபை செய்தான் என்று அறிந்துகொண்ட நாளும், (அதற்கு முன்பே) கழிந்த நாளும், (அப்பால் வரக் கடவதாகிய நாளும் ஆகிய) எல்லா நாள்களும் நல்ல நாள்கள் ஆகும். என்றும் அழிவில்லாத் தந்தையான ஈசனுடைய இரண்டு திருவடிகளுக்கும் அடிமையாகி, என் வாக்கு மறக்காமல் அவனையே வாழ்த்தட்டும்.*

## 104. 'இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து'

தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டு(உ)ருவும் ஒன்றாய் இசைந்து.

—மூன்றும் திரு அந்தாதி, 63.

நாற்புறமும் சூழ்ந்திருக்கிற திரண்ட அருவிகள் பாயும் திருமலையில் எழுந்தருளி யிருக்கும் எனது பெருமானுக்குத் தொங்குகிற சடையும், நீண்ட கிரீடமும், (கையில்) அழகிய மழு (என்கிற) ஆயுதமும், சக்கரமும், (இடுப்பில்) சுற்றியிருக்கும் பாம்பும் பொன்னாலான அரைஞாணும் ஆகிய இவ்விரண்டு (ஹரிஹர) ரூபமும் அமைந்து ஓர் உருவமாகத் தோற்றுவது ஆச்சர்யம்!

திருவேங்கடமுடையான் (திருப்பதியிலுள்ள எம் பெருமான்) ஹரிஹர ரூபமாக இருக்கிறான்.

## 105. 'நாடி வலைப் படுத்தேன்'

உய்த்(து)உணர்(வு) என்னும் ஒளிகோள் விளக்கேற்றி
வைத்தவனை நாடி வலைப்படுத்தேன்—மெத்தெனவே
நின்றான் இருந்தான் கிடந்தான் என்நெஞ்சத்துப்
போன்றாமை மாயன் புகுந்து.—மூன்றாம் திரு அந்தாதி, 94.

ஞானம் என்னும் பிரகாசமான விளக்கை (மனத்தில்) ஏற்றிவைத்து, (அந்த) பகவானை ஆராய்ந்து பெற்று வலையில் அகப்படுத்தினேன். (எனக்கு வசமாக்கிக்கொண்டேன்.) அம் மாயனும் (ஆச்சரிய காரியங்களைச் செய்யும் அவனும்) என் நெஞ்சிலே விட்டுப்பிரியாமல் புகுந்து மெல்ல எழுந்தருளி நின்றான்; வீற்றிருந்தான்; பள்ளி கொண்டான்.

## 106. 'நீ என்னை அன்றி இலை'

இன்றாக நாளையே ஆக இனிச்சிறிதும்
நின்றாக நின்அருள்என் பாலதே—நன்றாக
நான்உன்னை அன்றியிலேன் கண்டாய் நாரணனே
நீஎன்னை அன்றி இலை. —நான்முகன் திரு அந்தாதி, 7.

நாராயணனே! இன்றைக்கே ஆனாலும் சரி; (அல்லது) நாளைக்கு ஆனாலும் சரி; (அன்றி) சிறிது காலம் கழித்தாலும் சரி; உன் அருள் எனக்கு உரியதே. நான் உன்னைவிட்டு (வேறு) ஒருவரைத் தஞ்சமாக அடையமாட்டேன்; நீயும் என்னைப் பிரிந்து இருக்கமாட்டாய். இது உண்மை.

இறைவனது அருள் எப்போதாவது ஒருநாள் கிடைப்பது நிச்சயம்.

### 107. 'வித்தும் இடல்வேண்டும் கொல்லோ'

வித்தும் இடவேண்டும் கோல்லோ? விடை அடர்த்த
பத்தி உழவன் பழம்புனத்து—மோய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன கருமால் திருமேனி
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து.

—நான்முகன் திரு அந்தாதி, 23.

(நப்பின்னைப் பிராட்டியை மணம் புரிவதற்காக ஏழு) எருதுகளைக் கொன்றவனும், பக்திக்கு உழுபவனை (தானே நமக்குப் பக்தியை உண்டுபண்ண முயற்சி செய்யும்) பகவானுடைய பழைய (அனாதியான) (பிறவியாகிற) நிலத்தில் (நாம் உய்வதற்கு) நாம் ஒரு விதையும் விதைக்க வேண்டுமோ? (பகவானிடத்தில் ருசிபிறந்தால் அவனே கடைத்தேறச் செய்வான். அக்காலம் வரை ஆறியிருக்க, அவனது நினைவை யூட்டும் பொருளைக் கண்டு மகிழ்க.) திரண்டு கிளர்ந்த கருமேகம்போன்ற நீலவண்ணனை பகவானுடைய திருமேனியை நீர்கொண்ட மேகம் எதிரே நின்று காட்டுகிறது.

உழவன் - பகவானே பக்தி முக்திகளைக் கொடுக்க வேண்டி, தானாகவே உழுதல் விதைத்தல் முதலிய எல்லாப் பயிர்செய்யும் முறைகளையும் செய்தருள்கிறான். நம்மைப் பொறுத்த அளவில் அவனது முயற்சியைத் தடுக்காது, அதற்கு இசைந்து நிற்றல் வேண்டும் என்பது கருத்து.

### 108. 'கூற்றமும்...சாரா வகையறிந்தேன்'

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா தீ
மாற்றமும் சாரா வகைஅறிந்தேன்—ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும் மாயன்
உரைக்கிடக்கும் உள்ளத்(து) எனக்கு.

—நான்முகன் திரு அந்தாதி, 50.

எமன் என் அருகில் வராமல் இருப்பதற்கும், பாவங்கள் என்னை அணுகாமல் இருப்பதற்கும், பழிச் சொற்கள் என்னை அடையாமல் இருப்பதற்கும் உபாயத்தை அறிந்து கொண்டேன். எவ்வாறெனில், திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட மாயனாய், (காவேரி) ஆற்றங்கரையில் (கபிஸ்தலம் என்னும் திருப்பதியில்) பள்ளி கொண்டவனான கண்ணனுடைய திருவார்த்தை (சரம ஸ்லோகம்) என் நெஞ்சில் இருக்கிறது.

## 109. 'ஆட் பார்த்து உழி தருவாய்'

ஆட்பார்த் து(உ)ழி தருவாய் கண்டுகோள் என்றுநின்
தாட்பார்த் து(உ)ழிதருவேன் தன்மையைக்—கேட்பார்க்கு
அரும்பொருளாய் நின்ற அரங்கனே உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம்.

—நான்முகன் திரு அந்தாதி, 60.

அடியார் ஆவார் யாராவது உண்டா என்று தேடித் திரிகின்றவனே! எப்போதும் உன் திருவடியே வேண்டுமென்று திரிகிற என்னுடைய தன்மையை (யான் ஒருவன் உள்ளேன் என்பதை) அறிந்துகொள். (தாமே) கேட்க முயல்பவர்களுக்கு அரியவனான ரங்கநாதனே! உன்னை ஆசைப்படுவதையே நெஞ்சில் விடாதவனாய் இருக்கிறேன்.

கேட்பார்க்கு....அரங்கனே....வேண்டுவார்க்கு (அருளுவதற்கு உரிய எல்லாப் பொருள்களுக்குள்ளும் மேலான) விலை மதிக்க வொண்ணாத பொருளாய் நிற்கும் அரங்கனே என்றுமாம்.

## 110. 'மறந்தும் புறந்தொழா மாந்தர்'

திறம்பேல்மின் கண்டீர் திருவடிதன் நாமம்
மறந்தும் புறந்தோழா மாந்தர்—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்கள் என்றான் நமனும்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு.

—நான்முகன் திரு அந்தாதி, 68.

*யமன் தன் தூதர்களை அழைத்து (அவர்களுடைய) காதுகளில் ‘பகவானுடைய திருநாமத்தை மறந்திருந்தாலும், இதர தெய்வங்களை வணங்காத மனிதர்களை நீங்கள் வணங்கி அனுகூலர்களாகச் செல்லுங்கள். (இதை) மீற வேண்டாம்’ என்றான்.*

*பகவானை மறந்திருந்தாலும் பிற விஷயங்களில் ஈடுபடாதிருக்கும் வைராக்யம் இருக்குமாயின், அதுவே உலகத் துன்பங்களினின்றும் நீங்குதற்கு ஏதுவாகும்; இஷ்ட நிஷ்டை இல்லாவிடினும், அதற்கு அன்னியமான விஷயங்களை நாடாத நிஷ்டைவேண்டும் என்பதை வற்புறுத்தியவாறு. தனது நாயகனைக் கவனியாதிருப்பினும், பிறர் பால் மனதைச் செலுத்தாத பெருமை ஒருத்தியிடம் உண்டாயின், அவளுக்கும் பிறரால் தீங்குகள் உண்டாகாதவாறு போல.*

### 111. ‘சேயன் அணியன்’

சேயன் அணியன் சிறியன் மிகப்பெரியன்
ஆயன் துவரைக்கோன் ஆய்நின்ற—மாயன்அன்று
ஓதிய வாக்(கு) அதனைக் கல்லார் உலகத்தில்
ஏதிலராய் மெய்ஞ்ஞான மில்.

—நான்முகன் திரு அந்தாதி, 71.

*தூரத்தில் இருப்பவனும், சமீபத்தில் இருப்பவனும், சிறியனாக இருப்பவனும், மிகப் பெரியனாக இருப்பவனும், இடையர் குலத்துப் பிறந்தவனும், துவாரகாநாதனாக இருப்பவனும், மாயனுமான கிருஷ்ணன் (பாரத யுத்தத்தில்) அன்று அருளிய சரம சுலோகத்தைக் கற்காதவர்கள் உலகத்தில் உண்மையான ஞானமில்லாத அன்னியர்கள் ஆவார்கள்.*

### 112. ‘உயர்ஞானச் சுடர் விளக்காய் நின்றதன்றி’

நிறமுயர் கோலமும் பேரும் உருவும் இவைஇவை என்(று)
அற(ம்)முயல் ஞானச் சமயிகள் பேசிலும் அங்கங்கெல்லாம்
உறஉயர் ஞானச் சுடர்விளக்காய் நின்றதன்றி ஒன்றும்
பெறமுயன்றார் இல்லையால் எம்பிரான் பெருமையையே.

திருவிருத்தம், 44.

(திருமேனியின்) நிறமும் சிறந்த அலங்காரங்களும் திருநாமமும் வடிவமும் இன்னின்னவையென்று தருமமார்க்கத்தால் முயன்றுபெற்ற ஞானத்தையுடைய (வைதிக) சமயத்தர்கள் (ஒருவாறு பிறர்க்குச்) சொன்னாலும், அவர்கள் (மேல் சொன்ன நிறம் அலங்காரம் திருநாமம் வடிவம்) இவையெல்லாவற்றிலும், மிக உயர்ந்த (தமது) ஞானமாகிற தீபத்தால் சிறிது விளக்கத்தைப் பெற்று நின்றதல்லாமல், எம்பெருமானுடைய (ஒப்புயர்வற்ற) மகிமையை, ஒருவகையாலும் முழுவதும் சொல்லப் பெறும்படி முயற்சி செய்தார்களில்லை. (அவர்கள் ஒவ்வொரு பகுதியை அறிந்ததேயன்றி முற்றும் அறிந்தவரல்லர்.)

தலைவி (நாயகி) தலைவனது (நாயகனது) பெருமையை உரைத்தல்.

## 113. 'கருக்காய் கடிப்பவர் போல்'

இருக்கார் மொழியால் நெறி இழுக்காமை உலகளந்த
திருத்தாளிணை நிலத்தேவர் வணங்குவர் யாமும் அவா [ன்
ஒருக்காவினை யோடும் எம்மோடும் நொந்துகனி யின்மையி
கருக்காய் கடிப்பவர் போல் திருநாமச்சொல் கற்றனமே.

—திருவிருத்தம், 64.

(இருக்கு முதலிய) வேதங்களில் பொருந்தின மந்திரங்களைக்கொண்டு முறை தவறாமல் உலகங்களை அளந்த (எம்பெருமானது) திருவடிகளை வணங்கிப் பூமியில்வாழும் தேவர்களான அந்தணர்கள் அநுபவிப்பார்கள். நாமும் எமது ஆசையை அடக்கமாட்டாமல் (அப்படி அநுபவிப்பதற்கு விரோதியான எமது) பாவத்தையும் (அப்பாவத்திற்கு இடமான) எம்மையும் வெறுத்துக்கொண்டு, பழம் கிடைக்காமையால் பிஞ்சைத் தின்பவர்போல (பூரண அநுபவம் கிடைக்காமையால் அதுவரையில் தரித்திருப்பதற்காக அவனது) திருநாமங்களாகிய சொற்களைச் சொல்லுகிறோம்.

நாயகி பிரிவாற்றாத நிலையில் நாயகனது பேர் சொல்லி தரித்திருத்தலைத் தோழிக்குக் கூறியது.

### 114. 'அடியேன் மற்று யாது என்பனே'

மைப்படி மேனியும் செந்தாமரைக் கண்ணும் வைதிகரே
மெய்ப்படியால் உன்திருவடிச் சூடுந் தகைமையினார்
எப்படி ஊராமிலைக்கக் குருட்டாமிலைக்கும் என்னும்
அப்படி யானும் சொன்னேன் அடியேன் மற்று யாதென்ப
[னே. —திருவிருத்தம், 94.

*நீலநிறமுள்ள திருமேனியையும் செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுமுடைய உனது திருவடித் தாமரைகளை வைதிகர்களே உண்மையான நெறியால் தம் தலைமேல் சூடி வணங்கும் தன்மையுடையவர்கள்; எப்படி (வெளியில் மேய்ந்து மீண்டு) ஊர்வந்து சேர்ந்த (கண் தெரிந்த) பசுக்கள் (இடமறிந்து) கனைக்கக் குருட்டுப் பசுவும் கூடக் கனைக்குமென்று (உலகம்) சொல்லுமோ, அப்படியே நானும் உன்னைத் துதித்தேன். அடியவனை நான் வேறு என்னவென்று சொல்லுவேன்?*

*தலைவியைக்கண்ட பாங்கன் தலைவனை அடுத்து வியந்து கூறிய பாசுரம் இது.*

### 115. 'வணங்கும் துறைகள் பல பல ஆக்கி'

வணங்கும் துறைகள் பல பல ஆக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பல பல ஆக்கி அவைஅவை தோ(று)
அணங்கும் பல பல ஆக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்,
இணங்கு நின்னோரை இல்லாய்! நின்கண் வேட்கை எழு
[விப்பனே. —திருவிருத்தம், 96.

*(தெய்வத்தை) வணங்குகிற மார்க்கங்கள் பற்பல வற்றை உண்டாக்கி, அறிவின் வேறுபாட்டால் (ஒன்றோடு ஒன்று) மாறுபடுகிற மதங்கள் பலவற்றையும் உண்டாக்கி, அந்தந்த மதங்கள் தோறும் தெய்வங்கள் பற்பலவற்றையும் உண்டாக்கி (இப்படி) உனது வடிவத்தைப் பரவச்செய்துவைத்துள்ளாய். உன்னோடு ஒப்பாகச் சொல்லத்தக்க உன்போல்வார் எவரையும் இல்லாதவனே! உன்னிடத்திலேயே பக்தியை வளரச்செய்வேன்.*

தலைவி வெறி விலக்குவிக்க நினைத்தல் என்னும் துறை இது.

**116. 'கொள்வது எண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே?'**

உலகு படைத்து(உ)ண்ட எந்தை அறைகழல்
சுடர்ப்பூந் தாமரை சூடுதற்(கு) அவா(வு)ஆர்
உயிர்உருகி உக்க நேரியகாதல்
அன்பில் இன்(பு)ஈன் தேறல் அமுத
வெள்ளத் தாஞம் சிறப்புவிட்டு ஒரு பொருட்கு
அசைவோர் அசைக திருவொடு மருவிய
இயற்கை மாயாப் பெருவிறல் உலகம்
மூன்றிஞேடு நல்வீடு பெறினும்
கொள்வது எண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே?

—திரு ஆசிரியம், 2.

உலகங்களை உண்டாக்கி (அவைகளைப் பிரளயகாலத்தில்) விழுங்கியருளிய எனக்குத் தந்தையாகிய ஈசுவரனுடைய ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய (திருவடிகள் என்னும்) ஒளிவிடுகின்ற அழகிய தாமரைப் பூவைச் சூடுவதற்கு (உண்டான) ஆசையினல் நிறைந்த உயிரானது உருகிக் கரையும்படி நேர்ந்த பக்தியாகிய ஆசைப் பெருக்கத்தில் தோன்றி இன்பத்தைக் கொடுக்கிற தேனுகிய அமுத வெள்ளத்தில் மூழ்கி யிருத்தலாகிய பெருமையை விட்டு அற்பமான ஏதேனும் ஒரு பலனுக்கே அலைகின்றவர்கள் அலையட்டும். (அவர்களைப் பற்றி நமக்கு என்ன கவலை?) செல்வத்தோடு (எப்போதும்) சேர்ந்திருக்கும் நிலைமையும், அழியாத பெருவலிமையும், மூன்று உலகங்களுக்கும் நாயகனுய் இருத்தலும், உத்தமமான மோக்ஷ பதவியும் (ஆகிய இவற்றைப்) பெறுவதாயிருந்தாலும் ஞானிகள் (அமுத வெள்ளத்தில் மூழ்கி இருப்பதை விட்டு) இவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கமுடையர் ஆவரோ?

### 117. 'உட்கண்ணேல் காணும் உணர்ந்து'

அன்றேநம் கண்காணும் ஆழியான் கார்உருவம்
இன்றேநாம் காண(து) இருப்பதுவும்—என்றேனும்
கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சேன்னும்
உட்கண்ணால் காணும் உணர்ந்து.

—பெரிய திரு அந்தாதி, 28.

*புறக் கண்ணாலே காண வொண்ணாத அத்திரு மேனியை நெஞ்சாகிற உட்கண்ணாலேயே ஆராய்ந்து காணக் கூடும். அப்போதே திருவாழியை உடையவனுடைய திருமேனியை நாம் காணக் கூடும். நாம் நேரில் அதை இப்போது அநுபவியாது இருப்பதும் (ஞானக் கண் இல்லாத) அக்காரணத்தினாலேயே.*

### 118. 'என் செய்வேன் என்றே இருத்தி நீ'

ஒன்று(உ)ண்டு செங்கண்மால்! யான்(உ)ரைப்பது(உ)ன்
[அடியார்க்(கு)
என்செய்வேன் என்றே இருத்திநீ—நின்புகழில்
வைகும்தம் சிந்தையிலும் மற்(று)இனிதோ? நீஅவர்க்கு
வைகுந்தம் என்(று) அருளும் வான்.

—பெரிய திரு அந்தாதி, 53.

*சிவந்த திருக் கண்களை யுடைய பெருமானே! நான் (உனக்கு) சொல்வது ஒரு வார்த்தை உண்டு. நீ உன்னுடைய அடியவர்களுக்கு 'என்ன உபகாரத்தைச் செய்வேன்?' என்று (எண்ணிக்கொண்டு) இருக்கிறாய். (அப்படி யிருக்க) உன்னுடைய புகழில் (ஈடுபட்டு) வாழ்கின்ற மனப்பாங்கைக் காட்டிலும், நீ அருளும் ஸ்ரீ வைகுண்டம் என்பது மிகவும் இனியது ஆகுமோ?*

### 119. 'மறப்பு எல்லாம் ஏதமே'

பிறப்(பு) இறப்பு மூப்புப் பிணிதுறந்து பின்னும்
இறக்கவும் இன்புடைத்தா மேலும்—மறப்(பு) எல்லாம்
ஏதமே என்(று)அல்லால் எண்ணுவனே? மண்அளந்தான்
பாதமே ஏத்தாப் பகல்.

—பெரிய திரு அந்தாதி, 80.

பிறப்பு, மரணம், கிழத்தனம், நோய் (இவற்றை) ஒழித்து அதற்கும் மேல், மிக்க சுகமான அநுபவத்தை அடைந்தானாகிலும் உலகளந்த பகவானுடைய திருவடிகளைத் துதிக்காத காலத்தில் உள்ள மறப்பெல்லாம் துக்கமே என்றல்லது வேறொரு வகையில் நினைப்பேனோ?

## 120.

கல்நவில் தோள்காளையைக் கண்(டு) ஆங்குக் கைதொழுது
என்நிலைமை எல்லாம் அறிவித்தால் எம்பெருமான்
தன்அருளும் ஆகமும் தாரானேல்—தன்னைநான்
மின்இடையார் சேரியிலும் வேதியர்கள் வாழ்இடத்தும்
தன்அடியார் முன்பும் தரணி முழு(து)ஆளும்
கோல்நவிலும் வேல்வேந்தர் கூட்டத்தும் நாட்டகத்தும்
தன்நிலைமை எல்லாம் அறிவிப்பன்.

—பெரிய திருமடல். 134—137.

மலை (போலச்) சொல்லப்படும் தோள்களையுடைய காளைப்பருவம் உள்ள என் காதலனைக் கண்டு அவ்வவ்விடங்களில் கை கூப்பி, என்னுடைய நிலைமையையெல்லாம் தெரிவிக்கும்போது, என் பெருமானாகிய அவன் தன் அருளையும் திருமேனியையும் தாரானாகில், நான் நுண்ணிய இடையையுடைய பெண்கள் இருக்கும் தெருக்களிலும், வேதம் வல்லவர்கள் வாழும் இடத்திலும், அவனுடைய பக்தர்கள் முன்பும், பூமியை முழுதும் ஆள்கிற, கொலைத் தொழில் புரியும் வேலையுடைய அரசர்களுடைய கூட்டத்திலும், நாடுகளிலும் அவனுடைய செயல்களையெல்லாம் அறிவிக்கிறேன்.

திருமடல் என்னும் இப்பிரபந்தம், எம்பெருமானோடு கலந்து பிரிந்த பிராட்டிநிலையிலுள்ள ஆழ்வார் தம் ஆற்றாமையாலே மடலூர்ந்தாகிலும் அவனைக் காணவேண்டும் என்னும் உறுதிபூண்டு பாடியதாகும். இயற்கையாகவே தலைவியைக் கண்டு அவளது நட்பைப் பெற்றுப் பிரிந்த தலைவன் பின் அவளைப் பெறமுடியாதபோது,

பிரிவாற்ருமையாலே அவளைப் பெறுதற்பொருட்டுச் செய்யும் ஒரு முரட்டுச் செயல் மடலூர்தல் எனப்படும். அச்செயலாவது - தலைவியின் உருவத்தையும் தன் உருவத்தையும் இருவர் பெயரையும் ஒரு படத்தில் எழுதுவித்துப் பனைமடலாற் செய்த ஒரு குதிரையின்மேல் ஏறி, வீதியில் ஊர்ந்து வருதலாம்; இதனைக் காணும் உறவினரோ, பெரியோரோ அரசர்களோ இருவர்க்கும் உள்ள மெய்யன்பை உணர்ந்து, அவ்விருவரையும் மணத்தால் ஒன்று சேர்த்து வைப்பர் என்பர். தலைவியைப் பெறத் தலைவன் மடலூர்தலே தமிழரது மரபாயினும், வடமொழி மரபைப்பின்பற்றி, நாயகி நிலையடைந்த ஆழ்வார் இறைவனாகிய நாயகனைப் பெற மடலூர்ந்தார்.

# *நம்மாழ்வார்: திருவாய்மொழி*

## *1. 'உயர்வு அற உயர் நலம் உடையவன்'*

உயர்(வு)அற உயர்நலம் உடையவன் யவன்அவன்
மயர்வு(அற) மதிநலம் அருளினன் யவன்அவன்
அயர்(வு)அறும் அமரர்கள் அதிபதி யவன்அவன்
துயர்அறு சுடர்அடி தொழுதே(ழு) என்மனனே. 1. 1. 1.

*(மற்ற) உயர்வு (ஒப்பிடும்போது) இல்லை என்னலாம் படி (மனம் வாக்குக்கு எட்டாதவாறு, எல்லையற்று) உயர்ந்த ஆனந்தம் முதலிய(எண்ணிறந்த) நற்குணங்களை (இயல்பாக) உடையவன் எவனோ; (எல்லாவித) அஞ்ஞானமும் (வாசனையற) ஒழியும்படி (எனக்கு) பக்திரூபமான ஞானத்தை அருளாலேயே தந்தவன் எவனோ, மறதியில்லாத (சதாஇறைவனையே அநுபவித்துக்கொண்டிருக்கிற) நித்தியர்களுக்கு அதிபதியாய் இருப்பவன் எவனோ, (ஆன்மாக்களின்) துயரத்தை ஒழிக்கும் அவனுடைய ஒளிமயமான திருவடிகளை வணங்கி (அன்பால் அவனுக்கு உவந்த தொண்டுகளை யெல்லாம் செய்து) உய்வு அடையப்பார், என்நெஞ்சே!*

*இறைவன் திவ்விய குணமும் உருவமும் உடையவன். நித்தியர்களோடு அழியா உலகில் வாழ்பவன். நமக்கு விரோதி அஞ்ஞானம். இறைவனது அருளே நமக்கு உபாயம். இறைவனது மிக உயர்ந்த குணங்களில் ஈடுபட்டு, அதனால் அவனுக்குத் தொண்டுசெய்தலே வாழ்க்கையின் பயனும்.*

## *2. 'அவரவர் இறையவர் குறைவிலர்'*

அவரவர் தமதமது அறி(வு)அறி வகை வகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே. 1. 1. 5.

மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடையாப்
[புண்டு
எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே.
1 3. 1

*அன்பையுடைய அடியார்க்கு (பெறுதற்கு) எளியவன். ஆயினும் (தன்னிடத்து அன்பில்லாத) பிறர்க்கு (கிட்டுதற்கும்) அரிய அதிசயமான குணமும் செயலும் உடையவன்; இலக்குமிதேவி விரும்பும் நம் (எல்லோருடைய) பெறுதற்கு அரிய இறைவன். (அவ்வளவு மேன்மையுடையவன்) மத்தாலே நெருக்கிக் கடையப்பட்ட வெண்ணெயைத் திருடியதில் மார்பிலே கட்டப்பட்டு உரலோடு ஒன்றாகி (உரல்போலப் பொறுமையோடு) (அடங்கி) இருந்து (அழவும் மாட்டாதே) ஏங்கியதாகிய எளிமையெனும் குணம் எப்படிப்பட்டதென்பது!*

*இறைவனது மேன்மை மனமொழிகளுக்கு எட்டாதது என்னும் வேதம்; உண்மையுரைத்தால், அவனது எளிமையோ அவ்வாறு சொல்வதற்கும் இடம் தராதபடி, சிந்திப்பவரை சமாதியில் மூழ்கச் செய்கிறது. 'எத்திறம் ....எளிவே' என்று பாடி அக்குணத்தைச் சிந்தித்த ஆழ்வார் ஆறுமாதம் பிரேமையால் வரும் சமாதியில் மூழ்கியிருந்தார் என்ப. பத்துடை....எளியவன் - இறைவன் இயல்பாகவே உயிர்களுக்கு அருள் செய்து வருகிறான்; அந்த அருளைத் தடுக்காமலாவது இருப்பார்களானால், அவர்களையும் பகவான் தனது அடியாராகக் கருதுவான்; அவர்களுக்குத் தன்னை அடிமையாகவும்கொடுத்து வைக்கும் அவ்வளவு சுலபமானவன் என்றவாறு.*

5. *'என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு'*

என்(பு)இழை கோப்பது போலப் பனிவாடை ஈர்கின்றது
என் பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு
என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு என்றொரு
[வாய்ச் சொல்
என்(பு) இழைக்கும்இளங்கிளியே யான்வளர்த்த நீயலையே?
1. 4. 7.

(உலகமக்கள் பலருள்) அவரவர் தமது தமது அறிவுகளுக்குத் தோன்றிய வகைப்படியே அந்தந்த தெய்வ வடிவங்களை இறையவர் என அடிபணிவார்கள்; அவரவர் (வணங்கும்) தெய்வங்கள் குறைவுடையவரே அல்லர்; (பரம்பொருளாகிய) ஓர் இறைவரே அவரவருடைய விதிப்படியே (அந்தந்த தெய்வங்களை) அடையும் படிக்கும் நின்றனர் (நின்று அருள்புரிகின்றனர்.)

இறையவர்........நின்றனர் - ஒரே பரம்பொருளே மக்களில் அவரவர்களுக்கு முற்பிறவிகளிலிருந்து உண்டான வாசனை (வினைத்தொடர்பு) ருசி பேதங்களுக்குத் தக்கபடியே, பற்பல உருவங்களையுடைய தெய்வங்களாக நின்று, அந்தந்தத் தெய்வங்கள் மூலமாக அவரவர்கள் விரும்பியவற்றையெல்லாம் பெறும்படி அருள் புரிகின்றது.

### 3. 'வீடுமின் முற்றவும்'

வீடுமின் முற்றவும்
வீடுசெய்து உம்முயிர்
வீடுடை யானிடை
வீடு செய்ம்மினே. (1. 2. 1.)

விட்டுவிடுங்கள்; எல்லாவற்றையும் முழுவதும் இவ்வாறு விட்டபின், உமது ஆன்மாவை முத்தி அளிப்பவன் ஆன பரம்பொருளினிடம் ஒப்பித்துவிடுங்கள்.

உம்முயிர் வீடுடையானிடை - உமது ஆன்மாவை வீடாகக்கொண்டு, உமது உயிர்க்கும் உயிராய் இருப்பவனிடம்; உமது ஆன்மாவை ஒப்புவித்தற்கு உரிமையானவனிடம் என்றுமாம். விடவேண்டியது, இறைவனல்லாத மற்ற எல்லாவற்றையும்; பற்றவேண்டியது இறைவனையே. நீயே உபாயம் என்று பற்றுதல் முறை; 'யான்' 'எனது' என்னும் இருவகைப்பற்றும் ஒழிதல்வேண்டும்.

### 4. 'பத்துடை அடியவர்க்கு எளியவன்'

பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்(கு) அரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறலடிகள்

எலும்பில் (துளைத்து) நூலைக் கோப்பதுபோலக் குளிர்ந்த வாடை அறுக்கின்றது; (இவ்வமயத்திலும் தமது கிருபையை நினையாமல்) என் பிழைகளையே நினைந்தருளி 'என்மீது கிருபை செய்யாத - இலக்குமி தேவியோடு கூடியுள்ள - பெருமானுரிடம், 'உம்முடைய (எல்லாப் பிழையையும் பொறுக்கும் இயல்பாகிய) தகுதியை நோக்கும்போது இவள் செய்தபிழை எம்மாத்திரம்' என்ற ஒரு வார்த்தை (மட்டும் சொல்லுக.) எலும்பையும் இழைக்கின்ற இளங்கிளியே, (நான் உன்னை வேண்டியும் சும்மா இருக்கின்றனையே.) யான் வளர்த்த நீ அல்லவே. (வளர்த்ததை உணர்ந்தாயாயின், நீ இதுவும் செய்யமாட்டாயோ).

என்பு இழைக்கும் இளங்கிளியே - உனது நிறம் பருவம் வாய்ப் பழுப்பு பேச்சின் இனிமை இவைகளால் எனது நாயகனது நினைவை ஊட்டி, என்னை உருக்கு கின்ற இளங்கிளியே என்றவாறு.

'எனக்கு முகம் காட்டாது என்னை வருத்துகின்ற னரே, என்னுடைய குற்றம் ஒன்றையேதான் பார்ப் பதோ, மலை அனைய குற்றங்களையும் பொறுக்கும் இயல் பும் அவரிடம் உண்டே, என்று சொல் என்று தன் கிளி யிடம் ஆழ்வார் வேண்டுகின்றனர்.

முக்கரணங்களாலும் இறைவனை அநுபவிக்க ஆழ் வார் ஆசைகொண்டார். அவன் முகங் காட்டாமையாலே ஆற்ருமை மேலிட்டது. 'இறைவற் கன்றி வேறு ஒரு வருக்காக வாழேன்; வேறு ஒன்றையும் இன்பமாகக் கொள்ளேன்' என்னும் நிலையில் முற்றி இருத்தலின், ஆழ்வார் பகவானுடைய நாயகியின் நிலையை அடைந்தவ ராகிருர். நாயகன் இட்ட வழக்காய் இருத்தலே நாய கிக்கு முறையென்பதை ஆழ்வார் அறிவார்; ஆயினும் பகவானை நினைந்ததும், பேரன்பு பொங்கி யெழுந்து உள் ளத்தைக் கலக்குதலின், ஆறியிருக்க மாட்டாமல் பறவை களைத் தூது விடுகிருர். ஆழ்வாரைப் பகவான் வருந்த வைப்பானேன் எனில் இரு காரணங்கள் உண்டு. ஒன்று,

அவர் வழியாகப் பிரேமையால் வரும் துடிப்பை உலகத்தார்க்கு எடுத்துக்காட்டல், அவரைக்கொண்டு உலகத்தாரைத் திருத்தல். இரண்டாவது, பரமபத வாழ்க்கையில் ஆழ்வார்க்கு ஆசையை மூட்டுதல்; அதாவது களவு நெறியில் நிற்கும் ஆழ்வாராகிய நாயகியைக் கற்புநிலைக்கு ஆசைப்படும்படிச் செய்தல். அழியும் உலகில் இடையிடையே இறைவனோடு கூடிப் பெறும் பேரின்ப நிலை களவு நிலையாம்; அழியாத நித்திய உலகில் இடைவிடாது இறைவனோடு கூடி வாழும் பேரின்ப நிலை கற்பு நிலை எனப்படும்.

### 6. 'மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்'

சார்ந்த இரு வல்வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்து
தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி அகலம் கீழ்மேல் அளவிறந்து
நேர்ந்த உருவாய் அருவாகும் இவற்றின் உயிராம் நெடுமாலே.
1. 5. 10.

(ஆன்மாவைப்) பொருந்தியுள்ள (புண்ணிய பாவம் எனும்) இருவகைப்பட்ட வலிய வினைகளையும் எளிதாகத் தள்ளி, அஞ்ஞானத்தால் எழும் (உலக இன்பப்) பற்றுகளைப் போக்கி, (வேறு நினைவுகள்) ஒழிந்து, தன்னிடத்தே நெஞ்சை வைக்கும்படித் திருத்தியபின், நித்திய உலகையும் (ஆழ்வார் எழுந்தருளுவதைக் குறித்துப்) புதுப்பிக்கின்றான். நிறைவுடைய ஞானச் சுடராகி, எல்லாத் திக்குகளிலும் வியாபித்து, மிக்க சூக்ஷ்மமான உரு (அசித்துப் பொருள்) அரு(சித்துப் பொருள்) ஆகிய இவற்றிற்கு உயிராய் (அந்தராத்மாவாய்) இருக்கின்றவனும் (என்பால்) மிக்க பிரேமை யுடையவனுமான இறைவன்.

இறைவன் தனக்கு உரிமையான ஆன்மாக்களின் நன்மையைத் தானே தேடித் தன்னை அடையுமாறு அவர்களைச் செய்கிறான்.

### 7. 'ஒட்டுமோ, இனி என்னை நெகிழ்க்கவே'

யானொட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்
தானொட்டி வந்(து)என் தனி நெஞ்சை வஞ்சித்து
ஊனொட்டி நின்று(எ)ன் னுயிரிற் கலந்(து)இயல்
வானொட்டுமோ? இனி என்னை நெகிழ்க்கவே. 1. 7. 7.

*நான் மனமிசைந்து என் உள்ளத்து இருத்துவேன் என்று சொல்லவில்லை. (தனது கருணையால்) தானே எண்ணி என்னுடைய சுதந்திர நெஞ்சையும் நான் அறியாதபடியே வசப்படுத்தி, என் உடலிலேயே பொருந்திப் புகுந்து நின்று, என் ஆன்மாவொடு கலந்து நடப்பவன் இனி என்னைப் பிரிந்துபோக விடமாட்டான்.*

*நான் முயன்று ஈசனைப் பெற்றால் அன்றோ, நான் அவனை விடக்கூடும். ஈசன் தன் அருளாலே முயன்று என்னைத் திருத்தித் தன்னொடும் சேர்த்துக்கொண்டான்; ஆதலின் நான் விட நினைத்தாலும், அவன் விடான்.*

### 8. 'அகலில் அகலும் அணுகில் அணுகும்'

அகலில் அகலும் அணுகில் அணுகும்
புகலும் அரியன் பொரு வல்லன் எம்மான்
நிகரில் அவன்புகழ் பாடி இளைப்பிலம்
பகலும் இரவும் படிந்து குடைந்தே. 1. 7. 10.

*(அவனைப் பற்றிய பின்) (நான் அவனைவிட்டு வேறு ஒன்றைப்பற்றி) விலகினால் அவனும் (வருத்தத்தோடே) விலகுவான்; (வேறு ஒன்றையும் விரும்பாது அவனை) அணுகினால் (அவனும் பல காலம் பழகினவனைப்போல நம்மோடு) கலக்கும். (தன் பால் பற்றில்லாதவர்க்கு) அணுக முடியாதிருப்பவன்; (பற்றினார்க்குத்) தடை செய்பவனல்லன்; எனக்கு நாதன், ஒப்பற்ற அவனது புகழையே (நற்குணங்களையே) பகலிலும் இரவிலும் (எக்காலத்தும் விடாமல் அன்பில்) ஆழ மூழ்கி, எங்கும் கலந்து (பேரன்போடு) பாடுவதில் சலிப்படையோம்.*

### 9. 'தந்த நீ கொண்டாக்கினையே'

எனதாவி யுள்கலந்த பெருநல்லுதவிக் கைம்மாறு
எனதாவி தந்தொழிந்தேன், இனி மீள்வதென்பதுண்டே?
எனதாவி ஆவியும் நீ, பொழில் ஏழும் உண்ட எந்தாய்,
எனதாவி யார்? யான் ஆர்? தந்த நீ கொண்டாக்கினையே.
2. 3. 4.

*என்னுடைய ஆன்மாவோடு கலந்த, மிக்க நல்ல உதவிக்குப் பதிலாக எனது ஆன்மாவை (உன்னுடைய திருவடிகளில்) கொடுத்துவிட்டேன். இனி அதைத் திரும்பப் பெறுவது என்பது இல்லை. ஆனால் (என்னுடைய ஆன்மாவோ?) எனது ஆன்மாவுக்கும் ஆன்மா நீ அல்லவா? (என் ஆன்மா உன் உடைமை யன்றோ?) ஏழு உலகங்களையும் (பிரளயத்தில்) நினது வயிற்றில் வைத்துக் காக்கும் தந்தையே! (யான் உள்பட அனைத்தும் நின் உடைமை யன்றோ?) (நான் கொடுத்ததாக நினைத்த) எனது ஆன்மா யார்? (கொடுத்தேன் என்று சொல்லும்) நான் யார்? (எனக்கு ஓர் இருப்பை) தந்த நீயே கொண்டவனாய். (உன் இச்சைப்படியே எடுத்துக் கொண்டாய்.)*

*ஆன்மா இறைவனது உடைமை. அதை நம்மதென்று பல பிறவிகளாக நினைத்திருக்கும் நாம் அதை அவனுடையதென்று அறிந்து அவனிடமே ஒப்புவித்து விட வேண்டும். அவனது உடைமையை அவ்வாறு அவனிடம் கொடுக்கும்போதும், அதுவரை அபகரித்து வைத்திருந்ததற்காக வெட்கப்படவேண்டும்; கொடுத்த பின்னும், 'கொடுத்தோம்' என்ற நினைவையும் விட்டு, கொடுத்தவன் கொண்டான் என்று இருத்தல் வேண்டும்.*

### 10. 'ஆடி யாடி அகங் கரைந்து'

ஆடி யாடி அகங் கரைந்து, இசை
பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி, எங்கும்
நாடி நாடி நரசிங்கா என்று,
வாடி வாடும் இவ் வாணுதலே. 2. 4. 1.

(ஆற்ருமையால் நிலை கொள்ளாது துடிக்கும் துடிப்பு காரணமாக) அசைந்து, (அதுவும் தாய்க்கு அழகாய் இருப்பதனுல், ஆடுவார் போல) ஆடி, மனம் நீராய் உருகி, (ஆற்ருமையாலே போடும் கூப்பாடே பாட்டாகத் தோன்ற) பாடிப் பாடி, (மனத்தின் மற்ருெரு பாகமும் பெருகியது போலக் கண்ணீர் நிரம்பி, (இம் மாதிரியான ஆபத்துக் காலத்தில் அவன் வாராதிரான் என்ற நம்பிக்கையாலே, வரவுக்குரிய இடம் மாத்திரமன்றி எல்லா இடத்திலும் பலமுறையும் தேடி, (எதிர் பாராத தூணிலும் தோற்றின) நரசிம்மனே! என்று சொல்லி, (உடனே உதவாமையாலே) மிகவும் வாடுகின்றனள், இந்த ஒளி பொருந்திய நெற்றியையுடைய இப்பெண்.

தாய் தனது பெண்ணின் ஆற்ருமையைக் கண்டு இரங்குவதாகக் கூறியது.

### 11. 'உளன் அல்லன் இல்லை யல்லன்'

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
காணலும் ஆகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்காற் பேணும் உருவாகும் அல்லனுமாம்
கோனை பெரிதுடைத்து எம் பெம்மானைக் கூறுதலே.
2. 5. 10.

(உலகத்திலே காணப்படுகிற) ஆண்களைப் போலும், பெண்களைப் போலும் (பயன்) இல்லாத அலியைப் போலும் (பகவான் இருப்பவன்) அல்லன். (ஆகவே அவன் புருடோத்தமன்). (ஊன் கண்ணுல்) காணப் படாதவன். (தன்னை வந்து அடையாதவர்க்கு) உள்ளவனுகான். (தன்னிடம் அன்போடு வந்து அடைவார்க்கு) இல்லாதவனுகான். (தன்னைப்) பேணி வேண்டும் போது (அவர்கள்) வேண்டிய வடிவோடு வந்து பிறப்பான். (அவ்வாறு அவதரிக்கும் போதும் அன்பில்லாதவருக்குக்) கிட்ட அரியவனுவான். ஈசன் என்னை அனுபவித்த விதத்தைக் கூறுதல் மிகவும் கஷ்டமாயிருக்கிறது. (எளிதல்ல.)

**12. 'அடியை அடைந்து உள்ளம் தேறி'**

மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அடியை
அடைந்து உள்ளம் தேறி
ஈறில் இன்பத்து இருவெள்ளம் யான் மூழ்கினன்
பாறிப் பாறி அசுரர் தம் பல் குழாங்கள்
நீறெழுப்பாய் பறவை யொன்று
ஏறி வீற்றிருந்தாய் உன்னை என்னுள் நீக்கேல்
எந்தாய்! 2. 6. 8.

*(அநாதி காலமாக) மாறி மாறிப் பல விதப் பிறவிகளிலும் பிறந்து, உன் திருவடிகளை அடைந்தேன். அதனால் மனம் தெளிவு அடைந்து, (அதோடு நில்லாமல்) முடிவில்லாத ஆனந்தக் கடலில் யான் மூழ்கினேன். சின்னு பின்னமாய் அசுரர்களுடைய பல வகைப்பட்ட கூட்டங்கள் நீறும்படி (விரோதிகள் மீது) பாயும் ஒப்பற்ற கெருடன் மீது ஏறி மேன்மை தோன்ற இருந்தவனே, என் நாதனே, (என்னோடு மகிழ்ந்து கலந்த) உன்னை என்னிடமிருந்து பிரித்துக்கொண்டு போகாதிருக்கவேண்டும்.*

**13. 'தனக்கே யாக எனைக் கொள்ளும் ஈதே'**

எனக்கே யாட்செய் எக்காலத்தும் என்(று) என்
மனக்கே வந்(து) இடைவீடின்றி மன்னித்
தனக்கே யாக எனைக் கொள்ளும் ஈதே
எனக்கே கண்ணனை யான்கோள் சிறப்பே. 2. 9. 4.

*'எனக்கு மட்டும் எப்போதும் அடிமை செய்' என்று என்னை ஏவிக்கொண்டருளி, என் உள்ளத்திலேயே வந்து வேறிடம் போகாமல் நிலையாக எழுந்தருளி, அவனுக்கு மட்டும் பயன் படும்படியாக என்னைக் கொண்டருள வேண்டும்; (அவனுக்கே யானபின் அக்காரணத்தால்) எனக்கே கண்ணபிரானை (சொரூப ஞானமுடைய) நான் கொள்ளும் ஏற்றம்இதுவே யாகும்.*

*எனக்கே.......சிறப்பே - சாதாரண மனிதர்களைப் போல அல்லாமல் தனக்கென ஒன்றையும் விரும்பாது,*

### 16. 'புகழு நல் ஒருவன் என்கோ?'

புகழு(ம்)நல் ஒருவனென்கோ?
பொருவில் சீர்ப்பூமி யென்கோ?
திகழுந் தண்பரவை யென்கோ?
தீயென்கோ? வாயுவென்கோ?
நிகழும் ஆகாசம் என்கோ?
நீள்சுடர் இரண்டும் என்கோ?
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ?
கண்ணனைக் கூவு மாறே. 3. 4. 1.

(சுருதி ஸ்மிருதி முதலியவைகளாலே) புகழப்பட்ட நன்மை மிக்க ஒப்பற்றவன் என்பேனோ? ஒப்பில்லாத (பொறுமை முதலிய) குணங்களையுடைய பூமி என்பேனோ? பிரகாசிக்கின்ற குளிர்ச்சியுடைய கடல் என்பேனோ? தீ என்னும் தத்துவம் என்பேனோ? வாயு தத்துவம் என்பேனோ? நிற்கும் ஆகாச தத்துவம் என்பேனோ? சந்திர சூரியர்கள் என்பேனோ? ஒன்றொழியாமல் இவையெல்லாம் என்பேனோ? நான் கண்ணபிரானை எவ்வாறு சொல்வேன்?

### 17. 'முழுது உணர் நீர்மையினோரே'

மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப் பிறவி பிறந்த
தனியன் பிறப்பிலி தன்னைத் தடங்கடல் சேர்ந்த பிரானைக்
கனியைக் கரும்பினின் சாற்றைக் கட்டியைத் தேனை அமுதை
முனிவின்றி ஏத்திக் குனிப்பார் முழுதுணர் நீர்மையினோரே.
3. 5. 6.

மனிதராயும் மற்ற எல்லாமாகியும் ஆச்சரியமான (பல) அவதாரங்களைச் செய்த ஒப்பற்றவனும், (கருமத்தால் வரும் பிறவி இல்லாமையால்) பிறப்பற்றவனும் ஆன இறைவனை, விசாலமான திருப்பாற் கடலிலே சேர்ந்து பள்ளி கொண்டருளும் பெருமானை, கனி போன்றவனும், இனிய கருப்பஞ்சாறு போன்றவனும், சருக்கரை போன்றவனும், தேன் போன்றவனும், அமு

இறைவனுடைய விருப்பத்தையே தன்னுடைய இன்பமாகக் கொள்வதே ஆழ்வாருடைய கோரிக்கையின் சிறப்பாகும் என்றவாறு.

### 14. 'முடிச் சோதியாய்......மலர்ந்ததுவோ'

முடிச் சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச் சோதி ஆடையொடும் பல்கலனாய் நின்பைம் பொன்
கடிச் சோதி கலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே.
3. 1. 1.

உன் திருமுகத்தின் ஒளி முடிச் சோதியாய் மலர்ந்ததோ? உனது திருவடிகளின் ஒளியழகு நீ நிற்கும் (ஆசனத்) தாமரையாய் மலர்ந்ததோ? உன்னுடைய பசும் பொன் போன்ற அழகிய திவ்விய அரையின் ஒளியழகு இயல்பாக ஒளிவீசும் பீதாம்பரம் முதலான பல ஆபரணங்களாய்க் கலந்ததோ? இலக்குமிப் பிராட்டியோடு கூடிய நீ அருளிச் செய்யவேண்டும்.

### 15. 'வழுவிலா அடிமை செய்ய வேண்டும்'

ஒழிவில் கால மெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்
தெழி குரல் அருவித் திருவேங்கடத்(து)
எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே.
3. 3. 1.

முடிவு இல்லாத காலமெல்லாம் (எக்காலத்தும்) கூடத் தொடர்ந்து (எங்கும்) (எந்நிலையிலும்) பிரியாது நின்று, ஒன்றும் நழுவாதபடி (எல்லாவித) அடிமைத் தொழில்களையும் செய்ய வேண்டும்; (யார்க்கு எனில்) கம்பீரமான தொனியை யுடைய அருவி யுள்ள திருவேங்கட மென்னும் திருப்பதி மலையிலே வாழும் அழகுமிக்க சோதி வடிவான, நமக்கும் நம்முடைய குலத்தார்க்கும் நாதனை, எம்பெருமானுக்கே.

வழுவிலா அடிமை - தன்னையும் அற்ற (தனக்கென ஒன்றும் விரும்பா) அடிமை என்றுமாம்.

தம் போன்றவனும் ஆன இறைவனைப் பொருமைக் குண மில்லாது புகழ்ந்து கூத்தாடுபவர்களே, (ஒன்றும் கற்றில ராய் இருப்பினும்) எல்லாம் அறிந்த இயல்பையுடைய வர்களாவர்.

### 18. 'நெஞ்சினால் நினைப்பான் அவன்

தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய் அவையல்லனாய்
எஞ்சலில் அமரர் குலமுதல் மூவர்தம் முள்ளும் ஆதியை
அஞ்சிநீர் உலகத்துள்ளீர்கள்! அவன் இவனென்று கூழேன்
[மின்
நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல்வண்
[ணனே. 3. 6. 9.

தஞ்சமான (நன்மை செய்வதற்குத்) தந்தை ஆகி யும், (பிரியத்தைச் செய்வதற்குத்) தாய் ஆகியும், இவ் விரண்டோடும் தானுமாகியும், அவை அல்லாதவனாகியும் (அதாவது, மற்ற எல்லாவித பந்துவுமாகியும்) சுருங்கு தலே இல்லாத (ஞானமுடைய) நித்தியர்களுடைய கூட் டத்திற்குத் தலைவனாகியும், மும்மூர்த்திகளுக்கு மூலமாகி யும் உள்ள இறைவனை, உலக மக்களாகிய நீங்கள் (முற் கூறிய இறைவனது மேன்மையைக் கண்டு) பயந்து, (எல்லையற்ற பரம்பொருளாய் இருப்பவன்) அவன் திரு மேனி கொண்டு எழுந்தருளி யிருப்பவன்) இவன் (ஆத லின் இரு வடிவங்களும் வெவ்வேறு) என்று சந்தேகம் கொள்ளாதீர்கள்; நெஞ்சினால் (உங்களால்) நினைக்கப் படுகின்ற (வடிவுடைய)வன் எவனோ, அந்த இறைவனே அளவிறந்த கடல்போன்ற இயல்பையுடையவ னாவான்.

நாம் விரும்பும் விக்கிரக வடிவமாகிய திருமேனி யோடு கோயில்களில் எழுந்தருளி யிருப்பவன் பரனே ஆவான். ஆதலின் அவனை வணங்கினால் மிக எளிதாக உய்வடையலாகும்.

### 19. 'பயிலுந் திருவுடையார்'

பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப்
பயில இனியநம் பாற்கடற் சேர்ந்த பரமனைப்

பயிலுந் திருவுடையார் யவரேலும் அவர் கண்டீர்
பயிலும் பிறப்பிடை தோ(று) எம்மை யாளும் பரமரே.
3. 7. 1.

*(மேலும் மேலும்) செறிந்து கொண்டிருக்கும் (அதாவது, பெருகிக்கொண்டும் நெருங்கிக் கொண்டும் வரும்) ஒளி மயமான திவ்விய வடிவ முடையவனை, (பேரன்பு முதலிய குணங்களை யெல்லாம் தெரிவிக்கும்) அழகிய தாமரைக் கண்ணனை, பழகி அநுபவிக்கும்போது இனிய, நமக்காகத் திருப்பாற் கடலிலே பள்ளி கொண்டுள்ள பரமனை, (வேறு பலனை விரும்பாது அவனையே) நெருங்கிப் பழகுதலாகிய (அடிமையாகும்) செல்வத்தை உடையவர்கள் எப்படிப்பட்டவராகிலும் (குலத்தாலும் தொழிலாலும் அறிவாலும் குறைவுற்றவராகிலும்), (இறைவனது அடியார் என்ற ஒரு காரணத்தாலே) அவர்களே, (மேலும் மேலும்) நெருங்கி வரும் பிறப்புக்களில் ஒவ்வொன்றிலும் எம்மை அடிமை கொள்ளும் தலைவர்களாவார்.*

## *20. 'இட்டா தெய்வம் ஏத்தினல்'*

வம்மின் புலவீர்! நும்மெய் வருத்திக் கைசெய் து(உ)ய்ம்
[மினோ
இம் மன்னுலகில் செல்வர் இப்போதில்லை நோக்கினோம்
நும்இன் கவிகொண்டு நும்நும் இட்டா தெய்வ மேத்தினல்
செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே. 3. 9. 6.

*வாருங்கள் (நல்லதை அறியும்) புலவர்களே! (வயிறு பிழைக்க வழி வேண்டாமோ என்பீராகில்) உமது உடலை வருத்தியும் கைத்தொழில் செய்தும் (மானமுடன்) பிழையுங்கள். (மனிதர்களைத் துதிக்க வேண்டாம்.) நிலையான இந்த உலகத்தில் (உங்களுடைய கவிக்கு ஈடாகத் தரும்) (உதார குணமுள்ள) பணக்காரர் இக்காலத்தில் இல்லை; (உங்களது நன்மையைக் கருதி இப்போது) ஆராய்ந்து பார்த்தோம். (ஒருவரும் இல்லை); (பின்னைச் செய்வது யாது என்பீரானல்) உமது இனிய கவிகளைக்கொண்டு,*

உங்களுக்கு வெவ்வேருக உள்ள இஷ்ட தெய்வங்களைப் புகழ்ந்து பாடினல், அது செம்மையான பேரொளியை வீசும் திருமுடியை உடைய எனது (இஷ்டதெய்வமாகிய) பரம்பொருளுக்கே வந்து சேரும்.

நிலையற்ற மனிதரைப் பெரிதாகப் புகழ்ந்தால், அவர்களிடத்துக் கொடையு மில்லை, புகழும் பொருந் தாது, 'பச்சைப் பசும் பொய்' ஆகும்; ஆதலின் இஷ்ட தெய்வங்களை வாழ்த்துங்கள்; (எத் தெய்வத்தை வாழ்த் தினும், கொடையும் புகழும் எல்லையற்று உள்ள பரம் பொருளுக்கே எல்லா வாழ்த்தும் சேரும்.) அதனல், இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய வெல்லாம் பெற்று வாழலாம்.

## 21. 'நான் ஓர் குறைவு இலனே'

சன்மம்பலபலசெய்து வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம் வில்
ஒண்மை யுடைய உலக்கை ஒள்வாள் தண்டு கொண்டு
புள்ளூர்ந்து(உ)லகில்
வன்மை யுடைய அரக்கர் அசுரரை மாளப் படை பொருத
நன்மை யுடையவன் சீர் பரவப் பெற்ற நான் ஓர்குறைவி
லனே. 3. 10. 1.

பல அவதாரங்களை எடுத்துத் தன்னை யாவரும் காண வெளிப்படுத்திக் கொண்டு, சங்கு சக்கரங்கள், சார்ங்கம் என்னும் வில், அறிவோடுகூடிய உலக்கை, அழகு மிக்க வாள், கதை இவைகளைத் (தரித்து)க்கொண்டு கருடன் மீதேறி, உலகில் வன்மை யுடையவரான இராக் கதரையும் அசுரர்களையும் மாண்டு போம்படியாக ஆயுத மெடுத்துப் போர் புரிந்த நன்மையை யுடையவனின் நற் குணங்களைப் புகழப் பெற்ற நான் ஒரு குறையும் இல் லாதவனுனேன்.

## 22. 'காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ'

ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்
கரு நாய் க்வர்ந்த காலர் சிதைகிய பானையர்

பேரு நாடு காண இம்மையிலே பிச்சைதாம் கோள்வர்
திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினே.
4. 1. 1.

ஏகாதிபதிகளாய் (நெடுங் காலம்) செல்லும்படி உலக முழுவதும் அரசாட்சி செய்தவர்களும், (நாட்டை இழந்த பின்) (பிச்சை யெடுக்கக் கூசி இருளிலே வரும்போது, இருள் போலக் கிடந்த நாய்களை மிதிக்க) கருத்த நாய் களினுல் கடிக்கப் பெற்ற கால்களை உடையவராய், (பொற் கலத்தில் உண்டவர் இப்போது) சில்லியான (பய னற்ற) ஓட்டினைக் கைக்கொண்டவராய், (காண வரும் சிற்றரசர்களுக்கும் சமயம் கிடையாது போம்படி இருந்த வர்கள் இப்போது) பூமியில் உள்ளவர் எல்லாம் காணும் படி, அப் பிறவியிலேயே (முன்பு சிற்றரசர்களுக்கு நாடு களை வழங்கியவர், அவர்களது காணிக்கைகளாகிய ரத் தினங்களையும் கவனியாதவர், இப்போது) பிச்சையைத் தாமாக (சென்று விரும்பி)க் கொள்வர். (அரச வாழ்வு நிலையற்றதாதலின்) (நிலையான செல்வமாகிய) ஸ்ரீமானுன நாராயணனுடைய திருவடிகளை முற்படவே தியானித் துக் கடைத்தேறுங்கள்.

23. 'எங்ஙனே சொல்லுகேன் யான் பெற்ற ஏழையை'

நங்கைமீர்! நீரும் ஓர் பெண் பெற்று நல்கினீர்
எங்ஙனே சொல்லுகேன் யான் பெற்ற ஏழையைச்
சங்கென்னும் சக்கர மென்னும் துழா என்னும்
இங்ஙனே சொல்லும் இராப் பகல் என்செய்கேன்?
4. 2. 9.

(ஞான பூர்த்தியை உடைய) மாதர்களே! (இப் பெண் படும் பாட்டை நான் சொல்லக் கேட்டு அறிய வேண்டுமோ உங்களுக்கு?) நீங்களும் ஒரு பெண் பிள்ளை யைப் பெற்று வளர்க்கிறீர்களே; (இவள் படுவது போலப் பட்டவர் பிறர் உண்டோ? இவளது நிலை பேச்சுக்கு அப் பாற்பட்டதன்றே? ஆதலின்) யான் பெற்ற சபலையான இவளுடைய நிலையை எப்படியென்று சொல்லுவேன்? (அது கண்டறியத் தக்கதேயன்றி வேறில்லை.) (ஆயி

னும் சொல்லக்கூடிய அளவாவது சொல்லலாம் என்றேலோ) (மலை யெடுத்தாற் போலப் பெரு வருத்தத்தோடே) 'சங்கு' என்கிருள்; (பின்) 'சக்கரம்' என்கிருள்; (பின்னும்) (சங்குக்கும் சக்கரத்திற்கும் இடையே தோளிலுள்ள) 'துழாய்' என்கிருள்; (சங்கு. சக்கரக் கையனது துழாய் வேண்டும் என்று சொல்ல நினைந்தவள் அதைச் சேர்த்துச் சொல்லவும் மாட்டாமல், விடவும் மாட்டாமல், இப்படிப் பெரு வருத்தப்பட்டு, வார்த்தை வார்த்தையாக விட்டுவிட்டு .இவ்வாறு அல்லும் பகலும் (எக் காலமும்) சொல்லுகிருள்: (இவளைச் சும்மா இருக்கச் சொல்வதா? சொல்வதைப் பூர்த்தி பண்ணுவதா?) இதற்கு எது செய்வேன்?

**24. 'உன்னதென்ன தாவியும் என்ன துன்ன தாவியும்**

என்னதாவி மேலையாய் ஏர்கோள் ஏழுலகமும்
துன்னி முற்றுமாகி நின்ற சோதி ஞானமூர்த்தியாய்
உன்ன தென்ன தாவியும் என்னதுன்ன தாவியும்
இன்ன வண்ணமே நின்ருய் என்றுரைக்க வல்லேனே?
(4. 3 8.)

என் ஆத்மாவைப்பெற்று, அதனல் வந்த பிரேமையை உடையவனுய், (ஒருவனைப் பிடிக்க நினைப்பவன் ஓர் ஊரை வளைவதுபோல, என்னைப் பெறும்பொருட்டு அழகுகொண்ட ஏழு (எல்லா) உலகங்களிலும் நெருங்கி வியாபித்து, எல்லாப்பொருள்களும் (சரீரம்) ஆகி நின்ற சோதியுடைய ஞானவடிவானவனே! என் ஆத்மா உன்னுடையதாயும் (உன் அதீனமாயும்), உன்னுடைய திவ்யாத்ம வடிவம் என்னுடையதாயும் (என் அதீனமாயும்) இம்மாதிரியாக நின்ருயே என்று (வார்த்தையால்) என்னல் சொல்லமுடியுமோ?

ஆழ்வார் இறைவனைத் தம் உயிராகக்கருதித் தம்மை இறைவன் வசமாக்கிஞர்; இறைவனும் ஆழ்வாரைத் தன் உயிராகக் கருதித் தன்னை அவர் வசம் ஆக்கினன் இவ்வாறு செய்த ஈசனது பிரேமையை என்னவென்று சொல்வது!

## 25. 'பெரு மயல் செய்தார்க்கு என் செய்கேன்?'

மண்ணை இருந்து துழாவி வாமனன் மண் இதுவென்னும்
விண்ணைத் தொழு(து) அவன்மேவு வைகுந்த மென்று கை [காட்டும்
கண்ணை யுண்ணீர்மல்க நின்று கடல்வண்ணன் என்னும் [அன்னே! என்
பெண்ணைப் பெருமயல் செய்தார்க்(கு) என் செய்கேன்! [பெய்வளையீரே! (4. 4. 1.)

*பூமியை (முழுவதையும்) முன்பு (இவன் இருப்பு கொள்ளாமல் வருந்தினதுபோய் இப்போது) இருந்து துழாவி (தடவிக்)கொண்டு (தெளிவாக எனக்குத் தெரிவது உங்களுக்குத் தெரியவில்லையோ? வாமனன் (முன்பு இரந்து அளந்து பெற்ற) பூமி இது என்று சொல்லுகிறாள்; ஆகாசத்தை (நோக்கி)த்தொழுது, அவன் (பிரிவின்றிக் கலந்து நித்யமாக) வாசம்பண்ணும் பரமபதமன்றோ என்று (சொல்லத்தொடங்கி) வருத்த மிகுதியால் அதைச் சொல்லமாட்டாதே) கையால் (குறிப்பிட்டுக்)காட்டும்; (அப்பரமபதம் உரிமையாய் இருந்தும் இழப்பதே என்று வருந்தி) கண்ணைக் கண்ணீர் நிறைக்க நின்று, (தன்னைப் பித்தேறச்செய்த) கடல்போன்ற நிறத்தை (தாபத்தைப் போக்கும் நிறத்தை) உடையவன் என்று சொல்கின்றாள்; அம்மே! (துக்கக் குறிப்பு.) என் பெண்ணிற்கு (கலந்து பிரிந்தார் படும் வருத்தத்தோடு நில்லாது, அதற்குமேலும், அவனை நினைப்பூட்டும் பொருளைக் கண்டு வருந்தும்) பெரும்பித்தை உண்டுபண்ணியவர்க்கு யான் என்னசெய்வேன்? (அவனை வரப்பண்ணுவேனோ? இவளை ஆறி இருக்கப் பண்ணுவேனோ? நான் பொறுத்திருப்பேனோ?) இடப்பட்ட வளையை உடைய மாதர்களே! (இவளது வளைபோலன்றிக்கழலாது நிற்கும் வளையோடிருக்கும் நீங்கள் உங்கள் கையில் வளையல் தங்குவதற்குச் செய்த வழியைச் சொல்லுங்கள், யானும் செய்து பார்க்கிறேன்.)*

பண முடிச்சை இழந்தவன் அதற்குப் போலியான முடிச்சுகளை யெல்லாம் அவிழ்த்தவிழ்த்துப் பார்ப்பது போல, ஆழ்வார் இறைவனைப் பிரியவே, ஆற்ருத நிலையில் போலிப் பொருள்களைக் கண்டு வருந்துகிருர்.

### 26. 'அயர்க்கும் சுற்றும் பற்றி நோக்கும்'

அயர்க்கும் சுற்றும் பற்றி நோக்கும்
அகலவே நீள்நோக்குக் கொள்ளும்
வியர்க்கும் மழைக்கண் துளும்ப
வெவ்வுயிர் கொள்ளும்மெய் சோரும்
பெயர்த்தும் கண்ணு! என்று பேசும்
பெருமானே! வாவென்று கூவும்
மயற்பெருங் காதல் என்பேதைக்(கு)
என்செய்கேன்? வல்வினையேனே. 4. 4. 10.

(போலிப் பொருள்களையும் காண முடியாதபடி) மூர்ச்சித்துக் கிடப்பாள்; (நினைவு வந்ததும்) (இந்த ஆபத்தான நிலையில் அவன் வாராதிரான் என்று கருதி ஆசையோடு) சுற்றும் பார்ப்பாள்; (அருகே காணமையாலே) பரக்க வெகு தூரமளவும் (பரமபதத்தளவும்) நோக்குவாள்; (அங்கும் காணமையாலே, இன்னும் வரவில்லையே என்று மனம் நொந்து வியர்ப்பாள்; மழைபோல (சொரியும்) கண் (கோபத்தீயால் கண்ணீர்வற்றிக் கண்ணளவோடு) நீர்பெருக, வெம்மையான (நெடு) மூச்சுவிடுவாள்; (உள்ளே இருந்ததெல்லாம் வெளியேறலும்) உடல் தளர்ந்து (மெய்ம்மறந்து) விடுவாள்; மறுபடியும், 'கிருஷ்ண' என்று அழைப்பாள். (நாமத்தைச் சொல்லிச் சிந்திக்கும்போது, அச்சிந்தனையின் முதிர்ச்சியாலே கண்ணனது வடிவம் உருவெளிப்பாடாகத் தோன்றவும்) 'எனது நாதனே, வா! என்று அழைப்பாள்; (இப்படிப்) பித்துக்கொள்ளும்படியான பெரிய காதலையுடைய என் இளம் பெண்ணுக்கு (இப்படி அளவுகடந்த பிரேமை ஆகாது' என்ருல் என்சொற் கேட்கும் பருவத்தில் இல்

லாத பெண்ணிற்கு) என்செய்வேன்? (இவளை இப்படிக் காணும்படியான) கொடிய பாவத்தைப் பண்ணினேன்.

## 27. 'இனி என்ன குறை எழுமையுமே'

வீற்றிருந்(து) ஏழ உலகும் தனிக்கோல் செல்ல வீவில்சீர்
ஆற்றல் மிக்(கு) ஆளும் அம்மானை வெம்மா பிளந்தான்
[தன்னைப்
போற்றி யென்றே கைகளாரத் தொழுது சொன்மாலைகள்
ஏற்ற நோற்றேற்(கு) இனி என்ன குறை எழுமையுமே.

4. 5. 1.

பெருமை தோன்ற இருந்து, (இருந்த இருப்பிலே தன் ஆணையாலே) ஏழு உலகங்களிலும் ஒப்பற்ற செங்கோல் செலுத்தும்படி, முடிவற்ற(எண்ணிறந்த) (ஞானம் சக்தி முதலிய) கல்யாண குணங்களோடு (யாரும் தன்னை அடையும்படி) பொறுமை மிகுந்து ஆளும் ஈசனைக் கொடிய குதிரை (வடிவுடைய அசுரனாகிய கேசி)யின் வாயை இரு பிளவு ஆக்கினவனை (கண்ணனை) 'வாழ்க, வாழ்க' என்று சொல்லிக்கொண்டே கைகளின் ஆசை தீர வணங்கி, (வாடாத) சொல் மாலைகளை (ஈசனது திரு முடிகளிலே) ஏற்றும்படி (சூட்டும்படி) பாக்கியத்தை (அருளால்) பெற்ற எனக்கு (பரமபதத்தில் பெறக்கூடிய இன்பத்தை இங்கே பெற்ற எனக்கு) இனிஎன்ன குறை உள்ளது? (அங்கே போகவில்லை என்கிற குறை உண்டோ?) ஏழேழு தலைமுறைக்கும் (எல்லாக் காலத்திலும்.)

## 28. 'தவளப் பொடிக் கொண்டு நீர் இட்டிடு மின்'

இவளைப் பெறும் பரி(சு) இவ் அணங்காடுதலன்(று) அந்தோ!
குவளைத் தடங்கண்ணும் கோவைச் செவ்வாயும் பயந்தனள்
கவளக் கடாக் களி(று) அட்டபிரான் திரு நாமத்தால்
தவளப் பொடிக் கொண்டு நீர் இட்டிடுமின் தணியுமே.

4. 6. 5.

(மேன்மை வாய்ந்த) இவளை (உயிரோடிருக்கப்) பெறும் வழி (உபாயம்) தேவதையின் ஆவேசத்தோடு

இவ்வாறு ஆடுதலன்று; (உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் அதை நிறுத்தவில்லையே.) ஐயோ! (இவளை இழக்க வேண்டுமோ?) குவளைப் பூப்போன்ற (கருத்த) பரந்த கண்களும், கோவைப் பழம்போன்ற சிவந்த உதடுகளும் (தம் நிறமிழந்து) பசுமையான நிறமுடையவள் ஆனாள்; (இதைப் போக்கும் வழி யாதெனில்) (வெறியூட்டும் மருந்துக்) கவளங்களை (உண்டதனால்) மத நீர் பெருக்கும் (குவலயாபீடம் என்னும்) யானையைக் கொன்ற பேருபகாரியின் (ஸ்ரீ கிருஷ்ணனின்) திருநாமத்தைச் சொல்லி, (அவனது அடியார்களுடைய) பரிசுத்தமான (பாத) தூளைக்கொண்டு நீங்களே (அதற்குப் பிராயச்சித்தமாக) (இவள் மேல்) இடுங்கள்; (இவளுக்கு மிஞ்சிப் போயிருக்கும் நோய்) தணிந்துவிடும். (இவள் கண்ணும் விழித்து நிறமும் வரப் பெறுவாள்.)

இது வெறி விலக்கு என்னும் துறையில் பாடப்பட்டது. இவளது நோயின் காரணத்தை அறியாது, ஓர் அற்ப தேவதையின் ஆவேச முற்றவராய் ஆடுகிறீர்கள்; அதனால் நோயைப் போக்க நினைக்கிறீர்கள்; ஆனால் உங்களுடைய செயலால் நோய் மிஞ்சி வருகிறது, இவளுடைய நிறம் மாறி வருகிறது, இவளை இழக்கவும் இனி நேரலாம். இவளது நோய் பர தெய்வமாகிய ஈசனைப் பற்றி உண்டானது. அற்ப தேவதை இவளைத் தொட்டதற்குப் பரிகாரம், பகவானுடைய நாமத்தைச் சொல்லுதல்; அத்தேவதையைச் சேர்ந்தவர்கள் இவளைத் தொட்டதற்குப் பரிகாரம், பாகவதர்களின் பாத தூளி; ஆதலின் இவ்விரண்டையும் செய்யுங்கள்.

## 29. 'கோல மேனி காண வாராய்'

சீலமில்லாச் சிறியனேலும் செய்வினையோ பெரிதால்
ஞாலமுண்டாய்! ஞானமூர்த்தி! நாராயணா என்றென்று
காலந்தோறும் யானிருந்து கைதலை பூசலிட்டால்
கோலமேனி காணவாராய் கூவியும் கொள்ளாயே. 4. 7. 1.

நல்லொழுக்க மில்லாத சிறியனு யிருந்தேனே யாகி னும், (நான்) பண்ணின பாவமோ, (நீ தந்த பக்தி கலந்த ஞானத்தையும் காட்டினும்) பெரிதாய் உள்ளது ; பூமியை உண்டவனே ! ஞானத்தையே வடிவமாக உடையவனே ! நாராயணு ! என்றே கணந்தோறும் (இடைவிடாமல்) (உன்னைக் கண்டாலன்றித் தரிக்க மாட்டாத) யான் இருந்து, கையைத் தலைமேல் கூப்பிக் கூப்பிட்டால் (உன்) அழகிய திருமேனியைக் காணும்படி வருகிருயில்லை. (வாராவிடினும் என் துயரம் தீருமாறு என்னை உன்னிட மாவது) அழைத்துக்கொள்கிருயு மில்லை.

**30. 'உடம்புடையான் கவராத உயிரினுல் குறைவிலமே'**

உடம்பினுல் குறைவில்லா உயிர்பிரிந்த மலைத் துண்டம்
கிடந்தனபோல் துணிபலவா அசுரர்குழாம் துணித்துகந்த
தடம்புனல் சடைமுடியன் தனியோருகூறு அமர்ந்துறை
உடம்புடையான் கவராத உயிரினுல் குறைவிலமே. [யும்
4. 8. 10.

(ஆன்மாவிற்குக் குறையுண்டாகும்படி அதைத் தேய்த்து) உடம்பிற் குறைவில்லாத (படி அதைப் பேணி வளர்த்துள்ள) அசுரக்கூட்டங்களை (முன்பு உயிர்கொண்டு சஞ்சரித்த) மலைகள் (இந்திரனது வஜ்ராயுதத்தால்) உயி ரற்ற துண்டங்களாகக் கிடந்ததுபோல், பல துண்டங் களாகும்படி வெட்டிக் குவித்து மகிழ்ந்தவனும், பெரு வெள்ளமான (கங்கை நீரை அடக்கிக்கொண்டுள்ள) சடை முடியை உடைய சிவபெருமான் (தனக்கெனத்) தனியாக ஒரு பக்கத்திலே அமர்ந்து வாழும்படியான உடம்பை யுடையவனுமான பகவான் விரும்பாத ஆன்மாவினுல் (பெறக்கூடிய பலன் ஒன்று உண்டாகி, அதைப் பெருத) குறை இல்லை. (ஒரு காரியமும் பெற வேண்டுவதில்லை.)

ஒப்பிடுக :

காதலர் நயந்தது யாமுடை நயப்பே,
காதலர் வேண்டின யாம் வேண்டினமே,
காதலர் எம்மை வேண்டா என்னில்,
யாமும் வேண்டலம் இனியே. —சங்க நூற் செய்யுள்.

### 31. 'இவை யென்ன உலகியற்கை'

நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந் தேங்க
எண்ணாராத் துயர் விளைக்கும் இவையென்ன உலகியற்கை?
கண்ணாளா! கடல் கடைந்தாய்! உனகழற்கே வரும்பரிசு
தண்ணாவா தடியேனைப் பணிகண்டாய் சாமாறே. 4. 9. 1.

*விரோதிகள் சிரிக்கவும், நல்ல உறவினர்கள் மனம் உருகி ஏங்கவும், எல்லையற்ற துன்பத்தையே உண்டாக்கும் (சிரிப்பும் ஏக்கமுமாகிய) இவை என்ன உலக இயற்கை என்பது? அருளை உடையவனே! (நீ) கடலைக் கடைந்தவன் அன்றோ? உன் திருவடிகட்கே வரும்படிக் கால தாமதம் செய்யாமல், என்னைச் சாகும்படி ஒரு வார்த்தை சொல்லுவாயாக.*

*நண்ணாதார்........உலகியற்கை - ஒருவனுக்கு ஒரு கேடு வந்ததும், அவனுடைய விரோதிகள் அதைக்கண்டு சிரிக்கின்றனர்; அவனுடைய உறவினர்கள் அதைக்கண்டு மனம் வருந்தி ஏங்குகின்றனர்; இதுவே உலகத்தாரது இயற்கை. ஆனால் விரோதிகளின் சிரிப்பும் உறவினருடைய ஏக்கமும் இரண்டும் உலக சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைக் கொண்டு எழுகின்றனவேயாம். ஆழ்வாரது அபிப்பிராயத்திலோ, பகவானுக்கு அடியார்களே அவருக்கு உறவினர்; பகவானுக்கு விரோதிகளே அவருக்கு விரோதிகள்; அந்நிலையில் இருந்து பார்க்கும்போது உலக அறிவினால் வரும் சந்தோஷமும் துக்கமும் இரண்டும் ஆழ்வாருக்குப் பொறுக்கமுடியாத துயரத்தைத் தருவனவாயின; அதனால் இது என்ன உலக இயற்கை என்கிறார்*

### 32. 'விதி வாய்க்கின்றது வாய்க்கும் கண்டீர்

அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான்? யான்ஆர்?
எம்மா பாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்
கைம்மா துன்பொழித்தாய்! என்று கைதலை பூசலிட்டே
மெய்ம்மா லாயொழிந்தேன் எம்பிரானும் என்மேலானே.
5. 1. 7.

ஒப்பிடுக :

**காகம்உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகாரசிவ**
**போகமென்னும் பேரின்பம் பொங்கித்ததும்பிப் பூரணமாய்**
**ஏகஉருவாய்க் கிடக்குதையோ இன்புற் றிடநாம் இனியெடுத்த**
**தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே.**

—(*தாயுமானவர்.*)

### 34. *'ஆர்? எல்லே! வல்வினையேன் ஆவிகாப்பார்'*

ஊரேல்லாம் துஞ்சி, உலகெல்லாம் நள்ளிருளாய்
நீரேல்லாம் தேறிஓர் நீளிரவாய் நீண்டதால்
பாரேல்லாம் உண்டநம் பாம்பணையான் வாராஞல்
ஆர்? எல்லே! வல்வினையேன் ஆவிகாப்பார் இனியே.

(5. 4. 1.)

*(பழிசொல்லுவாரும் நன்மையுரைப்பாரும் பேச்சுத் துணையாவாரும் எனக்கு இல்லாதபடி) ஊரில் உள்ளார் அனைவரும் உறங்கி, (கண்ணிற்கண்ட ஒன்றைக் கொண் டாயினும் பொழுதுபோக்க ஒண்ணுதபடி) (மற்றைய) உலகங்களெல்லாம் (எல்லாப் பொருள்களும் மறையும் படிச் சூழும்) இருள்செறிந்த நடுநிசி ஆகி, (ஓர் ஒலியைக் கேட்டாயினும் தரிக்க ஒண்ணுதபடி) நீர் யாவும் (ஒலி அடங்கும்படி) (அலையடங்கித்) தெளிந்து, (பகலின் கலப் பின்றிய) ஒரு நீண்ட இரவாய் (எல்லையின்றி) வளர்ந்து விட்டது; உலகங்களையெல்லாம் உண்ட, நம் பாம்பைப் படுக்கையாகக்கொண்ட இறைவன் (நாயகன்) வரவில் லையே (வந்து முகங்காட்டவு மில்லையே) இது என்ன ஆச்சரியம்! பெரும்பாவத்தை யுடையேனுகிய எனது உயிரைக்காப்பார் பின்பு யார்?*

*இரவு (உலகத்தார் அறிய ஒண்ணுதபடி) இறைவனை அநுபவித்தற்கு உரிய காலமாகும்; அக்காலம் வந்தும், இறைவன் வாராமையாலே விளைந்த துயர மிகுதியால் முயற்சியொன்றும் செய்யமுடியாது, உயிரையும் விட முடியாது ஆழ்வார் தத்தளிக்கிறுர்*

ஈசனாய், சக்கரத்தைக் கையில்தரித்த பெருமானாயுள்ள அவன் எவ்வளவு (உயர்ந்த) பதவியில் இருக்கிறான்? நான் யார்? எல்லா வழியாலும் பெரும்பாவத்தைப் பண்ணினவர்க்கும் (தப்பமுடியாத பகவானது கருணையென்னும்) விதிவாய்க்குங்காலத்து, அது பலித்தே தீரும். ஒரு யானையின் (கஜேந்திரனின்) துன்பத்தை ஒழித்தவனே, என்று தலையிலே கைகூப்பிக்கூப்பிட்டதும் உண்மையான பிரேமையுடையவனாக ஆய்விட்டேன்; எம்பிரானும் என்மீது (உண்மையான அன்போடு) மேல் விழுந்தான். (அன்பு செய்தான்).

## 33. 'கண்ணுக்கு இனியன கண்டோம்'

கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியனகண் [டோம்
தொண்டீர்! எல்லீரும் வாரீர் தொழுது தொழுதுநின்றார்த்தும்
வண்டார் தண்ணந் துழாயான் மாதவன் பூதங்கள் மண்
பண்தான் பாடி நின்றாடிப் பரந்து திரிகின்றனவே. [மேல்
(5. 2. 2)

காணப்பெற்றோம், காணப்பெற்றோம், காணப்பெற்றோம். கண்ணுக்கு இனிய (காட்சிகளை) (மெய்யடியார்களின் கூட்டங்களைக்) காணப்பெற்றோம். (அநுபவிக்கப் பெற்றோம்); தொண்டர்களாய் உள்ளவர்கள் எல்லோரும் வாருங்கள்; (வந்து கூடுங்கள்); தொழுதுகொண்டே (ஆனந்தத்தால்) ஆரவாரஞ் செய்வோம். வண்டுகள் (எப்போதும்) பொருந்தியிருக்கும் குளிர்ச்சியுள்ள திருத்துழாய் மாலையை உடையவனாய், இலக்குமிதேவியின் கணவனாகிய ஈசனுக்கு அடியார்கள் பூமியிலே பண்கள் பாடி, (பிரேமை வசப்பட்டு) நின்று ஆடி எங்கும் பரந்து திரிகின்றார்கள்.

அடியார்கள் திரண்டு எங்கும் பரவியிருத்தலின், பிரேமையும் பேரின்பமும் வெள்ளமாகப் பெருகுகின்றன; ஆகையால் உய்வடைய வேண்டுவாரெல்லோரும் இவர்களைச்சேர்ந்தால் பேரின்பம் பெற்று உய்யலாம் என்கிறார்.

35. 'கடல் ஞாலம் செய்தேனும் யானே யென்னும்'

கடல் ஞாலம் செய்தேனும் யானே யென்னும்
கடல் ஞால மாவேனும் யானே யென்னும்
கடல் ஞாலம் கொண்டேனும் யானே யென்னும்
கடல் ஞாலம் கீண்டேனும் யானே யென்னும்
கடல் ஞாலம் உண்டேனும் யானே யென்னும்
கடல் ஞாலத் தீசன் வந்தேறக் கொலோ?
கடல் ஞாலத் தீர்க்கு இவையென் சொல்லுகேன்?
கடல் ஞாலத்து என்மகள் கற்கின்றவே. 5. 6. 1.

கடல் (சூழ்ந்த) உலகத்தை உண்டாக்கினேனும் யான் என்கிறாள். கடல் ஞாலத்தில் உள்ள பொருள்களாய் நிற்பேனும் யான் என்கிறாள். (அதை மகாபலி தன்னது என்று கருதி அபகரித்தபோது) கடல் சூழ்ந்த பூமியை வாங்கினேனும் யான் என்கிறாள். உலகத்தை (வராக அவதாரம் எடுத்து)த் தோண்டி யெடுத்தேனும் யான் என்கிறாள்; (பிரளய காலத்திலே) உலகத்தை உண்டேனும் (எனது வயிற்றிலே வைத்துக்) காத்தேனும் யானே என்கிறாள்; உலக மனைத்திற்கும் ஈசன் வந்து (இவள்மீது) ஆவேசித்தானோ? உங்களுக்கு எதைச் சொல்வேன்? (நித்தியர்கள் சொல்லக் கூடிய வார்த்தையை) உலகிலே இருந்து என் மகள் சொல்லக் கற்றுள்ள (இந்த அதிசய) மொழிகளை (எப்படிச் சொல்வேன்?

இறைவனை அனுபவிக்கப் பெறுமையாலே ஆற்றாமை மிகுந்த ஆழ்வாராகிய நாயகி, அதனைப் போக்கும் பொருட்டு இறைவனது அவதாரச் செயல்களைத் தான் நடித்துப் பொழுது போக்குகிறாள். ஆழ்வார், இறைவனாகத் தம்மைப் பாவித்து நடிக்கத் தொடங்கவே, அவரது பேச்சும் அபிநயமும் பகவானுடைய பேச்சும் அபிநயமு மாயின இதை நடிப்பின் சாமர்த்தியம் என்றும் தியான முதிர்ச்சியின் பலன் என்றும் தாய் அறியாமல், ஈசனது ஆவேசமென்று மயங்கிப் பிறரிடம் அவ்வாறு கூறுகிறாள். தியான முதிர்ச்சியால் தியானிப்பவன்

தன்னை இறைவனாக உணரும் நிலை உயர்ந்த சமாதி நிலையாகும் என்பர் யோகநூலார்.

### 36. 'உனக்கு மிகை அல்லேன் அங்கே'

நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலும் இனி
[உன்னை விட்டொன்றும்
ஆற்ற கிற்கின்றிலேன் அரவின‌ணை யம்மானே!
சேற்றுத் தாமரை செந்நெல் ஊடுமேலர் சிரீவர மங்கலநகர்
வீற்றிருந்த எந்தாய்! உனக்கு மிகை யல்லே னங்கே.
5. 7. 1.

இயற்றிய தவம் உடையேன் அல்லேன். நுட்ப ஞானம் உடையேன் அல்லேன். ஆகிலும் இனி உன்னை விட்டுப் (பிரிந்து) ஒரு சிறிதும் (ஒரு கணமும்) ஆறி யிருக்கும் சக்தி யில்லேன். அரவை (ஆதிசேஷனை) அணையாகக் கொண்ட ஈசனே! சேற்றிலே செந் நெற்கட்கு ஊடே பெருமை தோன்ற எழுந்தருளி யிருக்கும் எனக்குத் தந்தையானவனே! உனக்கு நான் அதிகம் (பாரம்) ஆகமாட்டேன்.

### 37. 'ஆராவமுதே!'

ஆராவமுதே! அடியே னுடலம் நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய உருக்குகின்ற நெடுமோலே
சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்! கண்டேன் எம்மானே!
5. 8. 1.

(எப்போதும் அநுபவித்தாலும்) திருப்தி பிறவாதபடிச் செய்யும் (எல்லையற்ற) பேரின்ப வடிவானவனே! அடிமையான எனது உடலும் (அறிவுள்ள பொருள்களோடு அறிவற்ற பொருள்களையும் உருக்கவல்ல) உன்னிடத்து (செல்லும்) பிரேமையின் வடிவமாக மாறி நீராகி (ஒரு நிலை இல்லாது விரகத்தால்) அலைந்து அந் நீரும் கரையும்படி (என் நெஞ்சை) உருக்குகின்ற ஆசை கொண்டுள்ளவனே (தேவ தேவனே), கனம் (அழகு) மிகுந்த செந்நெற் கதிர்கள் (அசைந்து வருவதினால்)

(நின் கருத்தை யறிந்து தாமாக உனக்குச்) சாமரம் வீசி ஞற் போலுள்ள நீர்வளம் மிக்க திருக்குடந்தையில் உள்ள அழகு நிறைந்த வடிவம் (உறங்குவதனால் இன்னும்) அழகு மிகும்படிக் கண் வளர்ந்தருளுவதைக் கண்டேன், எனது நாதனே!

## 38. 'என்று கொல் சேர்வதுவே'

பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரிய பாரதம் கைசெய்(து)
[ஐவர்க்குத்
திறங்கள் காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களும்
நிறந்தனூடு புக்(கு) எனது ஆவியை நின்றுநின்று (உ)ருக்கி
[யுண்கின்ற இச்
சிறந்தவான் சுடரே! உன்னை என்று கொல் சேர்வதுவே.
5. 10. 1.

(கருமத்தாலே அல்லாமல் அருள் வசப்பட்டுப்) பிறந்த வகையையும், (அடியார் மகிழவும் பகைவர் மாளவும்) வளர்ந்த வகையையும், மகாபாரதத்திலே படையை வகுத்து, (பாண்டவர்கள்) ஐவர்க்கும் வெல்லும் வழியைக் காட்டியும், (தமது அவதார காரியம்) செய்து முடித்து (தம் இடத்திற்குப்) போன அற்புதச்செயல்களும் (அவைகளை யான் சிந்தித்த வுடனே) (என்) மார்பிற்குள் புகுந்து (விகாரம் அடையமுடியாத) என் ஆத்மாவை(யும்) இடைவிடாதே நின்று உருக்கி அழிக்கின்ற (என்னுள் நிற்கும்) இந்த, (பிறந்ததினாலே) மேன்மையுற்ற அளவிட முடியாத ஒளிமயமான (அழகுடைய)வனே! உன்னை (யான் தரித்து நின்று தியானிக்க வல்லனாகி, அதனால் பிரியாது) கிட்டப் பெறுவது என்றைக்கோ?

## 39. 'சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையே'

வைகல் பூங்கழிவாய் வந்து மேயுங் குருகினங்காள்!
செய்கோள் செந் நெல்உயர் திருவண்வண்டூர் உறையும்
கைகோள் சக்கரத்(து) என்கனிவாய்ப் பெருமானைக்கண்டு
கைகள் கூப்பிச் சொல்லீர் வினையாட்டியேன் காதன்
[மையே. 6. 1. 1.

(என்னைக் கூடித் தனியேவிட்டுப் போனவனைப் போலன்றி) நாடோறும் அழகிய கழியிடத்து (நான் ஆள்விட்டு அறிவிக்கவேண்டும் நிலையிலே நீங்களாகவே) வந்து மேய்ந்துகொண்டிருக்கும் (ஆணும் பெண்ணுமாக உள்ள) குருகுக் கூட்டங்களே! வயலை (முழுதும் பரவி) அடைத்துக்கொள்ளும் செந்நெல் (மிகவும்) உயரமாக வளர்கின்ற திருவண்டுரிலே (கோயில்கொண்டு) எழுந்தருளியிருக்கும், கையில்கொண்ட திருவாழியையும் எனக்கு (அநுபவமாக்கி)த் தந்த கனி(போன்ற) வாயையும் உடைய(என்னை அவ்விரண்டாலும் தனக்கு அடிமையாக்கிய) எனது நாதரைக் கண்டு (பிரிந்தால் அவரைப் போலன்றித் தரிக்க முடியாதபடி) பாபத்தைப் பண்ணிய எனது (தம் அன்பினும் அளவுமிக்க) ஆசையைக் கைகூப்பி (அவரது மதிப்பிற்கு ஏற்றவாறு பணிவோடு உங்களது சிறகுகளை விரித்து,) (என்னிடத்துள்ள நிறவேறுபாடு முதலாக ஆற்றாமை அனைத்தையும்) சொல்லுங்கள்.

ஆழ்வார் குருகுகளைத் தூது விடுகிறார்.

## 40. 'பந்தும் கழலும் தந்து போகு நம்பீ!'

மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார் முன்பு [நானதஞ்சுவன்
மன்னுடை யிலங்கை அரண்காய்ந்த மாயவனே!
உன்னுடைய சுண்டாயம் நானறிவன் இனி அது கொண்டு [செய்வதென்?
என்னுடைய பந்தும் கழலும் தந்துபோகு நம்பீ! 6. 2. 1.

(உன்னைத் தங்களிடத்திலே ஆசை கொள்ளும்படிச் செய்கிற) மின்னல் (போன்று ஒடுங்கிய) இடையும்(உடல் அழகும்) மடப்பமும் (நாண் மடம் அச்சம் பயிர்ப்பு முதலான குணங்களும்) உடையவராயும், உன்னுடைய அருளைத் தலையிற்கொண்டு உள்ளவரும் ஆன பெண்கள் பலர் முன்பு (அவர்களிடம் நீ செய்த செயல்களை யெல்லாம் அறிந்துள்ள) நான் (இங்குச்செய்ததை அறிந்து

அவர்கள் உன்னோடு கூடும்போது நீ துடிக்கும் துடிப்பாகிய) அந்நிலையை அஞ்சுகின்றேன். (இராவணன் என்னும்) அரசனால் காக்கப்பட்ட இலங்கையின் அரணை அழித்த (அச்செயலால்) மாயமான செயல்களை உடையவனே! உன்னுடைய சேஷ்டையை (சுயநலத்தை) நான் அறிவேன். (ஒரு பேதையை நம்பச் செய்ததுபோல என்னிடமும்) அச்செயலையே கொண்டு செய்யக்கூடியது உண்டோ! என்னுடைய பந்தையும் கழச்சியையும் தந்து போ. (நீ என்னையன்றியும் பலரைப் பெற்றுள்ளதால் குறையற்ற) பரிபூரணமானவனே.

ஆழ்வாராகிய நாயகி பெருமானோடு ஊடியதைக் கூறியது.

## 41. 'எல்லாம் கண்ணன் எம்பெருமான்'

உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கண்ணன் எம்பெரு மானென்றென்றே கண்கள் நீர்மல்கி
மண்ணினு ளவன்சீர் வளம் மிக்கவனூர் வினவித்
திண்ணம் என்இள மான் புகுமூர் திருக்கோளூரே. 6. 7. 1.

உண்ணக்கூடிய சோறும், குடிக்கும் நீரும், தின்னும் வெற்றிலையும், இப்படி எல்லாப் பொருள்களும்) தாரக போஷண போக்யப்பொருள்கள் யாவும்) கிருஷ்ணனாய், எனக்கு நாதனான அவனே என்று பலமுறை கூறி, (அவனைக் கிட்டப்பெறாமையாலே) (இடைவிடாமல்) கண்ணீர் நிரம்பி, இப்பூமியில் அவனுடைய (பல்வகை) குணங்களையும் (அன்பின்) வளம் மிக்கவனுடைய ஊரையும் (தான்சொல்வது மன்றிப் பிரேமையின் வசப்பட்டு, தான் அறியாததுபோல) பிறரை வினவி, மென்மையான இயல்புடைய என்மகள் புகும் ஊர் திருக்கோளூரே யாகும். இது உறுதி.

மகள் தாயார் முதலான பந்துக்களையும், போகத்திற்குரிய கருவிகளையும் விட்டுப்போனது, ஆழ்வார் உலக மக்களையும் உலக இன்பங்களையும் துறந்து தெவிட்டாத இன்பவெள்ளத்தில் மூழ்கத் துணிந்ததைக் குறிக்கும்.

ஒப்பிடுக :

" அநேக ஜன்மங்கள் முடிந்தபின் ஞானியானவன், " வாசு தேவனே எல்லாம் ' என்று கருதி என்னைச் சரணமடைவான்; அம்மாதிரியான மஹான் மிக மிக அருமை " —கீதை (7. 19.)

## 42. ' வாராய் மண்ணும் விண்ணும் மகிழவே '

நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாய் அயனானாய்
கூராராழி வெண் சங்கேந்திக் கொடியேன் பால்
வாராய் ஒரு நாள் மண்ணும் விண்ணும் மகிழவே. 6. 9. 1.

*(அண்டத்துக்குக் காரணமான) நீர் பூமி தீ வாயு ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களையும் படைத்து, (அவைகளில் உட்புகுந்து) அவைகளுக்கு ஆத்மாவாய், (படைத்த அண்டத்திற்கு விளக்கேற்றி வைத்ததுபோல்) சூட்டையும் குளிர்ச்சியையும் தருதற்காகப்) பெருமைமிக்க சூரிய சந்திரர்களையும் படைத்து (அவைகளை அழிக்கவும் படைக்கவும்) சிவனையும் பிரம்மாவையும் படைத்து, (அனைத்திற்கும்) அந்தராத்மா ஆனவனே! (அடியார்களுக்கு விரோதிகளைப் போக்குவதனால்) கூர்மையுடைய சக்கராயுதத்தையும் (அடியார்களுக்கு ஞானத்தையும் இன்பத்தையும் அருளும்) வெண்மையான சங்கையும் (திருக் கைகளில்) ஏந்தி, மண்ணில் உள்ளாரும், விண்ணில் உள்ளாரும் கண்டு மகிழும்படி (உன்னை இவ்வாறு வருத்தப்படுத்தி அழைக்கும்) கொடுமை யுடையவன் பால் ஒரு நாளாகிலும் நடந்து வரவேண்டும்.*

## 43. ' உலக முண்ட பெருவாயா '

உலக முண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தி யம்மானே!
நிலவுஞ் சுடர் சூழொளி மூர்த்தி! நெடியாய்! அடியேனாருயிரே!
திலத முலகுக்காய் நின்ற திருவேங்கடத்தேம் பெருமானே!
குல தொல்லடியேன் உனபாதம் கூடுமாறு கூறாயே.
6. 10. 1.

உலகங்களை உண்டு (அவைகளை வயிற்றினில் வைத்துக் காத்த) (காக்கும் பொருள்களின் அளவிற்கும் மேற்பட்ட) பெரிய வாயை யுடையவனே! (காப்பதில்) முடிவின்றியே இருக்கும் புகழுடைய) நாதனே! (இயல்பாலேயே) விளங்கும் ஒளி மயமான வடிவை யுடையவனே, (குணங்கள்) எல்லையற்றிருக்கும் பெருமை யுடையோனே, (உனக்கு) அடிமையான எனக்கு நிறைந்த உயிராயிருப்பவனே, உலகங்களுக்குத் திலகமாய் நின்ற திருவேங்கடமலையில் உள்ள நாதனே! (என்) குலத்தை யொட்டி வந்த பழமையான அடிமை நிலையை யுடையேன் உன்னுடைய பாதங்களைக் கூடும் வழியைச் சொல்லி அருளாய்.

44. 'உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே'

அகலகில்லேன் இறையு மென்று அலர்மேல்
மங்கை யுறை மார்பா!
நிகரில் புகழாய்! உலக மூன்றுடையாய்!
என்னை யாள் வானே!
நிகரில் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும் திரு வேங்கடத்தானே!
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்
கீழ் அமர்ந்து புகுந்தேனே. 6. 10.10.

ஒரு கணம்கூடப் பிரிந்திருக்கும் ஆற்றல் உடையேன் அல்லேன் என்று பூவிற் பிறந்துள்ள மங்கைப் பருவமுடையவளாகி இலக்குமிப் பிராட்டி நித்தியமாக வாழும் மார்பை யுடையவனே, (இப்பிராட்டியின் சேர்க்கையால்) உவமையற்ற புகழுடையவனே, (இதற்குக் காரணமான) மூன்று உலகங்களையும் (உலகத்தார்களையும்) உன் உடைமையாகப் பெற்ற நாதனே, என்னையும் ஆட்கொள்ளுபவனே, ஒப்பில்லாதபடியுள்ள (தொண்டராய) அமரரும் (மனன சீலரான) முனிவரும்—பாகவதரும் பக்தரும்—ஆன திரள்கள் விரும்பும் (விரும்பி வாழும்) திருவேங்கடமலையில் உள்ளவனே. (உன்னை ஒழிய வேறு சாதனங்களும் வேறு ரக்ஷகரும் ஆன) புகல் ஒன்றும் இல்லாத

நான் உன்னுடைய திருவடிகளின்கீழ் (வேறு பலனைக் கருதாது மன உறுதியோடு) அமர்ந்து, சரணம் அடைந்தேன்.

இப்பாட்டு வைணவர்களின் மூன்று பெரும் இரகசியங்களில் ஒன்றான துவயம் என்னும் மந்திரத்தின் பொருளை விரிவாய் எடுத்துரைக்கின்றது.

45.

விண்ணுளார் பெருமாற் கடிமை செய்வா
ரையும் செறும் ஐம்புலனிவை
மண்ணுள் என்னைப் பெற்றால் என்
செய்யா மற்று நீயும் விட்டால்?
பண்ணுளாய்! கவிதன்னுள்ளாய்! பக்தியி
னுள்ளாய்! பரமீசனே! வந்தேன்
கண்ணுளாய்! நெஞ்சுளாய்! சொல்
லுளாய்! ஒன்று சொல்லாயே. 7. 1. 6.

பரமபதத்தில் உள்ள நித்தியர்கட்கும் அதிபதியான உனக்கு எப்போதும் தொண்டு செய்வாரையும், இவ்வுலகத்தில் எதிர்த்து வருத்தும் ஐம்புலன்களாகிய இவை (இவைகளை வெல்லும் பலமற்ற) என்னைப் பெற்றால், அதற்குமேல் (அனைவரையும் ஆட்டுவிப்பவனான) நீயும் கைவிட்டால், அவை எல்லாவிதத்தாலும் வருத்தாவோ? என் துக்கக் குரலுக்கு உள்ளானாய். அத்துக்கத்தை வெளியிடும் பாடலில் உள்ளாய். (இதைச் சொல்லும் காரணமான ஆற்றாமை யென்னும்) பிரேமையில் உள்ளாய். (எல்லாப் புலன்களையும் நியமிக்கும்) மேலான ஈசனே, என் கண்ணிற்கும் நெஞ்சுக்கும் வாக்குக்கும் விஷயமாய் உள்ளவனே, (நீ என் தளர்ச்சி தீரும்படி வந்து) (அஞ்சல் என்று) ஒரு வார்த்தை அருளிச் செய்ய வேண்டும்.

## 46, 'இவள் திறத்து என் செய்கின்றாயே

கங்குலும் பகலும் கண்துயி லறியாள்
கண்ணநீர் கைகளால் இறைக்கும்
சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்
தாமரைக் கண்ணேன்றே தளரும்
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு?
என்னும் இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல் பாய் திருவரங்கத்தாய்!
இவள் திறத்து என் செய்கின்றாயே. 7. 2. 1

(உலகத்தார் உறங்கும்) இரவிலும் (காதலிகள் உறங்கும்) பகலிலும் தூக்கத்தை (விரோதியெனத் தான் நீக்காது அதுவே ஒழிதலின்) அறியாதாளாயினள்; (இக்காரணத்தால் துயரத்தை உறக்கத்தால் ஒழிக்க மாட்டாதவளாயினள்.) (இதனால் வெள்ளமெனப் பெருகும்) கண்ணீரை (அவன் வரும்போது காணுதற்கு இடையூறாகக் கூடாது என்னும் கருத்தால்) (கடலைக் கையால் இறைப்பாரைப் போல்) கைகளால் இறைக்கின்றாள்; (இக் கண்ணீர்க்கு இரங்கி அவன் வருவான் என்று நினைத்து, சங்கும் சக்கரமும் ஏந்திவாராய் என்று சொல்லக் கருதி, அதை முடியச் சொல்ல மாட்டாமையால்) சங்கு சக்கரங்கள் என்று (மட்டும்) சொல்லி (மிச்சத்தை) கைகூப்பும், (கைகூப்புவதனால் கருத்தை முடிக்கும்); (அவன் வந்தால் குளிர நோக்கும் கண்களின் அழகை நினைத்து) தாமரை போன்ற கண்களே என்று சொல்லி (அவைகளைக் காணாமையாலே) மனம் தளர்கின்றாள்; (வரும் வரை ஆறி யிருக்கக் கூடாதோ என்னில்) (கண்டாரைப் பிச்சேற்றும் அழகுடைய) உன்னைப் பிரிந்து எவ்வாறு தரிக்கக்கூடும் என்று சொல்கிறாள்; (உன்னைப் பிரிந்த துயரை உறக்கத்தாலோ, வேறொன்றாலோ மாற்றக் கூடுமோ?) (பின்னும் அவன் வரக் காணாமையாலே) பெரிய பூமியையும் கையால் தடவி (அதற்கும் சக்தியற்றபோது) சும்மா இருக்கிறாள்; சிவந்த கயல் மீன்கள் பாய்கின்ற நீரையுடைய திருவரங்கத்தில் உள்ளவனே, (நீரைப்

பிரிந்து தரியாத கயல் மீனைப் போன்ற) இவள் விஷயத்திலே (வாயாற் கூற வொண்ணாது பார்த்துத் தெரியும்படி மட்டும் நிலை உள்ள இவள் விஷயமாக) என்ன செய்யப் போகின்றாய்? (இவளது துயரத்தைத் தீர்க்க நினைத்தாயோ? அதிகப்படுத்த நினைத்தாயோ?)

*47. 'திருப்பேரெயில் சேர்வன் நானே'*

வெள்ளைச் சுரிசங்கொ டாழி யேந்தித்
தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர்
என்சொல்லிச் சொல்லுகேன்? அன்னைமீர்காள்!
வெள்ளச் சுகமவன் வீற்றிருந்த
வேத வொலியும் விழா வொலியும்
பிள்ளைக் குழா விளையாட் டொலியும் அறாத்
திருப்பே ரெயில் சேர்வன் நானே. 7. 3. 1.

*வெண்மையான சுரியையுடைய சங்கோடு சக்கரத்தையும் ஏந்திய தாமரைக் கண்களை யுடையவன், என் நெஞ்சின் உள்ளே கெருடனை ஓட்டும் வகையினை நீங்கள் காணாது போகிறீர்கள். (யான் தூலக் கண்ணாற் காண்பதை நீங்களும் காணுங்கள்.) (நீ கண்டதை நீயே சொல் என்றாலோ) என்ன வார்த்தை சொல்லி நான் சொல்லுவேன்? (உங்கள் கண்ணிற்கு அது எட்டாதது போல் என் வாக்குக்கும் அது எட்டாது போகிறது.) தாய்மார்களே, வெள்ளம் போன்ற மிக்க சுகத்தையுடைய அவன் மேன்மையோடு அமரும் இடமும் வேதங்களின் ஒலியும் விழாக்களின் சங்கீத ஒலியும், பிள்ளைக் கூட்டங்களின் விளையாட்டின் ஒலியும், இடையறாது நிகழும் இடமுமாகிய திருப்பேரெயில் நான் சென்று சேர்வேன்.*

*48. 'இராமபிரானை அல்லால் மற்றுங் கற்பரோ'*

கற்பார் இராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும் பாதி யொன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு (உ)ய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.
7. 5. 1.

(பிரியமாயும் நன்மையாயும் ஒருங்கே இருப்ப தொன்றைக்) கற்பார் (மகிழ்ச்சியை அளிக்கும்) இராமனை யும் (விட வொண்ணாதபடி நம்மால் பற்றத் தகுந்த) பிரானையும் (உபகார முடையவனையும்) உள்ளவனைத் தவிர்த்து வேறொரு நிலையையும் அவதாரத்தையும் கற் பரோ? (காரணம் யாதெனில்) (தாவரங்களில் கடை யான) படருகின்ற புல் முதலாக (சங்கமங்களிற் கடை யான) எறும்பு முதலிய நல்ல தேசமாகிய அயோத்தி யில் வாழ்வு பெறும் சங்கம தாவரங்களான எல்லாவற் றையும் பிரம்மா பெற்ற நாட்டுக்குளே நல்ல நிலைமைக்கு (மோக்ஷத்திற்கு)ச் செலுத்தினன்.

## 49. 'மாயவற்கு ஆளன்றி யாவரோ'?

வார்த்தை யறிபவர் மாயவற் காளன்றி யாவரோ?
போர்த்த பிறப்போடு நோயோடு மூப்போ(டு) இறப்பிவை
பேர்த்துப் பெருந் துன்பம் வேரற நீக்கித் தன் தாளின்கீழ்ச்
சேர்த்(து) அவன் செய்யும் சேமத்தை எண்ணித் தெளிவுற்
[றே. 7. 5. 10.

(மகாபாரதம் முழுவதாலும் சொல்லப்பட்ட) ஒரு வார்த்தையாகிற ('என்னை ஒருவனையே சரணமாகப் பற்று' என்பதை) அறிபவர்கள் (அடியார்கள் மீது) பெரு மோகங் கொண்டவனாகிய இறைவனுக்கு அல்லாமல் (வேறொருவர்க்கு) ஆளாவரோ? (ஏனெனில்) (ஆத்ம சொரூபம் தெரியாதபடி) மறைக்கும் பிறவியோடும் (உயிர் புகும் உடல் தோறும் புகும்) நோயும் (அதைப் பொறுத்தாலும், தடுக்க முடியாதபடி வரும்) மூப்பும் (அதற்கு எல்லையான) மரணமும் ஆகிய இவற்றையும் பேர்த்துத் தள்ளி, பெருந் துன்பத்தையும் வாசனை அற நீக்கித் தன் திருவடியின் கீழ்ச் சேரும்படிப் பண்ணி ('பயப்படாதே' என்று அபயம் அளித்த) அவன் (மீண் டும் நம்மைப் பிறக்காதபடி) செய்யும் காப்பைச் சிந்தித் துத் தெளிவடைந்த பின் (வேறொருவர்க்கு ஆட் படுவரோ?)

தாலும், வாக்கினாலும் மனத்தினாலும் (அவைகட்கு ஏற்ப) அமைந்த செயலாலும் கிட்டி (நித்தியர் உள்பட) யாவரும் (விரும்பி) வந்து வணங்கும்படியாய் (இன்பத்திற்கு அறிகுறியான) சோலையையுடைய திருவாரன் விளை என்னும் ஊரையே சார்ந்து பிரதக்ஷிணம் (முதலிய இனிய தொண்டுகளைச்) செய்து தொழக் கூடுமோ என்று என் நெஞ்சு கேட்கிறது.

## 52. 'வான் உயர் இன்பம் எய்தில் என் ?'

யானும் நீ தானே யாவதோ மெய்யே
அரு நரகவையும் நீ யானால்
வானுயர் இன்பம் எய்தி லென் ?
மற்றை நரகமே யெய்திலென் ? எனினும்
யானும் நீ தாணய்த் தெளிதோறும் நன்றும்
அஞ்சுவன் நரகம் நானடைதல்
வானுயர் இன்பம் மன்னி வீற்றிருந்தாய் !
அருளு நின் தாள்களை எனக்கே. 8. 1. 9.

யானும் நீயேயாய் இருப்பது உண்மையாம் (அதில் சந்தேகமில்லை.) (அம்மட்டோ ?) (எனக்கு விரோதியாய் உள்ள இவ் வாழ்க்கையாகிற) கடத்தற்கு அரிய கொடுந் துன்ப மயமான நரகமாகிற (நரகம் போன்ற) எல்லாப் பொருள்களும் நீயே ஆகின்றனை. (எல்லாம் உனக்கு வசமானவை); (இப்படி யிருக்கும்போது) பரமபதத்திலே (போய்) உயர்ந்த (அளவற்ற) இன்பத்தைப் பெற்றிருக்கில் என் ? நரகம் போன்ற இவ்வுலக வாழ்க்கையிலே இருக்கில் என் ? (உடையவன் வைத்த இடத்தில் கிடத்தலன்றோ என்க்குச் சொரூபம்) என்றாலும், யானும் (உனக்குப் பரதந்திர மாதலின்) நீயே என்கிற தெளிவு பிறக்கப் பிறக்க (உலக வாழ்க்கை என்னும்) நரகத்தை அடைதலை மிகவும் அஞ்சுகிறேன் ; பரமபதத்திலே (மனம் வாக்குக்கு எட்டாதபடி) உயர்ந்த ஆனந்தத்தில் நிலை பெற்று (அனைத்திற்கும் உடையவனாய்) பெருமையோடு எழுந்தருளி யிருப்பவனே ! (அவ் வாழ்க்கையிலே, நித்தி

## 50. 'இன் தமிழ் பாடிய ஈசனை'

என்றைக்கும் என்னை உய்யக் கொண்டு போகிய
அன்றைக்கன் றென்னைத் தன்னாக்கி என்னால் தன்னை
இன் தமிழ் பாடிய ஈசனை ஆதியாய்
நின்ற என் சோதியை என் சொல்லி நிற்பனோ? 7. 9. 1.

*(முதல் முறை செய்த அருளோ) எக்காலத்துக்கும் (போதியதாகும்படி) என்னை உய்வடையும்படிச் செய்து (அதோடு திருப்தி யடையாது) கழிகிற காலமெல்லாம் நாள்தோறும் நாள்தோறும் (மேலும் மேலும் பின் அருள் செய்து) என்னைத் தன்னொடொக்க (ஞான சக்திகளை யுடையனாம்படி) ஆக்கி, (அவன் மூலமாகச் சக்திபெற்ற) என்னால் (மனம் வாக்குகட்கு எட்டாத) தன்னை (பொருளினிமையும் பிரேமையும் கிடக்கச்) சொல் இனிமை(யும்) மிக்க (எல்லார்க்கும் உரிய) தமிழ் நூலைப் பாடிய (என்னைக் கொண்டு தமிழ் பாடுவித்த) (எல்லாம்வல்ல) (ஈசனை நான் கவி பாடுவதற்கு) ஆதியாய் (ஏதுவாய்) நின்ற (என்னை அவன்பால் மயக்கி ஈடுபடுத்திய) ஒளி மயமான (அழகிய) வடிவுடையவனை என் சொல்லித் தரிப்பேன்?*

## 51. 'வலஞ் செய்து கைதொழக் கூடுங்கொல்'

தீவினை யுள்ளத்தின் சார்வலவாகித்
தெளிவிசும் பேற லுற்றால்
நாவினுள்ளும் உள்ளத் துள்ளும் அமைந்த
தொழிலினுள்ளும் நவின்று
யாவரும் வந்து வணங்கும் பொழில்
திரு வாறன் விளையதனை
மேவி வலஞ் செய்து கை தொழக் கூடுங்
கொல்? என்னும் என் சிந்தனையே. 7. 10. 9

*கொடிய பாவங்கள் நெஞ்சில் சேராதனவாகி (மனம் அவ்வாறு தூயதாய், அதனால் எவர்க்கும்) தெளிவை (சொரூபப் பிரகாசத்தை)ப் பிறப்பிக்கும் (சுத்த ஸத்வ மயமான) பரமபதத்திற்கு ஏறுதல் எனக்குக் கிடைப்ப*

யர்கள் அநுபவிக்கும்) உன் திருவடிகளை எனக்குத் தந்தருளுக.

53. 'பாசங்கள் விட்டபின்னையன்றி...காண்கொடான்'

இடையில்லை யான் வளர்த்த கிளிகாள்!
பூவைகாள்! குயில்காள்! மயில்காள்!
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும்
ஒன்று மொழிய ஒட்டாது கொண்டான்
அடையும் வைகுந்தமும் பாற்கடலும்
அஞ்சன வெற்பு மவை நணிய
கடையறப் பாசங்கள் விட்ட பின்னை யன்றி
அவன் அவை காண் கொடானே. 8. 2. 8.

யான் வளர்த்த கிளிகளே, பூவைகளே, குயில்களே, மயில்களே, (உங்களுக்கு என்னிடம்) சம்பந்தம் இல்லை. நம்முடையதான நிறத்தையும் வளையையும் நெஞ்சையும் ஒன்றும் மிஞ்சவொட்டாது கைக்கொண்டவன் சேரும் பரமபதமும் (என்னிடம் உள்ளவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு கிட்டுதற்கரிய பரமபதம் சென்று வெற்றி கொண்டாடும் இடமும்) திருப்பாற்கடலும் (அதற்கு ஒப்பான) திருமலையும் (திருப்பதிமலையும்) நமக்கு எளிதில் அடையும்படி (அநுபவிக்கும்படி) உள்ளன. (ஆனால்) வாசனையற (அவனையொழிந்த பிறவற்றில் உள்ள) பற்றுக்களை விட்டபின்பல்லது அவன் அந்த இடங்களை (இன்பநிலையங்களைக்) காட்டிக்கொடான்; (அவன் சுணையுடையவன். புறம்பே ஒன்றில் நசை இருக்கும்வரை தன் அநுபவத்தைக் காட்டிக்கொடான்.)

54. 'உன்னை எங்கே காண்கேனே?'

பிறந்த மாயா! பாரதம் பொருத மாயா! நீ இன்னே
சிறந்தகால் தீ நீர்வான் மண்பிறவு மாய பெருமானே! [ள்
கறந்தபாலுள் நெய்யேபோல் இவற்றுள் எங்கும் கண்டுகோ
இறந்துநின்ற பெருமாயா! உன்னை எங்கே காண்கேனே?
8. 5. 10.

(கர்ம வசப்படாமலே) அவதரித்த ஆச்சரியமான வனே! (ஆச்சரியச் செயல்களைச்செய்து) பாரதப்போர் நடத்திய ஆச்சரியமானவனே! நீ இவ்வாறு (எளியனாய்) (படைப்புக்குக் காரணமான) சிறப்பையுடைய வாயு தீ நீர் ஆகாசம் பூமி என்னும் ஐந்து பூதங்களுக்கும் (அவை களின் காரியமான) மற்ற (தேவன் மனிதன் முதலிய) எல்லாப் பொருள்களுக்கும் ஆத்மாவான ஈசனே! (கண்ணாலேகாண்கிற) கறந்த பாலுக்குள்(காண அரிதான படி) நின்ற அதி ஆச்சரியமானவனே! உன்னை எவ்விதத் திலே காணக்கடவேன்?

## 55. 'இருப்பது என் நெஞ்சகம்'

அற்புதன் நாராயணன் அரி வாமனன்
நிற்பது மேவி இருப்பதென் நெஞ்சகம்
நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்
கற்பகச் சோலைத் திருக்கடித்தானமே. 8. 6. 10.

அற்புதமான செயல்களை யுடையவனாய், நாரா யணன், (அடியார்களுக்கு விரோதிகளை) அழிப்பவன், (தன்னைத் தாழ்த்தியும் அடியார்களுடைய விருப்பங்களை நிறைவேற்றும்) வாமனன், (இவ்வாறான இயல்புகளை யுடைய இறைவன்) (வேறொரு பலனையும் விரும்பாதவர் என்னும்) நல்ல புகழையுடைய வைதிகர்களால் ஓதப் படும் நான்கு வேதபாராயண முழக்கம் நிலையாக உள்ள கற்பகவனத்தையுடைய திருக்கடித்தானத்திலே, நிற்ப தும், பொருந்தியிருப்பதும் என்நெஞ்சிற்குள்ளே. (திருக் கடித்தானம் என்னும் ஊரில் எழுந்தருளியிருப்பது என் நெஞ்சத்திலே பொருந்தி வாழ்க்கைக்காக; என்னைப் பெறும்வரை அவ்வூரிலே நின்றவன் என்னைப்பெற்ற பின்பு நிற்பதும் இருப்பதும் என் நெஞ்சிலேயே.)

## 56. 'மூவுலகும் பொருள் அல்ல'

அருள் தானினியான் அறியேன் அவன் என்னுள்
இருள் தானற வீற்றிருந்தான் இது வல்லால்

பொருள் தானெனின் மூவுலகும் பொருளல்ல
மருள் தானீதோ? மாய மயக்கு மயக்கே. 8. 7. 3.

(என்பால் பெரும் மோகம்கொண்ட) அவன் (எம் பெருமான்) என் நெஞ்சிற்குள் (இருந்த) (அறியாமை முதலிய இருள்முழுதும்) பேர்ம்படி (செய்து) பெருமை தோற்ற இருந்தான்; இந்த நிலையை அநுபவித்திருக்கு ம்து ஒழிய, மூன்று உலகங்களைப் பெறுதலும் பொருள் தானேவென்றால், (அது எனக்குப்) பொருள் ஆகாது. இதை இனி (அவனது) அருளாக நினைக்கமாட்டேன். அவன் தன்னுடைய ஆச்சரியமான மயக்கம்தரும் செயல் களினால் எனக்கு உண்டாக்கிய அறிவு கேடா? (முன்பு நெடுநாள் எனக்கு உலகப்பொருள்களினால் மயக்கத்தை உண்டுபண்ணினான், இப்போது தனது பேரன்பினால் என்னை மயக்குகிறானே?)

## 57. 'அதுவும் அவனது இன் அருளே'

உணர்விலும்பர் ஒருவனை அவனதருளாலுறற்
பொருட்(டு)என்
உணர்வினுள்ளே இருத்தினேன் அதுவு மவன(து)
இன்னருளே
உணர்வு முயிரும் உடம்பும் மற்று (உ)லப்பிலனவும்
பழுதேயாம்
உணர்வைப் பெற ஊர்ந்திற வேறி யானும் தானா
யொழிந்தானே. 8. 8. 3.

ஞானம் மிக்க நித்தியர்களுக்கு அதிபதியான ஒப் பற்ற எம்பெருமானை அவனுடைய அருளினால் பெறுதற் காக என் ஞானத்துக்கு விஷயமாக்கினேன். (அதாவது, என் புத்தி பூர்வமாக இச்சித்தேன்); அதுவும் (அவ் விச்சை பிறந்ததும்) அவனது இனிய அருளாலே ஆயிற்று. (இப்படி என்னை இசைவித்து என்னுள் புகுந் தவன்) உலக ஞானமும் பிராணனும் உடலும் மற்றும் அழிவற்ற (மகத் அகங்காரம் இந்திரியம் முதலிய)வைக ளும் இவை எல்லாம் பயனற்றன என்ற அறிவை (நான்)

பெறும்படி நடத்தி, (அதே அறிவோடு நில்லாமல்) முடிய ஏறி (ஞானனந்த சொரூபமான ஆத்மா அளவும் காட்டித் தந்து) (என் விஷயமான) யானும் ('நான்' என்ற சொல்லும்) தன் விஷயமாம்படி ஆக்கிவிட்டான்.

'நான்' என்னும்போது உடலையும் மனத்தையும் கடந்து நிற்கும் ஆன்மாவைக் குறித்தல் போல், ஆழ்வார் 'நான்' என்னும்போது ஆன்மாவிற்கும் ஆன்மாவான இறைவன் வரை பொருள் செல்கிறது என்பதாம்.

## 58. 'அன்றே அப்போதே வீடு'

நன்ருய் ஞானம் கடந்து போய் நல்இந்திரியம்
எல்லாம் ஈர்த்து
ஒன்ருய்க் கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பில் அதனை
உணர்ந்து (உ)ணர்ந்து
சென்(று) ஆங்(கு) இன்ப துன்பங்கள் செற்றுக் களைந்து
பசை யற்ருல்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே. 8. 8. 6.

(புற உலகப் பற்றற்ற தூய்மையாகிய) நன்மை யுடையராய், அறியப்படும் புறப் பொருள்களைக் கடந்து சென்று, (பொருள்களைத் தப்பினும் அவை இருந்த இடத்தே செலுத்தக் கூடிய) வலிமையுடைய இந்திரியங் களை யெல்லாம் இழுத்து, ஆத்மாவொடு சேர்ந்து பிரித் தறியமுடியாதபடி) ஒன்ருய்க் கிடந்ததான (கடத்தற்கு) அரிய (மகத் அகங்காரம் முதலிய பல நிலைமைகளை உடைமையின்) பரப்பையுடைய பாழ் என்னும் பிரகிருதி தத்துவத்தை (ஆத்மாவுக்குப் புறம்பானது என்று) (சிர வண மனன நிதித்தியாசங்களினல்) உணர்ந்து உணர்ந்து, (ஆத்மா வரை) சென்று, அங்கே (பிரகிருதியை விட்ட பின்பும் சுக துக்க ஏதுவாகிய புண்ணிய பாபங்கள் கிடக்குமாதலின்) (புண்ணிய பாவ காரியமாகிய) சுக துக்கங்களையும் ஏதுவோடு கழித்து, (அவற்றை விட்ட பின்னும்) ருசி வாசனைகள் கிடக்குமாதலின்) ருசி வாசனை களும் நீங்கினல், அந்நாளிலே அந்தப் பொழுதிலே (பிர

கிருதி சம்பந்த மற்ற) முத்தியாம்; (பற்றற்றவாறே) அதுவே (அவ்வாறு விடுகை தானே) முத்தியாம்.

### 59. 'கூடிற்றுகில் நல்லுறைப்பே'

எய்த்தா ரெய்த்தா ரெய்த்தா ரென்(று) இல்லத்தாரும்
புறத்தாரும்
மொய்த்(து) ஆங்கலறி முயங்கத் தாம் போகும்போது
(உ)ன்மத்தர்போல்
பித்தே யேறி அநுராகம் பொழியும் போ(து) எம்
பெம்மானோ(டு)
ஒத்தே சென்(று) அங்குள்ளம் கூடக் கூடிற்றுகில்
நல்லுறைப்பே. 8. 8. 8.

முடிந்தார் முடிந்தார் முடிந்தார் என்று, (இவனது கலங்கின தசையில் நெஞ்சைத் தெளிய வைப்பதற்குப் பதிலாக, இவன் பயப்படும்படி அதைப் பலமுறை சொல்லி) வீட்டில் உள்ளாரும் (மனைவி மக்களும் பிறரும்) அயலாரும் (அழையாமலே) திரண்டு அந்நிலையில் (வீட்டில் உள்ளார்) அலறிக் கூப்பிட்டு மேல் விழ, தாம் போகும்போது மதி கலங்கிப் பெருங் காதலினால் ஆசை மேலிட்டு (பிரிவின் காரணமாய்க்) கண்ணீர் பொழியும் போது, (அந்நிலையிலும்) எனது நாதனிடத்து இசைந்து சென்று மனம் கூடப் பெறுமானால் அது நல்ல வாய்ப்பாகும் (பாக்கியமாகும்.)

### 60. 'அப்பன் திருவருள் மூழ்கினளே'

புனையிழை களணியும் ஆடையுடையும் புதுக் கணிப்பும்
நினையும் நீர்மையதன்(று) இவட்(கு) இது நின்று நினைக்கப்
[புக்கால்
சுனையினுள் தடந்தாமரை மலரும் தண் திருப்புலியூர்
முனைவன் மூவுலகாளி அப்பன் திருவருள் மூழ்கினளே.
8. 9. 5.

பூணுதற்கு உரிய ஆபரணங்களை (அழகு பெறப்) பூண்டிருக்கும் நிலையும் கூறை யுடையும் (வடிவிற் பிறந்த)

புதுமையும், காலம் உள்ளளவும் நின்று ஆராயப் புகுந்தாலும், இவட்கு (உண்டான) இவ் வழகு நினைக்கும் தன்மைய தன்று. (சிந்தையில் அடங்காதது.) (இவ் வழகு உண்டானது எப்படியெனில்) நீர்ச் சுனையுள் பெருத்த தாமரை மலர்கள் மலர்ந்துள்ள குளிர்ச்சியான திருப்புலியூர்க்கு அதிபதியாய் மூன்று உலகங்கட்கும் அரசனை உபகாரகனுடைய திருவருளிலே (அருட் கடலிலே) இவள் மூழ்கிவிட்டாள் (என்பதினால் தான்.)

*61. 'அவன் அடியார் அடியே கூடும் இது அல்லால்'*

நெடுமோற் கடிமை செய்வேன் போல்
அவனைக் கருதவஞ்சித்து
தடுமோற்றற்ற தீக்கதிகள் முற்றும்
தவிர்ந்த சதிர் நினைந்தால்
கோடு மாவினையேன் அவனடியாரடியே
கூடும் இது வல்லால்
விடுமோ றென்பதேன் ? அந்தோ !
வியன் மூவுலகு பெறினுமே. 8. 10. 1.

அனைத்திற்கும் பெரியோனாகிய ஈசனுக்கு அடிமை செய்பவனைப் போல அவனை நினைக்கவும், தடுமாற்ற மில்லாத (கூச்சமற்றுத் தைரியமாய்க்) கேடு விளைக்கும் வழிகள் (யான் அறியாமலே) முழுதும் (போன இடம் தெரியாமல்) போன சாமர்த்தியத்தை நினைந்தால், அவனுடைய அடியார்களின் திருவடியையே பற்றுவதல்லாமல், பரந்த மூவுலகம் என்னும் செல்வத்தைப் பெற்றாலும் (செல்வத்தோடு பாகவத அடிமை செய்யும் பேற்றை ஒப்பிட்டுக் கூற நேரும்) கொடிய பெரும் பாவியாகிய நான் (அந்தப் பாகவத அடிமையை) விடுவது என்ற சொல்லும் ஏன் ? ஐயோ ! (நான் பற்றிய மிக உயர்ந்த பேறு அதற்கு நான்கு மூன்று படி கீழ் உள்ளதாய், உலக மக்களால் மதிக்கப்படும் செல்வத்திற்கு ஈடாகாது என்று சொல்லவும் வேண்டியுள்ளதே !)

62. 'அடியார் அடியார் அடியார் எங் கோக்கள்

வாய்க்க தமியேற்கு ஊழிதோறூழி யூழி மாகாயாம்
பூக்கோள் மேனி நான்கு தோள் பொன்னாழிக்கை என்
[னம்மான்
நீக்க மில்லா அடியார் தம் அடியாரடியாரடியார் எங்
கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்
[பாடே. 8. 10. 10.

*அழகிய காயாம் பூப்போல் இருக்கின்ற கரிய திரு மேனியையும் நான்கு திருத் தோள்களையும் அழகிய சக்கரப்படையை உடைய திருக்கையையும் (இவைகளைக் காட்டி என்னை அடிமைகொண்ட) என் நாதனைப் பிரிய முடியாத (பிரிந்தால் தரியாத) அடியார்க்கு அடிமைப் பரம்பரையில் உள்ளார் எனக்கும் என்னைச் சேர்ந்தவர் களுக்கும் நாதர்கள் ; அவர்களுக்கே அடிமை செய்யும் குலமாய்ச் செல்லும்படியான நல்ல கோட்பாடே ஊழிக் காலமெல்லாம் (எக்காலமும் பேற்றுக்கு எல்லையான பாகவத அடிமையை வேண்டுதலின்) ஒப்பற்ற எனக்கு உண்டாக வேண்டும்.*

63. 'இல்லை கண்டீர் துணையே'

கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்ட தோடு பட்டதல்லால் காதல் மற்று யாது மில்லை
எண் திசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரான்
தொண்டரோமாய் உய்யலல்லால் இல்லைகண்டீர் துணையே.
9. 1. 1.

*(நாம் பந்துக்களாக நெஞ்சிலே) கொண்ட மனைவி மாரும் மக்களும் சம்பந்திகளும் உறவினரும் மற்றவரும் (நண்பர் முதலியோரும்) (நம்மைக் காணும்போது (நம் கையில் பணம் உள்ளபோது) நேசம் கொண்டதல்லால், (காணாதபோது மெய்யான) நேசம் ஒன்றும் உடையவர் அல்லர் ; எட்டுத் திக்குகளோடு கூடிய பூமியையும் பாதாள லோகங்களையும் மேல் உள்ள லோகங்களையும் எல்லாவற்றையும் (பிரளயத்தில் அழியாது) உண்ட*

(உண்டு காப்பாற்றிய) உபகாரனுக்கு அடியோமாய் உய்வடைதலன்றி வேறு துணை இல்லை. (அவனைப் பற்றினாலன்றி அழிதல் உறுதி.)

## 64. 'சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும்'

மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத் தெவ்
[வுயிர்க்கும்
சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும் கண்டீர் களந்தோ!
குற்றமன்(று) எங்கள் பெற்றத் தாயன் வடமதுரைப் பிறந்
[தான்
குற்றமில் சீர்கற்று வைகல் வாழ்தல் கண்டீர் குணமே.
9. 1. 7.

(இதற்குச் சமானமான) வேறொரு வழி இல்லை; சுருக்கமாக (எளிதே அறிந்து பற்றுகைக்காகச்) சொன்னோம்; இவ்வுலகத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் (தகுதியைக் கவனிக்கவேண்டாம்); வருந்தவேண்டாம். (பகவானது) சிந்தனை மட்டுமே போதுமன்றோ? ஐயோ! (இவ்வளவு எளிய வழியைப் பெற்றும் பேற்றை இழக்க வேண்டுமோ?) நன்மையைப் பெறுவிட்டாலும் தீங்கு உண்டாகாது; பசு மேய்க்கும் ஆயனான் வடமதுரையில் அவதரித்த கிருஷ்ணபிரானுடைய யாதொரு குற்றமுமற்ற (நற்) குணங்களைக் கற்று (சிந்தித்து) எப்போதும் (அச் சிந்தனையில்) வாழ்தலன்றோ (உங்களுக்கு) குணமாவது (உயிர்க்கு நன்மை அளிப்பது). (மற்றவை நமக்குத் தகாதனவாம்.)

## 65. 'எழுது மென்னும் இது மிகை'

தொழுது மாமலர் நீர்சுடர் தூபம் கொண்டு
எழுது மென்னும் இது மிகை யாதலில்
பழுதில் தொல் புகழப் பாம்பணைப்பள்ளியாய்!
தழுவுமா(று) அறியேன் உனதாள்களே. 9. 3. 9

பெருமையுற்ற பூக்களையும் (அர்க்கியம் முதலிய) ஜலத்தையும் தீப தூபங்களையும் கொண்டு தொழுவதற்காக முயலுவோம் என்பதும் (பூரணனான உனது சீலத்திற்கு) மிகையாய் (அவசியமற்றதாய்) இருப்பதால், (வழி படுதலில் வருத்தமுடைமை என்னும்) குற்றம் இல்லாத பழமையான புகழுடையவனாய்ப் பாம்பணையிற் பள்ளிகொண்டிருப்பவனே, உன் திருவடிகளை அணையும் (தொண்டு செய்யும்) வழி தெரியவில்லை.

தொண்டு செய்யத் தொடங்கும்போதே அதுவும் அதிகம் என்று நினைக்கும் பகவானுடைய சீலம் என்னும் குணத்தைச் சிந்தித்தால், தொண்டு செய்யவும் இயலாது போகிறது என்கிறார் ஆழ்வார். பகவானே தனக்கு வேண்டுவது ஒன்றும் இல்லாதபடிப் பூரணன் ஆதலின் அடியார்கள் செய்யும் அற்பமும் அவனுக்கு மிகை ஆகிறது.

### 66. ‘ கண்ணபிரானை நீர் வரக் கூவுகிலீர் ’

இன் உயிர்ச் சேவலும் நீரும் கூவிக் கொண்(டு) இங்(கு) [எத்தனை
என் உயிர் நோவ மிழற்றேன்மின் குயிற் பேடைகாள் !
என் உயிர்க் கண்ணபிரானை நீர் வரக் கூவுகிலீர்
என்உயிர்க் கூவிக் கோடேப்பார்க்கும்இத்தனை வேண்டுமோ?
9. 5. 1.

குயிற் பேடைகளே ! நல்லுயிர் போன்ற ஆண் குயில்களும் (அவைகளுக்கு உயிர் போன்ற) நீங்களும் (ஒருவரை யொருவர்) அழைத்துக்கொண்டு (பிரிவாலே நோவுபடும்) என்னிடத்தில் மிகவும் என் உயிர் வருந்த உங்கள் கூவுதலை விடுங்கள் ; எனக்கு உயிரான (தாரகனான) கண்ணனை (என் நிலையை அறிய வேண்டிய பேடைகளாகிய) நீங்கள் (என்னிடம்) வரும்படி (அவன்முன் சென்று) கூவமாட்டீர்கள் ; (என்னை அவனோடு சேர்ப்பிக்கும் முயற்சியில் ஈடுபடாமல் என்னை அழிப்பதில் கருத்துடையராகிறீர்.) என் உயிரை வாங்கி (அவனது

கையிலே கொடுப்பதே உங்களது கருத்தானாலும் அவ் வாறு) கொடுப்பார்க்கும் இவ்வளவு முயற்சி வேண் டுமோ? (நொந்தவரை உயிர்ப்பித்தலன்றோ அரிது; முடிக்கையும் ஒரு பணி யாகுமோ?)

## 67, 'தான் என்னை முற்றப் பருகினான்'

வாரிக் கொண்டு (உ)ன்னை விழுங்குவன் காணிலென்(று)
ஆர்வுற்ற என்னை யொழிய என்னின் முன்னம்
பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்
காரொக்குக் காட்கரை யப்பன் கடியனே. 9. 6. 10.

உன்னைக் காணப் பெற்றால் 'முழுவதும் உன்னைப் பற்றிக்கொண்டு உன்னை முற்றவும் விழுங்குவேன் (அநு பவிப்பேன்) என்று ஆசையுற்ற என் அளவோடு நில் லாது (எனக்கு மிஞ்சின ஆசையோடு) எனக்கு முன் னமே விரும்பித்தான் என்னை முழுதும் பருகினான் (அநு பவித்தான்.) மேகம் போன்ற (வள்ளல் தன்மையுடைய) திருக்காட் கரையிலே நிற்கும் அப்பனானவன். (அநுபவத் தில் எவர்க்கும் பிந்தாதபடி) விரைந்து வருபவனே.

ஆழ்வார் பகவானிடம் 'உன்னை விழுங்குவேன்' என்றார். பகவான் அவர்க்கும் முன்னே அவரை நீராக்கி முழுதும் பருகினார். பகவானை ஆழ்வார் 'உண்ணும் சோறு' ஆக நினைத்தார்; பகவான் ஆழ்வாரை 'உண் ணும் சோறு' 'பருகு நீரு' மாக ஆக்கினான். ஞானம் பெற்ற பின்பு ஆழ்வார் பகவானிடம் ஆசை வைத்தார். பகவான் அதற்கு முன்னும் ஆழ்வாரிடம் ஆசை வைத் தார்; தம்பால் ஆசையைப் பிறப்பித்தார். ஆதலின் பக வானுக்கு ஆழ்வார்மீது உள்ள ஆசை ஆழ்வார்க்குப் பகவான் மீது உள்ள ஆசையினும் மிகப் பெரியதாயிற்று.

## 68. 'நெஞ்சத்து இருத்தும் தெருளே தரு'

அருளாத தொழிவாய் அருள்செய்(து)அடியேனைப்
பொருளாக்கி உன் பொன்னடிக் கீழ்ப்புக வைப்பாய்

மருளேயின்றி உன்னை என்நெஞ்சத் திருத்தும்
தெருளே தருதேன் திருநாவாயென் தேவே. 9. 8. 8.

*(எனக்கு) கிருபை பண்ணாதே (இவன் பட்டது படட்டும் என்று) இருக்கினும் இரு; (அல்லாமலே என் துயர நிலையைக் கண்டு) கிருபைபண்ணி அடியேனை ஒரு பொருள் ஆக்கி உனது அழகிய (இன்பமயமான) திருவடிகளின் கீழ்வைத்துக் கொள்ளினும் கொள். (உன் இச்சைப்படியே இரண்டில் எதையும் செய்க); அஞ்ஞானம் (சிறிதும்) இல்லாமல் உன்னை என் மனத்தில் (எப்போதும்) வைத்துக்கொள்ளும்படி ('தனக்கேயாக எனைக்கொள்ளும் ஈதே' என்ற) தெளிவைத் தரவேண்டும், அழகிய திருநாவாய் என்னும் ஊரிலேயுள்ள என் தெய்வமே.*

*துன்பங்கள் நீங்கவேண்டும் என்று பிரார்த்திப்பதைவிட 'எல்லாம் அவன்செயல்' என்று இசையும் ஞானத்தெளிவே வேண்டத்தக்கதாகும்.*

### *69. 'இனி இருந்து என் உயிர்காக்குமாறு என்?'*

புகலிடம் அறிகிலம் தமிய மாலோ
புலம்புறு மணிதென்றல் ஆம்பலாலோ!
பகலடு மாலைவண் சாந்த மாலோ!
பஞ்சமம் முல்லைதண் வாடையாலோ!
அகலிடம் படைத்திடந்துண்டு மிழ்ந்தளந்து
எங்கும் அளிக்கின்ற ஆயன் மாயோன்
இகலிடத் தசுரர்கள் கூற்றம் வாரான்
இனியிருந் தென்னுயிர் காக்குமாறென்? 9. 9. 2.

*(புகல் அற்றார்க்குத் துணையான கண்ணன் இல்லாமையால்) தனிமையாயிருக்கும் நாம் (மணிநிலா முதலிய பின்வரும் பொருள்கள் சேர்ந்து வருத்தும்போது) ஒதுங்கும் இடம் அறியோம்; (கன்றுகளைக்கூப்பிடுவதுபோலப்) புலம்பும் (மாடுகளின் கழுத்துகளிலுள்ள) மணியும் தென்றலும் குழலும் (உலகப்பொருளைக் கண்டு தரிப்ப*

தற்கேற்ற காலமாகிய) பகலையும் கொன்றுவரும் மாலைப் பொழுதும், அழகிய சந்தனமும், பஞ்சமம் என்னும் பண்ணும், முல்லையாழும், குளிர்ந்த வாடையும் (ஒன்று கத் திரண்டுவந்து) என்னைக்கொல்லும் இதே சமயத்தில், பரந்த பூமியை உண்டாக்கியும் 'பிரளய வெள்ளத்தி லிருந்து) மூழ்கியெடுத்தும், உண்டு (வயிற்றிலே வைத்துக் காத்தும்) உமிழ்ந்தும் அளந்தும் எல்லாவிதத்தாலும் (வரையாது) காக்கும் ஆயனும், ஆச்சரியமான செயல் களை யுடையவனும், போர்க்களத்திலே (எதிர்க்கும்) அசுரர்களுக்கு யமன் போன்றவனும் ஆன கண்ணன் (என்னை வருத்தும் பொருள்களை வென்றுகொண்டு) வாராதிருக்கிறான்; (அவ்வாறு அவன் வாராமல் கை விட்டபோது) இனி வாழ்ந்திருந்து (எனக்குச் சுமை யான) என் உயிரை நான் காப்பது எப்படியோ?

70. 'கெடும் இடர்ஆய எல்லாம் கேசவா என்ன'

கெடுமிடராய வெல்லாம் கேசவா வென்ன நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார்
விடமுடை யரவில் பள்ளி விரும்பினான் சுரும்பலற்றும்
தடமுடை வயல் அனந்தபுர நகர்புகுதும் இன்றே. 10. 2. 1.

கேசவன் என்னும் நாமத்தைச்சொல்லவே துன்பம் என்று பெயர்பெற்றன வெல்லாம் கெடும். (ஞானம் பிறக்குமுன் செய்த பாவங்களும், பிறந்தபின் மறந்து செய்யும் பாவங்களும் தாமே அழியும்.) நாள்தோறும் கொடிய செயலைச்செய்யும் யமனுடைய தூதர்களும் வந்து கிட்டமாட்டார்கள்; (ஆதலால்) (விரோதிகள் கிட்டாத படி) விஷமுடைய பாம்பணையில் பள்ளிகொள்ளலை (அடியார்க்காக) விரும்பினவனுடைய, வண்டுகள் (மது வுண்ட மயக்கத்தால் முறைகெடப்) புலம்பும் (பூந் தடா கங்களுள்ள வயல்களையுடைய திருவனந்தபுரத்தை இன்றே (காலதாமதமின்றி)(இச்சை உண்டான இப்போ தே) போய்ப் புகுவோம்.

### 71. 'தலைமிசை நீ அணியாய்...உன் கோலப்பாதம்'

அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்
ஆழியங் கண்ணா! உன்கோலப் பாதம்
பிடித்தது நடுவுனக் கரிவையரும் பலர்
அது நிற்க எம்பெண்மை யாற்றோம்
வடித்தடங் கண்ணிணை நீரும் நில்லா
மனமும் நில்லா எமக்கது தன்னாலே
வெடிப்புநின் பசுநிரை மேய்க்கப் போக்கு
வேமெமது உயிரழல் மெழுகிலுக்கே. 10. 3. 6.

*கடல்போன்ற (தாபத்தைப்போக்கக்கூடிய) அழகிய கண்களையுடைய கிருஷ்ணனே, உனது அழகிய திருவடிகளை உனக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் எங்கள் தலைமீது நீ வைத்தருளவேண்டும்; (நீ செல்லும் காரியத்திற்கு) இடையிலே (அதற்கு இடையூறாக) உன் திருவடிகளைப் பிடிப்பார் பெண்கள் பலர். அது கிடக்கட்டும். (உன்னை அடக்க முன்வரவில்லை.) எங்களது பெண் தன்மையினால் உன்னைப்பிரிவதைத் தாங்கமாட்டோம். (உயிர் வாழோம்); (ஆற்றாமையாலே) கூர்மையான பெருத்த (எங்கள்) கண்களில் கண்ணீர் அடங்காது பெருகும். மனமும் ஒருநிலையில் நில்லாது; (உன்னைப்போல் வன்மையற்ற) எங்களுக்கு அதனால் நீ பசு மேய்க்கப் போதல் பொறுக்காதது; எங்கள் உயிர் நெருப்பில் (இட்ட) மெழுகுபோல் உருகி வெந்துவிடும். (நீ பசு மேய்க்கப் போதல் எங்கள் உயிர்க்கு நாசமாம்.)*

*இறைவனைப் பிரிந்து இவ்வுலகில் ஒரு கணமும் வாழப்பெறாத அடியார்களது நிலை 'பரமபக்தி' என்னும் மிக உயர்ந்த நிலையாகும். இந்நிலையில் உள்ள அடியார்களது அவாவை இறைவன் உடனே நிறைவேற்றத் தவறான்*

### 72. 'பரமன் பணித்த பணி வகையே'

கண்டேன் கமல மலர்ப் பாதம் காண்டலுமே
விண்டே யொழிந்த வினையாயின வெல்லாம்

தொண்டே செய்(து) என்றும் தொழுது வழி யொழுகப்
பண்டே பரமன் பணித்த பணி வகையே. 10. 4. 9.

(உயர்ந்த பக்தியோடு கூடியவனுய்த்) தொண்டே செய்து, எப்போதும் வணங்கிக் கொண்டு (எல்லாம் இறைவன் செயல் என்று) அவனையே (சரணமாக) பற்றி வாழும்படி, முற்காலத்திலே பரமன் அருளிச் செய்த படியே (கீதையில் 'ஸர்வ தர்மான்' என்னும் சுலோகத்தில் வாக்கு அளித்தபடியே) தாமரை போன்ற (இன்ப மயமான) திருவடிகளைக் காணப் பெற்றேன். (பிறர் கேட்டே போம் விஷயத்தை யான் ஞானக் கண்ணாற் கண்டேன்.) அந்த ஞானம் பிறந்தவுடனே, வினை என்று பெயர் பெற்றவை யெல்லாம் (அகங்காரம் மமகாரம் முதலிய எல்லா விரோதிகளும்) வேரோடே ஒழிந்தன.

### 73. 'கண்ணன் கழலிணை'

கண்ணன் கழலிணை
நண்ணு மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே. 10. 5. 1.

(இவ் வுலகில் நம் கண் காண வந்து தோன்றிய) கிருஷ்ணபிரானுடைய திருவடிகளை அடையும் இச்சை யுடையவர்களே! சிந்தித்தற்கு உரிய திருநாமம் நிச்சய மாகவே 'நாராயணன்' என்பதே.

### 74. 'இனிப் பிறவி யான் வேண்டேன்'

அருள் பெறுவா ரடியார்தம் அடியனேற்(கு) ஆழியான்
அருள் தருவான் அமைகின்றான் அதுநமது விதி வகையே
இருள் தருமா ஞாலத்துள் இனிப் பிறவி யான்வேண்டேன்
மருள் ஒழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே.
10. 6. 1.

(ஈசனது அளவற்ற) கருணைக்குப் பாத்திரமாய் இருத்தலையே இலக்கணமாக உடையவரின் அடியார்க

ளுக்கு அடியானாய் இருக்கும் எனக்குத் திருவாழியை (சக்கரத்தை)யுடைய ஈசன் அருள் செய்யத் தயாராய் உள்ளான். (தன்னிடம் குறையில்லை எனினும்) அதை நாம் விதிக்கும்படியே (விரும்புகிறபடியே)(செய்ய நினைத் துள்ளான்); (இருக்க இருக்க மேலும் மேலும்) அஞ் ஞானத்தைத் தரும் பெரும் பூமியில் பிறப்பதை இனி யான் விரும்பேன். அறிவின்மை கொண்ட நெஞ்சே திருவாட்டாறு என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கிற இறைவனது அடியை வணங்குக.

## 75. 'தானே ஆகி நிறைந்தானே'

செஞ்சொற் கவிகாள்! உயிர் காத்தாட் செய்ம்மின் திருமா
[லிருஞ் சோலை
வஞ்சக் கள்வன் மாமாயன் மாயக்கவியாய் வந்(து)என்
நெஞ்சு முயிரும் உள்கலந்து நின்று ரறியா வண்ணம்என்
நெஞ்சு முயிரும் அவ்வயுண்டு தானேயாகி நிறைந்தானே.

**10. 7. 1.**

(வேறு பலன் கருதாது பாடும்) செம்மையான சொற்களால் கவிபாட வல்லவர்களே! உங்கள் உயிரை (உடல் முதலியவற்றையும்) (அவனது வலையிற் சிக்காத படி) காத்துக் கொண்டு (உம்முடைய பாடும்) தொண் டைச் செய்யுங்கள்; (உங்களை இழக்க வழி தேடாமல் அவனைப் பாடுங்கள்; அவனுடைய சீல குணத்தில் இறங்க நினையாது போங்கள்); திருமலையிலே (எழுந் தருளி, அகப்பட்டாருடைய எல்லா உரிமைகளையும் பறிக்கும் இடத்தில்) (பறிப்பதும் தெரிய வொட்டாது) வஞ்சகமாகக் களவு செய்வோனாய், (அதற்கு இசையப் பிறரை மயக்கும்) மிக்க ஆச்சரியமான குணங்களையும் செயல்களையும் உடையவன் கவி பாடச் செய்தல் என் னும் வெளிக் காரணத்தைக் கொண்டு மாயமாய் (நான் இருக்கும் இடம் தேடி) வந்து என் நெஞ்சோடும் (உட லோடும்) ஆத்மாவோடும் ஒன்றாகக் கலந்து, தன் பக்கத் தில் நிற்பாரும் அறியாதபடி என் உடலையும் உயிரையும்

கவர்ந்து கொண்டு தானே (அநுபவிப்பவனாக) ஆகி (அவ்வாறு என்னைப் பெற்ற பின்பு) பரிபூரணனானான்.

### 76 'மங்க வொட்டு உன்மா மாயை'

மங்கவொட்டு உன் மாமாயை திருமாலிருஞ் சோலைமேய
நங்கள் கோனே! யானே நீயாகி என்னையளித்தானே!
பொங் கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்
இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே. [பூதம்
10. 7. 10.

திருமாலிருஞ் சோலைமலையில் வாழ்கின்ற, எங்கள் நாதனே, நான் (எனக்கு நன்மையைத் தேடும் நினைவை) நீயே (உடையை) யாகி, என்னை (எப்போதும்) காத்து வந்தவனே, கிளர்ந்தெழுகிற (விகாரத்தை உண்டுபண்ணுகிற) ஒலி முதலிய ஐந்து உணர்ச்சிகளும், (அவைகளுக்குக் காரணமான கண் முதலிய) ஐந்து உறுப்புகளும், (அவை தொழிற்படுதற்கு ஏதுவான வாக்கு முதலிய) ஐந்து கருமேந்திரியங்களும், பிருதிவி முதலிய ஐந்து பூதங்களும், இந்நிலையில் உயிரைப்பற்றியுள்ள மூலப்பிரகிருதி மஹான், அகங்காரம் மனம் என்பனவும் ஆகிய உன்னுடைய பெரும்மாயை (ஆகிய இவ்வுடல்) மங்கும்படி இசைந்தருளவேண்டும்.

### 77. 'இன்று என்னைப் பொருள் ஆக்கி'

இன்றென்னைப்பொருளாக்கித்தன்னை என்னுள்வைத்தான்
அன்றென்னைப் புறம்போகப் புணர்த்த(து) என்செய்வான்?
குன்றென்னத் திகழ்மாடங்கள் சூழ் திருப்பேரான்
ஒன்றெனக்(கு) அருள்செய்ய உணர்த்தலுற்றேனே. 10. 8. 9.

(பொருள் அல்லாத) என்னை (உன் அருள்நோக்கு விழுந்தது முதலுள்ள) இக்காலம், ஒரு பொருளாம்படிப் பண்ணி (பேரின்பமயமான) தன்னை (அற்பமான) என் நெஞ்சுள் (முழுவதுமாகக் கொண்டுவந்து) வைத்தான். (அருள்நோக்கம் விழுவதற்கு முன்புள்ள) அக்காலமெல்லாம் என்னை வெளிச் செல்லும்படிப் பண்ணினது யாது

செய்கைக்காக? (எதற்காக?) மலைபோல விளங்கும் மாடங்கள் சூழ்ந்த திருப்பேர் நகரிலுள்ளான் (முற்கூறிய இரண்டில்) ஒன்றுக்குக் காரணத்தை எனக்கு அறிவிக்கும்படி விண்ணப்பம் செய்கிறேன்.

### 78. 'நாரணன் தமரைக் கண்டு உகந்தே'

சூழ்விசும் பணிமுகில் தூரியம் முழக்கின
ஆழ் கடலலை திரை கையெடுத்தாடின
ஏழ்பொழிலும் வளமேந்திய என்னப்பன்
வாழ்புகழ் நாரணன் தமரைக் கண்டுகந்தே. 10. 9. 1.

எனது பரம பந்துவான (அடியார்களை) வாழும்படிச் செய்யவல்ல நற்குணங்களையுடைய ஈசனுடைய மெய்யடியார்களைக் கண்டு பிரியப்பட்டே (பூமியைச் சூழும்) ஆகாயத்தில் ஆபரணம்போன்ற மேகங்கள் தூரிய கோஷம் முழக்கின; ஆழமுடைய (எதையும் தன்னுள் அடக்கக்கூடிய) கடல்கள் அலைந்துவரும் அலைகளாகிய கையை எடுத்துக்கொண்டு (ஆனந்தக் கூத்தாடின;) ஏழு தீவுகளும் வளம்பெற்று நின்றன.

### 79. 'ஒன்றும் மாயம் செய்யேல் என்னையே'

முனியே! நான்முகனே! முக்கண்ணப்பா! என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே! என் கள்வா!
தனியே னாருயிரே! என் தலைமிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டேன் ஒன்றும் மாயம் செய்யேல்
என்னையே. 10. 10. 1.

(அண்டத்தைப் படைக்கும் சங்கற்பமான) மனனத்தை யுடையவனே! (பின் அண்டத்தில் உள்ள பலவற்றையும் படைத்தற்காகப்) பிரம்மாவாய் (பிரம்மாவுக்கு அந்தர்யாமியாய்) நின்றவனே! (உலகத்தை அழிக்கும்) உருத்திரனாய் (உருத்திரனுக்கு அந்தர்யாமியாய் இருப்பவனே) எனக்குரிய (எனக்கு ருசியைப் பிறப்பித்த) கனிபோன்ற (இன்பமயமான) வாயையும், தாமரை மலர்போன்ற (அழகிய) கண்ணையும் உடைய

ஒரு துளையாத கருமாணிக்க வடிவுடையாய் ! என்னையும் (உன் அழகாலே யான் உணராதபடி) வஞ்சித்துப் பறித்துக் கொண்டவனே ! (பெறற்கரும்பேறு பெற்ற) தனியேனுடைய அருமையான உயிர் போன்றவனே ! (உன் குணநுபவமே உயிராக வாழ்வித்தவனே), என் தலைமேல் திருவடிகளை அமரும்படி நீட்டி வைத்து இனி யான் (முன்புபோல) என்னைவிட்டுப் போக இசையேன் ; என்னை ஒரு சிறிதும் மயக்கத்துக்கு உள்ளாக்காதே.

## 80. 'என் அவா அறச் சூழ்ந்தாயே'

சூழ்ந்தகன்றாழ்ந் துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ !
சூழ்ந்ததனில் பெரிய பரநன் மலர்ச் சோதீயோ !
சூழ்ந்ததனில் பெரிய சுடர்ஞான இன்பமேயோ !
சூழ்ந்ததனில் பெரிய என் அவாவறச் சூழ்ந்தாயே.

10. 10. 10.

சூழ்ந்து, வியாபித்துக் கீழும் மேலுமுள்ள எல்லாத் திக்குகளிலுமுள்ள நித்தியமான அளவற்ற பிரகிருதி தத்துவமானவனே ! (அதற்கு ஆத்மா ஆனவனே) ; (அதையும் வியாபித்து) அதிற் பெரியதாய் (அதை நியமிப்பவன் ஆதலின்) மேலாய் (விகாரங்கள் இல்லாமையாலே) மேன்மை யுடையதாய் மலர்கின்ற ஞான ஒளியையுடைய ஆத்மாவானவனே ! (ஆத்மாவிற்கும் ஆத்மா ஆனவனே); (இப் பிரகிருதி புருஷன் எனும் இரண்டு தத்துவங்களையும்) வியாபித்து (அவைகளிற்) பெரிய (அவைகட்கு அப்பாற்பட்ட) ஒளி வடிவான இன்ப வடிவுமான வனே ! (பிரகிருதி புருஷன் ஈசன் என்னும் மூன்று தத்துவங்களையும்) வளைத்துக் கொண்டு (அவை சிறியவாம் படி) அவைகளிற் பெரிய என் அவா முழுதும் தீர என்னோடே (ஒன்றாகக்) கலந்தாயே ; (எனது விருப்பம் ஒருவாறு நிறைவேறப் பெற்றேன்.)

# சிவ ஸஹஸ்ர நாமம்

(தேவாரத்திலிருந்து திரட்டியது)

பூவார் சென்னிப் புனிதா போற்றி ;
பாவார் பல்பொருட் பயனே போற்றி ;
தோடுடைச் செவியா போற்றி ; அமரர்
சூடா மணியே போற்றி ; தோன்றாத்
துணையே போற்றி ; துணையிலி போற்றி ;
அணுவே போற்றி ; அந்தணா போற்றி ;
அகர முதல்வா போற்றி ; பழியிலாப்
புகழாய் போற்றி ; புண்ணியா போற்றி ;
பித்தா போற்றி ; பெம்மான் போற்றி ;
அத்தா போற்றி ; அழகா போற்றி ;
அக்கரவு ஆமை பூண்டாய் போற்றி ;
முக்கணா போற்றி ; முதல்வா போற்றி !
தக்கணா போற்றி ; தருமா போற்றி ;
கொக்கரை யுடையாய் போற்றி ; குற்றம்
அறியாப் பெரும போற்றி ; ஒளிசேர்
நெறியளிப்பவனே போற்றி ; நேர்வார்
ஒருவரும் இல்லாய் போற்றி ; ஓங்காரப்
பொருளே போற்றி ; புயங்கா போற்றி
அச்சம் பேர்ப்பாய் போற்றி ; யார்க்கும்
உச்சியாய் போற்றி ; உரவோய் போற்றி ;
எந்தாய் போற்றி ; எண்குணா போற்றி ;
அந்தமும் ஆதியும் ஆனாய் போற்றி ;
அற்புதா போற்றி ; அனலா போற்றி ;
கற்பகம் போற்றி ; கருமணி போற்றி ;
கண்கள் ஆயிரம் உடையாய் போற்றி ;

எண்ணெழுத்துச் சொல் ஆனாய் போற்றி ;
ஊழியாய் போற்றி ; உருத்திரா போற்றி ;
ஆழியாய் போற்றி ; ஆண்டகாய் போற்றி ;
எல்லாம் சிவனென நின்றாய் போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி ;
பொன்னுமெய்ப் பொருளும் தருவாய் போற்றி ;
இன்னிசை யானாய் போற்றி ; ஏழிசை
வகுத்தாய் போற்றி ; வலியாய் போற்றி ;
அகத்துளாய் போற்றி ; ஆண்டாய் போற்றி ;
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி ;
சீலமும் நோன்பும் ஆவாய் போற்றி ;
சுந்தரா போற்றி ; சொக்கா போற்றி ;
அந்தி நட்டம் ஆடுவாய் போற்றி ;
அடியார்க் கினியாய் போற்றி ; கடலெழு
விடநுகர்ந் தவனே போற்றி ; விண்ணவர்
ஏத்தநின் றவனே போற்றி ; தோத்திரச்
சாத்திரங்களும் ஆனாய் போற்றி ;
அடியார் தம்அரு மருந்தே போற்றி ;
இடமுடை யீசா போற்றி ; இருங்கடல்
அமுதே போற்றி ; அப்பனே போற்றி ;
இமையோர் முடிதோய் கழலாய் போற்றி ;
ஈன மிலாப்புகழ் அண்ணல் போற்றி ;
ஊன மாயின தீர்ப்பாய் போற்றி ;
அந்தமில் அடிகள் போற்றி ; ஆகுதியின்
மந்தி ரத்தானே போற்றி ; ஆயிரம்
சேவடி கொண்டவ போற்றி ; தேவர்கள்
தேவனே போற்றி ; தேவா ருந்திரு
உருவா போற்றி ; உணர்வே போற்றி ;
அருவா போற்றி ; அறவா போற்றி ;
சிந்தையாய் நின்ற சிவனே போற்றி ;
சந்தியாய் போற்றி ; சதுரா போற்றி;

நுந்தா ஒண்சுடர் போற்றி ; நினைப்பவர்
சிந்தை நீங்காய் போற்றி ; செற்றமில்
சீராய் போற்றி ; செல்வா போற்றி ;
ஆரா வமுதே போற்றி ; ஆனிடை
ஐந்தும் வைத்துகந் தருளினாய் போற்றி ;
மைந்தா போற்றி ; மணாளா போற்றி ;
அரவம் மகிழ்வரை மார்பா போற்றி ;
பரமா போற்றி ; பாசுபதா போற்றி ;
தத்துவா போற்றி ; தாதாய் போற்றி ;
சித்தா போற்றி ; செழுமணி போற்றி ;
அம்மை பயக்கும் அமுதே போற்றி ;
செம்மை தருவாய் போற்றி ; சேமமாய
செல்வா போற்றி ; திகிரியை அரிக்கு
நல்கினாய் போற்றி ; நரகரைத் தேவு
செய்வாய் போற்றி ; சேடா போற்றி ;
உய்வகை புரிவாய் போற்றி ; உலகம்
உண்டவ போற்றி ; உயர்ந்தவ போற்றி ;
அண்ட நாயக போற்றி ; அந்தளிர்
மேனியாய் போற்றி ; மெய்யா போற்றி ;
ஞான முதல்தனி வித்தே போற்றி ;
அல்லல் அறுப்பாய் போற்றி ; நாளும்
நல்லவை நயப்பாய் போற்றி ; நான்மறை
பாட வருவாய் போற்றி ; காட்டகத்து
ஆடல் மகிழ்வாய் போற்றி ; அந்தணர்
சிந்தையாய் போற்றி ; சேவகா போற்றி ;
வெந்தழல் வடிவா போற்றி ; விண்ணோர்
பெருமா போற்றி ; பேய்க்கணம் சூழத்
திரிவாய் போற்றி ; திசையவர் போற்ற
நின்றாய் போற்றி ; நின்மலா போற்றி ;
குன்றா ரும்வில் லுடையாய் போற்றி ;
எரிசுட ராய்கின்ற இறைவா போற்றி ;

விரிசடை வெள்ளம் படைத்தாய் போற்றி;
தொழுவார்க் கருள்வாய் போற்றி; மனங்கசிந்து
அழுவார்க் களிப்பாய் போற்றி; அற்றவர்க்கு
அன்பா போற்றி; அந்தணர்க் கறம்பொருள்
இன்பம் வீடு மொழிந்தாய் போற்றி;
ஆணொடு பெண்வடி வானவ போற்றி
நீணெறி நாதனே போற்றி; நெற்றிக்
கண்ணாய் போற்றி; கலையாய் போற்றி;
மண்ணுளார் வினைதீர் மருந்தே போற்றி;
சொல்லும் பொருளும் ஆவாய் போற்றி;
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி;
மங்கல மனையின் மிக்காய் போற்றி;
கங்கை தாங்கிய முடியாய் போற்றி;
மூவுல குக்கொரு மூர்த்தீ போற்றி;
தேவர்கள் தொழுதெழு கழலாய் போற்றி;
நாடிய நன்பொருள் ஆவாய் போற்றி;
நீடலர் சோதீ போற்றி; நித்திலத்
தொத்தே போற்றி; தோளா மாமணி
முத்தே போற்றி; முற்றுணை போற்றி;
வீணை பயின்ற விரலாய் போற்றி;
ஆணிநற் பொன்னே போற்றி; ஆறும்
சமயங் கட்கொரு தலைவா போற்றி;
அமரர்க் கரியாய் போற்றி; அயிலுறு
படையாய் போற்றி; வேளாத வேள்வி
உடையாய் போற்றி; உலகம் ஏத்தும்
கருத்தா போற்றி காரணா போற்றி;
நிருத்தா போற்றி; நீர்ப ரந்தபுன்
சடையா போற்றி; சாகைகள் ஆயிரம்
உடையாய் போற்றி; உகப்பவர் மனத்து
என்றும் நீங்காய் போற்றி; எண்ணிடை
ஒன்றினாய் போற்றி; ஒன்றும் பலவும்

ஆனவே டத்தொரு மூர்த்தீ போற்றி ;
தேனினும் இனியாய் போற்றி ; தெய்வ
மறைகள் பூண்டதோர் தேராய் போற்றி ;
உறுபொருள் பலவும் ஆவாய் போற்றி ;
ஏத்தகி லார்பால் பொருந்தாய் போற்றி ;
ஏத்துவார் இடரைத் தீர்ப்பாய் போற்றி ;
கருணையங் கற்பகக் கடலே போற்றி ;
எரியிடை மூன்றாய் நிற்பாய் போற்றி ;
செடியவல் வினைகள் செகுப்பாய் போற்றி ;
வடிவம் ஓராயிரம் உடையாய் போற்றி ;
வண்ணமும் ஆயிரம் கொண்டாய் போற்றி ;
எண்ணருந் திருநா மத்தாய் போற்றி ;
கதியாய் நிற்கும் கடவுளே போற்றி ;
புதியனு மாய்மிகப் பழையவ போற்றி ;
தீயும் காற்றும் கடலும் அந்தரமும்
ஞாயிறும் மதியமும் ஆவாய் போற்றி ;
மாலுமோர் பாகம் உடையாய் போற்றி ;
ஆலமா நிழலிருந்து அறம்சொனாய் போற்றி ;
கழற்கால் குஞ்சித்து ஆடுவாய் போற்றி ;
அழற்கண் யுடையாய் போற்றி ; அருமறை
விரித்தாய் போற்றி ; வேதம் அனைத்தும்
தெரித்தாய் போற்றி ; தேவா போற்றி ;
வேடம் பலபல வல்லாய் போற்றி :
நாடக மாடி போற்றி ; நலங்கொள்
பெருமா போற்றி ; பேயும் தாமும்
பிரியாய் போற்றி ; பேருல கம்படைத்
தளிப்பாய் போற்றி ; அதிசய போற்றி ;
ஒளிப்ப வளத்திரள் ஒப்பாய் போற்றி :
அற்றார் அலந்தார்க் கருள்வாய் போற்றி ;
உற்றவர் கட்கொரு சுற்றம் போற்றி :
அருந்தவர் தொழுதெழும் அப்பனே போற்றி ;

மருந்தா இப்பிணி தீர்ப்பாய் போற்றி;
கற்றார் இடும்பை களைவாய் போற்றி;
குற்றமில் குணத்தாய் போற்றி; கூற்றம்
உதைத்தாய் போற்றி; வெய்யோன் கண்ணைப்
புதைத்தாய் போற்றி; புரந்தரன் தோளைத்
துணித்தாய் போற்றி; தொழுதேத்து வார்க்கு
அணித்தாய் போற்றி; ஆரியத் தோடு
தமிழிசை ஆவாய் போற்றி; அமரர்க்கு
அமுதம் ஈந்தாய் போற்றி; ஆயிரம்
தோளாய் போற்றி; நெருநலும் இன்றும்
நாளையும் ஆகிய நாதனே போற்றி;
இம்மை பயக்கும் இறைவா போற்றி;
மம்மர் அறுக்கும் மருந்தே போற்றி;
அடியார் அடிமை உகப்பாய் போற்றி;
அடியார் புகலிடம் ஆவாய் போற்றி;
எண்ணாயிர நூற்றுப் பெயராய் போற்றி; 200

2

உண்ணுது உறங்காது இருப்போய் வாழ்க;
கற்றவர் உண்ணும் கனியே வாழ்க;
உற்றவர் உறுநோய் களைவோய் வாழ்க
காண்டற் கரியாய் வாழ்க; தொண்டரை
ஆண்டாய் வாழ்க; ஆதீ வாழ்க;
மாலை எழுந்த மதியே வாழ்க;
காலை முளைத்த கதிரே வாழ்க;
கண்ணிற் கருமணி யாவாய் வாழ்க;
பண்ணிசை யாகி நிற்பாய் வாழ்க;
மேலை வினைகள் அறுப்போய் வாழ்க;
ஞாலத் தார்தொழும் நன்மைய வாழ்க;
செல்லாச் செல்வம் உடையாய் வாழ்க;
நல்லோய் வாழ்க; நன்மணி வாழ்க;

மால்வரை வாழ்க ; மாதவ வாழ்க ;
வேலவன் தாதாய் வாழ்க ; வேத
நாவினாய் வாழ்க ; நாமம் நூறாயிரம்
மேவினாய் வாழ்க ; மெய்த்தவம் வாழ்க ;
மெய்த்தவத் தோர்க்குத் தத்துவன் வாழ்க ;
உய்த்தவன் வாழ்க ; உரையினன் வாழ்க ;
இன்பக் கேள்வி யிசையவ வாழ்க ;
அன்பன் வாழ்க ; ஆபற் காலத்து
அடிகள் வாழ்க ; புள்ளி யுழைத்தோல்
உடையாய் வாழ்க ; உலகுக் கெல்லாம்
சோதியன் ஆனவன் வாழ்க ; சொற்றுணை
வேதியன் வாழ்க ; வெள்ளி மால்வரை
மேனியன் வாழ்க ; விண்ணோர் தமக்கும்
கோனவன் வாழ்க ; குரவன் வாழ்க ;
தவநெறி சாதித்து நிற்பாய் வாழ்க ;
பவளத் தடவரைத் தோளன் வாழ்க ;
அடியவர்க் காரமு தாவாய் வாழ்க ;
நெடிய விசும்பொடு கண்ணான் வாழ்க ;
தொழுதகை துன்பம் துடைப்பாய் வாழ்க ;
கழலடைந் தார்செல் கதியே வாழ்க ;
நாட்டக நடைபல நவின்றாய் வாழ்க ;
ஓட்டகத் தூணை உகந்தாய் வாழ்க ;
உள்குவார் உள்ளத்து உறைவாய் வாழ்க ;
கொள்ளும் கிழமையே ழானாய் வாழ்க ;
மறவார் மனத்து மன்னினாய் வாழ்க ;
பிறவி அறுக்கும் பிரானே வாழ்க ;
எண்ணான் வாழ்க ; எம்மான் வாழ்க ;
கண்ணார் நெற்றி உடையாய் வாழ்க ;
சோதியுட் சோதியாய் உள்ளாய் வாழ்க ;
நீதியாய் வாழ்க ; நெடியவ வாழ்க ;
தன்னடைந் தாரது தம்பிரான் வாழ்க ;

சாலப் பழையவன் வாழ்க; யாழ்சேர்
பாலைப் பாட்டு உகந்தான் வாழ்க;
ஆம்பல் மலர்கொண் டணிந்தான் வாழ்க;
கூம்பித் தொழுவார் குற்றே வல்களைக்
குறிக்கொண் டிருக்கும் குழகன் வாழ்க;
அறக்கண் வாழ்க; ஆர ணீய
விடங்கன் வாழ்க; விழவன் வாழ்க;
கடம்பன் தாதை வாழ்க; கைவேழ
முகமுடை யவனைப் படைத்தான் வாழ்க;
பகலும் இரவும்சேர் பண்பன் வாழ்க;
ஆதிரையான் வாழ்க; ஆடலன் வாழ்க;
வேதம் ஓதாது உணர்ந்தான் வாழ்க;
கயவர் நெஞ்சினில் வாரான் வாழ்க;
புயலவன் வாழ்க; பூவன் வாழ்க;
சொல்லுவார் சொற்களைச் சோதிப்பான் வாழ்க;
கல்லுயி ராய்நின்ற கனலே வாழ்க;
ஆதி புராணன் வாழ்க; யார்க்கும்
நாதியன் வாழ்க; நாற்று னத்து
ஓருவன் வாழ்க; உறவிலி வாழ்க;
குருமணி வாழ்க; குழகன் வாழ்க;
காமரம் பாடித் திரிவான் வாழ்க;
மாமுனி வாழ்க; மாறிலி வாழ்க;
முழுமுதல் வாழ்க; முந்தையான் வாழ்க;
இழிவிலாச் செம்மையன் வாழ்க; என்றும்
எய்த லாகா இயல்வினன் வாழ்க;
கைகள் ஆயிரம் உடையவன் வாழ்க;
தேவர்கள் சூளா மணியே வாழ்க!
நாவலன் வாழ்க; நம்பன் வாழ்க;
நச்சுவார்க் கினியன் வாழ்க; ஊர்தொறும்
பிச்சைகொள் உத்தமன் வாழ்க; பிள்ளைப்
பிறையவன் வாழ்க; பெருமான் வாழ்க;

பின்னிய தாழ்சடைப் பிஞ்ஞகன் வாழ்க;
செற்றவர் புரமெரித் தருளினாய் வாழ்க;
அற்றவர்க் காரமு தானாய் வாழ்க;
அந்தரத் துள்ளாய் வாழ்க; வேள்விசெய்
அந்தண வாழ்க; அதிபதி வாழ்க;
ஆறும் நான்கும் அமர்ந்தாய் வாழ்க;
ஏறுகந் தேறினாய் வாழ்க; ஏழேழ்
படிகால் எம்மை ஆண்டாய் வாழ்க;
தடங்கடல் நஞ்சம் உண்டவ வாழ்க;
துறந்தோர் உள்ளப் பெரும்பயன் வாழ்க;
மறந்தார் மனத்து மருவான் வாழ்க;
மன்னா வாழ்க; மறைவலா வாழ்க;
இன்னமுது வாழ்க; இணையிலீ வாழ்க;
ஊணலா ஊணான் வாழ்க; பூணலாப்
பூணான் வாழ்க; பூதியன் வாழ்க;
மண்ணும் விண்ணும் மற்றுமானான் வாழ்க;
எண்கையான் வாழ்க; எங்கோன் வாழ்க;
ஏவலன் வாழ்க! ஏணிலான் வாழ்க;
காவலன் வாழ்க; கானவன் வாழ்க;
துன்னங் கொண்ட வுடையான் வாழ்க;
கன்னல் வாழ்க; கரும்பு இருந்த
கட்டியே வாழ்க; கதியே வாழ்க;
சிட்டன் வாழ்க; சேகரன் வாழ்க;
இருக்கிலின் மலிந்த இறையே வாழ்க;
எருக்கணி சடையாய் வாழ்க; எய்ப்பினில்
வைப்பே வாழ்க; வான்பயிர் வாழ்க;
எப்போ தும்மினி யவனே வாழ்க;
வேத விகிர்தன் வாழ்க; வேதம்
ஓதும் நெறியினான் வாழ்க; ஒன்றா
உலகம் அனைத்தும் ஆனான் வாழ்க;
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் வாழ்க;

மறவா தார்பிறப் பறுப்பான் வாழ்க ;
மருவிப் பிரியா மைந்தன் வாழ்க ;
இருசுடர் ஆனான் வாழ்க ; எழுமையும்
மனத்துக் கினியவன் வாழ்க : வாய்மையால்
நினைத்தவர் நெஞ்சுளான் வாழ்க ; நிதியான்
தோழன் வாழ்க ; தோத்திரன் வாழ்க ;
ஏழுலகு மாகி நின்றான் வாழ்க ;
செழுமறை பகர்ந்த பட்டன் வாழ்க ;
உமையான் வாழ்க ; உய்வகை யருள
வல்லான் வாழ்க ; மாண்பன் வாழ்க ;
வில்லால் மூவெயில் எய்தவன் வாழ்க ;
நண்ணினார்க் கென்றும் நல்லான் வாழ்க ;
கண்ணியன் வாழ்க ; கற்றவன் வாழ்க ;
மத்த மார்தரு சடையான் வாழ்க ;
பத்தர்க் கருளும் பரம்பரன் வாழ்க ;
ஆகம சீலர்க்கு அருள்வோன் வாழ்க ;
நாகம் பூண்ட நயவன் வாழ்க ;
நற்றவன் வாழ்க ; நம்பீ வாழ்க ;
உற்றவன் வாழ்க ; உலப்பிலான் வாழ்க ;
செங்கணன் வாழ்க ; செய்யன் வாழ்க ;
சங்கரன் வாழ்க ; சம்புவே வாழ்க ;
சீதமும் வெம்மையும் ஆனவன் வாழ்க ;
நீதன் வாழ்க ; நிறையவன் வாழ்க ;
பாடுவார் பசியைத் தீர்ப்பான் வாழ்க ;
வீடு காட்டும் நெறியான் வாழ்க ;
வேதன் வாழ்க ; வேதியன் வாழ்க ;
ஏதிலார் தமக்கு ஏதிலன் வாழ்க ;
கடியவன் வாழ்க ; கணநாதன் வாழ்க ;
படிறன் வாழ்க ; பசுபதி வாழ்க ;
வேண்டுவார் வேண்டுவ தீவோன் வாழ்க ;
தூண்டா விளக்கினற் சோதீ வாழ்க ;

அறுவகைச் சமயமும் அருளினன் வாழ்க;
உறுதுணை யாவோன் வாழ்க; ஊனம்
இல்லவன் வாழ்க; இசைப்பயன் வாழ்க;
தொல்லை நம்பன் வாழ்க; தொழுதேத்த
நின்றவன் வாழ்க; நித்தன் வாழ்க;
சென்றடை யாத திருவின் வாழ்க;
நன்பொருள் பயந்தான் வாழ்க; நம்புவார்க்கு
அன்பன் வாழ்க; அக்கர வர்த்தீ
விமலன் வாழ்க; விண்ணவன் வாழ்க;
நிமலன் வாழ்க; நிராமயன் வாழ்க;
பின்னையாய் முன்னமே முளைத்தான் வாழ்க;
வன்னிசேர் சடையான் வாழ்க; வானவர்
மருந்தே வாழ்க; மஞ்சனே வாழ்க;
அருந்துணை வாழ்க; அன்பர் சிந்தைத்
திறத்தினன் வாழ்க; தேசன் வாழ்க;
அறத்தினன் வாழ்க; அரையன் வாழ்க;
விச்சின்றி நாறு செய்பவன் வாழ்க;
பிச்சன் வாழ்க; பெண்ணுருவன் வாழ்க; —400

## 3

அண்டகோ சரத்தின் உள்ளான் வெல்க;
இண்டைச் சடையான் வெல்க; இலைபுனை
வேலன் வெல்க; வில்லீ வெல்க;
சூலப் படையான் வெல்க; சுந்தரச்
சோதீ வெல்க; சுண்ணவெண் நீறணி
ஆதி வெல்க; ஆத்தன் வெல்க;
திரிதரு முப்புரம் செற்றவன் வெல்க;
பிரமன் சிரம்பீ பழித்தான் வெல்க;
சூர்தடி சேர்ந்தன் தாதை வெல்க;
தாரணி மார்பன் வெல்க; சாம
வேதம் பெரிதும் உகப்பான் வெல்க:

பூத புராணன் வெல்க; பூசனை
உகப்பான் வெல்க; உடையான் வெல்க;
அகலா அன்பன் வெல்க; அங்கைத்
தீயன் வெல்க; திப்பிய மூர்த்தி
ஆயவன் வெல்க; ஆரணன் வெல்க;
எழுபிறப் பும்மெனை ஆண்டான் வெல்க;
தழல்போ லுந்திரு மேனியன் வெல்க;
தோழன் வெல்க; தொல்நெறி வெல்க;
ஊழி முதல்வன் வெல்க; ஓங்காரத்து
உருவன் வெல்க; உலவா இன்பம்
தருபவன் வெல்க; தந்தையு மாகிய
தன்மையன் வெல்க; தாயினும் நல்ல
இன்பன் வெல்க; இன்சுவை வெல்க;
ஓவாச் சுத்தத் தொலியே வெல்க;
கோவே வெல்க; கொடிமேல் ஏறு
கொண்டான் வெல்க; கோபன் வெல்க;
அண்டத் தப்பால் ஆனான் வெல்க;
உன்ன வினையைக் கெடுப்பான் வெல்க;
கின்னரம் வைத்தோன் வெல்க; கீர்த்தி
மிக்கான் வெல்க; மின்னினான் வெல்க;
தக்கான் வெல்க; தலையான் வெல்க;
தேடுவார் தேடும் பொருளே வெல்க;
பாடல் வீணையன் வெல்க; பலபல
சரிதையன் வெல்க; சாம்பலான் வெல்க;
உரையில் நல்ல பெருமான் வெல்க;
உலகம் விளக்கும் ஞாயிறு வெல்க;
நலமலி கொள்கையன் வெல்க; நல்குரவும்
தீப்பிணி நோயும் காப்பான் வெல்க;
பூப்பிணை திருவடிப் புகழவன் வெல்க;
இறப்பிலான் வெல்க; இயமானன் வெல்க;
மறப்பிலி வெல்க; மறையோர் புகழும்

விருத்தன் வெல்க ; விருப்பன் வெல்க ;
வருத்தம் களைவான் ; வெல்க ; வரமலி
வாணன் வெல்க ; வையன் வெல்க ;
தோணியும் ஏணியும் ஆனவன் வெல்க ;
நான்முகன் வெல்க ; நாரணன் வெல்க ;
தேனன் வெல்க ; தேவர்பிரான் வெல்க ;
வாராச் செல்வம் வருவிப்பான் வெல்க ;
நீரான் வெல்க ; நெஞ்சிட மாக
நண்ணுவான் வெல்க ; நந்தீ வெல்க ;
பண்ணி டைத்தமிழ் ஒப்பான் வெல்க ;
மந்திரம் ஆனான் வெல்க ; மந்திரமும்
தந்திரம் தானும் ஆனான் வெல்க ;
மான வாழ்க்கைய துடையவன் வெல்க ;
ஏனத் தெயிற்றான் வெல்க ; இலங்கை
அரயன் வலிசெற் றருளினான் வெல்க ;
எரியினான் வெல்க ; எழிலான் வெல்க ;
வேள்வி தகர்த்தான் வெல்க ; வேத
வேள்விக் கேள்வி யானான் வெல்க ;
வேடன் வெல்க ; வேணியன் வெல்க ;
நாடுடையான் வெல்க ; நாதன் வெல்க ;
அங்கையன் வெல்க ; அயன்மால் காணா
அங்கியின் உருவன் வெல்க ; ஆயிரம்
முடியான் வெல்க ; முத்தன் வெல்க ;
நடமா டுஞ்சிவன் வெல்க ; நன் பாட்டுப்
புலவன் வெல்க ; புராணன் வெல்க ;
சிலந்திக் கருள்முனம் செய்தான் வெல்க ;
எப்பொருட் கும்பொது வானான் வெல்க ;
ஒப்பில் குணத்தான் வெல்க ; ஒளிநிற
வண்ணன் வெல்க ; வரதன் வெல்க ;
எண்ணில் ஈரம் உடையவன் வெல்க ;
காளி காணநடம் ஆடினோன் வெல்க ;

தாளம் குழல்யாழ் கொண்டோன் வெல்க;
தற்பர மாகும் தற்பரம் வெல்க;
நற்பொ ருட்பத மாவான் வெல்க;
பஞ்ச மந்திரம் ஓதுவான் வெல்க;
செஞ்சொலன் வெல்க; சேயான் வெல்க;
உணர்வவன் வெல்க; ஊனவன் வெல்க;
உணர்வினுள் நின்றான் வெல்க; உலகெலாம்
ஈன்றவன் வெல்க; ஈசன் வெல்க;
தோன்றல் வெல்க; தூமணி வெல்க;
ஊழி யளக்க வல்லான் வெல்க;
வாழியன் வெல்க; வானவன் வெல்க;
அமரர்கள் அர்ச்சிதன் வெல்க; அமரர்க்
கமரன் வெல்க; அருத்தன் வெல்க;
கல்வி ஞானக் கலைப்பொருள் வெல்க;
தொல்புக ழுடையான் வெல்க; தொண்டர்
துணையான் வெல்க; தூயான் வெல்க;
அணியான் வெல்க; அமலன் வெல்க;
வீணையில் மேவிய கீதன் வெல்க;
தாணுவே வெல்க; தம்மான் வெல்க;
தேவர் தங்குலக் கொழுந்தே வெல்க;
காவன் வெல்க; காதலிப் பவர்க்கு
எளியன் வெல்க; எம்பிரான் வெல்க;
இளரொளி வெல்க; கீதத்தான் வெல்க;
சிறியவர் சிந்தைசெய அரியவன் வெல்க;
நெறியே வெல்க; நிறைவே வெல்க;
பல்லூழி கண்டு நின்றவன் வெல்க;
நல்லவா நெறிகாட்டு விப்பான் வெல்க;
அடியார் அடிமை உகப்பான் வெல்க;
கடுவினை களைய வைத்தான் வெல்க;
மங்கை கெழுவிய யோகியரன் வெல்க;
எங்கும் ஆகி நின்றான் வெல்க;

சமய மாறுகந்த தலைவன் வெல்க ;
தமருகக் கரத்தான் வெல்க ; புலனைந்தும்
வென்றான் வெல்க ; வேதவே தாந்தனாய்
ஒன்றினான் வெல்க ; உமையாள் கொண்ட
ஊடலை ஒழிக்கச் சாம வேதம்
பாடினான் வெல்க ; பண்ட ரங்கன் வெல்க ;
முயலகன் மேல்தாள் வைத்தான் வெல்க ;
கயிலையான் வெல்க ; கங்காளன் வெல்க ;
ஆர்வன் வெல்க ; ஆரியன் வெல்க ;
சார்தற் கரியவன் வெல்க ; சரிதைத்
தொழிலன் வெல்க ; தொன்னூலன் வெல்க ;
கழலன் வெல்க ; கருத்தன் வெல்க ;
செந்நெறிச் செல்வன் வெல்க ; மூவரில்
முன்னவன் வெல்க ; முக்குணன் வெல்க ;
தெள்ளியான் வெல்க ; தெருட்டன் வெல்க ;
நள்ளிருள் நடனம் புரிவான் வெல்க ;
தந்திரன் வெல்க ; சமாதி செய்பவர்
புந்தியான் வெல்க ; புனிதன் வெல்க ;
மெய்யிலார் தமக்குப் பொய்யன் வெல்க ;
மெய்யர் மெய்ப்பொருள் வெல்க ; மேலை
விதியே வெல்க ; விண்ணவர் தங்கள்
நிதியே வெல்க ; நிலையான் வெல்க ;
மாயனைப் பாகங் கொண்டான் வெல்க ;
தாயவன் வெல்க ; தனியன் வெல்க ;
கொல்லிப்பண்ணை உகந்தான் வெல்க ;
பல்லியம் பாடினான் வெல்க ; பரமாய
பண்பன் வெல்க ; பரஞ்சோதி வெல்க ;
நண்பன் வெல்க ; நல்லார் நன்மை
அறிவான் வெல்க ; அல்லான் வெல்க ;
சிறியான் வெல்க ; சிற்றம்பலன் வெல்க ;
பேரமு தின்சுவை வெல்க ; பிறவியின்

வேரறுப் பவனே வெல்க; வேதமொடு
ஏழிசை பாடுவான் வெல்க; ஊழிதோ
றூழி யுயர்ந்தான் வெல்க; பேணாரைப்
பேணான் வெல்க; பேரொளி வெல்க;
பாணியல் தூமொழி வெல்க; படர்சடை
எட்டுடையான் வெல்க; எழுத்தான் வெல்க;
கட்டக் கடுவினை காப்பான் வெல்க;
நாடறி புகழன் வெல்க; ஞான
வேடன் வெல்க; விகிர்தன் வெல்க;
வைச்ச மாநிதி வெல்க; வானவர்
அச்சம் தீர்ப்பவன் வெல்க; அகலிடம்
தாங்கினான் வெல்க; தமிழன் வெல்க;
தீங்கரும் பனையன் வெல்க; தேவர்கள்
சிங்கம் வெல்க; சிவலோகன் வெல்க; 600

## 4

அங்கணன் அருள்க; அவிநாசி அருள்க;
சித்தித் திறங்கள் காட்டுவான் அருள்க;
வித்தகன் அருள்க; வீரன் அருள்க;
அறிதற் கரியசீ ரம்மான் அருள்க;
துறவா தேகட்ட றுத்தான் அருள்க;
தூநெறிக் குந்தூ நெறியான் அருள்க;
ஆனையின் ஈருரி போர்த்தான் அருள்க; 609
நணியான் அருள்க; நாயகன் அருள்க;
பிணியிலான் அருள்க; பிணிதீர்ப்பான் அருள்க;
போகமும் திருவும் புணர்ப்பான் அருள்க;
நாகம் வைத்த முடியான் அருள்க;
நோயிலான் அருள்க; நொய்யவன் அருள்க;
ஆயிரம் பேருகந் தவனே அருள்க;
ஏற்றாய் அருள்க; ஏகபாத அருள்க;
கூற்றுக் கும்மொரு கூற்றே அருள்க;

சாரணா அருள்க; சயம்புவே அருள்க;
ஆரணப் பொருளே அருள்க; ஆகாய
மூர்த்தி அருள்க; மூப்பிலாய் அருள்க;
தீர்த்தனே அருள்க; திசையவ அருள்க;
நித்த மணாளன் அருள்க; பித்தர்க்குப்
பித்தன் அருள்க; பிரானே அருள்க;
விண்ணவர் அண்ணா அருள்க; வெள்ளேற்று
அண்ணல் அருள்க; அசங்கைய அருள்க;
இறப்பொடு பிறப்பொன் றில்லவ அருள்க;
மறைப்பொருள் அருள்க; மருள்நீக்கி அருள்க;
பகவன் அருள்க; பாங்கன் அருள்க;
நகுவெண் தலையன் அருள்க; நட்டப்
பெருமான் அருள்க; பீடுடையான் அருள்க;
அருமையன் அருள்க; அனகன் அருள்க;
உம்பரார் தலைவன் அருள்க; உம்பர்
தம்பிரான் அருள்க; தண்ணியான் அருள்க;
தோற்றமும் ஈறும் ஆனான் அருள்க;
காற்றவன் அருள்க; காடன் அருள்க;
குணப்பெருங் குன்றான் அருள்க; கூத்தாடும்
குணமுடை யவனே அருள்க; கொன்றைத்
தொங்கலான் அருள்க; துறந்தான் அருள்க;
கங்கை கரந்தான் அருள்க; கலைமலி
விரலினன் அருள்க; விடமுணி அருள்க;
உருகிலுள் உறைவான் அருள்க; உருகார்
உள்ளத்து நில்லான் அருள்க; செஞ்சடைமேல்
வெள்ளத்தை வைத்தான் அருள்க; வித்தினில்
முளையே அருள்க; முத்தே அருள்க;
இளஞா விற்றின் சோதியே அருள்க;
கற்றோர் களுக்கு அமுதே அருள்க;
நற்றுணை அருள்க; நானா விதமாம்
உருவன் அருள்க; உத்தமன் அருள்க;

குருவன் அருள்க ; குவலயன் அருள்க ;
கொக்கிற குச்சடை யுடையான் அருள்க ;
நக்கான் அருள்க ; நம்பரன் அருள்க ;
பஞ்சவடி மார்பன் அருள்க ; பரவுவார்
நெஞ்சினி லுள்ளான் அருள்க ; நிரூபியும்
ரூபியும் ஆனவன் அருள்க ; என்பே
ஆபரண மாக அணிந்தவன் அருள்க ;
கோணா தார்மனத் துள்ளான் அருள்க ;
நாணாய் நாகம் கொண்டான் அருள்க ;
கேள்வியான் அருள்க ; கேடிலி அருள்க ;
வேள்வியான் அருள்க ; விமலன் அருள்க ;
வேதியர் தொழுதெழும் அன்பன் அருள்க ;
வேத முதல்வன் அருள்க ; வேத
விதியன் அருள்க ; விருத்தன் அருள்க ;
மதியன் அருள்க ; மன்றாடி அருள்க ;
அடிமை அளப்பான் அருள்க ; அடியார்
குடியா கியவன் அருள்க ; குருமா
மணியே அருள்க ; மானேந்தி அருள்க ;
அணிவண் ணத்தாய் அருள்க ; அடியார்க்கு
எளியவ அருள்க ; இளையாய் அருள்க ;
வெளியாய் அருள்க ; வீட்டினை யருள
வல்லாய் அருள்க ; வரும்பயன் அருள்க ;
தொல்லை யூழியாய் நின்றாய் அருள்க ;
பட்ட நெற்றியன் அருள்க ; கொடிதுடி
கட்டங்க மேந்திய கையினன் அருள்க ;
செல்க திக்குவழி காட்டுவான் அருள்க ;
மெல்கிய விற்றொழில் வீரன் அருள்க ;
வாரிமத களிறனான் அருள்க ; வளிநீர்
மாருதம் தீமண் ணானான் அருள்க ;
பராவு வார்பிணி களைவான் அருள்க ;
சரா சரநற் றாயான் அருள்க ;

புகழே யல்லது பழியிலான் அருள்க;
சகல சேகரன் அருள்க; சாதி
கீத வர்த்த மானன் அருள்க;
வேத நாயகன் அருள்க; வேத
வித்தகன் அருள்க; விண்ணொளி அருள்க;
முத்தமிழ் நான்மறை யானான் அருள்க;
மூல மாய முதல்வன் அருள்க;
கால காலன் அருள்க; காள
கண்டன் அருள்க; கனலவன் அருள்க;
அண்டம தாயவன் அருள்க; அடியார்க்குப்
பரிபவன் அருள்க; பத்தன் அருள்க;
திருவன் அருள்க; தீரன்; அருள்க;
அணங்கன் அருள்க; அண்ணவன் அருள்க;
வணங்கவும் வாழ்த்தவும் உரியவன் அருள்க;
பெருந்துணை அருள்க; பெற்றியான் அருள்க;
இருந்தவன் அருள்க இன்பன் அருள்க;
சீலன் அருள்க சீரரசு அருள்க;
சூலம் வல்லான் அருள்க; சோதி
வானவன் அருள்க;. வானவர் கட்கும்
தானவன் அருள்க; தபோதனன் அருள்க;
தழலன் அருள்க; தலைமகன் அருள்க;
மழுவா ளுடையான் அருள்க; மறுமையும்
இம்மையு மாவான் அருள்க; இம்மையேத்த
அம்மை நல்குவான் அருள்க; அந்தமில்
பாடலன் அருள்க; பரமேட்டி அருள்க;
வேட வேடன் அருள்க; வேதியர்
நாயகன் அருள்க; நட்டவன் அருள்க;
வாய்மையன் அருள்க; வாமன் அருள்க;
வெய்யான் அருள்க; வென்றிவில்லி அருள்க;
செய்ய மேனியன் அருள்க; சிவ தன்மம்
உரைத்தவன் அருள்க; உறவான் அருள்க;

சிரித்தவன் அருள்க; சிவ மூர்த்தி அருள்க;
செண்டா டும்விடை யுடையான் அருள்க;
தொண்டர்க் கெளியான் அருள்க; தொண்டர்க்குத்
தூநெறி அருள்க; தூங்கான் அருள்க;
ஞானக் கடற்கொரு நாவாய் அருள்க;
குடமுழா மொந்தை குழல்கொடு கொட்டி
பிடவுமு மோங்க ஆடுவான் அருள்க;
தோற்று மேன்மையன் அருள்க; தூய
நீற்றான் அருள்க; நேசன் அருள்க;
உயிர்கட் கமுதே அருள்க; உயிர்க்கு
உயிராய் அங்கங்கு நின்றான் அருள்க;
கேடும் பிறவியு மாக்கினான் அருள்க;
வீடிலா வியன்புக ழுடையவன் அருள்க;
வையகம் காப்பவன் அருள்க; மழுப்படைக்
கையவன் அருள்க; கட்டரவினான் அருள்க;
சிந்தை கவர்வான் அருள்க; சிந்திப்பார்
சிந்தையில் உள்ளான் அருள்க; சிவலோக
நெறியான் அருள்க; நீருளான் அருள்க;
இறையவன் அருள்க; ஈனமிலி அருள்க;
சுடர்கொள் சோதி அருள்க; சுடலைப்
பொடிபூசி அருள்க; பூதநாதன் அருள்க;
மறையொலி நாவன் அருள்க; மறையாலும்
அறிய வொண்ணாக் கலையான் அருள்க;
பந்தித்த வினைபற் றறுப்பான் அருள்க;
செந்தீ வண்ணன் அருள்க; செம்பொன்
மேனி வெண்ணீ றணிவான் அருள்க;
ஞான வாழ்க்கையன் அருள்க; ஞானப்
பெருங்கடல் அருள்க; பெருமையன் அருள்க;
வரங்கள் கொடுப்பான் அருள்க; வழித்துணை
மருந்தே அருள்க; மாதனம் அருள்க;
பெருந்தவன் அருள்க; பேழ்வாய் நாக

வளையினன் அருள்க; வரியான் அருள்க;
எளிமையன் அருள்க; ஏதன் அருள்க;
குறைவிலா நிறைவே அருள்க; குழகல்து
அறியான் அருள்க; அருளாளன் அருள்க;
யானமுந் தற்பர மும்சதா சிவனும்
தானமு மாகிய தன்மையன் அருள்க; 800

## 5

சேவார் வெல்கொடி யுடையாய் செயசெய;
ஆவினில் ஐந்தும் அமர்ந்தவ செயசெய;
உறவனாய் நிறைந்துளம் குளிர்ப்பவ செயசெய;
நிறங்கிளர் குங்கும மேனியாய் செயசெய;
துன்பமு மின்பமும் காத்தவ செயசெய;
அன்பர் பாரமும் பூண்பாய் செயசெய;
அருளது பெருகும் கோல மேசெய;
திருவருள் சேரும் சேவக செயசெய;
பொன்னே செயசெய; புகழே செயசெய;
மன்னே செயசெய; மணியே செயசெய;
குன்று லாவிய புயமுடை யாய்செயசெய;
சென்றடைந் தார்தீ வினைதீர்ப் பாய்செய;
அங்கை நெல்லியின் பழத்தமு தேசெய;
கங்கை யாயிர முகமுடை யானைச்
சூடி செயசெய; சுவண்டா செயசெய;
கேடிலா மணிசெய; கிண்கிணி யாய்செய;
கமையாய் நின்ற கனலே செயசெய;
அமுதா செயசெய; அரவரை யாய்செய;
இசைகேட் போய்செய; இமையவர் கோன்செய;
பசுவே நீசெய; பசும்பொன் னேசெய;
வேதத் திரள்செய; வேதவித் தேசெய;
வேதவள மேவும் சிவனே செயசெய;
மாசிலா மணிசெய; மங்கைபங் காசெய;

ஆசறுத் தாய்செய ; ஆட்கொண் டாய்செய ;
சீலமுடை யாய்செய ; சிவனே செயசெய ;
ஆலநிழ லாய்செய ; ஆள்வா னேசெய ;
கோவின் மேல்வரும் கோவே செயசெய ;
ஆவா னாய்செய ; ஆரழ காசெய ;
நீறுபூ சீசெய ; நெய்யா டீசெய ;
மாறிலா மேனி யுடையாய் செயசெய ;
அரியாய் செயசெய ; அட்டமூர் த்திசெய ;
பரியாய் செயசெய ; பாவநா சாசெய ;
முதல்காண் பரிய பிரானே செயசெய ;
விதியாய் செயசெய ; விண்ணவர் அறியாச்
சூழலாய் செயசெய ; சூளா மணிசெய ;
ஆழித்தீ செயசெய ; ஆய்ந்தவ செயசெய ;
வினைகளை வாய்செய ; வினைப்பய னேசெய ;
இனியா செயசெய ; இயலிசை யாய்செய ;
ஓதா நாவா செயசெய ; கமலப்
பாதா செயசெய ; பவித்திர னேசெய ;
பரனே செயசெய ; பரமயோ கீசெய ;
அரனே செயசெய ; அருவே செயசெய ;
ஆதி முதல்வா செயசெய ; ஆதி
நாதனே செயசெய ; நன்றுடை யாய்செய ;
நல்வினை தீவினை யானாய் செயசெய ;
அல்லும் பகலுமாய் நின்றாய் செயசெய ;
உடலா னாய்செய ; உயிரா னாய்செய ;
கடலா னாய்செய ; மலையா னாய்செய ;
கரவார் பால்விர வும்பெரு மான்செய ;
மரவுரி யரைமிசை மருவி னாய்செய ;
பொய்யா நாவினாற் புகவார் மனத்துள்
மெய்யே நின்றெரி விளக்கே செயசெய ;
இழைக்கும் எழுத்துக் குயிரே செயசெய
குழைக்கும் பயிர்க்கொரு புயலே செயசெய ;

அனலுரு வாசெய ; அனலா டீசெய ;
நினைவார் நினைய இனியாய் செயசெய ;
உமைகேள் வாசெய ; உம்பரா தீசெய் ;
நமையாள் வாய்செய ; நால்வே தாசெய ;
உள்ளங் கவரும் கள்வா செயசெய ;
உள்ளத் துள்ளொளி யாவாய் செயசெய ;
வானுடை யாய்செய ; வாட்படை யாய்செய ;
ஞானநா யகசெய ; ஞானத் திரள்செய ;
நலமரு ளீசெய ; நடுந்தகை யாய்செய ;
அலங்க லாய்செய ; அருமறை யேசெய ;
தயங்குசோ திசெய ; தண்மதி யாய்செய ;
இயம்பகா செய ; தீயதில் லாய்செய ;
நுண்ணியா செய ; நோய் அகலநின் றாய்செய ;
விண்ணினாய் செயசெய ; விண்ணொளி யேசெய ;
விருத்த னாகிய பாலகன் செயசெய ;
உருத்திர மூர்த்தி செய ; உலகுக் கோர்
கண்ணே செயசெய ; கடவுளே செயசெய ;
திண்ணி யாய்செய ; தீதிலா மலைசெய ;
குறட் பூதப்படைச் செல்வா செயசெய ;
கறைப்பெருங் கண்டத்தவனே செயசெய ;
பரசுபா ணிசெய ; பரமேச்சு ராசெய ;
எரியேந் திசெய ; இடர்களை வாய்செய ;
வருகா லம்செல் காலமா வாய் செய ;
புரிவுடை யாய்செய ; புலியத ளாய்செய ;
பத்தர் சித்தம் பற்றுவி டாய்செய ;
புத்தகங் கொண்ட கையினாய் செயசெய ;
சாத்தனை மகனா வைத்தாய் செயசெய ;
கூத்தா செயசெய ; கோலவில் லீசெய ;
அறமுறைத் தருளிய பட்ட னேசெய ;
மறையோ தீசெய ; மனத்தாய் செயசெய ;
மனத்தில் நின்ற கருத்தாய் செயசெய ;

அனைத்துல கும்மாண் டருள்பவ னேசெய;
கற்றகல் வியினும் இனியாய் செயசெய;
முற்றிய ஞானத் தாய்செய; மூடர்சொல்
பண்டம தாக வையாய் செயசெய;
அண்டா செயசெய; அய்யா செயசெய;
மூதாயர் மூதாதை இல்லாய் செயசெய;
தூதா செயசெய துஞ்சலி லாய்செய;
நின்றசீ ராய்செய; நிருபா செயசெய;
குன்றி போன்றதோர் உருவா செயசெய;
குறையறிந் தருள்ப செய; கும ராசெய;
மறியேந் தீசெய; மாசது ராசெய;
மணியாகு பாவாய் செய; இனி திருந்த
மணியே செயசெய; மரகத மேசெய;
சுடர்வண் ணாசெய; சுருதியாய் செயசெய;
தடங்கட லேசெய; தஞ்சவண் ணாசெய;
சுவையொப் பாய்செய; சுடர்க்கண் ணாசெய;
அவியா வாய்செய; ஆடவல் லாய்செய;
சோதியாய் செயசெய; சுயம்பு வேசெய;
பாதிப் பெண்ணுரு வானாய் செயசெய;
தீயா னாய்செய; தீயுளாய் செயசெய;
நாயாடி யாய்செய; நஞ்சுண் டாய்செய;
பலிதேர் பவசெய; பராபர செயசெய;
உலகமூர்த் திசெய; உலகின் தாய்செய;
எட்டெட் டிருகலை யாவாய் செயசெய;
கொட்டும் பறையுடைக் கூத்தா செயசெய;
வகையால் பாம்பும் மதியும் புனலும்;
பகைதீர்த்து வைத்த பண்பா செயசெய;
தீவினை நாசனே செய; தீத்திரள் செய;
மூவனே செயசெய; மூலா செயசெய;
பூதிப் பையாய் செய; பூ ரணாசெய;
பூத முதல்வா செய; பூ வின்கண்

வாசா செயசெய; வழியாய் செயசெய;
காசா செய; குறிப் புணர்வாய் செயசெய;
சீரியாய் செயசெய; சேமநெறி யாய்செய;
நாரிபா காசெய; நல்வினைப் பயன்செய;
பரலோக நெறியைக் காட்டுவாய் செயசெய;
பரமா னந்தவெள் ளம்பணிப் பாய்செய;
மலையான் மருக செய; மஞ்சனமா
மலையே செயசெய; மதுரமே செயசெய;
ஆனை முகற்கு அப்பனே செயசெய;
ஞான முதல்வா செயசெய; ஞானப்
பேரா யிரத்தாய் செயசெய; பிறவியில்
சேராய் செயசெய; சேகுடை யாய்செய;
புகழ்த்தக் காய்செய; பூமா செயசெய;
சகல சிவாசெய; சைவா செயசெய;
வையகத் தாய்செய; வாக்கினு ளாய்செய;
கையெரி சூலம் ஏந்தீ செயசெய;
ஒளியாய் செயசெய; ஓசையாய் செயசெய;
அளியாய் செயசெய; அர்ச்சித் தேத்த
உரியவ செயசெய; உத்தரி யப்பட்
டரையினாய் செயசெய; அந்தி வட்டத்துத்
திங்கட் கண்ணியாய் செயசெய; ராஜ
சிங்கமே செய; நமச்சிவாய செயசெய; —1008

# விஷ்ணு ஸஹஸ்ர நாமம்

(திவ்யப் பிரபந்தத்தினின்றும் திரட்டியது)

---

அயர்வறும் அமரர்கள் அதிபதி போற்றி ;
உயர்வற உயர்நலம் உடையவ போற்றி ;
மயர்வற மதிநலம் அருளினாய் போற்றி ;
பயிலும் சுடரொளி மூர்த்தி போற்றி ;
பூமகள் நாயக போற்றி ; ஓசை
மாமத யானை உதைத்தவ போற்றி ;
அண்டக் குலத்துக் கதிபதி போற்றி ;
பிண்டமாய் நின்ற பிரானே போற்றி ;
அத்தா போற்றி ; அரியே போற்றி ; (10)
பத்துடை யடியவர்க் கெளியாய் போற்றி ;
அகவுயிர்க் கமுதே போற்றி ; மாயச்
சகடம் உதைத்தாய் போற்றி ; ஞானச்
சுடரே போற்றி ; சொல்லுளாய் போற்றி ;
உடையாய் போற்றி ; உத்தமா போற்றி ;
அதிர்குரல் சங்கத் தழகா போற்றி ;
கதியே போற்றி ; கரியாய் போற்றி ; (20)
குறளாய் போற்றி ; குருமணி போற்றி ;
மறையாய் போற்றி ; மாதவா போற்றி ;
அந்தணர் வணங்கும் தன்மைய போற்றி ;
சிந்தனைக் கினியாய் போற்றி ; சிற்றுயர்
சிங்கமே போற்றி ; சேயோய் போற்றி ;
அங்கதிர் அடியாய் போற்றி ; அசுரர்கள்
நஞ்சே போற்றி ; நாதா போற்றி ;
பஞ்சவர் தூதா போற்றி ; பாரிடம்
கீண்டவ போற்றி ; கேசவா போற்றி ;
நீண்டாய் போற்றி ; நிமலா போற்றி ;

முதல்வா போற்றி ; முத்தா போற்றி ;
அழகா போற்றி ; அமுதே போற்றி ;
கஞ்சனைக் காய்ந்த காளாய் போற்றி ;
அஞ்சனக் குன்றே போற்றி ; அஞ்சன
வண்ணா போற்றி ; வள்ளலே போற்றி ;
அண்ணா போற்றி ; அண்ணலே போற்றி ;
அச்சுதா போற்றி ; அச்சனே போற்றி ;
அச்சுவைக் கட்டியே போற்றி ; அந்தணர்
சிந்தையாய் போற்றி ; சீதரா போற்றி ;
அந்த முதல்வா போற்றி ; அந்தரம்
ஆனாய் போற்றி ; அருவா போற்றி ;
வானே தருவாய் போற்றி ; வேதப்
பிரானே போற்றி ; பிறப்பிலி போற்றி ;
இராமா போற்றி ; இறைவா போற்றி ;
வக்கரன் வாய்முன் கீண்டவ போற்றி ;
அக்கா ரக்கனி போற்றி ; அங்கண்
நாயக போற்றி ; நம்பீ போற்றி ;
காய்சின வேந்தே போற்றி ; அங்கை
ஆழிகொண் டவனே போற்றி ; அந்தமில்
ஊழியாய் போற்றி ; உலப்பிலாய் போற்றி ;
காரணா போற்றி ; கள்வா போற்றி ;
சீரணா போற்றி ; சேவகா போற்றி ;
உரையார் தொல்புகழ் உத்தம போற்றி ;
அரையா போற்றி ; அண்டா போற்றி ;
அந்தமில் ஆதியம் பகவனே போற்றி ;
அந்தணர் அமுதே போற்றி ; ஆநிரை
காத்தாய் போற்றி ; கருமணி போற்றி ;
கூத்தா போற்றி ; குறும்பா போற்றி ;
ஆவலன் புடையார் மனத்தாய் போற்றி ;
மூவர்கா ரியமும் திருத்துவாய் போற்றி ;
மூதறி வாளனே போற்றி ; முதுவேத

கீதனே போற்றி ; கேடிலி போற்றி ;
அடர்பொன் முடியாய் போற்றி ; மென்தளிர்
அடியாய் போற்றி ; அமலா போற்றி ;
அடிமூன் றிரந்தவன் கொண்டாய் போற்றி ;
கடவுளே போற்றி ; கண்ணாவாய் போற்றி ;
அரவப் பகையூர் பவனே போற்றி ;
குரவை கோத்த குழகா போற்றி ;
அலரே போற்றி ; அரும்பே போற்றி ;
நலங்கொள் நாத போற்றி ; நான்மறை
தேடி ஓடும் செல்வா போற்றி ;
ஆடா வமளியில் துயில்வோய் போற்றி ;
மூன்றெழுத் தாய முதல்வா போற்றி ;
தோன்றல் போற்றி ; துப்பனே போற்றி ;
அலமும் ஆழியும் உடையாய் போற்றி ;
கலந்தவர்க் கருளும் கருத்தாய் போற்றி ;
அணிவரை மார்ப போற்றி ; அரிகுலம்
பணிகொண் டலைகடல் அடைத்தாய் போற்றி ;
அரிமுக போற்றி ; அந்தணா போற்றி ;
உரகமெல் லணையாய் போற்றி ; உலகம்
தாயவ போற்றி ; தக்காய் போற்றி ;
ஆயர்தம் கொழுந்தே போற்றி ; யார்க்கும்
அரியவ போற்றி ; அப்பனே போற்றி ;
கரநான் குடையாய் போற்றி ; கற்பகக்
காவன நற்பல தோளாய் போற்றி ;
ஆவினை மேய்க்கும்வல் லாயா போற்றி ;
ஆலநீள் கரும்பே போற்றி ; அலையார்
வேலை வேவவில் வளைத்தாய் போற்றி ;
அப்பிலா ரழலாய் நின்றாய் போற்றி ;
செப்பம துடையாய் போற்றி ; சேர்ந்தார்
தீவினை கட்கரு நஞ்சே போற்றி ;
காவல போற்றி ; கற்கீ போற்றி ;

குன்றால் மாரி தடுத்தவ போற்றி ;
நன்றெழில் நாரண போற்றி ; நந்தா
விளக்கே போற்றி ; வேதியா போற்றி ;
அளப்பரு வேலையை அடைத்தாய் போற்றி ;
சீலா போற்றி ; செல்வா போற்றி ;
பாலா லிலையில் துயின்றாய் போற்றி ;
மிக்காய் போற்றி ; மெய்யாய் போற்றி ;
சக்கரச் செல்வா போற்றி ; நல்னுடை
ஒருவா போற்றி ; ஒண்சுடர் போற்றி ;
அருமறை தந்தாய் போற்றி ; ஆணிச்
செம்பொன் மேனி எந்தாய் போற்றி ;
எம்பிரான் போற்றி ; எங்கோன் போற்றி ;
உறவு சுற்றம் ஒன்றிலாய் போற்றி ;
பிறர்களுக் கரிய வித்தகா போற்றி ;
பரமா போற்றி ; பதியே போற்றி ;
மரகத வண்ணா போற்றி ; மறைவார்
விரிந்த விளக்கே போற்றி ; மன்றில்
குரவை பிணைந்த மாலே போற்றி ;
போதலர் நெடுமுடிப் புண்ணிய போற்றி ;
மாதுகந்த மார்பா ; போற்றி ; முனிவார்
விழுங்கும் கோதிலன் கனியே போற்றி ;
அழக்கொடி யட்டாய் போற்றி ; அறுவகைச்
சமயமும் அறிவரு நிலையினாய் போற்றி ;
அமரர்க் கமுதம் ஈந்தோய் போற்றி ;
ஆதியஞ் சோதி போற்றி ; ஆதி
பூதனே போற்றி ; புராண போற்றி ;
புனிதா போற்றி ; புலவா போற்றி ;
தனியா போற்றி ; தத்துவா போற்றி ;
நச்சுவா ருச்சிமேல் நிற்பாய் போற்றி ;
நிச்சம் நினைவார்க் கருள்வாய் போற்றி ;
ஆளரி போற்றி ; ஆண்டாய் போற்றி ;

வாளரக்க ருக்கு நஞ்சே போற்றி;
விகிர்தா போற்றி; வித்தகா போற்றி;
உகங்கள் தொறுமுயிர் காப்பாய் போற்றி;
மல்லா போற்றி; மணாளா போற்றி;
எல்லாப் பொருளும் விரித்தாய் போற்றி;
வையந் தொழுமுனி போற்றி; சக்கரக்
கையனே போற்றி; கண்ணா போற்றி;
குணப்பரா போற்றி; கோளரி போற்றி;
அணைப்பவர் கருத்தாய் போற்றி; அந்தணர்
கற்பே போற்றி; கற்பகம் போற்றி;
அற்புதா போற்றி; அற்றவர் கட்கரு
மருந்தே போற்றி; மருத்துவ போற்றி;
இருங்கை மதகளி றீர்த்தாய் போற்றி;
உள்ளுவார் உள்ளத் துறைவாய் போற்றி;
தெள்ளியார் கைதொழும் தேவனே போற்றி;
வாமா போற்றி; வாமனா போற்றி;
ஆமா றறியும் பிரானே போற்றி;
ஓரெழுத் தோருரு வானவ போற்றி;
ஆரெழில் வண்ண போற்றி; ஆரா
அமுதே போற்றி; ஆதீ போற்றி;
கமலத் தடம்பெருங் கண்ணா போற்றி;
நண்ண லரிய பிரானே போற்றி;
கண்ணுதல் கூடிய அருத்தா போற்றி;
தொல்லையஞ் சோதி போற்றி; ஞானம்
எல்லையி லாதாய் போற்றி; கவிக்கு
நிறை பொருள் போற்றி; நீதியே போற்றி;
அறந்தா னாகித் திரிவாய் போற்றி;

## 2

புறந்தொழு வார்க்குப் பொய்யன் வாழ்க;
மன்றும லர்ச்சுடர் வாழ்க; மறையோர்

கண்ணான் வாழ்க ; கவியுளான் வாழ்க ;
பண்ணுளான் வாழ்க ; பண்பன் வாழ்க ;
மண்மகள் கேள்வன் வாழ்க ; மாக
விண்முதல் நாயகன் வாழ்க ; வித்தகப்
பிள்ளை வாழ்க ; பித்தன் வாழ்க ;
ஒள்ளியான் வாழ்க ; உயர்ந்தான் வாழ்க ;
மண்பகர் கொண்டான் வாழ்க ; நறுவிய
தண்துழாய் வேதியன் வாழ்க ; மண்புரை
வையம் இடந்த வராகன் வாழ்க ;
அய்யன் வாழ்க ; ஆத்தன் வாழ்க ;
பரிவாய் கீண்ட சீரான் வாழ்க ;
கரிய முகில்புரை மேனியன் வாழ்க ;
கலையார் சொற்பொருள் வாழ்க ; தெய்வத்
தலைவன் வாழ்க ; தஞ்சன் வாழ்க ;
பண்புடை வேதம் பயந்தான் வாழ்க ;
வெண்புரி நாலுடை மார்பன் வாழ்க ;
தனிமாத் தெய்வம் வாழ்க ; அமரர்
முனிவர் விழுங்குங்கன் னற்கனி வாழ்க ;
ஏழு மறைப்பொருள் வாழ்க ; இறப்பெதிர்
காலக் கழிவும் ஆனவன் வாழ்க ;
இன்பன் வாழ்க ; ஈசன் வாழ்க ;
அன்பன் வாழ்க ; அறவன் வாழ்க ;
அறமுய லாழிப் படையவன் வாழ்க ;
உறியார் வெண்ணெயுண் டுகந்தான் வாழ்க ;
செந்தமிழ் பாடுவார் தேவன் வாழ்க ;
சுந்தரன் வாழ்க ; சூழ்ச்சி ஞானச்
சுடரொளி வாழ்க ; சோதீ வாழ்க ;
உடன்மிசை உயிரெனக் கரந்தோன் வாழ்க ;
ஆடற் பறவையன் வாழ்க ; எடுப்பும்
ஈடுமில் ஈசன் வாழ்க ; உட்குடை
அசுரர் உயிரெலா முண்டவன் வாழ்க ;

பசுநிரை தொலைவு தவிர்த்தான் வாழ்க ;
எண்ணம் புகுந்து திதிப்போன் வாழ்க ;
எண்ணன் வாழ்க ; எண்ணுவா ரிடரைக்
களைவான் வாழ்க ; கற்றூயன் வாழ்க ;
இளரொளி மாயன் வாழ்க ; காள
மேகம் வாழ்க ; மெய்ம்மை வாழ்க ;
நாக நடுக்கம் தீர்த்தான் வாழ்க ;
வேதன் வாழ்க ; வீடுடையான் வாழ்க ;
போதகம் வீழப் பொருதான் வாழ்க ;
வைய முதல்வன் வாழ்க ; ஆண்டளக்கும்
ஐயன் வாழ்க ; அரங்கன் வாழ்க ;
ஆற்ற நல்வகை காட்டுவோன் வாழ்க ;
ஊற்றம் உடையான் வாழ்க ; செங்கட்
கருமுகில் வாழ்க ; காரணம் கிரிசை
கரும முதல்வன் வாழ்க ; கன்னலின்
கட்டியே வாழ்க ; கரிய குழலுடைக்
குட்டன் வாழ்க ; கூற்றம் வாழ்க ;
கருவினை வண்ணன் வாழ்க ; கருமமும்
கரும பலனும் ஆவோன் வாழ்க ;
தேவர் விருத்தன் வாழ்க ; தேவர்க்கும்
தேவன் வாழ்க தெய்வம் மூவரில்
முதல்வன் வாழ்க ; முகுந்தன் வாழ்க ;
சதிரன் வாழ்க ; சந்தோகன் வாழ்க ;
சுடர்கொள் சோதீ வாழ்க ; கடலுள்
கிடந்தவன் வாழ்க ; கேழல் வாழ்க ;
பவித்திரன் வாழ்க ; பரபரன் வாழ்க ;
திவத்தை யருள்பவன் வாழ்க ; கணக்கறு
நலத்தனன் வாழ்க ; நம்பன் வாழ்க ;
நிலத்திடைக் கீண்ட அம்மான் வாழ்க ;
பீதக ஆடையன் வாழ்க ; வேள்வியும்
வேதமு மானான் வாழ்க ; வேண்டிற்று

எல்லாம் தருபவன் வாழ்க ; யார்க்கும்
நல்லான் வாழ்க ; நம்பிரான் வாழ்க ;
கூடாரை வெலுஞ்சீர்க் கோவிந்தன் வாழ்க ;
ஓடாப் படையான் வாழ்க ; கண்ணிக்
குறுங்கயிற் றாற்கட் டுண்டவன் வாழ்க ;
நிறங்கிளர் சோதி நெடுந்தகை வாழ்க ;
பிறப்பொடு மூப்பொன் றில்லவன் வாழ்க ;
மறைப்பொருள் வாழ்க ; மாயன் வாழ்க ;
மன்ற மரக்கூத் தாடினான் வாழ்க ;
என்றும் அரியான் வாழ்க ; ஆழியால்
அன்றங் காழியை மறைத்தான் வாழ்க ;
வென்றிநீர் மழுவன் வாழ்க ; வினைதீர்
மருந்தே வாழ்க ; மணியே வாழ்க ;
அருந்தேவன் வாழ்க ; அழகன் வாழ்க ;
அன்னமாய் அருமறை பயந்தான் வாழ்க ;
தன்னடி யார்மனத் தென்றும்தேன் வாழ்க ;
மனத்துக் கினியான் வாழ்க ; மாசற்றார்
மனத்துளான் வாழ்க ; மணிக்குன்று வாழ்க ;
மதிகோள் விடுத்த தேவன் வாழ்க ;
மதியில் நீசர்சென் றடையான் வாழ்க ;
முடிகளா யிரத்தான் வாழ்க ; அவனி
அடிமூன் றிரந்து கொண்டவன் வாழ்க ;
அமுதங் கொண்டான் வாழ்க ; அமரர்தம்
அமுதே வாழ்க ; அறிவன் வாழ்க ;
ஆயிரம் பேருடை யம்மான் வாழ்க ;
ஆயன் வாழ்க ; ஆதியான் வாழ்க ;
பணிலம் வாய்வைத்தான் வாழ்க ; கன்று
குணிலா எறிந்தான் வாழ்க ; கொள்ளக்
குறைவிலன் வாழ்க ; கோவலன் வாழ்க ;
மறுகலி லீசன் வாழ்க ; மறைநான்கும்
ஓதினான் வாழ்க ; ஊழி வாழ்க ;

ஆதியம் புருடன் வாழ்க ; ஆயர்க்கு
அதிபதி வாழ்க ; ஆளன் வாழ்க ;
நிதியன் வாழ்க ; நெடுமால் வாழ்க ;
படிவான மிறந்த பரமன் வாழ்க ;
தடவரைத் தோளன் வாழ்க ; தூய
பெருநீர் யமுனைத் துறைவன் வாழ்க ;
எரிநீர் வளிவான் மண்ணோன் வாழ்க ;
கல்விநாதன் வாழ்க ; பயில்நூல்
நல்யாழ் நரம்பின் முதிர்சுவை வாழ்க ;
பூவன் வாழ்க ; பூவனை மேவிய
தேவி மணாளன் வாழ்க ; மைதோய்
சோதி வாழ்க ; தூயான் வாழ்க ;
ஆதி வராகமும் ஆனோன் வாழ்க ;
ஆழியங் கையில் கொண்டான் வாழ்க ;
வேழப் போதகம் வாழ்க ; அசுரரைத்
துணிப்பான் வாழ்க ; துயக்கன் வாழ்க ;
கணக்கில் கீர்த்தியான் வாழ்க ; அடியார்க்கு
அருள்பவன் வாழ்க ; அண்டமூ டுருவப்
பெருந்திசை நிமிர்ந்தான் வாழ்க ; அஞ்சன
மேனியன் வாழ்க ; வெள்ளை மூர்த்தி
ஆனவன் வாழ்க ; அருங்கல வுருவின்
ஆயர் பெருமகன் வாழ்க ; தலைகண்
ஆயிர முடையான் வாழ்க ; அடியார்க்கு
மெய்யன் வாழ்க ; மின்னும் ஆழியங்
கையன் வாழ்க ; காலிகள் மேய்க்க
வல்லவன் வாழ்க ; வல்லான் வாழ்க ;
அல்லிக் கமலக் கண்ணன் வாழ்க ;
எய்ப்பினில் வைப்பே வாழ்க ; அண்டத்
தப்புறத் துய்த்திடும் ஐயன் வாழ்க ;
அணிகொள் மரகதம் வாழ்க; தாள் அடைந்தார்க்கு
அணியன் வாழ்க ; அனந்தன் வாழ்க ;

அமுதினு மாற்ற இனியான் வாழ்க ;
தமர்கட் கெளியான் வாழ்க ; தேவகி
சிறுவன் வாழ்க ; சிட்டன் வாழ்க ;
அறிவுப்பயன் வாழ்க ; ஆவி வாழ்க ;
வானோர் நாயகன் வாழ்க ; தனக்குத்
தானே உவமன் வாழ்க ; தேடற்கு
அரியவன் வாழ்க ; ஆட்கொள்ள வல்ல
பெருமான் வாழ்க ; பெருந்தகை வாழ்க ;
பேதியா இன்ப வெள்ளம் வாழ்க ;
வேதநல் விளக்கே வாழ்க ; வேதப்
புனிதன் வாழ்க ; புணைவன் வாழ்க ;
கனிவார் வீட்டு இன்பம் வாழ்க ;
கங்கை போதரக் கால்நிமிர்த்தான் வாழ்க ;
நங்கள் வைப்பும் வாழ்வும் வாழ்க ;
யாதவன் வாழ்க ; யாழிசை வாழ்க ;
ஆதியம் பெருமான் வாழ்க ; வேதம்
கண்டான் வாழ்க ; கைம்மா துன்பம்
விண்டான் வாழ்க ; விண்ணொளி வாழ்க ;
வில்லான் வாழ்க ; விபீட ணற்கு
நல்லான் வாழ்க ; நரநா ரணனாய்
அறநூல் விரித்தான் வாழ்க ; வேள்வியில்
குறளாய் நிமிர்ந்த வஞ்சன் வாழ்க ;
அஞ்சிறைப் புள்ளின் பாகன் வாழ்க ;
கஞ்சனை வஞ்சனை செய்தான் வாழ்க ;
அமரர் கோமான் வாழ்க ; என்றும்
இமையவர்க் கரியான் வாழ்க ; இமையவர்
குலமுதல் வாழ்க ; குலக்குமரன் வாழ்க ;
அலைகடல் வண்ணன் வாழ்க ; அலைகடற்
பள்ளியான் வாழ்க ; பரமேட்டி வாழ்க ;
வெள்ளத் தரவில் துயின்றான் வாழ்க ;
குன்றா ரும்திறல் தோளன் வாழ்க ;
கன்றால் விளவெறிந்த காளை வாழ்க. —400

3

மதகளி றன்னான் வெல்க ; மதுரைப்
பதியினன் வெல்க ; பத்தராவி வெல்க ;
அசுரர் கூற்றம் வெல்க ; மணித்தேர்
விசயற் கூர்ந்தான் வெல்க ; யசோதைதன்
சிங்கம் வெல்க ; சிலையாளன் வெல்க ;
செங்கதிர் முடியான் வெல்க ; அடலாழிப்
பிரான் வெல்க ; பீடுடையான் வெல்க ;
இராவ ணாந்தகன் வெல்க ; அந்தமில்
புகழான் வெல்க ; புன லுருவன் வெல்க ;
திகழும் பவளத் தொளியான் வெல்க ;
அந்தமிழ் இன்பப் பாவினன் வெல்க ;
இந்திரன் சிறுவன்தேர் முன்னின்றான் வெல்க ;
ஆநிரை மேய்த்தான் வெல்க ; வைத்த
மாநிதி வெல்க ; மண்ணிரந்தான் வெல்க ;
மத்த மாமலை தாங்கி வெல்க ;
சித்திரத் தேர்வலான் வெல்க ; சிற்றம்
இல்லவன் வெல்க ; இழுதுண்டான் வெல்க ;
மல்லரை யட்டான் வெல்க ; மாசறு
சோதீ வெல்க ; சுடர்விடு கமலப்
பாதன் வெல்க ; பகலாளன் வெல்க ;
படிக்கே ழில்லாப் பெருமான் வெல்க ;
இடிக்குர லினவிடை யடர்த்தான் வெல்க ;
அரட்டன் வெல்க ; அரியுருவன் வெல்க ;
இரட்டை மருதம் இறுத்தான் வெல்க ;
வாணன் தடந்தோள் துணித்தான் வெல்க ;
ஓணத்தான் வெல்க ; உந்தியில் அயனைப்
படைத்தான் வெல்க ; பருவரையாற் கடலை
அடைத்தான் வெல்க ; ஆழிசங்கு வாள்வில்
தண்டா திப்பல் படையான் வெல்க ;
அண்டமோ டகலிடம் அளந்தான் வெல்க ;

அரியுரு வாகி யந்தியம் போதில்
அரியை யழித்தவன் வெல்க ; அமரர்
பிதற்றும் குணங்கெழு கொள்கையன் வெல்க ;
மதியுடை அரற்கும் மலர்மகள் தனக்கும்
கூறு கொடுத்தருள் உடம்பன் வெல்க ;
ஏறும் இருஞ்சிறைப் புட்கொடியான் வெல்க ;
ஒத்தார் மிக்கார் இல்லவன் வெல்க ;
பத்திரா காரன் வெல்க ; பழமறை
தேடியுங் காணாச் செல்வன் வெல்க ;
ஆடும் கருளக் கொடியான் வெல்க ;
அடைந்தார்க் கணியன் வெல்க ; கடலைக்
கடைந்தான் வெல்க ; கட்கினியான் வெல்க ;
காண்டற் கரியவன் வெல்க ; புள்வாய்
கீண்டான் வெல்க ; கேடிலான் வெல்க ;
கையில் நீளுகிர்ப் படையான் வெல்க ;
வையம் அளந்தான் வெல்க ; யாவையும்
ஆனான் வெல்க ; அமுதுண்டான் வெல்க ;
ஊனா ராழிசங் குத்தமன் வெல்க ;
அவலம் களைவான் வெல்க ; என்றானும்
அவுணர்க் கிரக்கம் இலாதான் வெல்க ;
அறவ னாயகன் வெல்க ; மனத்து
அறமுடை யோர்கதி வெல்க ; அறுசுவை
அடிசில் வெல்க ; ஆதிப்பிரான் வெல்க ;
வடிசங்கு கொண்டான் வெல்க ; வண்புகழ்
நாரணன் வெல்க ; நாயகன் வெல்க ;
ஆர மார்பன் வெல்க ; அண்டர்
தங்கோன் வெல்க ; தம்பிரான் வெல்க ;
சங்க மிடத்தான் வெல்க ; சனகன்
மருமகன் வெல்க ; மதுசூதன் வெல்க ;
உருவு கரிய ஒளிவணன் வெல்க ;
எங்கும் பரந்த தனிமுகில் வெல்க ;

நங்கள் நாதன் வெல்க; நல்வினைக்கு
இன்னமுது வெல்க; ஏழிசை வெல்க;
பின்னை மணாளன் வெல்க; வலத்துப்
பிறைச்சடை மானை வைத்தவன் வெல்க;
நிறைஞானத் தொரு மூர்த்தீ வெல்க;
ஆலைகடற் கரைவீற் றிருந்தான் வெல்க;
சிலையால் மராமரம் சிதைத்தான் வெல்க;
அனந்த சயனன் வெல்க; இலங்கையைச்
சினந்தனால் செற்ற கோமகன் வெல்க;
ஆய்ப்பாடி நம்பி வெல்க; நஞ்சுகால்
பாப்பணைப் பள்ளி மேவினான் வெல்க;
உலகளிப் பானடி நிமிர்த்தான் வெல்க;
உலகமூன் றுடையான் வெல்க; உறங்குவான்
போல யோகுசெய் பெருமான் வெல்க;
காலசக் கரத்தான் வெல்க; காலநேமி
காலன் வெல்க; காமரூபி வெல்க;
பால்மதிக் கிடர் தீர்த்தவன் வெல்க;
பிறப்ப றுக்கும் பிரான் வெல்க;
மறைப்பெ ரும்பொருள் வெல்க; மனனுணர்
அளவிலன் வெல்க; அண்டவாணன் வெல்க;
வளரொளி யீசன் வெல்க; வருநல்
தொல்கதி வெல்க; தூமொழியான் வெல்க;
செல்வமல்கு சீரான் வெல்க; செற்றார்க்கு;
வெப்பம் கொடுக்கும் விமலன் வெல்க;
வைப்பே வெல்க; மருந்தே வெல்க;
வியலிட முண்டான் வெல்க; நமன்தமர்க்கு
அயர வாங்கரு நஞ்சன் வெல்க;
ஆய்மகள் அன்பன் வெல்க; வஞ்சப்
பேய்மகள் துஞ்சநஞ் சுண்டான் வெல்க;
அழகியான் வெல்க; அலங்காரன் வெல்க;
தழலைந் தோம்பி வெல்க; தக்கணைக்கு

மிக்கான் வெல்க; விண்ணவர் கோன்வெல்க;
திக்குநிறை புகழான் வெல்க; திருவாழ்
மார்பன் வெல்க; மதுரவாறு வெல்க;
கார்மலி வண்ணன் வெல்க; குவலயத்
தோர்தொழு தேத்தும் ஆதி வெல்க;
சீர்கெழு நான்மறை யானவன் வெல்க;
செங்கமல நாபன் வெல்க; நரங்கலந்த
சிங்கம் வெல்க; சிந்தை தன்னுள்
நீங்கா திருந்த திருவே வெல்க;
தேங்கோதநீர் உருவன் வெல்க;
பிள்ளையரசு வெல்க; பிள்ளைப்பிரான் வெல்க;
வெள்ளியான் வெல்க; வேதமயன் வெல்க;
வேல்வேந் தர்பகை கடிந்தோன் வெல்க;
ஆல்மேல் வளர்ந்தான் வெல்க; ஆழி
வலவன் வெல்க; வாயழகன் வெல்க;
நிலமுன மிடந்தான் வெல்க; நீலச்
சுடர்விடு மேனி யம்மான் வெல்க;
அடியார்க் கென்னை ஆட்படுத்தோன் வெல்க;
பாரதம் பொருதோன் வெல்க; பாரளந்த
பேரரசு வெல்க; பெற்றமானி வெல்க;
காளை யாய்க் கன்று மேய்த்தான் வெல்க;
கேளிணை ஒன்றும் இலாதான் வெல்க;
வேதத்து அமுதமும் பயனும் வெல்க;
வேத முதல்வன் வெல்க; வேதத்தின்
சுவைப் பயன் வெல்க; சுடரான் வெல்க;
நவின்றேத்த வல்லார் நாதன் வெல்க;
ஆதி மூர்த்தி வெல்க; அந்தியம்
போதில் அவுணனுடல் பிளந்தான் வெல்க;
ஆமையும் ஆனவன் வெல்க; துளவுசேர்
தாமநீண் முடியன் வெல்க; தனிப்பெரு
மூர்த்தி வெல்க; முண்டியான் சாபம்

தீர்த்தான் வெல்க ; தெய்வம் வெல்க ;
வளைவணற் கிளையவன் வெல்க ; தயிரொடு
அளைவெணெய் உண்டான் வெல்க ; மெய்ந்நலம்
தருவான் வெல்க ; சாமமா மேனி
உருவான் வெல்க ; உய்யவுலகு படைத்து
உண்டமணி வயிறன் வெல்க ; அண்டமாய்
எண்டிசைக் குமாதி வெல்க ; அண்டமாண்
டிருப்பான் வெல்க ; இருங்கைம் மாவின்
மருப்பொசித் திட்டான் வெல்க ; மரமெய்த
திறலான் வெல்க ; தீமனத் தரக்கர்
திறலை யழித்தான் வெல்க ; திருவின்
மணாளன் வெல்க ; மண்ணுயிர்க் கெல்லாம்
கணாளன் வெல்க ; கண்ணமுகன் வெல்க ;
கையொடு கால்செய்ய பிராஅன் வெல்க ;
வைகுந்த நாதன் வெல்க ; வைகுந்தச்
செல்வன் வெல்க ; செங்கணான் வெல்க ;
தொல்வினைத் துயரைத் துடைப்பான் வெல்க ;
கூரா ராழிப் படையவன் வெல்க ;
காரேழ் கடலேழ் மலையே ழுலகும்
உண்டும் ஆராத வயிற்றன் வெல்க ;
தொண்டர் நெஞ்சில் உறைவான் வெல்க ;
கொடைபுகழ் எல்லை யிலாதான் வெல்க ;
குடமாடு கூத்தன் வெல்க ; குவளை
மலர்வணன் வெல்க ; மண்கொண்டான் வெல்க ;
புலர்புசீர்ப் பூமி யளந்தவன் வெல்க ;
உலகுண்ட வாயன் வெல்க ; ஊழியேழ்
உலகுண் டுமிழ்ந்த ஒருவன் வெல்க ;
முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே வெல்க ;
கடல்படா அமுதே வெல்க ; ஆம்பொனின்
சுடரே வெல்க ; நற் சோதீ வெல்க ;

அமரர் முழுமுதல் வெல்க; அமரர்க்கு
அமுதம் ஊட்டிய அப்பன் வெல்க;
அமரர்க் கரியான் வெல்க; பொதிசுவை
அமுதம் வெல்க; அறமுதல்வன் வெல்க;
அயனை யீன்றவன் வெல்க; ஆலினிலைத்
துயின்றவன் வெல்க; துவரைக்கோன் வெல்க;
அரக்க னார்க்கழல் இட்டவன் வெல்க;
இருக்கினில் இன்னிசை யானான் வெல்க;
விழுக்கையாளன் வெல்க; துளவம்
தழைக்கும் மார்பன் வெல்க; அளத்தற்கு
அரியவன் வெல்க; அயோத்தி யுளார்க்கு
உரியவன் வெல்க; உயிரளிப்பான் வெல்க;
ஏழுல குக்குயிர் வெல்க; ஆற்றல்
ஆழியங் கையமர் பெருமான் வெல்க. —600.

## 4

திருமக ளார்தனிக் கேள்வன் அருள்க;
பெருநிலம் விழுங்கிய வாயன் அருள்க;
ஆலி னிலைப்பெரு மானே அருள்க;
மால்விடை ஏழ்செற் றவனே அருள்க;
தெள்ளிய சிங்கம் அருள்க; கொள்ளை
கொள்ளிக் குறும்பன் அருள்க; யார்க்கும்
அறிவரு மாயன் அருள்க; ஏழேழ்
பிறவி யறுப்பான் அருள்க; இமையவர்
தந்தைதாய் அருள்க; தவமுனி யருள்க;
எந்தையே அருள்க; எற்பரன் அருள்க;
ஓடியா இன்பப் பெருமையன் அருள்க;
படுகடல் அமுதே அருள்க; பத்தர்கள்
நுகர்கனி அருள்க; நூல்மார்ப அருள்க;
பகல்க ரந்தசுடர் ஆழியான் அருள்க;
ஆயர் பாடி விளக்கே அருள்க;

வாய்முதல் அப்பன் அருள்க; வானவர்
புகலிடம் அருள்க; புள்வலான் அருள்க;
வகையால் அவனி இரந்தான் அருள்க;
எங்கள்செல் சார்வே அருள்க; வடிவார்
சங்கம் கொண்டான் அருள்க; உலகுய்ய
நின்றான் அருள்க; நெடியான் அருள்க;
குன்றே குடையா எடுத்தான் அருள்க;
மழுவியல் படையான் அருள்க; வேதாந்த
விழுமிய பொருளான் அருள்க; வேத
முதற்பொருள் அருள்க; முனைவன் அருள்க;
மதனன் தன்னுயிர்த் தாதை அருள்க:
வானவர் கொழுந்தே அருள்க; மூவா
வானவன் அருள்க; வாசுதேவன் அருள்க;
வண்ணம் அழகிய நம்பி அருள்க;
எண்ணில் மூர்த்தி அருள்க; என்னுயிர்க்
காவலன் அருள்க; காகுத்தன் அருள்க;
கோவிந்தன் அருள்க; கோவர்த்தன் அருள்க;
சாம வேதியன் அருள்க; செய்ய
தாமரைக் கண்ணன் அருள்க; தாமரைத்
தாளான் அருள்க; தாசரதி அருள்க;
தோளா மாமணி அருள்க; தொண்டர்க்கு
இனியான் அருள்க; இருடிகேசன் அருள்க;
பனிமல ரான்வலம் கொண்டான் அருள்க;
கோல வராகன் அருள்க; கருமுகில்
போலும் உருவன் அருள்க; தொழுவார்
சிந்தை பிரியான் அருள்க; சேது
பந்தம் திருத்தினான் அருள்க; பத்தர்க்கு
அமுதே அருள்க; அளப்பில் ஆரமுதை
அமரர்க் கருளும் விளக்கே அருள்க;
நரனே அருள்க; நந்தகோ பன்இள.
வரசே அருள்க; ஐம்பால் ஓதியை

ஆகத்து இருத்தினான் அருள்க; கடலுள்
நாக மேந்தித் துயின்றான் அருள்க;
நாந்தக மேந்திய நம்பி அருள்க;
கூந்த லார்மகிழ் கோவலன் அருள்க;
குறியமா ணெம்மான் அருள்க; கூந்தல்வாய்
நெறியக் கீண்டான் அருள்க; நெறிமையால்
நினையவல் லார்கதி அருள்க; தன் அடியார்க்கு
இனியான் அருள்க; எனக்கரசு அருள்க;
துத்திசேர் நாகத்து அணையான் அருள்க;
அத்தம் அடுத்த பத்தாம் நாளில்
தோன்றினான் அருள்க; மூன்றினில் தோன்றி
மூன்றினில் மூன்றுரு வானான் அருள்க;
பாற்கடல் வண்ணன் அருள்க; சங்கோதப்
பாற்கடல் சேர்ப்பன் அருள்க; சார்ங்கவில்
கையன் அருள்க; கன்னல் அருள்க;
வெய்யவான் தண்டு சங்கு சக்கரம்
வில்லும் ஏந்துவோன் அருள்க; வீயா
மல்லலஞ் செல்வக் கண்ணன் அருள்க;
ஞானப் பிராஅன் அருள்க; பரி முகமாய்
ஞானக் கலைப்பொருள் அருளினான் அருள்க;
வெற்றிக் கருடக் கொடியான் அருள்க;
கற்றைக் குழலான் அருள்க; விடமுடைப்
பாம்பின் மேல்நடம் பயின்றான் அருள்க;
ஆமகிழ்ந் துகந்தவை மேய்ப்பான் அருள்க;
மும்மை மூர்த்தி அருள்க; இவ்வுலகில்
எம்மாண்பு மானான் அருள்க; என்னுடை
நாயகன் அருள்க; நான்மூர்த்தி அருள்க;
வேய்ங்குழ லூதும் வித்தகன் அருள்க;
ஆழியொன் றேந்திய கூற்றே அருள்க;
ஊழி பெயர்த்தான் அருள்க; ஒருநல்
சுற்றம் அருள்க; சுற்றுநின் றகலா

உற்றார் இலாத மாயவன் அருள்க;
உவணப் புள்ளேறி ஊர்வான் அருள்க;
அவுணன் உடலைப் பிளந்தவன் அருள்க;
அறிவினுக் கரிய பிரான் அருள்க;
குறிய மாணுருக் கூத்தன் அருள்க;
ஆதியும் அந்தமும் இல்லவன் அருள்க;
ஓதம் போல்கிளர் வேதநீரன் அருள்க;
ஆவிக் கொருகொள் கொம்பே அருள்க;
கோவி நாயகன் அருள்க; கூரார்
ஆழிபணி கொண்டவன் அருள்க; பிறவிகள்
ஏழும் அறுக்கும் சொல்லான் அருள்க;
தோற்றக் கேடவை இல்லவன் அருள்க;
ஆற்றல் மிகுந்த ஆற்றலான் அருள்க;
இம்மைக் கும்மினி ஏழேழ் பிறவி
அம்மைக் குங்கதி யாவான் அருள்க;
இமையோர்க் கரிய அப்பன் அருள்க;
இமையோர் நாயகன் அருள்க; இமையோர்
பெருமான் அருள்க; பெரியான் அருள்க;
அருமா மறைப்பண் ணகத்தான் அருள்க;
இலங்கு சோதியன் அருள்க; மதிள்நீர்
இலங்கை மாநகர் பொடித்தான் அருள்க;
இருளன மேனியான் அருள்க; சகடம்
உருள உதைத்தான் அருள்க; இன்னமுத
வெள்ளம் அருள்க; விமலன் அருள்க;
பள்ளிமா மாயன் அருள்க; பற்றிலார்
பற்றநின் றவன் அருள்க; மூவுலகும்
முற்ற விரிசுடர் முடியன் அருள்க;
இன்பப்பா அருள்க; இன்பவாறு அருள்க;
பொன்பெயரோன் நெஞ்சம் கீண்டான் அருள்க;
ஈட்டிய வெண்ணெய் உண்டவன் அருள்க;
தேட்ட ருந்திறல் தேனே அருள்க;

உணர்வினுக் கரியான் அருள்க; உருப்பிணி
அணிநெடுந் தோள்புணர்ந் தவனே அருள்க;
உலகு செய் பவன் அருள்க; ஏழுசேர்
உலகம் ஆண்டவன் அருள்க; உலகேழும்
புகக்க ரந்ததிரு வயிற்றான் அருள்க;
மகர நெடுங்குழைக் காதன் அருள்க;
எண்ணற் கரியான் அருள்க; கருமுகில்
வண்ணன் அருள்க; வரம்புக்கடங்கா
கீர்த்தியான் அருள்க; கேடிலா உணர்வின்
மூர்த்தியான் அருள்க; முற்ற மண்ணிடம்
தாவிவிண் ணுறநீண் டளந்தான் அருள்க;
ஏவரி வெஞ்சிலை வலவன் அருள்க;
உயர்வினை யேதரும் ஒண்சுடர் அருள்க;
உயர நின்றதோர் சோதீ அருள்க;
எளிவரும் இயல்வினன் அருள்க; ஞாலம்
அளந்திடந் துண்ட அண்ணல் அருள்க;
ஞாலம் தத்தும் பாதன் அருள்க;
ஞாலமுண் டுமிழ்ந்த மாஅல் அருள்க;
உம்பர் கோமான் அருள்க; துழாய்முடி
நம்பெரு மானே அருள்க; இலனது
உடையன் இதுவென நினைவரியான் அருள்க;
விடையேழ் வீயப் பொருதான் அருள்க;
மாகத் திளமதி சேர்சடை யானைப்
பாகத்து வைத்தான் அருள்க; ஞானத்தால்
ஆகத்து அணைப்பார்க்கு அருள்வான் அருள்க;
நாகத் தணையான் அருள்க; நற்பல
தாமரை நாண்மலர்க் கையவன் அருள்க;
தாமரை மின்னிடை நாயகன் அருள்க;
என்றும் இனியான் அருள்க; பலவென
ஒன்றென அறிவரும் வடிவினன் அருள்க;
என்னுடைச் சுற்றம் அருள்க; தொண்டர்க்

இன்னருள் புரிவோன் அருள்க; எந்நின்ற
யோனியு மாகிப் பிறந்தவன் அருள்க;
ஞானத் தின்னொளி உருவன் அருள்க;
ஏறு கேசவன் அருள்க; அன்றிலங்கை
நீறு செய்த வீரன் அருள்க;
எல்லாப் பொருட்கும் சேயான் அருள்க;
நல்லன நமக்கே தருவான் அருள்க;
எண்ணில் தொல்புக ழீசன் அருள்க;
நண்ணுவார் சிந்தை பிரியான் அருள்க;
குரங்கை யாளுகந்த கோமான் அருள்க;
விரிந்த புகழான் அருள்க; கைகழலா
நேமியான் அருள்க; நேசன் அருள்க;
மாமணி வண்ணன் அருள்க; சோத்தம்
பிரான் அருள்க; பெம்மான் அருள்க;
சராச ரத்தைவீ டேற்றினான் அருள்க;
எழிலேறு அருள்க; ஏகமூர்த்தி அருள்க;
தொழுவார் வினைகளைத் துடைப்பான் அருள்க;
முனிவர்க் கருள்தரும் தவமே அருள்க;
தனியேன் வாழ்முதல் அருள்க; வானுளார்
அறிய லாகா வானவன் அருள்க;
நிறைமூ வுலகுக்கும் நாயகன் அருள்க;
என்க விராக மிலாதான் அருள்க;
உள்கலந் தார்க்கோர் அமுதே அருள்க;
கொள்கை கொள்ளாமை யிலாதான் அருள்க;
அளிநன் குடையான் அருள்க; எண்மீ
தியன்ற புறவண் டத்தான் அருள்க;
மயங்கச் சங்கம் வாய்வைத்தான் அருள்க;
என்குல தெய்வம் அருள்க; அசுரர்
வன்குலம் வேர்மருங் கறுத்தான் அருள்க;
கூனேறு சங்கம் இடத்தான் அருள்க;
கூனே சிதையவில் தெறித்தான் அருள்க;

கோமளப் பிள்ளை அருள்க; அந்தணர்
ஓமம் ஆனான் அருள்க; ஓமத்து
உச்சியான் அருள்க; உயிராளன் அருள்க;
பச்சைமா மலைபோல் மேனியன் அருள்க;
அனைத்துல கும்விளக்கும் சோதீ அருள்க;
புனத்துழாய் மாலையான் அருள்க; பொறியுணர்
வவையிலான் அருள்க; ஐவர் தூதனாய்ச்
சவையில் சென்ற மாயனே அருள்க;
துற்றி யேழுல குண்டவன் அருள்க;
கொற்றவன் அருள்க; குழலழகன் அருள்க;
கொடிமன்னு புள்ளுடை அண்ணல் அருள்க;
படியிது வெனலாம் படியலான் அருள்க. —800.

5

வீவில் சீராய் செயசெய; மன்னரை
மூவெழு கால் கொன்ற தேவே செயசெய;
மன்னு பெரும்புகழ் மாதவ செயசெய;
என்னமர் பெருமா செயசெய; என்றும்
தேனும் பாலும் அமுதுமா வாய்செய;
வானவர் சென்னி மணிச்சுட ரேசெய;
எல்லா உயிர்க்கும் தாயோய் செயசெய;
நல்லோர் பிரானே செயசெய; நரக
நாசனே செயசெய; நரபதி செயசெய;
தேசமுன் னளந்தவ செய; தெள்ளி யாய்செய;
எழில்கொள் சோதீ செயசெய; ஏறேழ்
தழுவிய எந்தாய் செயசெய; தந்தை
கால்விலங் கறவந்து தோன்றி னாய்செய;
நால்வே தக்கடல் அமுதே செயசெய;
ஏழுல குடையாய் செயசெய; எழில்பெறத்
தாழும் மகர குண்டலத் தாய்செய;
ஒண்சங் கதைவாள் ஆழியாய் செயசெய;

கண்டு கோடற் கரியாய் செயசெய;
ஒருவா செயசெய; ஒலிநீர் உலகம்
தருவாய் செயசெய; தன்னுள் அனைத்தும்
தானவற் றுள்ளும் நிற்போய் செயசெய;
வானவர் தெய்வம் செயசெய; வாலியின்
மாவலம் அழித்தவில் லாளா செயசெய;
தேவர்கள் நாயக செய; கார் மேகம்
கலந்த தோருருவக் கண்ணா செயசெய;
நலந்திகழ் நாரண செயசெய; நனவில்
சென்றார்க்கும் நண்ணற் கரியவ் செயசெய;
நின்றோங்கு முடியாய் செயசெய; நித்திலத்
தொத்தே செயசெய; தோளா மணிச்சுடர்க்
கொத்தே செயசெய; கோகன கத்தவள்
கேள்வ செயசெய; கிளர்மூ வுலகும்
வேள்வியில் அளந்த அந்தண செயசெய;
ஏழுல குக்கும் ஆதீ செயசெய;
பாழியந் தோள்நான் குடையாய் செயசெய;
ஞாலம் ஏழையும் உண்டு பண்டோர்
பாலன் ஆகிய பண்பா செயசெய;
வனமாலை மார்ப செயசெய; அமரர்
தனிமுதல் வித்தே செயசெய; தாயின்
குடலை விளக்கிய கோனே செயசெய;
படவர வின்னணைப் பரஞ்சுட ரேசெய;
கோதில் செங்கோல் குடைமன் னரிடை
தூது நடந்தாய் செயசெய; சுடரொளி
ஒருதனி முதல்வா செயசெய; உலகுணும்
பெருவயிற் றானே செயசெய; பேய்மகள்
துஞ்ச நஞ்சு சுவைத் துண்டாய் செயசெய;
அஞ்சிறைப் புட்கொடி யுடையாய் செயசெய;
கோசலை தன்குல மதலாய் செயசெய;
தேசுடைத் தேவா செயசெய; தெய்வச்

சிலையா செயசெய; தேவா செயசெய;
அலைகடல் அரவம் அளாவியோர் குன்றை
வைத்தவ செயசெய; வானவ செயசெய;
பைத்தேய் சுடர்ப்பாம் பணையாய் செயசெய;
தேவா சுரம்செற் றாய்செய செய;த்தனி
மூவா முதலாய் செயசெய; முத்தீ
மறையாய் செயசெய; வடமா மதுரைப்
பிறந்தாய் செயசெய; பிறவாய் செயசெய;
பெருந்தாளுடைய பிரானே செயசெய;
பெருந்தோள் நெடுமால் செயசெய; பேர்த்தொரு
தாயில் வளர்ந்த நம்பீ செயசெய;
ஆயிரம் தோளாய் செயசெய; அசுரர்
குலமுதல் அரிந்த படையாய் செயசெய;
நிலமன்ன னுயுல காண்டவ செயசெய;
பணமா டரவணைப் பள்ளிகொண் டருளும்
மணவாள செயசெய; மல்லொடு கஞ்சனும்
துஞ்ச வென்றமணி வண்ணா செயசெய;
தஞ்சினம் தவிர்த்தார் தவநெறி செயசெய
தனிநின்று சார்விலா மூர்த்தி செயசெய;
பனிமதி கோள்விடுத் துகந்தாய் செயசெய;
பாரிட மாவாய் செயசெய; பாரதப்
போரிடைக் கலந்த மாயா செயசெய;
பீடுடை நான்முகற் படைத்தாய் செயசெய;
நாடுடை மன்னர்க்குத் தூதா செயசெய;
ஞானச் சுடரொளி மூர்த்தி செயசெய;
ஏனத் துருவாய் செய; எம் மான்செய;
விண்ணோர் தம்மற வாளா செயசெய;
விண்ணோர் முடிதோய் பாதா செயசெய;
மாயா வம்விட அரற்குப் பிச்சைபெய்
கோபால கோளரி செயசெய; குதிகொண்டு
அரவில் நடித்தாய் செயசெய; கருமுகில்

திருநிறத் தவனே செயசெய : குழல்வாய்
வைத்த மாயனே செயசெய ; மணித்தேர்
மைத்துனற் குய்த்த ஆயனே செயசெய ;
மாற்றாரை மாற்றழிக்க வல்லவ செயசெய ;
நாற்றச் சுவையூ றொலியாய் செயசெய ;
குருகு வின்பேய் அளவுகண் டாய்செய ;
காரணி மேகம் நின்றதொப் பாய்செய ;
தடவரை யகலம துடையவ செயசெய ;
சுடரொளி யேசெய ; தூமறை யாய்செய ;
அரன்அயன் எனவுல கழித்தமைத் தாய்செய ;
பொருள்என் றிவ்வுலகம் படைத்தவ செயசெய ;
வலத்தனன் திரிபுரம் எரித்தவன் செயசெய ;
கலைப்பல் ஞானத்துக் கண்ணனே செயசெய ;
வானிலும் பெரிய மாயைவல் லாய்செய ;
ஞானநல் லாவி யாவாய் செயசெய ;
நடுவே வந்துய்யக் கொள்வாய் செயசெய ;
குடைந்து வண்டுணும் துழாய்முடி யாய்செய ;
ஞாலமுன் னீசெய ; ஞாலமுண் டுமிழ்ந்த
மாலே செயசெய ; மாகட லாய்செய ;
வீடில் சீர்ப்புகழ் ஆதிப் பிரான்செய ;
ஈடும் வலியும் உடையநம் பீசெய ;
கற்கொண்டு கடலைத் தூர்த்தாய் செயசெய ;
மற்பொரு தோளுடை யாய்செய ; ஆலில்
நீளிலை மீதுசேர் குழவியே செயசெய ;
வாள்வரி வில்லும் வளையாழி சங்கமும்
கதையும் அங்கையில் உடையாய் செயசெய ;
அதிர்கடல் வண்ணா செயசெய ; ஐவாய்
அரவணை மேலுறை யமலா செயசெய ;
கரைசெய் மாக்கடல் கிடந்தவ செயசெய ;
நக்க பிரானொடு அயனும் இந்திரனும்
ஒக்கவும் தோற்றிய ஒருவா செயசெய ;

காயமும் சீவனும் ஆவாய் செயசெய;
பேயைப் பிணம்படப் பாலுண்பி ரான்செய;
சிந்தைக்கும் கோசரம் அல்லாய் செயசெய;
செந்தண் கமலக்கண் கைகா லாய்செய;
பணைத்தாள் மதகளி றட்டவ செயசெய;
வினைசெய் வோய்செய; வினைதீர்ப் போய்செய;
மணிமின்னு மேனிநம் மாயவ செயசெய;
அணிமா னத்தட வரைத்தோ ளாய்செய;
பாலனாய் ஏழுல குண்டவ செயசெய;
ஆலிலை யன்ன வசம்செய் வாய்செய;
ஞாலத் தூடே நடந்தும் நின்றும்
சாலப் பலநாள் கிடப்பாய் செயசெய;
பகையும் நட்பும் ஆவாய் செயசெய;
பகலும் இரவுமாய் நின்றாய் செயசெய;
உவகையும் முனிவுமாய் உள்ளாய் செயசெய;
மகனொரு வர்க்கு மல்லாய் செயசெய;
ஞாலம்செய் தாய்செய; நம்பர மன்செய;
கோலங் கொண்முகில் வண்ணா செயசெய;
அளந்து காண்டற் கரியவ செயசெய;
இளமையும் முதுமையு மாவாய் செயசெய;
கல்வியா வாய்செய; கல்விசெய் வாய்செய;
செல்வுநல் குரவும் செய்வாய் செயசெய;
நரகமும் சுவர்க்கமும் ஆவாய் செயசெய;
பெருமையும் சிறுமையும் உடையாய் செயசெய;
ஞானமும் மூடமும் ஆவாய் செயசெய;
தானும் பிரமனும் சிவனுமா வாய்செய;
பிரிவும் புணர்ச்சியு மாவாய் செய்செய;
கரியும் கழுதும் கழுதையும் மல்லரும்
மருதும் விடையும் மடித்தாய் செயசெய;
இருளொடு சுடருமாய் இருந்தாய் செயசெய;
உறியார் நறுவெணெய் தானுகந் துண்ட

அறமுதல் நான்கவை அருள்வாய் செயசெய;
நெறியெலா முரைத்த மூர்த்தி செயசெய;
அறுசுவைப் பயனும் ஆனாய் செயசெய;
நெறிவாசல் தானேயாய் நின்றாய் செயசெய;
கலங்காப் பெருநகர் காட்டுவாய் செயசெய;
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் செயசெய;
கொண்டற் கைமணி வண்ணா செயசெய;
அண்டத் தமரர் பணியநின் றாய்செய;
நீரேற்று உலகெலாம் நின்றளந் தாய்செய;
ஈரிரு மால்வரைத் தோளாய் செய்செய;
பரமமூர் த்திசெய; பௌழியா செயசெய;
பரனே செயசெய; பற்பநா பாசெய;
புள்ளூவா செயசெய; புருடோத்த மாசெய;
கள்ளமா தவசெய; கடியமா யாசெய;
உலகில் திரியும் கருமகதி யாய்செய;
உலகுக் கோருயிர் ஆனாய் செயசெய;
வெஞ்சுட ரேசெய; விஷ்ணுவே செயசெய;
தஞ்ச மாகிய தந்தை தாயொரு
தானுமா யவை யல்லனு மாஞ்செய;
மீனோ டாமை கேழலரி குறளாய்
முன்னும் இராம னாகித் தானாய்ப்
பின்னும் இராமனாய்த் தாமோ தரனாய்க்
கற்கியும் ஆவாய் செயசெய; வெற்பெடுத்து
ஒற்கமின்றி நின்றாய் செயசெய;
நாகரி காசெய; நாராய ணாசெய. —1008.

சிறியாய் செயசெய ; சேடா செயசெய ;
தண்மையும் தண்டமும் ஆவாய் செயசெய ;
உண்மையோ டின்மையாய் வருவாய் செயசெய ;
விடமும் அமுதமும் விரவுவாய் செயசெய ;
அடலே றேசெய ; ஐம்படை யாய்செய ;
தேற்றமும் கலக்கமும் ஆவாய் செயசெய ;
ஏற்றரும் வைகுந்தம் அருள்வாய் செயசெய ;
வெந்திறல் வீரரில் வீரரொப் பாய்செய ;
சிந்தை தன்னில் முந்திநிற் பாய்செய ;
இன்பமும் துன்பமும் தருவாய் செயசெய ;
தன்முடி வொன்றிலாத தண்துழா யாய்செய ;
தழலானாய் செய ; நிழலா னாய்செய ;
பழியா னாய்செய ; புகழா னாய்செய ;
புண்ணியம் பாவம் ஆவாய் செயசெய ;
எண்ணமும் மறப்புமாய் இருப்பாய் செயசெய ;
புதுமை யாவாய்செய ; பழைமை யாவாய்செய ;
முதுதுவ ரைக்குல பதியாய் செயசெய ;
சந்தமா னாய்செய ; சமயமா னாய்செய ;
அந்தணன் பிள்ளையை அருளினாய் செயசெய ;
எவ்வ நோய்களைத் தீர்ப்பாய் செயசெய ;
பவ்வ நீருடை யாடையாய் செயசெய ;
பாரக லம்திரு வடியாய் செயசெய ;
நீரழல் வானொடு நிலங்கா லாய்செய ;
மாதிரம் எட்டும் தோளாய் செயசெய ;
தீதில் நன்னெறி காட்டுவாய் செயசெய ;
மின்னுரு வாய்செய ; விளக்கொளி யாய்செய
பொன்னுரு வாய்செய ; மணியுரு வாய்செய ;
தமிழாய் செயசெய ; வடசொல் லாய்செய ;
சமயங் கண்டவை காப்பாய் செயசெய ;
நால்வகை வருணமும் ஆனாய் செயசெய ;
மேலவா னவரும் அறியாய் செயசெய ;

# செய்யுள் முதற்குறிப்பகராதி


| | பக்கம் |
|---|---|
| அகலகில்லேன் | 521 |
| அகலில் அகலும் | 496 |
| அகனமர்ந்த | 208 |
| அச்சம் இலர் | 191 |
| அடிச்சியோம் | 540 |
| அடியார் | 300 |
| அடியோமோடும் | 414 |
| அதுபழச் | 391 |
| அத்தனாகி | 440 |
| அத்தா அரியே | 460 |
| அந்தியும் | 356 |
| அப்பநீ | 304 |
| அம்மான் ஆழி | 512 |
| அம்மையே | 403 |
| அயர்க்கும் சுற் | 508 |
| அரன் நாரணன் | 472 |
| அரியானை | 281 |
| அரும்பித்த | 284 |
| அருமணியை | 334 |
| அருள் பெறுவா | 541 |
| அருள் தானினி | 529 |
| அருளாதொழி | 537 |
| அல்லல் | 269 |
| அவரவர் தமதம | 491 |
| அவ்வினைக்கி | 204 |
| அழிப்பர் | 322 |
| அழுக்கு | 351 |
| அற்புதன் | 529 |
| அன்புறு | 243 |
| அன்பே தகளி | 477 |
| அன்று சராசரங் | 437 |
| அன்றே என்தன் | 401 |
| அன்றேநம் | 488 |
| ஆக்கும் | 373 |
| ஆடியாடி | 497 |
| ஆடினாய் நறு | 224 |
| ஆடுமின் | 333 |
| ஆட்டுவித் | 305 |
| ஆட்பார்த்து | 483 |
| ஆட்பாலவர்க் | 234 |
| ஆணல்லன் | 498 |
| ஆணாகிப் | 286 |
| ஆதியந்தம் ஆயி | 233 |
| ஆதியும் அந்த | 383 |
| ஆயாதன சம | 188 |
| ஆயிரங் | 249 |
| ஆராவமுதே | 516 |
| ஆள்தான் | 345 |
| ஆறாத செல் | 434 |
| இடரினும் | 224 |
| இடையில்லை | 528 |
| இந்திரற்கும் | 468 |
| இடமை | 430 |
| இருக்கார்மொழி | 485 |
| இருந்து என்னை | 382 |
| இருநிலனாய் | 302 |
| இரும்புஅனன்று | 467 |
| இருள் தரு | 263 |
| இலையால் | 323 |
| இவளைப் பெறும் | 509 |
| இறைகளோடு | 369 |
| இனிது என்பர் | 478 |
| இன்உயிர் | 536 |
| இன்றாக நாளை | 481 |
| இன்றென்னை | 543 |
| இன்று எனக்கு | 393 |
| இன்ன உரு | 236 |
| ஈன்றாளு | 263 |
| உடம்பினால் | 511 |
| உடம்பு எனும் | 261 |
| உடையாள் | 393 |
| உண்ணாமுலை | 187 |
| உண்ணுஞ்சோறு | 519 |
| உணர்விலும்பர் | 530 |
| உம் கையிற் | 385 |
| உயர்(வு)அற | 491 |
| உய்த்துணர்வு | 481 |
| உரியேன் | 406 |
| உரைசேரும் | 207 |
| உலகமுண்ட | 520 |
| உலகுபடைத்து | 487 |
| உள்ளத்தே உறை | 443 |
| உள்ளம் ஓர் | 204 |
| உற்ற உறு | 421 |
| உற்றாரையான் | 405 |
| உற்றுமை | 240 |
| உனக்குப் | 421 |
| ஊடினாலினி | 229 |
| ஊரெல்லாம் | 514 |
| ஊழியும் | 239 |
| ஊனத்திருள் | 192 |
| ஊனாய் உயிர் | 367 |
| ஊனிடைச்சுவர் | 449 |
| ஊனில் உயிர்ப் | 227 |
| எங்கும் ஆகி | 210 |
| எங்கே போவே | 370 |
| எங்கேனும் யாதா | 212 |
| எங்கேனும் இருந் | 343 |
| எண் ஆர்தரு | 19 |

| | பக்கம் |
|---|---|
| எண்ணியிருந்து | 366 |
| எண்ணுகேன் | 311 |
| எத்தாயர் | 298 |
| எம்பிரான்எந்தை | 448 |
| எய்த்தா | 532 |
| எல்லா உல | 289 |
| எல்லியும் நன் | 463 |
| எவரேனுந் | 297 |
| எற்றான் | 373 |
| எனக்கு | 340 |
| எனக்கேயாட் | 499 |
| எனதாவியுள் | 497 |
| எனை நான் | 402 |
| என்பிருத்தி | 249 |
| என்(பு)இழை | 493 |
| என்பு(உ)ருகி | 429 |
| என்றைக்கும் | 526 |
| என்னதாவி | 506 |
| என்ன புண்ணிய | 223 |
| என்னால் | 410 |
| என்னிலா | 272 |
| என்னை ஏதும் | 279 |
| ஏதும் | 275 |
| ஏத்தா | 336 |
| ஏழை ஏதலன் | 456 |
| ஏற்றினை இமயத் | 462 |
| ஐவாய் | 319 |
| ஒரு நாயகமாய் | 504 |
| ஒருமகள் | 416 |
| ஒழிவில்கால | 500 |
| ஒன்றா உலக | 301 |
| ஒன்றிநெடு | 409 |
| ஒன்றும் போதா | 399 |
| ஒன்று உண்டு | 488 |
| ஓங்கி | 425 |
| ஓத்தின் பொருள் | 478 |
| ஓதிலும் உன்பேர் | 451 |
| கங்குலும் | 523 |
| கங்கை தங்கிய | 352 |
| கங்கையாடி | 280 |
| கடல் ஞாலம் | 515 |
| கண்காட்டு நுத | 214 |
| கண்டேன் | 540 |
| கண்டோம் | 513 |
| கண்ணன் | 541 |
| கண்ணிநுண்சிறு | 446 |
| கண்ணாய் ஏழு | 324 |
| கயல்மாண்ட | 388 |
| கரணங்கள் | 388 |
| கரவாடும் | 252 |
| கருங்கண் | 414 |
| கருவுற்ற | 266 |
| கல்நவில்தோள் | 489 |
| கல்லா நெஞ்சின் | 230 |
| கள்வன் கொல் | 454 |
| கள்ள நெஞ்ச | 221 |
| கறவாமட | 460 |
| கறவைகள் | 426 |
| கற்றாங்கெரி | 202 |
| கற்ப | 337 |
| கற்பார் | 524 |
| காசின் | 417 |
| காதல் செய்து | 344 |
| காதலாகிக் | 231 |
| காயமே | 261 |
| கார்க்குன்ற | 372 |
| கார்த்தண் | 431 |
| காவலில்புலனை | 441 |
| காறைபூணும் | 415 |
| கான எண்கும் | 459 |
| கீதத்தைமிகப் | 213 |
| குடதிசை | 442 |
| குணங்கள்கூறி | 222 |
| குலம் தரும்செல் | 448 |
| குறை விலா | 358 |
| குற்றமொன்று | 347 |
| குற்ற(ம்) நீ | 232 |
| குன்றனைய குற் | 473 |
| கூற்றமும் சாரா | 482 |
| கூற்றாயின | 245 |
| கெடு மிடராய | 539 |
| கொண்ட | 534 |
| கொல்வாரேனுங் | 231 |
| கோடு உயர் | 359 |
| கோள் நிலா | 402 |
| சங்க நிதி | 308 |
| சலம்பூவொடு | 246 |
| சன்மம் பல | 504 |
| சாதி குலம் | 398 |
| சார்ந்த இருவல் | 495 |
| சிகரம் | 360 |
| சித்தம் தெளி | 202 |
| சிந்தித்து என்று | 355 |
| சிந்தித்து எழுமன | 262 |
| சிந்தை யிடையார் | 215 |
| சிற்றஞ் | 427 |
| சிறந்தார்க்கு | 478 |
| சிறையாரு | 197 |
| சீலமில்லா | 510 |
| சுடர் ஒளி | 444 |
| சூடுவேன் | 386 |
| சூழ் விசும் | 544 |
| சூழ்ந்தகன்றாள் | 545 |
| செஞ்சொற் | 542 |
| செடியாய | 434 |
| செந்தமிழர் | 237 |
| செம்மை உடை | 430 |
| செம்மை நலம் | 412 |
| செய்ய மேனி | 186 |
| செய் வினை | 354 |
| சென்ற நாள் | 480 |
| சென்றால் குடை | 474 |
| சேயன் அணிய | 484 |
| சொல்லாது | 455 |
| சொல்லுந்தனை | 475 |
| சொல்லை | 330 |
| சொற்றுணை | 254 |

| | பக்கம் |
|---|---|
| சொன்னய | 238 |
| சொன் மாலே | 254 |
| சோர்விஞல் | 418 |
| ஞமனென் | 280 |
| ஞானங் | 273 |
| ஞானத்திரளாய் | 199 |
| தக்கிருந் | 243 |
| தஞ்சமாகிய | 502 |
| தஞ்சம் இவர்க்கு | 452 |
| தஞ்சே | 274 |
| தண்டமுடைத் | 348 |
| தண்ணந்தாமரை | 436 |
| தந்தது(உ)ன் | 394 |
| தந்தை யாயுல | 325 |
| தந்தையார் தாயா | 301 |
| தந்தையார்போயி | 218 |
| தம்மையேநாளு | 465 |
| தம்மையே புகழ்ந் | 320 |
| தமர் உகந்தது | 474 |
| தலேயே | 253 |
| தளரிள | 238 |
| தனக்கு அடிமை | 477 |
| தனம் வரு | 220 |
| தனியனேன் | 379 |
| தன்னடியார் | 418 |
| தன்னேச் | 268 |
| தாமேதமக்கு | 407 |
| தாயவளாய் | 343 |
| தாயாய் | 410 |
| தாயினும் நல்ல | 242 |
| தாயுநீயே | 195 |
| தாழ்சடையும் | 480 |
| திருக்கண்டேன் | 479 |
| திருகுசிந் | 273 |
| திருவுக்கும் திரு | 461 |
| திருநாமம் | 307 |
| திறம்பேல்மின் | 483 |
| தினேத்தனே | 387 |
| தீவினே | 526 |
| துஞ்சலுந் | 226 |
| துஞ்சும்போ | 279 |
| துணிவளர் | 194 |
| துப்பனே | 397 |
| துப்பு | 419 |
| தூராத | 432 |
| துறப்பேன் | 458 |
| துன்னு | 346 |
| தூண்டாவிளக் | 355 |
| தூவாயா | 362 |
| தெளிதாகஉள் | 473 |
| தேர் ஆளும் | 461 |
| தேவாசிறியோம் | 216 |
| தேனினும் இனிய | 201 |
| தொண்டலால் | 258 |
| தொழுது | 535 |
| தோடு உலா | 433 |
| தோடுடையசெவி | 185 |
| நங்கடம் | 271 |
| நங்கைமீர் எனே | 406 |
| நங்கை மீர் நீரும் | 505 |
| நடையொ | 431 |
| நண்ணுதார் | 512 |
| நமச்சிவாய | 376 |
| நம்பனே | 292 |
| நம்பொருள் | 221 |
| நரைப்பு | 321 |
| நல்காது | 392 |
| நல்குரவும் | 211 |
| நல்லிசை | 319 |
| நல்லவர் | 227 |
| நறைமலி | 191 |
| நற்றமிழ் | 365 |
| நற்பதத் | 306 |
| நனவிலுங் | 226 |
| நனவினும் | 225 |
| நன்ருய் | 531 |
| நன்றுடையானே | 203 |
| நாடிலும் நின் | 476 |
| நாடி எந்தன் | 454 |
| நாதனே | 369 |
| நாமார்க்கும் | 310 |
| நாவகாரியம் | 417 |
| நாவாயில் | 476 |
| நாஞவித | 187 |
| நானுடை | 367 |
| நானேயோ | 405 |
| நித்தலும் நியமஞ் | 212 |
| நிலனெடுவானும் | 193 |
| நில்லாத | 289 |
| நிறமுயர்கோலம் | 484 |
| நிறையுடை | 228 |
| நின்னடியே | 196 |
| நின்னேயேதான் | 436 |
| நின்றது எந்தை | 438 |
| நினேந்து | 285 |
| நீண்டான்குற | 464 |
| நீநாளும் நன் | 212 |
| நீராய் | 520 |
| நீர் அழல் | 464 |
| நீருளான் | 200 |
| நீள நினே | 318 |
| நீற்ருரும் | 332 |
| நீறார் மேனி | 349 |
| நூலடைந்த | 195 |
| நெக்குநெக் | 395 |
| நெடுமாற் | 533 |
| நெற்றிக்கண் | 349 |
| நைவளம் ஒன்று | 470 |
| நோற்ற நோன் | 516 |
| பச்சைமாமலே | 441 |
| பட்டுடுக்கும் | 469 |
| பண்ணிய இசை | 295 |
| பண்ணிடைத் | 342 |
| பண்ணுளீராய்ப் | 340 |
| பத்தராய்ப் | 317 |
| பத்தனுய்ப் | 257 |
| பத்துடை | 492 |

| | பக்கம் |
|---|---|
| பதியுஞ் | 328 |
| பந்தோடு | 456 |
| பயிலும் சுட | 502 |
| பரந்தவன் | 299 |
| பரவுவாரை | 220 |
| பலபல | 247 |
| பல்லாண்டு | 413 |
| பவ்வ நீர் உடை | 459 |
| பழியிலான் | 251 |
| பழுது(இ)லா | 444 |
| பறக்குமெங் | 363 |
| பறவை | 422 |
| பனைக்கை | 270 |
| பாரமாய | 445 |
| பாரொடு | 396 |
| பால்நினைந்து | 403 |
| பிடியதன் உரு | 205 |
| பிணக்(கு) | 397 |
| பிணிகொள் ஆக் | 315 |
| பித்தன் என்று | 395 |
| பித்தா பிறை | 313 |
| பிறத்தலும் | 256 |
| பிறந்த மாயா | 528 |
| பிறந்தவாறும் | 517 |
| பிறப்பு இறப்பு | 488 |
| புகலிடம் | 538 |
| புகழ்மின் | 408 |
| புகழு(ம்)நல் | 501 |
| புலன் ஐந்தும் | 206 |
| புழுவாய்ப் | 264 |
| புன்புல வழி | 439 |
| புனையிழை | 532 |
| பூங்கழல் | 255 |
| பூசுவதும் | 389 |
| பெயரும் கருங் | 475 |
| பெருகலாங் | 276 |
| பெரும்புலர் | 258 |
| பெற்ற போழ் | 345 |
| பேசினார் பிறவி | 467 |

| | பக்கம் |
|---|---|
| பேசும் அள | 451 |
| பேணியநற் | 292 |
| பேயடையா | 215 |
| பேயரே எனக்கு | 433 |
| பேராது | 331 |
| பொறுத்தேன் | 458 |
| பொன்னம்பூங் | 235 |
| பொன்னவன் | 357 |
| பொன்னார்திரு | 268 |
| பொன்னார்மேனி | 323 |
| பொன்னும் | 371 |
| பொன்னைக் | 423 |
| போகம் வேண்டி | 380 |
| போற்றி என் | 390 |
| மங்கவொட்டு | 543 |
| மங்கையர்க் | 241 |
| மட்டிட்ட | 213 |
| மடையில் வாளை | 192 |
| மண்ணல்லை | 291 |
| மண்ணில்நல் | 227 |
| மண்ணின் | 357 |
| மண்ணாகிவிண் | 303 |
| மண்ணை இருந்து | 507 |
| மண் நாடும் | 466 |
| மத்தயானை | 335 |
| மந்திரம் அன | 232 |
| மந்திரம் | 375 |
| மந்திரமாவது | 216 |
| மயல் தீர்மை | 196 |
| மருந்தவை | 239 |
| மருந்துவேண் | 228 |
| மற்று நான் | 353 |
| மற்றுப் பற் | 327 |
| மற்றொன்றில்லை | 535 |
| மறையானை | 210 |
| மனத்தகத் | 284 |
| மனமெனும் | 259 |
| மனிசரும் மற் | 501 |
| மனைவிதாய் | 260 |

| | பக்கம் |
|---|---|
| மன்னுஇம் | 450 |
| மன்னுமலை | 267 |
| மாசில் வீணை | 277 |
| மாதர்ப்பிறை | 248 |
| மாதர் மடப்பிடி | 208 |
| மாதினுக்கு | 338 |
| மாயனை | 425 |
| மார்கழித் | 423 |
| மாறிமாறிப் பல | 499 |
| மாற் பால்மனம் | 479 |
| மானினேர் | 229 |
| மிக்கானைக் | 294 |
| மின்னிடை | 518 |
| மின்னுமா | 362 |
| மீளா அடிமை | 364 |
| முடிச்சோதியாய் | 500 |
| முத்தி தருவது | 217 |
| முத்திநெறி | 411 |
| முந்தியுலகம் | 283 |
| முளைக் கதிரை | 470 |
| முனியே | 544 |
| முன்னைப் பழம் | 384 |
| மூத்தவனாய் | 290 |
| மெய்தான் | 377 |
| மெய்த்தவன் | 294 |
| மெய்யுளே | 260 |
| மைப்படிந்த | 309 |
| மைப்படி மேனி | 486 |
| மையார் | 339 |
| யானும் | 527 |
| யானேதும் | 378 |
| யானே பொய் | 382 |
| யானொட்டி | 496 |
| யாவர்க்கு | 408 |
| வடி வுடை | 329 |
| வணங்கும் துறை | 486 |
| வண்டு(உ)ணும் | 457 |
| வந்து(உ)னது | 453 |
| வந்தித்திருக்கும் | 199 |

| | பக்கம் | | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| வந்து கேண் | 275 | வானுடையான் | 341 | வெள்ளைச் | 524 |
| வந்து சொல்லு | 337 | விச்ச(து) | 381 | வேண்டத் | 400 |
| வம்மின் அடியீர் | 188 | விண்ணுளார் | 522 | வேண்டும் | 399 |
| வம்மின் புலவீர் | 503 | வித்தும் இட | 482 | வேதத்தில் உள்ள | 217 |
| வரும் பெரும் | 316 | விதியுமாம் | 230 | வேதத்தை | 450 |
| வழுவாள் பெரு | 211 | விரைந்தா | 288 | வேதநூல் | 442 |
| வாக்குத்தூய்மை | 420 | விளையாத | 189 | வேதமும் | 387 |
| வாடினேன் | 447 | விற்றுக்கொள் | 365 | வேதமோதி | 198 |
| வாயானை | 287 | விறகில் | 277 | வேந்தாகி | 206 |
| வாய்க்க | 534 | வீடு ஞானமும் | 209 | வேம்பின் புழு | 466 |
| வார்த்தை | 525 | வீடு மின்முற் | 492 | வேயனைய | 236 |
| வாரிக் | 537 | விண்களார் | 223 | வேயுறு தோளி | 218 |
| வாழ்க அந் | 233 | வீற்றிருந்து | 509 | வைகல் | 517 |
| வாழ்வாவது | 350 | வெங்கண்திண் | 435 | வைத்தனன் | 326 |
| வானவனை | 296 | வெந்த | 334 | வைது நின்னை | 440 |
| வானுகி | 379 | வெம்மை | 265 | வையம்தகளி | 472 |
| வானிடை | 428 | வெய்தாய | 314 | | |

# பிழை திருத்தம்

| பக்கம் | பாடலின் எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 191 | 10 | கொடுதணை | கொடுதலை |
| ,, | ,, | நிதயமும் | நியதமும் |
| 196 | 17 | வல்லேல் | வல்வேல் |
| 201 | 24 | அணையர் திருவடி | அணையர்தந்திருவடி |
| 208 | 34 | அன்னமும் | மட அன்னமும் |
| 212 | 42 | மலாச்சோலை | மலர்ச்சோலை |
| 213 | 45 | கொண்டாண் | கொண்டான் |
| 218 | 53 | தாயாரும் | தாயரும் |
| 221 | 5 | ஒளிமிகுந்த | ஒளிமிகுத்த |
| 227 | 68 | சொல்லல் | செல்லல் |
| 229 | 73 | யாதியாய் | யாதியாய |
| 233 | 81 | அந்தனர் | அந்தணர் |
| 235 | 83 | கன்னவில்தொள் | கன்னவில் தோள் |
| 236 | 84 | தாயமதி | தூயமதி |
| 238 | 88 | தீளரிள | தளிரிள |
| 245 | 1 | ஆற்றென் | ஆற்றேன் |
| 254 | 11 | முகிழ விளங்கு | முகிழ் விளங்கு |
| 283 | 48 | 3. 6. 3. | 6. 3. 3. |
| 305 | 74 | காட்டக்காலே | காட்டாக்காலே |
| 310 | 79 | சங்கவென் | சங்கவெண் |
| 325 | 15 | பந்தமாயன | பந்தமாயின |
| 353 | 49 | மீதொடும் | மீதோடும் |
| 358 | 56 | 70. 9. | 70. 6. |
| 386 | 13 | செவ்வாயக் | செவ்வாய்க் |
| 387 | 14 | விடும் | வீடும் |
| 403 | 37 | சுருக்கும | சுருக்கும் |
| 432 | 27 | முழுலோசை | முழுவோசை |
| 434 | 31 | 4. 2. | 4. 9. |
| 436 | 34 | தாமரைத் | தாமரைக் |
| 467 | 80 | அன்று | அனன்று |
| 523 | 46 | பாய்திருவரங் | பாய்நீர்திருவரங் |
| 526 | 51 | சார்வலவாகி | சார்வல்லவாகி |
| 528 | 53 | பூவைகாள் | பூவைகள்காள் |
| 537 | 67 | காரொக்குக் | காரொக்கும் |